ஒரு கட்டில் சொல்லும் கதை!



டபிள்யூ. ஆர்.
ஸ்வர்ணலதா

1

ஸ்நேகா என்ற இனிய அந்த பதினெட்டு வயது சொர்க்கத்தை நினைத்துக் கொண்டதும், சுரேஷ் இதயம் சந்தோஷத்தை நிரப்பிக்கொண்டு மெலிதாக அதிர்ந்தது.

இன்றிரவு எட்டுமணிக்கு அவளைத் தனியாக அவளுடைய வீட்டில்... அவள் கட்டிலில் சந்திக்கப் போகிறான்...

சந்தித்து முகத்தில், 'பளார் பளார்' என்று இரண்டு கைகளாலும் மாறிமாறி அறைவதுபோல் சில கேள்விகள் சூடாகக் கேட்க வேண்டும்!

சுரேஷ் ஒரு பத்திரிகையின் சுறுசுறுப்பான ரிப்போர்ட்டர். இன்னும் கல்யாணமாகாத காளை. மேற்கு அண்ணா நகரில் உள்ள குறுக்குச் சாலையில், மூன்று பிளாட்கள் கொண்ட குடியிருப்பில் இரண்டாவது பிளாட்டில் வசித்து வருகிறான்.

எதிரில் ஒரு பங்களா...

அங்கேதான் ஸ்நேகா குதூகலமாக வசித்து வருகிறாள். மாலை நேரத்தில் தலைக்கு ஷாம்பூ கொடுத்துக் குளித்துவிட்டு ஈரத் துணியைத் துவட்டிக் கொண்டே வராந்தாவில் நடைபோடுவாள்.

இவன் பார்ப்பான்.

அவளும் பார்ப்பாள்.

சிரிப்பான்—

சிரிப்பாள்...

சமிக்ஞை செய்வான்.

அவளும் பதில் சமிக்ஞை செய்வாள்.

இப்படி பார்வையாலும்... சிரிப்பாலும்... சமிக்ஞைகளாலும் இரண்டுபேர்களும் ஒருவரையொருவர் அள்ளி...

எதுவும் பேசாமலேயே காதலித்து...

இப்போது ஆழமான காதலர்கள்!

மிகவும் நெருக்கமான சொந்தம் இருப்பது போன்ற உணர்வு இரண்டு பேர்களுக்கும்!

ஸ்நேகா தனக்கு மட்டுமே சொந்தமானவள் என்ற எண்ணம்.

ஆனால்?

இப்போது ஸ்நேகா...?

இவளுடைய கட்டிலைப் பகிர்ந்து கொள்கிறவர்கள் ஏராளம்.. ஏராளம்...!

இவள்...

எப்படி அழைப்பது?

'ச்சீய்...' என்று முகம் சுழிக்க வேண்டாம்... இந்த நிமிஷத்தில் அவனுடைய ஆத்மார்த்தமான காதலி ஸ்நேகா அழகான ஒரு திறந்த வண்ண போட்டோமா .

ஒருமணி நேரத்திற்கு இவள் உடலின் வாடகை குறைந்த கட்டணமாக ரூபாய் மூவாயிரம் தான்!

சுரேஷ், இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரையில் இவளை வாடகைக்கு எடுத்து, இவளை வைத்து தொழில் நடத்தும் மாமன் முரளியிடம் முழுத்தொகையான·மூவாயிரம் ரூபாயையும் கொடுத்திருக்கிறான்...

கடவுளே...!

இவள் உடம்பு கான்கிரீட்டா?

தினசரியும் இரவு ஆறுமணியாகி விட்டால் பல விதமான கார்கள் - மாருதி... கண்டேஸா... அம்பாஸிடர் என்று ஆரம்பித்து டயாட்டோ... டோரின்... பென்ஸ் என்று பங்களா முன் நிற்கும்!

எத்தனை பேர்கள் மாடியிலுள்ள இவள் பெட் ரூமுக்குத் துடிப்போடு வருகிறார்கள்.... தளர்ந்து போகிறார்கள்!

இவள் சிரித்த முகத்துடன்... எல்லா பற்களையும் காட்டிக் கொண்டு, வாடிக்கையாளர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் செல்லுவாள்.

ஒருமணி நேரம் கழித்து கதவைத் திறந்து கொண்டு அவர்களுடன் வெளியே வந்து வழியனுப்பி வைக்கும்போதும் உற்சாகம் கொஞ்சம் கூட குன்றாமல், பனியில் குளித்து மலர்ந்த புத்தம் புது ரோஜா மலர் போல் தெரிவாள்!

மறுபடியும் புதிய கஷ்டமர்களுடன் புதுவேகத்துடன் அறையினுள் நுழைந்து கதவைத் தாளிடுவாள்.

அப்பொழுதெல்லாம் ஜன்னல் கர்ட்டனுக்குப் பின்னால் தன்னை மறைத்துக் கொண்டு பார்க்கும் இவனுக்கு நெஞ்சே பிளப்பது போல் வலி எடுக்கும். தன் மனைவியை ஒருவன் கட்டிலில் சீரழிக்கிறானே என்று இதயம் ஓசையின்றி அழும்.

இத்தனைக்கும் இவளுடன் நேருக்கு நேராகப் பேசியதில்லை... எல்லாமே சைகைதான்!

சுரேஷ் சந்தனநிற ஸில்க் முழுக்கை ஜிப்பாவும், வேஷ்டியும் அணிந்து புதுமாப்பிள்ளைப்போல் கதவைப் பூட்டி விட்டு வெளியே வந்தான்.

படி இறங்கி...

ரோட்டில் நடந்து...

அந்தப் பங்களாவின் திறந்து கிடந்த கேட் வழியாக உள்ளே நுழைந்தபோது, இதயம் தப்புத்தப்பாய் துடிக்க ஆரம்பித்து, உடம்பு பூராவும் வியர்த்துக் கொட்டியது.

சுரேஷ் பத்திரிகை ரிப்போர்ட்டர் என்றபோதிலும் அது அவனுக்கு ஹாபிதான்! பெரும் பணக்கார வீட்டுப்பிள்ளை!

தேனியில் பலவகையான தோட்டங்கள்...

போடிநாயக்கனூரில் ஏலக்காய்... காப்பி எஸ்டேட்...

இத்தனை வசதிகள் இருந்தும் நடத்தை கெட்ட ஒரு பெண்ணைத் தேடிச் செல்வது இதுவே முதல் தடவை.

இவன்மனம் பரபரப்புக்குள்ளாகி... யாராவது பார்த்தால் தப்பாக நினைத்து விடுவார்களே என்ற கூச்சத்துக்குள்ளாகி தலையைக் குனிந்து கொண்டே விருட்டென்று உள்ளே ஓடினன்.

2

கட்டில்....

பர்மா தேக்குமரச் சட்டத்தில் ஸ்பிரிங் ஆக்ஷன் கொடுத்து, மேலே 'யூ' ஃபோம் மெத்தை கொடுத்து மிருதுவான இலவம் பஞ்சு தலையணைகளுடன் இளம் ரோஸ்நிற பெட்ஸீட் விரிக்கப் பட்டு...

நடுவே மல்லார்ந்த நிலையில் ஸ்நேகா படுத்திருந்தாள். தலைக்கு தலையணை கொடுத்திருந்தாள்.

கதவு பாதி திறந்தபடியே கிடக்க, சுரேஷ் அங்கே நின்று கண் களை இவள்மீது பதித்திருந்தான்.

ஸ்நேகா இப்பொழுதும் குளித்து உடம்பைச் சுத்தமாக்கி, இளம்பச்சை ஷிபான் சேலையினுள்ளேயும்.... காப்பிப்பொடி நிற கையில்லாத 'ரவிக்' கினுள்ளேயும் நுழைத்திருந்தாள்.

கால்களை அகற்றி...

பருமனை தொடைகளின் அமைப்பை விஸ்தரித்து...

இடுப்பின் வளைவையும்...

பின்பக்கங்களின் தம்புரா அமைப்பையும்...

தூக்கலாக நிமிர்ந்து நிற்கும் மார்புப் பிரதேசங்களின் கனத்த திரட்சிகளையும் விளம்பரமாக்கிக் கொண்டு சந்தனப்பதுமை யாகத் தெரிந்தாள்.

கண்கள்... உதடுகள், கழுத்தடிப்பிரதேசம் என்று வர்ணிக்க ஆரம்பித்து விட்டால் சில வாசகர்கள் தூக்கத்தை இழந்து விடு வார்கள்! எனவே, ஸ்நேகாவின் அழகு பரிபாலனங்களை இத்து டன் நிறுத்தி விட்டு, தேவைப்பட்டால் இன்னெரு இடத்தில் வைத்துக் கொள்ளலாம்.

இவள் தலையை உயர்த்தாமலேயே கண்களை இன்னும் சற் றுப் பெரிதாக்கிக் கொண்டு...

''உள்ளே வரலாம்...: தடை ஏதும் இல்லையே...'' என்றாள்.

சுரேஷ் இதயம் படபடத்தது. தப்பான எண்ணத்துடனும், விபரீதமான சிந்தனைகளுடன் ஓர் இளம்பெண்ணை அவளுடைய படுக்கையறையினுள் சந்திக்கப்போவது இதுவே முதல் தடவை.

உள்ளே நுழைந்ததும் ரத்த நிற கார்ப்பெட்டில் மிதித்து வந்தான். முற்றிலும் புதிய சூழ்நிலை... மனத்தையும் உடம்பையும் குதூகலத்தில் ஆழ்த்தும் இயல்பான சூழ்நிலை.

சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் வால் பேப்பர்... அங்கே தென்படும் கலைப்பொருட்கள் அனைத்தும் கனன்று கொண்டிருக்கும் இளமை நெஞ்சை வீசிவிடக் கூடியவை.

சுரேஷ் கதவைச் சாத்தி, உட்புறம் கொண்டியை ஏற்றிவிட்டு இவளையும் - தயாராகக் காத்துக் கொண்டிருக்கும் சுத்தமான கட்டிலையும் பார்த்தான்.

நெஞ்சுக்குள் 'திடும் திடும்' என்றது. சந்தோஷம் ஊற்றெடுத்துக் கொண்டு வருவதற்குப் பதில் ஆத்திரம் எரிமலையாகக் குமுறிக் கொண்டு வந்தது.

தன் மனைவி தினசரியும் ஏராளமானவர்களுடன் இதே கட்டிலில் படுத்துக் கொண்டு துரோகம் செய்து வந்தது போன்ற கோப உணர்வுகள்...

சிறிதுநேரத்திற்கு முன்னால்கூட ஒருவன் இந்த அறையினுள்ளேயிருந்து வெளியே வந்தான். இவளும் கூடவே வந்து சிரித்த முகத்துடன் வழியனுப்பி வைத்துவிட்டு, மறுபடியும் குளித்து உடைமாற்றியிருக்கிறாள். கட்டில் உடைகளும் தோலுரிக்கப்பட்டு மாற்றப்பட்டிருக்கின்றன.

இது இவனுடன் சேர்த்து எத்தனை பேர்களைச் சுமந்த கட்டில் எத்தனையோ பாவங்களுக்கு உறைவிடமான இந்தக் கட்டில் உயிரற்ற அஃறிணைப் பொருள் என்று மெய்ப்பிக்க எப்படி மௌனமாக இருக்கிறது!

ஆனால்?


கட்டில் என்ன செய்யும்? கட்டிலைக் கோபித்துக் கொள்வது போன்ற மதியீனம் என்ன இருக்கிறது? இவள்தானே எல்லாவற்றுக்குமே மூலகாரணம்...?

ஸ்நேகா உதடுகளைக்கொஞ்சமாகப் பிரித்து பல்வரிசை சொற்பமாகத் தெரியும்படி புன்னகைத்து கண்களுக்கு காமத்தைக் கொண்டு வந்து வழிய விட்டாள். உதடுகளுக்கு இலேசாக லிப்ஸ்டிக் தீட்டியிருந்ததால் அபாரமான ஓவியத்தனம்!

இவன் பக்கமாக நெருங்கி வந்து நின்று இன்னும் அழகாகப் புன்னகைத்து, ''ஏன்..... அப்படிப் பார்க்கிறீங்க? உக்காருங்க மிஸ்டர்.....''

- சொல்லி இடது கையை நீட்டி தோளில் போட்டு கழுத்தைச் சுற்றி இழுத்து முகத்தை அருகில் கொண்டு வந்து, கொ தான மீசையில் உதடுகளைத் தேடியதும்...

சுரேஷ் உதறி...



அந்த வேகத்திலேயே கையை கோபமாகவும் மூர்க்கமாகவும் பேசி மாம்பழக்கன்னத்தில் 'பளார்' என்று அச்சு பதித்துவிட்டான்.

பவுடர் தூசுபோல் பறக்க இவள் 'ஹாக்' என்று முனகினுள்.

''ப்ளடி பாஸ்டர்..... இப்படியெல்லாம் நடந்துக்கிறதுக்கு உனக்கு வெட்கமாக இல்லே? த்தூ... நீயும் ஒரு பெண்ணு? தினசரியும் இங்கே எத்தனே பேர்கள் வருகிருர்கள் என்பதையும், நீ பல்லிளித்துக் கொண்டு கட்டிலுக்கு அழைத்து வருகிருய் என்பதையும் கணக்கெடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீ படுமோசமான ப்ராஸ்டிட்டியூட்... பிராத்தல் கேஸ், இம்மாறல் கார்ள்... கால் கர்ள்...''

இவன் கடுமையான முறைப்புடன் கோபமாக... ஆனல் குரலே அடக்கிக் கொண்டு பேசியதும்...

ஸ்நேகா அடிபட்ட கன்னத்தைத் தடவிக் கொண்டு எதுவும் செய்யத் தோன்ருதவள்போல் மௌனமாக நின்று கொண்டிருந்தது, அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கன்னத்தில் அறைந்ததும் அவள் கோபமடைந்து, 'கெட் அவுட்' என்று கத்தி வாசலேக் காட்டுவாள் என்று எதிர்பார்த்தான்.

அப்படி எதுவும் இல்லே!

தலே தாழ்ந்தபடியே இருந்தது.

இவன் முகத்தைப் பார்த்தான்.

கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்து வழிந்த வண்ணம் இருந்தது. கொஞ்சம்கூட கோபம் தெரியவில்லே.

பிறகு அவள் தலேஉயர்த்தி கண்ணீர் வழியும் கண்களில் பார்த்தாள். சிவந்த கன்னத்தில் அறை விழுந்ததால் அந்த இடம் மேலும் சிவந்து விரல்கள் பதிவாகி வீக்கமாகத் தெரிந்தது.

இந்த முகத்தோடு வெளியே போய்விட்டால்...

அதன் பிறகுதான் கைநீட்டி அடித்தது தப்பு என்று அவனுக்குப் புரிந்தது. 'ஏன் இப்படி உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொண்டோம்? அவள் யார்? கைநீட்டி அடிப்பதற்கு என்ன உரிமை இருக்கிறது? ஏது சொந்த பந்தம்?

'நான் ஒரு மடையன். சொந்தமாகச் சிந்தித்து செயல்படும் அறிவே இல்லாதவன்...'

- இப்படித்தான் அவன் தன்னே நொந்து கொண்டான்.

''உங்க கை வலிக்கலியா?'' - கேட்டாள்.

''ஸாரி 'மிஸ்' ஸ்நேகா... எக்ஸ்ட்ரீம்லி வெரி வெரி ஸாரி.. ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில் உன்னே கைநீட்டி அடிச்சிட்டேன். தினசரியும் உன்னே நான் பார்க்கிறேன். அழகான உன் உடம்பைப் பார்க்கிறேன்... உன்னுடை ஸ்டைல் பார்த்து நான் பிரமித்துப் போவதும் உண்டு. அதேநேரத்தில் உன்னுடை அந்த



ரங்க லைஃபை நினைத்து கதவைப் பூட்டிக் கொண்டு நான்கு சுவர்களுக்கு மத்தியில் அழுது கொண்டிருப்பதும் உண்டு... ஸ்நேகா... பெண் பூ போல் மென்மையானவள். ஆனால் கட்டிலில் உன்னை சந்திக்கிறவர்கள் யார் யார்...? எத்தனை மனிதர்கள்? கேடி... சூதாடி... அரசியல்வாதி.... குஷ்டரோகி... இப்படி...''

அவன் இப்படி உணர்ச்சி பொங்க பேசியபோது வார்த்தைகள் இதயத்தின் அடித்தளத்திலின்று பீறிட்டுக் கொண்டு வந்தன.

ஸ்நேகா தலையைத் தாழ்த்தியபடி இன்னும் கண்ணீரை வழிய விட்டபடி நின்று நகம் கடித்துக் கொண்டிருந்தாள்.

''நான் யாரோ... நீ யாரோ... தப்பு செய்திட்டேன். என்னை மன்னிச்சிடு...''

அவன் சொன்னதும்,

இவள் தலையை உயர்த்தினாள்.

கண்கள் சிவந்து வீங்கி... உயர்ந்த மூக்கின் முனை சிவந்து... கன்னம் சிவந்து...

பழைய துருதுருப்பான வசிய புன்னகையுடன் கண்களில் அம்பு தொடுத்து வதைக்கும் ஸ்நேகா அல்ல... நிறைய மாறி யிருந்தாள்.

அருகில் நெருங்கி கையைப்பிடித்து உயர்த்தி தன் கண்களில் வைத்தாள். குலுங்கினாள்... 'ப்ளக்'கென்று புதிதாக கண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்ந்து வழிந்தது.

சுரேஷ் விரல் கொண்டு கண்ணீரைத் துடைத்த போது, பருந் திடமிருந்து தப்பித்து வந்த புருக்குஞ்சு போல் தன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டாள்.

''நீங்க தப்பு செய்யல... என்மேல அளவு கடந்த பாசத்தைப் பொழிஞ்சிருக்கிறீங்க.... நீங்க எதிர்வீட்டு ஜன்னலில் கையைக் காட்டும்போதெல்லாம், உங்களை ஒரு தமாஷாக எடுத்துக் கொண்டு பதிலுக்கு நானும் கையசைத்தேன். சைகை செய் தேன். இந்த அளவுக்கு அன்பு வச்சிருப்பீங்கன்னு எதிர்பார்க் கவே இல்லை... நான் அதிர்ஷ்டக்காரி... நொந்து போன என் மனம் சீரடைந்து விட்டது...''

மீண்டும் கண்ணீர் வழிய உருகினாள்.

''ஸ்நேகா!''

''ஸ்நேகாதான் பேசுறேன்... எனக்காக நீங்க எவ்வளவு 'பே' பண்ணினீங்க? யோசிக்க வேண்டாம், சொல்லுங்க...''

''மூவாயிரம் ரூபாய்...''

இந்தத் தொகை ஒரு மணி நேரத்திற்குத்தான்... குறிப்பிட்ட நேரம் வந்ததும் ரூமில் ரெட் லைட் எரியும். உடனே நீங்க வெளியே போக வேண்டிய கட்டாயம் ஏற்படும். என் உடம்பு மேல் ஆசைப்பட்டு வந்தால் டைமை வேஸ்ட் பண்ணாதீங்க... கம் டு மை காட்... ஷேர் வித்மி எஞ்சாய்...''

''எனக்கு உன்னுடை உடம்பு வேண்டாம். உள்ளம்தான் வேண்டும். குடுப்பியா?''

அவன் சொன்னதும் இவள் நெஞ்சு நெகிழ்ந்து இன்னும் அழுத்தமாக மார்போடு ஒட்டிக்கொண்டாள்.

''என்மேல் அன்பு செலுத்துறதுக்கு இப்படியும் ஒரு ஜீவனா?''

அவன் தலைமுடிகளை நீவினாள்.

''ஆமா ஸ்நேகா... ஐ லவ்யூ வித் ஆல் மை ஹார்ட்...''

இவள் ஆச்சரியமாகப் பார்த்தாள். ''நான் யார் தெரியுமா?''

''தெரியும்... பட், ஐ டோண்ட் கேர். நீ மனப்பூர்வமாகத் தப்பு செய்யல... நான்தான் சொன்னேனே... உன் உள்ளம் தான் எனக்கு வேண்டும்னு.''

அத்தியாயம்

தேவாலயத்தில் அன்று ஒரு விசேஷ கூட்டம். தலைமைப் பாதிரியார் தனது பிரசங்கத்தைத் துவக்கி,

''சகோதர சகோதரிகளே! இன்று நான் 'பொய்யர்கள்' என்ற தலைப்பில் பேசப் போகின்றேன். உங்களில் எத்தனை பேர் பைபிளில் 'மாத்யூ - 25' என்ற அத்தியாயத்தைப் படித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

கூட்டத்தில் பாதிப்பேர் கையை உயர்த்தினர்கள்.

பாதிரியார் சிரித்துக் கொண்டே சொன்னர் :

''உங்களோடுதான் நான் அவசியம் பேசவேண்டும். ஏனென்றால், பைபிளில் அப்படி ஒரு அத்தியாயமே கிடையாது!''.

- மு. அப்பாஸ் மந்திரி

- பேசிக் கொண்டே கட்டிலை நோக்கி நகர்ந்ததும்...

இவள் தடுத்து... கையைப் பிடித்து...

''கட்டிலில் உட்கார்ந்து பேசணுமா?' - இனிய குரலில் கிசுகிசுத்தாள்.

''ம்...''

''வேண்டாம். அந்தக் கட்டில் உங்களுக்கு வேண்டாம்.... அதில் இருக்கும் ஓராயிரம் கதைகளால் உங்க உடல் களங்கமாகி விடும். என் கட்டில் கதை ஒவ்வொன்றுமே உங்களை அலறச் செய்யக் கூடியவை...''

- சொல்லி, கார்ப்பெட்டில் உட்கார்த்தி, அவன் தோளில் கைபோட்டு நெருக்கமாக உட்கார்ந்து கொண்டாள். ஆவலோடு முகத்தை ஏறிட்டாள்.

''உங்க பேரு?''.

சொன்னன். படிப்பு... பொழுது போக்காக வேலை பார்க்கும் தொழில்... ஊரில் உள்ள வளமான வசதிகள் அனைத்தையும்!

இவள் ஆச்சரியமானுள். 'சுரேஷ் எவ்ளோவ் பணக்காரன்!'

'திருமணம்..'

''இனிதான்!''

''பெண் பார்த்திட்டாங்களா?'

''ம்...''

இப்பொழுது ஸ்நேகா மனம் காரணமின்றி சலனமடைந்தது.

''பெண் யாரு?''

கண்களை உயர்த்தி... புருவங்களையும் உயர்த்தி... பதட்டமான எதிர்பார்ப்பு... நெஞ்சுக்குள் திக்... திக்...

''அது நீதான்! உன்னைத்தவிர இந்த உலகத்திலேயே வேறு யாராக இருக்க முடியும்?''

ஸ்நேகா ஆனந்தமாகி திடுக்கிட்டாள். என்ன பேச வேண்டும் என்று தெரியவில்லை. தன்னைப்பற்றித் தெரிந்தும்...

சுரேஷ் இவள் என்ன சொல்லுகிறாள் என்பதையறிய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.



''என்னுடைய லைஃப் முழு சுகமாக தெரிந்த பிறகுமா இப்படிப் பேசுறீங்க? தினசரியும் ராத்திரி சராசரி நிறைய கஸ்டமர்ஸ்...''

''தெரியும்.''

''சுரேஷ்... எல்லோருமாகச் சேர்ந்து என் உடம்பைக் கூழாக்கிட்டாங்க...

''உன் சூழ்நிலை அப்படி! என் கேள்விக்கு என்ன பதில்?''

''உங்க மேல எனக்கு முழுநம்பிக்கையும், அன்பும், மதிப்பும், உண்டு... உங்களை நம்பி வந்திட்டால் வாழ்நாள் முழுவதும் காப்பாத்துவீங்கறதில கொஞ்சமும் சந்தேகம் இல்லை. ஆனால்...''

''என் ஸைட்லே பயப்பட்ரீயா?''

மதிப்பிற்குரிய பொருள்!

பாரசீக மொழியில் அழியாப் புகழ் பெற்ற காவியங்களை எழுதியவர் மௌலானா ஜாமி. அவரிடம் ஒரு வழக்கம் இருந்து வந்தது. அதாவது, அவர் வீட்டிற்குள் நுழைந்ததும் கதவை மூடித் தாழிட்டுக் கொள்ளுவார்; வெளியே வரும்போது இரண்டு கதவுகளையும் நன்றாகத் திறந்து போட்டுவிடுவார்.

அவர் இவ்வாறு செய்வதன் காரணம் புரியாத ஒருவர் கேட்டார்; ''எல்லோரும் வீட்டிற்குள் இருக்கும்போது கதவைத் திறந்து வைத்திருப்பார்கள்; வெளியே செல்லும்போது கதவுகளை மூடிவிட்டுச் செல்வார்கள். தாங்கள் செய்வது அதற்கு நேர்மாறாக இருக்கிறதே?'' ஜாமி பதில் சொன்னார் : ''வீட்டிற்குள் இருக்கும்போது அதற்குள் இருக்கும் மிகவிலையுயர்ந்த பொருள் நான்தான். அதனால் கதவை மூடிக் கொள்கிறேன். வெளியே செல்லும்போது வீட்டிற்குள் இருக்கும் மற்ற பொருள்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஏனெனில், அவையெல்லாம் அத்துணை மதிப்புடையவையல்ல. அதனால்தான் நான் கதவுகளைத் திறந்து போட்டுவிடுகிறேன்!''

''இல்லே... யூவார் த மேன் ஆஃப் ஆனஸ்ட்... உங்க ஃபேமிலியும் அப்படியே இருக்கும். என்னோட ஸைட்லதான் ஆபத்தே இருக்கு... என்னை வச்சு பிழைப்பு நடத்துற முரளி இம்மாறல் மேன். நீங்க இப்படிப் பேசினது தெரிஞ்சாலே போதும்... விடியறதுக்குள்ளேயே ஆள் வச்சு உங்களைக் கொன்று போட்டிடுவான். உங்க உடம்பில தலை இருக்காது. நீங்கதான் சுரேஷ்னு சொல்றதுக்கு எந்த அடையாளங்களும் இருக்காது. சுரேஷ்... நீங்க சாகவே கூடாது. யூ மஸ்ட் லிவ்...''

எழுந்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

தொடர்ந்து அவனும் எழுந்து நின்றான். அவளை மனைவியாக அடைந்தே ஆக வேண்டும் என்ற வைராக்கியம்.

''சுரேஷ்... டார்லிங்... நான் அதிர்ஷ்டம் இல்லாதவள்... எத்தனையோ பேர் தொட்ட உடம்பு உங்களுக்கு வேண்டாம். என்னை மறந்திடுங்க...''

- சொன்னவள் மேஜையின் மீதிருந்த சூட்கேஸைத் திறந்து உள்ளே அடுக்கி வைத்திருந்த உடைகளுக்கு அடியிலிருந்து ஒரு கவரை எடுத்தாள். உள்ளே கையை நுழைத்து வெளியே எடுத்த

போது ஏராளமான நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. எண்ணி மூவாயிரம் ரூபாய் மட்டும் எடுத்தாள். நீட்டினுள்.

''இது என்னுடைய சம்பளம்... சேமித்து வைத்திருக்கிறேன். என் [illegible] நீங்க தந்த பணத்தை வாங்கிக்குங்க...''

அவன் வாங்கவில்லை. இவளையே பார்த்தபடி நின்றான்.

''ப்ளீஸ்... ஹாவ் இட்...''

''நோ.... ஸ்நேகா... இனியும் நான் அனுமதிக்க மாட்டேன். உன்னை இங்கேயிருந்து விடுவித்து அழைத்துப்போக உன்னுடை அங்கிளுக்கு எத்தனை லட்சம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இந்தக் கட்டில் இனியும் உனக்கு வேண்டாம்...''

ஸ்நேகா அவன் சொல்லச் சொல்ல மனம் உருகிப்போனாள்... [illegible] வரும் கண்ணீரை நிறுத்தவும் முடியவில்லை.

இவள் அப்படியே சரிந்து [illegible]. அந்தக் கால்களைப் பிடித்துக்கொண்டு முத்தமிட்டாள்.

அவன் பதட்டமான உள்ளத்தோடு குனிந்து தோளைப் பற்றி [illegible] நெஞ்சில் இறங்கியது.

அணைத்தபடியே சொன்னான் :

''இந்த நிமிடம் முதல் நீ என் மனைவி... [illegible] இங்கே வந்து உன்னை அழைத்துச் [illegible]. ஆனால் ஸ்நேகா.. இனி நீ [illegible] படுக்கமாட்டாய் என்று உறுதி தர முடியுமா?''

இவள் கையை நீட்டி அவனைத் தொட்டாள். ''ப்ராமிஸ்! இனி இந்தக் கட்டில் என்னுடன் வேறு ஒருவனையும் தாங்காது.''

ஊசிபோட...

தெருவில் இரண்டு நாய்கள் விஷமம் செய்து ஒரு எக்கச்சக்க நிலையில் ஒன்றை யொன்று இழுத்துக் கொண்டு நின்றது. பார்ப்போரின் கவனத்தை எல்லாம் ஈர்த்தது. அந்தக் காட்சியை தெருவில் தன் தந்தையோடு பேசிக் கொண்டிருந்த ஒரு நர்சரி ஸ்கூல் பையன் பார்த்தான். அந்தக் காட்சி அவனுக்கு விநோதமாகப் பட்டது. ''டாடி! அந்த நாய் ரெண்டும் என்ன செய்யுது?'' என்று கேட்டான். தந்தை திடுக்கிட்டார். பையனை கண்டிக்க நினைத்தார். ஆனல் அப்படி கண்டிக்கச் செய்தால் அதைப்பற்றித் தெரிந்து கொள்ள மேலும் மேலும் முயலுவானே தவிர, சந்தேகத்தைத் தீர்க்காமல் விடமாட்டான். ஆகவே, அதை இன்னது என்று விளக்காமல் நாசூக்காக சொல்லிவிடுவது என்ற முடிவிற்கு வந்தார். யோசித்தபோது ஒரு யோசனை உற்பத்தியானது. ''ஓ! மை சன்! அதா கேட்டே...அது வந்து, அந்த கறுப்புநாய் இருக்கு பாரு. அதுக்கு காய்ச்சல் வந்துடுத்து. அந்த வெள்ளை நாய் அதை ஊசிபோட ஆஸ்பத்திரிக்கு இழுத்துக்கிட்டுப் போகுது.'' என்று சமாளித்தார்! பையன் அந்த திருப்தியான பதிலால் சமாதானமானுன்.

- மு. அப்பாஸ் மந்திரி.

(சுஜாதா எழுதிய 'மீண்டும் ஒரு குற்றம்' நாவலில் இருந்து)



3

சுரேஷ் தன் முடிகளைக் கலைத்து நெற்றியில் பரப்பிக் கொண்டு களைத்துப் போனதை போனற பொய்யான நடிப்பில் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்ததும், மாமன் முரளி தெரிந்தான்.

நிறைய குடித்து... கண்கள் சிவந்து உதடுகள் தடித்து... இமைகள் தடித்து... எல்லாமே தடித்து... தடித்தடியான உடம் புடன் பார்ப்பதற்கே ஒரு குரூரம்.

அவன் கறைப்படிந்த பற்களை காதுவரையில் இளித்துக் கொண்டு, ''ஆர்ல் யூ ஸாட்டிஸ்ஃபைடு...'' என்று உளறினன்.

''ம்...''

பின்னல் ஸ்நேகா வந்து நின்று வழக்கமான ரெடிமேட் புன்னகையை ஒட்ட வைத்துக்கொண்டு கையசைத்தாள்.

எதற்குமே காலமில்லை!

ஒரு கம்யூனிஸ்ட் நாட்டு சிறைச்சாலை ஒன்றில் மூன்று கைதிகள் சந்தித்துக் கொண்டனர்.

''நான் மிக தாமதமாக வேலைக்கு வந்தேன். பிடித்து சிறையில் போட்டு விட்டார்கள்!'' என்றான் முதல் கைதி.

''நான் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வேலைக்கு வந்துவிட்டேன். என்னை ஒரு முதலாளித்துவ நாட்டு ஒற்றன் என்று கூறி சிறையில் அடைத்து விட்டார்கள்!'' என்றான் இரண்டாம் கைதி

மூன்றாவது கைதி ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான் :

''ம்...! நாட்டில் நல்லதுக்கும் காலமில்லை; கெட்டதுக்கும் காலமில்லை. நான் பணி பார்த்து கரெக்டாக வேலைக்கு வந்தேன். என்னிடம் ஒரு அமெரிக்க வாட்ச் இருக்கவேண்டும் என்று சந்தேகப்பட்டு உள்ளே போட்டுவிட்டார்கள்!

இது பழைய கதை.

இப்போது.....

4

மறுநாள் காலை.....

காலிங் பெல் தொடர்ந்து 'கிர்ரீங் கிர்ரீங்' சொல்ல,படுக்கையில் படுத்திருந்த சுரேஷ் எழுந்தான், ஸ்நேகா நினைவுடனயே!

வேலைக்காரன் தினசரியும் சாலையில் காப்பி வாங்கிக் கொண்டு வந்து பெல்லடிப்பான். அவன் வந்திருக்கக்கூடும்...

சுரேஷ் கண் விழித்ததுமே ஸ்நேகா நினைவில் அலை மோதினாள். கனவிலும் ஸ்நேகாதான் பலதடவைகள் வந்திருந்தாள்... ஏதேதோ பேசி நிறையவே சந்தோஷங்கள் கொடுத்து...

இவள் மறக்க முடியாதவள்...

சுரேஷ் இவள் நினைவாகவே சென்று கதவைத் திறந்து விட்டு, வெளியே தெரியும் காக்கி உடை மனிதர்களைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

ஒருவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணநாத்... இன்னொருவர் சப் - இன்ஸ்பெக்டர் தாமஸ்ராஜ்.

இரண்டு பேர்களையுமே அவன் அறிவான்.

''கு.. குட்மார்னிங் ஸார்....'' தடுமாறினான்.

காலையிலேயே போலீஸ் வருவது என்றால்...? ஏதாவது விபரீதமான நிகழ்ச்சி...

இரண்டு பேர்களும் உள்ளே வந்து நின்றார்கள்.

''ஸார்... எனி திங்க் ப்ராப்ளம்?''

- சுரேஷ் பதட்டமாய் கேட்க... இன்ஸ்பெக்டர் தலையிலிருந்த தொப்பியை எடுத்து கட்கத்தினுள் இடுக்கிக் கொண்டு, ''உங்களுக்கு எதுவுமே தெரியாதா?''

''எ... எது மிஸ்டர் இன்ஸ்பெக்டர்?''

''ஆப்போஸிட் பங்களா... அங்கே ஸ்டே பண்றாடால்... பேருகூட ஸ்நேகா...''

அவர்கள் வந்திருக்கும் விஷயம் ஸ்நேகா பற்றியதுதான் என்பது நன்ருகவே தெரிந்தது.

ஸ்நேகாவுக்கு ஆபத்தா?

பதட்டமாகிப் போன இவன், ''ஸ்நேகாவுக்கு என்ன?''

''அவள் மர்டர் ஆகியிருக்கிருள்... ஸ்நேகா கொலே...''

சுரேஷ் திகிலடித்துப் போய், ''ஹாக்...'' என்று அதிர்ந்தான். இந்தக் கட்டடத்தின் தலேயில் குண்டு விழுந்து வெடித்துச் சிதறியது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. அதிர்ச்சியினுல் திறந்த வாயை மூடமுடியவில்லே. குரல் தொண்டைக்கு மேலே வர மறுத்தது.

உறைந்து நின்ருன்.



''எ... எப்படி ஸார் ஸ்நேகா செத்தாள்?'' - சுரேஷ் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒரு புதுவேகத்துடன் கேட்டான். உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது.

''ஸ்நேகாவின் கன்னத்தில் யாரோ ஒரு கஸ்டமர் முரட்டுத்தனமாக அடிச்சிருக்கிருன். அவன் அடிச்ச அடியில் சுருண்டு விழுந்து மயக்கமாகி நேத்து ராத்திரி செத்துப் போயிருக்கிருள். காலேயில் அவளோட அங்கிள் முரளியிடமிருந்து போன் கால் வந்தது...''

இன்ஸ்பெக்டர் சொன்ன தோரணை... அப்பொழுது பார்த்த பார்வை தன்னை நேரடியாகக் குற்றம் சாட்டுவதைப்போல் இருக்க... இன்னும் பலமாக அதிர்ந்து வியர்த்த என் மார்புப் பிரதேசமும் இதயமும் தடதடத்தன.

ஸ்நேகாவை அடித்தது எப்படி மற்றவர்களுக்குத் தெரிந்தது? அடிபட்டு கன்னம் வீங்கியிருந்ததால் பாபன் பூரியின் மிரட்டலுக்குப் பயந்து எல்லாவற்றையும் சொல்லிவிட்டாளா?

சொல்லியிருக்கலாம்!

அல்லது கன்னத்தைப் பார்த்தும் அவன் தெரிந்து கொண்டிருக்கலாம்.

''அந்த கஸ்டமரோட பேர் என்ன தெரியுமா?''

சப் - இன்ஸ்பெக்டர் மீசையை உயர்த்திவிட்டு, ''அவர்தான் சுரேஷ்...'' என்று முறைத்தார்.

இதயம் தடம்புரண்டு 'டிக் டிக்' என்று துடித்தது.

''மிஸ்டர் சுரேஷ்... நீங்க பெரிய இடத்துப் பிள்ளை என்பதும், பவர்ஃபுல் பேகளினிலே ஒர்க் பண்றீங்கன்னும் தெரியும்... போலீஸில ஹை ஆஃபிஸியல்ஸ்லே யெல்லாம் உங்களுக்குச் செல்வாக்கு உண்டுன்னும் தெரியும். ஆனால் கொலை செய்ய சட்டம் பர்மிட் பண்ணதே... ஸ்நேகா கொலை சம்பந்தமாக உம்மைக் கைது செய்திருக்கிறோம். யூவார் அண்டர் அரெஸ்ட்.''

சுரேஷ் புதிதாக அதிர்ச்சியடையவில்லை. ஆனால் அவனுடைய கன்னத்தில் பதிந்த ஒரே அறையால் சாவதற்கு வாய்ப்பில்லை என்று எண்ணினான்.

நம்பினான்.

உடனே மறுத்து....

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... என்னை அரெஸ்ட் பண்றதை நான் ஆட்சேபிக்கப் போவதில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் என்னை நீங்க கைது செய்வதற்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. இட் ஈஸ் யுவர் டியூடி... ஆனால் அதுக்கு முன்னால சிலவிஷயங்கள் எனக்குத் தெரியணும்...''

இன்ஸ்பெக்டர் தலையை உயர்த்தினார்.

அவன் துணிவுக்கு வந்து பேச்சை உயர்த்தினான்:

''எனக்கு ஸ்நேகா மீது ஏராளமான இரக்கம் உண்டு. தினசரியும் ராத்திரி ஜன்னல் பக்கமா உட்கார்ந்து எதிர் பங்களாவிலே நடக்கிறதையெல்லாம் கவனித்துக் கொண்டே இருப்பேன். எத்தனையோ வெரைட்டீஸ் ஆட்கள்... இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகள்... நீக்ரோக்கள் முதல் வெள்ளைக்காரர்கள் வரை! என் மனசு கலங்கும். நீக்ரோவிடம் அவள் சிக்கி என்ன அலறல் அலறினளோ என்று இதயம் கனத்து வீங்கும்! பெண்ணைப் பிறந்து இயந்திரமாக மாறிய அவளுக்காக அழுவேன். இதற்கிடையே நாங்கள் இரண்டு பேர்களுமே

வெறும் பார்வையின் மூலமே காதலித்தோம்.

அவளுடைய ரேட் மூவாயிரம் ரூபாயையும் கொடுத்து, ராத்திரி எட்டு மணி அளவில் சந்தித்து... திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு கன்னத்தில் அறைந்தேன். அவள் நிறையவே அழுதாள். தப்புகளுக்கு அவள் காரணம் அல்ல என்பதைத் தெரிந்து கொண்டதும் மன்னித்தேன். அவளை என் மனைவியாக ஏற்றுக் கொள்வது என்றும், அதற்காக அவளோட அங்கிள் கேட்கும் பணத்தைக் கொடுத்து விடுவது என்றும் தீர்மானித்தேன். ஸ்நேகா இனி தன் உடலை யாருக்கும் தருவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தாள்...

இன்ஸ்பெக்டர் வழுக்கை விழுந்து உயர்வை ஓடிக் கொண்டிருந்த உச்சந்தலையை கர்ச்சிப் கொடுத்துத் துடைத்துவிட்டு தொப்பியை அமர்த்தினர்.

சப் - இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார்: ''ஸோ... நீர் கன்னத்தில் தமாஷாக அடித்ததால் அவள் செத்துப் போயிருக்க முடியாதுன்னு சொல்றீர்...''

''ஆமா ஸார்... அதுக்கப்புறம் ஒருமணி நேரமாக நாங்க மனம் விட்டு பேசிக்கொண்டிருந்திருக்கிறோம். அவள் செத்துப் போவதற்கான எந்தவிதமான ஸிம்ஸ்டெம்ஸும் இல்லை... அவள் இனிமேல் தப்பே பண்ணுவதில்லை என்று எனக்கு பிராமிஸ் பண்ணினாள். நான் வெளியே வந்த பிறகு புதிதாக ஒரு கஸ்டமர் வந்து அவளை கட்டிலுக்கு அழைச்சிருக்கணும்... அவள் முடியாதுன்னு தகராறு பண்ணியிருப்பாள்... அதன் காரணமாகத்தான் இந்தக் கொலை...''

இரண்டு பேர்களுமே சுரேஷைப் பார்த்தார்கள்.

''ஸ்நேகா ஏற்கெனவே பலருடன் கெட்டுப் போனவள். உங்களுக்கு வாக்கு கொடுத்திருந்த போதிலும் நிர்பந்தம் காரணமாக கூடுதலாக ஒருவனுக்கு ஒத்துழைப்பு கொடுப்பதும் நடக்காத காரியம் அல்ல... அதனால் புதிதாக எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. அவள்தான் கற்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லையே...''

''அப்படிச் சொல்ல முடியாது. அவள் பெக்கூலியர் டைப் கேர்ள். எப்படியோ மாமன் முரளியிடம் சிக்கியிருந்த போதிலும் ஒருவனுடன் வாழ வேண்டும் என்பதில் அவளுக்கு தணியாத ஆவல் இருந்தது.''

''அவள் உமக்குக் கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றியிருப்பான்னு நம்புறீரா?''

''ஷ்யூர்... அவள் மரணத்திற்கு முரளிதான் பொறுப்பு...''

இன்ஸ்பெக்டர் இவன் அத்துமீறிப் பேசுகிறான் என்று எண்ணி முணுமுணுத்தார்.

போலீஸ் குணம் தெரியும் என்பதால் இவன் மௌனித்தான்.

மன்னிப்பு

சிறையில் இருந்த ஒரு அரசியல் கைதிக்கு நாவல்கள் படிப்பதிலோ, இலக்கியங்கள் படிப்பதிலோ நாட்டமில்லை. நெப்போலியன், அலெக்ஸாண்டர், லெனின், நேரு, நேதாஜி, கட்டபொம்மன், பகவத்சிங், சிதம்பரனுர் போன்றவர்களின் தியாக வரலாறுகளையும், வீரவரலாறுகளையும். தவிர வேறு எந்த நூலையும் அவர் கையால் தொடுவதில்லை. இப்படி, அந்த மாவீரர்களின் சரித்திரங்களைப் படித்துக் கொண்டிருந்த வரை, ஒருநாள் காலை சிறைக்கூண்டில் காணவில்லை. எங்கே என்று விசாரித்தபோது, மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே போய்விட்டார் என்று சிறைக் காவலர் ஒருவர் விடையளித்தார்!

(கலைஞர் மு. கருணாநிதியின் 'சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள்' நூலிலிருந்து)

6



சுரேஷ் தக்க காவலுடன் ஸ்நேகாவின் பங்களாவுக்கு அழைத்துப் செல்லப்பட்டான்.

ஹாலினுள் ஷோபாவில் சரிந்துக் கிடந்த மாமன் முரளி இவனைக் கண்டதும் குபீரென்று ஆத்திரமடைந்து பெருங்குரலெடுத்துக் கத்தத் தொடங்கி விட்டான்:

''கொலைகாரப்பாவியை இங்கே ஏன் கொண்டு வர்றீங்க? எங்க பெண்ணை இவன்தான் அடிச்சுக் கொன்ருன். இவனை நேராக தூக்கு மேடைக்குக் கொண்டு போய் தூக்கில் போடுங்க.

இன்ஸ்பெக்டர் சரவணநாத் குரலை அவனுக்கு மேலாக உயர்த்தி வரம்பு மீறிப் பேசாதவாறு தடுத்தார்.

''ஸ்நேகா மர்டர் சம்பந்தமாக நாங்க இவரைக் கைது செய்திருக்கிறோம். சரியான எவிடென்ஸ் இல்லாம கோர்ட் யாரையும் தண்டிக்க முடியாது. போலீஸே கோர்ட் இல்லை.''

''அப்படின்னு குற்றவாளி தப்பிச்சிடுவானு?''

''தப்பக்கூடாது என்பதே எங்க எண்ணம். அதனுலதான் தீவிரமான விசாரணையை மேற்கொண்டிருக்கிறோம்.''

மாமன் முரளியைக் கீழேயே ஹாலினுள் இருக்கும்படி பணித்துவிட்டு, இவனை அழைத்துக் கொண்டு மாடிக்கு போனூர்கள்.

சுரேஷின் கைகள் இரண்டும் மேல்துண்டால் பின்னுக்கு இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. இவன் கைவிலங்குகள் போடப்பட்டிருந்தால் கூட வெட்கப்பட்டிருக்க மாட்டான். ஓர் அபலைப் பெண்ணுக்காகச் செய்யப்படும் தியாகம் என்றே கருதியிருப்பான்.

படிக்கட்டுகளில் ஏறி... ஸ்நேகா அறை முன் வந்ததும் கதவு திறந்தபடியே விரித்து வைக்கப்பட்டிருப்பதையும், ஃபிங்கர் பிரிண்டர்ஸ்... போட்டோ கிராபர்கள் என்று செயல்பட்டுக் கொண்டிருப்பதும் இவன் கவனத்தை ஈர்த்தன.

பார்வை கட்டிலுக்குத் தாவியதும் நெஞ்சுக்குள் 'சுரீர்' என்று சூட்டுக்கோல் ஒன்று தீய்த்துக் கொண்டு போனதுபோல் இருந்தது.

சோலப்பூர் காப்பிப் பொடி நிற பெட்ஸீட் கட்டிலில் விரிக்கப்பட்டு, அதன்மீது ஸ்நேகா மல்லார்ந்த நிலையிலேயே படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

அவள் தலையணையில் தலை வைத்துத் தூங்கிக் கொண்டிருப்பது போலவே தெரிந்தாள். உடலில் உயிர் இல்லை என்பதை நினைத்துக் கொண்டதும் தொண்டையில் நீர் சுரப்பு நின்று விட்டதுபோல் இருந்தது.

உள்ளே காலெடுத்து வைத்ததும் கால்கள் இரண்டும் பின்னிக் கொண்டு நடக்க முடியாதபடி தத்தளித்தன.

ஸ்நேகா...

இரவில் தன்னைச் சந்தித்த அதே ஷிபான் சேலையிலேயே தெரிந்தாள். கண்கள் நிலைகுத்தி நிற்க,எதையோ தடுக்க நினைப்பவள் போல் கைகளை விரித்திருந்தாள்.

கன்னம் உப்பலாக வீங்கி... கீழுதட்டில் காயம் ஏற்பட்டு, அந்தத்துணி எட்டிப்பார்த்த நிலையிலேயே உலர்ந்து...

முழங்கையில் சிராய்ப்பு ஏற்பட்டு...

இவள் தலை முடிகள் கலைந்திருந்தன.

எட்டி நின்று ஸ்நேகாவின் உடலைப் பார்த்த சுரேஷ் குலுங்கிக் குலுங்கி அழுதான். இரவில் அவள் தன்னிடம் பேசிய சொற்கள் ஒவ்வொன்றும் ஓடிவந்து காதுகளில் ரீங்காரித்தன.

-இந்தக் கட்டில் என்னுடன் வேறு ஒருவரையும் தாங்காது.

எத்தனை உறுதியுடன் இதைச் சொன்னாள்.

இன்னொரு விஷயத்தையும் எச்சரிக்கையாகச் சொன்னாள். அந்த வார்த்தைகள் :

- விடியறதுக்குள்ளேயே உங்களை ஆள் வச்சுக் கொன்று போட்டு போட்டிடுவான். நீங்கதான் சுரேஷ்னு சொல்ரதுக்கு எந்த விதமான அடையாளங்களும் இருக்காது.

இப்படியெல்லாம் சொல்லி தன்னை எச்சரித்தவள் இப்பொழுது அவளே செத்துக் கிடக்கிறாள்.

அவளுக்காக சிறிது நேரம் தலையைத் தாழ்த்தியபடியே நின்று கண்ணீர் வடித்து மௌன அஞ்சலி செய்த பின்பு, அறைக்கு வெளியே வந்து காத்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரிடம் பேசினான் :

''சுரேஷ் இரவில் நான் வெளியேறிய பிறகு கடுமையாகத் துன்புறுத்தப்பட்டிருக்கிறாள்... நான் அவள் கன்னத்தில் மட்டும் தான் அடித்தேன்.''

''வேறு எங்கேயும் அடிக்கலியா?''

''இல்லை.''

''துன்புறுத்தப்பட்டிருப்பாள்னு சொல்றீங்களே... அது யாரால?''

''ஸ்நேகா எப்படியோ வந்து மாமன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் முரளியிடம் வந்து எப்படியோ சிக்கிக் கொண்டிருக்கிறாள். அவளை வைத்து லட்சக்கணக்கில் அவன் சம்பாதித்திருக்கிறான். நான் வந்த பிறகு அவர்களுக்குள் மோதல் ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக அவளுடைய மரணத்திற்கு அவன்தான் பொறுப்பு.''

''எவிடென்ஸ்?''

''என் மனசாட்சி சொல்லுவதை மட்டும்தான் இப்பொழுது என்னால் சொல்ல முடியும்.''

''எங்களுக்கும் அதே சந்தேகம் இருந்தது. தனியாக ரூமுக்கு அழைத்துச் சென்று விசாரித்தோம். அவன் தனக்கு எதுவுமே தெரியாது என்று சத்தியம் செய்கிறான். அவளுடன் தங்கியிருந்த ஒரு மணி நேரத்தில் நீங்கள்தான் அடித்து நொறுக்கியிருக்க வேண்டும் என்கிறான்.''

''நீங்க அதை நம்புறீங்களா ஸார்?''

''கன்னத்தில் அடித்ததாக ஒப்புக்கிறீங்களே...''

''ஆமா... அதை நான் மறுக்கல. ஒரே ஒரு அடி... அதுவும் கன்னத்தில் மட்டும்தான் குடுத்தேன்.''

''உண்மை என்ன என்பதைச் சீக்கிரமே கண்டு பிடிக்கிறோம். அதுவரையிலும் போலீஸ் கஸ்டடியில் வைத்து உங்களை விசாரிக்கிறோம். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட், பாரன்ஸிக் ரிப்போர்ட் வந்ததும் டெத் எப்படி ஏற்பட்டதுன்னு தீர்மானிச்சிடலாம்.''

அவர்கள் பேசிக் கொண்டே நடந்தபோது ஓர் அறையினுள்ளேயிருந்து வந்து கொண்டிருந்த ஒரு பெண்மணியைப் பார்த்தான் சுரேஷ்.

ஐம்பது வயது இருக்கும். இங்கேயிருக்கும் அறைகளைப் பெருக்கிச் சுத்தம் செய்வது, தண்ணீர் போட்டுத் துடைப்பது, சமையல் வேலைகளைக் கவனிப்பதும் இவள் வேலைதான்...

இவள் நிறையவே அழுது கண்கள் சிவந்து போயிருக்கிறாள். சினிமா நடிகை பார்வதி சைஸ் உடம்பு.

அடுத்த சில நிமிஷங்களில்...

டோலியை இரண்டு பேர்கள் எடுத்து வந்தார்கள்.

அதில் ஸ்நேகா உடலைத் தூக்கி வைத்து மிகுந்த சிரமத்துடன் வெளியேறினார்கள்.

7

மாலையில் வெளிவந்த எல்லா தினஇதழ்களிலும் விதவிதமான கோணங்களில்... பின்பக்கத்தில் மூன்று காலங்களில் ஸ்நேகா செத்துப் போயிருந்தாள்.

பத்திரிகைகள் வழக்கம்போல் நிறையவே கயிறு திரித்திருந்தன!

கொலையா என்றும்...

தற்கொலையா என்றும்...

- இப்படியே பலவகையான யூகங்கள்.

செய்திகளை அவசரமாகத் தரும் ஒரு பேப்பர் ஸ்நேகாவின் காதலன் சுரேஷ் கைதாகி விடுதலை என்று அறிவித்திருந்தது. சென்னையை விட்டு வேறு வெளியூர்களுக்கு போலீஸ் அனுமதியின்றி போகக்கூடாது என்ற நிபந்தனையும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அவன் பயோடேட்டாவும் வெளியிடப்பட்டிருந்தது.

8



சுரேஷ் வேலை பார்க்கும் 'மக்கள் செய்தி'யின் நியூஸ் எடிட்டரும், இன்னும் சில முக்கியஸ்தர்களும் சுறுசுறுப்பாக செயல்பட்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசேஷ ஜாமீன் கொடுத்து அழைத்து வந்து விட்டார்கள்.

கதர்ச்சட்டை, மேல் அங்கவஸ்திரத்துடன் எப்பொழுதும் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருக்கும் நியூஸ் எடிட்டர் அவனை தன்னுடைய அறையினுள் அழைத்துச் சென்று...

எதிரில் நாற்காலியில் உட்கார வைத்து உரிமைச் செல்லத்துடன் கடிந்து கொண்டார் :

''சுரேஷ்... நீ கண்ணியமான ஃபேமிலியைச் சேர்ந்தவன். உன் தோப்பனாரை பத்து வருஷமாக எனக்குத் தெரியும்.... சுதந்திர போராட்ட காலத்தில உன்னோட தோப்பனார் என்

னோ உப்பு சத்தியாகிரகம் வந்து ஒரே ஜெயிலில் இருந்திருக்கார். அவரோட ஒரே பிள்ளையான நீ ஒரு கால் கர்ள் மர்டரில் இன்வால்வ் ஆகலாமோ? ஃபேமிலிக்கு கெட்ட பெயர் வந்திடாதோ?''

''வாக்கூடாதுன்னுதான்... என்னுடை ஆசை ஒரு பெண்... ரொம்பவும் அழகான பெண்... தினசரியும் பலதடவைகள் வதைபடுவதையும், அவள் சிரித்துக்கொண்டே சமாளிப்பதையும் கண்டு இரக்கப்பட்டேன். உப்பு சத்தியாகிரகத்தின்போது நீங்க நாட்டுக்காக தியாகம் செய்தீங்க... நான் அந்த உப்பை இப்பொழுது கையாளுகிற ஒரு பெண்ணுக்காக என் வாழ்க்கையையே தியாகம் செய்ய முன் வந்தேன். அவளைக் கொன்னுட்டாங்க...''

- சொல்லி நிறுத்திய போது கண்களிலிருந்து கண்ணீர் 'பொல பொல' என்று உதிர்ந்தது.

இனி உபதேசம் பயன்தராது என்பதால் நியூஸ் எடிட்டர் அவனுக்கு ஆறுதல் சொன்னர்.

''சுரேஷ்...''

''ஸார்!''

''நான் உன்னை ஒரு கொஸ்டியன் பண்ணுறேன்... ஸ்நேகா தினசரியும் ஏராளம் சம்பாதிச்சுக்குடுத்த பொண்ணு... அவளை ஏன் அவளோட மாமாவே கொலை செய்யணும்? அது மாபெரும் வருமான இழப்பு அல்லவா?''

ஏன் போகாது?

முஷ்ஃபிகி மணந்து கொண்ட ஒரு இளம்பெண், திருமணமான ஐந்தாவது நாளே ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அதைக் கண்டு முஷ்ஃபிக் திடுக்கிட்டார். உடனே கடைக்குச் சென்று புத்தகம், நோட்டு, பேனு எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார். அவளுக்கோ ஒன்றும் புரியவில்லை. குழப்பத்தோடு அவைகளை வாங்கிக் கொண்டு, ''இதெல்லாம் யாருக்கு?'' என்று கேட்டாள். ''என் மகனுக்குத்தான்'' என்றார் முஷ்ஃபிகி. ''என்ன விளையாடுகிறீர்களா? இப்போதுதா[ன்] பிறந்த குழந்தைக்கு நோட்டு[ம்] பேனவும் எதற்கு?'' என்று சற்[று] கோபமாக கேட்டாள் மனைவி. ''நா[ன்] விளையாடவில்லை. திருமணமா[ன] ஐந்தாவது நாளே பிறந்த ஒரு குழந்[தை] பிறந்த மூன்றும் நாளே பள்ளி[க்] கூடத்திற்குப் போகாதா?'' என்ற[ார்] முஷ்ஃபிக் அமைதியாக. அ[தைக்] கேட்ட மனைவிக்கு தலைசுற்றியது!

(ரஷ்ய நாட்டுக் குட்டிக்கதை

''அவள் என்றாவது ஒருநாள் ஓடிவந்து விடுவாள் என்பது உறுதியாக அவனுக்குத் தெரியும். அதனால் அந்த ஆத்திரத்துடன் அவள் யாருக்குமே கிடைக்காமல் போகட்டும் என்ற எண்ணத்துடன் அவளை முடித்திருக்கலாம்.''

''சுரேஷ்...''

''ஸார்!''

''நீ என்னோட பையன் மாதிரி... உன்மேல உள்ள அன்பால வார்ன் பண்றேன். ஆபீஸ்ல எத்தனையோ ரூம்ஸ் இருக்கு... எதிலேயாவது ஸ்டே பண்ணிடு. நீ வீட்டுக்குப் போனால் உன்னையும் கொலை பண்ணிடலாம்...

''ஸார்... என் குணம் உங்களுக்குத் தெரியும். அக்கிரமத்திற்கு ஒருபோதுமே அடிபணிய மாட்டேன் என்பதும் தெரியும். என்றைக்காவது ஒரு நாள் போக வேண்டியதுதானே உயிர்... அந்த உயிரைப் பாதுகாக்கணும் என்கிறதுக்காக நான்கு சுவர்களுக்கு மத்தியில என்னை நானே சிறை வச்சுக்கத் தயாராக இல்லை. ஸாரி...''

எழுந்தவன்... ''ஸ்நேகாவைக் கொலை செய்தவன் இனியும் வெளியே இருக்கக் கூடாது. அவன் உயிர் வாழவும் அனுமதி இல்லை...'' - சொன்னதும் அவர் பரபரப்படைந்து, ''அந்த உயிரை நீ எடுத்திராதே... இனி காவல்துறை பார்த்துக்கும். முடிந்தால் காவல்துறைக்கு உதவியாக தடயங்களைக் கண்டு பிடித்துக் குடு!'' என்று சொன்னார்.

''ஓக்கே ஸார்... அவனை சகலமரியாதைகளுடன் தூக்கு மேடைக்கு அனுப்பி வைக்கிற வரையில் எனக்கு ரெஸ்ட் இல்லை!''

- துடிப்போடு சொன்ன சுரேஷ் விடை பெற்றான். கொலைகாரனை விடாதே என்று மனம் துரத்தியது.

அபசுரம்

சங்கீத கலா சபாவில் வித்வான் ஒருவர் பாடி முடித்தார். திடீரென ஒருவன் கூட்டத்தைப் பிளந்து கொண்டு மேடைக்கு வந்தான்.

''இன்று எல்லாம் சுத்த அபசுரம். காது கொடுத்துக் கேட்க முடியவில்லை'' என்று வித்வானைப் பார்த்துக் கத்தினான்.

வித்வான் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தபோது சபா செயலாளர் ஓடிவந்து அவனை சமாதானப்படுத்தினார். பிறகு வித்வான் பக்கம் திரும்பினார்.

''இவன் பேச்சைக் கேக்காதீங்க! யாராவது எதையாவது சொன்னால் அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பான்!'' என்றார் சபா செயலாளர்!

9



இரவு ஆரம்பமாகி சென்னை நகரத்தில் மின்விளக்குகளின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

[illegible] ஆட்டோவில வந்து தெரு முனையிலேயே நிறுத்தி இறங்கிக்கொண்டான். அவனுடைய முக்கிய திட்டம் [illegible]வின் வீட்டில் வேலை பார்க்கும் பெண்மணியான [illegible]மாவை சந்திக்க வேண்டும் என்பது.

தாயம்மா பெயரைப் போலவே ஸ்நேகாவிற்குத் தாய் போன்றவள். தன் சொந்த மகள் போலவே நினைத்து - அதை விடவும் ஒருபடி மேலாக அன்பு செலுத்தினுள்.

வழக்கமாக இந்நேரம் தாயம்மா பிள்ளையார் கோயிலில் இருப்பாள். இரவு ஏழு மணிக்கு அங்கே வந்து விட்டால் அவள் கோயில் பிராகாரத்தினுள் வலம் வந்து சேவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

சிலநாட்களுக்கு முன்புகூட அவளைச் சந்தித்து ஸ்நேகா பற்றிப் பேசுவதற்காக அங்கே வந்திருக்கிருன்.

அப்பொழுது அவள் சொன்ன வார்த்தைகள்தான் ஸ்நேகா மீது அளவுகடந்த பிடிப்பை உண்டு பண்ணியிருந்தன.

''தம்பி...''

அவன் வேப்பமரத்தின் அடியில் நின்று கொண்டிருந்தான்.

''ம்... சொல்லுங்க.''

''நான் அஞ்சாம் கிளாஸ்தான் படிச்சிருக்கிறேன். எனக்குள்ள அறிவை வச்சு எனக்குத் தெரிஞ்ச விஷயங்களைச் சொல்றேன். கருணைக் கொலைன்னு கேள்விபட்டிருக்கிறியா தம்பி...?'

கருணைக் கொலையா?


அவன் விழித்தான்.

''ஒரு கன்றுக்குட்டி நோய்க்கொடுமை தாங்காம துடியாய்த் துடிச்சுக்கிட்டிருந்ததாம். அதைப் பார்த்த - அகிம்சையையும் ஜீவகாருண்யத்தையும் நமக்கெல்லாம் சொல்லிக் கொடுத்து, நமக்குச் சுதந்திரமும் வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தி அதைக் கொன்று விடும்படி யோசனை சொன்ஞராம். அதைப் போல் ஸ்நேகா தினசரியும் யார் யாரிடமெல்லாமோ சிக்கி கட்டிலில் சிரித்த முகத்துடன் உள்ளம் கதறி அழுது கொண்டிருப்பதைப் பார்ப்பதைவிட சயனைடு விஷம் குடுத்துக் கொன்னுடலாம்...''

சயனைடு விஷம் பற்றி தாயம்மா தெரிந்து வைத்துக் கொண்டிருப்பது அப்பொழுது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்பொழுது ஆட்டோவிலிருந்து இறங்கி நடந்து கொண்டிருந்த சுரேஷ் அதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறான்.

தாயம்மாவே அவளை...



10

சுரேஷ் எதிர்பார்த்தது தாயம்மா விநாயகர் முன்னால் நின்று கொண்டிருக்கிறாள். கண்களிலிருந்து நீர் வழிந்த வண்ணம் இருக்கிறது.

அவன் ஓசைப்படாமல் வந்து விநாயகரைச் சேவித்து விபூதி பிரசாதம் வாங்கிக் கொண்டு அவளுக்காக வெளியே காத்துக் கொண்டிருந்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து தாயம்மா சேலைமுனையை போர்த்திக் கொண்டு வெளியே வந்து, அவன் கூப்பிட்டதும் இலேசான அதிர்வுடன் நின்றாள். அழுது ஓய்ந்த கண்களில் மிரட்சி தெரிந்தது.

''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும்... வேப்ப மரத்தின் அடியில் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

- சொன்னவன் நேராக அங்கே போய் நின்றான்.

தாயம்மா சிறிது தயங்கிய போதிலும் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே வந்தாள். எதிரில் நின்றாள். இன்னும் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்த வண்ணமே இருந்தது.

''தாயம்மா...''

''ம்...''

''அன்றைக்கு நீ சொன்னது இன்றைக்கும் ஞாபகம் வருகிறது. ஸ்நேகா அனுபவிக்கும் துன்பங்களைக் காணச் சகிக்காமல் நீயே கொன்று...''

தாயம்மா தலையை உயர்த்தினாள் - பார்த்தாள்.

''சுரேஷ் தம்பி... முன்பெல்லாம் அப்படியும் நான் நினைத்ததுண்டு... ஆனால் நான் உன்னோடு பேசிய பிறகு அவளுக்கு ஏதோ ஒருவிதத்தில் விடிவுகாலம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையில ஆறுதலடைஞ்சேன்.''

சொன்னபோது மேலும் கண்ணீர் பொங்கி தடைபடுத்த முடியாத நிலையில் வழிந்தோடியது.

இவன் மனமும் நொறுங்கி கண்ணீர் ஊற்றெடுத்துப் பொங்குவதற்குத் தயாராக இருந்தது.

''ஆனால் நீ நேத்து ராத்திரி வந்து போனதிலிருந்து நிலைமை ரொம்பவும் மோசமாகிவிட்டது...''

''எப்படி?''

''மாமன் என்று சொல்லிக் கொண்டு அங்கேயே இருக்கிற காண்டாமிருகம் முரளி பெட்ரூமுக்கு வந்தான். கதவைப் பூட்டினான். கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டு அவளைக் கூப்பிட்டான். ராத்திரி பூராவும் கட்டில் சப்தம் கேட்கணும்னு சொன்னான்.



ஸ்நேகா அவன் மனநிலையைப் புரிந்து கொண்டாள். அவன் அளவுக்கும் அதிகமாகக் குடித்திருப்பதால் மறுத்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்றும் பயந்தாள். ஆனாலும் தைரியமாக முடியாதுன்னு சொன்னாள்..

அவள் சொல்லச் சொல்ல...

இவன் மனத்தில் அந்த படுக்கையறைக்காட்சி வீடியோ திரையாக மாற ஆரம்பித்தது...

"...நோ..."

ஸ்நேகா கைகளை முன்னால் ஆட்டிக்கொண்டே பின்னுக்குப் போனாள். பின்னால் சுவர்...

அவளுடைய மாமன் முரளி வியர்த்து விறுவிறுக்க [illegible]கத் தெரிந்தான். அரிவாள் மீசை மேலே தூக்கிக் கொண்டு நின்றிருந்தது.

"தமிழில் சொன்னால் ஆகாதோ... இங்லீஷ்காரனுக்கு பொறந்த கழுதை! நீ எப்படிச் சொன்னாலும் உன்னை வி[illegible] மாட்டேன்! ஏன் 'நோ' சொல்றே?"

குரல் பீரங்கியாக முழங்கியது.

அவன் இடுப்பில் லுங்கியும் முண்டா பனியனும் கொடுக்கப் பாயத் தயாராகும் வேட்டைநாயாக நின்றுகொண்டிருக்கிறான்.

இவள் தடதடக்கும் நெஞ்சோடு, "எனக்கு உடம்புச் சரியாக இல்லை..." என்று தலையைத் தாழ்த்தினாள்.

"சரியாக இல்லை என்றால்?"

"எனக்கு இன்னிக்கு ரெஸ்ட் வேணும்."

"நான் என் முடிவைச் சொல்றேன் கேளு... நீ எனக்குப் புதுசு இல்லை... இன்னும் சொல்லப்போனால் உன்னை முதல் தடவையாகத் தொட்டவனே நான்தான்."

"அதை என்னால மறுக்க முடியாது. ஆனால் இனி முடியாது."

- இப்படி இவள் தீர்க்கமாய்ச் சொன்னதும் அவனுக்குச் சுரீரென்று கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. கண்கள் இன்னும் சிவந்து வெளியே எட்டிப் பார்த்தன.

"என்னடி சொன்னே?"

குரலோடு இவள் கன்னத்திலும் 'பளார்' என்று இடி இறங்கியதுபோல் இருந்தது. பந்துபோல் துள்ளி விழுந்தாள்.

அவன் குபீரென்று பாய்ந்து பிடித்துக் கொண்டான் - தூக்கி நிறுத்தினான். உடைகளை அவசரமாகப் பிரிக்க ஆரம்பித்தான்.

ஸ்நேகா ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. கண்டிப்பாக மறுத்ததோடு, "இனி என் உடம்பில் யாருடைய கையுமே பட முடியாது. நான் என்னை சுரேஷிடம் ஒப்படைத்து விட்டேன். இனிமேல் எனக்கு எல்லாமே அவர்தான்!" என்று தீர்க்கமாய்ச் சொன்னாள்.

அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை. அதிர்ந்து உறைந்து நின்று விட்டு ஆத்திர எரிமலையாக மாறினான்.

அதன் பிறகு...

மூர்க்கமாய்... முரட்டுத்தனமாய் புரட்டிபுரட்டி அடித்து நொறுக்கினான். எந்தப் பெண்ணாலுமே தாங்கிக் கொள்ள முடியாத சித்திரவதைகளையெல்லாம் செய்தான்.

ஸ்நேகா எதிர்த்துப் போராடவில்லை.

அவன் கொடூரமாகத் துன்புறுத்துகிறுனே என்று அழவும் இல்லை. இதுவரையிலும் தான் செய்திருந்த பாவங்கள் அனைத்தும் கரைகின்றன என்றே அப்பொழுது நினைத்து ஆறுதல் அடைந்தாள்.

இறுதியில் இவள் மயக்கமடைந்து கட்டிலில் சரிந்தாள்.

அதன்பிறகுதான் அவன் கதவைத் திறந்தான். வெளியே பதட்டமாய் கண்ணீரோடு காத்துக் கொண்டிருந்த தாயம்மாவிடம் ஆத்திரமாகச் சொன்னுன் :

''இந்த ராங்கிகாரி அவன் இங்கே வந்து போனது முதல் ராமரோட நிழல்பட்டு பரிசுத்தமான அகலிகை போல் நினைத்துக் கொண்டு வேதாந்தம் பேசுகிருள். எவ்வளவோ அடித்து நொறுக்கியும் ஒரு துளிக் கண்ணீர்கூட கண்களிலிருந்து வரலை.. இனி வேலைக்கு போகமாட்டாளாம்...''

'வேலை' என்பது விபசார பாஷையில் என்ன அர்த்தம் என்பது அவளுக்குத் தெரியும்!

மனத்திற்குள் ஒரு குதூகலம்... சுரேஷ் சந்திப்பு அவளுடைய வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறது என்ற பெருமிதம்.

''ஆச்சரியமாக இருக்கே... வேலைக்குப் போறது அவளுக்குப் பழக்கமான தொழில்தானே...? புதிதாக என்ன வந்திடப் போகுது...? சுரேஷையே அவள் விரும்பினுலும், கல்யாணமே பண்ணிக்கிறதாக இருந்தாலும் இந்தக் கட்டிலில் நடக்கிறதைப் பார்க்கவா போகிருன்? ஒருவேளை, இந்தக் கட்டிலுக்கு வாய் வந்து இதையா சொல்லப்போகுது?''


தாயம்மா மனக்குமுறலுடன் - ஆனுல், அவன்மீது அக்கறையுள்ளவள்போல் முகத்தை வைத்துக் கொண்டு பேசினுள்.

நடிப்பில் சரிதா இவளிடம் என்ன செய்ய முடியும்?

அவன் மகிழ்ந்தான். ''உனக்கு இருக்கிற எஜமான விசுவாசம் அதுக்கு இல்லையே... அவள் மயக்கம் தெளிந்து எழுந்ததும் புத்தி சொல்லித் திருத்து...''

''சரியுங்க''

அவன் போய்விட்டான்.



11

தாயம்மா பரபரப்பான பதட்ட நெஞ்சோடு... தன் மகளே மயக்கமடைந்து கிடப்பது போன்ற மனநிலேயோடு குளிர்ந்த நீரை எடுத்து வந்து ஸ்நேகா முகத்தில் தெளித்தாள்.

''அம்மாடி ஸ்நேகா... தலேமுடிகளே நீவி விட்டுக் கொண்டே இருந்ததும் ஸ்நேகா கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் தெளிந்தாள். எழுந்து உட்கார்ந்து தாயம்மாவின் கையைப்பற்றிக் கொண்டு அருகில் அமர்த்திஞள்.

அழவில்லே.

''தாயம்மா...''

அவளுக்கு ஆச்சரியம்... எவ்வளவோ துன்புறுத்தியும் கொஞ்சம்கூட மனம் தளராமல் தெளிவாகப் பேசுகிருளே...

''என்ன ஸ்நேகா?''

''இன்றைக்குத்தான் நான் வாழ்க்கையிலேயே அதிக சந்தோஷத்துடன் இருக்கிறேன். அடி உதைகளேயும் இம்சைகளேயும் என் சுரேஷுக்காக தாங்கிக் கொண்டது மனத்திற்குப் பெரும் ஆறுதலேயும் சந்தோஷத்தையும் தந்திருக்கிறது. இந்தக் கட்டில் என்னுடைய எத்தனேயோ நண்பர்களின் அந்தரங்கங்களேச் சொல்லும். ஆனுல் அந்த எல்லாக் கதைகளே விடவும், அந்தக் கட்டிலில் உட்கார அனுமதிக்காத என் சுரேஷ் பற்றிய இரவுக் கதைதான் புதுமையானதாகவும் மனத்திற்கு நிறைவானதாகவும் இருக்கும் தாயம்மா...''

''ம்...''

''நான் இப்போது யார் சொல்?''

தாயம்மா ஏறிட்டாள். ''நீ ஸ்நேகாதான்... ஏன்?''

''அப்படி சொன்னுல் போதாது... 'ஸ்நேகா சுரேஷ்' என்று சொல்ல வேண்டும்'' என்றவள் தொடர்ந்து,

''நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை நீ யாருக்கும் தெரியாமல் போஸ்ட் பாக்ஸில் போட்டு விட வேண்டும். செய்வியா?''

''இப்படி நீ என்னைப் பார்த்து அவநம்பிக்கையுடன் கேட்கலாமா? நிச்சயமாக செய்வேன். இங்கேயிருந்து நீ போய்விட வேண்டும் என்பதுதானே என்னுடைய ஆசை...''

''ஆமா... போயவிடத்தான் போறேன்... தாயம்மா... நிச்சயமாக உன் விருப்பம் நிறைவேறும்.''

சொன்னபோது ஸ்நேகாவின் குரல் தழுதழுத்தது.

அவள் தன் சூட்கேஸைத் திறந்து உள்ளேயிருந்து ஒரு இன்லண்டு கவரை எடுத்தாள். பால்பாயின்ட் பேனாவைத் தட்டி அவசரம் அவசரமாக எழுதி அடியில் 'ஸ்நேகா சுரேஷ்' என்று கையெழுத்துப் போட்டாள்.

வாயை மூடினாள்.

ஒட்டிக் கொடுத்தாள்.

''என் உயிரை உன்னிடம் ஒப்படைக்கிறேன். பத்திரமாகச் சேர்த்து விடு!''

தாயம்மா தலையசைத்தாள்.



சுரேஷ் ஆவலோடு கேட்டான்: ''அந்த இன்லண்டு லெட்டரில் என்ன எழுதியிருந்தது தாயம்மா?''

''எனக்கு எதுவும் தெரியாது.''

''யாருடைய விலாசம்?''

''அதையும் அவள் சொல்லலை. மெட்ராஸ்ல பார்ட்டிக்கு இன்று சாயங்காலமே கிடைச்சிருக்கும்.''

சுரேஷ் மேவாயைத் தேய்க்க ஆரம்பித்தான்.

13



போலீஸ் லாரி... ஜீப் பங்களாவுக்கு வெளியே காத்துக் கொண்டிருக்க, போலீஸார் கதவைப் பூட்டி சீல் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

விபச்சார தடைச்சட்டத்தின் கீழே மாமன் முரளியை போலீஸார் கைது செய்திருந்தார்கள்.

சுரேஷ் தன் வீட்டு வாசலில் வந்து நின்று பங்களாவில் நடப்பதைப் பார்த்துத் திகைத்தான். அவனுக்கு எதுவும் புரியாத குழப்பமாக இருந்தது.

போலீஸ் லாரியில் மாமன் முரளி ஏற்றப்பட்டு நகர்ந்ததும், இன்ஸ்பெக்டர் ஜீப் காரில் ஏறினார். முன் ஸீட்டில் உட்கார்ந்தபடியே இவனைக் கையசைத்துக் கூப்பிட்டார்.

''போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் கொஞ்சம் வர்றீங்களா மிஸ்டர் சுரேஷ்!''

இவன் திகைத்தான். ''ஏ... ஏன்?''

''அங்கே வந்த பின்புதான் எல்லாவற்றுக்கும் விளக்கம் சொல்ல முடியும்.''

சுரேஷ் மறுப்பு எதுவும் சொல்லாமல் ஜீப்காரினுள் ஏறி அமர்ந்தான். நெஞ்சுக்குள் இனம் தெரியாத குழப்பம் பஞ்சாப் பிரதேசமாகியது.

14

இரவு நேரத்தில் அந்த போலீஸ் ஸ்டேஷன் சுறுசுறுப்பில் தெரிந்தது.

ஜீப் வந்து நிற்க...

செக்யூரிட்டி காவலர் கொடுத்த சல்யூட்டை வாங்கிக் கொண்டது.

இன்ஸ்பெக்டரும் சுரேஷும் உதிர்ந்து நேராக உதவி கமிஷனர் அறைக்குப் போனார்கள்.

எதுவும் புரியாத நிலையில் சுரேஷ் கும்பிட்டான்.

பதிலுக்கு கையசைத்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மேஜைக்கு அருகில் இந்த ஸ்டீல் நாற்காலியைக் காட்டினார்.

அமர்ந்தான் - தயக்கமாக.

இன்ஸ்பெக்டர் அவருடைய அறைக்குப் போய் விட்டார்.

''மிஸ்டர் சுரேஷ். செத்துப்போன ஸ்நேகா கடைசியாக எங்களுக்கு ஒரு போஸ்ட் செய்திருக்கிறாள். அதனுடைய போட்டோஸ்டேட் காப்பி எங்களிடம் இருக்கிறது. படித்துப் பார்க்கிறீங்களா!''

''ப்ளீஸ்...''

உதவி கமிஷனர் கடித நகலைக் கொடுத்ததும் அவன் பரபரப்புடன் வாங்கி விரித்தான்.

15



'பெருமைக்குரிய காவல்துறை அதிகாரி அவர்கட்கு ஸ்நேகா சுரேஷ் என்ற அபலைப்பெண் எழுதிக் கொண்டது.

முதலும் கடைசியுமான வணக்கம்.

ஆமாம... இது கடைசி வணக்கம்தான்! இநத சமுதாயத்தின் நெறிமுறைகளும் பழக்கங்களும் என்னைக் கடுமையாகப் பாதித்திருக்கின்றன. நான் வாழ நினைக்கிறேன். ஆனால் போராட எனக்குத் துணிவு பிறக்கவில்லை. ஒருவேளை, நான் துணிந்து போராடினால் என் கணவரை நிச்சயம் இழந்துவிடுவேன்.

என் உயிர் பெரிதா?

என் கணவர் உயிர் பெரிதா?

நிச்சயமாக என் கணவர் உயிர்தான் பெரிது... அவர் ஒரு பத்திரிகையாளர் - சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் பணிகளை மேற்கொண்டிருக்கிறார். அவர் வாழவேண்டுமானால் நான சாக வேண்டும்.



தற்கொலை என்பது மாபெரும் தப்பு...

ஆனாலும் எனக்கு வேறுவழி தெரியவில்லையே...

நான் எப்போதோ வாங்கி வைத்திருந்த விஷம் இப்போது எனக்குப் பயன்படப் போகிறது.

என்னை மன்னித்து... என் உடலை என் மதிப்புமிக்க கணவர்... தாலிகட்டாத கணவர்... கட்டில் இருந்தும் அதில் என்னைச் சந்திக்காமல் இன்னும் பரிசுத்தமானவராக வாழும் என் தூய கணவரிடம் ஒப்படையுங்கள்.

அவரை அழ வேண்டாம் என்று எனக்காக ஆறுதல் சொல்லுங்கள். உங்கள் ஸ்நேகா என்றும் உங்களுக்கு நிழலாக இருப்பாள் என்று கூறுங்கள். விடைபெறுகிறேன்.

இப்படிக்கு,

ஸ்நேகா சுரேஷ்.

கடிதத்தை படித்த சுரேஷ் பலமாக அதிர்ந்து... செய்வது அறியாமல் திகைத்து உறைந்து அப்படியே நின்றான். கண்ணீர் வரவில்லை. ஆனால் அவன் இதயம் அவளுக்காக ஓசையின்றி நிறைய அழுதது.



காதல் நெஞ்சம்



அந்தப் பெண் மிக அழகாய் இருந்தாள். அவள் செய்து கொண்டிருந்த அலங்காரங்கள் அவளது அழகுக்கு அழகு சேர்ப்பவையாக இருந்தன. வெளிர் மஞ்சளில் அவள் உடுத்துக் கொண்டிருந்த ஜப்பான் சில்க் புடவையும், அதே வண்ணத்தில் [illegible] அவளது [illegible]

[illegible]

ஜோதிர்லதா கிரிஜா

நரசிம்மன்!

பெயருக்கு ஏற்ப சிங்கத்தைப் போன்ற கம்பீரமும், யாரையும் மறுமுறை பார்க்கவைக்கும் எடுப்பும் உள்ள தோற்றத்தினன்... அலை அலையாய்க் கட்டுக்கு அடங்காமல் தலைக்குத் தொப்பி போட்டது மாதிரி கருகருவென்று அடர்த்தியான தலைமுடி. வலதுபுறம் வகிடு எடுத்து அவன் அதை வாரிக் கொள்ளும் அழகே அழகு! ரோஜாப்பூவின் நிறம். பெரிய நெற்றி. மொத்தத்தில் ஆணழகன்.

அவள் உதடுகளில் சட்டென்று புன்னகை தவழ்ந்தது, 'எனக்கு ஏற்ற மன்மதன்' என்ற நினைப்பால்.

'என்ன, இன்று இன்னும் காணோம்?'

ஆறுக்கெல்லாம் வழக்கம் போல் வந்து விடுவதாய்ச் சொல்லி இருந்தான். இன்று தான் ஒரு முக்கியமான சமாசாரம் பேசப் போவதாய், பிற்பகலில் அவன் அவளோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது கூறியிருந்தான். அவளும், 'என்ன அது' என்று ஆவலாதியாய்ப் பன்முறை கேட்டும், அவன் அதை வெளிப்படுத்தாமற் போகவே, அவளது விருப்பத்தின் படி அன்று மாலை தவறாமல் வழக்கமான இடத்தில் கடற்கரைக்கு வந்து அவளைச் சந்திப்பதாய்ச் சொல்லி இருந்தான்.

'ஏன் இன்னும் காணோம்?'

அவளுக்குப் படபடப்பாகவும் கவலையாகவும் இருந்தது.

அப்போது அவளுக்கு வெகு பரிச்சயமான சார்லியின் மணம் திடீரென்று பின்புறத்தில் கமழ, அவள் ஆவலுடன் கழுத்தைத் திருப்பி அண்ணாந்து நோக்கினாள்.

அவனேதான்! புன்சிரிப்புடன் நின்றிருந்தான்.

"ஏன் இன்னிக்கு இவ்வளவு லேட்? எங்கே வராம இருந்திடுவீங்களோன்னு பயந்து போயிட்டேன்..." என்ற அவள் அவனைக் கரையற்ற காதலுடன் பார்த்தாள்.

அவன் அவளை உற்றுப் பார்த்தபடி எதிரில் அமர்ந்து கொண்டு, "என்ன முக்கியமான விஷயம் சொல்லப்போறே, ஸ்வீட்டி?" என்று கேட்டான்.

"ஒரு விதத்துல நல்ல விஷயந்தான். இன்னொரு விதத்துல கஷ்டமான விஷயம். அதைக் கசப்பாக்கிறதோ - இல்லே இனிப்பாக்கறதோ உங்க கையிலதான் இருக்கு" என்று பதில் சொல்லிவிட்டு அவள் சின்னதாய் சிரித்த சிரிப்பில் உயிர் இல்லை என்பதை அவன் புரிந்து கொண்டான். இருந்தும் அவள் சொல்லப்போகிற விஷயம் என்னவாக இருக்கும் என்பது பாதிக்கமேல் அவனுக்குப் புரிந்து போயிற்று.

இருந்தாலும், தான் நினைப்பது தவறாகவும் இருக்கலாம் என்ற அற்ப ஆசையில், "என்ன?" என்றான்.

"உங்களால் கெஸ் பண்ண முடியலையா?" என்று அவள் குழந்தைத்தனத்துடன் கேட்டது, அவனுள் இதுகாறும் அவன் அறிந்தே இராத எரிச்சலைக் கிளர்த்தியது.

"நீதான் சொல்லேன்" என்றான் சற்றே கடுப்புடன்.

"குட்டி நரசிம்மன் வரப்போகிறான்..." என்று கூறிவிட்டு அவள் கண் கலங்கினாள்.

"எத்தனை நாளாச்சு?" என்று அவன் சுருக்கமாய்க் கேட்டான்.

கொஞ்சங்கூடப் பரபரப்பு காட்டாத - 'காப்பி சாப்பிட்டியா' என்பதுபோல் ஒரு சர்வசாதாரணக் கேள்விபோல் உணர்ச்சியற்ற - அவன் குரல் அவளுள் ஒரு கிலியைத் தோற்றுவித்தது. அவள் விழிகள் பெரிதாயின.

"பதினஞ்சு நாள் தள்ளிப் போயிருக்கு..." என்று அவள் பதில் சொல்லிவிட்டுக் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

"டாக்டர்கிட்ட போகலாம்" என்று அவன் உடனே யோசனை சொல்லிவிட்டான். அவளுக்கு அது ஏமாற்றமாகவும் அச்சமாகவும் இருந்தது. முகம் மஞ்சளிலிருந்து வெண்மைக்கு மாறியது.


"எதுக்குங்க டாக்டர்கிட்ட போறது?" என்று அவனது யோசனையின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாதவள்போல் அவள் வினவியதும், அவன் ஒரு சிரிப்புச் சிரித்தான்.

"எதுக்கா? நல்ல கேள்வி கேட்டே போ! அழிக்கிறதுக்குத் தான்... வேற எதுக்கு?"

"வேண்டி வேண்டித் தவமிருக்கிறவங்களுக்குப் பிறக்கிறதில்லே. ஒரே ஒருநாள் தப்புப் பண்றவங்களுக்கு உடனே ஜனிச்சுடுதே... அழிக்க வாணுங்க. ஐ வாண்டு பேர் யுவர் சைல்ட், நரேன்.

சுவை + சத்து

ஸோயாபீன்ஸ் கூட்டு



தேவையான சாமான்கள் :- ஸோயாபீன் - 2 கப், உருளைக் கிழங்கு - 2, பெரிய வெங்காயம் - 2, இஞ்சி ஒரு துண்டு, பூண்டு - 4, பருப்பு, பச்சைமிளகாய் - 4, மிளகாய் பொடி - 1 டீஸ்பூன். உப்பு தேவைக்கேற்ப, மஞ்சல் பொடி - ½ டீஸ்பூன், கரம் மஸாலா பொடி - ½ டீஸ்பூன், தக்காளி - 2, கொத்த மல்லி - ½ கட்டு, டால்டா அல்லது நெய் - 2 டீஸ்பூன்.

செய்முறை :- ஸோயாபீனை முதல்நாள் இரவே ஊறவைக்கவும். ஊறிய ஸோயாபீனை நன்றாக வேகவைக்கவும். (பிரஷர் குக்கரானால் 3 கப் தண்ணீர் ஊற்றி 15 நிமிஷங்கள்). உருளைக் கிழங்கை வேகவைத்து உரித்து நான்காக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயம், இஞ்சி இவற்றைப் பொடிப் பொடியாகவும், மிளகாயை நீளமாகவும் தக்காளியை நான்காகவும் நறுக்கிக் கொள்ளவும். ஒரு வாணலியில் டால்டா அல்லது நெய்யை ஊற்றி வெங்காயம், இஞ்சி, பூண்டு, பச்சைமிளகாய் இவற்றை வதக்கவும். வேகவைத்த தண்ணீருடன் ஸோயாபீனையும் நறுக்கிய உருளைக்கிழங்கையும் போடவும். உப்பு, மிளகாய் பொடி சேர்க்கவும். சிறிது கொதித்த பின் கரம் மசாலா தூளை போடவும். நன்றாக சேர்ந்து கொதித்தவுடன் இறக்கி, பச்சைத் தக்காளி - கொத்தமல்லி இவற்றால் அலங்கரிக்கவும். சூடாக சப்பாத்தியுடன் பரிமாறவும்.

"இதுமாதிரி சின்னச் செல்லப்பொண்ணாட்டம் வச்சுக்காதே ஸ்வீட்டி... இதுல என்ன இருக்கு? கல்யாணம் ஆனவங்களை அழிக்கிறாங்க. நாக்கு என்ன வந்தது?"

"என்ன நரேன். இவ்வளவு ஈஸியாப் பேசறீங்க? உடனே என்னைக் கல்யாணம் பண்ணிக்குங்களேன்..."

"கல்யாணம் பண்ணிக்கிறது என்ன அவ்வளவு லேசான காரியமா?"

"எதுவுமே நம்ம கையிலதான் இருக்கு நரேன்!"

"இல்லே. ஸ்வீட்டி எதுவுமே நம்ம கையில இல்லே. என் [illegible] அவ்வளவு [illegible] அதுக்கு [illegible] அதனாலதான் [illegible] இருக்கிறதை [illegible] இருக்கப் போறே?"

"ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிண்டுடலாமே நரேன்?"

நரேன் அட்டகாசமாய்ச் சிரித்த சிரிப்பில் அவளது நா உலர்ந்து போயிற்று.

"ஏன் இப்படிச் சிரிக்கறீங்க? நான் எவ்வளவு சீரியஸாப் பேசிக்கிட்டு இருக்கேன்"

"அவளுக்கு விளையாட்டாய் இருக்க சரியான பொண்ணு போகிறவும் இருக்கலியே ஸ்வீட்டி?"

"பொய் சொல்லாதீங்க நரேன்! 'விளையாடுனப்ப - அது இதுன்னு அதிகமாப் பேசாதீங்க' நான் எவ்வளவோ சொல்லித் தடுத்தேன். நீங்க கேக்கலே"

"ஆம்பளை எப்பவுமே அவசரக்காரன். பொம்பளைதான் பொறுமையா, அடக்கமா இருக்கணும். [illegible] பண்ணிக்காம தடுக்கணும் போடி! நீ செய்யலே. இப்ப வந்து இந்தச் சின்ன விஷயத்தைப் பெரிசாக்கறே!"

அதுகாறும் பாடுபட்டு அவள் அடக்கி வைத்திருந்த கண்ணீர் கண்களில் விளிம்பு கட்டியது.

அவளது கண்களில் [illegible] [illegible] தியதால், அவளது முகம் சிவந்து போயிற்று.

அவனை [illegible] சாதித்துக் கொள்ள முடியாது என்பது விளங்கிவிட்ட நிலையில் நயந்துதான் பேசிப் பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு இவள் [illegible]

"விளையாடாதீங்க நரேன்! என் நிலைமையைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. இப்ப ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிண்டுடலாம். அப்புறம் [illegible] ஊருக்குப் பொதுவாகச் சொல்லிக்கிடலாம்."

"அது நடக்கவே நடக்காது ஸ்வீட்டி! நீ ஏன் இப்படி அசட்டுத்தனமா ஒரு பிடிவாதம் பிடிக்கிறேன்னு எனக்குப் புரி

சுவை + சத்து

ராகி மாவு உருண்டை



தேவையான சாமான்கள் : ராகி - 300 கிராம், பயற்றம் பருப்பு - 50 கிராம், கோதுமை - 50 கிராம், கடலைப்பருப்பு - 50 கிராம், வெல்லம் - 200 கிராம், தேங்காய்பத்தை - 2, ஏலக்காய் - 4.

செய்முறை :- ராகியை நன்ருகப் புடைத்துக் கல்லை அரித்து ஊற வைத்து முளை கட்டி நிழலில் உலர்த்தவும். பின்பு பயற்றம் பருப்பு, கடலைப்பருப்பு, கோதுமை, முளை வந்த உலர்ந்த ராகி இவற்றைத் தனித்தனியாக வெறும் வாணலியில் வறுத்துக் கலந்து நைஸான மாவாக அரைக்கவும். தேங்காயைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். சிறிது ஜலத்தில் வெல்லத்தைப் போட்டு அது கரைந்ததும் இறக்கி வடிகட்டி, நறுக்கிய தேங்காய் துண்டங்களைப் போட்டு மீண்டும் அடுப்பில் வைக்கவும். பாகு நன்ருகக் காய்ந்த பின் இறக்கி மாவையும் ஏலத் தூளையும் போட்டுக் கிளறிக் கலந்து தேவையான அளவுள்ள உருண்டைகளாகப் பிடிக்கவும்.

யல்லே. நடந்தது நடந்து போச்சு. தப்பு என்னுதுன்னே வச்சு போம். நான்தான் கலைக்கறதுக்கு உதவி பண்ணேன்னு சொல்ல வில்லே? அதுக்கு அப்புறமும் கண்ணை கசக்கின எப்படியும்? அப்போன்னா உன்னை விட்டேன்? உனக்கு இப்படி ஆபீஸில் எனக்கு ஒரு பொறுப்பு நிச்சயமா இருக்கு கண்ணு' அது உன்னைப் பாதிக்காத படிக்கு நான் பண்ணேன். வேறு என்ன எதிர்பார்க்கிறே என்கிட்ட?"

"இது நியாயமா, நரேன்? எனக்கு அம்மா இல்லே. அப்பா கிராமத்துல விவசாயம் பண்ணிக்கிட்டு இருக்காரு. அப்பப்ப ஊருக்குப்போய் அவரை நான் பார்த்துட்டு வந்துட்டிருக்கேன். அதனாலே நாம கல்யாணம் பண்ணிக்கிறது அவருக்குத் தெரியப்போறதில்லே. உங்க அப்பா அம்மாவும் அசலூர்லே இருக்கிறதுனாலே இப்ப சத்தியமா சிக்கல் ஏற்பட வழி இல்லே..."

"நீ புரியாம பேசறே, கண்ணு! உனக்கு எங்கப்பாவைத் தெரியாது. நாளைக்கு உண்மை தெரிஞ்சா - எப்படியாவது அவருக்குத் தெரிஞ்சு போயிடும் - தன்னோட சொத்துல ஒரு நயாப்பைசாகூட எனக்கு எழுத மாட்டாரப்பா!"

"நீங்களே ஒரு பெரிய வேலையில் இருக்கீங்க. நானும் ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கறேன். உங்கப்பா தன்னோட சொத்தை உங்களுக்காக எழுதாட்டிதான் என்ன, நரேன்? வாழ்க்கையில் மகிழ்ச்சியும் திருப்தியும்தானே பெரிசு? பணமா பெரிசு?"


நாசிப்பன் மறுபடியும் ஒரு அட்டகாசத்தைச் சிதறவிட்டான்.

"என்னோட திருப்திக்கு எந்தக் குறைச்சலுமில்லே போடி!" என்று சிரித்து முடித்தபின் அவன் சிரிப்பிட்டதில் வெளியான அவனது ஆணவத்தையும், இருக்கிற பணத்தையும் பார்த்து அவள் வெதும்பிப் போனாள்.

அளவுகடந்த தன்னிரக்கத்தில் தன்னையே நொந்து கொண்ட அவளா, அவன் என்னதான் கேலியும் கெக்களிப்புமாய் இருக்க மற்றும் பேசினாலும், சோர்வு அடையாமல் அவனோடு அன்பையும் பணிவையும் காட்டி வாதிட்டுப் பார்ப்பதைத் தவிர வேறு எந்த வழியும் தற்போது கிடையாது என்பதைப் புரிந்து கொண்டவளாய், ''சிரிக்காதீங்க, நரேன்... நான் சொல்லிக்க முடியாத மனத்துன்பத்துல இருக்கேன். அழிக்கிறது சுலபம். ஆக்கறது கஷ்டம்... தவிர, இதெல்லாம் ஒரு பொண்ணுக்கு வெறும் விளையாட்டு இல்லே நரேன்! காலம் முழுக்க அவளுடைய மனசைக் கஷ்டப்படுத்தற துன்பம். உங்களை மாதிரி தூசி தட்டிட்டுப் போற விவகாரமில்லே. என்னோட மனநிலையைக் கொஞ்சம் புரிஞ்சுக்கப் பாருங்க. உங்களை ஒரு நிமிஷம் - ஒரே ஒரு நிமிஷம் - ஒரு பொண்ணா நினைச்சு என்னோட நிலைமையில உங்களை வச்சுப் பார்த்து யோசனை பண்ணினீங்கன்னா, ஒரே ஒரு முடிவுக்குத்தான் வருவீங்க...'' என்று கூறி நிறுத்தி, நம்பிக்கையையும் அன்பையும் முகத்தில் தீவிரமாய்க் காட்டி அவனை ஆவலுடன் பார்த்தாள்.

''ஸ்வீட்டி, மறுபடியும் சொல்றேன். நான் ஒரு பொண்ணாய் இருந்திருந்தா இப்படி ஆகி இருக்க மாட்டேன். ரெண்டாவது - ஆக்கறது கஷ்டம், அழிக்கிறது சுலபம்னு சொல்றே... அழிச்சுட்டு வா. மறுபடியும் ஆக்கிக் காமிக்கறேன்! இந்தக் காலத்துல இதையெல்லாம் பெரிசுபடுத்தக்கூடாதுப்பா...''


சுவை + சத்து



சோள உப்புமா

தேவையான பொருள்கள் : சோள ரவை - 200 கிராம், வறுத்த நிலக்கடலை - 60 கிராம், எண்ணெ - 4 மேஜைக் கரண்டி (30 லிருந்து 35 கிராம் வரை), கடுகு - 1 தேக்கரண்டி, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு - 2 தேக்கரண்டி, பெருங்காயம் சிறுதுண்டு, பச்சைமிளகாய் - 4, உப்பு சுவைக்குத் தகுந்தபடி, கொத்தமல்லி, கருவேப்பிலை, இஞ்சி.

செய்முறை :- அடுப்பில் வாணலியை வைத்து சூடேற்றி எண்ணையை விடவும். கடுகு, பெருங்காயத்தைப் போட்டு வெடித்ததும், உளுத்தம்பருப்பு, கடலை பருப்பு இவைகளைப் போட்டு பொன்நிறத்தில் வறுக்கவும். பிறகு பச்சை மிளகாய், இஞ்சி, கரு வேப்பிலை இவைகளைப் போட்டு ஒரு பிரட்டு பிரட்டி 500 கிராம் தண்ணீர் விடவும். உப்பைப் போட்டு கொதித்த பின் சோள ரவையைக் கொட்டிக் கிளறவும். நன்ருக வெந்ததும் வறுத்த நிலக்கடலையையும், கொத்தமல்லியையும் போட்டு நன்ருகக் கிளறி இறக்கவும். சூட்டுடன் சாப்பிட மிகவும் ருசியாக இருக்கும்.



அழுகையால் அழகு குறைந்து போய்க் கோணிய அவளது முகத்தைப் பார்த்ததும் நரசிம்மனின் முகத்தில் மேலும் எரிச்சல் படர்ந்தது.

''இந்தா, இந்த அழுது சாதிக்கப் பார்க்கிற வேலையெல்லாம் எங்கிட்ட வச்சுக்க வேண்டாம். நான் அயோக்கியனில்லே... நான் நினைச்சா உன்னை அப்டியோட கைவிட்டுட முடியும். ஆனா நான் அப்படிச் செய்யலேங்கிறதை மனசுல வாங்கு. உன்னை டாக்டர்கிட்ட கூட்டிண்டு போறேன். தாமதப்படுத்தாம போயிடணும். தாமதிச்சா சிக்கலாயிடும். பெரிய கேசாயிடும். உடம்புக்கும் நல்லதில்லே. கல்யாணம்கிறது மட்டும் இப்ப நடக்கக் கூடிய காரியமே இல்லே. என் தங்கைக்குப் பண்ணின பிறகு தான் எங்கப்பா என்னுத யோசிப்பாரு. இப்ப வாயே திறக்க முடியாது. அசிங்கம்...''

கண்களை இடுக்கிக் கொண்டு கணம்போல் அவனைப் பார்த்தாள். தான் அதுவரையில் பார்த்திராத புத்தம் புதிய நரசிம்மனாக அவன் தன்முன் உட்கார்ந்திருந்தது தெள்ளத் தெளிவாய் அவளுக்குப் புரிந்தது. அவனைத் தன் கோரிக்கைக்கு இணங்க வைக்கவே இயலாது என்பதைப் புரிந்து கொண்டாள்.

என்றாலும் பொறுமையையும், நம்பிக்கையையும் இழக்காமல், ''சரி, நரேன்... நீங்க ஒண்டியா இந்தக் காரியத்துக்குப் பொறுப்பு ஏத்துக்க முடியாதுதான். ஒப்புத்துக்கறேன். ஆனாலும் சமப்பொறுப்பு இருக்குன்னாவது ஒத்துக்கறீங்களா?'' - உணர்ச்சிக் கொந்தளிப்பால் நடுக்கமடைந்த குரல் அவளையும் மீற, அவள் மனநிலையை அவனுக்குக் காட்டிக் கொடுத்தது.

''நான் சொல்றதக் கேளு. டாக்டர்கிட்டே கூட்டிண்டு போறேன்றேன். இப்ப இதைத் தவிர வேற வழியே கிடையாது. இல்லே, உனக்குத் தைரியம் இருந்தா குழந்தைப் பெத்துக்க...''

அவள் உதடுகள் அவள் முயற்சியைக் கடந்து துடிப்புக் கொண்டன. கண்கள் மறுபடி நிறைந்து போயின.

சுவை + சத்து

சோள பரோட்டா



தேவையான பொருள்கள் :- சோளமாவு 3 கப் (300 கிராம்), பசலைக்கீரை 1 சிறியகட்டு, வனஸ்பதி 50 கிராம், உப்பு தேவையான அளவு.

செய்முறை :- சோளமாவில் பசலைக்கீரையைப் பொடியாக நறுக்கிப் போட்டு உப்பையும் சேர்த்து பிசைந்து கொள்ள வேண்டும். வழக்கமாகச் செய்யும் கோதுமைமாவு பரோட்டாக்களைப் போல் வட்டமாகச் செய்து தோசைக்கல்லில் போட்டு வனஸ்பதி சேர்த்து சுட்டு எடுக்க வேண்டும்.



சற்றுநேரம் மணலை அளைந்து கொண்டு கண்களைத் தாழ்த்தி உட்கார்ந்திருந்தாள். தீவிரமாய்ச் சிந்தித்தாள். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்று மனத்துள் சொல்லிக் கொண்டாள். தலைக்குமேல் போனபிறகு என்ன அழுகை என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

"என்ன யோசிக்கிறே, ஸ்வீட்டி? சரின்னு சொல்லு..."

"சரி, நரேன்! உங்களுக்காகச் சம்மதிக்கிறேன். டாடி நரேனைக் கொல்லப் போறேன்னு நினைச்சாலே மனசு நடுங்குது நரேன்...

அவன் கேலியாகச் சிரித்தவாறு அவளைப் பார்த்து, "அது டாடி ஸ்வீட்டியாகவும் இருக்கலாமில்லையா?" என்றான்.

"இருக்கலாம்" என்று பதில் சொன்ன அவளுக்கு மறுபடியும் அழுகை வெடித்துக் கொண்டு புறப்பட்டது. இனி அழக்கூடாது என்று சிலகணங்களுக்கு முன்னால் அவள் செய்திருந்த தீர்மானத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியமாயில்லை.

"சரி... கண்ணைத் தொடச்சுக்கோ! ஒருவிதத்துல உன்னை நான் பாராட்டறேன் ஸ்வீட்டி! உன்னுடைய தாய்மையுணர்ச்சி உன்னதமானதுதான். நான் மறுக்கலை. ஆனா ப்ராக்டிகலா நடந்துக்கறதுதான் புத்திசாலித்தனம்மா... வெறும் ஐடியலிசம் நிம்மதியைத் தராது. ஐடியலிஸம் சொல்லிண்டு கல்யாணம் ஆகாத நிலையில் குழந்தையைப் பெத்து எடுத்து வளர்க்கிற துணிச்சல் உனக்கு இருக்குமா?"

"நீங்க மட்டும் கொடுத்தா அந்தத் துணிச்சல் எனக்கு இருக்கும், நரேன்! ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம், நரேன்!"

சுவை + சத்து



அவல் பர்பி

தேவையான பொருள்கள் : அவல் - 100 கிராம், வறுத்த நிலக்கடலை - 80 கிராம், வெல்லம் - 120 கிராம்.

செய்முறை :- அவலையும் நிலக்கடலையையும் தனித்தனியாக வெறும் வாணலியில் வறுக்கவும். நிலக்கடலையின் தோலை நீக்கி சுத்தம் செய்து கொள்ளவும். வெல்லத்தில் ஒரு கரண்டி தண்ணீர் சேர்த்து கெட்டிப்பாகு வைக்கவும். கெட்டிப்பாகு வந்ததும், அவலையும் - கடலையையும் கொட்டி நன்றாகக் கிளறி எண்ணெ தடவிய டிரேயில் கொட்டி பரப்பவும். சூட்டுடனேயே வில்லைகள் போடவும்.

ஒருவருக்கு 300 கலோரியும், 54 கிராம் புரதச் சத்தும் இவ்வுணவினால் கிடைக்கும்.



அவனுக்கு அலுப்பு வந்தது. "இதபாரு. திரும்பித் திரும்பி ஒரே பேச்சுப் பேசாதே. இன்னும் என்னை நினைச்சால் உன் முடிவைச் சொல்லு. நாளைக் காலை எட்டு மணிக்கு அண்ணாநகர் வள்ளியம்மா நர்சிங்ஹோம் என்ட்ரன்ஸ்ல நில்லு. அங்க ஒரு நர்ஸ் இருக்கா. என் பிரண்டோட சிஸ்டர். நல்லா அட்டெண்ட் பண்ணி ஒரே நாள்ள உன்னைத் திருப்பி யனுப்பிடுவா..."

அவன் எழுந்து விட்டான். இனி பேச்சுக்கே இடமில்லை என்பதுபோல் பாண்டில் ஒட்டி இருந்த மணலைத் தட்டினான். அவனது அந்தச் செய்கையினால் தன்னையும் சேர்ந்து அவன் உதறியதாய் அவள் உணர்ந்தாள். அவளும் எழுந்து கொண்டாள்.

"அப்ப நாளைக்குப் பார்க்கலாம்" என்றாள் அவள்.

அவன் தலையாட்டினான். இருவரும் பேசிக் கொள்ளாமல் பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்தார்கள்.

"இன்னிக்கு நாம ஒரு காப்பிகூடச் சாப்பிடலையே..." என்று அவன் கேட்டதற்கு, "வயிறு நிறைஞ்சிருக்கு, நரேன்!" என்று அவள் பதில் சொன்னாள்.

2

பெண்களின் அந்த விடுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. ஒன்பதரை மணிக்கு மேல் விளக்கு எரியக் கூடாது என்பது ஒரு கண்டிப்பான உத்தரவு. நடுக்கூடத்துச் சுவர்க் கெடியாரத்தின் 'டிக்டிக்' இதயத்துடிப்பு துல்லியமாகக் கேட்டது.

அந்த விடுதியே அமைதி கொண்டிருந்த அந்தப் பத்தரை மணி வேளையில், ஒன்பதாம் இலக்க அறையில் மட்டும் ஓர் உயிர் உறங்காமல் விழித்துக் கிடந்தது. அந்த அறையில் மொத்தம் நான்கு பெண்கள் இருந்தனர். மாலினி, தேவசேனா, மதுரம், சத்தியவதி.

சத்தியவதி மற்ற மூவரையும் விட இளையவள் - அழகானவளும்கூட. ஆனால் யாருடனும் ஒட்டமாட்டாள். எப்போதும் தனிமையில் இருப்பாள். நெருங்கிய தோழி என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை.

இன்று உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த வேளையில் அவளுக்கு ஆறுதல் கூற யாருமே இல்லை. தன் பிரச்சினையைப் பற்றி யாருடனும் பேசாத நிலையில் யாரும் தனக்கு ஆறுதல் சொல்ல முன்வருவார்கள் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை. ஆனால் இன்றைய இரவின் தனிமை அவளை வாட்டியது. யாரிடமாவது தன் பிரச்சினையைச் சொல்லி துயரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் போன்று மனம் ஏக்கமுற்றது.

அன்றைய மாலை உரையாடலைச் சொல்லுக்குச் சொல் நினைவில் திருப்பக் கொண்டு வந்து அசை போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். இதனால் அவள் துயரம் மேலும் பெருகியது.

நரசிம்மனின் ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகி, தனது பெண்மையைப் பறிகொடுத்து விட்டதை நினைக்க நினைக்க சத்தியவதிக்கு அழுகை திமிறியது. அடக்க முடியவில்லை. தன்னையும் மீறி விம்மிவிட்டது புரிந்து அவசரமாய்க் குரலை அடக்கிக் கொள்ள முயன்றாள்.

பக்கத்து படுக்கையில் இருந்த மதுரம் எழுந்து உட்கார்ந்து, "சத்தியா... சத்தியா... எதுக்கு அழறே?" என்று அவளைப் பிடித்து உலுக்கினாள்.

சத்தியவதியும் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். ஆதரவு மிக்க கேள்வியின் பாதிப்பால் இன்னும் அதிகமாய் அழலானாள்.

"என்ன கஷ்டம் உனக்கு, சத்தியா? யார்கூடவும் நீ மனசு விட்டுப் பேசறதே இல்லே. ஒரு பத்துப் பதினஞ்சு நாளா நீ ஒரு மாதிரியா இருக்கே... எதோ பயத்துல இருக்கிற மாதிரி முகமெல்லாம் வெளிறிக்கிடக்கு. என்ன விஷயம்னு கேக்க எங்க மூணு பேருக்குமே மனசு அடிச்சுண்டுது. ஆனா கேக்கறதுக்கு வேண்டிய துணிச்சல் எங்களுக்கு யாருக்குமே இல்லே. ஏன்னா, நீ எங்ககிட்ட சகஜமாப் பேசிப் பழகறதே இல்லே. ஏதானும் கேக்கப் போய்க் கோவிச்சுண்டுட்டியானா என் பண்றதுனு எங்களுக்கெல்லாம் பயம். அதான் கேக்கல்லே. இப்பக்கூட பயந்துண்டேதான் கேக்கறேன். ஏன்னா, நீ எப்படி எடுத்துப்பேன்னு என்னாலே தீர்மானிக்க முடியல்லே..." என்ற மதுரம் குலுங்கிக் கொண்டிருந்த அவள் தோளை ஆதரவுடன் தொட்டாள்.

சத்தியவதி கண்களைத் துடைத்துக் கொண்டு, விடிவிளக்கின் மிகமங்கிய வெளிச்சத்தில் மதுரத்தின் முகத்தை ஏறிட்டாள்.

'இவளை நம்பிச் சொல்லலாமா?' சிலநொடிகளுக்குச் சத்தியவதி மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். எப்படியும் அவள் மனம்விட்டுப் பேசுவாள் என்று தோன்றியதில், மதுரம் பொறுமையுடன் காத்திருந்தாள்.

"மதுரம், ஒரு நெருக்கமான சிநேகிதி இல்லாத குறையை இப்ப நான் அதிகமா உணர்றேன்...."

"பாவம்! அழாதே விடு. சத்தியா! என்னை உன் நெருங்கின சிநேகிதியா நினைச்சுக்க. உனக்கு என்ன ப்ராப்ளம்? சொல்லு. என்னாலே முடிஞ்சா ஏதானும் ஹெல்ப் பண்ண முடியுமான்னு பார்க்கறேன்..."

சத்தியவதி எல்லாவற்றையும் தெரிவித்தாள்.

மதுரத்துக்கு ஆத்திரமான ஆத்திரம்.

"அந்தாளு பேரு என்ன சொன்னே?"

"நரசிம்மன்."

"எந்த ஆபீஸ்ல வேலை செய்யறாரு?"

"கல்பதரு அண்ட் கம்பெனியிலே—

ராயப்பேட்டையிலே."

"அப்படியா? ராயப்பேட்டையில் எந்த இடத்தில் இருக்கு அது?"

"ஏன், மதுரம்?"

"ராயப்பேட்டை முழுக்க எங்கண்ணனை நாலு சுத்துச்சுத்தச் சொல்லிடறேன். அதொண்ணும் பெரிய கஷ்டமில்லே, சத்தியா! நீ இப்ப என்ன பண்ணறே? படுத்துத் தூங்கறே, என்ன...?"

"என்னாலெ தூங்க முடியல்லே மதுரம்... மனசு கனம்...மா இருக்கு."

"இருக்கும்தான். ஆனாலும் என்ன பண்றது? சரி. நாளைக்கு வள்ளியம்மா நர்சிங்ஹோமுக்குக் காலையிலே போறே இல்லே?"

"போய்த்தான் ஆகணும்."

"சரி. அப்ப காலையிலே உன்னோட நானும் துணைக்கு வரேன்."

"வேணாம் மதுரம்... என்னோட உன்னை என்னோட பார்த்தா, நான் உங்கிட்டே எல்லாத்தையும் சொல்லி இருப்பேனோங்கற சந்தேகமெல்லாம் அவருக்கு வரும்..."

"அது ஒருவிதத்துலெ சரிதான். ஆனா எனக்கு அவரைப் பார்க்கணுமே, சத்தியா! ஆளு யாருன்னு உனக்கு வேண்டியவங்கள்ளே ஒருத்தராவது தெரிஞ்சு வச்சுக்கறது நல்லது... ஒண்ணு பண்ணட்டுமா? நீ நிக்கிற இடத்துலே நந்து கொஞ்சம் தள்ளியாப்போல நான் நின்னுக்கறேன். அந்தாள் உங்கிட்ட வந்து பேசுவாரில்லே. அப்ப தற்செயலா நர்சிங்ஹோம் பக்கம் வராந்தா கிட்டத்துலே வந்து முகத்தை நல்லாப் பார்த்து வெச்சுக்கறேன். சரியா?"

மறுநாள் வழக்கத்தை விட அதிகாலையில் சத்தியவதி எழுந்து குளித்துத் தயாராகி விட்டாள். ஒரு கல்யாணத்துக்குப் போவதாய்ச் சொல்லிக் கொண்டு கிளம்பிய அவளோடு மதுரமும் புறப்பட்டாள்.

வள்ளியம்மாள் நர்சிங்ஹோம் உள்ளே சத்தியவதி நின்று கொள்ள, அவளிடமிருந்து சற்றுத் தொலைவில் மதுரம் நின்று கொண்டாள். அவர்கள் இருவரும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தபோது மணி ஆறே முக்கால்...

ஏழு, ஏழரை, எட்டு, எட்டரை என்று நேரம் கடந்து கொண்டே இருக்க, நரசிம்மன் வரவே இல்லை. எட்டே முக்கால் ஆனதும் மதுரம் தன்னிடத்திலிருந்து [illegible] சேர்ந்தாள். சத்தியவதி கலங்கி [illegible] கினாள். மருத்துவமனையின் வாசலில் நின்று [illegible]. தன் தோளினை ஆதரத்துடன் தொட்ட மதுரத்திடம், "நீ சொன்னதுதான் சரின்னு தோணுது. இனிமேல் வரமாட்டார் மனுஷன். ஏமாத்திட்டாருன்னு நினைக்கிறேன்..." என்று சொல்லச் சொல்ல சத்தியவதியின் கண்கள் விவரிக்கவொண்ணாத் துயரத்தில் மிதந்தன.

அப்பா என்ன செய்யப்போறே சத்தியா.

"டாக்டர்கிட்ட எப்படியானாலும் போய்த்தான் ஆகணும். ஆனா, என்ன செய்யறதுன்னே தெரியல்லே [illegible]. கேள்விகள்ள ஹஸ்பண்ட் கூட வந்தாத்தான் இது போன்ற பெரிய நர்சிங்ஹோமிலெல்லாம் ஈஸியா விஷயம் முடியும்னு சொல்றாங்க. இல்லேன்னா, இதுக்குன்னே சில டாக்டர்கள் [illegible] போனா போனேனே..." சத்தியவதி அழத் தொடங்கினாள்.

"ம்... சத்தியா நாலும்பேர் போற வர்ற எடத்துல கண் கலங்காதே. என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம்..."

"இனிமே தாமதம் செய்யறது ஆபத்துல கொண்டு விட்டுடலாம், பத்மா... இதுதான் சரியான சமயம்..."

"அப்பா, நாமாவே வேற ஏதாவது ஒரு நர்ஸிங் ஹோமுல போய்க் கேட்டுப் பார்க்கலாம்கிறியா சத்தியா?"

உன்னை என்னை வாழவைப்பது பத்மா!

"வேண்டாம் சத்தியா! ஆனா டாக்டர் கிட்டே உண்மையைத்தான் சொல்ல வேண்டிவரும். சிலர் கேஸை எடுத்துக்கவே மாட்டாங்க. ஒண்ணு செய்வோம் சத்தியா... இப்ப நாம திருப்பிப் போயிடலாம். ராயப்பேட்டையில ஒரு நர்சிங்ஹோம் வேலை செய்யற கம்பெனிக்குப் போய் விசாரிப்போம். யாருக்கும் சந்தேகம் வந்துடவும் கூடாது. சப்போஸ் - எதாவது திடீர்னு ஒரு [illegible] கக்கோ...! இன்னும் இரண்டொரு நாள்ள கண்டுபிடிக்கலாம். உங்க அண்ணன்கிட்ட எல்லாத்தையும் சொல்லிடலாமா? - தயங்காதே, சத்தியா! ஹி ஈஸ் எ பெர்ஃபெக்ட் ஜென்டில்மன். யார் கிட்டவும் மூச்சு விடமாட்டான். என் பெரியம்மா பிள்ளையா இருந்தா கூட பிறந்த அண்ணனாகத்தான் [illegible] பார்க்கறேன்.."

"அவர் லாட்ஜ்ல இருக்கார்னுதானே சொன்னே?"

"ஆமா."

"அப்பா - அம்மா இங்க இல்லியா?"

"இல்லே. பெரியகுளத்துல இருக்காங்க."

"என்னால உனக்குக் கஷ்டம்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே... நீ நார்மலா ஆனா அதுவே போதும், சத்தியா! அப்ப நீ ஆபீசுக்குப் போ..."

பத்மா கையை ஆட்டிவிட்டுப் புறப்பட்டாள். சத்தியவதி அவள் போன பக்கமே பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் மனம் நன்றியால் கனத்தது. பத்மா கருத்துத் தெரிவித்தது



போல். ஒருவேளை [illegible] யனால் வர இயலவில்லையோ என்று நம்பிக்கையும் வந்தது.

இவ்வாறு நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் [illegible] மாற்றி அலைக்கழிக்க அவள் அலுவலகத்துக்குப் போய்ச் [illegible] தாள்.

ஏதேனும் நியாயமான காரணத்தால் [illegible] நேரத்தில் சொன்னபடி வர இயலாது போயிருக்கலாம். [illegible] தொலைபேசியில் தன்னைக் கூப்பிடுவான் என்று எதிர் பார்த்தபடி அலுவலகத்தில் [illegible] நேரத்தையும் [illegible] கழித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவன் அவளைக் கூப் பிடவே இல்லை. வரமுடியாத அளவுக்கு ஏதேனும் [illegible] உடல்நலக்குறைவு ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற [illegible] பற்றிய ஐயத்தை அறவே புறக்கணித்தாள் [illegible] இருந்துக்கப் போய்க் காத்திருந்து [illegible] னித்து, அலுவலகம் விட்டதும் நேரே [illegible]

ஏழுவரை முழுங்கால்களைக் கட்டிக் கொண்டு [illegible] திருந்ததுதான் மிச்சம்.

அவன் வரவே இல்லை.

3

[illegible] அறை வாயிலில் சத்தியா[illegible] எதிர்கொண்டாள்.

“என்ன சத்தியா? பீச்சுக்குப் போய்ப் பார்த்துட்டு வரியா?” [illegible] அவளை விசாரிப்பது இவளுக்கு வியப்பு ஏற்படுத்தியது.

“ஆமா, மதுரம்! உனக்கு எப்படித் தெரியும்?”

“[illegible] நாலு மணிக்குப் போறதுக்கு [illegible] பார்க்கறியே. இன்னிக்கு [illegible] சரியான [illegible] அந்த ஆள் இன்னிக்கு உனக்கு போன் பண்ணி [illegible] அந்த ஆள் போன் பண்ணலேன்னு. இல்லையா?”

“[illegible] போய் விசாரிச்சு [illegible]” என்று ஆவலாய்க் கேட்டபடி பாயின்மீது தம்ளரை வைத்தாள்.

“நீ சொன்னது மாதிரி டாய்ப்போக்ஸ் லிஸ்டில எந்தக் கம்பெனியும் கிடையாது. ஒரு தெரு விடாம நன்றாச் சுத்திப் பார்த்துட்டேன் [illegible]. அது மட்டுமில்லே: போஸ்ட் ஆபீஸ்லயும் ஒரு [illegible] பத்துதரம் எல்லாப் போஸ்ட் பெட்டியும் விசாரிச்சேன். [illegible] - ஒரு நாலைந்து மணி இருக்கும் போன் பண்ணிச் சொன்னேன். உனக்காக ரொம்பப் பரிதாபப்பட்டான். எனக்கு ஒன்னு தோணுது. அதை அப்புறம் சொல்றேன்னு சொன்னேனே, ஞாபகம் இருக்கு[illegible]. நான் [illegible] இருக்கறதை [illegible] சொல்லத்தான் மனசு இல்லே...”

சத்தியாவின் அழுகை [illegible]. மதுரம் விரைந்து [illegible] அறையின் கதவைச் சாத்திக் [illegible] வந்து அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

“சத்தியா, இதோ பாரு. அழாதே. அழுது லாபமில்லே. [illegible] கெட்டுப் போகும். எப்ப அவன் ஏமாற்றுக்காரன்ங்கிற உண்மை நிச்சயமாய்த் தெரிஞ்சு போயிடுத்தோ, அவனை நீ உதற வேண்டியதுதான்...”

சத்தியாவின் [illegible] கொண்டு [illegible] சிரித்தாள்.

“நான் உதறுறதா? அதுதான் அவனே நேத்து உதறிட்டுப் போயிட்டானே மதுரம்! [illegible] போய்த்தான் தீரணும். தாமதிக்கிற ஒவ்வொரு நாளும் என்னை ஆபத்தை நோக்கி இழுத்துட்டுப் போகும். மதுரம், எனக்கு இன்னொரு உபகாரம் பண்ணுவியா?”

“சொல்லு சத்தியா, செய்யறேன். என்ன செய்யணும், சொல்லு?”

''நாளைக்கு அந்த வள்ளியம்மாள் நர்சிங் ஹோமுக்கே போய் லேடி டாக்டரைப் பார்த்துக் கன்ஸல்ட் பண்ணலாம். நீயும் என்னோட வருவியா, மதுரம்? இது ரொம்ப அதிகப்படியான உதவி தான். இருந்தாலும்...''

மதுரம் கணப்பொழுதுக்கும் தயக்கம் காட்டாமல், ''அதுக்கென்ன, சத்தியா? கண்டிப்பா உன்னோட வறேன். தைரியமா இரு. கோழைப் பொண்ணுகள் சிலதுகள் மாதிரி விபரீதமான முடிவு எதுக்கும் வந்துடாதே, என்ன? எனக்கு நீ ப்ராமிஸ் பண்ணிக் குடு!'' என்றவாறு தன் கையை நீட்டினாள்.

அவளது கையின்மீது தன் கையை வைத்து சத்தியம் செய்தாள் சத்தியவதி.

''உன்னோட நட்பை இதுக்கு முன்னாலேயே பெருமை போனதைப் பத்தி நான் வருத்தப்படறேன் மதுரம்... ஒதுங்கியே இருந்துட்டது அலட்சியத்தினாலே இல்லே. என்னுடைய சுபாவமே அப்படி.''

''அதனாலே என்ன, சத்தியா? இப்பவாவது மனசுவிட்டு என்னோட பேசினியே. அந்தமட்டும் சந்தோஷந்தான். நேத்து ராத்திரி கட்டுப்படுத்திக்க முடியாம நீ அழுதப்ப தற்செயலா நான் முழிச்சுண்டதால உன்னோட பிரச்சினையைப் பத்தி என்னாலே கேட்டுத் தெரிஞ்சுக்க முடிஞ்சது... ஆனா ஒண்ணு. வள்ளியம்மாள் நர்சிங் ஹோமிலேயெல்லாம் போய் அபார்ஷன் பண்ணிக்கவோ, க்ளீன் பண்ணிக்கவோ முடியாது சத்தியா... ஹஸ்பண்டையா நன்னு கண்டிப்பா கேப்பாங்க. இதுக்குன்னே இருக்கிற டாக்டர்கள் பத்தி நாமே யார்கிட்ட போய்க் கேட்டுண்டிருக்க முடியும்? அதனாலே எனக்கு என்ன தோணறதுன்னா...''

மதுரம் தன் குரலை மிக மெதுவாக்கிக் கொண்டு தனக்குத் தோன்றிய யோசனையை அவளுக்குச் சொன்னாள். சத்தியவதி திடுக்குற்றுப் போனாள்.

''சேச்சே... வேணாம், மதுரம்! அது நியாயமில்லே...'' என்று பதறினாள்.

''ஆச்சி! நீ சும்மா இரு. ஆபத்துல இருக்கிறவங்களுக்கு உதவி பண்றதுல இதெல்லாம் பார்த்துண்டிருந்தா முடியுமா?''

''வேணாம் மதுரம்... நீ சொல்ற வழி நியாயமானதே இல்லே.''

''நியாயமாவது, அநியாயமாவது? எங்கண்ணா நிச்சயம் ஹெல்ப் பண்ணுவான்... நீயும் நானும் நாளைக்குக் காலங்கார்த்தால எங்கண்ணாவைப் பார்க்க லாட்ஜுக்குப் போறோம். போய் அவன் கிட்ட என்னோட கஷ்டத்தைப் பத்திச் சொல்றோம் - அதாவது, நிப்பந்தியாப் பண்ணிண்டு வந்துடலாம்...''

''இது ரொம்ப மோசம், மதுரம்... உங்கண்ணாவை என்னாலே நிமிர்ந்தே பார்க்க முடியாது.''
''வேண்டாம் உங்கிட்ட ஏற்கெனவே இதுபத்தி நான் பேசினது அவனுக்குத் தெரியவே வேண்டாம். தெரிஞ்சதா நீயும் காட்டிக்காதே. அங்கே போனதும்தான் இந்த யோசனை வந்ததா சொல்லப் போறேன். சரியா?''

'இது [illegible] [illegible] மதுவாய் எதுவும் [illegible]
கூறுமல். ஏதோ ஒரு [illegible] பத்திரிகையைப் புரட்டலானான்

4

சிவந்த [illegible] [illegible]யக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்தான். [illegible] [illegible]ன்பது மணிக்கு ஆளை அனுப்பிக் கட்டுரையைப் பெற்றுக் [illegible]வதாய்ப் பத்திரிகையாசிரியர் கூறியிருந்தார். இன்று [illegible]க்கு 'மூட்' வரமாட்டேன் என்றது. [illegible] [illegible] அந்தப் பெண்ணை அவனுக்குத் தெரிந்தாள்.

என்னவோ தெரி[illegible]ல்லை. அவனது சிந்தனை முழுவதையும் [illegible] [illegible] கொண்டிருந்தாள். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கொண்டிருந்தான். அவ[illegible] [illegible] [illegible]. ஒரு [illegible] தன்னை ஆட்டி [illegible] [illegible] அளவுக்கு ஒரு பெண்ணால் [illegible] [illegible] உண்மை அவனைக் [illegible] [illegible]. [illegible] காதல் [illegible] அவனுக்கு [illegible] நம்பிக்கை [illegible] [illegible] அவன் [illegible] [illegible] [illegible] வியப்புக்கு ஆளாகிக் கொண்டிருந்தான்.

இரவு சரியாகத் தூங்கிக் கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகி[illegible] [illegible] அவளைத் [illegible] பார்த்தபோது [illegible] [illegible] [illegible] [illegible] அவன் [illegible] [illegible] [illegible] [illegible] அவளை [illegible] [illegible] ஒரு வார[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அவன் சிக்கிப் போனான். [illegible] [illegible] அவள் [illegible] [illegible] [illegible] நந்து விட்டுவே முடியாது போயிற்று. ஒரு வாரம் ஆகியும், [illegible] வைத்துப் பார்க்கிற ஓவியத்தின் தெளிவுடன் அவள் [illegible] [illegible] [illegible] [illegible].

அழகான பெண்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்று தன் நண்பர்களில் [illegible] ஒரு [illegible] [illegible] நினைவுக்கு வர[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] என்ற முடிவு கட்டிவிடுவதா என்ன...? அழகான பெண்கள் எல்லாருமே [illegible] என்ற [illegible] இருக்க [illegible] அசட்டுத்தனமான கணிப்பு?' என்று [illegible] சொல்லிக் கொண்டான். அந்தப் பெண்ணின் [illegible] [illegible] அளவுக்குத் தன் மனம் பாதிக்கப்பட்டிருந்த உண்மை அவனை [illegible].

[illegible] [illegible] [illegible] எழுதியதை அவன் [illegible] பொழுதுபோக்காய்க் கொண்டிருந்தான். ஓய்வு நேரங்களில் விடா முயற்சியுடன் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

அளவுக்கு இல்லாவிட்டாலும் அவ்வப்போது சில பத்திரிகைகளில் அவன் எழுதுவது [illegible] பாராட்டப்படுகிற அளவுக்கு அவன் கொஞ்சம் பெயர் பெற்றிருந்தான்.

'கருச்சிதைவு' பற்றி வாசகர்களின் கருத்துக்களை ஒரு பத்திரிகை வரவேற்றிருந்தது. வாசகர்கள் மட்டுமின்றி, எழுத்தாளர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், பொதுத்துறை அலுவலர்கள், ஊழியர்கள், பெண்கள், சமூகநல சேவகர்கள் போன்ற பல்துறை மனிதர்களிடமிருந்தும் கருத்துக்கள் வரவேற்கப்பட்டன. எழுத்தாளர்களில் சிவகுரு அவனது கருத்துக்காக அழைக்கப்பட்டிருந்தான்.

.....கருச்சிதைவு என்பது ஒரு பெண்ணின் சொந்த விஷயம். அதில் மற்றவர் கருத்துக்கோ தலையீட்டுக்கோ இடமில்லை. எந்த நியாயத்தின் அடிப்படையிலும் ஒரு பெண்ணைப் பார்த்து நீ கருக்கலை செய்து கொள்ளக் கூடாது; குழந்தையைப் பெற்றுத் தான் தீரவேண்டும் என்று கட்டாயப்படுத்த அந்தப் பெண்ணின் கணவனுக்கேகூட உரிமை கிடையாது....' எழுதி முடிக்கவில்லை.

யாரோ கதவைத் தட்டினார்கள். சிவகுருவுக்கு எரிச்சல்வந்தது. அவன் நண்பர்கள் - அறைப் பகிர்வாளர்கள் - யாவரும் வெளியே போய்விட்ட நிம்மதியில் எழுதத் தொடங்கி இருந்த அவனைக் கதவைத் தட்டுவது யாராக இருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லை. அவனைத் தேடிக் கொண்டு யாரும் வருவதில்லை. எனவே, சலிப்புடனும் வியப்புடனும் அவன் எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

சுவை + சத்து | சாபுதானா கிச்சடி



தேவையான பொருட்கள் :- சிறிய ஜவ்வரிசி - ¼ கிலோ, உருளைக்கிழங்கு - 100 கிராம், வெங்காயம் - 150 கிராம், கடலை கிராம், கடலைஎண்ணெ - 5 தேக்கரண்டி, பச்சை மிளகாய் - 6, சீரகம் - 1 தேக்கரண்டி.



செய்முறை :- ஜவ்வரிசியை 2 மணி நேரம் முன்பு தண்ணீர் விட்டு கழுவி 150 மி.லிட்டர் தண்ணீர் விட்டு ஊறவைக்க வேண்டும். ஜவ்வரிசி நனையும் அளவிற்கு கடலையை வறுத்து, தோல் நீக்கி பொடி செய்து கொள்ளவும். உருளைகிழங்கை வேக விட்டு, தோலை நீக்கி உதிர்த்துக் கொள்ளவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். பச்சைமிளகாயை அரைத்தோ அல்லது சிறுதுண்டங்களாக நறுக்கியோ வைத்துக் கொள்ளலாம். ஊறவைத்த ஜவ்வரிசியில் சுமார் 1½ தேக்கரண்டி உப்புப் பொடி போட்டு, ¼ தேக்கரண்டி மஞ்சல்பொடி போட்டு கலந்து கொள்ளவும். வாணலியை அடுப்பில் ஏற்றி 5 தேக்கரண்டி எண்ணெயை ஊற்றி, சீரகத்தை வறுத்துக் கொண்டு, வெங்காயத்தூள், உருளைகிழங்குத்தூள், பச்சைமிளகாய் இவற்றைப் போட்டு வதக்க வேண்டும். வெங்காயம் வதங்கிய பிறகு, கலந்து வைத்திருக்கும். ஊறவைத்த ஜவ்வரிசியைப் போட்டுக் கிளற வேண்டும். நன்றாக வெந்து பொலபொலவென்று வரும் பொழுது கீழே இறக்கி வைக்கவும். கொத்தமல்லி இருந்தால் போடலாம். வாசனையாக இருக்கும். பிடித்தவர்கள் 1 தேக்கரண்டி சர்க்கரை போட்டு கலந்து கொள்ளலாம். கடலைப் பொடியையும் போட்டு கலந்து வைக்கவும்.



சிவகுருவுக்குத் தூக்கிவாரிப்போட்டுவிட்டது. கண்களை மலர்த்திக் கொண்டு கதவைத் தட்டியவளையும், அவளுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தவளையும் பார்த்தான். குறிப்பாகப் பின்னால் நின்றுகொண்டிருந்த பெண்ணை... அவனுக்கு நம்பிக்கையே வரவில்லை. ஒரு வாரமாகத் தன் நினைவைவிட்டு நீங்காமல் இரவிலும் பகலிலும் - சுருக்கமாய் எப்போதும், பாடுபாடு படுத்திக் கொண்டிருந்த பெண்ணை ஒருசிறிதும் எதிர்பார்க்காத இன்ப அதிர்ச்சி அவன் பார்வையில் மிகத் துப்புரவாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

தனது பார்வையின் கூர்மை அவளை மிகப் பெரிய அளவுக்குத் தாக்கிவிட்டதை, அவள் உடனுக்குடனேயே தலையைக் கவிழ்த்துக் கொண்டு விட்டதிலிருந்து உணர்ந்து அவன் வெட்கமுற்றான்.

“என்ன அண்ணா, அப்படிப் பாக்கறே எங்களை? என்னடா இவ எப்படி இங்கே தேடிண்டு வந்துட்டாளேன்னு...?” என்றபடி மிகவும் சகஜமாய் மதுரம் அவனது அறைக்குள் நுழைந்தாள். அறை வாயிலில் தயங்கியபடி தலை குனிந்து நின்ற பெண்ணின் கையை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவள் நுழைந்த தினுசைப் பார்த்ததுமே, அந்தப் பெண் யார் என்பது அவனுக்குப் புரிந்து போய்விட்டது. மனத்தில் சொற்களுக்கு அப்பாற்பட்ட வேதனையும் மாற்றமும் விளைந்தன. அவன் கண்களும் துயரமாய்த் தாழ்ந்து கொண்டன.

“வா, வாங்க. உக்காருங்க...” என்று இருவரையும் உபசரித்தவாறு, அவன் அங்கே தயாராக வைக்கப்பட்டிருந்த இரண்டு ஸ்டூல்களை நகர்த்திப் போட்டான். இயல்பாக உட்கார்ந்து கொண்ட மதுரம் சத்தியவதியின் கையைப் பற்றி மற்றொன்றில் அமர்த்தினாள். சத்தியவதியின் தலை இன்னும் தாழ்ந்தே இருந்தது.

சிவகுரு அறையை விட்டு போய் மூன்று காப்பி கொண்டுவரச் சொல்லிவிட்டு வந்து கட்டிலில் உட்கார்ந்தான். பிறகு மடித்துத் தட்டுச்சுற்றாய்த் தூக்கிக் கட்டி இருந்த வேட்டியை - அப்போதுதான் ஞாபகம் வந்தவனாக - அவசரமாய்த் தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்தவன், “என்ன மதுரம், சொல்லு?” என்றான்.

“நான் சொன்னேனே, அந்தப் பொண்ணு இவங்கதான். என் ரூம்மேட். சத்தியவதின்னு பேரு...”

“ஹல்லோ.....” என்று அவன் சொன்னதற்குச் சத்தியவதி தலையைக்கூட உயர்த்திப் பாராமல் உட்கார்ந்திருந்தாள். எந்த நொடியிலும் அழத் தயாராக இருந்தவள்போல் உதடுகளின் துடிப்புடனும், இமைகளின் தாழ்ச்சியுடனும் காணப்பட்ட அவளைப் பார்க்கப் பார்க்க சிவகுருவின் உள்ளம் உருகிப் போயிற்று.

மேலே எப்படித் தொடருவது என்பதில் எல்லாருக்குமே விளைந்த சங்கடத்தால் அந்த அறையில் இறுக்கமான அமைதி கவிந்தது. மதுரத்தாலேயே மேற்கொண்டு ஒன்றும் பேச இயலாது போன நிலையில், தானே பேசியாக வேண்டும் என்ற கட்டாயத்தைச் சிவகுரு உணர்ந்தான்.

"ஐம் ஸாரி. அதுமாதிரி ஒரு கம்பெனியே அந்தத் தெருவில் இல்லை. நாலுதரம் சுத்திப் பார்த்துட்டேன்... போஸ்ட் மேனையும் ஒருதரத்துக்கு நாலுதரம் தீரவிசாரிச்சுட்டேன்."

"என்னால் உங்களுக்கெல்லாம் கஷ்டம்....!" தலையை உயர்த்தி அவனைப் பார்த்து மெல்லிய குரலில் முனகிவிட்டுச் சத்தியவதி மறுபடியும் தலை தாழ்ந்தாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க... மனுஷங்க ஒருத்தருக்கொருத்தர் இந்தச் சின்ன உதவிகூடச் செய்யலைன்னா எப்படி?"

மதுரத்தின் பார்வை சிவகுரு பாதி எழுதியிருந்த கவிதையின்மீது விழுந்தது. அவள், "இதை நான் பார்க்கலாமா அண்ணா?" என்று கேட்டுக் கொண்டே, அவனது ஒப்புதலுக்குக் காத்திராமல் அந்தத் தாளை எடுத்துப் படிக்கலானாள். படித்து முடித்ததும் அவளது பார்வை பொருள் பொதிந்த முறையில் அவன்மீது படிந்து மீண்டது.

லாட்ஜ் பையன் மூன்று கோப்பைகளில் காப்பி கொணர்ந்து வைத்துச் சென்றான். மதுரம் தான் ஒன்று எடுத்துக் கொண்டு சத்தியவதியின் கையில் ஒன்றைக் கொடுத்தாள். கோப்பையைப் பெற்றுக் கொள்ளும்போது சத்தியவதியின் விரல்கள் மெல்ல நடுங்கியதைச் சிவகுரு கவனித்தான்.

இன்னும் அவன் தனது திகைப்பிலிருந்து மீளவே இல்லை. முன்பின் தான் அறியாத ஒரு பெண்ணைத் தற்செயலாய்ப் பார்த்துவிட்டு, அவளையே நினைத்து உருகுவதும் - அப்படி உருகுபவனின் முன்னால் திடீரென்று அந்தப் பெண்ணே வந்து நிற்பதும் கற்பனைக் கதைகளில்தான் சாத்தியம் என்றெண்ணி அவன் வியந்து போனான். அந்தப் பெண்ணின் நிலை இப்படி ஆயிற்றே என்ற வருத்தம் அவனுக்கு வராமல் இல்லை. அவள் இப்படி ஏமாந்ததால் தன்னை அவள் நிராகரிக்கக்கூடுமோ என்ற வருத்தமே அது... ஒருதரம் காதலித்து, இப்படிக் கருவையும் சுமந்து, காதலன் தன்னைக் கைவிட்டதால் அந்தக் கருவையும் அழிக்கப் போகிற அவளுக்குத் தனது காதலை ஏற்குமளவுக்கு மனப்பக்குவமோ துணிச்சலோ இருக்குமா என்ற கேள்வி அவனை அலைக்கழிக்கலாயிற்று. அடக்கமாகவும், சாதுவாகவும் தென்படுகிற இவள் எப்படி இப்படி ஒரு நிலையை அடைந்தாள் என்ற வினாவும் அவனைக் குடையலாயிற்று. கட்டாயப்படுத்தப் பட்டாளா...?

இந்தக் கேள்விக்கெல்லாம் அவளாகவே பதில் சொன்னாலொழிய, கேள்வி என்ற ஒன்றைப் போட்டு அவளிடமிருந்து பதிலைக் கறப்பது இயலாத ஒன்று என்றும் உடனே எண்ணினான். இப்படி ஒரு கேள்வியை அவள் நிச்சயம் விரும்பமாட்டாள். உதவிக்கு வந்தால் அந்தரங்கமான கேள்விகளைக் கேட்கிறானே இவன் என்ற கசப்பு அவளுக்கு ஏற்பட்டுவிடக்கூடும்...

ஒன்றும் பேசாமல் மூவரும் காப்பியைக் குடித்து முடித்தார்கள்.

"அண்ணா, உங்கிட்ட தனியா ஒரு நிமிஷம் பேசணும். கொஞ்சம் வெளியே வர முடியுமா?

''வரேன்..... என்றவாறு மதுரத்துடன் அறைக்கு வெளியே வந்து நின்றான்.

வராந்தாவின் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து நின்ற மதுரத்தை அவன் ஆவலுடன் பார்த்தான். வராந்தாவில் நடந்து கொண்டிருந்த சிலர் அவனை நோக்கிப் புன்னகை காட்டினர். அந்தப் புன்னகையின் விஷமத்தைத் தாங்கமாட்டாத அவன், ''மீட் மை சிஸ்டர் மதுரம்'' என்று அவர்களுக்கு மதுரத்தை அறிமுகப் படுத்தினான்.

''அண்ணா, உன்னோட உதவி வேணும். ரொம்பவும் பெரிய உதவி அது. எப்படி வாயைத் திறந்து அதைச் சொல்றதுன்னே தெரியல்லே... நான் கேக்கப்போற உதவி ரொம்பவும் அதிகப் படிதான். ஆனா, நான் கேட்டுத்தான் ஆகணும்.''

''சொல்லு, மதுரம்... எதுவானாலும் சரி. பணம் ஏதாவது வேணுமா?''

''பணமில்லேண்ணா... இது ரொம்பவும் நெருடலான உதவி. நீ கோவிச்சுண்டுடுவியோ என்னமோ?''

''இல்லே, மதுரம்! எதுவானாலும் கேளு. சத்தியமாக் கோவிச்சுக்க மாட்டேன்.''

''அந்தப் பொண்ணுக்காகத்தான் அண்ணா...''

''சொல்லு, மதுரம்!''

''....''

''சொல்லும்மா!''

''அபார்ஷனுக்குப் போனா ஹஸ்பண்டோட வரச் சொல்லுவாங்க போலிருக்கு...''

'' ''

''நீயும் நானும் அவளை நர்சிங்ஹோம்ல சேர்த்துவிடணும்... என்ன அப்படிப் பாக்கறே? புரியறதா நான் சொல்றது?''

''அந்தப் பொண்ணோட 'ஹஸ்பண்ட்னு' என்னைக் காட்டப் போறே! அதுதானே?''

மதுரம் கண்களில் வியப்பு வழிய அவனைப் பார்த்தாள். ஏனெனில், அவனது கேள்வியில் ஒரு புரிந்து கொள்ளல் ஒலித்ததாய் அவளுக்குத் தோன்றியது. தனக்குத் தோன்றியது சரிதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, ''நீ அதுக்குச் சம்மதிப்பியாண்ணா?'' என்று ஆவலுடன் அவனை விசாரித்தாள்.

''ரெடி...''

மதுரத்தின் விழியோரம் கசிந்தது.

''அந்தப் பொண்ணுக்கு இந்த என்னோட யோசனையைப் பத்தி இன்னும் நான் சொல்லல்லே. சொல்லாமதான் கூட்டிண்டு வந்திருக்கேன். அவ என்ன சொல்லுவாளோ தெரியாது. ஆனா வேற வழியே இல்லே...''

''அப்ப, முதல்ல எப்படியாவது அவளைச் சம்மதிக்கப் பண்ணு. முதல்ல அவ எண்ணம் தெரிஞ்சுட்டா அதுக்கு அப்புறம் அவளோட பேசிப் பார்க்கிறதுக்குத் தோதாய் இருக்குமோல்லியோ...? அதான்.''

''அப்ப, அப்படியே செஞ்சுடலாம். ரொம்ப தாங்க்ஸ் அண்ணு!''

''அதெல்லாம் வேண்டாம்.''

''இன்னிக்கே வரமுடியுமா? ஏன்னு, தாமதிக்கிற ஒவ்வொரு நாளும் ஆபத்துல கொண்டுபோய் விட்டுடும்.''

''இன்னிக்கேயா?''

''ஏண்ணு? ஏதானும் அவசர ஜோலி இருக்கா?''

''பரவாயில்லே. அதை அப்புறம் பார்த்துக்கலாம். சரி. நான் இப்படி வெளியிலயே நிக்கறேன். நீ போய் அவளைக் 'கன்வின்ஸ்' பண்ணிட்டு எங்கிட்ட வந்து சொல்லு...''

மதுரம் ஒரு சின்னத் துள்ளலுடன் அறைக்குள் நுழைந்தாள்.

''எங்கண்ணு சரின்னுட்டான், சத்தியா... நீ கவலையை விடு. எல்லாம் நல்லபடியா நடக்கும். அதுக்கு அப்புறம் கொஞ்சநாள் கழிச்சு ஒரு நல்லவனுப் பார்த்து...''

சத்தியவதி மிகவிரைவாய்த் தலையசைத்து அவளது யோசனையை மறுதலித்தாள்.

''ப்ளீஸ், மதுரம்! அந்தப் பேச்சே வேண்டாம். உங்கண்ணுவை ஒரு தெய்வமாத்தான் கும்பிடணும். எனக்கு எப்படி என்னுடை நன்றியைத் தெரிவிக்கிறதுன்னே தெரியல்லே மதுரம்! இப்படியும் மனுஷங்க இருக்காங்களா உலகத்துல? என்னுல நம்பவே முடியல்லே...''

''மதுரம்... மதுரம், ஒரு நிமிஷம் வந்துட்டுப்போ!'' என்று சிவராம் வெளியே இருந்தபடியே குரல் கொடுத்தான்.

கண்ணீர் மல்க உட்கார்ந்து கொண்டிருந்த சத்தியவதியின் தோளை ஆறுதலாய்த் தட்டிவிட்டு மதுரம் அறையைவிட்டு வெளியே சென்றாள்.

''அது சரி... எப்படி இது மாதிரி ஆச்சாம்?''

''ஏண்ணு? அவசியம் உனக்குத் தெரியணுமா?''

''ஒரு க்யூரியாஸிடி. வேற ஒண்ணுமில்லே.''

''சும்மாப் பேசிண்டிருக்கிறதுக்குன்னு ஒரு லாட்ஜுக்கு கூட்டிண்டு போய், அவ வேண்டாம் வேண்டாம்னு சொல்லச் சொல்லக் கேக்காம இப்படி...''

''அவளைப் பார்த்தா அப்படி ஒண்ணும் அடக்கங்கெட்ட பொண்ணுத் தெரியல்லே... அதான் கேட்டேன். சரி. நீ போய் அவகிட்டப் பேசு...''



மதுரா கதவை ஒருக்களித்துச் சாத்திவிட்டுத் திரும்பவும் சத்தியவதியின் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"இன்னிக்கேகூட அண்ணா ரெடியாம்!"

"உங்கண்ணா முகத்தைப் பார்க்கிறதுக்கே எனக்கு எப்படியோ இருக்கு மதுராம்?"

"பரவாயில்லை. மனசைத் தைரியப்படுத்திக்கோ சத்தியா! எங்கண்ணா ஒரு சோஷல் வொர்க்கர் வேற. அதைச் சொல்ல மறந்துட்டேனே. உனக்கு இந்த உதவியைப் பண்ணிட்டு அப்புறம் அதைப் பத்தி மறந்தே போயிடுவான். அவ்வளவு நல்ல தன்மை அவனுக்கு! ஆமா, நாம எல்லோரும் இப்போ புறப்பட்டு வள்ளியம்மாள் நர்சிங்ஹோமுக்குப் போயிடலாம்..."

பத்மா திரும்பவும் அறையை விட்டு வெளியே போய் சிவகுருவிடம் சேதியைச் சொன்னாள். சிவகுரு சம்மதித்தான்.

அறைக் கதவை அவன் பூட்ட, மூவரும் அடுத்த சில நிமிடங்களில் அந்த வீட்டை விட்டு வெளியேறினார்கள்.

5

டாக்டர் பங்கஜம் சத்தியவதியைச் சில கேள்விகள் கேட்டாள். மாத்திரைகளுக்குக் கலைவது கடினம் என்று கருத்துத் தெரிவித்துவிட்டு, அறுவைதான் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டாள். இரண்டு நாட்கள் ஓய்வில் மருத்துவமனையிலேயே படுக்கையில் இருந்தாக வேண்டும் என்றும் சொன்னாள்.

"ஐந்நூறு ரூபாய் ஆகும்..."

"கட்டறேன்" என்றான் சிவகுரு. பத்மா கொடுத்து வைத்திருந்த பணத்தை எடுத்து டாக்டரம்மாளிடம் நீட்டினான்.

"இன்னிக்கே அட்மிட் பண்ணிடறீங்களா?" என்று பணத்தை வாங்கிக் கைப்பையில் வைத்துக் கொண்டே டாக்டர் விசாரித்தாள்.


"இப்போவே டாக்டர்..." என்று பத்மா அவசரமாய்ச் சொன்னாள்.

"முதல் குழந்தையை வேணாம்கறீங்க... நல்லா யோசிச்சுத்தானே இந்த முடிவை எடுத்தீங்க?"

"ஆமா டாக்டர்! நல்லா யோசிச்சுத்தான் இப்படி ஒரு முடிவை எடுத்தோம்" என்று சிவகுரு தயக்கமின்றிச் சொன்னான்.

"நானும் வந்ததுலேருந்து பார்க்கறேன். நீ எதுவுமே பேசவே மாட்டேங்கறே?" என்று டாக்டர் சத்தியவதியைப் பார்த்துக் கேட்டாள்.

சத்தியவதி முதல் முறையாகப் புன்னகை செய்தாள். "அதிலொண்ணுமில்லை டாக்டர்... இப்ப குழந்தை வேணாம்னு நான்தான் முதல்ல முடிவு பண்ணினேன். இவங்களும் ஒத்துக்கிட்டாங்க. ஆமோதிக்கிறீங்க. கொஞ்சம் பயமா இருக்கு..."



சுவை + சத்து கீரை ரொட்டி

தேவையான பொருள்கள் : கோதுமை மாவு - ¼ கிலோ, பொட்டுக்கடலை மாவு -100 கிராம், அரிசி மாவு 100 கிராம், பசலைக்கீரை - 100 கிராம், பச்சைமிளகாய் - 5, வெங்காயம் பெரியது - 2, உப்பு, எண்ணெய், தண்ணீர்.

செய்முறை :- கோதுமை மாவு, அரிசி மாவு, பொட்டுக்கடலை மாவு மூன்றையும் நன்ருக சலிக்கவும். பசலைக்கீரையைப் பொடிப்பொடியாக நறுக்கவும். வெங்காயத்தையும் பச்சை மிளகாயையும் நறுக்கிக் கொள்ளவும். தண்ணீரில் உப்பைப் போட்டுக் கலக்கவும். நறுக்கிய பண்டங்களை மாவுடன் சேர்த்து உப்பு நீர் விட்டு கெட்டியாகப் பிசையவும். சிறிதுநேரம் மாவை ஊற வைக்கவும். பிறகு சமமான உருண்டைகளாக்கி அப்பளம் போல் இட்டுக் கொண்டு, எண்ணெய் தடவிய அடைக்கல்லிலோ - தோசைக்கல்லிலோ போட்டு சுட்டு எடுக்கவும்.

என்றேன் மெல்லிய குரலில்.

பின்னர், "உங்க வீட்டு அட்ரஸ் சொல்லும்மா!" என்றவாறு [illegible] "இதுல [illegible] எழுதிடும்மா" என்று பணித்தாள் டாக்டர்.

[illegible] றாள்.

முகவரியை வாய்விட்டு முணகிப் படித்த டாக்டர், "ஷெனாய் நகர்ல இருக்கற [illegible] எந்த இடத்துல இருக்கு?" என்றாள்.

"அம்மா, ஷெனாய் நகர்ல [illegible] எங்க இருக்குன்னு டாக்டர் அம்மா கேக்கறாங்க" என்று மதுரம் சிவகுருவை உதவிக்கு அழைத்தாள்.

"ஷெனாய் நகர்ல ஒரு நீச்சல் குளம் இருக்கில்லியா? அதுக்குப் பக்கத்துல இருக்கு டாக்டர்!"

டாக்டர் பங்கஜம் ஒன்றுமே சொல்லாமல், அவள் கொடுத்திருந்த [illegible] எடுத்து அவளிடம் நீட்டினாள்.

"அதுமாதிரி தெரு ஷெனாய் நகர்ல கிடையவே கிடையாது. [illegible] பணத்தை எடுத்துட்டுப் போய்ச் சேருங்க. இதுக்குன்னே சில டாக்டர்ஸ் இருக்காங்க. அங்க போங்க. நான் பணத்துக்காக எதையும் செய்யற ஜாதி இல்லே. அண்டர்ஸ்டாண்ட்?" என்று பெருங்குரலில் கத்திய டாக்டர் பங்கஜம் ரூபாய் நோட்டுக்களை மேசைமீது விசிறியடித்தாள்.



சிவகுருவால் பதிலே சொல்ல முடியவில்லை. ஒன்றுமே பேசாது நகர்ந்து விடுவதுதான் மரியாதை என்று மதுரத்துக்கும் தோன்றியது. சத்தியவதியோ உடனே கண்கலங்கினாள்.

டாக்டரம்மாவின் அறைக்கு வெளியே இருந்த சிலர் மூவரையும் வேடிக்கை பார்த்தார்கள். தலைகுனிந்த வண்ணம் மூவரும் வெளியேறி, இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்துப் பேச பெருந்து நிறுத்தத்திலிருந்து சற்றுத் தள்ளி அமைந்திருந்த வேப்பமரத்து நிழலுக்குச் சென்று நின்றார்கள்.

“அடுத்து என்ன பண்ணலாம் மதுரம்? இதுமாதிரிக் கேஸ்களைக் கவனிக்கிறதுக்குன்னே சில டாக்டர்ஸ் இருக்காங்கன்னு இந்த டாக்டரம்மா சொன்னாங்களே... அவங்களை எப்படிக் கண்டுபிடிக்கிறது?” என்று சிவகுரு கவலையை வெளியிட்டான்.

“அது கஷ்டம் அண்ணே! யாரைப் போய்க் கேக்க முடியும்? யாரு கேக்கறது? யார் கேட்டாலும் கேக்கற ஆசாமி மேலதான சந்தேகம் வரும்...”

“நான்தான் விசாரிக்கணும் மதுரம்! வேற வழி இல்லை. நீங்க ரெண்டு பேரும் அவங்கவங்க ஆபீசுக்குப் போங்க. நான் இன்னிக்குள்ள எப்படியாவது விசாரிச்சு நாளைக்குத் தகவல் குடுத்துடறேன்.”

"இந்த விபரம் இன்னிக்குள்ள கிடைச்சுடும்னு நம்பறியாண்ணா?"

"எங்க லாட்ஜில சில பசங்க இருக்காங்க. அவங்களுக்கு இதெல்லாம் அத்துப்படி!"

"நீ கோட்டை மண்ணைத் தட்டிப் போகவாங்களேண்ணா?" என்று பத்மா கவலையாய்க் கேட்ட கேள்வியை, ஒரு புன்னகையின் மூலம் எதிர்கொண்ட சிவகுரு. "அதனால என்னம்மா? ஒரு நல்ல காரியத்துக்காகத்தானே? பரவாயில்லே..." என்றான்.

தனது கேள்வியின் கனம் சத்தியவதியைப் பாதித்திருக்கும் என்ற நினைவு அதன் பிறகுதான் பத்மாவுக்கு மனத்தில் உறைக்க, அவள் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டதற்காகப் பெரிதும் வருத்தமடைந்தாள்.

"என்னால உங்களுக்கெல்லாம் ரொம்பக் கஷ்டம். அவமானம்... என்னோட அவமானம் என்னோட நிக்காம, உங்கள மாதிரி நல்லவங்களையும் இப்படிப் பாதிக்குதே..." என்று சத்தியவதி வாய்விட்டுப் புலம்பினாள்.

"அதப்பத்தி என்னங்க? யாரோ ஒரு ரோக் பண்ணினதுக்கு நீங்கதான் எப்படிப் பொறுப்பாவீங்க? மனசை ரொம்பவும் வருத்திக்காதீங்க. ஒண்ணொண்ணா ஒண்ணொண்ணுங்க. நாளைக்கு காலையில லாட்ஜுக்கு வந்துடுங்க..."

"வேண்டாண்ணா! லாட்ஜுக்கு யார்கிட்டே போய் கேக்கப் போறோம்? அங்க யார் கண்ணிலயும் படறதுமாயும் நாங்க படவேண்டாம். நாளைக்கு நீ கேக்கறப்போ ரெண்டு நாளைக்கு ஒண்ணொண்ணா விசாரிச்சாக. அதனால வேற இடத்துல சந்திக்கலாம்."

"அதுவும் சரிதான். அப்ப நாளைக்குத் திருவல்லிக்கேணி பஸ் ஸ்டாப்பிங்ல நில்லுங்க ரெண்டு பேரும் நான் வந்து பேசிக்கிறேன். சரிதானா?"

"சரி அண்ணா... அப்ப நாங்க வரோம்."

"ரொம்ப தாங்க்ஸ்ங்க உங்களுக்கு..."

அவர்கள் இருவரும் பேருந்து பிடித்துக் கிளம்பிப் போனது தெரிந்த பிறகு சிவகுரு திரும்பிச் சென்றான். அனுபவிக்கும் பதுமையால் அவன் மனம் விருப்பமான உணர்ச்சியில் ஆழ்ந்திருந்தது.

என்னதான் புரோக்கரான சிக்கல்கள் கொண்ட ... தான் இருந்தபோதிலும், கருச்சிதைவு அனுபவித்த அந்தப் பெண் தன்னை மனக்கச் சாடிட்டாளே என்று அவன் ஆதங்கப்பட்டான்.

இதுபோன்ற நிலைக்கு ஆளான எல்லாப் பெண்களும் சொல்லுவது போலத்தான் இவளும். 'நான் கறைபட்டவ. நீங்க சுத்தமானவரு. நான் உங்களுக்கு லாயக்கில்லே... தயவுசெய்து என்னை மறந்துடுங்க' என்றெல்லாம் பேசித் தன்னைப் புறக்கணிப்பாளோ என்று அவன் எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தான். அப்படி அவள் செய்வாளாயின், பத்மாவின் ஒத்தாசையும் எப்படியாவது

சுவை + சத்து



நிலக்கடலை ஜவ்வரிசி கலப்பு உப்புமா



தேவையான சாமான்கள் : நிலக்கடலை - 200 கிராம், ஜவ்வரிசி - 200 கிராம், உருளைக்கிழங்கு - 2, பெரிய வெங்காயம் - 2, இஞ்சி - 1 துண்டு. பச்சைமிளகாய் - 5, தேங்காய் ½ மூடி, பெருங்காயம் சிறிதளவு, எண்ணெய் சிறிதளவு, நெய் சிறிதளவு, கருவேப்பிலை கொஞ்சம்.

செய்முறை :- ஜவ்வரிசியை சுமார் நான்கு மணி நேரம் ஊற வைக்கவும். நிலக்கடலையை வறுத்து, ஒன்றிரண்டாகப் பொடிக்கவும். உருளைக்கிழங்கை வேகவைத்து தோல்நீக்கி உதிர்க்கவும். வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி இவற்றைப் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ந்தபின் கடுகைப் போட்டுப் பொரித்தபின் வெங்காயம், இஞ்சி, பச்சைமிளகாய் இவைகளைப் போட்டுக் கிளறிய பின், ஜவ்வரிசியைக் கொட்டிக் கிளறவும். சிறிது வெநதபிறகு, உருளைக்கிழங்கு ,உப்பு ,நிலக்கடலைத்தூள், தேங்காய்த் துருவல், பெருங்காயத்தூள், நெய், கருவேப்பிலை இதழ்கள் ஆகியவற்றைச் சேர்த்துக் கிளறி, வெந்தவுடன் இறக்கவும். சூடு ஆறிய பிறகு பொலபொலவென உதிறிப் பக்குவமாக இருக்கும்.



அவளைச் சம்மதிக்கச் செய்துவிட வேண்டும் என்று அவன் முடிவு செய்து கொண்டான். காலப்போக்கில் அவள் மனம் மாறும் என்று நம்பிக்கை கொள்ள முயன்றான். 'மாறுகிறவரை நான் காத்துக் கொண்டிருந்தால், தனது பிடிவாதத்தை அவள் தளர்த்தியே தீருவாள்' என்றும் சொல்லிக் கொண்டான்.

தன் எண்ணங்களின் ஓட்டத்தை நினைத்து அவனுக்கே கொஞ்சம் சிரிப்பு வந்தது.

அன்றிரவு சிவகுருவுக்குத் தூக்கம் வந்தது என்றாலும், அது முழு நிம்மதி நிறைந்த தூக்கமாக இல்லை. அடிக்கடி விழித்துக் கொண்டான். அப்படி விழித்த போதெல்லாம், சத்தியவதியின் அழகான முகம் அவன் நினைவில் தோன்றியது. ஒரு தரம் முழுவதுமாக விழித்துக் கொண்டு சுயஅலசல் செய்து கொண்டான்... ஒருவேளை, சத்தியவதியின் பேரழகுதான் தன்னை மயக்குகிறதோ என்று தன்னையே நடுநின்று விசாரித்தான். 'இல்லை' என்ற பதில் உடனடியாய்க் கிடைத்தது.

மிக ஆழமான - நடுநிலையான தன் தன்னாய்வுக்குப் பிறகு, சத்தியவதிமீது தனக்குள்ள ஈடுபாடு உண்மையான அன்பு என்றும், அவளது கவர்ச்சியால் விளைந்த காமம் அன்று என்றும் மனநிறைவு கொண்டான். என்றாலும், அவளை இந்நிலைக்கு ஆளாக்கிக் கைவிட்டுவிட்ட அந்த நரசிம்மன் மனம் மாறி அவளை ஏற்க முன்வராதிருக்க வேண்டுமே என்று ஒரு பைத்தியக்காரன் மாதிரி கவலைப்பட்டான்... அவர்கள் சந்தித்து மறுபடி ஒன்று சேராதிருக்க வேண்டுமே என்று கவலை கொண்ட அதேநேரத்தில், அதுதான் அவளுக்கு மகிழ்ச்சியளிக்குமானால் அப்படியே நடக்கட்டும் என்று சொல்லிக் கொண்டு பெருமூச்செறிந்தான்.

காலையில் பாதியில் நிறுத்திய கட்டுரை பற்றிய நினைப்புத் திரும்ப ஞாபகத்திற்கு வர, டார்ச்விளக்கைப் பொருத்திக் கொண்டு, அதன் சிறிய வெளிச்சத்தில் விட்ட இடத்திலிருந்து கட்டுரையைத் தொடர்ந்து எழுதினான். முடித்துவிட்டு மணி பார்த்தான். மணி நாலரை. அதற்கு மேல் தூங்க முடியாது என்று தோன்றியது. இரவு முழுவதும் சத்தியவதி பற்றிய கனவுகளில் ஆழ்ந்தபடி பொழுது விடிவதற்குக் காத்திருந்தான்.

முதல் நாள் பேசி வைத்திருந்தபடி, மறுநாள் காலை [illegible] அவன் [illegible] சத்தியவதியும் [illegible] காத்துக் கொண்டிருந்தார்கள்.

[illegible] இருந்தாலும் [illegible] கொண்டிருந்தவளைக் [illegible] அவளுக்குப் பட்டது. அப்போதும் இருக்[illegible]

[illegible] முதல் நாள் இரவு [illegible] விசாரணைகள் [illegible] செய்யும் ஒருமருந்துவ விருக்கத் இரு[illegible] முழுமையாகச் சரியாகிவிட்டான். இருந்தபோதிலும் [illegible] காலை போய்க் கொள்ளலாம் என்று மதுரம் கூறிவிட்டான். மேலும் இரண்டு நாட்களுக்கு அலுவலகம் செல்ல வேண்டாம் என்றும் அவன் சத்தியாவிடம் கண்டிப்பாகச் சொன்னான்.

[illegible] கொண்டு [illegible] அவளை [illegible] சத்தியவதி [illegible] அந்த [illegible] என்று [illegible] போனதுபோல் இருந்தது அவனுக்கு.

சுமார் ஒருவாரம் கழிந்து அவனே மதுரத்தைத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசினான். பொதுவாக ஒரு சில விஷயங்கள் பேசிய பிறகு, "சத்தி எப்படி இருக்கா?" என்று விசாரித்தான்.

"[illegible] அண்ணா [illegible] இருக்க [illegible]. அடிக்கடி நான் அவனை [illegible], அவளை [illegible] அவள் [illegible] தெரிவிக்கச் சொன்னா அண்ணா..."

"நானே உனக்குச் சொல்லணும்னு நினைச்சேன் மதுரம்! அதனால இப்ப அந்த [illegible] ஞாபகங்களை [illegible]. ஆனாலும் அவளை ஒரு [illegible] அவன் [illegible] அதனால் அவளை மட்டும் இப்போதைய தேவை..."

மதுரம் வாய்விட்டு சிரித்த ஓசை ஒரு கேலியாய் சிவகுருவின் செவிகளைத் தாக்கியது.

''என்ன சிரிக்கிறே, மதுரம்? நான் சீரியஸாப் பேசிண்டிருக்கேன்...''

''சிரிக்கிறதுலயும் சீரியஸ்நெஸ் இருக்கலாமில்லியா? நான் சிரிக்கிறது சீரியஸாத்தான்! சந்தோஷமாச் சிரிக்கிறேன்...''

''எதுக்கு சந்தோஷம்? சொல்லேன். நானும் தெரிஞ்சுக்கறேன்.''

''நீ எதை மனசுல வெச்சுண்டு அவ மனசை மாத்த நான் முயற்சி பண்ணணும்னு பேசறேன்னு எனக்குப் புரியறது, அண்ணா! நான் ஒண்ணும் மண்டு இல்லே, தெரிஞ்சுக்கோ...''

'' ''

''என்ன பேச்சு மூச்சைக் காணோம்?''

''அதான் கரைக்டாச் சொல்லிட்டியே''...

''அப்ப, என் கணக்குச் சரிதானா?''

''எனக்குச் சிக்கலாப் போயிடுச்சே! உன் கணக்குக் கப்புதான்''

''ஆல் த பெஸ்ட், அண்ணா! ஐ வில் ட்ரை மை பெஸ்ட்!''

''தாங்க்யூ! தாங்க்யூ...''

''ஆனா கொஞ்ச நாளாகும்.''

''எத்தனை நாளானும் பரவாயில்லே. மனசு மாறி சரின்னு சொன்னா அதுவே போதும்!''

''ரைட்...''

மறுநாள் பிற்பகலில் மதுரத்தைத் தொலைபேசியில் கூப்பிட்டான்.

''என்ன, மதுரம் ? எப்படி இருக்கே?''

''சத்தியாதானே? சௌக்கியமா இருக்கா.''

''இதுதானே வேணுங்கறது...''

''நீ பேசறதுதான் மறைமுகமா இருக்கு! இதுமாதிரி இதுக்கு முந்தி என்னிக்கு எனக்கு நீ போன் பண்ணி இருக்கே, சௌக்கியமான்னு விசாரிச்சிருக்கே? நீயே சொல்லு.''

''நீயுந்தான். உன் சிநேகிதிக்கு ஆபத்துன்னதும் எனக்கு ரெண்டுமூணு வாட்டி போன் பண்ணிப் பேசினே. அதுக்கு முன்னாடி நீ மட்டும் அடிக்கடிதான் என்னோட போன்ல பேசிண்டிருந்தியாக்கும்?''.



6

அன்று மாலை உடனே பேருந்து கிடைத்ததால் ஐந்தரைக்கெல்லாம் சத்தியவதி உழைப்பாளர் சிலையை அடைந்து விட்டாள். அங்கே ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு மதுரத்தின் வரவை எதிர்பார்க்கலானாள்.

அவள் வந்ததையும் உட்கார்ந்ததையும் சற்றுத்தொலைவில் நின்றவாறு சிவகுரு பார்த்தான். மதுரம் சொன்னது மாதிரி கிட்டத்தட்டப் பழைய களை முகத்துக்குத் திரும்பி வந்துவிட்டிருந்தது. முன்பு அவளைக் கடற்கரையில் பார்த்தபோது அவள் முகத்தில் இருந்த அதிகப்படியான கவர்ச்சி குறைந்து அதன் இடத்தில் ஓர் முதிர்ச்சி நிறைந்த அடக்கம் வந்துவிட்டிருந்ததாய் அவனுக்குப் பட்டது. வாழ்க்கையில் அடிபட்டவர்களின் முகங்களில் இருக்கும் முதிர்ச்சி அது என்றும் அவனுக்குத் தோன்றியது. 'இவளும் ஒருவகையில் அடிபட்டவள்தானே?' என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

சரியாக ஐந்தே புக்காலுக்கு மதுமாய் விரைவான நடையில் வந்து சத்தியவதியுடன் சேர்ந்து கொண்டாள்.


இதையும் சிவகுரு பார்த்தான். ஆனால் உடனே போய் அவர்களுடன் கலந்து கொள்ள விரும்பவில்லை. சத்தியவதியின் ஐயம் எந்தவகையிலும் தன்பால் கிளறப்படுவதை அவன் அப்போதைக்குத் தவிக்க எண்ணினான்.

இருவரும் சிறிதுதொலைவு நடந்த பிறகு அதிகக் கும்பல் இல்லாத இடமாய்ப் பார்த்து எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டார்கள். மதுமாய் சுண்டல் வாங்கினாள். இருவரும் கொறிக்கத் தொடங்கினார்கள். ஏதோ பேசிக் கொண்டதையும் சிவகுரு கவனித்தான்.

ஐந்து நிமிடங்கள் தாமதித்ததற்குப் பிறகு, "ஹலோ மதுமாய்!" என்று வியப்பு கலந்து கூறிக் கொண்டு அவர்களுக்கு முன்னால் போய் நின்றான். சத்தியவதி தலை உயர்த்தி அவனைப் பார்த்து அரையாகப் புன்னகை புரிந்து, பின் திரும்பவும் தலையைத் தாழ்த்திக்கொண்டு விட்டதைச் சிவகுரு மனத்தில் ஏற்றிக் கொண்டான்.

"என்ன அண்ணா? நீங்க பீச்சுக்கெல்லாம் வருவியா?" என்று மதுமாய் சிரித்தாள்.

"ஏன்? என்னைப் பார்த்தா மனுஷனாத் தெரியலையா?" என்று சிவகுரு சிரித்தான்.



வை + சத்து கீரை ஆம்லெட்

தேவையான சாமான்கள் :- கடலை மாவு 200 கிராம், கோதுமை மாவு 75 கிராம், வெங்காயம் (பெரியது - 2), பச்சை மிளகாய் - 3, எந்தக் கீரையானாலும் ஒரு கட்டு, ஒரு கரண்டி மோர், உப்பு ருசிக்குத் தகுந்தது. தோசை போல் வார்ப்பதற்கு எண்ணெய்.

செய்முறை :- ஆம்லெட் செய்ய 2 மணி நேரம் முன்பே கடலைமாவையும், கோதுமை மாவையும் சிறிது மோர், உப்பு போட்டுக் கரைத்து வைத்துவிட வேண்டும். ஆம்லெட் செய்யும் போது கீரையை நன்ருக அலம்பி பொடியாக நறுக்கி மாவில் போடவும். வெங்காயம், பச்சைமிளகாயையும் நறுக்கி அதில் போட்டு, அடுப்பில் அடைக்கல்லைக் காயவைத்து தோசை வார்ப்பதுபோல் ரொம்பவும் கனமில்லாமல் சுமாராக வார்த்து எடுக்கவும்.

"உனக்கு எங்கே அதுக்கெல்லாம் நேரம்னுதான் கேக்கறேன் சத்தியா. ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே... எங்கண்ணா பத்திரிகைகள்ல அடிக்கடி கதைகளும் கட்டுரைகளும் எழுதுவார்."

"அப்படியா? என்ன பேர்ல எழுதுவாரு?" என்று சத்தியவதி வினவினாள். கேட்க வேண்டுமே என்று ஒப்புக்காகக் கேட்டது மாதிரி அவளது குரல் ஒலித்ததாய்ச் சிவகுருவுக்குத் தோன்றியது.

"எங்கண்ணாவோட பேர் நீ சொல்லமாட்டியா? என்னைக் கேக்கறதுக்குப் பதில அவரைக் கேட்டா அவனுக்கு சந்தோஷமா இருக்குமில்லியா?"

"என்னது நீ மதுரம்? என்னோட அவங்களுக்குப் பழக்கமா என்ன? வீணா அவங்களைக் கலாட்டாப் பண்ணாதே."

"சரி. கலாட்டாப் பண்ணலை" என்ற மதுரம் சத்தியவதியைப் பார்த்து, "பாணிபதிங்கிற பேர்ல எழுதுவான்" என்றாள்.

"பாணி அவரோட நட்சத்திரமா?"

"ஆமா. அதோட பதி சேர்த்து பாணிபதின்னு வெச்சுண்டேன்!" என்று சிவகுரு குறுக்கிட்டான். பிறகு, "நான் என்ன உங்க ரெண்டு பேர்கூடவும் நின்னுட்டே தான் பேசணுமா?" என்று சிரித்தான்.

"ஐம் ஸாரி. அண்ணா! உக்காரு... எங்கண்ணாவும் நம்மகூட உக்காரலாமில்லியா?"

"அது அவர் இஷ்டம்" என்று சத்தியவதி புன்னகை செய்தாள்.

தன் கதைகளையோ கட்டுரைகளையோ தான் படித்துள்ளது பற்றியோ, படிக்காதது பற்றியோ சத்தியவதி ஒன்றுமே சொல்லவில்லையே என்ற ஞாபகம் திடீரென்று வர, "என்ன மதுரம், என் கதை கட்டுரைகளை அவங்க படிச்சிருக்காங்களா, இல்லியா? அதைப்பத்தி ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறாங்களே, ஒருவேளை சொல்லும்படியா ஒண்ணுமில்லேன்னு நினைக்கிறாங்களோ?" என்று கூறிய சிவகுரு சத்தம் போட்டுச் சிரித்தான்.

"சேச்சே.. அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நான் பத்திரிகைகள் அவ்வளவாப் படிக்கிறதில்லே. ஜோக்ஸ் மட்டுந்தாங்க படிப்பேன். தப்பா நினைக்காதீங்க" என்று தலைநிமிராமலே பதில் சொன்னாள்.

"உண்மையில நீங்க ரொம்ப புத்திசாலிதான். வாழ்க்கையில எப்பவும் சிரிச்சுண்டே இருக்கணும். கதையிலயும் கட்டுரையிலயும் என்ன இருக்கு? இப்பல்லாம் பாருங்க. தமிழ்ப் பத்திரிகைகள்ள எக்கச்சக்கமான ஜோக்ஸ்ங்க வருது... ஆனா, உங்க மூஞ்சியப் பார்த்தா அடிக்கடி ஜோக்ஸ் படிக்கிற மூஞ்சியாத் தெரியலே!" என்று கூறிவிட்டு அவன் மறுபடியும் வாய்விட்டுச் சிரித்தான்.

சத்தியவதிக்கும் சிரிப்பு வந்து விட்டது. அவள் சிரித்ததைக் கண்டதும் சிவகுருவின் முகம் மேலும் மலர்ந்தது.

"வாழ்க்கையில சிரிக்கிற சந்தர்ப்பங்கள் ரொம்பக் குறைச்சல்தான் மனுஷனுக்கு. ஆனா சிரிக்கிறதுக்குக் கிடைக்கிற ஒரு சின்ன சந்தர்ப்பத்தைக்கூட அவன் நழுவவிடக்கூடாது... துன்பங்களையே நினைச்சு நினைச்சு அசை போட்டுக்கிட்டிருந்தா எப்பவும் கண்ணீர்விட்டுக்கிட்டே இருக்க வேண்டியதுதான். யார் வாழ்க்கையிலதான் துன்பங்கள் இல்லே? ஏதோ ஒரு விதமான துன்பம் எல்லார் வாழ்க்கையிலேயும் இருக்கு. அதையே நினைச்சு வருத்தப்பட்டுக்கிட்டிருக்கக் கூடாது..."

"கேட்டுக்கோ சத்தியா! முக்கியமா உனக்காகத்தான் இதை எங்கண்ணன் சொல்றாரு... நானும் இதையேதான் அண்ணா இவளுக்குச் சொல்லிண்டே இருக்கேன். ராத்திரியெல்லாம் சரியாத் துங்கறதே இல்லே. அடிக்கடி அழறா... நடந்தது நடந்து போச்சு. அதையே நினைச்சு அழறதுனால என்ன லாபம்?"

சத்தியாவின் தலை மேலும் தாழ்ந்தது.

"சரி, சரி. இதோட நிறுத்திப்போம், மதுரம். அவங்களுக்குப் பிடிக்கலைன்னு நினைக்கிறேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க. நீங்க என்னோட நல்லதுக்குத்தானே சொல்றீங்க? உதவி செய்யறவங்களுக்கு உபதேசம் பண்றதுக்கும் உரிமை இருக்குங்க..." என்று கூறியபடி தலை நிமிர்ந்து சிவகுருவை நோக்கிய சத்தியவதி, அவனது பார்வையின் கூர்மையைத் தாங்கமாட்டாதவளாய்த் திரும்பவும் தலை தாழ்ந்தாள்.

சுவை + சத்து டாலியா





தேவையான சாமான்கள் : பாசிப்பருப்பு 200 கிராம், ரவை 200 கிராம், வெல்லம் 1 கப், காரட் பெரியது ஒன்று.

செய்முறை :- ரவையையும் பருப்பையும் சிவக்க வறுக்க வேண்டும். குக்கரில் தண்ணீர் விட்டு நன்றாக வேகவிட வேண்டும். பிறகு 1 கப் நீரில் வெல்லத்தைக் கரைத்து வடிகட்டிவிட வேண்டும். பருப்பும் ரவையும் வெந்த பிறகு வெல்லத்தைப் போட்டு காரட்டை துருவிப் போட்டு நன்றாக கொதிக்க விடவேண்டும். ஆறினபிறகு உதிரி உதிரியாகவிடும். பிறகு சாப்பிட நன்றாக இருக்கும்.

ப்ரோட்டீன் டிரிங்க்





தேவையான சாமான்கள் : புழுங்கலரசி ½ கிலோ, சம்பா கோதுமை ½ கிலோ, மாவு கோதுமை ½ கிலோ, முழுப்பயறு ½ கிலோ, பொட்டுக்கடலை ½ கிலோ, நிலக்கடலை ¼ கிலோ, கம்பு ¼ கிலோ, கேழ்வரகு ¼ கிலோ, கசகசா 100 கிராம்.

செய்முறை :- இவை எல்லாவற்றையும் தனித்தனியே வறுத்து பின்பு மிஷினில் நைஸாக அரைத்து வைத்துக் கொள்ளவும். 1 ஸ்பூன் மாவை 3/4 தம்ளர் தண்ணீரில் கலந்து அடுப்பில் கொதிக்கவைத்துக் கூழ்பதத்தில் ½ தம்ளர் பாலும் ஜீனியும் கலந்து அருந்தவும். இரு ஒருவர் அருந்தப் போதுமானது.

"நாங்க உபதேசம் செய்யலீங்க. நாங்க உங்களுக்குப் பெரிசா உதவிட்டதாவும் நினைக்கலே... அதுமாதிரி இன்னொருவாட்டி சொல்லாதீங்க" என்று சிவகுரு படபடத்தான்.

"இல்லீங்க. நீங்க செய்திருக்கிற உதவிக்கு நான் எப்பவும் என்னிக்கும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேங்க. யாரும் காட்டாத நாணயமாக அவமானத்தை எனக்காகத் தாங்கிக்கிட்டீங்க." என்று சத்தியவதி சற்று உணர்ச்சிவசப்பட்டுப் போனாள்.

"வேண்டாங்க. இந்தப் பேச்சை விட்டுடலாம். நீங்க ரொம்ப இப்படியெல்லாம் ஆறுங்க.. வேணாம். வேற எதையாவது பேசலாம..."

"நீங்க எழுதின கதை ஏதாவது இருந்தாக் குடுங்க. படிக்கிறேன்" என்று அங்கே நிலவிய இறுக்கத்தைக் கலைக்க சத்தியவதியே முன்வந்தாள்.

"ஆகா நீங்க அடுத்தவாட்டி சந்திக்கிறப்பே தரேன்..."

மேலும் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்துவிட்டு விடைபெற்றுக் கிளம்பினார்கள். இருவரையும் பேருந்தில் ஏற்றிவிட்டு நம்பிக்கை துளிர்க்கச் சிவகுரு திரும்பிப் போனான்.

7

மறுநாள் பிற்பகலிலும் சிவகுரு மதுரத்தைத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசினான். அவளுக்கு நன்றி சொன்னதுடன் அடிக்கடி இதுபோல் காதலர்களைச் சந்திப்புக்கு ஏற்பாடு பண்ணுமாறு வெட்கத்தை ஒதுக்கி அவளை அவன் கேட்டுக் கொண்ட போது, மதுரம் வாய்விட்டே சிரித்தாள்.

"உன்னுடைய பிரம்மசரிய விரதம் என்னாச்சு?" என்று கேலி செய்தாள்.

"பொடிப் பொடியாப் போயிடுத்து!" என்று அவனும் வெட்கம் விட்டுப் பதிலிறுத்தான்.

"என்ன காரணமோ? என்ன பேசாம இருக்கே? சத்தியா அழகாய் இருக்கிறதுனாலன்னு எனக்குத் தோணலே... வேற ஏதோ காரணம் இருக்கணும்."

"எனக்குச் சொல்லத் தெரியலே மதுரம்!"

"அப்படின்னா அதுக்குப் பேரு லவ்வு அர்த்தம்!"

சிவகுரு மறுமுனையில் சத்தமாகச் சிரித்தான்.

"சரி. சரி. நான் பெரியம்மாவுக்கு எழுதட்டா?"

"அய்யய்யோ! அதுக்குள்ள அப்படியெல்லாம் ஒண்ணும் பண்ணிடாதே. மதுரம்! என் பிரண்ட் மனசு மாறி என்னை ஏத்துக்க ஒத்துக்கணுமே?"

"சரி. நானும் என் சார்பில அவளுக்கு வேப்பிலை அடிக்கிறேன்! எனக்கு என்ன கமிஷன் தரே?"



"உனக்கு ஒரு நல்ல புருஷனைப் பார்த்துத் தேடி வைக்கிறேன்!

"அதைப்பத்தி நீ அலட்டிக்க வேணாம்!"

"ரொம்ப சரி. அப்புறம் அடுத்த சந்திப்பு எப்ப?"

"இந்த மாதிரியே எங்க சந்திப்புக்கு அப்புறம் நீயும் வந்து [illegible] அவ ரெண்டும் ரெண்டும் நாலுன்னு கணக்குப் போட்டுடுவா! அதனால் கொஞ்சம் பொறுமை காட்டு. நாம மூணுபேருமாச் சேர்ந்து ஒரு சினிமாவுக்குப் போற மாதிரி ஏதானும் பண்ணட்டுமா?"

"அவ சம்மதிப்பாளா?"

"சம்மதிக்கப் பண்றேன்!"

"எப்படியோ... யூ டேக் யுவர் ஓன் டைம்... அவளைக் 'கன்வின்ஸ்' பண்ணு. அது போதும். அப்புறம் எனக்கு இன்

ஒண்ணு ஐடியாகூட இப்ப திடீர்னு தோணுது...

''சொல்லு.''

''காதல்ல தோத்துக் கெட்டுப் போன ஒரு பொண்ணை ஒரு இளைஞன் அவளுடைய இறந்த காலத்தைப் பொருட்படுத்தாம கல்யாணம் பண்ணிக்க முன்வர்றதையும்; முதல்ல மறுத்த அந்தப் பொண்ணு அவன் அவ மனசு மாறதுக்காகக் காத்துண்டு இருக்கிறதைப் பார்த்துட்டுத் தானும் மனசு மாறி அவனை மனப்பூர்வமா ஏத்துக்கிறதையும் பத்தின கதை ஒண்ணைக் கொஞ்ச நாளுக்கு முன்னால நான் எழுதி இருந்தேன்...''

''ஆமாமா... நான்கூடப் படிச்சிருக்கேன். 'தேவதை' வார இதழ்ல வெளிவந்தது.''

''அதேதான். என்னோட கதை கட்டுரைகள் இருந்தால் குடுங்கன்னு நேத்துச் சொன்னாளோல்லியோ? உங்கிட்ட அந்தப் பத்திரிகையைக் குடுக்கறேன். குடுத்து அவளைப் படிக்கச் சொல்லு. என்ன ரீயாக்ஷன்னு பாரு. சந்தர்ப்பம் தோதா இருந்துதுன்னா அப்பவேகூட என்னோட 'இதை' அவகிட்ட சொல்லிடலாம்.''

'''இதை' என்ன 'இதை?' லவ்னு பளிச்னு சொல்லேன்.''

''சரி. லவ்...''

''எப்ப கொண்டு வந்து குடுப்பே பத்திரிகையை?''

''அடுத்த அரைமணியில அங்கே இருக்க மாட்டேனா?'' என்று சிரித்த சிவகுரு ஒலிவாங்கியை வைத்தான்.

அன்று மாலை ஆறரை மணிவாக்கில் மொட்டை மாடியில் மதுரா சத்தியவதியிடம் 'தேவதை' இதழைக் கொடுத்துப் படிக்கச் சொன்னாள். சத்தியவதி மிகுந்த ஆவல் காட்டி உடனே அதைப் படிக்கத் தொடங்கியதைக் கண்டு மதுராவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவள் அறியாமல் அவள் முகத்து உணர்ச்சிகளை அறியும் பொருட்டு, அவளும் மடியில் ஒரு பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு ஓரத்து விழிகளால் அவளைக் கவனிக்கலானாள்.

சத்தியவதியின் முகம் இறுகி இருந்தது. கதையைப் படித்து முடிக்கும்வரையில் முகத்தில் மாறுதல் விளையவில்லை. ஒன்றுமே பேசாமல் அவள் அதை மதுராவிடம் திருப்பிக் கொடுத்தாள்.

''என்ன சத்தியா? படிச்சியா? எப்படி இருக்கு?''

''நீ படிச்சியா அதை?''

''[illegible] புத்தி படிச்சது. அவன் எழுதினது எல்லாத்தையுமே நான் படிச்சிருக்கேன். இதையும் படிச்சிருப்பேன்னு நான் நினைக்கிறேன். என்ன கதை?''

''கெட்டுப்போயிட்ட ஒரு பெண்ணை அவளுடைய கடந்த காலத்தைப் பொருட்படுத்தாம ஒருத்தன் கல்யாணம் பண்ணிக்கிறான். அவ மேல உள்ள லவ்வால. முதல்ல அந்தப் பொண்ணு மாட்டேங்கறா, காரணம் அது இதுன்னு. அப்புறம் அவன் தனக்காக வருஷக்கணக்காக காத்துண்டு இருக்கிறதைப் பார்த்துட்டு அவ மனசு மாறிடுது. கல்யாணம் பண்ணிக்கிறா. அதான் கதை..''

"ஆங்... அந்தக் கதையா? நான் படிச்சிருக்கேன். அது சரி. உனக்குப் பிடிச்சிருக்கா?"

"கதையை விமர்சிக்க எனக்கு என்ன அருகதை இருக்கு? நானும் ஒரு கெட்டுப்போன பொண்ணுதானே?"

பல்வேறு உணர்ச்சிகளின் பிடியில் சிக்கிக் கண்ணீர் ததும்பிய விழிகளைத் தாழ்த்திக் கொண்ட சத்தியவதியைப் பார்த்து மதுமா பதைத்துப் போனான். நெருங்கி உட்கார்ந்து கொண்ட மதுமா. "அட அசடே! எதுக்கு இப்ப அழுறே? ஒருவேளை எங் கல்யாணம் வேணுமான்னுதான் இந்தக் கதையை உங்கிட்ட குடுக்கச் சொல்லி இருக்கலாம். பழசையே நினைச்சுக்கிட்டு நீ மனம் சோர்ந்தா. இனி வருங்காலமே கிடையாதுன்னு மாதிரி விரக்தி



யில் ஆழ்ந்துடக் கூடாதுங்கிறதை உனக்கு உணர்த்தறதுக்காக இதைப் படிக்கச் சொல்லி அனுப்பி இருக்கலாமோன்னு எனக்குப் படறது. எங்கண்ணா இருக்கானே அவன் ஒரு லட்சியவாதி வாய்கிழியப் பேசற - கைதூய எழுதற வறட்டு லட்சியவாதி இல்லே சத்தியா அவன். நிஜமான ஐடியலிஸ்ட். எனக்கு என்ன தோணறதுன்னா... அவனுக்கு உன் மேல லவ்வோன்னு. இல்லேன்னா இந்தக் கதையை அனுப்பி இருக்கமாட்டான்...'' என்றாள்.

''அய்யய்யோ... வேணாம். நீ பார்த்த எதையாவது கற்பனை பண்ணிக்கிட்டு அவனைப் போய்க் கேட்டுக்கிட்டு வச்சுடப் போறே... முன்ன பின்ன தெரியாத பொண்ணுக்கு எப்படி இப்படி உதவி செய்திருக்காரு? இதுவே அதிகப்படி...''

''சரி. நான் அப்படி ஒரு யோசனையை அவனுக்குச் சொல்லலை... சப்போஸ் அவனே உன்னை லவ் பண்றேன்னு வெச்சுக்கோயேன். எங்கிட்ட சொல்லி உன்னைக் கேக்கச் சொல்றான்னும் வெச்சுக்கோ. அப்ப சம்மதிப்பியா?''

''எனக்கு இந்தப் பேச்சே பிடிக்கலே மதுரம்... நீங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்ல மனுஷங்க. அதான் இப்படியெல்லாம் பேசறே நீ. என்னை விட்டுடு மதுரம்!''

''அப்படின்னா, இப்படியே இருந்துடப் போறியா?''

''ஆமா.''

''அந்த நாசிப்பன் மேல உனக்கு இன்னும் லவ்வா?''

''இல்லே. அந்தாளு பேச்சையே எடுக்காதே மதுரம்... எனக்குப் பத்திக்கிட்டு வருது. அவன் மேல இப்ப என் மனசுல இருக்கிறதெல்லாம் வெறுப்பும் ஆத்திரமும்தான்.''

''அப்ப ரொம்ப ஈஸி சத்தியா!''

''எது?''

''எங்கண்ணா மாதிரி ஒரு ஜென்டில்மேன் உன்னை லவ் பண்ணினா, அவனுக்கு ஆதரவா நடந்துக்கறது...''

''என்னைக் குழப்பாதே மதுரம்! வேணாம். ஒங்கண்ணன் எம்புட்டு நல்லவரு..? அவருக்கு வர்ற மனைவி பத்தரைமாத்துத் தங்கமா இருக்கணும். என் மாதிரி இல்லே.''

8

சத்தியவதியால் அன்றிரவு உறங்க முடியவில்லை. மனம் பெரும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. சிவகுரு வேண்டுமென்றே தான் அந்தக் கதையைக் கொடுத்து அனுப்பி இருந்திருக்க வேண்டும் என்று உள்ளுணர்வாய்ப் பட்டது. மதுரத்திடம் தெரியாது என்று மறுத்தாலும், உண்மை வேறு என்று உள்மனம் வாதிட்டது. தன் வாழ்வில் மறுபடியும் ஒரு திருப்பம் விளையப் போகிறது என்று உள்ளுணர்வு தோற்றுவித்த பரபரப்பினால் தான் அவளால் உறங்க இயலாது போயிற்று.



இரண்டு நாட்களில் சிவகுருவின் கடிதம் வந்தது...

'அன்புள்ள சத்தியாவுக்கு,

நலந்தானே? நான் நலம்.

உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவே இக்கடிதம். நான் படிக்கக் கொடுத்தனுப்பிய கதையிலிருந்து என் உள்ளக்கிடக்கையை ஓரளவுக்கேனும் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். கதையைப் பற்றி நீங்கள் எதுவுமே சொல்லவில்லை என்று மதுரம் சொன்னாள். ஒருவேளை, உங்கள் மனம் அந்தக் கதையால் புண்பட்டிருக்குமோ என்று அஞ்சுகிறேன். அப்படியானால், மன்னிக்க வேண்டுகிறேன்.

நான் அதைக் குறிப்பாக அனுப்பியதன் நோக்கம் என் மனமும் அந்தக் கதையின் நாயகனுடையதைப் போல் உங்கள் மேல் அன்பு கொண்டிருப்பதை உணர்த்த வேண்டித்தான். ஒருதரம் காதலித்துவிட்டால் ஒரு பெண் அப்படியே மூலையில் உட்கார்ந்துவிட வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. நான் உங்களை மணக்க விரும்புகிறேன். பழைய வாழ்க்கை பழ

சாக இருக்கட்டும். அதை மறந்து நீங்கள் என்னை மணக்கச் சம்மதித்தால் நான் பெரிய அதிர்ஷ்டக்காரன் என்று என்னைக் கருதி மகிழ்ச்சியடைவேன். தற்செயலாய் உங்களுக்கு ஒரு சின்ன உதவி செய்ய நேர்ந்ததைச் சாக்காகக் கொண்டு நான் இப்பேருதவியை உங்களிடமிருந்து பறிக்க முயல்வதாய் எண்ண வேண்டாம். அப்படி ஒரு நன்றிக்கடன்பட்டு எனக்கு நீங்கள் இணங்குவதில் எனக்குச் சம்மதமில்லை. உங்கள் மனம் என்பால் கனிந்து என்னை ஏற்பீர்களாயின், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். அத்தகைய மனநிலை தற்சமயம் உங்களுக்கு இல்லாதிருந்தாலும், அது குறித்துப் பரவாயில்லை. உங்கள் மனத்தில் என்பால் அன்பு கனியும்வரை என் கதையின் நாயகனைப்போல் நானும் நீண்ட நாள் காத்திருப்பேன். நன்றி. வணக்கம். நன்கு யோசித்து, நிதானமாய் உங்கள் பதிலைச் சொல்லுங்கள். கடிதம் எழுதினாலும் சரி அல்லது மதுரத்திடம் சொன்னாலும் சரி.... அன்புடன், சிவகுரு.'


அன்று மாலை சத்தியவதி சிவகுருவின் கடிதத்தை மதுரத்திடம் காட்டினாள்.

''என்ன சொல்லப் போறே? - எங்கண்ணு மனசை முறிச்சுடாதே சத்தியா! அவனை மாதிரி நல்ல ஆம்பளை அபூர்வம். அவனை இழந்துடாதே. ஒரு சிநேகிதிங்கிற முறையில் அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.''

''யோசிச்சு சொல்றேன் மதுரம்!''

மதுரத்தின் உதடுகள் மகிழ்ச்சி நிறைந்த புன்சிரிப்பால் வளைந்தன.

''யோசிக்கிறேன்னு சொல்றே இல்லே? அது போதும் இப்போதைக்கு யோசி... நல்லா யோசி. ஆனா உன் முடிவு எங்கண்ணு மனசை முறிக்காத முடிவாத்தான் இருக்கணும். தெரிஞ்சுதா?'' என்று ஆணை இடுகிற குரலில் அறிவித்த மதுரம்,



அவள் யோசிக்கிறாள் என்பதே நம்பிக்கைக்குரிய பதிலை அவள் சொல்லப் போகிறாள் என்பதை உணர்த்தியதால், உற்சாகத்துடன் சத்தியவதியை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

தி இதயம் பிரிண்டர்ஸில் அச்சிட்டு, இதயம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்—
ஆசிரியர் : மணியன்
உதவி ஆசிரியர் : 'சுபாஷிணி,
முகவரி : S—7, திரு.வி.க. தொழிற்பேட்டை, தபால் பை எண் · 1159, கிண்டி, சென்னை—32

தன்னுடைய கற்பனை வளத்திற்கும் வரம்பில்லை என்று நிரூபித்திருக்கிறார் திலகவதி!

லோ.க. உதயன்,
வைதீசுவரன்கோயில்.

'ஒரு மனிதனுக்குக் கடைசி வரைக்கும் அவனது இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கெடுத்துத் துணை நிற்பவள் அவன் துணைவியே. மற்றவரெல்லாம், அவன் பிள்ளைகள் உட்பட, சுயநலம் கருதுபவர்களே. அவன் நலம் கருதுபவர்களல்ல என்ற யதார்த்தமான கருத்தை நயம்பட உரைத்த நல்லதொரு குடும்பக் கதை 'வானத்துக்கு வரம்பில்லை.'

கே. சுப்பிரமணியன்,
திருப்பரங்குன்றம்.

தமிழ், புகழ், இசையமுது என்றெல்லாம் கதாபாத்திரங்களுக்குப் பெயரிட்டு வாசகர்களிடையே திலகவதி ஊட்டியுள்ள தமிழ்ப் பற்றுக்கு மட்டும் வரம்பு உண்டா என்ன?

எஸ். வாசுதேவன்,
சென்னை—14.

துபாஷ் போன்ற (அரிதான கதாபாத்திரம்) நண்பர்கள் இன்றைய வாழ்க்கையில் ஒருசிலருக்கே வாய்க்கிறார்கள்.

எஸ். வெங்கடேசன்
திருக்கோவிலூர்.

நாவலைப் படித்துவிட்டு, எரிச்சலின் எல்லைக்கே சென்று விட்டேன்.

எஸ்.கே. சொர்ணசௌந்தரி,
சிவகங்கை.

ஏதோ நம் பக்கத்து வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பது போல இருந்தது. ஆனால் இக் கதையின் மூலம் ஆசிரியர் என்ன சொல்ல நினைக்கிறார் என்பது தெரியவில்லையே?

டி. கிருபாசங்கர்,
பண்ருட்டி.

வாழ்வில் எத்தனை இன்ப—துன்பம் நேர்ந்தாலும் அதை மனைவியே பகிர்ந்து கொள்கிறாள் என்பதை ராஜவேலு பாத்திரம் அருமையாக உணர்த்தியது.

கோமல் தமிழ்க்குயில்,
பிச்சப்பாக்கம்.

என்னதான் இருந்தாலும் ராஜவேலு மறு திருமணம் செய்து கொண்டு குழந்தைக்குத் தந்தையாவது வரவேற்கத் தக்கதல்ல.

ஆர். தினகரச்செல்வி,
திருக்குவளை.

அட்டைகாசம்!

அட்டையில் குஷ்பூ அட்டகாசம் போங்க!

வை.ஆ. நேசன்,
வைதீசுவரன்கோயில்.

குஷ்பூவைப் பற்றி டைரக்டர் எஸ்.பீ. முத்துராமனும், டைரக்டர் பிரதாப்பும் மிக உயர்வாகவே குறிப்பிட்டிருந்தது மனதைக் கவர்ந்தது.

கே. வேல்சாமி,
மதுரை—1.

மாலை வந்தால் பயம்

காயத்ரி:

"உன் பயம் வீணானது, காயத்ரி. இதெல்லாம் ரொம்பச் சாதாரணமான விஷயம். வைட்டமின் குறைவினால் ஏற்படும் தற்காலிக அசௌகரியம். மாத்திரைகளை எழுதித் தரேன். சாப்பிடு. பத்தே நாளில் சரியாகிவிடும்." என்ற டாக்டர் சுகுமாரி வெள்ளைக் கோட்டில் சிவப்பு ரோஜாவை ஒற்றையிலையுடன் குத்தி இருந்தார். 'பூவைப் பார்த்தால் பிரியம் வரும். அப்புறம் அப்புறம் பேச்சில் நம்பிக்கை வரும்.' என்பது அவளுடைய சத்தியமான தத்துவம். மேஜைக் கண்ணாடியின் கீழேயும் மஞ்சள் ரோஜா வண்ணப்படம் வைத்திருந்தார்.

"வீட்டில் விஷயம் தெரிந்சா என்ன ஆகும்?"

"உங்கம்மாவை எனக்குத் தெரியும். சின்ன ஜலதோஷம் இருமல் வந்தால்கூட டி.பி. ஒரே பக்கம் சாய்ந்து படுக்ககினால் நெஞ்சு சதை சுளுக்கிக் கொண்டு சரிலென்றால் ஹார்ட் அட்டாக். அப்புறம் தலைவலிச்சா ப்ரெயின் ட்யூமர். வயிறு கலங்கினால் அல்சர், கற்பனை வியாதிகள் அதிகம். நீ சின்னக் குழந்தையாக இருந்தப்ப பால் கட்டிக் கொண்டு விட்டதற்காக 'மார்பில் புற்று நோயா?'ன்னு வந்து நின்று நடுங்கினாள் தெரியுமோ. இப்போதைக்கு எதையும் சொல்ல வேண்டாம். சமயம் பார்த்து நான் பக்குவமாகச் சொல்லிக்கிறேன்."

"ஆனா.... மாலையானால் பயம் வருகிறதே டாக்டர்."

''அம்மாவுக்கேற்ற பெண் என்று நிரூபிக்கப் பார்க்காதே. சாயங்காலம் இருட்டறதுக்குள்ளே ரூமுக்குப் போயிடு. விடியும் வரை வெளியே வராதே. தேர் எண்ட்ஸ் த மேட்டர்.''

எதையோ சொல்லத் தயங்கிய காயத்ரி, டாக்டரின் முறைப்புக்கு எழுந்தாள்.

''காலேஜ் டே'யாமே? இன்விடேஷன் வந்ததே? ஓல்ட் ஸ்டூடண்ட் ஐயாம்.''

''நானும் நடிக்கிறேன், மேடம். ஒன் ஆக்ட் ப்ளே. பிரசினையில்லை. என் புரோகிராம் நாலரை மணிக்கே ஆரம்பிச்சு, பதினைந்தே நிமிஷத்தில் முடியும்.''

''தென் இட் ஈஸ் ஓ.கே.'' டாக்டர் சொன்னார். ''உன் நிகழ்ச்சியைப் பார்க்க எனக்குத்தான் சந்தர்ப்பமில்லை. ஆபரேஷன் ஒன்று ஏற்பாடாகி இருக்கிறது.'' கை நீட்டினார். ''உன் நிகழ்ச்சியின் வெற்றிக்கு வாழ்த்துக்கள்.''

''தாங்க்யூ மேடம்.''

''போய் வா,'' என்ற டாக்டர் காலடியில் எதையோ அழுத்தியிருப்பார் போலிருக்கிறது. சட்டாரென்று கதவைத் திறந்து உள்ளே வந்த புது பேஷண்ட் இவளைப் பார்த்துத் தயங்க...

''நீங்க வாங்க. நான் கிளம்பியாச்சு,'' என்றவள் ஹாலைக் கடக்கும் போது காரணமில்லாமல் பயம் நெஞ்சைத் துழாவ மெல்லத் திரும்பி பார்த்தாள். கதவைச் சரியாக சாத்த வந்த டாக்டர் இவளைப் பார்த்து, ''இன்னுமா நீ போகலே?'' என்றதும் வெளியேறிப் போனாள்.

போர்டிகோவில் இறங்கித் தோட்டச் சாலையில் திரும்பி நடக்கும்போது, நின்றிருந்த காரைக் கடக்கும்போது அது திடீரென்று ஹாரனை வீறிடவே பயந்து திரும்பினாள். ரமேஷ்! வெறும் கையில் காற்றை வீசிக் கொண்டு கண்களில் சலிப்பைக் காட்டினாள்.

''நீ உள்ளே போகிறதைப் பார்த்தேன். அப்பலேர்ந்து காத்துக் கிட்டு இருக்கேன். அதென்ன இவ்வளவு நேரம் டாக்டர் கன்சல்டேஷன்?''

''அதுவா? நான் கல்யாணத்துக்கு எலிஜிபிளான்னு கேட்கப் போனேன். 'நோ'ன்னு சொல்லிட்டாங்க. நீ வேற பொண்ணைத் துரத்தேன்.''

''முறை மாப்பிள்ளையைப் பார்த்து வேற பொண்ணைத் துரத்தச் சொல்ற முதல் பெண் நீயாகத்தான் இருக்கும். என்னை ஏன் வெறுக்கிறே காய்.''

''இந்தா! இந்தக் காய், பழமெல்லாம் வேண்டாம். முழுசாகப் பெயரைச் சொன்னால்தான் பதில் கிடைக்கும்.''



''வெறுக்கிறேனா? இல்லையே, மறுக்கிறேன். அதில் பார் ரமேஷ்... நீ எனக்கு அத்தை மகனாக இருக்கலாம்! கல்யாணம் பண்ணிக்க உரிமையும் இருக்கலாம். ஆனாலும் எனக்கென்று தன் விருப்பு வெறுப்பு இருக்கிறதில்லையா?''

''இருக்கணும். ஜனநாயக நாடாச்சே. அப்ப என்னை என்ன கேள்வியே கேட்காமல் செத்துப்போ என்கிறாயா? இன்றா நேற்றா? நீ பிறந்து வளர்ந்த இந்தப் பதினாறு வருஷமாக உன்னோடயே எனக்குள்ளே வளர்ந்த ஆசையாச்சே. அதற்கும் ஒரு மதிப்பு வேண்டாமா?''

''வரேன்.''

''எனக்குப் பதில் சொல்லிட்டுப் போ.''

''நரகத்துக்குப் போ.''

''அதாவது நீ இல்லாத இடத்துக்குப் போகச் சொல்கிறாயாக்கும்.''

''இதோ பார் ரமேஷ். இனிமேலும் உன்கிட்டே எதையும் மறைக்க நான் தயாராயில்லை.''

''எதையும்?'' என்று கேட்டுக் கண் அடித்தவன் அவள் அடிக்க வர ஒதுங்கி நின்று சிரித்தான். ''சரி, சொல்லு, நான் கேட்கிறேன்.''

''எனக்கு ஒரு காதலன் இருக்கிறான். என் எதிர்காலத் துணையை நானே தேர்ந்தெடுத்துக்கிட்டேன்.''

''ஓ! கமான் யா! இதெல்லாம் சம்பிரதாயமான வார்த்தைகள். நம்பறதுக்கு நான் தயாராயில்லே.''

''இப்ப டாக்டரைப் பார்த்து வந்தேனே, ஏன் தெரியுமா? கருக் கலைப்புக்குத் தேதி வாங்கினேன். அடுத்த வெள்ளிக் கிழமை காலையிலே வெறும் வயத்தோட வரச் சொன்னாங்க,'' என்றவள் அவன் முகத்தில் அதிர்ச்சியை எதிர்பார்த்து ஏமாந்தாள்.

''கலைக்கத்தானே போறே? கவலையே படாதே. உனக்கு இன்னொரு கரு தருகிற பொறுப்பு என்னுடையது. பயப்படாதே. கல்யாணத்துக்கு அப்புறம்தான்.''

மெலிதாகத் தலையிலடித்துக் கொண்டாள் காயத்ரி.

வீட்டுப் படியேறும்போதே அம்மா கத்தினாள். ''நில்லு. அங்கேயே நின்னு, குடும்ப மானத்தைக் காத்திலே பறக்க விட்டுட்டு என்ன துணிச்சலிருந்தால் வீட்டுக்குத் திரும்பி வருவே? ஏன்? அப்படியே செத்து ஒழியறதுதானே?'' என்ற அம்மாவை ஒதுக்கிவிட்டு உள்ளே பார்த்தாள். நினைப்பு சரி. உள்ளே ரமேஷ். காப்பியோ டீயோ ஆற்றிக் கொண்டிருந்தான்.

''வந்தாச்சா? நினைச்சேன்.''

''உன் பஸ்ஸை விட என் கார் வேகம் அதிகமாக்கும். நிற்காம வந்து வத்தி வச்சிட்டேன். இப்ப மாட்டிக்கிட்டு முழி.''

அலட்சியப் படுத்தி நடக்க—

அம்மா, ''நில்லுடி அங்கேயே. வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வச்சே கால வெட்டி பாய்லர்லே போட்டிருவேன்.''

''ஏம்மா? கரி தீர்ந்து போச்சா?''

''நில்லுன்னு சொன்னேன். எனக்குப் பதில் சொல்லிட்டுப் போ. என்னென்னமோ சொல்றானே, நிஜமா?''

''என்ன சொன்னார்ன்னு தெரியாமல் அதெப்படி யம்மா ஆமாம்னோ இல்லைன்னோ சொல்ல முடியும்? முதல்ல அவன் சொன்னதைச் சொல்லு.''

''டாக்டரைப் பார்க்கப் போனியா?''

''ஆமாம்.''

''அடிப் பாவி! எத்தனை துணிச்சல்! ஏண்டி, கரு கலைக்கிறது உனக்கு அவ்வளவு சுலப சாத்தியமாகவா போச்சு?''

''ஃபூல் மாதிரி பேசாதே. நான் டாக்டரைப் பார்க்கப் போனதாகத்தானே சொன்னேன். கரு கலைப்பைப் பற்றி எதையும் சொல்லலையே.''

''சொல்றானேடி.''

''அவன் சொல்லிட்டா ஆச்சா? நான் இன்னமும் கன்னி கழியாத பெண்ணுன்னு என்னால் அதே டாக்டரை வச்சு நிரூபிக்க முடியும். நான் கர்ப்பம்னு இவனாலே நிரூபிக்க முடியுமா? முடியும்னா சொல்லு, இவனையே கட்டிக்கிறேன்.''

''பல்லிலே போடுவேன். அவன்னு சொல்றியா?'' என்றவன் திணறலாகக் கேட்டான். ''நீதானே சொன்னே? அபார்ஷனுக்கு தேதி வாங்கப் போனேன்னு.''

''அப்படிச் சொன்னாலாவது எச்சில் பாண்டம்னு ஒதுங்கிடுவேன்னு பார்த்தேன். நீ சரியான கல்லுளி மங்கன்.''

''நீதான் பொய்யின் மொத்த வடிவம்.''

''பேசாதே.''

''நீ பேசாதே.''

''வாசல்லே நின்னு ஏண்டி பிரம்ம ராட்சசி மாதிரி கத்தறே? உள்ளே போய்த் தொலை.''

''அப்படி வா, வழிக்கு. நகர்.''

சாப்பிடும் போது அப்பா கேட்டார். ''அவனை ஏன் தவிக்க விடறே காயத்ரி? அவனுக்கென்ன குறைச்சல்? ஸி.ஏ.''

''பாஸானால்தான் ஸி.ஏ. ஆகட்டும் பார்க்கலாம்.''

''பார்த்தீங்களா மாமா? கேட்டீங்களா அத்தை' அவ யாரையோ காதலிக்கிறா. அதான் இப்படி விலகிப் போகிறா.''

''என்னம்மா?''

''அதெல்லாம் இல்லேப்பா.''

''சொல்றானேம்மா ''

''நான் இவனைத் தவிர்ப்பதற்காகச் சொல்கிற நிறைய பொய்களல்ல இதுவும் ஒண்ணு.'' மனச்சாட்சி மட்டும், 'ஏய்! புளுகி' என்றது. இக்னோர் இட்.

''இருடி, மோர் சாதம் சாப்பிட மாட்டியா?''

''வேணாம்மா. குமட்டறது.''

''என்ன அது?'' என்று அம்மா பெரிய எழுத்தில் அலறவே சிரித்தாள்.

''நீ நினைக்கிற குமட்டலில்லே. அத்தானைப் பார்த்தாலே குமட்டறதுன்னு சொன்னேன்.'' வாஷ் பேஸினில் கையலம்பினாள்.

படுக்கையறைக்குப் போய்ப் புடவையைக் கலைத்துப் போட்டாள். மாக்ஸிக்குள் புகுந்தாள். கண்ணாடி முன்னால் அமர்ந்து இரட்டைப் பின்னல்களை அவிழ்த்து தலையை உதறிப் பரவ விட்டாள். டேப்ரெக்கார்டரைப் போட்டுக் கொஞ்ச நேரம் இளையராஜாவின் கம்யூட்டர் செய்த வெஸ்டன் இசையை இழைய விட்டாள். பருவுக்கு ஏற்றது என்று டி.வி. சொன்ன பேஸ்ட்டை முகத்தில் தேய்த்துக் கொண்டாள். கழுத்துக்கும் கண்களுக்கும் மெலிதாக மசாஜ் ஏற்றியபடி கண்ணாடி பார்த்த போது பின்னால் அப்பா தெரிந்தார். விருட்டென்று திரும்பினாள்.

''ஆச்சரியமெல்லாம் நடக்கிறது.''

''நான் உன் ரூமுக்கு வருகிறதைச் சொல்கிறாயா? என்ன செய்வது? சூழ்நிலை அப்படி. தேவை துரத்துகிறது.''

அடர்த்தியான கூந்தலை விரல்களால் அளைந்தவாறு கேட்டாள். ''என்னப்பா விஷயம்? இன்னும் தூங்காமல் இங்கே வந்து நிக்கறீங்க?''

''உங்க அத்தை போன் பண்ணினாள்.''

''இப்பவா?''

''இல்லே. மதியம் ஆபீசுக்குப் போன் பண்ணினாள். ரமேஷோட அப்பாவுக்கு ஏதோ ஹார்ட் ப்ராப்ளமாம். அவர் இருக்கறச்சயே பையன் கல்யாணத்தைப் பார்க்கணும்னு ஆசைப் படறாராம். என்ன சொல்றேன்னு கேட்கிறா.''

''அப்படியொரு அவசரம்னா கேள்வி என்ன? பேசாம நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணத்தை முடிச்சி வேண்டியதுதானே?''

''அதை நீ சொல்லக் கூடாதில்லே? அது அவங்களுக்குத் தெரியும். நீ உன் வரைக்கும் பேசு. நிச்சயமா அவன் வேணாம்னே தீர்மானம் பண்ணிட்டியா?''

''அப்பா, உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும். கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''சொல்லு.''

''அத்தானோட இரண்டாவது ஸ்டேட்மெண்ட் உண்மை. நான்... டாடி, ஐயாம் இன் லவ்.''

அப்பா பார்வையில் கேள்வி வந்தது.

''என்னோட கிளாஸ்மெட் சுமதியோட அண்ணன் ஆதர்ஷ்,'' என்றாள்.

ஆதர்ஷ்:

மேஜை விளக்கைப் போட்டு ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்த ஆதர்ஷ் ஃபைல் திடுதிப்பென்று பிடுங்கப்பட்டதும் நிமிர்ந்தான்.

''ஏய் சுமதி, உதை கேட்கிறதா? கொடு அந்த ஃபைல்களை.''

''என்.ஜி.ஓ. மாதிரி வீட்டிலேயும் என்ன ஃபைல்? எனக்கு உன்னோட பேசணும்.''

''லஞ்சம்?''

''காப்பி தானே? கேட்பாய்ன்னு தெரிஞ்சு கையோட போட்டுக் கொண்டே வந்துட்டேன். இந்தா.''

கோப்பையை வாங்கி வைத்தான். ''சொல்லு.''

''நாளைக்குக் காலேஜ் டே. நான் டான்ஸ் ஆடப் போறேன். மோகினி ஆட்டம்.''

''மோகினிப் பிசாசு ஆட்டம்னு சொன்னால் பொருத்தமாக இருக்கும். ஏய்... ஏய்... இரு.... இரு....'' அவள் எடுத்த காப்பிக் கோப்பையை மறுபடியும் பிடுங்கி வைத்தான். ''டேக் இட் ஈஸி. போன வருஷம் ஆடினியே, கதக்களி நல்லாவே இருந்தது. ஏய்.... அழ ஆரம்பிச்சிடாதே திடுதிப்புன்னு. ஏன்? என்ன ஆச்சு இப்ப?''

''போன வருஷம் நான் ஆடினது ஒடிஸி.''

''சரி. ஏதோ ஒண்ணு. நாளைக்கு ஆடறே, சரி. அதுக்கு டிரெஸ் வாங்கப் பணம் வேணுமா?''

''அதெல்லாம் வாங்கியாச்சு. நீ வந்து முதல் வரிசையில் உட்காரப் போகிறே.''

''ஸாரி டியர்! ஆடிட்டிங் நேரம். ஆபீஸை விட்டு நகர முடியாது.''

''நீ வரே.''

''எத்தனை மணிக்கு?''

''நாலரை மணி ஷார்ப்.''

''தலைமை யாரு?''

''மாண்புமிகு அமைச்சர்.....''

''அப்ப சரி. ஏழு மணிக்கு வரேன், போ.''

''எதுக்கு? சேர் எடுத்துப் போடவா? சாப்பிட்ட ஜேஜைகளைத் துடைக்கப் போறியா? நாலரை மணி

புரோக்கிராம்மை மிஸ் பண்ணக் கூடாது. உன் டார்லிங் நடிக்கிற ஒன் ஆக்ட் ப்ளே.''

''அப்படியும் ஏழு மணிக்குத்தான் வருவேன். முதல் நிகழ்ச்சியிலேர்ந்து பார்ப்பேன்.''

''எப்படி? எப்படி?''

''நீ சொன்ன மாஞ்புமிகுவைப் பற்றி எனக்குத் தெரியும். நேரத்தோடு நிகழ்ச்சிக்குப் போனால் கொலை செய்யப்படுவாய்னு யாராவது அவரை மிரட்டி இருக்கணும்னு நினைக்கிறேன். அதனாலே நிச்சயமா சொல்கிறேன் ஏழு மணிக்கு வந்து முதல் நிகழ்ச்சியிலேர்ந்து பார்ப்பேன்.''

''ச்சீய்! அதெல்லாம் நேரத்தோடு வருவார். வரேன்னு ஒத்துக்கிட்டிருக்கார். நாலரை மணிக்கு உன்னை எதிர்பார்க்கிறேன்.''

''சரி, வரேன்.''

''நீ வந்தால் காயத்ரி சந்தோஷப் படுவாள்.''

''மாலை போட அனுமதியுண்டா? மேடையிலே அத்தனை பேரைச் சாட்சி வச்சு மாலை கொணரவா?''

''வேணாம். மலர்க் கொத்து கொண்டு வந்தாலே போதும்.''

''இரக்கமேயில்லாத ராட்சசி.''

''மரியாதை தெரியாத எருமை ஜாதி.''

''ஆமாம், உன் பிரின்ஸிபால் சோழிப் பல்லழகி மிஸஸ் ஜனா.''

''சொல்றேன்.'' சுட்டு விரலைக் காட்டி எச்சரித்தாள். ''சொல்றேன்னேன்.''

''அய்யோ வேணாம்மா. அப்ப நான் வரவே மாட்டேன்.''

''யூ ஆர் த லூசர். உனக்கு ஓர் இனிமையான வேலையைத் தரலாம்னு இருந்தேன்.''

''என்ன அது?''

''காயத்ரி சீக்கிரமா அவள் புரோகிராமை முடிச்சிட்டு உடனே கிளம்பிடுவாள். அவளை உன் காரில் கொண்டு போய் வீட்டில் விடச் சொல்லலாம்னு இருந்தேன். பாவம், நீ பிஸி மேன். உன் வேலையைப் பார். வர வேண்டாம்.''

''நோ... நோ. நான் வரேன். காயத்ரியைப் பார்த்து நான் தான் ஆதர்ஷ்—யுவர்ஸ் சின்ஸியர்லின்னு சொல்லப் போகிறேன்.''

சிரித்தாள். ''அலையாதே. அலையாதே!''

மறு தினம் காலையிலேயே பரபரப்பாக இயங்கினான் ஆதர்ஷ். போன் செய்து அவசரமாக நேரம் வாங்கி,

சேளாவுக்குப் போய்ப் பாதாளத்தில் முடி திருத்திக்கொண்டான். நகத்தை வெட்டச் சொன்னான். (அப்பா! புலி நகம்! இப்படியா கிள்றது? ரத்தம் வருது பார்!) பத்து நிமிடம் நீச்சலுக்கு எடுத்த பசிக்கு வீட்டுக்குப் பறந்து வந்து அவசரமாக டிபன் சாப்பிட்டான். காரியதரிசி (பெண்) போன் செய்த போது, ''என் காரியதரிசி பெண் யந்திரமே. காலையில் கூப்பிடாதே. எனக்கு என்னமோ போலாகிவிடும்.''

''ஸாரி ஸார். சாயங்காலம் இருந்த லையன்ஸ் கிளப் மீட்டிங் ரத்து என்கிறார்கள்.''

''வ்... வாவ்! என் சார்பில் வெங்கட்ராமனுக்கு போனில் சிறப்பு நன்றி சொல்லிவிடு. லாஸ்ட் எம்பரர்! புது காஸெட்டை வாங்கிவை.'' (மனசுக்குள் வந்துநின்ற காயத்ரி கேட்டாள். எங்க லைப்ரரி பிரிண்ட் தெளிவாக இல்லை. ஒரிஜினல் கிடைச்சால் வாங்கிக் கொடேன், ப்ளீஸ்!)

''யெஸ் ஸார்!'' என்றவளின் குரலில் கொட்டாவி தெரியவே, ''என்ன பகல்லேயே தூக்கம்? புதுப் புருஷன் ராத்திரி தூங்க விடலியா?'' என்று கேட்டுப் போனை வைத்தான்.

ஆபீசுக்குள் சிரித்துக் கொண்டே போனவன் சிரிப்பு வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த ஷீலாவைக் கண்டதும் உதட்டிலேயே உறைந்தது.

ஷீலா. ''காலையிலிருந்து உன் ஞாபகம். வந்துட்டேன்,'' என்றாள். ''தொல்லையில்லையே?''

''காலையிலே என்ன காதல் நினைப்பு? அதுவும் தவிர்க்கப் பார்க்கும் என்கிட்டே? அய்ங்?''

''முயற்சி திருவினையாக்கும்.''

''கத்திரிக்காய்! த பார் ஷீல்ஸ். நான் ஏற்கனவே இன்னொருத்திக்கு மனசைப் பறி கொடுத்து நிற்கிறேன். தொல்லைப் படுத்தாதே. உனக்கு நல்லதொரு குணவான் கிடைப்பான்.''

''ஆசீர்வாதமா?''

''இல்லே, ஆளை விடு என்று அர்த்தம்.''

''உன்னை எப்படி மடக்கணும்னு எனக்குத் தெரியும். செஸ் ஆட்டத்திலே நான் எக்ஸ்பர்ட் யூ நோ? நடுவில் ஒரு 'க்' சேர்க்க ஆசைதான். அதற்குத்தான் உன் உதவி தேவை.''

முறைத்தவாறு உள்ளே போனான். விடாமல் பின் தொடர்ந்து உள்ளே வந்தாள். ''உன்னிடம் ஏதோ கவர்ச்சிகரமான வித்தியாசம் தெரிகிறது. சும்மா முறைக்காதே. யூ லுக் சார்ஜியஸ் டுடே'' கேட்டாள். ''என்ன விசேஷம்? ஹலோ?''

''இன்னுமா நீ போகல்லே?''

''போகிறதாக இல்லை. முதலில் வாக்குக் கொடு. சாயங்காலம் என்னைச் சந்திக்கிறாய்.''

''சாயங்காலம் லயன்ஸ் கிளப் மீட்டிங் இருக்கு. ஸாரி.''

''அது கேன்சல். எனக்குத் தெரியும். என் அப்பாவும் அந்தக் கிளப்பிலே ஒரு சிங்கம். வேற பொய் சொல்லு.''

''என்னை விட்டுடேன். உன் துபாய் மாமன்தான் தங்கத்தாலேயே மாலை கட்டித் தயாரா இருக்கிறானே.''

''ஷிட்! அவனும் அவன் நிரந்தர ஜலதோஷமும். உவ்வே! உன் வழி வராது. கண்ணா, நீ ஆணழகன். கம்பீர கந்தர்வன். ஹேண்ட்ஸம் பிக்.''

''காயத்ரிக்குத் துரோகமா? செய்யவா? நெவர்.''

''அதனாலென்ன? என்னைக் கல்யாணம் பண்ணிக்க. அவளை வச்சிக்க.''

''தப்பாகப் பேசாதே. எனக்குக் கோபம் வரும்.''

''அப்ப மாத்திக்கிறேன். அவளைக் கல்யாணம் பண்ணிக்க. என்னை வச்சிக்க.''

''மோசமான பெண். நீ இப்படியா பச்சையா பேசறது? ஸ்டுப்பிட்.''

''சாயங்காலம் வரேன். சந்திக்கிறேன். ஸீ யூ!'' கண் அடித்தாள். ''நீ எங்கே போனாலும் கண்டுபிடிச்சு உனக்கும் முன்னால் நான் போய் நிற்பேன்.''

தலையைப் பிடித்துக் கொண்டான்.

ஆர்டர் கொடுத்து வரவழைத்த ரோஜா கொத்து ஜரிகை காகிதத்துக்குள்ளே ஜொலித்தது. மேஜை மேல் குத்தி இருந்தது.

''சார்....'' செகரட்டரி இண்டர்காமில் வந்தாள். ''ஒன் மிஸ்டர் ரமேஷ் உங்களைப் பார்க்கணும் என்கிறார் அனுப்பவா?''

''வேண்டாம். நான் நாலு மணிக்கெல்லாம் கிளம்பிடு வேன். இரு, என்ன விஷயமாம், கேட்டாயா?''

''பர்சனல் என்கிறார். பத்தே நிமிஷம் போதுமாம்.''

கைக் கெடியாரத்தைத் திருப்பிப் பார்த்துச் சொன்னான். ''வரச் சொல்லு.''

உள்ளே வந்த ரமேஷ் இருபதைத் தாண்டியிருந்தாலும் தோற்றத்தால் டீன்-ஏஜையே காட்டினான். இன் பண்ணிய சட்டையுடன் ஒடிசலாக அதே சமயம் உறுதியாகத் தெரிந்தான். ரஜனியின் பாதிப்பைத் தலைமுடியில் தக்க வைத்திருந்தான். தங்கத்தாலான மெலிசான சங்கிலி மார்புப் பகுதியில் அடிக்கடி காட்டி ஒளிந்து கொண்டது. ரிம்லெஸ் கண்ணாடி அணிந்திருந் தான். சிகரெட் கறுப்பு இல்லாமல் இயல்பான நிற உதடுகள். சிரிக்கும்போது பளீரென்ற கீழ் வரிசைப் பற்கள்.

''இனிய காலை....''

''நோ. அநேகமா இனிய மாலையாகிவிட்டது. தெளிவுரை பதவுரையெல்லாம் இல்லாமல் சுருக்கமாக உன்னை

அறிமுகப்படுத்திக் கொள்.''

''ஒரே வார்த்தையில் அறிமுகப்படுத்திக் கொள்ளுவேன். வில்லன்.''

''பார்டன்?''

''உங்களுக்கு வில்லன்னு சொன்னேன். என் முறைப் பெண் காயத்ரி.''

''ஓ!''

''அவள் சொன்னாளா, நானும் அவளும் காதலர்கள்னு? சொல்ல மாட்டாள். மகா அழுத்தக்காரி, சார். அவளுக்காகப் பதினெட்டு வருஷமாகக் காத்திருக்கிறேன்.''

''அவள் வயசே பதினெட்டு வருஷம்னு நினைக்கிறேன். அப்போ அவள் பிறந்த நாளிலேர்ந்து காதலிக்கிறதா அர்த்தமா?''

''ஆனால் உண்மை. உங்கள் வயசுக்கும் சம்பாத்தியத்துக்கும் எத்தனையோ நல்ல பெண்கள் கிடைப்பாங்க. என்னவளை விட்டுடுங்களேன்.''

''சர்ச் மீ. நான் ஒளிச்சு வைச்சிட்டில்லே. ஒண்ணு சொல்லட்டுமா, சுரேஷ்?''

''ரமேஷ்.''

''ஓ.கே. ரமேஷ். காதல் தானாகக் கனியணும். வற்புறுத்தல் எல்லாம் கூடாது. முறைப் பெண் என்கிறே. அங்கே பேச வேண்டியதை இங்கே வந்து ஏன் பேசறே?''

''அங்கே பேச முடியாது என்கிறதாலேதான். ரெண்டு நிமிஷம் கொடுத்தால் என் தன்னிலை விளக்கம் சொல்வேன்.''

''ஸாரி. இப்ப நேரமில்லே. செகரட்டரிகிட்டே நேரம் வாங்கி அப்புறமாக வந்து சந்தி. நான் அவசரமாக ஓடறேன்.'' அவன் போனதும் சிரிப்புடன் சொல்லிக் கொண்டான். ''இன்னொரு ஷீலா!''

மூன்றரை மணிக்கு சுமதி போனில் வந்தாள். ''அண்ணா, இன்னுமா நீ கிளம்பலே? வந்தவன் பூங்கொத்தைத் தூக்கிக் கொண்டு நேராக உள்ளே வந்துடாதே. வாசல்லேயே காரைப் பார்க் பண்ணிட்டுக் காத்திரு.''

''ஏன்?''

''அதான் பிரின்ஸிபாலை—சோழிப் பல்லுன்னு சொன்னாயே—சொல்லிட்டேன், வரட்டும். அந்தப் பல்லாலேயே கடிச்சு திங்கறேன்னு அலையறாங்க.''

''அடிப் பாவி!''

''விஷயம் வேறேயே இருக்கு. சமர்த்தாக வெளியே நின்னுட்டிரு. காயத்ரி வருவாள். அவளைக் கூட்டிக் கொண்டு போய் வீட்டில் விட்டுடறே. வேலை உனக்கிருக்கு.''

''ஏன்? நான் அவளோட ஒன் ஆக்ட் ப்ளே பார்க்க

வேண்டாம்மா?''

''சந்தர்ப்பம் இருக்காதுன்னு நினைக்கிறேன். அங்கேயே வாசல்லேயே இரு.''

''புரியலே.''

''புரியும், நேரம் வருகிறபோது.. இப்ப சொன்னதைச் செய்.''

''ஸ்வீட்.... மை ஸ்வீட் சிஸ்டர்.''

''கொஞ்சாதே! கொஞ்சாதே.''

போனை வைத்த கையோடு, ஒட்டியிருந்த குளியலறைக்குப் போய்த் தலை முடியை அழுத்திக் கொண்டான். ப்ரூட் சென்ட்டைச் சீற விட்டுக்கொண்டான். டிரெஸ்? இதுவே போதும்.

கிளம்பினான். கடந்து போகும் போது காரியதரிசி கேட்டாள். ''சார், ஓன் மிஸ் ஷீலா, நீங்க சாயங்காலம் எங்கே போறீங்கன்னும் என்ன புரோக்கிராம்னும் கேட்கிறாங்க.''

''வனவாசம் போயிட்டதாகச் சொல்லிடு.''

''அரை மணியிலே வந்துடுவாங்களான்னு கேட்கிறாங்க.''

''ஆறு மாசமாகுமாம்னு சொல்லிடு.''

காரை விரட்டிக் கொண்டு போனான்.

கல்லூரி வாசலின் எதிர்ப் பக்கமாய் பயணிகளை உதிர்த்துவிட்டு பஸ் நகர்ந்த போது, கடைசியாக இறங்கிய இந்தப் பெண் சாலையைக் கடக்க முயலும் முன் நிறைய கார்கள் ஹார்ன் ஒலியுடன் பைலட்கள் வர, கவர்னரோ முதல்வரோ, தயங்கி நின்றாள். எல்லாம் ஓய்ந்த பின் இறங்கினாள். கல்லூரி உள்ளே ஒரு ஷாமியானா பந்தல்.

அவள் வருகிறாள். தனியாக வெளியே வருகிறாள்! நினைப்பு தந்த உற்சாகமே ஆக்ஸலேட்டரை அழுந்த மிதிக்க வைத்தது. வழி கேட்டு ஓயாமல் ஒலி கொடுக்கச் செய்தது.

ஆதர்ஷின் வண்டி சீற்றமாய்ச் சாலையில் திரும்பியது.

கவனமாகச் சாலையைக் கடந்து சென்றாள். கல்லூரி வாசலில் ஓட்டைகள் விழுந்த பானர் ஒன்று காற்றில் படபடத்து இன்று கல்லூரி தினம் என்று சொல்லி, வரப் போகும் மாண்புமிகு மந்திரியை 'வருக வருக' என்று அழைத்துக் கொண்டிருந்தது.


இடது பக்கமாகச் சாலையில் பாய்ந்து வரும் காரைப் பார்த்து அச்சமாக அது வருவதற்குள் கல்லூரி வளாகத்துக்குள் போய் விடும் அவசரத்துடன் நடந்தாள்.

வாசலில் கார்களின் வேகத்தை மட்டுப்படுத்தப் போட்டிருந்த இரும்புக் கம்பிகளின் இடைவெளியில் கால் செருகிக்

கொள்ள—இழுக்க முயலும் முயற்சியில் செருப்பு உள்ளே விழ, அதை உடனே எடுக்கக் குனிந்த அதே சமயம்—

வேகமாக வந்த கார் சரேலென்று திரும்பி வளாகத்துக்குள் பாய்ந்து வர முயல—

விபத்து.



கல்லூரி வளாகத்திலிருந்தது அந்த மேடை. தொங்க விடப்பட்ட திரை தூக்கப்படுவதற்காக எல்லோரும் இரும்பு நாற்காலியில் அசௌகரியமாக அமர்ந்து திணறினார்கள். நெளிந்தார்கள்.

''டொனேஷன் டிக்கெட் என்ற பெயரால் நூறு ரூபாய் வாங்க முடிகிறது. நேரத்தோட ஆரம்பிக்கிறானுங்களா பாரேன்.'' குளிரை எதிர்பார்த்து சுற்றிக் கொண்டு வந்த மப்ளரை உரித்த பெரியவர் ஒருவர் கேட்டார். ''அம்சு, என்னவாம். பாரேன்.''

''இத ஆரம்பிச்சிருவாங்க.''

''இதையேதான் ஒரு மணி நேரமா சொல்லிக்கிட்டிருக்கிறாங்க. அட என்னதான் விஸ்யம் கேட்டுத்தான் பாரேன். நேரத்தோட நான் போவதாவல? இப்பவே மணி அஞ்சாயிடுச்சு. ஏளு மணிக்குப் பார்ட்டி இருக்குதில்ல?'' மற்ற விரல்களை மடித்துக் கட்டை விரலை மட்டும் வாய் வரை கொண்டு போய் அவசரமாக இறக்கினார்.

''இத, இப்ப மினிஷ்டரு வந்ததும் ஆரம்பிச்சிடுவாங்க, சாரு.''

''என்னமோ போ. எல்லாம் உங்க இஷ்டத்துக்கு நடக்குது. இன்னும் அரை மணி பார்ப்பேன். இல்லே, எந்திரிச்சுப் போயிருவேன்.''

பிரின்ஸிபாலம்மா நெளிந்தார். ''அப்படிச் சொல்லிட்டா எப்படிங்க? இது நீங்க கட்டின காலேஜ். அதுல நீங்க இல்லாம ஒரு விழாவா? மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்குங்க.''

''எப்பத்தான் வருவாங்களாம் மினிஷ்டர்?''

''இதோ வந்துட்டே இருக்காராம். அவரே போன் பண்ணிச் சொன்னார். திரிசூலம் தாண்டிட்டாராம்.''

அந்தத் தொந்திக்காரரின் பார்வை இடம் பெயர்ந்தது. ''அதாரு அந்த செவத்த புள்ள? புதுசா? வெசாரிங்க.''

அம்மாள் சங்கடமாக நெளிந்தார். (பிரின்ஸிபாலுக்கு இந்த வேலையெல்லாம் தேவைதானா?)

தவிக்கும் அம்மையாரிடம் அவசரமாக வந்தாள் காயத்ரி. ''மேடம்'' என்றாள்.

''இரு'' என்று நகர்ந்தார். சீக்கிரமாக நிகழ்ச்சியை ஆரம்பித்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் அந்த மாஜி எம்.எல்.ஏ பார்வையில் நிறைய அசிங்கம் வந்துவிடும்.

அவசரமாக மேக்கப் அறையில் நுழைய, பின் தொடர்ந்து வந்த காயத்ரி சொன்னாள். ''நான் கிளம்பரேன் மேடம்.''

''ஏய். என்ன நீ விளையாடறியா? நீ கிளம்பிட்டா நாடகம் என்னவாகிறது?'' என்றவர் நிமிர்ந்து பார்த்துப் பதறிப் போனார்.

''அடிப்பாவி. யாரைக் கேட்டு நீ மேக்கப்பை கலைச்சே?''

''நேரமானால் வீட்டில திட்டுவாங்க மேடம்.''

''உனக்கு மட்டுமா? நான் உள்பட எல்லாரும்தான் வீட்டில டோஸ் வாங்கியாகனும். பின்னே ஏண்டி நாடகத்தில் நடிக்க ஒத்துக்கிட்ட?''

''ஆர்வம்தான். நாலரை மணிக்கு ஆரம்பிச்சா அஞ்சு மணிக்கெல்லாம் முடிஞ்சிடும் கிளம்பிடலாம்னு நினைச்சேன். விழா இப்பதைக்கு ஆரம்பிக்காது போல இருக்கே! இப்பவே மணி ஆறடிக்கப் போகுது.''

பிரின்ஸிபால் மூச்சுத் திணறினார். ''அதுக்கு...''

''நான் கிளம்பறேன்.'' ''இருடி. மினிஸ்டர் இப்ப வந்துடுவார்.''

''மினிஸ்டர் வர மணி ஏழாயிடும் மேடம். விசாரிச்சுட்டேன். முதல்வர் டெல்லி போகிறார். அவரை வழியனுப்ப ஏர்போர்ட் போயிருக்கிறாராம். வரக் கண்டிப்பாக ஏழாயிடும். நான் வரேன். என்னை விட்டுடுங்கோ.''

சிரிப்புடன் வந்தாள் சுமதி. ''பரவாயில்லே. அவள் போகட்டும். விட்டுறுங்க மேடம்.''

''என்னடி, என்ன நீயும் உளர்றே?''

''பரவாயில்லே. அவள் நாடகத்தையும் நானே நடிக்கிறேன்.''

''அப்ப உன் டான்ஸ்?''

''முதல்ல என் டான்ஸைப் போட்டுட்டு ரெண்டு மூணு

பேரைப் பாடச் சொல்லிடுங்க. அதுக்குள்ள இந்த டான்ஸ் உடைகளைத் துறந்து நாடக மேக்கப்புக்குத் தயாராயிடுவேன். அது ஒண்ணுதான் இப்ப வழி. நீ போடி காயத்ரி.''

''இரண்டு புரோகிராமையும் செய்ய உனக்கென்ன தலையெழுத்தா?''

''பரவாயில்லே. சமாளிப்பேன். போயேண்டி இவளே.'' என்று அவள் சொல்வதற்காகவே காத்திருந்த மாதிரி வெளியில் பாய்ந்தாள். ''தாங்க்ஸ்டி இவளே.''

''உன் தாங்க்ஸ்ஸை எல்லாம் நாளைக்குச் சாவகாசமா வாங்கிக்கிறேண்டி.'' காயத்ரி என்று நினைத்து அவள் சொன்ன 'டீ' புரபசர் அம்சவேணியை மிகவும் பாதித்தது.

''திமிரு. அவ்வளவும் திமிரு. இருக்கு நாளைக்குக் கிளாஸுக்கு வருவே இல்லெ? அங்கே பேசிக்கிறேன். 'டீ' போட்டா பேசற?'' அவள் புலம்பலை கவனியாத சுமதி மலையாள உடையுடன் காலைத் தத்தி இடது கையால் வட்டம் போட்டு நெஞ்சுக்கு நேரே கைகளை உயர்த்தினாள்.

''மெயின் கேட்டில் என்ன கூட்டம்? ஒருவேளை மினிஸ்டரா?'' என்று கிளம்பிய புரொபசரம்மாவிடம் அவசரமாக வந்து ஒரு ஆள் ரகசியமாக காதில் ஓத நடுங்கிப் போனார். ''என்ன ஆச்சு?''

''கால் எலும்பு மளுக்குன்னு உடைஞ்சு போச்சு.'' என்றான்

''ஆள் யாராம்?''

''பெரிய பணக்காரன் வீட்டுப் பிள்ளைங்கதான் இப்படி அலட்சியமாகக் காரை ஓட்டும்.''

''அதில்ல, இப்ப மாட்டிகிட்ட பொண்ணு யாராம்?''

''தெரியலிங்க. நம் ஸ்டூடண்டாகத்தானிருக்கணும்னு தோணுது.''

''பெரிய கண்டுபிடிப்பு. நம் காலேஜ் விழாவுக்கு வந்த பெண் நம்ம காலேஜாகத்தானிருப்பா. எல்லாம் ரெடியாயிருங்கடி. நான் போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''பிரயோசனமில்லே அந்தக் கார் ஆள் அவனே தன் காரில் ஏத்திட்டு ஏதோ நர்சிங் ஹோமுக்குக் கொண்டு போயிட்டான். நீங்க போயும் பிரயோசனமில்லே. சும்மா இங்கேயே இருந்து ஏற்பாடுகளைக் கவனியுங்க.''

''எல்லாம் தலை விதி. யாருடி அவ, வாசந்தி. மேக்கப் போட்டுட்டியா?''

''எனக்கெதுக்கு மேடம் மேக்கப்? நான் பாட்டு தானே பாடப்போறேன்.''

''அசப்பில் டி.வி. பாத்திமா மாதிரி இருக்கே. லேசாக மேக்கப் போட்டால் தான் லைட்டிங் சீராக விழும். இதெல்லாம்

டெக்னிக் சமாச்சாரம். போடு மேக்கப்பைன்னா போட வேண்டியது தானே?''

''சரி மேடம்.''

வளாக வாசலுக்கு வந்து நின்று கண் கொள்ளும் மட்டும் ஆராய்ந்து பார்த்தாள் காயத்ரி.

''வெளியே அதிசயம் உனக்காகக் காத்திருக்கும். போ.'' என்றாளே அந்த சுமதி, என்ன அதிசயம்? ஒரு மண்ணுமில்லை. யாரோ சின்னப்பையன் தான் சுவரில் நீர்ச் சித்தரம் வரைந்துக் கொண்டிருந்தான்.

அவனை விரட்ட முயன்ற கூர்க்காவைத் தடுத்தாள். ''என்ன, இங்கே என்னமோ விபத்துன்னு சொன்னாங்களே?''

''ஆமாம்மா. ஒரு பொண்ணு மேலே கார் மோதிடுச்சு. அதே ஆள் வண்டியில ஏத்திக்கிட்டு நர்சிங் ஹோமுக்குக் கூட்டிட்டு போயிட்டார்.''

''பேர் தெரியுமா?''

''நம்ம காலேஜ் பொண்ணுதானுங்க.''

''அதில்லேப்பா. காரோட்டி வந்தவர் பெயர்?''

''அது தெரியாது, ஆனா நம்பர் தெரியும்,'' என்றவன் சொன்ன நம்பருக்கு மெலிதாக அதிர்ந்தாள்.

அது ஆதர்ஷின் கார் நம்பராச்சே!

காவல் ஆள் ''என்னம்மா ஆட்டோ வேணுமா?'' என்றான். ''இப்ப தான் ஒண்ணு உள்ளே போச்சு. வரும். ஏறிட்டுப் போங்க.''

''வந்தால் கொஞ்சம் நிறுத்தேன். ப்ளீஸ்'' என்றவள் நிறுத்தப்பட்ட ஆட்டோவில் ஏறினாள். ''எங்கேம்மா?'' என்ற கேள்விக்குப் பதில் சொல்லத் தயங்கினாள். பிறகு ''மைலாப்பூர் போ.'' என்றாள்.

வீட்டுக்கு வந்த போது அப்பா கோவிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். ''வரயா?''

''இல்லேப்பா. நான் கோயிலுக்குள்ளேல்லாம் வரக்கூடாது.''

''பொய் சொல்றதே பொழப்பா போச்சு. இவ தேதி என்னிக்குத் தெரியாதா? நீங்க வாங்க.'' என்றாள் அம்மா. பார்த்தால் கோவிலுக்குப் போகிறவள் மாதிரி இல்லை. ஏதோ கல்யாண ரிசப்ஷனுக்குப் போகிறவள் மாதிரி பட்டுப் புடவை, கழுத்து நிறைய நகை. ''என்னடி சிரிப்பு?''

—''ஒண்ணுமில்லே. நீ போ. எனக்கும் சேர்த்துக் கடவுளை வேண்டிக்க.''

கார் நகர்ந்து போனதும் அவசரமாகப் போனை எடுத்து டயலைத் திருப்பினாள். காத்திருந்து நிமிர்ந்தாள். ''சுமதியோட அம்மா இல்லே?''

''பேசறேன். நீ யாரு?''

''அவ பிரண்ட் காயத்திரி. நான் சொல்ற நம்பர் உங்க வீட்டுக் கார் நம்பரா பாருங்க.'' என்று நம்பரைச் சொல்ல—

''ஆமாம். என் பையனோட கார் நம்பர். எதுக்குக் கேட்கறே?''

சொல்லத் தயங்கினாள்.

''ஹலோ. சுமதி காலேஜ் டேக்குப் போயிருக்கா. நீ போகல்ல?''

''போனேன். தலையை வலிச்சதுன்னு திரும்பிட்டேன்.''

''எதுக்காக என் பையன் காரைப் பத்தி விசாரிச்சே?''

''காலேஜ் வாசல்ல அந்தக் கார் ஒரு ஆக்ஸிடண்ட் பண்ணினதாகச் சொல்லிக்கிறாங்க.''

''என்னடி பேசற? அவன் ஏன் உங்க காலேஜுக்குப் போகப் போறான்? என்ன ஆச்சாம்? விவரமா சொல்லேன். எனக்குப் படபடன்னு வர்றதே.''

''ஒரு பெண் மேலே மோதி அவளைக் காரிலேயே ஏதோ நர்சிங் ஹோம் கொண்டு போயிட்டதாகச் சொல்றாங்க. எந்த நர்சிங் ஹோம்னுதான் தெரியல.''

''மந்தாகினி நர்சிங் ஹோமாகத்தானிருக்கும். அது எங்க நர்சிங் ஹோம்தான். போனை வைச்சிடு. நான் விசாரிச்சுக்கிறேன்.''

போனை அமர்த்தினாலும் காயத்ரி அமைதி குலைந்த நிலையில் தவித்தாள்.

'மந்தாகினி நர்சிங் ஹோமா? அது எங்கே இருக்கு? என்ன அதன் போன் நம்பர்? டைரக்டரியில் தேடினால் என்ன?' என்று புத்தகத்தைக் கனமாக எடுத்தவளுக்கு பயம் வந்து விட்டது.

மலங்க மலங்கப் பார்த்து விட்டுப் புத்தகத்தை வைக்க முயன்று தவறவிட்டாள்.

மனசுக்குள் வந்து நின்ற டாக்டர் சுகுமாரி சொன்னார். ''சாயங்காலம் இருட்டறதுக்கு முந்தி ரூமுக்குப் போயிடு. விடியும் வரை வெளியே வராதே.''

நேராக அறைக்குள் போய்க் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். தவித்தாள். அப்பாவும் அம்மாவும் வந்தால் கதவைத் திறக்கும் பிரசினையில்லை. தானியங்கிப் பூட்டு. சாவியொன்று அப்பாவிடம் நிரந்தரமாக இருக்கும். திறந்து கொண்டு உள்ளே வந்துவிடுவார்கள்.

பயமாக இருக்கிறது. எனக்குப் பயமாக இருக்கிறது.

விபத்து நடந்த உடனே அழைத்துப் போனானாமே. அவள் யார்? யாராக இருக்கும்?

''அனீதா ஐயாம்.'' நர்சிங் ஹோம் கட்டிலில்

சிரமத்துடன் மெதுவாகப் பேசினாள் அவள். கடமையுடன் பார்க்கும் இன்ஸ்பெக்டர். கவலையுடன் நிற்கும் அவன், ''எங்களுக்கு இதெல்லாம் சகஜம்'' என்பது போல நடமாடும் நர்சுகள். டாக்டர்கள்.

''அப்பா பெயர்?''

''மிஸ்டர் அல்பான்ஸா. கிராமத்திலிருக்கிறார்.''

''விலாசம் சொல்லுங்க. தகவல் தரணும்?''

''நம்பர் பதினாலு. நாராயண தெரு. ராயப்பேட்டை: சென்னை.14.

''கிராமம்னு சொன்னீங்களே.''

''அது என் அப்பா இருக்கிற இடம். இங்கேதான் என் அம்மாவோட இருக்கேன். ஸ்டெல்லா மேரீ அல்பான்ஸா! இவங்களுக்குத் தகவல் சொன்னாலே போதும்.''

''புகார் தர விரும்பறீங்களா?''

அவனைப் பார்த்தாள். ''இல்லே, வேண்டாம். நடந்தது விபத்து. அதுவும் என் அஜாக்கிரதையால் நேர்ந்த விபத்து. அடுத்தவங்க மேலே பழியைப் போட நான் விரும்பல்ல.''

''ஆர் யூ ஷ்யூர்.''

''எஸ். என்னை அடிச்சுத் தள்ளவோ கொலை செய்யவோ அவருக்கு எந்தக் காரணமுமில்லே. வீட்டுக்குத் தகவல் கூட அவரே போய்ப் பக்குவமாகச் சொல்லட்டும். எங்கம்மா எற்கெனவே ஹார்ட் பேஷண்ட். நீங்க யூனிபார்மோடபோய் நின்னா அதிர்ச்சியிலே ஏதாவது ஆகிவிடும்.''

''நானே போய்ச் சொல்றேன்.'' என்றான் அவன்.

இன்ஸ்பெக்டர் கையெழுத்து வாங்கிச் சென்றார்.

''அப்புறம் ஒரு சின்ன விஷயம். என்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்துடுங்க. ப்ளீஸ். இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரி சிகிச்சைக்கு எனக்கு வசதி இல்லே.''

''அதைப்பற்றிய கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். இது என் பொறுப்பு மட்டுமில்லே. கடமையும் கூட.''

''ஆனா—''

''நீங்க அமைதியாயிருங்க. ஓய்வெடுங்க. நான் வரேன்.''

''மிஸ்டர் ஆதர்ஷ்'' என்று அங்கேயிருந்து கூப்பிட்ட பெண் பரிச்சயமில்லாதவள்.

''யா.''

''போன் ஃபார் யூ.''

அவசரமாகப் போய் வாங்கினான். ''யாரு?''

''அம்மா பேசறேண்டா, என்ன ஆச்சு? என்னமோ ஆக்ஸிடெண்ட்டாமே உனக்கொண்ணும் ஆகலையே.''

''எனக்கொண்ணுமில்லே. ஒரு பெண்ணுக்குத்தான் காலில் அடி. உனக்கெப்படித் தெரியும்?''

''யாரோ ஒரு பெண் காயத்திரியாம் போன் பண்ணிச் சொன்னா. ஓவர் ஸ்பீடு போகாதேன்னு சொன்னா கேட்க மாட்டேங்கறியே,'' என்ற அம்மாவின் புலம்பல் காதில் விழாமல் போயிற்று.

''காயத்ரி! மறந்தே போய் விட்டேனே.'' அம்மா எதற்கோ ''புரியுதா?'' என்று கேட்க ''புரியுது'' என்று சொல்லி போனை வைத்து விட்டு ''மன்னிக்கவும். ஒரு நம்பர் தரமுடியுமா?'' என்றான் ஆபரேட்டரிடம்.

''சொல்லுங்க.''

சொன்னான்.

முயன்றாள். ''ஸாரி, நோ ரெஸ்பான்ஸ். மணியடிக்கிறது. யாரும் எடுக்கல்ல.''

''அதெப்படி? வீடாச்சே. யாருமிருக்க மாட்டாங்களா என்ன? ப்ளீஸ் மறுபடியும் முயன்று பாருங்க.''

''ஸாரி. நோ ரெஸ்பான்ஸ்''

தொடர்ந்து ஒலிக்கும் போன் ஓசைக்கு எழுந்து வர பயந்த காயத்ரி இரண்டாவது தடவை ஒலித்ததும் ஏதோ உந்தித்தள்ள எழுந்து அறைவாசலைத் தொடும் முன்– ஒலிப்பதும் நின்று விட்டதும், சலிப்புடன் கட்டிலுக்குத் திரும்பினாள்.

கார் வந்து நிற்கும் ஓசையும் அழைப்பு மணியோசையும் கேட்டுத் தவித்தாள்.

''அடி காயத்ரி. கதவைத் தெறடி.''

''தூங்கிட்டாளோ என்னமோ.'' சாவியைச் செலுத்தி அப்பா கதவு திறக்கும் ஓசை கேட்டதும்– அவசரமாகப் படுத்தாள்.

''ஏண்டி முண்டம்! எட்டு மணிக்குள்ளே அதென்ன அப்படியொரு மூதேவித் தூக்கம்?''

'அதென்னமோ தெரியல. தூக்கக் கலக்கமாயிருக்கு.''

''சரி. சரி. வா. வந்து ஒருவாய் சாப்பிட்டு வந்து தூங்கு.''

பயந்தாள். ''வேணாம்மா. பசிக்கல்ல.''

''வெறும் வயத்தோட தூங்காதேடி. கனவு அதுவும் கெட்ட கனவாக வரும். தயிர் சாதம் பிசைஞ்சு கொண்டு வரேன் சாப்பிட்டுத் தூங்கு.''

''சரிம்மா.''

சற்றுப் பொறுத்து– ''இந்தாடி. வாங்கிக்க.''

''தரையில வச்சுடும்மா.''


''அதென்னடி அது குருடி மாதிரி துழாவறே?''

''தமாஷுக்குத்தான், நீ போ.''

''என்னங்க. பொண்ணு என்னமோ மாதிரி முழிக்கிறா. ஒரு வேளை கரட்ராக்ட்டா?''

''பதினெட்டு வயசில் காடிராக்டா? அதெல்லாம் உன்னை மாதிரி கிழவிகளுக்குத்தான் வரும்,'' என்று அப்பா சொல்லுவதும், அம்மா கத்துவதும் கேட்டவாறு இருக்க–

சற்றுமுன் அம்மா டொக்கென்று வைத்த பாத்திரத்தின் ஓசையை மனதில் நிறுத்தி உத்தேசமாகக் கையை நீட்டிப் பாத்திரத்தை எடுத்தபோது கைபட்டுத் தண்ணீர் தம்ளர் சரிந்து விழுந்து புத்தகத்தை நனைப்பது தெரியாமல் ஸ்பூனால் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடத் துவங்கினாள்.



2

''சுமதி. வெள்ளிக்கிழமை. எண்ணெய் தேய்ச்சி விடறேன் வாடி'' என்று அம்மா கூப்பிடும் பயங்கரத்தை, எதிர்பார்த்துப் பயந்தே விடிவதற்கு முன்பே ஷாம்பூ குளியலை முடித்து மணமாகக் கீழே இறங்கி வந்து அம்மாவைத் தேடிப் போனாள்.

''எண்ணெய் தேய்ச்சுக்க மாட்டியாடி?''

''ஷாம்பூ குளியலே போறும். நீ வேற கண் எரிய எரிய எண்ணெய் தேய்ச்சிக் கொதிக்கக் கொதிக்கத் தண்ணியை ஊற்றி... பயங்கரம். நான் மாட்டேன். அப்புறம் தூக்கம் வரும். எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு.''

''காலம் கெட்டுப் போச்சுதடி. இந்தா, காப்பி குடிச்சுக்க.''

டபரா டம்ளரை வாங்கிக் கொண்டாள். ''ராத்திரி அண்ணா வரவேயில்லையா?''

''அது ஒரு கூத்து. நாலரை மணிக்கு வந்துதான் படுக்கப் போனான். ஆக்ஸிடண்ட் பத்தி கேட்கலாம்னு பார்க்கிறேன். எங்கே? எழுந்தால் தானே?''

''இன்னொரு காப்பி கொடும்மா.''

''இப்பத்தானேடி குடிச்சே.''

''எனக்கில்லே, அண்ணாவுக்கு. எழுப்ப ஒரு சாக்கு வேணாமா?''

காப்பியுடன் சென்றாள்.

''அண்ணா. கதவைத் திறவேன் சீக்கிரம். காப்பி கையைச் சுடறது.''

கதவைத் திறந்தவன் கண்களில் தூக்கம் இன்னமும் மீதமிருந்தது.

''பிடியேன் அண்ணா. சுடறதே.'' வாங்கினதும் கேட்டாள். ''அம்மா என்ன என்னமோ ஆக்ஸிடண்ட்டுன்னு சொல்றா. என்ன விஷயம்?''

அவன் பார்த்த பார்வையில் கண்ணீர் இருந்தது.

''என்ன ஆச்சு? உயிரோட தானே இருக்கிறா?''

''இருக்கிறா. ஆனா ஆயுசுக்கும் அவளால இயல்பாக நடக்க முடியாதாம். டாக்டர் சொல்கிறார். அவங்கம்மா கதறல் கேட்கவே சகிக்கல்ல. என்னால ஒரு பெண்ணோட எதிர்காலமே முடமாகிப் போச்சு.''

''இதுக்கா அப்ஸெட் ஆயிட்டே? அண்ணா, இதெல்லாம் தவிர்க்க முடியாத சங்கதி. முடிஞ்ச மட்டும் பண உதவி செய்யலாம், வேறென்ன பண்ண முடியும்?''

''அவ போலீஸ் புகார் தந்திருந்தா நடக்கிற சங்கதியே வேற. வேணாம்னுட்டாளே. தப்புக்கு அவளும் காரணம்னு என்னைக் காட்டிக் கொடுக்காம இருந்ததுதான் என்னைக் கலக்குது.''

''காப்பி ஆறுது பார். குடிச்சிக்க, நாலு மணிவரை அங்கேயே தானிருந்தியா? அவங்கம்மா ரொம்பக் கதறிட்டாங்களா?''

''ஹார்ட் பேஷண்ட். பாவம். அவங்களுக்கு ஆறுதல் சொல்கிறதே பெரிய பாடா போச்சுது. பரிதாபம் தான் போ.''

''சரி, சரி. அதையே நினைச்சிட்டிருந்தா ஆபீஸ் போக மாட்டியா? ஆடிட்டிங் டயம்னு சொன்னாயே?'' சொன்னாள். ''சொல்ல மறந்துட்டேனே. நேற்று நீ பார்க்கல்லயே, என் மோகினிப் பிசாசு ஆட்டம் கிளாஸ்.''

சிரித்து விட்டான்.

''அப்பா மூடுக்கு மாறிட்டியா? அதே வேகத்தோட எழுந்து போய்க் குளிச்சிட்டு இறங்கி வா. விடிஞ்சதிலிருந்து பிசாசு வேற நீ எழுந்தாச்சான்னு நாலு தடவை போன் பண்ணிக் கேட்டுடுச்சாம். அப்பா சொன்னார்.''

''பிசாசு?''

''ஷீலா.''

''ஓ! நோ.'' அவசரமாகக் கட்டிலை விட்டிறங்கி

குளியலறைக்குள்ளே ஓடினான்.

பூஜை யறையிலிருந்து வெளியே வந்த அம்மாள் சமையலறையில் அரிசியில் கல்பொறுக்கும் காயத்ரியைப் பார்த்து முறைத்தாள். ''குழப்பறயேடி குழந்தே.''

நிமிர்ந்து பார்த்தாள். ''உம்?''

''ராத்திரி என்னமோ குருடி மாதிரி துழாவினே. இப்ப அரிசியிலே கல் பொறுக்கறே? எதுக்கும் நீ ஒரு கண் டாக்டரைப் பார்த்துடு. கண்ணிலே கூட கேன்சர் வருமாம்.''

''காலங்கார்த்தால என்ன பேச்சு இது? அப்பா, பாருங்கப்பா இந்த அம்மாவை.''

பேப்பரைத் தாழ்த்தி அங்கிருந்தே, ''என்னடி?'' என்று மீண்டும் மூழ்கிக் காணாமல் போனார். ''போனடிக்கிறது பார். யாருன்னு கேளு.''

எழுந்து போய் போனை எடுத்தவள். ''ஸின்ஸியர்லி ரமேஷ்'' என்று வந்த குரலுக்கு வைத்து விட்டாள்.

''யாரும்மா?''

''ராங் நம்பர்ப்பா.''

''ரமேஷ்தானே? அவனை ஏன் இப்படி துன்புறுத்தரே? வேண்டாம்னா சொல்லிட வேண்டியதுதானே?''

''ஆயிரம் தடவை சொல்லியாச்சு. இப்ப நீங்களே சொல்லி வையுங்க. இனிமே பேசினால் சண்டைதான். கராத்தே.''

சிரித்தார்.

மறுபடியும் போன் ஒலித்த போது கண்களில் சலிப்புக் காட்டிப் பார்த்தாள். ''அப்பா, இந்தத் தடவை நீங்களே அட்டெண்ட் பண்ணுங்க. எனக்குத் தலைவலி.''

''ஹலோ! யாரு ரமேஷா?''

''இல்லே அங்கிள். நான் சுமதி பேசறேன். காயத்ரி இல்லே?''

''இருக்கிறா. இரு தரேன். அம்மாடி, உன் சினேகிதி பேசறா. சுமதி.''

ஓடிவந்து போனைப் பறித்தாள். ''ஹாய்டி. அப்புறம் நேத்து என்ன ஆச்சு?''

''உன் ஊகம் சரி. மந்திரி ஏழு மணிக்குத்தான் வந்தார். யூ நோ சம்திங்? மோஹினி ஆட்டம், ஒன் ஆக்ட் ப்ளே! ரெண்டிலேயும் எனக்கு பிரைஸ்! நீ நடிச்சிருந்தா கோல்ட் மெடலே கிடைச்சிருக்கும். எனக்கு சில்வர்தான் கிடைச்சுது.''

''கங்கிராஜுலேஷன்ஸ்.''

''ஸாரிடி. இவளே. நேத்து அண்ணா சமாசாரம் தெரியுமில்லே.''

''தெரியும். மந்தாகினி நர்சிங் ஹோம் எங்கேயிருக்குன்னு தெரியாம தவிச்சுப் போயிட்டேன்.''

''தெரிந்தால் மட்டும் போயிருப்பியா அந்த ராத்திரி நேரத்தில்?''

காயத்ரியின் பேச்சு நின்றது. பேச்சை மாற்ற விரும்பினாள். ''எப்படி இருக்கிறாளாம் அந்தப் பெண்?''

''அது ஒரு பெரிய கதையே சொல்றார் அண்ணா. காலேஜுக்குப் போகிறதுக்கு முன்னால் போய்ப் பார்த்துட்டு வரலாமாடி? நல்ல பெண் மாதிரி தோணுது''

''சரி. எப்ப தயாராயிருக்கட்டும்?''

''சரியா எட்டுமணிக்குக் காரோட வரேன்.''

''நான் ஏழரைக்கே தயாராயிருப்பேன். பைத பை. அந்தப் பெண் பேரென்னவாம்?''

''வந்து சொல்றேன். நானே இன்னமும் கேட்கல்ல. கிறிஸ்தவப் பெண் என்கிற வரை புரியுது.''

ஆஸ்பத்திரியில் எல்லாம் வெள்ளை. தூய்மையாகக் கழுவப்பட்ட வெள்ளை பினாயில் வாடை விடாமல் வீச—பெஞ்ச் எல்லாம் கூட கவனமாக வெள்ளை பூசியிருந்தார்கள் பளபளப்பாக.

''ஹல்லோ சுமதி டியர்'' டாக்டர் அறையிலிருந்து வந்தார். ''என்ன இங்கே வந்து முழிச்சிட்டு நிற்கிறே? இது யாரு? கிளாஸ் மேட்டா?''

''அண்ணா நேத்து அட்மிட் பண்ணின பெண்ணைப் பார்த்துட்டுப் போக வந்தோம்.''

''பார்க்கலாம். டிரஸிங் நடக்கிறது. பத்து நிமிஷமாவது ஆகும். அதுவரை என் ரூமுக்கு வாயேன். காப்பி சாப்பிடலாம்.''

''நோ காப்பி. பேசறதானா வரேன்' இழுத்தாள். 'வாடி''

வெள்ளை திரையும் கண்ணாடியுமாக அறை அழகாக இருந்தது. வாசல் கதவு மேலே ஒரு சின்ன போர்டு டாக்டர். இருக்கிறார் என்று உத்திரவாதமே அளித்தது. லண்டன் யூ.எஸ்.ஏ. எல்லாம் போய்ப் படித்து விட்டு சர்டிபிகேட்டுகளைச் சட்டம் போட்டு மாட்டி இருந்தார் 'யாமிருக்க பயமேன்' என்ற குமரகுருபரர் படத்தின் செருகிய இடத்தில் ஊதுவத்திக் கறை. கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் தடிமன் தடிமனான புத்தகங்கள் அடுக்கிய அலங்காரம் ஈர்த்தது.

''உட்காருங்க.''

சுமதி ''அந்தப் பொண்ணுக்கு எப்படி இருக்கிறது டாக்டர்?'' என்றாள்

"முழங்காலில் பிராக்சர். பதினைஞ்சு நாள் மாவு கட்டுப் போட்டுகிட்டால் போதும். ஒரே கஷ்டம் கால் கொஞ்சம் விந்தினாற் போல் நடக்க வேண்டி வரும். ஓட முடியாது. பாவம் டென்னிஸ் சாம்பியனாம் அது. உன் பிரண்டை எனக்கு அறிமுகப்படுத்தலையே."

"காயத்ரி என்னோட கிளாஸ்மேட். சொல்ல முடியாது, அண்ணியானாலும் ஆகலாம். கிள்ளாதேடி."

"வெரிகுட். வெரிகுட். உன் அண்ணா செலக்ஷன் — ஜஸ்ட் ஃபெண்டாஸ்டிக்."

நர்ஸ் எட்டிப் பார்த்ததும் எழுந்து கொண்டார். "வாங்க போய் பார்க்கலாம்."

இவர்கள் உள்ளே போனதும் கவுன் போட்ட அந்தப் பெரியம்மாள் எழுந்து கொண்டாள். நாலு வயசு பாப்பா ஒன்று சூழ்நிலை புரியாமல் நின்ற நிலையிலேயே அசைந்து கொண்டிருந்தது. குறுகுறுப்பாகப் பார்த்தது.

தூக்கமா? மயக்கமா? கட்டிலில் அந்தப் பெண் சரிந்திருந்தாள்.

கலவரமாகப் பார்த்த அம்மாளிடம் ஆறுதலாகத் தொட்டுச் சொன்னாள் சுமதி. "டாக்டர் சொல்லிவிட்டார். சீக்கிரமே குணமாயிடுமாம்."

தலையைச் சாய்த்துப் பார்த்தது அந்தப் பாப்பா.

காயத்ரி "உன் பேரென்ன பாப்பா?" என்றாள்.

"ஜூலி." விரலை அசைத்துப் பக்கத்தில் கூப்பிடவே, மண்டியிட்டு அமர்ந்து அதன் சைஸுக்கு வந்தாள்.

"என்ன?"

"அக்காவுக்கென்ன? செத்துப் போயிடுமா?"

"ஸ்சு. அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. மம்மீ அழுதுறவாங்க அக்காவுக்கு ஒண்ணுமில்லே. படிக்கிறியா?"

ரெட்டை விரலைக் காட்டியது. "செகண்ட் ஸ்டாண்டர்ட்."

"டேங்கம்பா, பெரிய ஆளுதான்."

சட்டென்று அவள் கழுத்தைச் சுற்றிக் கொண்ட ஜூலி கன்னத்தில் முத்தமிடவே சிணுங்கினாள் காயத்ரி.

"அக்கா மாதிரி யாரைப் பார்த்தாலும் முத்தம் தருவேன்க்கா.. எங்க அக்கா பிராமிஸ் பண்ணி இருக்கு."

"என்னன்னு?"

"அது படிச்சு முடிச்சு வேலைக்குப் போய் சம்பாதிச்சு என்னைப் பெரிய டாக்டராக்கரேன்னு, ராத்திரி பக்கத்து வார்டுல ஒரு ஆளு திடுதிப்புன்னு செத்துப் போச்சு. அது மாதிரி அக்காவுக்கு ஒண்ணுமாகாதில்லே?"

"வயசுக்கேத்த மாதிரி பேச மாட்டியா?"

''நானும் நீயும வராண்டாவில் ஓடிப்பிடிச்சு ஆடலாமா?''

''காலேஜுக்கு நேரமாகுது. சம் அதர் டைம். ஓ.கே.''

''ஓ.கே.''

வெளியே வரும் போது கண்கலங்கி இருந்தது காயத்ரிக்கு.

சுமதி.''என்னடி அவளை மயக்கத்தில பார்த்து இமோஷனாயிட்டியா?''

''இல்லே. அந்தக் குழந்தையோட பேச்சுத்தான் என்னை உணர்ச்சிவசப்படுத்தி விட்டது. பாரேன், சீரியஸ்னஸ் புரியாம ஓடிப் புடிச்சு விளையாடக் கூப்பிடுதே.''

''அதுதாண்டி குழந்தைங்க மனசு.'' தோளில் தட்டினாள். ''டேக் இட் ஈஸி. இதோ தேர் ஹீ ஈஸ்.''

காரைப் பார்க் பண்ணிவிட்டு வந்து கொண்டிருந்தான் ஆதர்ஷ். ஆதர்ஷ் மிகத் துவண்டிருந்தான்.

''நேற்று ரொம்ப நேரம் காத்திருந்தியா?''

''இல்லே, விஷயம் கேள்விப் பட்டதும் ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போயிட்டேன். இட்ஸ் ஓ.கே.''

கையிலிருந்த மருந்துகளைக் காட்டினான். ''நீங்க போங்க சுமதி. நான் டாக்டர்கிட்ட இதைக் கொடுத்துட்டு ஆபீஸ் போகனும்.''

''செய்'' என்ற சுமதி கார் கதவைத் திறந்து அமர்ந்து இவளுக்காகத் திறந்து காத்திருந்தாள்.

மாறுதல் தெரிகிறது. பழைய நெருக்கம் குறைந்த மாதிரி தெரிகிறது.

''ஏறேண்டி.''

ச்சே! இந்த அட்மாஸ்பியரில் அவர் என்னைக் கொஞ்ச வேண்டும் என்று நினைத்தால் அது என்ன நியதி?

''அடி, ஏறேண்டி. நேரமாகிறது.''

நினைவுக்குத் திரும்பி ஏறிக் கொண்டாள்.

அடுத்த வாரம் வரை கடைப்பிடித்த பொறுமை உடையவே சுமதியிடம் கேட்டாள் ''உங்கண்ணா ஊரில் இல்லையா?''

சுமதி. ''இருக்காரே! ஏன் உன்னைச் சந்திக்க வரல்லையா?'' என்றாள்.

''எட்டு நாளாகிறது பார்த்து, ஏதாவது கோபமா?''

''சேச்சே! உன் மேலே என்ன கோபம்? நான் பேசறேன்.''

''ஞாபகப்படுத்து, போதும்.''

''இப்பவே போன் பண்றேன் வா.'' மருந்துக்கடை ஒன்றின் எதிரே நிறுத்தினாள். இறங்கினாள். அவள் போய்ப்

பேசிட்டு வரும் வரை தெருவை வேடிக்கை பார்த்தாள் காயத்ரி. தெருவில் நீர்க் கோலம் போட்டவாறே அலட்சியமாகப் போகும் மாட்டை வேடிக்கை பார்த்தாள். அடுத்திருந்த காஸட் கடையின் கண்ணாடி கதவில் ஒட்டியிருந்த புது காஸட் போஸ்டர்களை ஆர்வமாகப் பார்த்தாள். காலில் கட்டிய கோணியுடன் உருகிய தாரில் நடந்து வண்டியைத் தள்ளிய கிழவனுக்கு வியந்தாள்.


சினிமா அவசரத்துடன் ஓடும் தாயை, தூக்கிச் கொண்டால்தான் ஆயிற்று என்று கதறிக் கொண்டே பின்தொடரும் சின்னப் பாப்பாவுக்காகச் சிரித்தாள்.

கடையை விட்டு வெளியேறி வந்த அந்த சுமதி தேர்ந்த கராத்தே வீராங்கனையின் லாகவத்துடன் ஒற்றைக் கையால் காற்றை குத்தினாள்.

''என்ன ஆச்சு?''

''சாயங்காலமா உன்னைக் காலேஜ் வாசலில் சந்திக்கிறாராம்''

வரப்போகும் அதிர்ச்சியை எதிர்பாராமல் சிரிப்புடன் உற்சாகமாக இருந்தாள்.



3

அவர்கள் உள்ளே போகும்போது அங்கே ஷீலா இருந்தாள்.

சுமதி ''ஹாய் ஷீலா என்ன பண்றே எங்கண்ணாவை?'' என்றாள்.

''என்னத்தைச் சொல்ல? காதலுக்கு மடியேந்திப் பிச்சை கேட்கிறேன். எங்கே, பார்வை பட்டால்தானே? நீயே சொல்லு சுமதி. எதற்காக என்னை இப்படி உதாசீனப்படுத்துகிறார். எனக்கு என்ன இல்லை? எந்த விதத்தில் நான் தகுதியற்றவள் என்று நினைக்கிறார்? கேட்டுச் சொல் இன்றைக்கு நான்விடப் போவதில்லை.''

''உன் வாசகம் இரவல் மாதிரி தெரிகிறது. சம்பிரதாயமான சந்தேகம். ஊரில் ஆணழகர்களுக்கா பஞ்சம்? வேற யாரையாவது துரத்தேன்.''

''எனக்குத் தெரியும்.'' அந்த ஷீலா சொன்னாள். ''அவர் காதல் வேறு பெண்ணின் மேல் பாய்கிறது. அதுவும் ஒரு நோயாளிப் பெண்ணிடம்''

சட்டென்று திரும்பிப் பார்த்தாள் காயத்ரி.

''சுமதி, என்ன உளறுகிறே? அவர் வேற பெண்ணைக் காதலிப்பது நிஜம். ஆனால் நோயாளிப் பெண் மாதிரியா தெரிகிறாள் இந்த காயத்ரி.''

ஷீலா கொஞ்சமாக விழித்தாள். ''இவளா? இவளா எனக்குப் போட்டி? இருக்காதுன்னு நான் நினைக்கிறேன்.

''இருக்... ஏன் அப்படிச் சொல்கிறே?''

''இப்ப மணி என்ன?''

''நாலு பத்து.''

''நான் வந்து ஒரு மணி நேரமாகக் காத்திருக்கேன். ஆபீஸ் வேலையெல்லாம் விட்டுட்டு அப்படியே ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காராம். கையெழுத்து வாங்க வேண்டிய செக்குகளுக்காக அக்கவுண்டண்ட் தவிக்கிறார். கையெழுத்து மட்டுமல்ல, அப்பாயின்ட்மென்ட் கொடுத்தவங்க வந்து காரியதரிசியைத் திட்டிவிட்டுப் போகிறாங்க. அதுக்கு என்ன அர்த்தமாம்?''

''வாடி காயத்ரி.'' இழுத்துப் போன சுமதி, காரியதரிசிப் பெண்ணிடம் நின்றாள். ''அண்ணா எங்கே?''

''நர்சிங் ஹோம்லேர்ந்து போன் வந்ததுன்னு ரெண்டு மணிக்குப் போனார். உட்காருங்க.''

''நர்சிங் ஹோம் நம்பரை முயன்று பார்த்துக் கொடு.''

''தேவையில்லேம்மா. இப்பத்தான் விசாரித்துப் பார்த்தேன். அந்தப் பொண்ணை டிஸ்சார்ஜ் பண்ணிட்டாங்களாம். இவர் காரிலேயே கூட்டிக் கொண்டு போயிருக்கிறாராம்.'' காரியதரிசி அலுத்துக் கொண்டாள். ''மீதி அப்பாயிண்ட்மெண்ட்டுகளை நான் போன் பண்ணிக் கேன்சல் பண்ணிட்டேன்.''

''சொன்னேனே, சரியா?''

''ஷீலா, சிம்பிள்! உனக்குப் பயந்துதான் இங்கே வர மாட்டேனென்கிறார். வெட்கப்பட வேண்டிய சங்கதி.''

''ஒய் மீ? காதலிச்சவங்க எல்லாம் வெட்கப்படணும்னா உன் சினேகிதிக்குத்தான் பட்டியல்லே முதலிடம்.''

''சுமதி, வாடி போகலாம்.''

ஷீலாவை முறைத்தவாறு வெளியேறிப் போனார்கள்.

காரில் போகும்போது சுமதி சொன்னாள்: ''இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டறேன்.''

''அவள் யார்? முறைப் பெண்ணா?''

''இல்லே. அரைக் கிறுக்கு. ஆதர்ஷை விட்டால் உலகத்திலேயே வேறு ஆண் மகனே கிடையாது என்கிற பிடிவாதம். பிட்ச், பேசிக்கிறேன்.''

''இதெல்லாம் அதிகாரத்தில் வாங்கிற சமாச்சார மில்லே. பாசமும் காதலும் தானாகக் கனியணும். அப்புறம் அந்த

ஷீலாவுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?''

''நீ சும்மா இரு காயத்ரி. இதை எப்படிச் சமாளிக்கிறது, சாதிக்கிறதுன்னு எனக்குத்தெரியும். யூ கீப் மம்.'' சுமதி கேட்டாள். ''டாக்டரைப் பார்த்தியா? என்ன சொன்னார்?''

''மாத்திரை தொடரச் சொன்னார். ஆனாலும் எனக்குப் பயமாக இருக்கிறது.''

''என் பெரியண்ணன் சதீஷ் ஒரு ஐ ஸ்பெஷலிஸ்ட். வெளிநாட்டிலிருந்து வரப் போகிறான். அவனைப் பார்க்கச் சொல்கிறேன்.''

அந்த வாரம் வரை எதுவும் பேசாமலிருந்தாள் சுமதி.

தோட்டத்து புல்தரையில் பிரம்பு நாற்காலி போட்டு அப்பாவோடு பேசும்போது சொன்னாள். ''அப்பா, நீங்க ஏன் ஆதர்ஷுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கக் கூடாது?''

ஆச்சரியப்பட்டார். ''என்ன திடீர்னு?''

''எதுவும் காரணமில்லாமல் பேச மாட்டேன்.''

''முட்டாள் மாதிரி பேசாதே. வளர்ந்த பெண்களை வீட்டில் வச்சிக்கிட்டுப் பையனுக்குக் கல்யாணம் பண்ணுவது முறையில்லே.''

''என்னைச் சொல்றீங்களா? இப்போதைக்கு எனக்குக் கல்யாணமில்லே. படிப்பை முடிக்கணும். மேல் நாட்டுக்குப் படிக்கப் போகணும். பெரிய வேலைக்குப் போய் ஏ.ஸி. அறையில் உட்கார்ந்து அதிகாரம் பண்ணணும். எனக்குக் கனவுகள் அதிகம். அதுக்குள்ளே அண்ணனுக்கு வயசாகிவிடும். என்னைவிடப் பத்து வயசு பெரியவன். தவிர, கல்யாண அவசரம் என்னைவிட அவனுக்குத்தான் அதிகம்.''

''ஏதாவது பேசினானா?''

''சொன்னால் தானா?''

''புரியும்படி சொல்லும்மா. அவனைப் பற்றி ஏதாவது தப்பாகக் கேள்விப்பட்டாயா?''

''அப்பா, இதிலே கேள்வி ஞானமெல்லாம் கூடாது. போட்டி அதிகம் ஆகிவிட்டது.''

''ஷீலாவைச் சொல்கிறாயா? அலட்சியப்படுத்து. அவளை மருமகளாக்க எனக்கே சம்மதமில்லை. ஒரு பெண் பேசக் கூடாத பேச்செல்லாம் பேசுகிறது.''

''அவுட் ஆஃப் ஸிம்பதி, அபாயம் கூட வருமாப்பா?''

''என்ன சொல்றே?''

''விபத்து ஞாபகமிருக்கா?''

''ஆமாம். அந்தப் பெண்ணுக்குத்தான் குணமாகிவிட்டதாகச் சொன்னானே? நம்ம ஆபீஸ்லேயே வேலை போட்டுத் தரேன்னு சொன்னான். செய் என்றேன்.''

''எதுக்கு?''

''சொன்னாயே, அவுட் ஆஃப் ஸிம்பதி. அதற்குத்தான். தன்னால்தான் அவள் ஊனமாகிப் போனாள் என்கிற தாழ்வு மனப்பான்மை இவனுக்கு. அதுக்கு முடிவு கட்டத்தான் வேலை போட்டுக் கொடுத்தேன்.''

''முடிவு கூடச் சில சமயம் 'ஆரம்ப'மாகிவிடும் அபாயமிருக்கிறது.''

''நீ பேசறதே புரியலே.''

''சரி. ஓபனாகவே பேசறேன். என் சினேகிதி காயத்ரிக்கும் அண்ணனுக்கும் காதல் இருந்தது.''

''அதென்ன இறந்த காலம்? இப்ப இல்லியா?''

''அதுதான் புரியலே. கேட்டுச் சொல்லுங்க.''

''என்னதான் அப்பாவானாலும் சில விஷயங்களில் மூக்கை நுழைக்கக் கூடாது. இது அவனுடைய பர்சனல் மேட்டர். அவனாகப் பேசினால்தான் உண்டு.''

எழுந்து கொண்டாள்.

''உட்கார்.''

''இல்லே. நான் வேறு வழியாகப் போகப் போகிறேன்.''

''என்ன வழி?''

''சஸ்பென்ஸ்.''

''ரெண்டு பேரும் தோட்டத்தில் என்ன பண்றீங்க? மழை வரப் போகுது, உள்ளே வாங்க,'' என்ற அம்மாவின் இரைச்சலுக்கு—

இருவரும் எழுந்தனர். ''என்ன, பேச மாட்டேங்கறே?''

''உங்க உதவியை எதிர் பார்த்தேன்.''

''உன் கல்யாணத்தைப் பற்றிப் பேசினால் உதவியிருப்பேன். அண்ணனே ஆனாலும் அடுத்தவனாச்சே. அவன் பர்சனல் மேட்டரை நீயும் நானும் டிஸ்கஸ் பண்ணக் கூடாது. அது ரொம்ப தப்பு.'' அவள் கோபக் கன்னத்தைத் தட்டினார். ''ரிலாக்ஸ் மை பேபி.''

அதே சமயம்—

வாசலில் வந்து நின்ற காருக்குள்ளிருந்து இறங்கி வந்த ஆதர்ஷை நம்பாமல் பார்த்தாள் காயத்ரி.

''அப்பா இல்லே?''

''கோயிலுக்குப் போயிருக்கார். உள்ளே வாங்க, வந்துடுவார்.''

''அம்மா?''

''அவங்களும் போயிருக்காங்க. உள்ளே வரலாமே.''

''இல்லே. கோயிலுக்குப் போய்ப் பேசிக்கிறேன். வீட்டை விடக் கோயில் இன்னும் விசேஷம். நீயும் வாயேன்.''

உற்சாகமாகக் கிளம்பினாலும் தயங்கினாள். மாலை வரப் போகிறது.

''இல்லே. நான் கோயிலுக்கு வரக்கூடாது,'' என்றாள் பொய்யாக.

சிரித்தான். ''சரி, நானே போய்க் கூட்டிக்கொண்டு வரேன். இங்கேயே காத்திரு. வந்ததும் 'சம்மதம் கேட்டால் உடனே சம்மதம்னு சொல்லிடு. அது போதும்.''

''என்ன கேட்பாங்க?''

''இவனைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்பாங்க:''

திணறினாள்.

''உன் மனசு எனக்குப் புரியுது. 'இத்தனை நாளா விலகியிருந்ததுக்குக் காரணம் புரியலே. அதுதானே?''

''நோ... நோ...''

''இத்தனை நாளும் மனசு சரியில்லாமல் இருந்தது. என்னாலே ஒரு பெண் பாதிக்கப்பட்டதை என்னால் ஜீரணிக்க முடியலே. பாவப்பட்ட பெண். அப்பா இவங்களை விட்டுட்டுக் கிராமத்திலே இன்னொருத்தியோடு குடும்பம் நடத்தறார். இவளை நம்பியிருக்கிற குடும்பம். ஹார்ட் பேஷண்ட் அம்மா. சின்ன வயசில் தங்கை. அவளுக்கு வேலை போட்டுக் கொடுத்ததும்தான் மனசுக்கு ஆறுதல் வந்தது. வந்ததும் முதலில் ஞாபகம் வந்தது உன் முகம்தான். அதனாலேதான் உன்னைக் கூடப் பார்க்காமல் நேரே உங்கப்பாம்மாவைப் பார்த்துப் பேச வந்துட்டேன். இனிமே காதலுக்கு நேரமில்லே. நேரடி கல்யாணம்தான்.''

''வந்து....''

''இத்தனை நாள் நான் விலகிப் போனதுக்கு மன்னிப்புதானே? அதைக் கணவனான அப்புறம் கேட்கிறேன்.''

''அதில்லே.... வந்து....''

''என்ன தயங்கறே? எதுவானாலும் கேளும்மா. காதல் அபிப்பிராயத்திலே மாற்றமிருந்தால் கூடப் பரவாயில்லை. அப்படியே இருந்தாலும் அதைச் சொல்ல இதுதான் நேரம்.''

''நோ... நோ.... அதில்லே....''

''இப்ப நான் கோயிலுக்குப் போகட்டுமா வேண்டாமா?''

''போங்க. சந்தோஷம். உங்க பேச்சு வெற்றியடைய வாழ்த்துக்கள்.''

''பின்னே ஏன் தயங்கறே?''

அவன் போனதும் உள்ளே போனவள் நிறைய [illegible] திணறினாள்.

சொல்லியிருக்கணும். நான் சொல்லியிருக்கணும். அந்த

மாலை நேர பயங்கரத்தை நான் மறைத்திருக்கக் கூடாது!

அறைக்குள் போய் ஒடுங்கிக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் தவித்துக் கொண்டிருந்தாளோ.... வாசல் கதவு திறக்கப்படும் ஓசைக் கேட்டு எழுந்து நின்று, கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டு வெளியே போக முயலும்போது—

''அதுக்குள்ளே என்ன தூக்கம்? போய் எழுப்பிக் கூட்டிக்கிட்டு வா, அவளை,'' என்ற அப்பாவின் குரலுக்குச் சகஜமாக வெளியே போக முயலும்போது—

''அப்பா, யாராவது உங்களைக் கோயிலுக்குத் தேடி வந்தாங்களா?''

''வந்தாங்களே!''

''என்ன கேட்டார்?''

''உன்னைக் கேட்டார். இல்லே, வேற ஆள் பாருன்னு துரத்திட்டேன்.''

''அப்பா....''

''பின்னே என்னம்மா? முன்னே பின்னே தெரியாத ஆள் வந்து பெண் கேட்கிறதெல்லாம் நாவலிலேயும் சினிமாவிலேயும் தான் நடக்கும். என்கிட்டே நடக்குமா? நெவர்.''

''அப்பா, என்ன காரியம் பண்ணிட்டீங்க?'' என்று பதறியவள்—

அப்பா சிரிக்க, அம்மாவும் சேர்ந்து கொள்ள,, மூன்றாவதாக அந்தச் சிரிப்பு அடையாளம் தெரிந்ததும் உறைந்து போனாள்.

இங்கேயேவா இருக்கிறார்.

''ஏண்டி குருட்டு முண்டம்! கண் எதிரிலேயே இருக்கிறவரை வந்தாரா போனாரான்னு கேட்கிறே அசட்டுத்தனமா? போடி. போய், ஏதாவது குடிக்கக் கலந்து கொண்டு வா.''

''வெட்கப்பட்டு உள்ளே ஓடிட்டா. நீதான் கொண்டு வாயேன்டி.'' அப்பா கேட்பது கேட்டது. ''அப்புறம் சொல்லுங்க, மாப்பிள்ளை, எப்ப வந்து பேசட்டும்?''

நிறைய மூச்சுத் திணறினாள்.



4

ரமேஷ் வரும்போதே புயலாக வந்தான்..''அநியாயம்! இது ரொம்பவும் கொடுமை!''

ஆதர்ஷ், ''ஹலோ வில்லன். உட்கார்ந்து கத்தேன். அதுவும் காப்பி கொண்டு வரச் சொல்றேன். சாப்பிட்டுத் தெம்பாகக் கத்து,'' என்றான்.

''துரோகம்.''

''இல்லே. கல்யாணம். உன் காதல் வெறும் மழலைக் காதல். அது தெரிஞ்சும் · பிடிவாதமாகச் சண்டை போடறாய்.....''

ரமேஷ் புலம்பலாகக் கேட்டான். ''இனிமேல் என் கதி என்ன? முறைப் பெண்ணே விலக்கிவிட்ட பிறகு என்னை எந்தப் பெண் காதலிக்குமாம்?''

''உன்னைப் போலவே பிடிவாதக் காதல்காரி ஒருத்தி இருக்கிறாள். அவளை முயன்று பாரேன். ஷீலா. சொல்லிப் பார். கிட்டாரில் ஜீ கம்பியைத் தட்டி விட்ட மாதிரியில்லே?''

அவன் கண்களில் கனவு வந்தது.

'காப்பி?'

''சொல்லு.''

''அது சரி, அப்பவே வந்துட்டது. எடுத்துக் குடிக்கச் சொன்னேன்.''

''ஷீலா!'' சொல்லிப் பார்த்தான். ''நிஜமா எனக்குள்ளே, ஒரு பரவசம் வருகிறது. அடர்த்தியான மூடு பனிக்குள் நுழைந்து காணாமல் போனது போல ஒரு சந்தோஷம் சிலிர்க்கிறது.''

''அதே நினைப்போட எழுந்து போ. சாயங்காலம் எங்கிருப்பாய்?''

''கண்ணகி சிலைக்குக் கீழ் அமர்ந்து கண்ணீர் வடிப்பதாக இருந்தேன்.''

''கண்ணீர் விடாமல் உட்கார்ந்திரு. உன்னைத் தேடி ஷீலா வருவாள்.''

''வருவாளா?''

''உத்தரவாதமே தருகிறேன். வருவாள்.''

கணவுடன் எழுந்து நடந்து போனான்.

''என் ஜென்மம் சாபல்யமடைந்தது போல உணர்கிறேன், ஆதர்ஷ்,'' என்றாள் ஷீலா.

''ஏன்?'' ஆதர்ஷ் கேட்டான். ''என்ன ஆச்சு?''

''நீ கூப்பிட மாட்டாயான்னு தவமிருந்தேன். உன் போன் அழைப்பு என்னைப் புளகாங்கிதமடையச் செய்கிறது. எப்ப கல்யாணம்?''

''அடுத்த வெள்ளிக் கிழமை.''

''நாளைக்கா?''

''இல்லே. அடுத்த வெள்ளிக் கிழமை எனக்குக் கல்யாணம்.''

''நமக்கு என்று சொல்லேன்.''

''நோ சான்ஸ். ஏற்கனவே முடிவாகிப் பத்திரிகைகூட அச்சாகிக் கொண்டு இருக்கிறது.''

''குறும்புதான் உனக்கு. இப்படித்தான் ஒரு வாரம் இருக்கிறச்சே கல்யாணப் பெண்ணுக்குச் சொல்கிறதா? என் அனுமதியில்லாமல் பத்திரிகை வேறு.''

''இந்தப் பத்திரிகைக்கு உன் அனுமதி எதற்கு? உன் கல்யாணப் பத்திரிகை அடிக்கும் போது அவசியம் கேட்பார்கள்.''

''வாட் டு யூ மீன்?''

ஆதர்ஷ் கண்களைத் தாழ்த்தி மூடித் திறந்தான். ''ஐ மீன் இட். எனக்கும் என் காதலிக்கும் கல்யாணம்.''

''அந்தப் பெண்ணா? காயத்ரி?''

''ஆமாம். வாழ்த்த மாட்டாயா?''

''நாசமாகப் போகக் கடவது.''

''தாங்க்ஸ்.''

''அப்ப எனக்கு என்ன வழி? அதையும் நீயே சொல்லிரு, என் தேவகுமாரனே.''

''நேராகப் பஸ் பிடிச்சுக் கண்ணகி சிலைக்குப் பக்கத்திலே போ. அங்கே இன்னொரு தேவகுமாரன் உனக்காகக் கண்ணீர் விட்டபடி இருப்பான். பேர் ரமேஷ்.''

''மாட்டேன்.''

''என்ன மாட்டாய்?''

''பஸ்ஸில் போக மாட்டேன். தலையெழுத்தா? டீலக்ஸ் காண்டெஸா காரில்தான் போவேன்.''

''இப்பவாவது வாழ்த்தி விட்டுப் போயேன்.''

''வாழ்ந்து தொலை.''

''தாங்க்யூ!''

இவள் போனதும் போன் வந்தது. ''டாக்டர் சுகுமாரி அனந்தராமன் பேசறேன்.''

''உங்களை எனக்கு அடையாளம் தெரிகிறது. சொல்லுங்க, டாக்டர்.''

''வாழ்த்துக்கள். காயத்ரி சொன்னாள்.''

''நன்றி.''

''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும். எப்ப வர முடியும்?''

''எதைப் பற்றி?''

''உங்கள் வருங்காலத்தைப் பற்றி. வருங்கால அமைதிக்காக.''

''புரியலே.''

''புரியும்படி சொல்கிறேன். நேரில் வாங்க.''

''ஆறு மணி மாலை?''

''ஸூட்ஸ் மீ.''

கடற்கரை ஹோட்டலில் கான்டெஸாவை நிறுத்தி விட்டு, இறங்கி நடந்து போனாள் ஷீலா. கண்ணீர் விடும் தேவகுமாரன்–ஹூ த ஹெல் ஹி ஈஸ்?

கண்ணகி சிலை பக்கத்தில் ஐஸ் க்ரீமுக்காக அடம் பிடித்துக் கொண்டிருந்தது அந்த ஐந்து வயசு வாண்டு.

''சேச்சே! இதுவாக இருக்காது,'' என்றவள், ''மிஸ் ஷீலா!'' என்ற அடக்கமான அழைப்புக்கு திரும்பிப் பார்த்தாள்.

சிமெண்ட் பெஞ்சிலிருந்து கம்பீரமாக எழுந்து நின்ற ரமேஷைக் கண்டதும், அவள் காதல் மாறியது. அவள் காதல் அடிக்கடி மாறும் தன்மையுடையது. ''நான்தான் அது,'' என்றவளைக் கண்டதும்–

அவன் காதலும் மாறியது.

''நான்தான் கே.டி. ரமேஷ்.''

''கேடி?''

''அதில்லே. காதல் தோல்வி ரமேஷ் என்றேன்.''

மகிழ்ந்து போனாள். ''அட! நம்ம கேஸ்தான்.''

''நான் உன்னைக் காதலிக்கலாமா?''

''இன்னுமா ஆரம்பிக்கலே?''

காரில் போகும்போது காயத்ரி கேட்டாள். ''ஷாப்பிங் போகிறதாகச் சொல்லிக் கூட்டி வந்து இதென்ன அடையாறு பக்கம் வந்துட்டீங்க?''

''ரெண்டு நிமிஷத்திலே புரியும்,'' என்றவன், சரியாக இரண்டாவது நிமிடம் பிரேக் போட்டு நிறுத்திய இடம் ஒரு வீட்டின் போர்டிகோ.

மரங்களுக்கு நடுவே மறைந்திருந்தது அந்த வீடு. வீட்டுக்கு நேர் எதிரே விசிறி வாழை தோகை விரித்திருந்த இரண்டு பக்கமும் துவாரபாலகர்கள் மாதிரி உயர வளர்ந்த

அசோக மரங்கள்.

''யார் வீடு இது?''

''இந்த வீட்டை நான் வாங்கிட்டேன். ஏழு லட்ச ரூபாய்க்கு.''

''ஏன்?''

''கல்யாணமான ராத்திரியே இங்கே வந்துடப் போறோம்.''

''தப்பு.''

''என்ன தப்பு?''

''உங்க வீட்டுப் பெரியவங்க என்ன சொல்லுவாங்க? கல்யாணமானதுமே மகனைப் பிரிச்சுட்டதாகச் சொல்ல மாட்டாங்களா?''

''கவலையே படாதே. எல்லோரும் இங்கேதான் குடிவரப் போகிறோம். சாயங்காலமானால் மாடிக்குப் போயிடுவோம். ஏ.ஸி. ரூமில் விடியும் வரை இரு.''

''ஏன்?''

''ஒரு பிரைவசிக்குத்தான்.''

சந்தேகமாகப் பார்த்தாள். (விஷயம் தெரியுமோ. மாலையானால் பயம் வரும் விஷயம்?)

''என்ன பார்க்கிறே? பிடிக்கலையா?''

''பர்ஸ்ட் கிளாஸா இருக்கு. இப்ப இருக்கிற வீட்டுக்கென்ன?''

''அந்த இடம் போதாது. என் தம்பி வேறே வரப் போகிறான்.''

''யார் சத்தீஷா?''

''அவன் அண்ணன். இவன் தம்பி ஹரி. லண்டனிலே டிகிரி முடிச்சு திரும்பப் போகிறான். வெளிநாட்டிலேர்ந்து அண்ணன் வேற வருவான். அதுதான் இந்தப் பெரிய தோட்டத்துப் பங்களா? ஓ.கே?''

''ஓ.கே.''

''இப்ப ஷாப்பிங் போகலாம். எங்கே? புடவைக் கடையா?''

''நோ. உங்களுக்கு சூட்டிங் எடுக்கணும். என் புடவை பற்றிய பிரசினையில்லை. அம்மா பாதி காஞ்சீபுரம் ஊரையே அலமாரியிலே அடுக்கிட்டாங்க. நகை பண்ணி ரெடியாயிருக்கு.''

''உன்னைக் கேட்காமல் ஒரு காரியம் பண்ணி விட்டேன்.''

''என்ன அது?''

''சம்பிரதாய சடங்குகள் எல்லாம் இல்லாமல்'

சிம்பிளாக ரிஜிஸ்டர் மேரேஜ்.''

''புரியலே.''

''பதிவுத் திருமணம். காலையிலே எட்டு மணிக்கு. மதியம் ரிசப்ஷன் லஞ்ச்.''

''அது ஆங்கிலத்தில் சொன்னதே புரிந்துவிட்டது. ஆனால் அதிலென்ன ஒளிவு மறைவு.. ஹரிபரி?''

''மத்தியானம் ஃப்ளைட்டிலேயே பெங்களூர் போகிறோம். அங்கேயிருந்து பம்பாய். பம்பாயிலிருந்து பறக்க ஆரம்பித்தால் இருபது நாளைக்கு நாடு விட்டு நாடு பறந்து ஹனிமூன். நமது முதல் குழந்தை மேல்நாட்டில்தான் உருவாகப் போகிறது.''

அபரிமிதமாக வெட்கப்பட்டாள். ''ச்சீய்!''

''முழுசாக ஒரு வாரம் கூட இல்லே. யார் யாரைப் பார்க்கணுமோ பார்த்துக் கல்யாணத்துக்குக் கூப்பிடு. அப்புறம் நேரமிருக்காது.''

மனசுக்குள் சந்தேகம் வந்தது. என்ன, எல்லாமே புயல் வேகத்தில் நடக்கிறது? ஒரு வேளை ஏதும் 'காலத்தின் கட்டாயமா?' என்று கேட்க விரும்பியும் கேட்காமலிருந்தான். 'ஒரு வேளை அந்த அனீதா!' (சே, இருக்காது.)

''என்ன திடீர் மௌனமாயிட்டே?''

'உம்?'

''என்ன திடீர்னு அமைதியாயிட்டேன்னு கேட்டேன்.''

''ஒண்ணுமில்லே. நத்திங்.''

''வாய் சொன்னாலும் முகம் சொல்லலையே?''

''அதுக்காகப் பைத்தியம் மாதிரி சதா இளிச்சுகிட்டிருக்கணுமா என்ன?''

ஆதர்ஷ், ''சரி, அதுக்கேன் அப்ஸெட் ஆகிறே? வா, போகலாம்.''

காரில் போகும்போது கேட்டாள். ''நான் யாரையாவது பார்க்க ஆசைப் பட்டால் கூட்டிப் போவாய்தானே?''

''உத்தரவுப்படியே. சொல், யாரைப் பார்க்கணும்?''

''ராயப்பேட்டையிலே—அந்தப் பெண் அனீதா வீட்டுக்குப் போகணும்.''

''போகலாமே. ஆனால் இப்பவேவா?''

''இந்த நிமிஷமே.''

பார்த்தான். ''சரியாகப் புரியத்தானில்லை. ஆனாலும் போகலாம்.''

காரைத் திருப்பினான். சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரே புதிய ரயில்வே பாலம் உருவாகிக் கொண்டிருக்க, சிறைச்சாலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

சின்னதாய் முனீஸ்வரன் கோயிலைக் கும்பிட முயன்றவனின் கையைத் தட்டி விட்டாள்.

''ஏன்? உனக்குத் தெய்வ நம்பிக்கையில்லையா?''

''நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் தட்டி விட்டேன். பூட்டின கோயிலைக் கும்பிடக் கூடாது. கோபுர தரிசனம் மட்டும்தான் பார்க்கணும்.''

பக்கவாட்டில் நின்ற காமராஜர் சிலைக்கு 'ஹாய்' சொல்லும்முன் பாலம் கடந்து பெரியார் திட்டமாக அமர்ந்தார். 'ஹலோ!' என்பதற்குள், அண்ணா, 'இப்படிப் போ!' என்றார். காம்ப்ளெக்ஸாக உருவாகும், வெலிங்டனைத் தொட்டு சரிந்து திரும்பி ஸ்பென்ஸர் கட்டிடத்தை, 'ஹூம்! பழைய மாதிரி கம்பீரமில்லை' என்று சொல்லி, பட்லோஸ் சாலை போய் ஒடித்துத் திரும்பி ஒரு நாளில் இரண்டே தரம் மட்டும் சரியாக மணியைக் காட்டும் நின்று போன கடிகாரத்தை வலம் வந்து ஆஸ்பத்திரியைக் கடந்து சின்னச் சந்தில் திரும்பி நிறுத்தினான். ''ஹியர் வீ ஆர்.''

''இதுதான் அவங்க வீடா? பெரிசாகத்தான் இருக்கிறது.''

''இது ஓனர் வீடு. அவங்க வீடு பின்னால் அவுட் அவுஸ். திஸ் வே, ப்ளீஸ்.''

சின்னத் தடியை ஊன்றி நடந்து கொண்டிருந்த அனிதாவிடமிருந்து தடியைப் பிடுங்கினான். ''நாற்பது வருஷம் கழிச்சுத் தேவைப்படும். உதவி. இப்போ எதற்கு?''

''ஆபீஸில் விந்தி விந்தி சிரமப்பட்டு நடக்கிறதுக்கு இங்கேயாவது கொஞ்சம் சுதந்திரமாக உலாவலாமேன்னுதான்.''

''யார் வந்திருக்கிறது, பார்த்தாயா?''

''ஓ! நீங்களும் வந்திருக்கீங்களா? வாங்க, வணக்கம். மம்மீ!''

''என்ன மகளே,'' என்றாள் அம்மா-அசரீரியாக.

''வந்து இவங்களை உள்ளே கூட்டிக் கொண்டு போயேன்,'' என்று வந்த அம்மாளிடம் பச்சை மீனின் வீச்சமிருந்தது.

''வாங்க.''

''இல்லே. எங்களுக்கு நேரமாகிறது. இன்னொரு தரம் வர்றோம்.''

ஆதர்ஷ். ''இதைச் சொல்லத்தான் வந்தியா? இவங்க ஸ்பெஷல் ஜிஞ்சர் டீ ஸ்டிராங்காயிருக்கும். குடிச்சிட்டே போகலாம். உள்ளே போ,'' என்றான்.

வாசலுக்குப் போனவள் திரும்பிப் பார்க்கும்போது, அந்த அனிதாவை, அணைப்பாய் நடத்தி உள்ளே கூட்டி வந்து

கொண்டிருந்தான் ஆதர்ஷ்.

''அன்றைக்கொரு சின்னப் பாப்பா இருந்ததே?''

''ஜூலிதானே? பக்கத்து வீட்டுக்கு ஆடப் போயிருப்பாள். அம்மா, போய்க் கூட்டிட்டு வாயேன்.''

''அவங்க டீ போடட்டும். நானே போய்க் கூட்டிக் கொண்டு வரேன். ஓனர் வீடுதானே?'' என்று அவன் போனதும், வீட்டை ஒரு நோட்டம் விட்டாள் காயத்ரி.

ஒரே அறை என்றாலும் சுத்தமாக இருந்தது. மர ஷெல்ப் மீது நின்ற நிலையில் ஆசி வழங்கும் யேசுநாதர் முன்னால் மெழுகுவத்திகள் முழுவதுமாக கரைந்தும் உருகியும் சிதைந்திருந்தன. போன கிறிஸ்துமஸுக்குக் கட்டிய காகிதத் தோரண அலங்காரங்கள் இன்னமும் மீதமிருந்தன.

அனீதா, ''வாழ்த்துக்கள்,'' என்றாள்.

''எதற்கு?''

''கண்ணியமான கணவனுக்கு மனைவியாகப் போகிறாயே, அதற்கு என் வாழ்த்துக்கள்!''

''அடுத்த வாரத்துக்கு இப்ப என்ன வாழ்த்துக்கள்? நேரில் வந்து சொல்ல மாட்டியா?''

கண்ணீருடன் பார்த்தாள். ''உற்சாகமும் சந்தோஷமுமாக இருக்கிற நல்ல விழாவில்...'' (விந்தி விந்தி நடந்து காட்டினாள்)–''இப்படியொரு திருஷ்டிபரிகாரம் தேவைதானா?''

''ஸில்லி! நீ வருகிறாய். வேற காரணம் எதுவுமானால் வேண்டாம்.''

அனீதாவின் கண்களில் கேள்வி வந்தது. ''வேறு காரணம் என்ன? எனக்குப் புரியலே.''

''புரியலையா, புரிஞ்சுக்க விரும்பலையா?'' காயத்ரியின் குரலில் இரக்கம் குறைந்தது. ''ஒரு நாளாவது என்னைப் பார்க்கலைன்னா துடிச்சுப் போகிற ஆதர்ஷ் ஒரு மாத காலமாக என்னைப் பார்க்கவில்லை. நான் பார்க்க முயன்றபோதுகூட அனுமதிக்கவில்லை. அந்த அளவுக்கு உனக்காக உன் கூடவே இருந்தார். அவருக்கு மெச்சூரிட்டி வந்திருந்தாலும் இன்னமும் உனக்கு சலன வயசு. அதனாலே கேட்கிறேன் அவரை விரும்பறியா? எனக்குப் பதில் ஒரே வார்த்தையில் வேணும்.''

நிமிர்ந்து அவள் கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தாள். ''வரேன்,'' என்றாள் ஒற்றைச் சொல்லாக.

ஷோகேஸ் பொம்மையைத் தூக்கி வருவதைப் போல தூக்கி வந்தான் அந்த ஜூலியை.

''விடு.... என்னை விடு....''

''முரண்டு பிடிக்கிறே? ஆண்ட்டிக்கு ஹலோ சொல்லு.''

தயங்கிவிட்டு அந்தக் காயத்ரி கொடுத்த சாக்லேட்டுக்கு அக்காவைப் பார்த்து அவள் வாங்கிக்க என்றதும் வாங்கிக் கொண்டது. ''தாங்க் யூ ஆன்ட்டி.''

''தாங்க்ஸ் மட்டும்தானா? விலை தரமாட்டியா?''

''விலை!'' என்று கேட்டவள், அந்த காயத்ரி காட்டிய கன்னத்தில் பொச் பொச்சென்று முத்தமிட்டாள்.

அவள் அம்மா தந்த கேக்கைச் சாப்பிட்டார்கள். டீயைக் குடித்து, ''வாவ்!'' என்றார்கள், கிளம்பினார்கள். ''வரோம்.''

''நீங்க காருக்குப் போங்க, டியர். நான் இதோ இப்பவே வரேன்.'' அவன் போனதும் சொன்னாள். ''என்னைத் தப்பாக நினைக்காதே. அப்படியே உனக்கு ஒரு ஆசை இருந்து அது அப்புறம் தெரிய வந்தால் எரிச்சலாக இருக்கும். அதனால்தான் இப்பவே கேட்டு இல்லேன்னு ஆயிட்டதும் நிம்மதியாயிருக்கும் பார். நான் எப்பவுமே எதையுமே பிராக்டிகலா பார்க்கிறவள்.''

''ஹலோ, வர்றியா இல்லே, இங்கேயே தங்கி நாளைக்கு வரப் போறியா?''

''இதோ வந்துட்டேன்.... வரேன்,'' என்றவள் வெளியேறிப் போக—

அந்த அனிதா நின்றாள். நின்று கொண்டே இருந்தாள்.

''மகளே, என்னம்மா பிரமை பிடிச்சு நிக்கறே?''

''உம்?''

''என்ன பிரமை பிடிச்சாற் போல நிக்கறேன்னேன்?''

காரணமில்லாமல் எரிச்சல் வந்தது அவளுக்கு. ''இப்ப என்ன பண்ணணும் எங்கிறே? டான்ஸ் அண்ட் ஆல் தெட்?''


''ஏம்மா கோவிச்சுக்கறே? மாத்திரை தீர்ந்து போச்சு. வாங்கிட்டு வரேன்னு சொன்னியே?''

''இப்போ போகிற நிலையிலே நான் இல்லே. நீயே போய் வாங்கிக்க.''

''ஒரு நாள்கூடத் தவறாமல் சாப்பிடணும்னு டாக்டர் சொன்ன மாத்திரை. போன நாலு நாளாகவே சாப்பிடலே.''

''என்னைத் துன்புறுத்தாதேம்மா. இன்னிக்கு என்னை விட்டுடு. நாளைக்கு வாங்கிட்டு வரேன். ப்ளீஸ்!''

மறுநாள் மட்டுமில்லை. ஒரு வாரம் வரையிலும் தினம் மறந்து போனாள். ''சாரிம்மா. ஏதோ கவனம் நேரா வந்துட்டேன். உனக்கு ஒண்ணும் பிரசினையில்லையே?''



5

கல்யாண நேரத்தில்தான் அந்த ஹரியைப் பார்க்க முடிந்தது. போன வருஷம்தான் டீன்-ஏஜைக் கடந்தவன். மீசைக்குப் புதியவன் என்பதை நிரூபிக்கும் பூனை மீசை. குழந்தையின் கண்கள் போல பெரிய பளபளப்பான கண்கள். சிரிக்கும் போதை விட புன்முறுவலிலேயே அழகாகத் தெரிந்தான். 'என்னடா கண்ணா?' என்று கூப்பிடும் ஆசை வந்தாலும் கூட மைத்துனர் என்கிறதாலே 'டா'வை தவிர்த்து 'என்ன ஹரி?' என்றே சொல்ல வேண்டி வருகிறது. கல்யாண ரிஜிஸ்ட்ராரை மண்டபத்துக்கே வரவழைத்து (பெரிய லெட்ஜரைத் தூக்கி வர உதவினான்.) ஒரு நிமிடம் கூட நிற்காமல் சுற்றிச் சுற்றி வரும் அந்த ஹரி ரொம்பவும் ஈர்க்கவும், ''ஹேய் ஹரி. ஐ லைக் யூ. உங்க அண்ணாவுக்கும் முன்னால் உன்னைச் சந்திச்சிருந்தா நீயே எனக்குத் தாலி கட்டியிருப்பாய்!'' என்று சொல்லி அவன் வெட்கப்படுவதை ரசித்தாள்.

ஆதர்ஷ்தான்—''ஓ! காட். இப்பதான் முதல் முதலாகத் தம்பி மேல் பொறாமையே வருகிறது,'' என்றான்.

மாமியார் முகம்தான் என்னமோ போலாயிற்று. ஆரத்தி எடுக்கும்போது, ''டே ஹரீ, நீயும் வந்து நில்லு. உனக்குத்தான் முதல்ல திருஷ்டி கழிக்கணும்,'' என்றார்.

விமான தளத்தில்—விடை பெறும் நேரம் வரும்போது—

''ஹரி, நாங்க திரும்பறச்ச இருப்பாயா? ஊர் திரும்பிடுவியா?''

''அவன் எங்கே போகிறான்? இனிமேல் மெட்ராஸ்தான் பிஸினஸில் எனக்குத் துணையாக இருப்பான்.''

''வரேண்டி சுமதி, உனக்குத்தான் சிறப்பு நன்றி சொல்லணும்.''

''இப்ப வேணாம். என் கையில் விளையாட ஒரு குழந்தையைக் கொடுத்து அப்புறமாகச் சொல்லு. வாங்கிக்கறேன் உன் நன்றியை.''

''ச்சீய்...'' தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டாள். ''வரேம்மா.''

''போய் வா, கிளவுஸ் இல்லாம அங்கே யாருக்கும் கை குலுக்காதே. கை குலுக்கினால் கூட எய்ட்ஸ் தொற்றிக்குமாம்.''

''உன்னைத் திருத்தவே முடியாதும்மா.''

தேனிலவு நாட்கள் உற்சாகமாகவே இருந்தன. ஷெர்ட்டான் ஹோட்டலின் சிறப்பு ஸ்யூட். சாப்பிடும் போது கேட்டாள், ''என்ன இது?''

''தவளைக் கால்.''

''த்தூ,'' இன்னொன்றை எடுத்து அருவருப்பாகப் பார்த்தாள். ''இது?''

''பன்றிக் கறி.'' எறிந்து விட்டாள்.

''தின்கிற மாதிரி எதுவுமே கிடைக்காதோ?''

''ஃபூ! என்ன வேணுமோ போய் எடுத்துக்க. அந்தப் பக்கம் வெஜிடேரியன்.''

சாப்பிட்டதும் சாவியைக் கொடுத்தான். ''நீ ரூமுக்குப் போ. நான் போய் டிக்கெட் கன்ஃபர்ம் ஆச்சான்னு பார்த்துட்டு வர்றேன்.''

''இந்த ராத்திரியா?'' தயங்கினாள். ''காலையில பார்த்துக்கலாமே?''

''அது சரி. விடிய விடிய ஃப்ளைட். நீ போ, நான் வந்துடறேன்.''

''பயமாயிருக்கு, நீங்களே ரூம் வரை வந்து விட்டுட்டுப் போங்களேன்.''

''நாட்டுப்புறம் மாதிரி பயப்படாதே, டார்லிங். லிப்டில் அஞ்சாவது மாடிக்குப் போய் இடது பக்கமாகத் திரும்பினால் இரண்டாவது ரூம். போ, போ.''

அவன் போனதும் வெளிச்சத்தில் ஒரு ஐடியாவுடன் நடந்து லிப்ட்டை நாடினாள். பித்தானை அழுத்தியபோது வந்த அந்தப் பெண்கள், ''இதென்ன திறந்தே இருக்கிற லிப்ட்டைக் கூப்பிடறீங்க?'' என்றார்கள் மெலிதான கேலியை இழையவிட்டு.

''ஸாரி, கண்ணாடியில்லாமல் எனக்கு எதுவும் தெளிவாகத் தெரியாது.''

''நாங்க உதவறோம்,'' கைப்பிடித்து லிப்டில் ஏற்றினார்கள். ''எந்த ப்ளோர்?''

''அஞ்சு.''

''நாங்க நாலில் இறங்கிடுவோம். அப்புறம் நீங்க அஞ்சில் நிற்கும்போது இறங்கிக்குங்க. ரூம் நம்பர் தெரியுமா? இல்லே துணைக்கு வரணுமா?''

அவர்கள் கேலி பிடிக்காமல் போகவே, ''நோ,

தாங்க்ஸ்,'' என்றாள். நாலில் நின்று—ி ` நகர்ந்து நின்றதும் தடவிப் பார்த்துக் கதவு திறந்தது அ_)ந்து வெளிப்பட்டாள். இடது பக்கம் கவனமாகத் திரும்பி நடந்தாள். ஒன்று இரண்டு... தடவியறிந்து சாவியைச் செலுத்தித் திருக முயன்று தோற்றாள். பூட்டு திறக்க மறுத்தது. சற்றுப் பொறுத்துக் கதவு திறந்த பெண் இவளைப் பார்த்ததும் திரும்பிப் பார்த்து ஆங்கிலத்தில் கத்தினாள்.

''எத்தனை துணிச்சல்! என்னையும் வரச் சொல்லி வேறு ஒரு பெண்ணையும் வரச் சொல்கிறாயா? துரோகி கணவனே.''

''ஸாரி'' இவள் சங்கடமாகச் சொன்னாள். ''ஐம்பத்திரண்டாம் நம்பர்தானே இது?''

''அது எதிர் ரூம். நம்பர் ப்ளேட்டைப் பார்க்காமலா சாவி விட்டுத் திருகுகிறது? ஸ்டுபிட்.''

''ஸாரி, கண்ணாடியில்லாமல் என்னால் எதையும் பார்க்க முடியாது. ப்ளீஸ் மேடம். எனக்கு உதவுங்களேன்.''

சாவியைப் பூட்டிலிருந்து இழுத்து உருவி, இவளையும் முரட்டுத்தனமாக இழுத்துப் போய்ப் பூட்டைத் திறந்து உள்ளே தள்ளினாள். ''இனிமேல் கண்ணாடியில்லாமல் வெளியே வராதே!'' என்ற உபதேசத்துடன், இவளுடைய நன்றியையும் எதிர்பாராமல் போய் விட்டாள்—கதவை அறைந்து சாத்தி.

உள்ளே போய்ச் சிரமத்துடன் கட்டிலில் அமர்ந்தவள், யாரோ கதவைத் திறந்து உள்ளே வரவே, ''அதுக்குள்ளே வந்துட்டீங்களா?''

''மேம் சாப்,'' என்றவன் ஹிந்தி அந்நியன். ''உங்கள் சாவி வெளியே கதவிலேயே தொங்குகிறது, இந்தாருங்கள்.''

நீட்ட முயன்ற கையை இழுத்துக் கொண்டாள் அச்சமாக.

''வ ஹீ ர்க்தோ.''

அவன் போய்க் கதவை அறைந்து சாத்தியது கேட்டதும் நிம்மதிக்கு மாறினாள்.

'கணவன் வந்ததும் சொல்லிவிட்டால் என்ன?' என்ற நினைப்பை அழித்தாள். 'தன் மனைவி அதுவும் இளம் மனைவி வியாதிக்காரி என்பதை எந்தக் கணவனும் ஜீரணிக்க முடியாது.' என்று நினைப்புச் சுத்தமாக அழித்தது.

'பதினைந்து நாள்! அதுவும் அந்நியப் பிரதேசத்தில் எப்படிச் சமாளிக்கப் போகிறேன்' என்ற நினைவே நடுங்க வைத்தது.

அவன் வந்ததும் அழுது விட்டாள். ''என்னைத் தனியாக விட்டுடாதீங்க. எனக்குப் பயமா இருக்கிறது.....''

''சரி, சரி. இனிமேல் உன்னை விட்டுப் பதினைஞ்சு நாளும் நகர மாட்டேன். ஒரு குழந்தையைக் கூட்டிட்டுப் போகிற மாதிரிக் கைப்பிடிச்சுக் கூட்டிட்டுப் போறேன், ஓ.கே.''

மறுநாள் விடிய விடியக் கைப்பிடித்துக் கூட்டிப் போய்க் காரில் ஏற்றிப் பிறகு விமானமேற்றி லண்டனில் இறங்கியதும் கேட்டாள்.

''இங்கேதான் ஹரி படித்தாரா?''

''பொடிப் பயல். அவனுக்கென்ன 'ரா'? படிச்சானான்னு கேளு போதும். என்ன இங்கே வந்தும் ஹரி புரீன்னுட்டு.''

பகலெல்லாம் சுற்றினார்கள். அரண்மனை காவல் மாறுவதை ரசித்தாள். தேம்ஸ் நதிக் கரையில் நடுங்கிக் கொண்டே (குளிர்! குளிர்) நடந்தார்கள். டோவர் முனையிலிருந்து ஹோவர்கிராஃப்டில் பறந்து கலோ துறையில் இறங்கி பார்லி தோட்டங்களை இரண்டு பக்கமும் பறக்க விட்டுப் பாரீசுக்குப் போனார்கள்.

''என்னை ரூமில் விட்டு நீ போய். இரவில் பாரீஸ் அழகைப் பார்.''

''தனியாகவா? என் கற்புக்கு ஆபததாச்சே! மாம்பலமில்லேம்மா இது, பாரீஸ்.''

''என் கணவரை எனக்குத் தெரியும்,'' என்றாள். ஆனால் அவன் திரும்பும் வரை விழித்திருந்தாள் தவிப்பாக.

மெல்போர்னில் ''கோவிலுக்குப் போய் வரலாம்,'' என்று இவள் சொன்னபோது மறுத்துவிட்டான். ''திரும்பறதுக்குள்ளே இருட்டிப் போயிடும். உனக்குத்தான் மாலையானால் பயம் வருகிறதே!''

அச்சமாகப் பார்த்தாள்.

''நாளைக்குப் போகலாம். காலையில் தெய்வ தரிசனம் நல்லது.''

''இரவில் ஊர் சுற்ற வரல்லைன்னு கோபமா டியர்?''

''சே, சே. அதெல்லாமில்லை. இந்த ஊர் இருட்டு வாழ்க்கையெல்லாம் பார்க்க நம் ஊர்ப் பெண்களுக்கு ஆகாது.''

''தப்பா நினைக்கிறீங்களா?''

''இதில் பாரேன். இதில் தப்பாக நினைக்கிறதுக்கென்ன இருக்கு?''

ஊர் திரும்பும் போது இரண்டு பேரும் உற்சாகத்தின் விளிம்பிலிருந்தது கண்டு எல்லோர்க்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

குடும்பம் பண்ணை வீட்டுக்கு மாறியிருந்தது.

வீட்டுக்கு போனதும் கேட்டாள். ''அதென்ன மாமி ஹரியை ஏர்-போர்ட்டில் காணலை?''

''வந்ததும் வராததுமா அவனைப் பற்றி என்ன பேச்சு?'' என்று காரணமின்றி எரிந்து விழும் மாமியார் வித்தியாசமாகத் தெரிந்தார். ''எந்தப் பாவி கண் பட்டதோ. இப்ப ஆபரேஷனுக்குப் போயிருக்கான்.''

''என்ன மாமி? என்ன ஆச்சு?''

''பெரிசா நீ பதறிப் போகிற அளவுக்கு ஒண்ணுமில்லே. டான்சில் வளர்ந்து அவஸ்தைப் பட்டான். நேத்துத்தான் ஆபரேஷனாச்சு.''

''எந்த நர்ஸிங்ஹோம்?''

''ஏன்? போய் உடனே பார்க்கப் போகிறாயாக்கும்? வேணாம். அவனே நாளைக்குக் காலையிலே வந்துடுவான். இங்கே வைச்சே பாரு.''

''சுமதி எங்கே?''

''நீங்க இப்படிப் போன கையோட அவளும் அவளோட அண்ணனோட வெளிநாடு போயிட்டா, வருவா.''

''அப்ப வீட்டில் நீங்களும் ஹரியும் மட்டும்தானா இருந்தீங்க?''

''ஏன்? எதுக்குக் கேட்கிறே?''

''இல்லே, இவ்வளவு பெரிய ஃபாம் ஹவுஸிலே தனியாக இருக்கப் பயமாயிருந்திருக்குமே.''

''எங்களுக்கென்ன பயம்? நானும் அவரும் நேத்து பூராவும் வீட்டைப் பூட்டிட்டு நர்ஸிங் ஹோமிலதானிருந்தோம். என்ன இப்ப?''

மாலை ஆறாகி இருந்த போது அம்மாள் சொன்னாள். ''இப்ப இந்தக் காப்பியை குடிச்சிக்க. ஆண்பிள்ளைங்க வந்ததும் எட்டு மணிக்கு சாப்பிட இறங்கி வந்தால் போதும். அதுக்குள்ளே நான் கோவில் வரை போயிட்டு வந்துடரேன். டிரைவர், வண்டி எடு.''

''மாமி. எனக்குப் பசிக்கும். சீக்கிரம் ஏழு மனிக்கே சாப்பிட்டுடரேனே.''

''குடும்பப் பெண் பேசர பேச்சா இது? எங்க வீட்டில ஆண்பிள்ளைங்க சாப்பிடாம பெண்கள் சாப்பிடர பழக்கமில்லே. எல்லாம் அப்புறம் சாப்பிடலாம். போ. பயப்படாதே. காவல்காரன் வேலைக்காரனெல்லாமிருக்காங்க.''

தவிப்புடன் மாடி ஏறிப் போனாள்.

கண்ணாடி எதிரே அமர்ந்து கொண்டாள். வெகு நேரம் வரை தன்னையே பார்த்தாள்.

பார்வை சற்றே கலைந்தாற் போலாகவே, பயந்தாள். நேரமாக ஆகப் பயம் அதிகமாயிற்று. கட்டிலில் சாய்ந்து படுத்தவள் எப்போது தூங்கிப் போனாளோ— கண்விழித்தபோது மாமியார் உலுக்கிக் கொண்டிருந்தார். ''எல்லாம் வந்தாச்சு, வாடி.''

''அவர் வந்தாச்சா?''

''இல்லே, அவன் வர நேரமாகுமாம். எல்லாரையும் சாப்பிடச் சொல்லிப் போனில் சொன்னான். அவர் நர்ஸிங் ஹோமிலேயே சாப்பிடுவார். நீ வா. நாம் மட்டும் சாப்பிடலாம்.''

பயந்தாள்.

''என்னடி, எந்திரியேன்.''

''எனக்குச் சாப்பாடு வேணாம். பசிக்கல்ல.''

''நீ என்ன வெளையாடறியா? ஆறு மணிக்கே பசிக்குதுன்னே. அப்புறம் வந்ததும் வராததுமா உன்னை பட்டினி போட்ட பேர் வரணுமா? ஏற்கெனவே ஊரிலே மாமியார்களுக்குத்தான் கெட்ட பேர். வா, வந்து சாப்பிடு.''

''இல்லே மாமி, நான் அவர் வந்தப்புறமே சாப்பிட்டுக்கறேன்.''

''அவன்தான்....''

''ப்ளீஸ், என்னை வற்புறுத்தாதீங்க. எனக்குச் சாப்பாடு வேணாம்.''

''என்னமோ போ. அவனை வேற காணலே: எங்கே போனான்னும் தெரியல்ல,'' புலம்பிக் கொண்டே அம்மாள் போய்ச் சேர்ந்ததும் பசியுடன் தவித்தாள். ஹால் கடிகாரம் ஒலியெழுப்புவதை எண்ணினாள். ஏழு—எட்டு—ஒன்பது.

கைக் கெடியாரத்தைத் திருப்பிப் பார்த்தான் ஆதர்ஷ். சோபாவில் கண்ணீருடன் துவண்டு கிடந்த அனிதாவைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

''ஓ.கே. அனிதா, இனி நீ மவுனத்தைக் கலைக்கலாம், சொல்லு, என்னதான் நடந்தது?''

''கொன்று விட்டேன். பாவி, என் அலட்சியத்தால் நானே என் அம்மாவைச் சாகடித்து விட்டேன். மன்னிப்பு கிடையாது பாஸ். எனக்கு மன்னிப்பே கிடையாது.''

''ஸ்டாப் டாக்கிங் நான்சென்ஸ். நடந்ததைச் சொல்லம்மா. இது எப்படி நடந்தது, எப்போது நடந்தது?''

''உங்கள் கல்யாணம் நடந்த ஒரு வாரத்துக்கெல்லாம், அவசியத் தேவையான மாத்திரைகளை வாங்கி வர மறந்து போனேன். மனநிலை சரியில்லாததினால ஏதோ வெறுப்பும்

கோபமுமாக என்னை மறந்து போயிருந்தேன். அந்த அலட்சியமே அவங்களைப் பலி வாங்கிடுச்சு. ராத்திரி ஒரு மணிக்கு எழுந்து புழுவாகத் துடிச்சாங்க. டாக்டர் வந்து பார்த்து உடனே ஆம்புலன்ஸுக்குப் போன் பண்ணிச் சொன்னார். ஆனா, அது வருகிறதுக்குள்ளே—ஐ லாஸ்ட் மை மதர்,'' வெடித்து அழுதாள். ''தோல்வி எனக்கு நிரந்தரம், காதலிச்சேன். தோல்வி. அம்மாவைக் காப்பாற்றப் பார்த்தேன். தோல்வி!''

''ஒ.கே. இட்ஸ் ஒ.கே. இதெல்லாம் தவிர்க்க முடியாத சங்கதிகள். மற. உன் தங்கை ஜூலி இப்ப எங்கே?''

''உறவுக்காரங்க கூட்டிட்டுப் போயிருக்காங்க— அழுது ஓய்ஞ்சதும் சொல்லு, அனுப்பி வைக்கிறோம்னு. மறக்க முடியல்ல. யந்திரமாக ஆபீஸுக்குப் போகிறேன். வருகிறேன்.''

''இன்றைக்கு ஏன் வரவில்லை?''

கண்ணீருடன் பார்த்தாள். ''இன்றைக்கு நீங்க முதல் முதலாக ஆபீஸுக்குத் திரும்பறீங்க. 'என் சோக முகத்தை உங்களுக்குக் காட்டப் பிடிக்கல்ல. அதான் லீவ் சொல்லிட்டு வந்துட்டேன்.''

''சரி. நாளைக்கே தங்கையை தந்தி கொடுத்து வரவழைச்சிடு. தனியாக இருந்தால் தான் அதிகமாகப் பாதிக்கும். நேரமாகிறது. இப்ப நான் கிளம்பறேன். சாப்பிட்டியா?''

''ஆச்சு.''

''பொய். சாப்பிட்ட முகத்தில் இத்தனை சோர்வு இருக்காது. வா''

''எங்கே?''

''உனக்கு முதல்லே ஏதாவது தீனி வாங்கித் தரேன். மயக்கமே போட்டுடுவே போல தெரிகிறது.''

''வேணாம். நானே ஏதாவது செய்து சாப்பிட்டுக்கறேன்.''

''அது நாளையிலேர்ந்து. இப்போதைக்கு வா.'' என்றவன் குரலிலிருந்த தீவிரம், மறுக்க முயன்றவள் செயலற்றுப் போய்க் கிளம்பினாள்.

''இப்படியேவா? போய் டிரஸ் பண்ணிக்க. ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு போகப் போகிறேன். நைட்டியில் எல்லாம் வரக்கூடாது.''

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒப்பனை பெட்டியைத் திறந்தாள் அனிதா.

ஒளிந்திருந்து ஒலி பரப்பும் இசைக்கு தொங்கும்

பிரம்புக் கூடையின் மூலம் மேஜையில் மட்டும் ஒளிவட்டம் போட்டு முகத்தைக் காட்ட மறுக்கும் ஒளி குறைந்த சூழ்நிலையில் கேட்டான். ''காதல் தோல்வி என்றால் யார் அவன்?''

''எதுக்குக் கேட்கறீங்க?''

''என்ன கேள்வி? அவனையே உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கத்தான்.''

''அது முடியாத காரியம்?''

''மறுக்கிறானா? அதை டீல் பண்ண எனக்குத் தெரியும். நீ அவனை மட்டும் அடையாளம் காட்டு.''

''வீண் வேலை. என் காதல் கனவாகி விட்டது.''

''அதைத்தான் கேட்கிறேன் ஏன்?''

''உங்களுக்குக் கல்யாணமாகி விட்டது'' என்று மெதுவான குரலில் அவள் சொன்னாலும் அது அவன் காதில் இரைச்சலாகப் பட்டது.

திகைத்துப் போய்ப் பார்த்தான்.

நர்சிங் ஹோமில் டாக்டர் சொன்னார். ''இன்னமுமா கூட்டிட்டுப் போகாம இருக்கீங்க? சாய்ங்காலமே டிஸ்சார்ஜ் பண்ணச் சொல்லி விட்டேனே?''

''ஸாரி டாக்டர், எனக்குத் தகவல் சொல்லப் படல்லே. நான் இப்பவே கூட்டிட்டுப் போகலாமா?''

''ஷ்யூர். ஆபரேஷன் ரணம் ஆறத் துவங்கி விட்டது. அப்பப்ப கொஞ்சம் ஐஸ் கட்டியைத் தின்னக் கொடுங்கள். நாளை கழிச்சு மறுநாள் செக்கப்புக்குக் கூட்டி வந்தாலே போதுமானது.''

''தாங்க்ஸ் டாக்டர். பில்?''

''தயாராக இருக்கும். நாளைக்குச் செக் அனுப்பிடுங்க.'' என்றவர் ஹரியின் கன்னத்தில் தட்டிக் கொடுத்தார். ''இரண்டொரு நாளைக்குப் பேச முயற்சி பண்ணாதே. வெறும் ஜாடை போதும். ஓ.கே.''

சிரிப்புடன், வலியுடன், தலையாட்டினான்.

பசியினால் தூக்கம் கலைந்து கண்திறந்து மிரள மிரளப் பார்த்த காயத்ரிக்கு உணர்வு சொன்னது. பக்கத்து அறையில் மாமியாரின் குரல் அதிகாரமாக கேட்டது.

''பகல்லே கூட்டிட்டு வந்தால் போறாதா? இப்படியா ராத்திரி நேரம் திருட்டுத்தனமா வருகிற மாதிரி வருகிறது. திடுதிடுப்புன்னு பார்த்ததும் ஒரு வினாடி ஆடிப் போயிட்டேன். ஆனாலும் உங்களுக்குப் பொறுப்பேயில்லே''

பேச்சு சரியாகப் புரியவில்லை. உத்தேசமாக நடந்து கதவைத் திறந்து வெளிப்பட்டாள். மாமியாரின் பேச்சு

இப்போது ஹாலுக்கு இறங்கிப் போயிருந்தது.

''சாப்பிட ஏதாவது வேணுமா?''

''வேணாம். அங்கேயே ஆயிடுச்சு.'' என்றது மாமனாரின் குரல்.

''அத்தே.''

''என்ன?''

''யார் வந்திருக்காங்க?''

''பயல்தான் வந்திருக்கான். நீ ஏன் வெளியே வந்து நிக்கிறே? உள்ளே போயிடு''

''வந்துட்டாரா?''

''அதான் சொன்னேனில்லே. என்ன, திரும்பத் திரும்பச் சொல்லிட்டிருக்கணுமா, போ. போய்ப் படு.''

''ஆனா அத்தே.....''

''இந்தா. நான் தான் இங்கே இருக்கேனே. என்ன அந்தப் பக்கமா பார்த்துக் கூப்புடறே? கண்ணு என்ன குருடாகவா போச்சு?''

அதிர்ச்சியாகத் திரும்பினாள்.

''ப்ரிஜ்லே ஐஸ் கட்டி இருக்கா பாரு. அதைத்தான் சாப்பிடணுமாம். டாக்டர் சொல்லி இருககார்.''

தட்டுத்தடுமாறி நடந்து கதவைத் திறந்து உள்ளே போனாள்—பக்கத்து அறைக் கதவை!

வீடு வரும் வரை அமைதியாக வந்த ஆதர்ஷ் சொன்னான். ''ஸாரி அனிதா. உன் மனசில இப்படி யொரு நினைப்பு இருக்கிறது எனக்குத் தெரியாது.''

''தெரிஞ்சிருந்தால் உங்க கல்யாணத்தை நிறுத்தியிருப் பீங்களா?''

''இல்லே. அப்பவே உனக்கு புத்தி சொல்லிருப்பேன். என் தன்னிலை விளக்கம் உனக்குப் புரியும்படி இருந்திருக்கும். காயத்ரிக்கும் எனக்குமிருக்கிற காதலுக்கு மூன்று வருஷ ஆயுள் அதிகமானது. எந்த சூழ்நிலையிலேயும் அவளை நான் மறுக்க வெறுக்க முடியாத நிலைமை. சரி. நடந்தது நடந்தாச்சு. அதையே நினைச்சிட்டிருக்காம நடக்க வேண்டியதைப் பற்றி யோசிக்க ஆரம்பி.''

''ஸார். இரவும் பகலும் நீங்க என்னை கவனிச்ச முறையைப் பார்த்து—''

''அனிதா. உன் கால் ஊனத்துக்கு நான்தான் காரணம். அந்த நினைப்பு தந்த குற்ற உணர்வுக்காகத்தான் அப்படி உன் பக்கத்திலிருந்து கவனிச்சேன். அதற்கு பெயர் காதலில்லே. அனுதாபம். வெறும் அனுதாபம். எது எப்படியோ, இட் ஈஸ் டூ லேட் ஃபார் டிஸ்கஷன். மனசை மாற்றிப் பார்.

முயற்சி செய்.''

அவள் உள்ளே போய் விட்டதும் சற்று நேரம் நின்று யோசித்த பின் காரை நோக்கி போனான். கதவைத் திறந்தான்.

கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டு பார்த்தாள் காய்த்ரி. கட்டிலில் அவன் இருந்தான்.

''வந்துட்டீங்களா?'' என்றாள் ஆவலாக. ''அதென்ன ஓசைப்படாம வந்து தூங்க ஆரம்பிச்சீட்டீங்க?''

கீழே—

ப்ரிஜ் ஃப்ரீசரிலிருந்து பட்டையை உருவி—ஐஸ் கட்டிகளை உதிர்த்தாள். அம்மாள். ''திருஷ்டிதான்,'' என்றாள். கண்ணாடிக் கோப்பையில் கட்டிகளைச் சரித்துக் கொண்டு திரும்பினாள்.

மேலே—

கட்டிலில் அமர்ந்து கொண்ட காயத்ரி, ''எங்கே போயிட்டீங்க? நீங்க இல்லாம எவ்வளவு தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா?'' மெல்ல அவன் மார்பில் கைகளை படர விட்டாள். ''ஐ லவ் யூ டியர்.''

தழல் பட்டுவிட்டாற் போல துள்ளி விலகினான் ஹரி.

''ஏன்? என் ராஜாவுக்கு என் மேலே என்ன கோபம்? ஏன் என்னைத் தள்ளி விடறீங்க? இவ்வளவு நேரமாகியும் தூங்காம காத்திருந்தேனே, அதுக்கா? மன்னிச்சிடுங்க. வந்ததிலேர்ந்து உங்களுக்காகத்தான் காத்திருந்து காத்திருந்து அப்பவே ஒரு குட்டித் தூக்கம் போட்டுட்டேன். உங்களை நினைச்சு எழுந்துட்டேன். நீங்க வந்ததை அத்தை சொன்னதும்தான் எனக்கு நிம்மதி வந்தது.''

மெல்ல அவன் மார்பில் படர்ந்தாள். பரவத் துவங்கினாள். அவன் திமிறத் திமிறப் பிடிவாதமாகப் படர்ந்தாள்.

ஹரி தவித்தான்.

''என்ன ஆச்சு உங்களுக்கு? நான் யார், அந்நியமா?''

அவன் கன்னத்தைத் தேடிப்பிடித்துக் கைகளால் பற்றிக் கொண்டு முகத்தை நெருக்கமாகக் கொண்டு போனவள்—

''அண்ணி!'' என்ற முனகலான குரல் வர—

திடுக்கிட்டு இவள் எழ முயலும் முன்—

''அடிப்பாவி! சண்டாளி!'' என்ற இடியோசை போல் அத்தையின் குரல் வரவே—உறைந்து போய்த் திரும்பினவளின் தலை மயிர் கொத்தாக பிடிக்கப்பட்டதும் திணறிப் போனாள்.

''ஏண்டி? புருஷன் வர நேரமானா, அதுக்குள்ளே

மச்சினனைத் தேடி வந்துட்டியா?''

''அத்தை, கேளுங்க, நான் சொல்றதைக் கேளுங்க.''

''கேட்கிறதென்னடி? அதான் பார்த்துட்டேனே. புருஷனில்லாத நேரத்தில் இவன் ரூமிலே உனக்கென்னடி வேலை? நாயே—''

''இது யார்? யாருடைய அறை?''

''சொல்றேன் வா'' என்று இழுத்துப் போய் அடுத்த அறைக்குள் தள்ளினாள். ''இங்கேயே கிட. நாளைக்குப் பேசிக்கிறேன் உன் புருஷன்கிட்டே. இப்படிப்பட்டவளைத் தானா பிடிவாதம் பிடிச்சுக் கட்டிக்கிட்டான் ராஸ்கல்.''

''என்னடி அங்கே சத்தம்?''

''மேலே வாங்க. வந்து நீங்களே கேளுங்க இந்த அநியாயத்தை. போச்சு. குடும்ப மானமே போச்சு. வந்து தொலைங்களேன்.''

வந்தார். ''என்னடி, ராத்திரியில கூத்தடிக்கிறே. விடு அவளை,, என்னதான் நடந்தது? மருமகளே என்னம்மா நடந்தது?''

''அப்படிக் கூப்பிடாதீங்க. பொண்ணைக் கட்டறதா நினைச்சு உங்க பிள்ளை பிசாசைக் கட்டிக்கிட்டு வந்திருக்கான். அவன் இப்படி ரகசியமா தன் கல்யாணத்தை அவசரமா முடிச்சப்பவே எனக்கு சந்தேகம்.''

''என்ன ஆச்சு, சொல்லேண்டி பிசாசே.''

''கண்ணாலே கண்டது போதாதுன்னு அந்தக் கண்ணராவியை என் வாயால வேற சொல்லணுமா?''

''நீயாவது சொல்லு மருமகளே.''

''அவ என்ன சொல்றது? நான் சொல்றேன். அவளுக்கு உங்க ஒரு பிள்ளை பத்தலீங்க. ஹரியை வேற மடக்கப் பார்க்கிறா.''

''அறைஞ்சேன்னா பாரு. என்ன பேச்சு பேசறங்கறது புரிஞ்சுதான் பேசறியா?''

''அறையறதோட நிறுத்தாதீங்க. என்னை வெட்டிப் போடுங்க. இந்த அசிங்கமெல்லாம் பார்க்காம போய்ச் சேர்ந்துடறேன்.'' காயத்ரியை இரண்டு கைகளாலும் அடித்தாள். ''ராட்சசி. பழிகாரி. பாவம், ஆபரேஷனால வாய் பேச முடியாது. சத்தம் போட மாட்டான் என்கிற தைரியத்தில்தானே அவனை மேலே விழுந்து பிராண்டறே. உன்னை வெட்டினா என்ன?''

''ஹரி... ஹரியைக் கூட்டிட்டு வந்தாச்சா?''

''ஆஹா. ஒண்ணும் தெரியாத பாப்பா...''

காயத்ரி அழுகாள்.

''சத்தியமா எனக்குத் தெரியாது அத்தை.''

''ஏண்டி நாயே, அப்ப கேட்டே, நானும் குழந்தை வந்துட்டான்னு சொன்னேனே?''

''ஐயோ, அது என் புருஷனைச் சொல்றதா நினைச்சேன்.''

''ஏண்டி? உன் கண்ணு என்ன குருடா? பெரியவனுக்கும் சின்னவனுக்கும் வித்தியாசம் தெரியாம போச்சா?''

பதில் சொல்ல முடியாமல் திணறினாள். ''அத்தே.... நான்... நான்... வந்து....''

''உன்கிட்டே என்ன பேச்சு? வரட்டும், என் மகன். அவன்கிட்டே பேசிக்கிறேன். திமிர் பிடிச்ச நாயே,'' என்று அம்மாள் கத்தும் போதுதான்—

கீழே அழைப்பு மணி அலறியது.

''வந்துட்டான். இரு, நீங்க வந்துடுங்க. இல்லேன்னா உங்க மேலும் பாய்ஞ்சிடுவாள்.''

ஓங்கி அறையும் ஓசை மட்டும் கேட்டது. திரும்பிப் பார்க்கப் பயந்தாள்.

சற்று நேரத்தில்—

கீழே ஹாலில் கலவரமான ஓசைகள் கேட்கக் கேட்க நடுங்கினாள். அவன் படி ஏறி வரும் ஓசை கேட்டதும் நிறைய மூச்சுத் திணறினாள்.

உள்ளே வந்து கதவைச் சாத்தியவன் நெருங்கி வந்து உலுக்கினான். ''நீ இப்படி நடந்துப்பேன்னு நான் நினைக்கலே.''

சரிந்து விழுந்தாள். ''என்னை மன்னிச்சிடுங்க. என்னோட குறையை உங்களுக்குச் சொல்லாமல் மறைச்சது என் தப்புதான்.''

''குறையா? நீ என்ன சொல்றே? நான் வர நேரமாகும்னு சாப்பிட்டுப் படுத்துக்கச் சொல்லி போனில் சொன்னேன். பனிரண்டு மணியாகப் போகிறது. இன்னமும் தூங்காமல் இருக்கியே என்கிறேன். ஸ்டுப்பிட்! வா, படுத்துக்க.''

''என்ன சொல்றீங்க?''

''அப்புறம் சொல்றேன்,'' என்றவன் அவளை அணைப்புடன் அழைத்துப் போய்க் கட்டிலில் ஒரு குழந்தையைப்போல தவழ விட்டுச் சாய்ந்தான். போர்வையால் போர்த்தி விட்டான். ''அதென்ன இந்த ஏ.சி.யிலேயும் இப்படி வியர்த்துப் போகுது உனக்கு?'' ஒரு குழந்தையை அணைப்பில் தட்டிக் கொடுப்பதுபோல் தட்டித் தட்டித் தூங்க வைத்தான். அவளைத் தூங்க விட்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

கிட்டத்தட்ட இரவு முழுவதுமாய்.

காலையில் எழுந்ததும் அவள் பார்க்கும்போது குளித்து விட்டிருந்தான். திருத்தமான சவர முகம். இன் பண்ணின சட்டையைக் கையை உயர்த்தி அப்படியும் இப்படியுமாகத் திரும்பிப் பார்க்கும்போது கண்ணாடியில் இவளைப் பார்த்தான்.

''எழுந்தாச்சா? முன் தூங்கிப் பின் எழும் என் அருமை மனைவியே! சீக்கிரமாகக் குளித்துவிட்டு தயாராக இரு. வெளியே போகிறோம்.''

தவிப்பாகப் பார்த்துக் கேட்டாள். ''எங்கே?''

''சொல்றேன்,'' என்றவன் அவள் மேலும் தயங்கவே, ''சொல்ல மாட்டேனா? ஹர்ரியப் மேன்.''

பீரோவை திறந்து மாற்றுப் புடவையை எடுத்தாள். உள்ளாடைகளையும் துவாலையையும் தோளில் சரித்துக் கொண்டு குளியலறைக்குப் போகும் முன்னால் திரும்பிப் பார்த்தாள்.

அவன் பார்வையிலேயே 'போ' என்றதும்—

உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

புரியாத நிலையிலேயே இடுப்புப் பட்டையை உருவி, மேல்புறமாக இரண்டு பித்தான்களையும் நீக்கித் தோளை உலுக்கவே நைட்டி அவள் காலடியில் துவண்டுசரிந்தது.

பிளாஸ்டிக் திரைக்கு அப்பால் தண்ணீர்த் தொட்டியை நிரப்பக் குழாய்களைத் திறக்க முயலும் முயற்சி நின்றது. ஏற்கனவே தொட்டி நீர் நிரம்பி இருந்தது. நிரப்பி இருக்கிறான். ஏன்? அது நிரப்புமளவுக்குக் கூட நேரம் தர மாட்டானா? ஏன்? அப்படி என்ன அவசரம்?''

புரியாத பார்வையை நிலைத்து ரப்பர் செருப்புக்களை விடுவித்துவிட்டு, பிறந்த மேனியாகத் தண்ணீரில் இறங்கினாள். ஷவரை இயக்கிக் கழுத்தையும் முகத்தையும் காட்டிக் குளித்தாள். அகல உயரமான பூத் துவாலையுடன் வெளியே வந்தவள் வியந்தாள்.

அவளுடைய பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான்.

''என்ன பண்றீங்க?''

''புடவையைச் சுற்றிக் கொண்டு கிளம்பு.''

''என்ன பண்றீங்கன்னு கேட்டேன்.''

''கொஞ்ச நாளைக்கு உன்னை உன் அம்மா வீட்டிலே விட்டுட்டு வரேன்.''

''ஏன்?''

''அம்மா கொஞ்சம் கூல்டவுன் ஆகட்டும். இந்த வீட்டிலே நீ இருக்கணும் அல்லது அவங்க இருக்கணும்

என்கிறதிலே ரொம்பவும் பிடிவாதமாக இருக்கிறாங்க. ரெண்டு வருஷம் பழகிய காதலிக்காக முப்பது வயசு வரை பார்த்துப் பார்த்துப் பரிமாறிய அம்மாவை விட்டு நான் விலகவும் முடியாது. அவங்களை விலக்கவும் கூடாது. கொஞ்ச நாள்தானே?''

''நேற்று நடந்ததை விளக்க எனக்கு இரண்டு நிமிஷம் ஒதுக்குங்க.''

''தேவையில்லை. எல்லாம் அம்மாவே சொல்லிட்டாங்க.''

''ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யறதோட மட்டு மில்லாமல் தண்டனையையும் கொடுத்தால் அதென்னங்க நியாயம்? சொல்லாமல் மறைச்ச ஒரு விஷயத்தை இப்பச் சொல்லிடறேங்க. நான் மாலைக் குருடி. இருட்டினால் எனக்குக் கண் தெரியாது. அதனாலே நீங்கதான்னு நினைச்சு....''

கையை அமர்த்தி அவள் பேச்சை நிறுத்தினான்.

''நான் உன்னை ஏதாவது கேட்டேனா?''

''இல்லே.''

''பின்னே ஏன் விளக்கம் சொல்றே? தவிர, உனக்கு மாலைக் கண் நோய் இருக்கிற சங்கதி கல்யாணத்துக்கு முன்னாலேயே எனக்குத் தெரியும். டாக்டர் சுகுமாரி சொல்லிட்டாங்க. அதனால்தான் யாருக்கும் தெரிஞ்சிடக் கூடாதுன்னு டின்னர் கூடத் தராமல் லஞ்ச் கொடுத்து, சுருக்கமாகக் கல்யாணத்தை முடிக்கப் பிடிவாதம் பிடிச்சேன். தெரிஞ்சேதான் வெளி நாட்டிலேயும் உன்னை ரூமில் விட்டுவிட்டு இருட்டு வேளையில் நான் மட்டும் ஊர் சுற்றினேன்.''

''தெரிஞ்சும் ஏன் என்னை ஒரு வார்த்தைகூடக் கேட்கலே?''

''அதை ஒரு பெரிசாகவே நான் நினைக்கவில்லை. க்யூரபிள் டிஸீஸ். இன்னும் ஆறே மாதத்தில் முழுக்கக் குணமாக்க முடியும்னு டாக்டர் சொல்லி இருக்கிறாங்க. இதுவரை யாருக்கும் தெரியாமல் சமாளிச்சிடலாம்னு நினைச்சேன். கெடுத்தே. நீ கெடுத்தே. அம்மாவுக்கு இப்ப இருக்கிற நிலையிலே உன் வியாதி பற்றித் தெரிந்தால் ஆவேசமே வந்துடும். அதனாலே கொஞ்ச நாள் உன் அம்மா வீட்டுக்குப் போய் இரு. மருந்து மாத்திரையை ஒழுங்காகச் சாப்பிட்டு நோயைக் குணப்படுத்திக்க. அப்புறம் நான் கூட்டிக் கொண்டு வரேன். அதுக்குள்ளே அம்மாவையும் மாற்றி வைக்கலாம். ஓ.கே?''

நியாயமாகப் பட்டது.

''இப்ப கிளம்பறியா?''

''ஒரு நிமிஷத்திலே கிளம்பிடறேன். நீங்க காப்பி சாப்பிட்டீங்களா?''

''எதுவும் சாப்பிடாமதான் கிளம்பப் போறோம். நீ புறப்படற வேலையைப் பார் சீக்கிரம்.''

அவள் தயாராகத் துவங்கினாள்.

''அம்மா, இவளைக் கொண்டு போய் அவங்கம்மா வீட்டிலே விட்டுடறேன்.''

''முதலில் அதைச் செய். கோர்ட்டுக்குப் போகிறதுக்கு முந்தி வக்கீல் சாரை வரச் சொல்லியிருக்கேன்.''

''எதுக்கு?''

''என்னடா கேள்வி? முதல் வேலையாக விவாகரத்து வாங்கிக்க. இப்படிப்பட்ட மனைவி உனக்கு வேண்டாம். அப்புறம் உனக்குத் தலைக் குனிவு. எங்களுக்கும் வெட்கம்.''

''அதுக்காக ஒரேயடியாக அவசரப்பட்டால் எப்படிம்மா? சட்டப்படி கல்யாணமாகி ரெண்டு வருஷமாகாமல் விவாகரத்து வழக்கையே எடுத்துக்க மாட்டாங்க.''

''அப்ப இவள் ரெண்டு வருஷம் அங்கேயே கிடக்கட்டும்.'' அம்மா சொன்னாள். ''இருடா, காப்பியாவது சாப்பிட்டுக் கூட்டிக் கொண்டு போ.''

''வழியிலே பார்த்துக்கறேம்மா.''

''இந்தாடா, நான் உன்னைப் பெத்த அம்மா. சின்னம்மா இல்லே. வெறும் வயத்தோட என் எதிரியைக்கூட வெளியே அனுப்ப மாட்டேன். இரு, கலந்து கொண்டு வரேன்.'' அவள் உள்ளே போனதும், ஆதர்ஷ் கேட்டான். ''இருக்கணுங்கறே?''

''வேண்டாங்க. போயிடலாம்.''

காப்பியுடன் வந்த அம்மாவின் கோப உஷ்ணமானி மேலும் எகிறியது. 'எத்தனை திமிர்! போகட்டும், போகட்டும்!' என்றவள் தன்னையும் அறியாமல் கண்ணீர் விட்டாள். ''கவலையில்லை. எனக்குக் கவலையில்லை. போகட்டும்.''

''என்ன தனியா புலம்பறே?''

''போயிட்டாங்க. போகட்டும். நான் தடுக்க மாட்டேன். வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி. நான் கவலைப் பட மாட்டேன்.''

''உன் பேச்சு தலையும் புரியலே. வாலும் புரியலே.''

''உங்களுக்குப் புரியாதுங்க. பெத்த வயிற்றுக்குத்தான் பெருமை புரியும்.''

''சரி, என்னது? காப்பியா? கொடு. பழைய ஞாபகத்திலே கொதிக்கக் கொதிக்கக் காப்பியைக் கொண்டு போய் ஹரிக்குக் கொடுத்திடாதே. கோல்ட் காப்பியைக் கொடு.

ஐஸ் போட்டு.''

இவர்கள் போய்ச் சேரும் போது காய்த்ரியின் அம்மா சிரமத்துடன் குனிந்து கோலம் போட்டுக் கொண்டிருந்தவள், நிமிர்ந்து பார்த்தாள்.

பெட்டியுடன் மகளும், தொடர்ந்து பெட்டியில்லாமல் மருமகனும் வருவதும் ஏதோ உறுத்தவே, ''என்னடி ஆச்சு? பெட்டியும் கையுமா வந்து நிக்கறே?''

''வாசல்லேயேதான் சொல்லணுமா? இல்லே, உள்ளே வந்து சொல்லலாமா?''

''வாங்க மாப்பிள்ளை! பயணமெல்லாம் எப்படி இருந்தது?''

''சம்பிரதாயமான கேள்வி. அதுதான் முழுசா ஒரே பீஸாக வந்து நிக்கறோமே. அப்புறமென்ன?''

''அதுக்கேன் காயத்ரி கத்தறே? உள்ளே வாங்க மாப்பிள்ளே. இவளுக்கு இப்படித்தான் திடீர் திடீர்ன்னு வரும். மூளை பாதிப்போ என்னமோ. நல்ல மனோதத்துவ டாக்டர் கிட்டே கூட்டிக் கொண்டு போய்க் காட்டணும். நாள் கடத்தினால் பைத்தியத்திலே கூடக் கொண்டு விட்டுடும்.''

மெலிதாகத் தலையிலடித்துக் கொண்டாள் காயத்ரி. ''போம்மா. போய் காப்பி கொண்டு வா,''

''வரேன். ஆமா, மாப்பிள்ளையும் இங்கே இருப்பார்தானே?''

''அவர் அந்த வீட்டிலேயும், நான் இந்த வீட்டிலேயும் இருப்போம்.''

''அதென்னடி கண்ணராவி! அது என்ன தாம்பத்தியம்?''

''காப்பி?''

''கொண்டு வரேன். இவள் வேறே பேச விட மாட்டாளே.'' அம்மா உள்ளே போனதும் கேட்டாள். ''ஏங்க, அந்த அனிதாவைப் பார்க்கணும் போல இருக்கு. கூட்டிக் கொண்டு போவீங்களா?''

''ஆகட்டும். அவங்கம்மா போயிட்டாங்க. தெரியுமா?''

''எப்ப?''

''நாம ஹனிமூனுக்குக் கிளம்பின ஒரு வாரத்திலே.''

''அப்படியா, பாவம்! இப்ப தனியாகவா இருக்கிறாள்? அந்தக் குழந்தையோடே?''

''ஆமாம். ரெண்டு பஸ் பிடிச்சு ஆபீசுக்கு வரவேண்டியிருக்கு. கூடவே தங்கை வேறு பிரசினை.''

''ஒண்ணு செய்யலாமே? இங்கே மாடிக்கே குடி வந்துடச் சொல்லுங்களேன்.'' காயத்ரி சொன்னாள். ''எனக்கும் பேச்சுத் துணையாக இருக்கும்.''

‘‘இவ்வளவு பெரிய மாடிக்கு வாடகைன்னா அவளோட முழு மாச சம்பளத்தையே தரவேண்டி வரும்.’’

‘‘வாடகையே வேணாம். தினம் காலையிலே வந்து அவளைக் காரிலேயே கூட்டிட்டுப் போயிடுங்க. எனக்கும் தினம் உங்களைப் பார்க்கிற வாய்ப்பும் கிடைக்கும்.’’

‘‘உங்கம்மாவை எதுக்கும் ஒரு வார்த்தை கேட்டுட்டுச் சொல்லு.’’

‘‘அப்பா இந்த வீட்டை என் பேரிலேதான் வாங்கி இருக்கார். ஸோ, டிஸிஷன் ஈஸ் மைன்.’’

‘‘கேட்டுப் பார்க்கிறேன்.’’

‘‘கேள்விக்கே இடம் இல்லை. அவளுக்கும் அம்மாவை மறக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும். கூட்டிட்டு வந்துடுங்க.’’

‘‘சரி,’’ என்றவன் முகத்தில் அபரிமிதமான ஆர்வத்தைத் தேடி ஏமாந்தாள்.

ஆபீஸில்-ஹாலைக் கடக்கும்போது கவனித்தான். அனிதாவின் டைப் ரைட்டர் மூடி திறக்கப்படாமலிருந்தது. நாற்காலி வெறுமை காட்டியது.

‘‘அக்கவுண்டண்ட் சார், அனிதா இன்னுமா லீவிலிருக்கிறாள்?’’

‘‘இன்னைக்கு ட்யூ. தேர் ஷீ ஈஸ்.’’

அவசரமாக உள்ளே வந்தாள் அனிதா. ‘‘குட்மார்னிங் சார்.’’

‘‘பஸ்ஸிலே நசுங்கிப் போய் வந்தியா? போய்க் கொஞ்சம் டச்சப் பண்ணிக்கிட்டு வந்து உட்கார்.’’

அவள் நகர முயலும்போது சொன்னான்: ‘‘காபினுக்கு வா. உன்னோட கொஞ்சம் பேசணும்.’’

‘‘வரேன்.’’

அறைக்குள்ளே போய், குளிர்சாதனம் உறுமல் மெலிதாகக் கேட்க, அசையும் நாற்காலியில் ஆடியபடி காத்திருந்தான். அவள் வந்ததும் கேட்டான். ‘‘ஜூலி வந்தாச்சா?’’

‘‘இன்னமுமில்லே. நான் ஆபீஸுக்கு வந்துட்டால் அவளைப் பார்த்துக்க ஆளிருக்காது. அதனால் அங்கேயே இருக்கட்டும்னு விட்டு வைச்சிருக்கேன்.’’

‘‘வரவழைச்சிடு. வீட்டுக்காரங்களுக்கும் நோட்டீஸ் கொடுத்துடு.’’

‘‘புரியலே.’’

‘‘நீ தங்கறதுக்கு வேற இடம் ஏற்பாடு பண்ணிட்டேன்.’’

அச்சமாகப் பார்த்தவளைப் பார்த்துச் சிரித்தான். ''உன் அசிங்கமான கற்பனையைக் கொஞ்சம் நிறுத்தறியா? என் மனைவியின் வீட்டு மாடியில் உன்னை குடி வைக்கப் போகிறேன். அவளும் அவங்கம்மாவும் ஜூலியைப் பார்த்துப்பாங்க. உனக்கும் தினமும் கார் சவாரி கிடைக்கும். என்னோடேயே வரலாம், போகலாம்.''

தலை குனிந்திருந்தாள்.

''இதோ பார். அதே இடத்திலிருந்தால் உன் அம்மா நினைவு உன்னை விட்டுப் போகாது. உனக்கு மாறுதல் தேவை. அப்படி என்ன பயம்? என் ஒய்ஃப் இருக்கிற இடத்திலா உன்கிட்டே 'தப்பா நடந்துப்பேன்?''

''சேச்சே! நான் அதைச் சொல்லலலே.''

''அப்போ நோ மோர் க்வெஸ்சன்ஸ். நீ வருகிறாய்.''

தயங்கினாலும் சொன்னாள். ''சரி.''

''ஜூலியைக் கூட்டிட்டு வந்துவிடச் சொல்லித் தந்தி கொடுத்துடு.''

''சரி.''

''நாளைக்கு வந்துடு. நிறைஞ்ச அமாவாசை. எங்களுக்கு அர்தடக்ஸ் டே. நீ கிறிஸ்துவப் பெண் ஆனாலும் ஆட்சேபிக்க மாட்டாய்னு நம்பறேன்.''

''வரேன்.'' கிளம்பினாள். ''நான் போகலாமா? எஸ்டிமேட் ஒண்ணு டைப் பண்ணியாகணும்னு சொன்னாங்க.''

கைகளை விரித்துத் தோள்களை உயர்த்தினான்.

அவள் வெளியேறிப் போகும்போது தன்னையும் மீறி ரசித்தான். மெலிதாக அதிரும் அவளது உட்காருமிடங்கள், ஹீல்ஸினால் சற்றே உயர்ந்ததிருந்த அழகு.

பார்த்தான். பார்த்துக் கொண்டேயிருந்தான். ''ஒரு நிமிஷம்.''

நின்று திரும்பினாள்.

''சாயங்காலம் தயாராக இரு. வீட்டுக்குப் போய் என் மாமியாரை உனக்கு அறிமுகம் செய்யப் போகிறேன்.''

தலையசைத்து விட்டு விலகிப் போனாள். கதவை இழுத்துத் திறந்து வெளியேறிக் காணாமல் போனாள்.

இனம் புரியாத ஓர் ஈர்ப்பு அவளிடமிருப்பதைப் போல் உணர்ந்தான். தலையை உதறிக் கொண்டான். தப்பு!



6

ஒரு வாரம் கழித்து டாக்டர் சுகுமாரியைச் சந்திக்க வந்தாள் காயத்ரீ.

போய்ப் பார்த்துவிட்டு வரச் சொன்னார்.

''எனி இம்ப்ரூவ்மெண்ட்?''

''நிழல் படிந்தாற் போல மெலிதாகத் தெரிகிறது டாக்டர். ஆனால் பத்து மணிக்கு மேலே அதுவும் தெரிகிறதில்லே. எல்லா விளக்குகளையும் போட்டு வெளிச்சமாக்கினால் மட்டும் தான் கொஞ்சமாகத் தெரிகிறது. அதுவும் அனுமானிக்கிற அளவுதான்.''

''அங்கே உன் காலடியில என்னமோ கிடக்குது பார். கொஞ்சம் எடுத்துக் கொடு.''

குனிந்து பார்த்துக் குண்டுசி ஒன்றை உடனே எடுத்துத் தந்தாள். ''குண்டூசி.''

''வெல். கண்ணில் கோளாறு எதுவுமில்லே. அதே மாத்திரைகளை கண்டினியூ பண்ணு.''

''அம்மாவைச் சமாளிக்கிறதுதான் கஷ்டமாக இருக்கிறது டாக்டர். அவங்க சொல்றாங்க, கண்ணில் கூடக் கான்ஸர் வருமாமே.''

சிரித்து விட்டாள். ''அப்ப ஒண்ணு செய். உன் புருஷனை விட்டுச் சொல்லச் சொல்லு. வயத்தில ஏகமாய் புளி. அதனால ஆறு மணிக்குள்ளே டின்னரைச் சாப்பிட்டுச் சொன்னதாகச் சொல்லிடு. மற்றப்படி இதையே நினைச்சிட்டு இருக்காமே மனதை நல்ல சந்தோஷமாகவே வைச்சிரு. தனியாக இருக்காதே.''

''தனிமைப் பிரசினை. இப்ப இல்லே டாக்டர். அனீதா என்கிற பெண்ணும் அவளோட சின்னத் தங்கையும் மாடிக்குக் குடி வந்திருக்கிறாங்க. அவ எப்படியோ அந்தப் பெண் ஜூலி ஸ்வீட் கேர்ள். என்னமாய்க் கேள்வி கேட்கிறது என்கிறீங்க? ரொம்பவும் இம்ப்ரஸ் பண்ணிட்டது.''

''ஸ்கூல் போகிறதா?''

''இந்த வருஷம் சேர்க்கிறதாக இருக்காங்க. ஆன்ட்டின்னு என் மேலே உயிரையே வைச்சுகிட்டிருக்கு.''

''மகிழ்ச்சியைத் தக்க வைச்சிரு. என் சந்தேகம்

சூரியானால் அடுதத சந்திப்பில் உனக்குச் சந்தோஷ சமாசாரம் ஏதாவது சொன்னாலும் சொல்லுவேன்.''

''டாக்டர்?''

''சந்தேகத்தைத்தான் சொன்னேன். நீ வேணுமானால் கணக்குப் போட்டுப் பாரேன்.''

கூட்டிப் பார்க்கலானாள். கடைசியாக எப்போது? காரில் வீடு திரும்பும் போது நினைத்தாள். எப்போது?

வீட்டு வாசலில் இறங்கிய போது சுமதி நின்றிருந்தாள். ''இனிய அதிர்ச்சி. நீ எப்ப வந்தே?''

''காலையிலே தான். அதென்ன அங்கே தேடினால் இங்கே வந்து இருக்கே? ஆமாம், இது ஒரு சின்ன விஷயம். இதைப் போய் ஏன் மறைக்கிறே? சொல்லிட வேண்டியதுதானே?''

''மேலே வா, பேசலாம்.'' படி ஏறினார்கள். ''உங்கம்மா அதுக்கு வாய்ப்புத் தரல்லே. நடந்தது தற்செயல்''

''புரியுது. அம்மா சொன்னாங்க. சில விஷயங்கள்ல காட்டற தயக்கம் இப்படித்தான் சங்கடத்தில கொண்டு விட்டுரும். நானே சொல்லிடலாம்னு பார்த்தேன். அப்புறம் உன்னையும் ஒரு வார்த்தை கேட்டுக்கலாம்னு சும்மா இருந்துடேன். தவிர, எங்கம்மாவை எனக்குத் தெரியும்.''

''யாருக்கு மறைக்கக் கூடாதோ அவருக்கே உண்மை தெரியும். அவர் என்னை நம்பறார். மத்தவங்க என்ன நினைச்சா எனக்கென்ன? வேண்டாம். நீ எதுவும் சொல்ல வேணாம்.''

''அவங்க என்னென்னமோ ஏற்பாடுகளைச் செய்யறாங்களே. நேற்றுக் கூட வக்கீல் வந்து அட்வைஸ் பண்ணிட்டுப் போனார், இரண்டு வருஷம் வரை அவங்க ஒருத்தரை யொருத்தர் சந்திக்கக் கூடாதுன்னு.''

''ஆனா. தினம் அவர் இங்கே வருகிறார். வரச் செய்துட்டேன்.''

''எப்படி?''

''அந்த அனீதா இப்ப எங்க வீட்டு மாடியில் தானிருக்கிறாள். அவளைப் பார்க்க வருகிறாரோ இல்லையோ அந்தப் பெண் ஜூலியைப் பார்க்க நிச்சயம் வருவார். அதுமட்டுமில்லாமல் விவாகரத்து, இன்னொரு கல்யாணம் இதெல்லாம் நடக்க முடியாத சங்கதின்னு நினைக்கிறேன்.''

''எப்படி?''

''அடுத்த தடவை பார்க்கிறச்ச சொல்றேன். ஐயோ ஜூலி. என்னடி இது?''

''ஆண்ட்டீ, நான் குளிச்சிட்டேன்.''

''அடிப்பாவி. கொஞ்சம் பாத்ரூமை திறந்து விட்டால் போறும். இப்படியா நனைக்குக்கிறது.''

''நனைஞ்சா என்ன?''

''ஜுரம் வரும்.''

''ஜுரம் வந்தா?''

''டாக்டர் ஊசி போடுவார்.''

''ஊசி?'' கன்னங்களை தாங்கி பயந்தது. ''அயோ வேணாம்பா. யாவ். அக்கா கித்தே சொல்லாதே.''

''வரட்டும் முதல் வேலையா சொல்றேன்.''

''அய வேணாம். சொல்லாதே.'' என்று அந்தன் அழுகைக்கு அள்ளிக் கொண்டாள் காயத்ரி ''துவண்டு போன மனசுக்கு இதுதான் ஆறுதல்.''

''சரி. சரி. அவங்கக்கா வருகிறதுக்குள் அதை துவட்டி விட்டு டிரஸ் மாத்திவிடு.''

''அவங்க அக்கா வருகிறாளோ இல்லையோ. எங்கம்மா வந்து பார்க்கிறதுக்குள்ளே மாத்தியாகணும். அப்புறம் இப்படி நனைஞ்சா ஜன்னி பிடிச்சு கோமா வந்துரும்னு சொல்லிடுவாங்க. எக்ஸ்ட்ரீமிஸ்ட் யூ நோ.''

''அது சரி. எல்லாமே ஒரு தினுசான காரெக்டர்கள் தானா? என்னைப் பஸ் ஏத்திட்டு வா.''

''கார்லே விட்டுடறேன் வாயேன்.''

பெரிசாகக் கும்பிட்டாள். ''வேணாம் தாயீ. அப்புறம் திரும்பறச்ச இருட்டிரும். அப்புறம் இந்த வீடுன்னு அடுத்த காம்பவுண்டிலே நுழைஞ்சிருவே. நீ இரு. நான் வரேன். தலையெழுத்தைப் பார்த்தியா?''

''என்ன?''

''அவ்வளவு பெரிய தோட்டத்துப் பங்களாவை உனக்காகவே அண்ணா வாங்கியும் உனக்குத் தங்கி இருக்க வாய்ப்பு இல்லாம போச்சே.''

சாலைக்கு அவர்கள் வரும்போது கடந்து வந்த காரில் ஆதர்ஷ் இருந்தான். அருகில் அந்நியோன்யமாக அனீதா.

''காயத்ரி. என்ன நின்னுட்டே?''

''காலையிலே போகிறச்ச பின் ஸீட்டிலிருக்கிற அனிதா, திரும்பறச்ச முன்பக்கம் அதுவும் உரசிகிட்டு...''

''ஸில்லி! உடனே சந்தேகப்படணுமா? பின் ஸீட்டில் அவள் எஜமானி மாதிரி உட்கார வேண்டி போட்டதில் அண்ணனுக்கு ஆட்சேபமிருக்கலாம். போ, போய் அவங்களை ரிசீவ் பண்ணு. நீ கேட்கப் பயப்படற ஒரு சங்கதியும் சொல்லிட்டு போறேன்''

''என்ன அது?''

''ஹரிக்குத் தொண்டைப் புண் ஆறிப் போச்சு. நல்லா பேசறான். உன்னைப் பார்க்க வரேன்னு சொன்னான். நான்

தான் என்னோ!_ வேணாம், அம்மாவுக்குத் தெரியாம போய்ப் பார்த்துட்டு வான்னு சொல்லி அனுப்பினேன்.''

''இது வேற வம்பா?''

வீட்டுக்குள்ளே போனதும் அவனைத் தேடினாள். ''அம்மா, அவர் எங்கே?''

''வந்தாரா என்ன?'' அம்மாள் கேட்டாள். ''மேலே போ ருப்பாரா?''

''வந்ததும் வராததுமாக மேலே என்ன வேலை?'' மாடி ஏறத் து பங்கியவளை இழுத்துப் பிடித்து நிறுத்தினாள் அம்மா.

''காப்பி போட்டுத்தரேன். கொண்டு போடி.''

''நீயே மேலே கொண்டு வா. '' நிலை கொள்ளாமல் மாடி ஏறிப் போனாள் கதவைத் தள்ளித் திறந்த போது—

அவனும் அவளும் சோபாவில் அருகருகே அமர்ந்து அவள் போட்ட காப்பியைக் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

வேண்டுமென்றே வராண்டாவுக்குப் போய்க் கத்தினாள். ''அம்மா, பாலை வீணாக்காதே. அவருக்குக் காப்பி வேண்டாமாம்.''

''ஹேய். நீ எப்ப வந்தே? நான் வரும்போது நீ இல்லையே.''

''எதிரே வருகிறது கூடத் தெரியாத அளவுக்குக் கவனம் சிதறியிருந்தாற் போலிருக்கு.''

''வந்தாயா என்ன? எங்கே போனே?''

''சுமதியை பஸ் ஸ்டாண்ட்லே விட்டுட்டு வரப் போனேன்.''

''சுமதி வந்துட்டாளா? அண்ணனும் வந்தானா?''

''இல்லே. அவள் மட்டும் தான் வந்திருக்கிறாள்.''

அவன் மடியிலிருந்த ஜூலி, ''ஆன்ட்டி, என்ன ஆண்ட்டி கோவமா இருக்கீங்களா?''

உதட்டில் அலட்சியத்தை நெளிய விட்டாள். ''ஒரு குழந்தைக்குத் தெரிஞ்சதுகூடப் பெரியவங்களுக்குத் தெரியலே. எல்லாம் என் நேரம்.''

''நான் குளிக்கணும் சார். நீங்க கிளம்பலாம்.''

''ஏன், நீ குளிச்சாகிற வரை இருந்து பார்த்துக்கிட்டே வரட்டுமே. என்ன இப்ப அவசரம்?''

''காயத்ரி.''

''என்ன தப்பு? குழந்தையைப் பார்த்துக்கிட்டே வரட்டும்னு சொன்னேன்.''

''அதுக்கு இங்கேயே இருக்கணுமா என்ன? வாடி ஜூலி.'' அள்ளிக் கொண்டு கிளம்பினான். ''வா காயத்ரி. கீழே போயிடலாம்.'' என்றவன் வெளியேறும்போது—

முறைத்தவாறு நின்றிருந்தவள்—

''எனி திங் ராங் காயத்ரி?''

பதில் சொல்லாமல் விருட்டென்று திரும்பி நடந்தாள்.

''காயத்ரி.''

படியிறங்கிப் போனாள். ''ஆன்ட்டி.'' என்று வந்து கால்களை அணைத்துக் கொண்ட ஜூலியை உதறிவிட்டுப் போனாள்.

''ஏய்! காயத்ரி. என்ன ஆச்சு உனக்கு? குழந்தையைத் தள்ளறே?''

''எனக்கு அதை ரொம்பவும் பிடிக்கிறது அதான்.'' சொன்னாள். ''நாளையிலேர்ந்து ஆபீஸ் விடற நேரத்துக்கு நானே கார்லே அவளைக் கூட்டிட்டு வந்து அனீதாவைக் கூட்டிட்டு வரேன்.''

''ஏன்?''

''என் கணவர் கேவலம் ஒரு டைப்பிஸ்ட்டுக்கு டிரைவராக இருக்கிறது எனக்குப் பிடிக்கலை. நீங்க வரவேணாம்.''

''ஏன்?''

''சந்தேகப்படறியா?''

''ஆமாம். சந்தேகம்தான். ஆனா எனக்கில்லே. உங்கம்மாவுக்கு. சுமதி சொன்னாள். உங்கம்மாவோட வக்கீல் சொன்னாராம். இரண்டு வருஷம் பிரிஞ்சு இருந்தால்தான் விவாகரத்து கேஸ் போட முடியுமாம்.''

''அதை— துணிச்சலிருந்தால் என்கிட்ட சொல்லட்டுமே.''

கும்பிட்டாள். ''வேண்டாங்க. இப்ப இருக்கிற பிரசினைகளே போதும். நீங்க வேற புதுசா கதை ஆரம்பிக்க வேண்டாம்.

என்ன ஆச்சுன்னு தெரியல. ஆனா என்னமோ ஆயிருக்கு என்கிறவரை புரியுது.''

''புதுக்கதை? என்ன சொல்றே? மனம் திறந்துதான் சொல்லேன். அம்மாவுக்கு இங்கே வருகிறது தெரியும் சட்டப்படி அது நமக்கு உதவணும் என்கிறதுக்காகத்தான் நான் வரேன். போகிறேன். இல்லாவிட்டால் அம்மா நினைச்சதைச் சாதிக்காம விடமாட்டாங்க.''

''அது அவங்களால முடியாது. உறுதியாகச் சொல்றேன். உங்கம்மா மட்டுமில்லே இந்த அனிதாவாலேயும் என்னை உங்ககிட்டேர்ந்து பிரிக்க முடியாது.''

ஹவுஸ் கோட் இடுப்புப் பட்டையை இறுக்கியவாறு மாடி வராண்டாவுக்கு வந்த அனிதா நின்றாள்.

முதல் தடவையாக காயத்ரியை ஓங்கி அறைந்தான் ஆதர்ஷ்.

"யூ ராஸ்கல். என்ன நினைச்சு இப்படி பேசறே? அவளும் நானும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து வந்ததுதானே? வா." என்று இழுத்துப் போய்ப் போர்டிகோவில் நின்று இருந்த காரின் பின் ஸீட்டைத் திறந்தான்.

நிறைய அட்டைப் பெட்டிகள் அடுக்கி இருந்தான். உட்கார இடமில்லாமல்.

"எல்லாம் உனக்காக வாங்கினதுதான். நாளைக்கு உனக்குப் பிறந்தநாள் இல்லையா? அதுக்குத்தான் கலர் டிவியும் டெக்கும் வாங்கினேன். புடவைக் கடை பாதியை விலைபேசி வாங்கின எனக்கு இப்படியொரு முட்டாள் பட்டமா? இப்ப சொல்லு அவளை முன் ஸீட்டில் உட்கார வைக்காம பின்னே என்ன டிக்கியிலா உட்கார வைக்க முடியும்?"

பிறந்த நாள்! எனக்கே மறந்து போன பிறந்த நாள். நினைவில் வைத்துக் கொண்டிருந்தான் என்ற நினைப்பே இனித்தது.

"இப்ப சொல்லு."

"எதை?"

"உன்னையும் என்னையும் பிரிக்க முடியாதுன்னு சொன்னாயே எப்படி? எங்க அம்மாவை வேணுமானாலும் தவிர்க்கலாம். உன் கற்பனை விபரீதம் நிஜமாகி நான் அனிதாவோட வாழ்க்கை தொடங்கினால் என்னை யார் தடுக்க முடியும்?"

மெலிதாகச் சிரித்தாள்.

"நாளைக்குப் பிறந்த நாள் பார்ட்டியில் சொல்றேன்."

"ஒய் நாட் நௌ?"

"என் பிறந்த நாளுக்குப் பின்ஸீட் நிரம்பப் பரிசு கொடுக்க உங்களுக்கு நான் தரப் போகிற பரிசு அது. இப்ப சொல்ல மாட்டேன்."

அவன் கிளம்பி போனதும் உள்ளே போனாள்.

"என்னடி அப்படியே துரத்திட்டே? சாப்பிட்டுட்டுப் போகச் சொல்லக் கூடாதா?"

"நாளைக்குப் பிறந்தநாள் பார்ட்டியில சாப்பிடுவார்."

"அட. ஆமாம். மறந்தே போயிட்டேனே. நாளைக்கு உனக்குப் பிறந்த நாளாச்சே. காலையிலே சீக்கிரமா கோயிலுக்குப் போகணும்."

"எனக்குச் சாப்பாடு போடும்மா?"

"ஆறு மணிக்கேயா? என்னடி அவசரம்?"

''வயத்தில அல்சராம். அமெரிக்க டாக்டர் சொன்னார். சீக்கிரமாகவே சாப்பிட்டுடணும் ''

''இப்ப தாண்டி எனக்கேத்த பொண்ணு. அல்சரா? அப்ப வந்துரு.''

''ஜூலி சாப்பிட்லல?''

''கூப்புட்டேன். ரெண்டு பேருக்கும் ரொட்டி தான் சாப்பாடாம். அந்தப் பெண் அனீதா சொல்லிச்சு. எதுக்கும் நல்ல டாக்டரா பார்க்கச் சொல்லணும். பசிக்கல்லன்னா—''

''அல்சரா?''

''இல்லேடி, கான்ஸரா கூட இருக்குமாம்.''

மெலிதாகத் தலையிலடித்துக் கொண்டாள்: ''அவங்களுக்குச் சாப்பாடு தயார் பண்ணி மேலேயே கொண்டு வா. சாப்புடுவா.''

மாடி ஏறிப் போனாள். ''ஜூலி.''

''ஆண்ட்டி கூப்பிடறாங்க,'' என்று ஆசையாக வந்தவளை வளைத்துப் பிடித்து நிறுத்தினாள் அந்த அனிதா.

''ஆண்ட்டியுமில்லே. ஆட்டுக்குட்டியுமில்லே. பேசாம உள்ளேயே கிட.''

''அனிதா, ப்ளீஸ், கதவைத் திறம்மா. நான் மன்னிப்புக் கேட்க வந்திருக்கேன்.

''இல்லே. நொந்த புண்ணுக்குப் புனுகு பூச வந்திருக்கே. போதும்மா. எங்கேயோ இருந்தாலும் சந்தோஷமா இருந்தோம். இங்கே வருந்திக் கூப்பிட்டு இப்படி அவமானப்படுத்த வேண்டாம்.''

''ஐயம் ஸாரி அனிதா. நான் தப்பாகப் புரிஞ்சுகிட்ட அவசரக்காரி.''

''உன் பேரில் தப்பில்லே. உன் சந்தேகம் நியாயமானது தான்.''

''என்ன சொல்றே அனிதா?''

''உன் சந்தேகம் சரியானது. நான் அவரைக் காதலிக்கிறேன். விபத்து நடந்த நேரத்தில இழுத்து விட்டுட்டுப் போகாமல் கடைசி வரை உன்னைக் கூடச் சந்திக்கப் போகாமல் என்னைக் கவனிச்சுக்கிட்ட முறையை நான் விரும்பினேன்.''

''அனிதா.''

''அதுக்குள்ளே பயந்துடாதே. நான்தான் அவரைக் காதலிக்கிறேன்னு சொன்னேன். அவர் என்னை விரும்பறார்ன்னு சொல்லலையே. அவர் மனசு பூராவும் வியாபிச்சிருக்கிறவ நீ ஒருத்திதான். டெலிவிஷனும், வி.சி.ஆரும் வாங்கினப்ப நான் கூடக் கேட்டேன். ஹாலில்தான் டி.வி. இருக்கே, எதுக்கு இன்னொன்று என்று. அதுக்கு அவர் என்ன

சொன்னார் தெரியுமா?''

சாத்திய கதவைப் பார்த்தாள் காயத்ரி.

''அது பொது டி.வி. அவங்கம்மாவுக்கு இந்தி சினிமான்னா ஆகாது. போட விடமாட்டாங்க. பகலில் நான் ஆபீசில் அதிகாரம் பண்றேன். நீ டைப் அடிச்சு, பொழுது போயிடும். அவளைப் பற்றியும் நினைக்க வேண்டாமான்னார்.''

''கதவைத் திற அனிதா ப்ளீஸ்!''

சில வினாடிகள் விரையமாக ஆக—

''கதவைத் திற அக்கா. ஆன்ட்டி உள்ளே வரட்டும். எனக்குச் சாக்லேட் டெல்லாம் வாங்கிட்டு வந்திருப்பாங்க.''

கதவைத் திறந்தாள்.

பாதி கட்டி வைத்தப் பெட்டிகளும், மற்றவைகளும் இவளை நோகடித்தன.

''நோ அனிதா. நீ போகக் கூடாது. உன்னைப் போக விட மாட்டேன்.'' சொன்னாள். ''அதுவும் நாளைக்கு என் பிறந்த நாள் விழாவில் நீ இல்லாமலிருந்தால் எனக்கு ரசிக்காது. யூ மஸ்ட்.''

''இருக்கேன்.'' என்றவளிடம் பழைய கலகலப்புத் திரும்பியது. ''இன்னைக்கு இங்கேயே சாப்பிடேன்.''

''ரொட்டியும் ஜாமுமா? நோ. அம்மா காரசாரமா சமையல் பண்ணி இருக்காங்க. வா இப்பவே போய்ச் சாப்பிடலாம்.''

''இப்பவேயா? மணி ஆறு கூட ஆகல்லையே.''

''இதுதான் எனக்கு டின்னர் டயம். நீ வேணுமானால் அப்புறமா போய் சாப்பிடேன். ஜூலி. நீ என்னோட சாப்பிடறியா? அக்காவோட சாப்பிடுவியா?''

''இரண்டு பேரோடும் சாப்பிடுவேன்.''

சிரித்தார்கள்.

சாப்பிடும் போது அம்மா சொன்னாள். ''சாப்பிட்டுட்டுப் போய்த் தூங்கு. நான் கோயில்ல காலட்சேபம் நடக்குது, பார்த்துட்டு வரேன்.''

''கேட்டுட்டு வர்ரேன்னு சொல்லு.''

''சரி கேட்டுட்டு வரேன். பிரகலாத சரித்திரம். வாரியார்.''

''அவர்கிட்ட போய் இரணியன் வயித்தைக் கிழிச்சப்ப கான்ஸர் இருந்ததான்னு கேட்டு வைக்காதே. அந்தக் காலத்தில் இதெல்லாம் இல்லாத வியாதிகள்.''

''என்னடி கிண்டலா?''

''பாத்தீ. பிரகலாதன்னா யாரு?''

''அய்யோ! என்னை பாட்டிங்கறாளே! என்னைப் பாட்டிங்கறாளே! ஐயோ, அவ்வளவு வயசாத் தெரியுது? நாற்பதுக்கு மேலே அஞ்சோ பத்தோ தானே ஆகறது.''

''அயாங். சொல்லு பாத்தீ. அது யாரு!''

''அதுவா, உன்னை மாதிரி ஒரு சின்னப் பாப்பா. அவங்கப்பா ஒரு ராட்சதன்.''

''ராட்சதன்னா?''

''இப்ப உனக்கு பதில் சொல்லி மாளாது. நான் வ்ரேண்டி பொண்ணுங்களா. அடி அனிதா, எனக்காகக் காத்திருக்காம நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க.''

''சரிம்மா.''

''தாட்தா.''

''ஆமாண்டி. அப்ப பாட்டி. இப்ப தாத்தா. முதல்ல உன்னை விரட்டிட்டு தான் மறு காரியம் பார்க்கணும்.''

இரவு—உள் கதவை அணுகிச் சரேலெனத் திறந்த அனீதா அங்கே பார்த்துக் கொண்டிருந்த காயத்ரியைக் கண்டு விழித்தாள்.

அந்நியமான பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள் யார் என்றே தெரியாததுபோல.

பேச முயலும்போதே அந்தக் காயத்ரி முகத்தைத் திருப்பிக் கொண்டது மனதை மிகவும் பாதித்தது. எரிச்சல் வந்தது.

''சே. நான் இங்கே குடி வந்தது தப்பு. தங்கி இருக்கிறது தப்பு இந்த ஆதர்ஷை நம்பியதும் தப்பு.''

கூப்பிடலாமா பேசலாமா என்று நினைத்தவள், பிடிக்காமல் போகவே அறையை விட்டு வெளியேறிப் போனாள்.

தனது அறைக்குள்ளே போய் ஜூலியைத் தேடினாள்.

''ஜூலி.''

''....''

''ஏய் ஜூலி, எங்கேடி இருக்கே? இருக்கிற தொல்லை போறாதுன்னு நீ வேற உயிரை வாங்காதேடி. சனியனே, வந்து தொலை.''

''திட்டினா நான் வர மாட்டேன்.''

''வரலேன்னா ஒழி. செத்துத் தொலை.''

''ஆங்ங்ங்..''

''எங்கேடி இருக்கே.''

''நீ என்னைத் திட்டினே. நான் வரமாத்தேன். போ. ஆண்ட்டி கூடப் போய்ப் படுத்துக்கப் போறேன். இல்லேன்னா செத்துப் போயிடறேன்.''

''அங்கேப் போனே, வெட்டிப் புதைச்சுடுவேன். ராஸ்கல். எங்கோர்ந்து பேசறே.'' அமைதிக்குப் பயந்தாள். ''ஜூலி.''

தற்செயலாக ஜன்னல் வழியாகப் பார்த்துத் திடுக்கிட்டுப் போய் விட்டாள்.

கைப்பிடிச் சுவர் மீது நகர்ந்து நகர்ந்து பக்கத்து அறை ஜன்னலருகே நின்று கொண்டிருந்தாள்.

''ஏய் ஜூலி. என்ன விளையாட்டு இது? திரும்பி வா.''

''மாட்டேன். நீ என்னைச் சாகச் சொல்றே, ராட்சசி. நான் ஆண்ட்டி கிட்டேதான் இருப்பேன். அவங்க நல்லவங்க. நீதான் ரொம்ப மோசம்.'' என்று அவள் சொல்லும்போது—

''வரயா, இல்லே, அங்கே வந்து உதைக்கட்டுமா? அந்தத் திமிர் பிடிச்சவகிட்ட உனக்கென்ன உறவு? வாடி இங்கே!'' என்று இவள் அதட்டும்போது...

அந்த ஜூலி சாத்திய ஜன்னல் கதவை தட்டித் தட்டி ஓசைப்படுத்தியபோதுதான்—

உள்ளேயிருந்து வந்த காயத்ரி, ஓசை வழியாக ஆராய்ந்து ஜன்னலைத் தள்ளித் திறக்க— ஜூலி தள்ளி விடப்பட்டது போல மல்லாந்து சரிய— சரிய—

அந்த அனிதாவின் குரல் காயத்ரியைத் திடுக்கிட வைத்தது.

''என்ன? என்ன ஆச்சு?'' கத்தினாள். ''அனிதா! என்ன நடந்தது? ஏம்மா கத்தினே?''

பதில் வராமல் போகவே தட்டுத் தடுமாறிக் கதவைத் தள்ளித் திறந்து வெளியேறியபடி இறங்கினவள் அந்த அனீதா போன் பேசுவது கேட்டு நின்றாள்.

''மிஸ்டர் ஆதர்ஷ், என்னை ஏன் இங்கே குடியமர்த்தினீங்க? விருப்பமில்லாத உறவுன்னு தெரிஞ்சும் என்னை ஏன் இங்கே விட்டு வைச்சிங்க? அதான் விபரீதம் நடந்து போச்சு. பாவி. என் தங்கையை, என் ஜூலியை மாடியிலேர்ந்து தள்ளி விட்டுட்டா. அங்கே போய்ப் பார்க்கவே எனக்கு நடுக்கமாக இருக்கு. நீங்க வரணும். ப்ளீஸ், உடனே வாங்க! இருட்டிலே தேட பயமாயிருக்கு.''

''அனிதா, என்னையா சொல்றே?'' மூசசுத் திணறினாள். ''நானா? நானா?''

அவளை அலட்சியப்படுத்தினாள்.

''கரண்ட் வேற பெயிலியர். வெளியே போய்ப் பார்க்க முடியல்ல ப்ளீஸ், உடனே வாங்க.''

கரண்ட் இல்லை? வீடு இருட்டியா இருக்கிறது?



தட்டுத் தடுமாறி வெளியேறிப் போனவள், ''ஜூலி எங்கேம்மா இருக்கே? ஜூலி!'' கதறினாள். ''எங்கே இருக்கே?''

பளீரென்று வெளிச்சம் பிரவாகமாகப் படர்ந்து வர, வெளியேறி வந்த அனிதா கையால் துழாவித் துழாவி-வெளிச்சத்திலும் தடுமாறித் தேடும் அவளைப் பார்த்து வியந்தாள்.

''ஜூலி.''

அடர்த்தியான குரோட்டன் செடியில் மல்லாந்து விழுந்து மயங்கியிருந்த ஜூலியை அள்ளி எடுத்துக் கொண்டு-அந்த காயத்ரியின் எதிரிலேயே நடந்து போய்த் தள்ளி நின்று திரும்பிப் பார்த்தாள்.

அவள் இன்னமும் ஜூலியைத் தேடித் துழாவிக் கொண்டிருந்தாள்.

உள்ளே போய் ஜூலியை சோபாவில் கிடத்தி விட்டுத் திரும்பி வந்து இன்னமும் தேடும் அவள் தோளைத் தொட்டாள். தழல் பட்டு விட்டாற்போல துள்ளிய காயத்ரி, ''யாரது?'' என்றதும் சொன்னாள். ''பயப்படாதே. நான் தான் அனிதா.''

''ஜூலி... ஜூலி எங்கிருக்கிறா பாரேன், அனிதா. ராத்திரியானால் எனக்குக் கண் தெரியாது. மாலைக் கண் நோய். ப்ளீஸ். ஜூலி என்ன ஆனாள் பாரேன்.''

''அவளுக்கு ஒண்ணுமில்லே. மயங்கி இருக்கிறா. வா உள்ளே.''

கைத்தாங்கலாகக் கூட்டிப் போனாள்.

''ஆண்ட்டி.'' என்ற ஜூலியின் குரலுக்கு மகிழ்ந்து போனாள் காயத்ரி.

''எத்தனை நாளா இருக்கு இந்த மாலைக்கண் வியாதி?''

''கல்யாணத்துக்கு முந்தியிருந்தே இருக்கு. இத மறைக்க நினைச்சு நான் பட்ட அவஸ்தை போறும்மா, போறும்.''

''ஏன், என்ன ஆச்சு?''

''என் மைத்துனர் ஹரி...'' என்று ஆரம்பித்துச் சொல்லி முடித்துக் குமுறிக் குமுறி அழுதாள்.

''அதை ஏன் மாமியார் கிட்ட மறைச்சே.''

''வியாதிக்காரின்னு நினைச்சு வெறுப்பாங்களோன்னு பயம்''

''இப்படியொரு அசிங்கமான அருவருப்பை விட அந்த வெறுப்பே மேல் இல்லையா? கவலைப்படாதே. இனிமே உன்னை

வெறுக்க மாட்டாங்க.''

''ஏன்? நீ சொல்லிடப் போறிய..''

''இல்லே, நீயே சொல்லிட்டே,''

''என்ன சொல்றே?''

''ராத்திரியானால் கண்ணு மட்டுமில்லை, காதும் மந்தமாய்ப் போகுதுன்னு நினைக்கிறேன். இல்லையானா கார் வந்து நின்ன சத்தம், கதவைத் திறந்து இத்தனை பேரும் நடந்து உள்ளே வந்து நின்ற காலடி சத்தம் கூடவா கேட்காமல் போகும்?''

''அனிதா. நீ என்ன சொல்றே?''

''உன் கணவரோட குடும்பமே இங்கே வந்து நிற்கிறது. உன் மாமியார் உள்பட.''

நடுங்கி ஓரடி பின் வாங்கிக் குட்டை மேஜையில் தடுமாற-

ஓடிவந்து தாங்கிக்கொண்டார் மாமியார். ''மெள்ள நடடி பாவி. வயத்திலே பிள்ளையைச் சுமந்துகிட்டு மூணுமாசம் வரை கவனமாயிருக்கணும்.''

''அத்தை!''

''என்னமோ நாளைக்குத்தான் மகனுக்கு விஷயம் சொல்லப் போறேன்னு சொன்னியாமே! புதுசா கல்யாணம்

பெண் சொல்லப் போகிற சேதி என்னன்னு எனக்குப் புரியாதா? டாக்டர் சுகுமாரிக்கு ஃபோன் பண்ணிக் கேட்டேன். எல்லாத்தையும் சொல்லிட்டாங்க. உன் மாலைக் கண் நோய் உள்பட, உட்கார்.'' சோபாவில் அமர்ந்து அமர்த்திக் கொண்டாள். ''பைத்தியக்காரப் பொண்ணு. சாதாரண வியாதிக்குப் போய் இப்படிப் பயப்படணுமா? இவ்வளவு குழப்பம் வந்தும் கூட வாய் திறக்காம இருந்துட்டியே.''

''அத்தே.''

''இப்பவே புறப்படு. வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகத்தான் வந்திருக்கிறேன்.''

''அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க. வரட்டும்.''

''நான் சொல்லிக்கிறேன்.'' அனிதா சொன்னாள். ''நாளைக்குப் பிறந்த நாள் பார்ட்டி அங்கே தானே நடக்கும். கூட்டிட்டு வரேன்.''

''தவிர எப்படியும் சீமந்தத்துக்கு வந்து பிரசவம் முடிஞ்சு ரெண்டு மாசம் வரை இங்கே தானே இருக்கப் போறே. அதுவரைக்குமாவது உன்னைச் சீராட்டறேனே.''

அவர்கள் கிளம்பிப் போனதும் கோவிலிலிருந்து திரும்பிய அம்மாள் அனிதாவிடம் சொன்னாள். ''என்ன அருமையா சொல்றார் தெரியுமா? பிரகலாதனை மலையிலேர்ந்து உருட்டி விடறாங்க. பூமா தேவி அவனைத் தாங்கிக் காப்பாற்றி என்ன வரம் வேணுமோ கேளுன்னு கேட்டப்ப, 'என் வயசுப் பிள்ளைங்க கீழே விழுந்தா அடிபடக் கூடாதுன்னு வரம் தரணும்'னு கேட்டானாம் பிரகலாதன். என்ன தாராள மனசு பார்த்தியா? தனக்குன்னு கேட்காம எல்லாப் பிள்ளைகளுக்குமாகக் கேட்கிறது குழந்தை.''

''அந்தக் கதைதான் கொஞ்சம் முன்னே இங்கே நடந்ததும்மா.''

''என்னடி சொல்றே?''

''சொல்றேன். எல்லாத்தையும் சொல்றேன்.'' என்று ஆரம்பித்துச் சொல்லி முடிந்ததும் அம்மாள் வியந்தாள்.

''அடிப்பாவி. மாலைக்கண்ணா அவளுக்கு? ராத்திரி நேரத்திலே தடுமாறிப் போகிறதைப் பார்த்து, கண்ணுல கான்சர்ன்னுல்லே நினைச்சு பயந்தேன்.''

கண்களில் சலிப்புக் காட்டிப் பார்த்தாள் அனிதா.

(முற்றும்)

மாலைமதி ஆசிரியரும் பிரசுரகர்த்தரும்: பி.வி. பார்த்தசாரதி, 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை–600 010. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் அச்சிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி.

வித்தியாசமான தவிப்பு

தாரிணியின் நிலையில் உள்ள பெண்கள் 'தடுமாறாதே தாரிணி' நாவலைப் படித்தால் இனிமேல் கண்டிப்பாக வாழ்க்கையில் தடுமாறவே மாட்டார்கள் என்பது என் நம்பிக்கை!

ஆர். வேலுமணி, கடலூர்-2.

வெளிநாடுகளில் குடியேறும் இந்திய மக்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து ஒற்றுமையாகச் செயல்படுவதைப் படித்தவுடன் திணறிப் போய்விட்டேன். தாரிணி ஒரு துணிச்சலான பெண் என்பதை நிரூபித்துள்ளார் ஆசிரியர்.

எம். மேரி, திருவொற்றியூர்.

நவநீத்தை அவனது குடும்பத்தோடு சேர்த்து வைப்பதால் ...ழ்ச்சிக்காரி பட்டத்தை வாங்கிய ...ாதும் கஹூஷா குலப் ...ருமைக்குக் களங்கம் நேர விடாத ...லால் உயர்ந்து நிற்கிறாள்.

அ. செல்வராஜ், கரூர்.

யிருந்ததனால், கதையின் முழுச் சுவையையும் பருக இயலவில்லை.

இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

ஆரம்பம் முதல் முடிவு வரை தெளிந்த நீரோடை போல் கதை சென்றாலும், கதையின் பாத்திரங்களின் பெயர்கள்தான் எங்களைத் தடுமாற வைத்தது.

எப். ஷர்புதீன், மேட்டுப்பாளையம்.

தலைப்பிலேயே தாரிணிக்கு ஆறுதல் சொன்ன ஆசிரியர், எங்களுக்கு ஆறுதல் தரவில்லையே!

பி. பிரசாத், குத்தாலம்.

விவேக் தன் மீது தூய அன்பு செலுத்திய போதும், அகம்பாவத்தால் அவன் மனம் புண்படும்படி பேசிக் காதலை இகழ்ந்து நின்ற தாரிணியின் வித்தியாசமான தவிப்பை அமெரிக்க தேசத்துப் பின்னணியில் படம் பிடித்துக் காட்டிய உமா சந்திரனின் 'தடுமாறாதே தாரிணி' ஒரு சிறந்த டூ இன் ஒன் படைப்பு. பாராட்டுக்கள்! கஹூஷா பற்றிய கப்சாதான் கழுத்தறுப்பு!


பி.எல். பரமசிவம், மதுரை.

நாவலில் புதுமை ஏதும் இல்லாமல் ஒரே பழமை நெடியாய் இருப்பது பெரும் குறை! ஒரே மாதிரியாக நாவல் சென்றதால் இறுதியில் மிஞ்சியது –சலிப்புதான்.

எஸ். ராஜா, குத்தாலம்.



உமா சந்திரனின் 'தடுமாறாதே தாரிணி' கதை படிப்பதற்குச் சுவையாக இருந்த போதிலும், கதாபாத்திரங்களுக்குப் பெயர் வைக்கும் (அதுவும் வாயில் சுலபமாக நுழைய மறுக்கும் நாஹ்நீ கஹூஷா போன்ற பெயர்களை) விஷயத்தில் கதாசிரியர் சற்று அவசரப்பட்டு...



விறுவோ விறுப்பு!

மெல்லக் கொலை இனித் தொடரும் தொடர் அடுத்த வாரம் எப்போது வரும் என்று எண்ணும்படி அருமையான விறுவிறுப்பு.

தங்கவேல், பாலசமுத்திரம்.


ஜாலெயபா



தொழிலதிபர் சிவசங்கர் ஏற்பாடு செய்திருந்த 'ப்பார்ட்டி' அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது.

நகரின் முக்கியப் புள்ளிகள் அந்த ஐந்து நட்சத்திர 'பால்' ரூமில் குழுமியிருந்தனர்.





அருமையான பஃப்பே லஞ்சிற்குப் பிறகு ஓர் அவசர மேடை அமைக்கப்பட்டு நடு நாயகமாக வீற்றிருந்த சிவசங்கரை சகட்டு மேனிக்குப் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தனர்.

மேற்படி ப்பார்ட்டிக்குக் காரணம், சிவசங்கர் புதிதாகத் தொடங்கியிருந்த (மற்றுமொரு) தொழிற்சாலைதான்.

வகை வகையாக மாலைகள் அணிவித்தார்கள். வாயினுள் சர்க்கரை போட்டுக் கொண்டாற் போல் இனிக்க இனிக்கப் பேசினார்கள்.. புகழ்ந்தார்கள். அவரைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு, -கண், இன்னபிற உடல் உறுப்புக்களுடன் ஒப்பிட்டார்கள். சந்தடி சாக்கில்

ஒரு கொலை



அவரைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டு 'பிசினஸ் தூண்டில்' வீசினார்கள்.

திடுமென்று பிரவேசித்த ஓர் துண்டு போட்ட அரசியல்வாதி ஏதோ ஓர் 'நானூறிலிருந்து' ஒரு பாடலை வல்லின மெல்லின கொலையுடன் எடுத்து விட்டு, சிவசங்கரை அதியமான் நெடுமானுடன் ஒப்பிட்டுச் சிலாகித்துவிட்டு, இடையே, 'என் வேட்டித் துண்டில்தான் கறை உண்டு; கைகளில் இல்லை,' என்று சம்பந்தம் இல்லாத பொன்மொழி உதிர்த்த பின், ஆரஞ்சு ஜூஸை ஒரு வாய் பருகிவிட்டு, 'ஹிஹி.... ஹார்ட் இல்லீங்க போல!' என்ற இளிப்புடன் அவசரமாக அகன்றார்.

சிவசங்கருக்கு எதிலும் சுவாரசியம் தட்டவில்லை. கொட்டாவியை மென்று கொண்டிருந்தார். மகா அலுப்பு; அலுப்பு. நண்பர்களின் தொண தொணப்பில்தான் இந்தப் பார்ட்டி செலிப்ரேஷனை ஏற்பாடு செய்திருந்தார். இந்தப் புகழுரைகள் எல்லாம் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. அவர் பாக்டரி தொடங்குவது என்ன புதுசா?

தொழிலதிபர் சிவசங்கருக்கு ஐம்பது வயதாகிறது. எலுமிச்சை நிறம். களையான முகம். மிகத் திடமான உடம்பு. அணிந்திருந்த அந்த வெளிர் நீல ஃபுல் சூட்டில் கம்பீரமாகத் தெரிந்தார். பார்வையில் 'உலகம் என் காலடியில்' தெரிந்தது.

அவர் ஒரு பரம்பரைப் பணக்காரர். மூன்று தொழிற் சாலைகளுக்கு அதிபதி. நான்காவதாக ஒன்று திருவான்மியூர்ப் பக்கம் தொடங்கியிருக்கிறார்.

தன் வசமுள்ள பெரும் பணம் கொண்டு, நிறைய விஷயங்களைச் சாதித்திருக்கிறார். அனேக சுகங்கள் அடைந்திருக்கிறார். எல்லாம் பார்த்துச் சலித்ததனால்தானோ என்னவோ, சமீப காலமாக அவருக்கு எதிலுமே நாட்டமில்லை. வாழ்க்கை சுவாரசியம் குறைந்தாற் போல் பட்டது.

பேரர் கொண்டு வந்த ஜூஸை மெல்லப் பருகினார். கூட்டத்தில் சுறுசுறுப்பாக நடமாடிக் கொண்டிருந்த தன் உதவியாளன் யுவராஜைப் பார்த்தார்.

பெருமிதமாக இருந்தது. இரண்டு வருடங்கள் முன்பு தனது முந்தைய உதவியாளர் சிதம்பரம் அகாலமாக இறக்கவும், சிவசங்கர் செய்வதறியாது சிறிது காலம் விழித்துக் கொண்டிருக்க....

யுவராஜ்—சிதம்பரத்தின் மகன்—முன்வந்து 'பி.ஏ.வாக இருக்கிறேன்,' என்றான். இருபத்து நான்கு வயது இளைஞனா யிற்றே என்ற தயக்கத்துடன்தான் ஒப்புக் கொண்டார்.

ஆனால் சேர்ந்த இந்த இரண்டு வருடங்களில் தன் திறமையை நன்கு உணர்த்தி விட்டான். வயதுக்கு மீறிய புத்திசாலி, வெகு கெட்டிக்காரன் என்பதைப் புரிந்து கொண்டார். கொடுக்கும் சம்பளம் தகும். விரல் முனையில் வேண்டிய விவரங்களை வைத்திருந்தான். தற்போது யுவராஜ் என்னும் பி.ஏ. அவருடைய வாழ்வில் இன்றியமையாதவனாகி விட்டான்.

உபசரித்து விட்டு நிமிர்ந்த யுவராஜை சைகை செய்து அழைத்தார் சிவசங்கர்.

யுவராஜ் அருகே வந்து பவ்யமாய், ''என்ன சார்? டிரைவர் மனோகர் லீவு. நீரஜாவைக் காலேஜிலிருந்து அழைச்சிட்டு வரணும். அவ்வளவுதானே?''

சிவசங்கர் மறுபடியும் வியந்து கொண்டார். பாவிப் பயல்! ''ஏண்டா, நீ என்ன மந்திரவாதியா? கேட்பதற்கு முன்னாலேயே சரியாய்ச் சொல்றே?''

''இதென்னங்க பிரமாதம்! இப்போ மணி 2.30. காலேஜ் மூணு முப்பதுக்கு விடறாங்க. மனோர்கர் லீவுன்னு தெரியும். எல்லாத்தையும் சேர்த்துப் பார்த்துப் பதில் சொல்ல என்ன பிரமாத புத்தி வேணும் சார்?''

''சரி, நீ சாப்பிட்டு விட்டாயா யுவராஜ்?''

''ஆச்சு சார்.''

''அப்போ கிளம்பு ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போய ஃபியட் எடுத்துக்க. நம்ம கான்டெஸால பெட்ரோல் போட்டிருக்கில்ல?''

''ம். நான் கிளம்பறேன் சார்.'' யுவராஜ் விடை பெற்றுக் கொண்டு கிளம்ப.....

மறுபடியும் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டு, 'அலுப்பு' தட்டிப் போய் உட்கார்ந்திருந்தார். அடுத்த அரை மணியில் ஒவ்வொருவராக இவரைச் சமீபித்து, கை குலுக்கிவிட்டு இடத்தைக் காலி செய்ய ஆரம்பிக்க....

ஒருவழியாய்ப் பார்ட்டி முடிந்திருந்தது. ஹாலில் மிகத் தெரிந்த ஒருவர் மட்டும் உடனிருக்க, ஓட்டல் சிப்பந்திகள் சிவப்பு வெல்வெட் வைத்துத் தைத்த நாற்காலிகளை நகர்த்தத் தொடங்கினர்.

ஓட்டலின் அதிகாரி ஒருவர் டை ஊசலாட 'நன்றி நவின்று' விடை கொடுக்க வந்தார்.

சிவசங்கர் நேரம் பார்த்தார். 3.15. ''என்னய்யா கிளம்பலாமா? இந்த தபா விட்டுக் கொடுக்காமல் வந்துட்டீங்க இல்லே....'' என்று பக்கத்தில் இருப்பவரிடம் திரும்பும் போது....

பூட்ஸ் கால் அதிர அறையினுள் டி.சி.பி.—க்ரைம் பிராஞ்ச் தர்மராஜன் பிரவேசித்தார்.

''அட! நம்ம டி.சி.பி.!'' என்றார் சிவசங்கர்.

''பங்ஷன் நல்லா நடந்ததா சிவசங்கர்?''

''ம்... ம்... என்ன நீங்கதான் மறந்துட்டீங்க?''

''ஐயோ! அப்படி இல்லை. மறந்திருந்தால் இப்போ வந்திருப்பேனா?''

''இப்பவாவது வந்தீங்களே. ஹும்... நல்ல சுறுசுறுப்புதான்!''

''கிண்டல் பண்ணாதீங்க சிவசங்கர். அண்ணா நகரிலே ஒரு திடீர்க் கொலைக் கேஸ். யாரோ ஒரு துணை நடிகை மார்லே கத்தி செருகிட்டாங்க. கேஸை அட்டெண்ட் பண்ணிவிட்டு நேரா

இங்கே வர்றேன். அப்பா! விசாரணை பெண்டு எடுத்துட்டுது.''

சிவசங்கர் இடைமறித்து, ''ஒரு சந்தேகம் தர்மராஜன்?''

''கேளுங்க.''

''தினம் கத்தி, ரத்தம், கொலைன்னு பார்த்தால் வெறுப்பா இருக்காது?''

''வெறுப்பா? சேச்சே! ஒவ்வொரு கொலையும் எனக்கு விடற சவால் மாதிரி. எதிராளி விட்டுட்டுப் போன இரண்டொரு தடயங்களை வச்சிட்டு, மூளையைக் குழப்பிக் கொண்டு செஸ் ஆட்டம் போலக் கவனமாகக் காய்களை மாத்தி வச்சு அவனைப் பிடிக்கறதுலே இருக்கிற த்ரில்லே தனி. அதுக்காகத்தான் சிறைத் துறையிலிருந்து மிகுந்த முயற்சி செய்து க்ரைம் பிராஞ்சிற்கு மாற்றல் வாங்கிட்டு வந்தேன்....''

டி.ஸி.பி சொல்வதை சுவாரசியமுடன், கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் சிவசங்கர்.

''நான் க்ரைம் பிராஞ்சுக்கு வந்த இந்த ரெண்டு மாசத்திலே சிடியிலே சாமர்த்தியமான நாலு கொலைகள் விழுந்திருச்சு. சரியான க்ளூ இல்லை. இருந்தும் விட்டேனா? நாலு கொலையாளிகளையும் கண்டு பிடிச்சு முட்டியைப் பேர்த்து உள்ளாற உட்கார வச்சிட்டேன்...'' கடகடவென்று சிரித்தார். ''அதான் சொன்னேனே, ஒவ்வொரு கொலையும் ஒரு சுவாரசியமான சவால். அதெல்லாம் உமக்குப் புரியாது ஸ்வாமி!'' தன் முறுக்கு மீசையைப் பெருமையுடன் முறுக்கிக் கொண்டார்.

மிகச் சரியாக அந்தக் கணத்தில்தான் சிவசங்கரின் மனத்தில் அந்தத் திடீர் ஐடியா உதித்தது. உலர்ந்திருந்த உள்ளத்தில் உற்சாகம் ஊற்றெடுக்கத் தொடங்கியது.

'ஏன் நாமும் ஒரு கொலை செய்து பார்த்தால் என்ன?'

9



சுற்றிலும் சுவர். வாயிலில் அகலமான கேட். கேட் அருகே ஓர் பச்சை மரக் கூண்டு. கூண்டினுள் சதா வாயில் பீடியுடன் வாயிலோன். இருமருங்கிலும் குத்துச் செடிகள் ஒழுங்காக வெட்டப்பட்டு, நடுவே கான்க்ரீட் பாதை. பாதை நூறு கெஜ தூரம் நேராகச் சென்று, பின் ஓர் இளம் பெண்ணின் இடுப்பு போல் வெட்டு வெட்டி, பங்களாவை அணைத்துக் கொண்டு சென்று பின்புறம் முடிந்திருந்தது.

முடிந்திருந்த இடம் காரேஜ். ஒரு போயிங் விமானத்தை நிறுத்தலாம் போன்றிருந்த் இடத்தில் மூன்று கார்கள் வழக்கமாக நிற்கும். உபரியாக டூ வீலர்கள்.

காரேஜை அடுத்து, டிஸ்டெம்பர் அடித்த அடக்கமான அந்த அவுட் ஹவுஸ். அப்புறம் அந்த பங்களா. பணத்தால் இழைக்கப்பட்ட நான்கு பெட்ரூம் சமாச்சாரம். உள்ளே பரவலாக ஏ.சி. மெத் மெத்தென்ற கார்ப்பெட். ஒரிஜினல் வால் பேப்பர்கள். ஆயில் பெயிண்ட்டுகள். எலக்ட்ரானிக் சாதனங்கள். மாடி–கீழ்– அவுட் ஹவுஸ் இணைக்கப்பட்ட இண்டர்காம்கள். டெலிபோன்கள். அந்தப் பங்களாவின் ஒவ்வொரு அயிட்டமும் பார்ப்போரை ஏக்கப் பெருமூச்சு விடச் செய்து ‘பணம்... பணம்...’ என்று கதறும்.

காம்பவுண்டில் மிச்ச மீதி இடங்களில் பச்சென்று தோட்டம். நானாவித மரங்கள். கிழே விழுந்து புரளலாம் போல் புல்வெளி.

மேற்படி பங்களாவின் சொந்தக்காரர் சிவசங்கர். அவுட் ஹவுசில் வசிப்பவன் யுவராஜ்.

அவசரமாகப் பீடியைத் துப்பிவிட்டு ‘சலாம்’ வைத்துக் கேட்டைத் திறந்தான் கூர்க்கா.

ஆட்டோவை அனுப்பிவிட்டு யுவராஜ் கான்க்ரீட் பாதையில் வேகமாக நடந்தான். அந்தப் பிரும்மாண்ட பங்களாவைப் பார்த்துக் கொண்டே தன் சிறிய அவுட் ஹவுஸை அடைந்து சாவி போட்டுத் திறந்தான்.

யுவராஜுக்கு மனம் பரபரப்பாக இருந்தது. படபடப்பாக வந்தது.

நீரஜாவை எப்படியும் இன்று கேட்டுவிட வேண்டும். நேரடியாக ‘என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?’ என்று கேட்க வேண்டும்.

நீரஜா என்ற அழகு மலரின் வளர்ச்சியைச் சிறு வயதிலிருந்தே சற்று எட்ட இருந்து (அவுட் ஹவுஸ்) கவனித்து வந்திருக்கிறான். அவளுடைய மின்னல் அழகில், துடிப்பான பேச்சில் பிரமித்திருக்கிறான்.

ஆயிற்று. நீரஜா கடைசி வருடப் பட்டப் படிப்பில் இருக்கிறாள். இதுவரை கவனமாகக் கவனித்து வந்ததில், அவள் எவனுடைய வலையிலும் விழவில்லை என்பது தெரியும். ஆனாலும் பெண்கள் மனம் விசித்திரமானது. ஆழமானது. எந்த நேரத்தில், என்ன நிகழும், எப்படி மாறும் என்று சொல்ல முடியாது. எதிர்பாராமல் குப்பென்று பற்றிக் கொள்வார்கள். அதுவும் இளவயதில், இளமனதில்....

ஊகூம்... இனியும் ஒத்திப் போடுவது பைத்தியக்காரத் தனம். 'காத்திருந்தவன்—நேற்று வந்தவன்' கதை போலாகி விடும். தான் முதல் மனிதனாக முந்திக் கொள்ள வேண்டும். ம்.... பளிச்சென்று கேட்டு விடுகிறேன்.

அவரசர அவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டான். சிக்கலான சுருட்டைத் தலை முடியில் சீப்பை வைத்து உழுதான். உயர் ரக பவுடர் அப்பிக் கொண்டு, வாசனாதி திரவியங்கள் தெளித்துக் கொண்டு, தேர்ந்தெடுத்த உடையை அணிந்து கொள்ளும் போது....

கற்பனையில் நீரஜாவுடன் முதலிரவு வரை வந்து விட்டான்.

கண்ணாடியில் பிரதிபலித்த உருவத்தை ரசித்துக் கொண்டான். தன் அழகிய முகத்தை மறுக்க மாட்டாள். அப்புறம் இந்த யுவராஜின் புத்திசாலித்தனம்... நீரஜாவிற்குக் கசக்கவா செய்யும்?

அவுட் ஹவுஸைப் பூட்டி விட்டு வெளியே வந்தான். பங்களாவிற்குள் சென்று நீரஜாவின் தாய் பார்வதியிடம் சொல்லிக் கொண்டு பியட் கார் சாவியைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

மீண்டும் பங்களாவைத் திரும்பிப் பார்த்தான். ம்.... பணம்.. இது மட்டும்தானா? கறுப்பு, வெள்ளை, பினாமி... இன்னும் பல விதங்களில் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறார்?

அவ்வளவிற்கும் ஒரே வாரிசு நீரஜா என்ற பருவப் பெண். இளவரசி. அத்தனை சொத்தும் தன் ஆளுகைக்கு வந்தால்....

காரை வேகமாகச் சீற விட்டான். யுவராஜுக்கு மனம் பரபரப்பாக இருந்தது. படபடப்பாக வந்தது.

நீரஜாவை எப்படியும் இன்று கேட்டுவிட வேண்டும். என்ன பதில் சொல்வாள்? சம்மதிப்பாளா....?



கா ரை நிறுத்தி விட்டு சிகரெட் பிடிக்க அவகாசம் இருந்தது.

பில்டரின் முனை வரை உறிஞ்சிவிட்டுத் துப்பவும், கல்லூரி மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

கேட் திறந்து கல்லூரிப் பெண்கள் அலை அலையாக வெளியே வரத் தொடங்கினார்கள். எத்தனை வித உற்சாக மிகு வண்ணமய மலர்கள். பளீர்ச் சிரிப்புடன், அருவி நீர் போல் சளசளவென பேச்சுக்களுடன், கவலை என்றாலே கிலோ என்ன விலை என்று கேட்கும்....

அத்தனையும் எங்கே கொள்ளை போய் விடுமோ என்று பயந்தவன் போல், அடுத்த நிமிடம் தன் ஆயுள் முடிந்து விடும் என்பது போல் கண் கொட்டாமல் பார்த்தான் யுவராஜ். எதைப் பார்ப்பது, எதை விடுவது என்று குழம்பினான். இளசுகள் அனைத்தையும் அணைத்துக் கொள்ளப் புராண காலக் கார்த்த வீர்யார்ஜுனன் போல் ஆயிரம் கைகள் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது...

''ஹாய் யுவராஜ்!''

திரும்பினான். நீரஜா! புன்சிரிப்புடன் கண்ணாடியை இறக்கிப் பதிலுக்கு 'ஹாய்'த்து விட்டுக் கதவைத் திறந்தான். அருகில் அமர்ந்தாள்.

''செம்மையா சைட் அடிச்சிட்டிருந்தீங்க போல?''

''என்னது?'' என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

''அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணிப் பார்த்தேன் திரும்புவீங்களோன்னு....''

''பொய்!''

''நான் ஏன் பொய் சொல்லணும்? என்ன ஜொள்ளு... என்ன சைட்டு? என்ன....''

''ஷட்டப்!'' என்ன பேச்சு விபரீதமாகப் போகிறதே. அதுவும் திருமணம் பற்றிக் கேட்க இருக்கையில் தன் 'இமேஜ்' ஸ்பாயிலாகி விடப் போகிறது. ''தப்பா நினைச்சிட்டே நீரஜா. அப்பா புதுசா வச்ச பாக்டரி பற்றி தீவிரமா யோசிச்சிட் டிருந்தேன்.''

''ஓ! ஸாரி...'' தலை முடியை அலட்சியமாக

மிடுக்குடன் கோதிக் கொண்டாள். ''மனோகர் லீவா?''

''ஊம்.''

''தேங்ஸ் யுவராஜ். உங்க வேலையை விட்டுவிட்டு வந்து பிக்கப் பண்ணினதுக்கு.''

'அது என் சந்தோஷம் பெண்ணே!' என்று சொல்ல நினைத்து, ''இட்ஸ் நத்திங்,'' என்றான்.

''என்ன யுவராஜ் ரூட் மாத்தறீங்க?''

''ஒரு கப் காப்பி சாப்பிடலாம்னு பார்த்தேன்.''

''ஐயோ வேணாம். டைம் ஆயிடும்.'' திடீரென்று கைகளை உதறிக் கொண்டு, ''பாருங்க மறந்தே போயிருச்சு. இன்னிக்கு லைப்ரரி போகணுமே? ஒரு புக் சொல்லி வச்சிருக்கேன்...'' கைப் பையைக் குடைந்து விட்டு, ''அப்பா, கார்டு கொண்டு வந்திருக்கேன். காப்பியும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். நேரமாயிடும். லைப்ரரிக்குத் திருப்புங்க.''

''டைம் ஆகாது. ஜஸ்ட் அஞ்சு நிமிஷம்தான். முதல்லே ரெம்பா காப்பி. அப்புறம் லைப்ரரி. ப்ளீஸ்...''

பெயருக்கு இரண்டு குரோட்டன்ஸ் தொட்டி வைத்துக் கொண்டு (தோட்டமாம்) இந்த ஓட்டலின் மொட்டை மாடி செங்குத்தான இரண்டு அசௌகரிய நாற்காலிகளில் எதிரும் புதிருமாய் அமர்ந்து கொண்டனர். காப்பி வந்தது. யுவராஜ் கோப்பையை வாயில் பொருத்தி....

பருகினான்—அவளை! சிவப்பு நிறம் நீரஜாவிற்கு. துறுதுறு திராட்சைக் கண்கள். கூர்மையான நாசி. சிறிய சிவந்த உதடுகள். அடிக்கடி மூக்கில் சறுக்கு மரம் விளையாடும் கண்ணாடி. 'நான் இங்கிருக்கிறேன்' என்று பிரகடனப்படுத்திக் கொண்ட கம்பீரமான 'அவைகள்' மீது இரட்டைப் பின்னல் விழ... லட்டுதான். பயங்கர சொத்து மதிப்புள்ள லட்டு.

எவனாவது கொள்ளை அடிப்பதற்கு முன் கேட்டு விடு யுவராஜ். எப்படிக் கேட்பது? தயங்கினான். கேட்டதும் செருப்பைக் கழட்டுவாளா? ஆங்கிலத்தில் திட்டிவிட்டு டக்கென்று திரும்பிப் பாராமல் நடந்து விடுவாளா? தயங்காதே யுவராஜ். வந்தது வரட்டும். பளிச்சென்று கேள்.

தலையை ஒருமுறை குலுக்கிவிட்டுக் கொண்டான். நீரஜாவை நேரடியாகப் பார்த்து, ''நீரஜா...'' என்றான்.

''யெஸ்?'' கோப்பையிலிருந்து நிமிர்ந்தாள்.

குபுக்கென்று முகத்தில் ரத்தம் பாய, ''டைரக்டா கேட்கிறதுக்கு மன்னிச்சுக்க நிரஜா. நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?''

சட்டென்று காப்பி பருகுவதை நிறுத்திவிட்டு அவனை உற்றுப் பார்த்தாள்.

தேவதை என்ன சொல்லப் போகிறது... அடுத்து வரும் வினாடிகளில் அவன் பணக்காரனா இல்லையா என்பது தெரிந்து விடும். படபடப்பாக வந்தது. டென்ஷனுடன் நகத்தைக் கடித்தான். இரண்டு வினாடிகள் அவள் நல்ல வார்த்தை சொல்வதான கற்பனையில் நுழைந்து மீண்டான். ஃபான்டஸி! நிஜமாக்கிவிடு நீரஜா!

''இதைச் சொல்லத்தான் காப்பிக்கு அழைச்சீங்களா?''

''ப்ளீஸ்! 'நோ'ன்னு மட்டும் சொல்லிடாதே. சின்ன வயதிலிருந்தே இந்த ஆசையை வளர்த்துக் கொண்டேன். கேட்கிறதை ரொம்ப நாளா ஒத்திப் போட்டுக் கொண்டிருந்தேன். பொறுக்க முடியலே. அதான் இன்னிக்குக் கேட்டுட்டேன். கேட்ட இடம், நேரம், முறை தப்புன்னா மன்னிச்சுக்க. ஆனால் ஏமாத்திடாதே நீரஜா. வில் யூ மேரி மீ?''

''யூ சி யுவராஜ்! இதுக்கு எப்படி, என்ன பதில் சொல்றதுன்னே புரியலே.''

''ஏன்... ஏன் குழப்பம்? யாரையாவது லவ் பண்றியா?'' காதலன் இல்லை என்பது தெரியும். பல காலமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். இருப்பினும் தான் பெரிய நியாயவாதி என்று 'போஸ்' கொடுக்க அந்தக் கேள்வி உதவும்.

''சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் இல்லை. இந்த நிமிடம் வரை அந்த நினைப்பு வரலை. காரணம் யாரும் கவரவில்லை உங்களையும் சேர்ததுத்தான் சொல்றேன்....''

''நீரஜா, அப்போ என்மேலே வெறுப்பா?' கலவரமுடன் கேட்டான்.

''நோ நோ. உங்களை எங்கள் குடும்ப நண்பராகத்தான் பாவிக்கிறேன். கேட்டதாலே வெளிப்படையா சொல்றேன். உங்க பேரிலே எனக்கு விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை.''

''அப்போ திருமண விஷயம்?''

''அதை அப்பா முடிவு பண்ணுவார்.''

''உங்க டாடிகிட்டே பெண் கேட்கலாமா? உனக்குச் சம்மதம்தானே?''

''சம்மதம்னு சொல்ல முடியாது. ஆனால் ஆட்சேபணை இல்லை.''

''அப்ஜெக்ஷன் இல்லைதானே? அது போதும் தெய்வமே!''.

''இப்போ இல்லை.'

''டாடி சொன்னால் ஓ.கே.தானா நீரஜா?''

சற்று மௌனம் விட்டு, ''ம்... அதான் சொன்னேனே யுவராஜ். இப்போ என் மனசு க்ளீன் சிலேட் மாதிரி இருக்கு. துடைச்சு விட்ட மாதிரி. இதுவரை யாரும் நுழையலை. நீங்க

கேட்டு அப்பா சொன்னா சரின்னு கழுத்தை நீட்டுவேன். நீங்க குடும்ப நண்பர்-உதவியாளர் என்கிற ஸ்தானத்திலிருந்து மாப்பிள்ளை என்கிற பொஸிஷனுக்கு உயர்ந்துடறீங்க. 'லவ்' வருதான்னு பார்க்கிறேன். அப்படி டாடி சம்மதிக்கலைன்னா... சாரி! இந்த விஷயத்தை இதோட மறந்துடலாம். நாம எப்பவும் போல நல்ல நண்பர்களாக இருப்போம், என்ன?''

மௌனமாகவே காரைக் கிளப்பினான். எவ்வளவு அழகாகத் தெளிவாகப் பேசி விட்டாள்? அவனுக்கு நிலைமை நன்றாக விளங்கி விட்டது. இப்போது எல்லாம் சிவசங்கர் கையில் உள்ளது. அவரிடம் பேசிச் சம்மதம் வாங்கிவிட வேண்டும். ஒரு கல்லூரி செல்லும் பருவப் பெண்ணை எவ்வளவு நாட்கள் கண்காணிக்க முடியும்? அதுவும் இந்தக் காலத்தில்....

'க்ளீன் ஸ்லேட்' என்கிறாள். எவனிடமாவது 'க்ளீன் போல்டு' ஆக எவ்வளவு நேரம் பிடிக்கும்? ம்ஹூம். முந்திக் கொள் யுவராஜ்! அதுவும் இன்றே... இன்றிரவே அவரைப் பார்த்துக் கேட்டு விடு....

காரை சிக்னலுக்காக நிறுத்தினான். தன் வாழ்க்கைக்குப் பச்சை சிக்னல் கொடுப்பாரா? கொடுத்து விட்டால்... நீரஜாவைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டான். சிவசங்கரின் அத்தனை சொத்துக்களையும் அடைந்து, பெரிய பணக்காரனாகி தன் கூரிய மூளையை உபயோகித்து....

மேலும் பெரிய பணக்காரனாவான். பணத்தை எப்படிப் பெருக்க வேண்டும் என்பதற்குக் கைவசம் பல ஐடியாக்கள் வைத்திருக்கிறான். அந்த லட்சியங்கள் அப்புறம்...

கன்னிமாரா நூலக வாசலில் இறங்கிக் கொண்டாள் நீரஜா.

''நான் வெயிட் பண்ணட்டுமா?''

''வேண்டாம். நீங்க போங்க. நான் கொஞ்சம் புக்ஸ் பார்க்கணும். டைம் ஆகும்.''

''ஓ.கே.'' என்று மனதில்லாமல் காரைக் கிளப்பினான். சடுதியில் வருகிறேன் மாமனாரே!.

ஓர் (இன்ப) அதிர்ச்சி அங்கே காத்திருப்பதை அறியாமல் நீரஜா லைப்ரரி நோக்கிச் சென்றாள்.

ஒரு சிறிய தீப்பொறி. சிவசங்கருக்கு மனம் பூராவும் திக்கென்று பற்றிக் கொண்டு எரிவது போல் இருந்தது. உற்சாக நெருப்பு!

பார்ட்டி முடிந்து கம்பெனியில் ஓர் அரை மணி நேரம் – செக்கில் கையெழுத்து, சில திட்டங்கள், புதிய பாக்டரி தொடர்பான அவசர அலுவல்கள்... ம்கூம். எங்கும் எதிலும் மனம் ஒட்ட மறுத்தது.

திரும்பத் திரும்பக் 'கொலை' பல்லவியைப் பிடித்துக் கொண்டது. எப்போதுடா வீட்டைப் பார்ப்போம் என்றாகி விட்டது

அருமை மனைவி கோட்டைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு கேட்ட தொண தொண கேள்விகளுக்குப் பதில் சொல்லி, அவள் கொடுத்த தெம்பு தரும் பானம் ஒன்றை ஒரே மூச்சில் முடித்துவிட்டு டக்கென்று தன் தனியறைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டார்.

பிரிஜ்ஜைத் திறந்து இரண்டு விரற்கடை விஸ்கியை கண்ணாடி டம்ளரில் சேகரித்துக் கொண்டார். சோடாவைச் சேர்த்தார். சுவைத்துப் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

தேன் நிற திரவ டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டார். நடை பயின்றார். நீண்ட நாட்களுக்குப் பின் மனதில் உற்சாக அலைகள் அடிப்பதை உணர்ந்தார். நினைவுகள் சற்று பின்னோக்கவும் செய்தன.

சிவசங்கர் வாயில் சில்வர் ஸ்பூன் வைத்துக் கொண்டார். இளம் வயதிலேயே எல்லாவற்றையும் பார்த்திருக்கிறார். பார்க்க அசாத்திய தைரியம் இருந்தது. விருப்பம் இருந்தது. வசதி இருந்தது. பிடிவாத குணம் அதிகம் இருந்தது.

தன்னுடைய ஏழாவது வயதில் தனியாக ரயிலில் அத்தை வீட்டிற்கு டிக்கட் இல்லாமல் டிடிஆரின் மூக்கடியிலேயே பயணம் செய்து மாட்டிக் கொள்ளாமல் டபாய்த்து த்ரில் அடைந்திருக்கிறார். சாமர்த்தியத்தின் மறுபெயர் சிவசங்கர்.

பதினைந்தாவது வயதில் வகுப்பை கட் செய்துவிட்டு மாட்னி ஷோ சென்று திருட்டு தம் அடித்து மகிழ்ந்திருக்கிறார்.

இன்டர்மீடியட் படிக்கையில் ஊட்டி உல்லாச டூரின்

போது முதல் பெண் ஸ்பரிசத்தை அனுபவித்தது...

அப்புறம் இரண்டாமாண்டு பட்டப் படிப்பின் போது—

ரிசர்வ் வங்கிக்கும் பீச் இருப்புப் பாதைக்கும் இடையில் இருந்த குடிசை குடியிருப்புகளில் (தற்போது அவை அகற்றப் பட்டு லஸ்லைன்) தேர்ந்தெடுத்த ரகசியமான ஒன்றினுள் ஒரு மெழுகுவத்தியின் அருகே பக்கவாட்டமாகப் படுத்துக் கொண்டு, ஒரு நீண்ட மூங்கில் குழாயின் முடிவில் தொப்பி போட்டிருந்த மண் பாத்திரத்தின் பக்கவாட்டுத் துளையில் பழுப்பு நிறப் பசையை அடைத்துக் கொண்டு அனலில் காட்டிக் காட்டி ஆழமாக உறிஞ்சி மிதந்த கவிதை மிகு கணங்கள்... போதை மருந்து!

மற்றும் ஒரு முறை பஸ்ஸில் பயணித்த ஒரு போலீஸ் கான்ஸ்டபிளிடமே பிக்பாக்கட் அடித்து ரசித்தது; கண்ணாடி கைத்தடி சகிதம் குருடனாக ஊர் சுற்றித் திரிந்தது (அறிந்தது); ஒரு பிச்சைக்காரனின் சட்டியில் திடீர் என்று பத்து ரூபாய் கட்டு ஒன்றைப் போட்டு அவனைத் திகைக்க வைத்தது; இன்னும்...

எல்லா செயல்களுக்கும் ஆதாரமாக அவரிடம் ஒரு கொள்கை உண்டு. அது அவரின் இயல்பும் கூட. எதையும் ஒரு முறை அனுபவித்து விட வேண்டும்; அறிந்துக் கொண்டு விட வேண்டும் என்ற தவிப்பு உண்டு; தனக்கு பாத்தியதை உண்டு என்று நம்பினார்.

இத்தனைக்கும் அவர் கெட்டலைந்ததில்லை. தகப்பன் சேர்த்து வைத்த சொத்தைச் சூறையாடினதில்லை. மாறாக பல மடங்கு பெருக்கி வைத்துள்ளார். எதுவுமே ஒரு முறைதான். ஏனோ அதற்குப் பிறகு அதன் மீதுள்ள கவர்ச்சி போய்விடும்; ஆர்வும் குறைந்து விடும்; த்ரில் தணிந்து விடும்.

சிவசங்கருக்கு ஆங்கிலத்தில் அபார புலமை உண்டு. பி.ஏ. ஆங்கிலம் முடித்த கையோடு பிஸினஸ் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். ்வர் கீழ் ஆலமரமாகத் தழைத்து வளர்ந்தது. மிக நுண்ணிய அறிவு கடைத்த அவர் எதை எடுப்பினும், ‘அ’ முதல் ‘ஃ’ வரை தெரிந்து கொண்டு விடுவார். ஒரே நாளில் கரை கண்டபின் தன திறமைக்குச் சவால் இல்லையே என்று சலித்துக் கொள்வார். இதுவரை செய்யாதது கொலை ஒன்றுதான்.

பொறுப்புள்ள கணவனான, தந்தையான, கௌரவ மிக்கப் பிரஜையான சிவசங்கர் என்ற மாமனிதர் மாமேதை தற்போது அதி ரகசியமாக ஒரு கொலையைக் கச்சிதமாக செய்யப் போகிறார். அளவில்லா ஆனந்தம்—த்ரில் அடையப் போகிறார். போலீஸ் மூளைக்குச் சவால் விடப் போகிறார். சத்தியமாக அவர் மாட்டப்...

கதவு தட்டப்படவே, சிந்தனை தடைப்பட்டது. லிக்கர்

டம்ளரை டீப்பாயின் மீது வைத்து விட்டுப் போய் கதவைத் திறந்தார்.

நீரஜாவைக் கேட்பதற்காக உள்ளே நுழைந்தான் யுவராஜ்!

கைப்பையை வாயிற் காப்போனிடம் ஒப்படைத்து விட்டு டோக்கன் பெற்றுக் கொண்டு கவுண்டரை அனுகினாள் நீரஜா.

வட்ட வடிவ மரத்தாலான கவுண்டர். அதனுள் நான்கைந்து ஊழியர்கள் நின்று கொண்டிருந்தனர்.

ஊழியர் ஒருவர் இவளை அடையாளம் கண்டு கொண்டு, ''வாங்கம்மா.'' என்று சிரிப்புடன் வரவேற்றார்.

''என்ன, நான் சொன்ன புக் திரும்பிடுச்சா? இன்னிக்கு வரச் சொன்னீங்களே?'

''பி.ஜி. வுட்ஹவுஸ்தானே? உங்க அதிர்ஷ்டம் சித்த முன்னேதான் ரிட்டர்னாயி உள்ளாற பையன் அடுக்க எடுத்துட்டு போயிருக்கான்.''

''புக் பேரு The Small Bachelor.''

''அதேதான். அன்னிக்கு அவ்வளவு தூரம் சொல்லிட்டு போயிருக்கீங்க—மறப்பேனா?''

விசாலமான ஹாலினுள் பிரவேசிக்க —இருபுறமும் வரிசை வரிசையான மர ஸ்டான்டுகளில் புத்தகங்களின் அணிவகுப்பு. ஒருமுறை தும்மிவிட்டு ''எக்ஸ்யூஸ் மீ'' என்றாள். பிரத்யேக புத்தக மணம். ஒரு ட்யூப் லைட் எற்படுத்திய 'ரொய்ங்' சப்தம் தவிர்த்து, 'ஹஷ்' என்ற நிசப்தம் எங்கும். 'ஃபிக்ஷன்' என்று குறித்திருந்த பகுதியில் நுழைகையில்—

''அப்பாடி. கிடைச்சிருச்சே!'' என்று முணுமுணுப்புடன் திரும்பினான் அவன். திரும்பியவன் கையில் 'வுட்ஹவுஸ்'. அவள் மிக விரும்பிய, கேட்ட புத்தகம். பக்கென்றாகி விட்டது நீரஜாவிற்கு.

'''அடடா. சார் எடுத்திட்டிங்களே! இந்தம்மால்ல கேட்டிருந்தாங்க. பாவம் சார் இவங்க. ரொம்ப நாளா காத்திருந்தாங்க. அதனால...' ஊழியர் கைகளைப் பிசைந்து கொண்டார்.

''சாரி. அதெப்படிக் கொடுக்க முடியும்? நானும் தான் அடிக்கடி வந்து இந்த ராக்கைப் பார்த்துட்டுப் போறது. வசமாப்

பார்த்து இன்னிக்கு மாட்டிருச்சு,'' கைகளை உயர்த்தி மேலே அண்ணாந்து பார்த்து மிகையான அபிநயத்துடன், ''நன்றி என் தேவனே!'' என்று சிரித்தான். ''சாரி மேடம். நான் கொடுக்கறதா இல்லை.''

அப்போது ஒரு பையன் லைப்ரரியன் அழைப்பதாக வந்து சொல்ல, 'இப்ப வந்துடறேன்' என்று நிம்மதியாக கழன்று கொண்டார் ஊழியர்.

ஏமாற்றமாக இருந்தது நீரஜாவிற்கு. ஆத்திரமாகவும் வந்தது. சிவந்த முகம் மேலும் சிவந்தது.

''மிஸ்டர் நான் முன்னாடியே சொல்லி வச்சிருந்த புக்கை நீங்க எப்படி எடுக்கலாம்? நீங்க செய்யறது சரி இல்லை.''

''என்ன சரி இல்லை? இது பொது நூலகம். எங்கிட்ட கார்டு இருக்குது. ஒரு புக்கை ரேக்குல பார்க்கறேன். எடுக்கறேன். இது தப்பா?''

உதட்டைக் கடித்துக் கொண்டாள். குரலில் சுருதி சட்டென்று இறங்க, ''சார் இது ரேர் புக். ஸ்டால்ல கூடக் கிடைக்கறதில்ல. வெரி ஓல்டு. பி.ஜி. வுட்ஹவுஸ்னா உயிர்...''

''எனக்கும்தான் உயிர். புக் பேரையே பாருங்க. தி ஸ்மால் பேச்சிலர்! நான் எடுக்கறதுதான் பொருத்தம். ஏன்னா...'' வசீகரமாகச் சிரித்தான். ''நான் ஒரு பேச்சிலர்!''

அவளும் புன்னகைத்தாள். ''ஒண்ணு செய்யலாமே? புக்கை எங்கிட்ட கொடுங்க. உங்க அட்ரஸ் சொல்லுங்க. நானே நேர்ல கொண்டு வந்து கொடுத்துடறேன் என்ன? ப்ளீஸ்...'' கண்கள் கெஞ்சியது.

''ஓகே. நீங்க இவ்வளவு தூரம் கேட்கறப்ப மனசு கேட்கலை. நீங்க சொன்ன ஏற்பாட்டுக்கு ஒத்துக்கறேன். இந்தாங்க புக்.''

''தேங்க்யூ. தேங்ஸ்.'' மனதார நன்றியைத் திருப்பித் திருப்பிச் சொன்னாள்.

முன்பு செய்தது போல் மறுபடியும் மேலே அண்ணாந்து அபிநயித்து, ''நன்றி என் தேவனே!'' என்று சிரித்தான்.

''இப்ப எதுக்காம்?'' அவன் செய்ததை ரசித்தவாறு கேட்டாள்.

''ஒரு அழகான அப்சரஸைச் சந்திக்க வைத்து உதவி செய்ய வெச்சதுக்கு!'' அவன் கண்களில் குறும்பு மின்னியது.

அனேகம் பேர்கள் அவளை அழகி என்று கமெண்ட் அடித்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் வெட்கம் வந்த தில்லை. மாறாக 'சில்லி' என்று சலித்திருக்கிறாள். ஆனால் இப்போது இவன் இதைச் சொல்கையில் உள்ளுக்குள் கிளர்ந்து ஏனோ நாணம் வந்து விட்டது.

''ஒரு நிமிஷம் இருங்க. வேற புக் செலக்ட் பண்ணிகிட்டு வந்துடறேன்.''

குனிந்து நிமிர்ந்து அலமாரியில் புத்தகம் தேடும் அவனை டியூப் வெளிச்சத்தில் பார்த்தாள். சிலரை முதல் பார்வையில் பிடிக்கும்; உள்ளுக்குள் ஏதோ செய்யும்; சலிக்காமல் பார்க்கச் சொல்லும் என்பதெல்லாம் உடான்ஸ் என்று எண்ணி இருந்தாள்—இவனைப் பார்க்கும் வரை.

அவனுடைய கவர்ச்சியான முகவெட்டும், குறும்பு மிகுந்த கண்களையும் பார்க்க உள்ளுக்குள் ஏதோ ஓர் இரசாயன மாற்றம் நிகழ்ந்து பரவசமாவதை உணர முடிகிறதே...!

புத்தகத்தை எடுத்துக் கொண்டு அவளை நோக்கி வந்தான். அப்பா, என்ன ஒரு கம்பீரம்...

''இப்ப சூழ்நிலைக்குப் பொருத்தமா ஒரு புக் எடுத்திட்டேன். பேர் என்ன தெரியுமா? 'லவ் அட் ஃபர்ஸ்ட் சைட்!'' சொல்லிவிட்டு அர்த்தத்துடன் அவள் கண்களைப் பார்த்தான்.

பார்வையின் தீவிரம் தாங்காமல் தலையைக் குனிந்து கொண்டாள். சே. என்ன ஒரு விவஸ்தை இல்லாத மனிதர்... கண்களுக்குள் ஈ.பீ. சப் ஸ்டேஷன் வைத்திருப்பாரோ...

லைப்ரரிக்கு மானசீகமாக (ஏக காலத்தில்) நன்றி உதிர்த்து விட்டு இருவரும் வெளியே வந்தார்கள். மியூசியம் பார்க்க ஏதோ மொட்டை—மேளா போல் ஏராள மொட்டைகள் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர்.

பாந்தியன் ரோடைக் கடந்து எதிரில் இருந்த கடையில் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டு, ஐஸ்க்ரீம் தருவித்து...

வருகிற வெள்ளிக் கிழமைக்குள் உலகம் முடிந்துவிடும் என்கிற அவசரத்தில் இருப்பவர்கள் போல் இருவரும் ஒருவரையொருவர் சளைக்காமல் கண்களால் விழுங்கிக் கொண்டார்கள்.

''ஐயாம் சுரேஷ்.'' என்றான் மௌனத்தைக் கலைத்து.

''நான் நீரஜா. பைனல் இயர் பி.காம்.''

''எந்தக் கல்லூரி?''

சொன்னாள்.

சுரேஷ் அமர்த்தலாக, ''நான் ஒரு அறுவையாளன்!'' என்றான்.

''பத்திரிகையா?''

''நோ நீரஜா. டாக்டர்!'' இரண்டு விரல்களில் கத்திரி அமைத்து 'சக்சக்' என்று ஓசை எழுப்பிக் காற்றை வெட்டிவிட்டு, ''ப்ளடி சர்ஜன்!'' என்றான்.

அப்புறம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுரேஷின் பெற்றோர்கள் டெல்லியில் இருக்க, இங்கே இவன் தனியனாக ஒரு ஃபிளாட்டில் வசிக்கிறானாம். அவன் தந்தை டெல்லி செக்ரட்டேரியட்டில் செக்ஷன் சூப்பிரண்டாக ஃபைல்களுக்கு மத்தியில் வசிக்கிறாராம்! பரஸ்பரம் முகவரி, தொலைபேசி எண் பரிமாறிக் கொண்டார்கள்.

மூன்று நாட்கள் அவகாசத்தில் படித்துவிட்டு நீரஜா வுட்ஹவுசை அவனிடம் திருப்பித் தர நான்காம் நாள் சந்திக்கலாம் என்று முடிவு செய்து கொண்டு (பிரியா) விடை பெற்றுக் கொண்டார்கள்.

பஸ்ஸுக்கு காத்திருந்தாள்–சுரேஷ் பளிரென்று சிரிக்கிறான். பஸ்ஸில் இடம் பிடித்தாள் சுரேஷ் சிரித்து 'ஏன்னா நான் ஒரு பேச்சிலர்'. டிக்கட் வாங்கினாள்–சுரேஷ் 'நன்றி என் தேவனே' என்று அபிநயிக்கிறான்.

நீரஜாவின் செயல்கள் யாவும் அனிச்சையாக நிகழ்ந்து கொண்டிருக்க, மனம் 'சுரேஷ்–சுரேஷ்' என்று ஜபம் செய்தது.

இன்னும் சிறிது நேரம் அவனுடன் இருக்க மாட்டோமா என்று ஏங்கினாள். 'இவன்தான்... இவன்தான்' என்று உள்ளம் உறுதி செய்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சொர்க்க லோகத்து விதிதான் இருவரையும் இன்று சேர்த்து வைத்தது என்று நம்பத் தொடங்கினாள். ஓ... இதுதான் காதல் என்பதோ...

அன்று இரவு அவள் படுக்கையில் படுத்துக் கொண்டு புத்தகத்தைப் பிரித்தாள். தி ஸ்மால் பேச்சிலர்! சுரேஷ்! ஒரு வரி கூட மனதில் பதியவில்லை. தன் வசம் இல்லை அவள்.

சட்டென்று முடிவுக்கு வந்து எழுந்து போனில் எண்களைச் சுழற்றிவிட்டு அவளுடைய தேவன்–சுரேஷ் குரலுக்காகக் காத்திருந்தாள்.

நீரஜா சுவரைப் பார்த்து, ''சாரி யுவராஜ்!'' என்றாள்!

''**வா**ய்யா யங்கிங்!'' என்று அட்டகாசமாகச் சிரித்து வரவேற்றார் சிவசங்கர்.

''என்ன சார் சொல்றிங்க?''.

''உன் பெயரை இங்கிலீஷ்ல மொழி பெயர்த்தேன் யுவராஜ்.'' மறுபடியும் 'ஹக்' என்று சிரித்தார்.

யுவராஜின் கூரிய கண்கள், மூளை அவரை எடை போட முயன்றன.

அவனுக்கு அவரைப் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருந்தது. அவனுக்குத் தெரிந்த வரையில் சதா சுரத்தில்லாமல் பறி கொடுத்தவர் போல் போர் அடித்திருக்கும் சிவசங்கருக்கு இன்று என்ன ஆயிற்று... இது போல் உற்சாக மத்தாப்பாய், தேன் குடித்த நரி போஸில் என்றுமே பார்த்ததில்லையே அவன்... காரணம் என்னவாக இருக்கும்? காரணம் எதுவாய் இருப்பினும், புதிதாக தொடங்கிய மற்றொரு பாக்டரியாக இருக்காது. ஏனெனில் அது அவருக்குச் சாதாரண விஷயம். சரி காரணம் என்னவாய் இருந்தால் என்ன? சிவசங்கரின் உற்சாகம் என்பது அரிதிலும் அரிது. அவர் மகளைக் கேட்கத் தகுந்த தருணம் இது.

''என்னப்பா கையெழுத்து போட எல்லாம் கொண்டு வந்தியா?''

ஃபிளாக் வைத்த பைல்கள், செக் புத்தகங்கள், கடிதங்களை டீப்பாயின் மீது பிரித்து வைத்தான். சிரித்துக் கொண்டே கையெழுத்திட தொடங்கினார்.

கையெழுத்தைக் கிறுக்கிவிட்டுப் புன்முறுவலுடன் நிமிர்ந்தார்.

''சார் உங்ககிட்டே ஒரு விஷயம் கேட்கணும். வந்து... கொஞ்சம் பர்சனலா...''

''என்னய்யா தயக்கம்? டக்குனு கேட்க வேண்டியது தானே? என்ன உன் சம்பளத்தைக் கூட்டணுமா? லீவ் வேணுமா? வேறு என்ன வேணும்? தயங்காதப்பா யுவராஜ்.''

''சார்... நீரஜா... நீரஜாவைக் கல்யாணம் பண்ண விருப்பமா இருக்கு. சார் என்... ஆசை... ஆசையை நிறை வேத்தணும்...''

அவர் முகத்தில் சிரிப்பு பாதியில் உறைந்து விட்டது. சட்டென்று அறையின் ஏசி சில்லிப்பு கூடினாற் போலிருந்தது. இருந்தும், அவனுக்கு லேசாக வியர்த்தது.

''சபாஷ் பையா. உன் வயித்துப்பாட்டைக் கவனிக்கிற மொதலாளி கிட்டயே பொண் கேட்கத் துணிஞ்சுட்டே?''

ஆரம்பத் தயக்கம் அவனுக்கு விலக, ''சார் சின்ன வயசுலேர்ந்தே ரொம்ப விருப்பப்பட்டுட்டேன்...''

''எது மேலே? என் சொத்து மேலேயா?''

சரியாகச் சொல்லிவிட்டார். யுவராஜுக்கு விருப்பம் இரண்டின் மேலும்தான். அவனுக்கு நீரஜாவும் வேண்டும், அவள் திரண்ட சொத்தும் வேண்டும். அதை வெளிப்படையாகச் சொல்ல முடியுமா, என்ன? வாய் வார்த்தை தானே, எனவே...

''சார் நீங்க என்னைத் தப்பா புரிஞ்சுகிட்டிங்க. நான் ஆசைப்பட்டது நீரஜாவைத்தான். உங்க சொத்தை இல்லை. நீங்க 'உம்முனு' சம்மதம் கொடுங்க. கட்டின புடவையோடு...''

''கட் இட் யுவராஜ். உன்னை புத்திசாலின்னு நினைச்சேன். ஒரு மூன்றாந்தர சினிமா கதாநாயகன் மாதிரி பேசிக்கிட்டு.. கட்டின புடவையோட நான் அனுப்பிடுவேனா? ஏண்டா இவ்வளவு சொத்து சேர்த்துட்டு, அழகா ஒரு பெண்ணைப் பெத்துட்டு உன் பின்னாடி அனுப்பி அது லோல்பட எனக்கு என்ன பைத்தியமா?''

யுவராஜ் மௌனமானான்.

''உனக்கு என்ன இரண்டாயிரத்து சொச்சம் சம்பளம் தர்றேனா? எம் பொண்ணுக்கு முழுசா மூணு நாள் சாப்பாடு போடுவியா? அவ போட்டுக்கற பவுடர் ஸ்னோவுக்கு காணாது உன் சம்பளம்...''

''இதே என் கிட்ட சில லட்சங்கள் இருந்தா இப்படி பேசி இருப்பீங்களா?''

''ஆங்! இப்ப புத்திசாலித்தனமா பேசறே. எப்பவும் பணம் பணத்தோட சேரணுங்கற கொள்கை உடையவன் நான். ராணிடா அவ. ஒரு ராஜனுக்குத்தான் முடிச்சு வைப்பேன்.''

''கேவலம் சில லட்சங்களுக்காக புனிதமான...''

''திரியும் ஆரம்பிச்சுட்டியா உன் மூன்றாந்தர வசனத்தை. இதப் பாரப்பா நிலைமையைச் சொல்லிட்டேனே. புரிஞ்சுக்க. என் நிலைமைல நீ இருந்தாலும் இதேதான் செய்திருப்பே. என்ன பண்றது? உன் கிட்ட புத்திசாலித்தனம் மட்டும் இருக்கு. பணம் இல்லை. பேட் லக். சாரி யுவராஜ். அதனால நாலு சுவத்துக்குள்ள நடந்த இந்த விஷயத்தை இத்தோட மறந்துட்டு, உன் திறமையை மதிக்கிற முதலாளிக்கு எப்பவும் போல உதவியாளனா இருந்துடு. காலா காலத்தில உனக்கு நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன்.'' இரண்டு முந்திரி பருப்பை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். ''மறக்காம ஒரு நல்ல தொகையா மொய் எழுதிடறேன்! என்ன சொல்றேப்பா?'' சிரித்தார்.

யுவராஜின் தாடை இறுக, சன்னமான குரலில், ''நாளைக்குக் காலையில பத்து மணிக்கு புது விளம்பர டிசைன் சம்மந்தமா ரெட்டிஃப்யூஷன் எம்.டி.யோட மீட்டிங்.. அப்புறம்...''

சிவசங்கர் இருக்கையை விட்டு எழுந்து வந்து அவனைத் தோளில் தட்டிக் கொடுத்து, ''சபாஷ் மை டியர். குறிப்பால உணர்த்தறே.. இந்த உன் புத்திசாலித்தனம்தான் எனக்கு எப்பவும் பிடிச்சிருக்கு. சரி. கிளம்பு. போய் ரெஸ்ட் எடு.''

பைல்களைத் திரட்டி எடுத்துக் கொண்டு கவிழ்ந்த தலையுடன் மிக அமைதியாக வெளியேறினான் யுவராஜ்

யுவராஜ் விவகாரத்தை அத்தோடு மறந்துவிட்டு அறையை விட்டு வெளியே வந்தார்.

மனைவி பார்வதி பரிமாற, சுருக்கமாகச் சாப்பிட்டார். இரவு 9.55.

நீரஜாவின் அறைக்குள் சென்றார். இரண்டு கைகளையும் முழங்கால்களுக்கு இடையில் வைத்துக் கொண்டு உறங்கும் நீரஜாவைப் பெருமிதமாகப் பார்த்தார். ஃபையர் டேல் சின்ட்ரெல்லா! அருகே சென்று நெற்றியில் மென்மையாக முத்தமிட்டார். முத்தமிட்டதில் நெற்றிப் பகுதி கன்றிச் சிவந்து விட்டதோ என்று ஐயத்துடன், அச்சமுடன் ஆராய்ந்தார்!

கதவைச் சாத்திவிட்டு வெளியே வரும் போது 'கேனப் பயல் இந்த யுவராஜ்' என்று மனதுக்குள் நகைத்துக் கொண்டார்.

தன்னுடைய பெட்ரூமில்... படுத்துக் கொள்ள ஆயத்தமாயிருந்த பார்வதியைப் பின்னாலிருந்து குபீரென்று கட்டிப் பிடித்தார்.

''தூ! இதென்ன அசிங்கம், இந்த வயசுல...'' என்று வெளியே முனகினாலும் பார்வதிக்கு உள்ளுக்குள் மிகவும் சந்தோஷமாக இருந்தது. நம்ப முடியவில்லை – நீண்ட காலத்திற்குப் பிறகு அது நிகழ்வதால்... என்றுமில்லாத திருநாளாய் இந்த மனிதருக்கு ஏன் இவ்வளவு உற்சாகம் என்று புரியாமல் வியந்து...

சிறிது நேரத்தில் களைத்துப் போய் உறங்கி விட்டாள்.

சிவசங்கருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. மிகுந்த உற்சாகத்துடன் கொலைத் திட்டத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் அந்தக் கேள்வி எழுந்தது.

திடுக்கென்று எழுந்து உட்கார்ந்துக் கொண்டார். தான் யாரைக் கொலை செய்ய வேண்டும்? கொலையாகப் போகிறவன் யார்?

யார் அவன்?

'எப்படா மீட்டிங் முடியும்' என்று காத்திருந்தார் போல் எழுந்தார். அவசரமாக அந்த உயரமான விளம்பர நிறுவன அதிகாரியிடம் கை குலுக்கி விட்டுக் கிளம்பினார்.

வழியில் யுவராஜ் எதிர்ப் பட்டான். அவனுடைய

முகபாவத்திலிருந்து அவன் சகஜமாகி விட்டான் என்பதை உணர்ந்து கொண்டார்.

''டீலை முடிச்சுட்டீங்க! கங்கராட்ஸ் சார்.''

''தேங்ஸ். மிச்ச டீடெய்ல்ஸ் நீ பார்த்துக்க. அக்ரிமெண்ட் டிராப்ட் பண்ணி மத்தியானமே கொடுத்துறச் சொல்லு. வரட்டுமா யுவராஜ்?''

வந்திருப்பவரை வழி அனுப்பக் கூட இல்லாமல் அப்படியென்ன தலை போகிற அவசரம்? இந்தப் பணக்காரனுக்கு. நேற்றிலிருந்து என்னவோ ஆகிவிட்டது. தோள்களைக் குலுக்கி விட்டுக் கொண்டு அந்த அதிகாரியைச் சந்திக்கச் சென்றான் யுவராஜ்.

கொலையாகும் நபர் தனக்கு எந்த விதத்திலும் சம்பந்தம் உடையவராக இருக்கக் கூடாது என்று எண்ணினார். ஒரு சிறு நுனி தொடர்பு கிடைத்தாலும் போதும். இந்தப் பாழும் போலீஸ் போய்ப் பிடித்துக் கொண்டு வந்து விடுவார்கள். இவர்களாக ஒரு 'மோடிவ்' கற்பித்துக் கொண்டு கையில் விலங்கை மாட்டி விடுவார்கள்.

சம்பந்தமில்லாதவன் கொலையாகிறான். அதுவும் 'மோடிவ்' ஏதும் இன்றி பலியாகிறான். 'க்ளுக்' என்று சிரித்துக் கொண்டார். ஒரு 'செல்வந்தனின் கொலையும் ஒரு முறை' என்ற திமிரான சவால் கொள்கைதான் காரணம் என்பதை கனவிலும் அறியாமல் விழிப்பார்கள்.

உடனே தன் தனியறையின் விளக்கைப் போட்டு விட்டு முந்தைய தினச் செய்தித் தாள்களை ஆராய்ந்தார். இவன் நல்லவன், அவர் வல்லவர் என்று கொஞ்சம் ஒதுக்கினார். இவன் திகிடுதத்தன் ஆயினும் பதவியில் இருக்கிறான் செக்யூரிட்டி அதிகம் – அணுகுவது ஆபத்து – தனி மனிதனான தன்னால் முடியாது - என்று வேறு சிலரை ஒதுக்கினார். கடைசியில் முதல் நாள் செய்திப் பத்திரிகையின் இரண்டாம் பக்கம் பார்க்கையில்...

'கண்டேன் அயோக்கியனை!' என்று துள்ளிக் குதித்தார். வீரராசு!

மாஜி எம்.எல்.ஏ. வீரராசுவைப் பற்றி சிவசங்கருக்கும் ஓரளவு தெரியும். ராஜா என்று அன்னை ஆசையாய் வைத்த இயற் பெயர் ராஜ் என்று காலப் போக்கில் மருவி, தீவிரத் தமிழ்ப்பற்றின் சாரணமாக 'ராசு' என்று ஆக்கி, அரசியல் மேடையில் மைக்கைத் தூக்கிப் போட்டு 'வீரமாக' சண்டை போட்டதால், அவராகவே 'வீர' என்று அடைமொழியையும் சேர்த்துக் கொண்டு... வீரராசு!

மறுபடியும் கட்சித் தலைமையிடம் வரும் தேர்தலில் நிற்க 'டிக்கட்' கேட்கப் போகிறாராம். மக்களுக்கு மீண்டும் 'தொண்டு' ஆற்றப் போகிறாராம். பிறகு எதிர்க் கட்சிக்கு, ''இந்த வீரராசு இன்னும் வீர்யராசுதான்'' என்று அனாவசிய சிட்டுக் குருவி லேகிய சவாலும் விட்டிருந்தார்.

ஆக வீரராசு மீண்டும் பப்ளிசிட்டிக்கு வருகிறார். நல்லது. பின்னால் இவர் கொலையுண்டால் பரபரப்புக்கு உதவும். ஆளுங் கட்சி ஆள் என்பதால் போலீஸும் முடுக்கி விடப்படும். இன்னொரு விஷயம் ஞாபகம் வரவே, சிவசங்கருக்கு சுருதி கூடியது.

டெலிபோன் டைரக்டரியைப் புரட்டினார். வீரராசுவின் வீடு இன்னமும் க்ரீன்வேஸ் ரோட்டில்தான் என்பதைச் சந்தோஷமாக உறுதி செய்து கொண்டார். அந்த ரோடிற்கு இரண்டு தெரு தள்ளித்தானே க்ரைம் பிராஞ்சின் டி.சி.பி. தர்மராஜனும் வசிக்கிறார்.. ஆஹா, அவர் மூக்கடியிலேயே கொலையை நிகழ்த்தலாம். அன்று என்ன சொன்னீர் தர்மராஜன்? 'ஒவ்வொரு கொலையும் ஒரு சவால் மாதிரி...' இந்தச் சவாலை சந்தியும்... அவருடைய ஏரியா என்பதால், ஆவேசப்பட்டுத் துரிதமாக, தீவிரமாகத் தேடுவார்கள். நன்றாக விழிப்பார்கள். நான்தான் தடயம் ஒன்றும் விடப் போவதில்லையே.

ரோடைக் கவனிக்காமல் கடக்கும் பள்ளிச் சிறுவனை எதிரில் கண்டு, முந்தைய இரவின் நினைவுகளிலிருந்து சட்டென்று விடுபட்டு நிகழ் காலத்துக்கு வந்து சடன் பிரேக் போட்டார்.

பின்னர் சந்தின் முனையிலேயே காரை நிறுத்தினார். எதற்கும் இருக்கட்டும் என்று தலையைக் கலைத்துவிட்டு, ஒரு சீப்பை எடுத்து நடுவகிடு எடுத்துக் கொண்டார். காலரை மேலே தூக்கித் தாடையின் இருபுறமும் பரவவிட்டார். அகன்ற கூலிங்கிளாஸ் அணிந்து கொண்டார். சற்றே பெண்மை மிளிர வலக் கையைக் கொக்கின் கழுத்து மாதிரி முணுக்கென்றால் தூக்கிக் கொண்டார். இதெல்லாம் தேவை இல்லைதான். இருந்தும் தன்னை எந்த விதத்திலும் 'டிரேஸ்' செய்யக் கூடாது என்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கை. கடையை நோக்கி நடந்தார்.

சிறிய கடை அது.

''என்ன சார் வேணும்?''

''நமக்குக் கோயமுத்தூர் பக்கமுங்க. கோனவாயப் பட்டிங்க...'' என்று பேச்சை இனிய கொங்கு தமிழில் மாற்றிக் கொண்டார். தான் ஒரு சமூக நாடகம் போடப் போவதாகவும்,

அதற்குச் சில பல விக்குகள் தேவையென்றும் விளக்கினார்.

''அதுக்கென்னங்க. தாராளமா எடுத்துக்கங்க. எவ்வளவு வேணும்? என்ன டைப்புல வேணுங்க?''

சிவசங்கரின் மூளை வேகமாக ஒரு கணக்குப் போட்டது. கொலையை எப்படியும் தன் சுய ரூபத்தில்தான் செய்யப் போகிறார். அதற்கு முன் வீரராசு வீட்டிற்கு சில 'சார்ட்டீஸ்' அடிக்க வேண்டியிருக்கும். ஒரு மூன்று முறை சென்று அவனையும் அவனைச் சார்ந்த சூழ்நிலையையும் 'கணக்கு' பண்ண வேண்டியிருக்கும்.

வீரராசுவோ, தெருவில் எதிர்ப்படும் வேறு யாரோ சிவசங்கரை அடையாளம் காணும் ஆபத்து இருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வேஷத்தில் சென்றால்தான் சௌகர்யம்.

மூன்று வித சைஸ்களில், நிறங்களில் (கறுப்பு, வெளுத்த நரை, செம்பட்டை) விக்குகள், மூன்று வித மீசை, தாடிகள் வாங்கிக் கொண்டு புறப்பட்டார்.

அவருடைய ரத்தத்தில் சூடேறியது. இன்றிரவு முதல் 'சார்டி?

வீ ர ரா சு வை ச் ச ந் தி த் து எ ம னு ட ன் 'அப்பாயிண்ட்மெண்ட்' என்பதைக் குறிக்க வேண்டும்!

மூன்று நாள் அவகாசம் என்று சொல்லிவிட்டு பொறுக்க முடியாமல் இருவரும் அடுத்த நாளே சந்தித்துக் கொண்டார்கள்.

''சுரேஷ் உங்க ஃப்ளாட் அருமையா வெச்சிருக்கீங்க. பேச்சிலர் ப்ளாட்டாச்சே, எப்படி இருக்குமோன்னு பயந்து கிட்டே வந்தேன். பரவாயில்லை. நீட்டாவே இருக்கு.''

''தாங்க்ஸ் நீரஜா. உனக்குப் பிடிக்கணுமேன்னு கவலைப் பட்டுகிட்டிருந்தேன். ஏன்னா நீதானே இங்க வளைய வரப் போறே...'' அர்த்தமுடன் பார்த்தான்.

''ஷ்... அப்படி எல்லாம் அதுக்குள்ள பேசப்படாது.''

''ஏன் பேசினா என்ன?''

''நான் ஓடிருவேன். எனக்கு வெட்கமாயிடும்.''

''ஐ. இதென்ன புதுக் கதை? அப்ப நேத்து நைட்டு போன் பேச மட்டும் துணிச்சல் வந்ததாக்கும்! கடைசியில என்ன சொன்னே? என்ன ஸ்பீடா சொன்னே? மறுபடி சொல்லு. நேர்ல காது குளிர கேட்கணும்.''

''சே. நான் இங்கே வந்திருக்கவே கூடாது.''

''ப்ளீஸ். நேத்து சொன்னதைத் திருப்பிச் சொல்லு.''

''ம்ஹூம். என்னால முடியாது. ப்ளீஸ் அன்டர்ஸ்டாண்டு சுரேஷ். சந்திச்ச ரெண்டாவது நாளே இப்படி எல்லாம் தொல்லை பண்ணக் கூடாது.''

''சாரி நீரஜா!'' என்றான் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு.

அவனுடைய வருத்தத்தைப் பார்த்து மனமிரங்கினாள். நேற்று உணர்ச்சி வேகத்தில் சொன்னாலும் உண்மைதானே அது. ''ஒகே. சுரேஷ். போனாப் போறது. கண்ணை மூடிக்குங்க. சொல்றேன்.''

சிரத்தையாகக் கண்களை மூடி 'ம்' என்றான்.

''ஐ... ஐ லவ் யூ... ஐ...''

''ம். அப்புறம் என்ன சொன்னே? சொல்லு.''

கன்னங்களில் செம்மை குப்பென்று ஏற, ''ஐ கனாட் லிவ் வித்தவுட் யூ...!''

''தாங்க் யூ டியர். இதுக்குப் போய் இவ்வளவு தயங்கறே. இப்ப ஐயாவைப் பாரு. எப்படி சொல்லப் போறேன்.''

நாடக பாணியில் தன் இரு கைகளையும் அவளை நோக்கி அகல விரித்துக் கொண்டு, ''ஐ லவ் யூ நீரஜா. நான் உன்னைக் காதலிக்கிறேன். நேனு நின்னை பிரேமிஸ்தானு. மே தும்ஸே ப்யார் கர்த்தா ஹூங். உனக்கு சைனீஸ் மொழி தெரியுமா நீரஜா?''

தெரியாது என்று தலையாட்டினாள்.

''நல்லதாப் போச்சு. காதலிக்கிறேங்கறதை சைனீஸ்ல சொல்றேன் பாரு!'' என்று விட்டு மூக்கடைத்த குரலில் 'சைங், ஹைங்' என்று ஒலிக்குமாறு ஏதோ ரீல் விட்டான்.

சுரேஷ் அடிக்கும் லூட்டியில் தயக்கம் விலகிச் சிரித்தாள்.

''உன்னை எல்லா மொழியிலயும், எல்லா இடத்துலயும், எல்லா பிறப்பிலேயும் காதலிக்கிறேன் நீரு. நம்மள்து இலக்கணக் காதல். வினைத் தொகை மாதிரி...''

''அப்படின்னா?''

''முக் காலத்துக்கும் சொல்லும்!'' திடீரென்று முகத்தைக் குரங்கு மாதிரி ஆக்கிக் கொண்டு ''கர் புர்'' என்று உறுமினான்.

''இதென்னது? சகிக்கலை''

''ஐ லவ் யூங்கறதை ஆதிகால நியாண்டர்தால் மனுஷன் பாஷையில சொல்றேன்'' மறுபடியும் 'கர்புர்' என விழுந்து விழுந்து சிரித்தான். அவனை ரசித்துக் கட்டுபடியாகவில்லை. இனி அவன் என்றும் தனக்காகவே என்பதில் பெருமிதம் பொங்கியது.

மாலை 6.30. சிவசங்கர் தன் நடைத்தைத் துவக்கி விட்டார். ஸ்போர்ட்ஸ் வேரில் இருந்தார்.

''எங்கே கிளம்பிட்டீங்க?'' என்றபடி வந்தாள் பார்வதி.

மூன்று முறை இருமிக் காண்பித்தார். நெஞ்சைத் தடவிக் கொண்டார்.

லேசாக மூச்சு வாங்க, ''இனிமே தினமும் ஈவினிங்ல கொஞ்சம் 'வாக்' போலாம்னு இருக்கேன்.''

கண்கள் லேசாகப் பளபளக்க அருகே வந்து, ''உடம்புக்கு ஒண்ணும் இல்லியே?''

கவலையோடு கேட்டவளின் கன்னத்தைத் தட்டி, ''என் உடம்புக்கு என்ன - நல்லா காயகல்பம் சாப்பிட்ட மாதிரி இருக்கேன். உனக்கு முடியாதேன்னு பார்க்கறேன்...''

''என்னங்க முடியாது?''

''நான் தயார் தான் - இன்னும் ரெண்டு வருஷம்படி நீரஜாவுக்குக் கார்பொனியா பெத்துரலாமான்னு பார்க்கறேன். நேத்து ராத்திரி எப்படி?'' கண்ணடித்தார்.

''சே! வெட்கங் கெட்ட மனுசர். முதல்ல இடத்தைக் காலி பண்ணி வாக் போங்க. கொழுப்பாவது கொஞ்சம் குறையும். சரி. எந்தப் பக்கம் போறீங்க?''

''காரை எடுத்துக்கிட்டு பெசண்ட் நகர், அடையாறு பக்கம் போயிட்டு நடக்கலாம்னு இருக்கேன். நல்ல காத்தைப் பார்த்து நாளாச்சு!''

தன் மனைவியை அன்பு பொங்க ஒரு வினாடி பார்த்துவிட்டு, ''வரேண்டி கிழவி!'' என்று கிளம்பினார்.

சிரித்துக் கொண்டே வெளியே வந்து காரைக்

கிளப்பினார்.

அந்தச் சிறிய பங்களாவை அடையும் போது இருட்டத் தொடங்கிவிட்டது.

இறங்கி ஓடிப் போய்க் கேட்டைத் திறநதார். இரும்பு கேட் நீண்ட நாட்களாக உபயோகத்தில் இல்லாததால் 'க்றீக்' என்று முனகி ஆட்சேபித்தது.

காரைக் கொண்டு வந்து சிறிய போர்ட்டிகோவில் நிறுத்தினார். வாசற் கதவை சாவி போட்டுத் திறந்து உள்ளே வந்தார்.

விளக்கைப் போட்டார். இந்தச் சிறிய பங்களாவும் சிவசங்கருடையது தான். போன வருடம் அந்த முறுக்கு மீசை மிலிட்டரிகாரர் காலி செய்ததிலிருந்து வாடகைக்கு விட வேளை வரவில்லை. ஆடி, ஆவணி என்று தள்ளிக் கொண்டே போயிற்று.

அதுவும் ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று. இந்தக் கொலையைக் கச்சிதமாக நடத்தி முடிக்கும் வரை இந்தப் பங்களாவை ரகசிய உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம். மதியமே அந்த மேக்கப் சாதன சூட்கேஸைக் கொண்டு வந்து வைத்து விட்டார்.

வாசற் கதவைத் தாழிட்டு விட்டு பெட்ரூம் டிரஸ்ஸிங் டேபிள் நிலைக் கண்ணாடி முன் உட்கார்ந்து கொண்டார். பிரதிபலித்த தன் உருவத்தை உற்றுப் பார்த்தார். மீசை இல்லாததும் சௌகர்யம் தான், நீ இன்னும் சிறிது நேரத்தில் மாறப் போகிறாய் சிவசங்கரா என்று சொல்லிக் கொண்டார்.

சூட்கேஸைத் திறந்தார். அதில் மூன்று வித தாடி, மீசை, விக்குகள் இருந்தன.

கம்பீர பாரதி முறுக்கு மீசை, தாடி, எம்.கே.டி. பாகவதர் டைப் விக் எடுத்துக் கொண்டார்.

முதலில் மீசை, பிறகு தாடி, கடைசியில் விக்.. ஒவ்வொன்றாகப் பொருத்திக் கொண்டார். புருவ மத்தியில் சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டார். ஸ்போர்ட்ஸ் வேரைக் களைந்து விட்டுத் தூய வெண்மை ஜொலிக்கும் வேட்டி, சட்டைக்கு மாறிக் கொண்டார்.

தற்போது கண்ணாடி காட்டிய உருவத்தைப் பார்த்து திடுக்கிட்டார். அவருக்கே அவருடைய ஒரிஜினல் உருவம் மறந்து விடும் போல் இருந்தது. கொஞ்சம் அசந்தால் வாயிலிருந்து கவிந்த உதிர்ந்து விடும் அபாயம் தெரிந்தது!

நீல நிறத்தில் ஒரு ஹாண்ட் பேகை எடுத்துக் கொண்டார். ஜிப்பைத் திறந்து வாங்கி வைத்திருந்த மெழுகு சமாச்சாரத்தை, டூத்பேஸ்ட் ட்யூபை உள்ளே வைத்துக் கொண்டார். எவர் சில்வர் வெற்றிலைச் செல்லம் எடுத்துக்

கொண்டு கிளம்பினார்.

தன் பியட்டை ஆந்திர மகிள சபா தாண்டி, சந்தேகம் தராத, சந்தடி இல்லாத, ஒரு மர நிழலில் இளைப்பாற விட்டார். தூரத்தில் சோடியம் வேப்பர் இரவைப் பகலாக்கியிருந்தது.

இறங்குவதற்கு முன் செல்லத்தைத் திறந்து தாம்பூலம் தரித்துக் கொண்டார்.

ஹாண்ட் பேகைக கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, கையில் வெற்றிலைச் செல்லத்துடன் வாயில் வெற்றிலைக் குதப்பலுடன் நடக்கத் தொடங்கினார்.

வீரராகுவின் (சொந்த) வீடு க்ரீன் வேஸ் ரோடின் அந்தக் கோடியில் இருந்தது. சற்றுத் தூரம்தான். சிரித்துக் கொண்டார். மனைவியிடம் 'வாக்' போவதாகத்தானே சொல்லி இருக்கிறார். குஷாலாக நடக்கலாம்.

'பச்சை வழிகள் சாலை' (!) இரவு எட்டு மணிக்கே ஓய்ந்து விட்டிருந்தது. யாரோ ஒருவன் டைம் கேட்டுவிட்டுப் போனான்.

அந்தப் பணக்கார சாலையின் இருபுறமும் தகுந்த இடைவெளி விட்டு முன்புறம் புல்வெளி தோட்டமுடன் பங்காளாக்கள். தவிர்க்க முடியாத கார்கள், நாய் ஜாக்கிரதை போர்டுகள், ஒவ்வொரு வீட்டிலும். சிற்சில பங்களாக்களின் வாயிலில் கூர்க்காவுக்கான மரக் கூண்டு.

மேலும் இரண்டு நிமிடம் நடந்ததில் வீரராகுவின் வீட்டைக் கண்டுபிடித்துவிட்டார்.

கேட்டைத் திறப்பதற்கு முன் நிதானித்து வீட்டை ஆராய்ந்தார்

கச்சிதமான சிறிய பங்களா. அதன் இடுப்பில் வலப்புறம் கார் காரேஜ். வீட்டின் முன்புறம் சிக்கனமான புல்வெளி. 'ஏழைப் பங்காளன்' வசதியாகவே இருந்தான்.

நல்லவேளை வீரராகு கூர்க்கா என்று எவரும் வைத்துக் கொள்ளவில்லை. கேட்டின் மீது கண்களை ஓட்டிப் பார்த்தார். 'நாய் ஜாக்கிரதை' போர்டு தென்படவில்லை. வீட்டினுள் இவன் இருக்கும் போது அது வேறு எதற்கு போட்டியாக என்று நினைத்துக் கொண்டார். உண்மையில் 'வீரராகு ஜாக்கிரதை' என்றிருக்க வேண்டும். அபாயமான அரசியல்வாதி அவன். தன் கோவணத்தைக் கூட நம்புவானா என்று யோசித்தார். தான் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கேட்டைத் திறந்து உள்ளே சென்றார்.

பங்களா பூட்டி இருந்தது

அட சட் என்று அலுத்துக் கொண்டார். இதென்ன ஆன்ட்டி க்ளைமேக்ஸ் மாதிரி பூட்டியிருக்கு? எங்கே போய்த் தொலைந்து விட்டான்? ஏதாவது வெளியூருக்குச் சென்று விட்டானா? அப்படியெனில், அவர் திட்டங்கள் சற்று மாறுமே. இருக்காது. அவனின் நேற்றைய சிட்டுக் குருவி லேகிய சவாலில் சென்னை என்று போட்டிருந்ததே.

எங்காவது ஊர் மேய சென்றிருப்பான். வரும் போது வரட்டுடம்.. காத்திருப்போம்.

மூன்று நிமிடங்கள் கழிந்த போது—

காரின் ஹெட் லைட் வெளிச்சம் பளிரிட்டது.

சிவசங்கர் எழுந்து கொண்டார்.

கேட்டைத் திறந்து, மறுபடியும் காரைக் கிளப்பி காரேஜுக்குள் கொண்டு சென்று நிறுத்திவிட்டு வீரராசு வராண்டாவை அணுகினான்.

''யாரு மேன் நீ?''

லேசாக அவனிடமிருந்து விஸ்கி வாடை வந்தது. இருந்தும் நிதானத்தில் இருப்பது தெரிந்தது.

சிவசங்கர் மிகுந்த அவசரத்துடன் ஒத்திகை பார்த்த குரலில், ''வாழ்த்துக்கள் வீரராசு சார். மீண்டும் தேர்தல்ல நிக்கறீங்களாமே? கண்டிப்பா வெற்றிதான்.''

'வெற்றி' என்ற சொல்லைக் கேட்டதும் வீரராசுவின் முகத்தில் கடுகடுப்பு நீங்கி, கண்கள் கனவில் விரிய, புன்னகைத்து விட்டு ஒருமுறை மீசையை நீவிக் கொண்டான்.

''சார் யாரு? தெரியலையே...''

''ஐயாவைப் பார்த்து ஒரு ஃபீச்சர் பண்ணுவம்னு...''

''அட பத்திரிகையா? வாங்க. உள்ளே உட்கார்ந்து பேசுவோம்.''

வாய் மேலும் அகலமாகி நிக்கோடின் கறை பற்கள் தெரிந்தன. ஜிப்பாவில் கை விட்டான். சிவசங்கர் உஷாரானார். அருகே நெருங்கினார். பார்வை அவன் மீது...''

''ரொம்ப நேரம் காத்திட்டிருந்தீங்களோ?''

''ம். ஒரு அரை அவராச்சுங்க.'' வீரராசு வெளியே எடுத்த சாவி அரையடி ஸ்கேல் நீளமிருந்தது.

''அட்டா. ஒரு போன் போட்டிருக்கக் கூடாதா?''

''எடிட்டருக்கு திடீர் ஐடியாங்க. டைம் இல்லை. மொத பேட்டியா முந்திக்கிட்டு நாம எடுத்துருவம்னாரு.'' ஓ... சாவியை வலதுபுறம் திருப்ப வேண்டும். அதுவும் இரண்டு முறை.

''நமக்கு பிரஸ்ஸைக் காக்க வெக்கறதுன்னா பிடிக்காதுங்க. வாங்க உள்ளே போவோம்.''

''சரிங்க.'' ஆக, நீளமான இந்தச் சாவியை நுழைத்து வலப் பக்கமாக இரண்டு முறை முழுச் சுற்று சுற்றிவிட்டால்... காண்பித்ததற்கு நன்றி வீரராசு.

நுழைந்தவுடன் விசாலமான ஹால். வீரராசு விளக்கைப் போட்டான். சிவசங்கர் சோபாவில் அமர்ந்து கொண்டார்.

அவன் பேனைத் தட்டிவிட்டு, சுவரில் 'உஷ்...' என்று வாயில் விரல் வைத்து அதட்டிய ஒரு கண்ணாடி போட்ட சிறுமி இருந்த கார்டு போர்டு மாட்டின-ஆணியில் சாவியை மாட்டினான்.

அந்தச் சாவி சிவசங்கரை 'வா வா' என்று வசீகரமாக அழைத்தது. அதை உடனே பிரதி எடுக்க மனம் அலை பாய்ந்தது. கைகள் பரபரத்தன. 'பொறு ராஜா' என்று அதட்டிக் கொண்டார். அவனை ஓரக் கண்ணால் பார்த்து விட்டு மறுபடியும் நிமிர, கார்டு போர்டு சிறுமி 'உஷ்' என்று அடக்கினாள். திடீரென்று தொலைபேசி அலற...

எடுத்துப் பேசும் வீரராசுவைக் கவனித்தார். கறுத்த உருவம் அவனுக்கு. கழுத்தில் சுண்டு விரல் பருமனுக்கு புலி நக தங்க செயின். வயது முப்பதுகளின் முடிவில். ஏரோப்ளேன் முகம் மாதிரி மூக்கு. செழித்து வளர்ந்த வளைந்த மீசை. கலங்கலான பழுப்பு நிறக் கண்கள். நெற்றியில் அரை அங்குல(வீரத்)தழும்பு. நெற்றியை மறைக்கும் சுருட்டை முடி. மிதமான உடல் வாகு. முகத்தில் சந்தேகத்துக்கு இடமில்லாமல் பொறுக்கிக் களை வீசியது. அவன் கையில் கத்தி, கபடா, சைக்கிள் செயின், சோடா பாட்டில் என்றை எதை வைத்தும் அந்த 'மாஜி மக்கள் பிரதிநிதியை' சுலபமாகக் கற்பனை செய்ய முடிந்தது. ஜிப்பா போட்ட பொறுக்கி.

அவனைப் பார்க்கப் பார்க்க பற்றிக் கொண்டு வந்தது சிவசங்கருக்கு. இந்தச் சோமாறி மக்களுக்கு மீண்டும் 'சேவை' செய்யப் போகிறதாம். நல்லவேளை, இவனைக் கொல்லப் போகிறோம் என்று ஆறுதலடைந்தார். ஒரு வித குரூர திருப்தி கிடைக்கும் போல் தோன்றியது. அவன் என்ன பேசுகிறான் என்று கவனித்தார்.

''...சீட் கொடுக்கிறதா உறுதி குடுத்துட்டாரு

தலைவரு...''

சிவசங்கர் மனத்துக்குள்: 'அதற்கு முன்னால் நான் மரணச் சீட்டு கொடுத்துருவேன்.'

''நாளை கெலிக்கத்தான் போறேன் தோளரே...''

சாரி வீரராசு. அது நடக்காது. 'கெலிக்கப் போவது' நான். அவன் பேசிக் கொண்டிருக்கையில் ஹாண்ட் பேகைத் திறந்தார். அதனுள் இருப்பது இரண்டு ஐட்டங்கள். 1. மெழுகு பார். 2. பற்பசை.

பேகினுள் கை விட்டார். வீரராசுவைக் கவனித்துக் கொண்டே பூனைத்தனமாக பற்பசை மூடியைத் திறந்தார். ஒரு அங்குலம் பிதுக்கி ஆட்காட்டி விரலால் தீற்றிக் கொண்டார். ஏனைய விரல்களால் மூடியைப் பொருத்தி மூடி விட்டு கையை காஷுவலாக வெளியே எடுத்து வாயினுள் பேஸ்டை வைத்துக் கொண்டார்.

வாயைக் குதப்பிக் கொண்டே பேகின் ஜிப்பை மூடி வைத்தார்.

வீரராசு தொலைபேசியை வைத்துவிட்டுத் திரும்பவும், சிவசங்கர் சோபாவிலிருந்து சரிந்து விழவும் சரியாக இருந்தது.

''சாரி திருபரே காக்க வெச்சதுக்கு. தோளர் ஒருத்தர்...'' பாதியில் நிறுத்தி விட்டான். என்ன நடக்கிறது இங்கே?

இரண்டு எட்டில் கடந்து விழுந்து கிடந்த சிவசங்கரை அணுகினான்.

ஒரு கால் மடங்கி மறுகால் விலுக்கு விலுக்கென்று துடிக்க, வாயில் நுரைத்துத் தள்ள...

''அடப்பாவி திருபா!'' தலையில் அடித்துக் கொண்டான். விழுந்து கிடந்தவருக்கு வலிப்பு என்பது புரிந்தது. இப்போது என்ன செய்வது? கொஞ்ச நஞ்ச போதையும் பறந்தோடி விட்டது. பாவி இப்படி போட்டு அடித்துக் கொள்கிறானே. நாக்கு பத்திரம் போய். எதையோ கையில் திணிப்பார்களே... ஆங்...சாவி... சாவி எங்கே... ஆ...அதோ.

எதிரில் மாட்டியிருந்த அந்த நீளமான சாவியை எடுத்து சிவசங்கரின் விரல்களைச் சிரமப்பட்டுப் பிரித்துத் திணித்தான். சிக்கென்று அவர் கை சாவியை இறுகப் பற்றியது.

அடுத்த அரை நிமிடத்தில் அடங்கினார். மெல்ல அவர் வாயிலிருந்து 'தண்ணி' என்று முனகல்..

வீரராசு உள்ளே சென்றான்.

சிவசங்கர் ஸ்பிரிங் மாதிரி விலுக்கென்று நிமிர்ந்து செயல்பட்டார். மொத்தம் பத்து வினாடிகள் தான். மின்னல் விரைவில் ஹாண்ட் பேகின் ஜிப்பைப் பிரித்து அந்த மெழுகு

பாரை வெளியே எடுத்தார். சாவியை இளக்கமான பாரின் மீது அழுத்தமாக ஒற்றி எடுத்தார். இது போதும்.

வீரராகு தண்ணீருடன் வரும்போது சிவசங்கர் சோபாவில் அமர்ந்திருந்தார். ''சாரிங்க. எப்பவாவது வலிப்பு வர்றதுண்டுங்க... சா... சாரிங்க.'' சங்கடத்துடன் தோள்களை குலுக்கி விட்டுக் கொண்டார்.

''விடுங்க. அதான் எழுந்திட்டிங்களே.'' நெற்றி வியர்வையைத் துடைத்துவிட்டு, ''ஒரு வினாடி அசந்துட்டேன். செத்துட்டிங்களோன்னு நினைச்சு...''

சாகப் போவது நீ வீரராகு.

''...பயந்துட்டேன், தேர்தல்ல நிக்கற சமயத்துல நிருபர் பிணம் என் வீட்டுலன்னு வெச்சுக்குங்க... வேற வினையே வேணாம். எதிர்க் கட்சிக்காரங்க போட்டுத் தாளிச்சிருவாங்க...''

ஓஹோ. ஒருவன் சாகக் கிடந்தாடலும் இவன் சுயநலம்தான் ஞாபகம் வரும் போல் இருக்கிறது. இந்தச் சுயநலம் உலகத்திற்கு ஒரு சுமை; புல்லுருவி; பாரசைட். பார்க்கவே அருவெறுப்பாக குமட்டிக் கொண்டு வந்தது அவருக்கு. சட்டுபுட்டென்று இவனை நீக்கி விட வேண்டும்.

''பேட்டியைத் தொடங்குவமா?''

''ம். கேட்க மறந்துட்டேனே. எந்தப் பத்திரிகையிலிருந்து வர்றீங்க?''

இதற்குப் பதில் தயாராய் வைத்திருந்தார். ஒரு மாதப் பத்திரிகையின் பெயரும், அதில் வரும் ஒரு நிருபரின் பெயரும் சொன்னார்.

''பழம் பெரும் பத்திரிகையாச்சே அது. அப்ப நம்மளைப் பத்தி அடுத்த மாசம் வரும்னு சொல்லுங்க...''

''ஆமாங்க.'' காரணமாகத்தான் மாதப் பத்திரிகையை தேர்ந்தெடுத்தார். பேட்டி அடுத்த மாதம்தான் வரும் என்பதால் உடனே அவசரப்பட்டு அப்பத்திரிகையைத் தொடர்பு கொண்டு தொந்தரவு செய்ய மாட்டான். தன் குட்டும் வெளிப்படாது.

''பேட்டி எக்ஸ்க்ளூசிவா செய்யறதுனால உங்க சொந்த வாழ்க்கை, அரசியல் வரலாறு எல்லாம் கேட்பேன். எல்லாத்துக்கும் பதில் சொல்லுங்க. அப்புறமா கட்டுரையா எழுதிக்கிட்டு வர்றேன். சரி பாருங்க. வேணாங்கறதை நீக்கிருவோம், என்ன?''

பேட்டியை ஆரம்பித்தார். முதல் கேள்வி.

நாலு வருஷத்துக்கு முந்தி உங்க மனைவி இறந்தப்புறம் இவ்வளவு பெரிய வீட்டுல தனியாவா இருக்கீங்க?

முதன் முதல் தொட்டுக் கொண்டார்கள். போக்குவரத்து அதிகமிருந்ததால நீரஜாவின் கையைப் பிடித்துச் சாலையைக் கடக்க உதவினான் சுரேஷ். (அட சட்!)

அந்தத் தியேட்டர் காம்ப்ளக்ஸிற்கு வந்தார்கள். நான்கு தியேட்டர்கள்.

நூறு ஏழைகளுக்கு இரண்டு வாரம் சாப்பாடு போடும் அளவுக்கு ரசிகர் 'நற்பணி' மன்றங்களின் ஆரவாரத் தோரணங்கள், போஸ்டர்கள், மாலைகள்.

சுரேஷ் நிதானமாகக் கட் அவுட்டுகளை ஆராய்ந்தான். ''அதோ அந்தப் படம் போகலாம்,'' என்றான்.

''ஏன்? நல்ல படமா அது?''

''சேச்சே! சகிக்காது. டப்பா. கூட்டம் இல்லாமல் ஈயடிக்கும். நாம ஃப்ரீயா....''

''ஃப்ரீயா?'' முறைத்தாள்.

''ஃப்ரீயா படம் பார்ப்போம்னு சொல்ல வந்தேன்!'' சிரித்தான்.

''உங்களுக்கு இந்தத் தியேட்டர் முதலாளி தெரிந்தவரா?''

''இல்லையே. ஏன் கேட்கிறே?''

''ஃப்ரீயா படம் பார்ப்போம்னு சொன்னீங்களே. டிக்கெட்டுக்குக் காசு கேட்க மாட்டாராக்கும்னு நினைச்சேன்.''

''ரம்பைன்னு நினைச்சேன். சரியான ரம்பம்! சரி, இந்த சினிமா போகலாமா?''

''ஊஹூம். அந்த இங்கிலீஷ் படம் போவோம்,'' என்றாள்.

''போச்சுடா. இங்கிலீஷ் படமே எனக்குப் பிடிக்காது. படம் பார்த்தத் திருப்தி இராது.''

''எனக்குப் பிடிக்குமே. யதார்த்தமா இருக்கும். நீங்க சொன்ன படத்திலே 'ரியலிசம்' கிலோ என்ன விலைன்னு கேட்கணும்.''

அவன் மறுத்தான். அவள் பிடிவாதமாக இருந்தாள். இறுதியில் நீரஜா வெல்ல... போலியாக அலுத்துக் கொண்டான் சுரேஷ். ''சே! உன்னைப் பார்த்ததிலிருந்து சுத்தமா சுதந்திரம் பறி போயிருச்சய்யா. அந்த 'தி ஸ்மால் பேச்சலர்' புக்கைப் பார்க்கிற வரைக்கும் நான் ஒரு பேச்சுலர்.''

''இப்போ?''

''பேச்சிலர்! பேச்சு இல்லாதவன். நீ சொல்றதைக் கேட்கிறேன். ஆடு மாதிரி தலை ஆட்டறேன்.''

''ஐயோ என் செல்ல ஆடே.....'' காதல் பார்வையுடன் அவன் கையைப் பிடித்தாள்.

''ரொம்பப் பார்க்காதேம்மா. இதயத்துக்கு ஆபத்து. படக் படக்குங்குது.''

''நீங்க டாக்டருங்கறதை அப்பப்போ ஞாபகப் படுத்தறீங்க.''

பாடாவதி படம் ஒரு வழியாக முடிந்து, சாலையை அடைந்த போது, நீரஜாவின் இதயம் அதிர்ந்தது.

சாலையின் மறுபுறத்திலிருந்து அவர்கள் திசையை நோக்கி வந்து கொண்டிருந்தான் யுவராஜ்!

சிவசங்கர் தன்னுடைய மூன்றாவது டிரிப்புக்குத் தயாராகிவிட்டார். நேரம் இரவு ஏழு.

உற்சாகமுடன் ஹாலுக்கு வந்தார்.

ஹாலின் ஒரு மூலையில் பேப்பரை விரித்து வைத்துக் கொண்டு, யுவராஜ் ஏதோ சீரியஸாக பார்த்துக் கொண்டிருந்தான். ஆவலுடன் அருகே சென்றார்.

தினசரியைச் சுற்றி வண்ணமயமான லாட்டரிச் சீட்டுகள் இறைந்திருந்தன.

நிமிர்ந்தான். ''இப்பத்தான் சமீப காலமாக. திடீர்னு ஒரு நாள் பம்பர் லாட்டரி விழும்னு நம்பிக்கை இருக்கு. அப்படி விழுந்து பெரிய லட்சாதிபதி ஆயிட்டால் அன்னிக்கு ரூமிலே நான் வெளியிட்ட ஆசையை நிறைவேத்துவீங்களா?''

பிறிதொரு சமயமாக இருந்திருந்தால் மறக்கச் சொன்ன விஷயத்தை மீண்டும் கிளப்பியதற்கு வள்ளென்று விழுந்திருப்பார். தற்போது அவரின் முழுக் கவனமும் அந்தக் கொலையின் மீதே இருந்தது. அவர் இதுவரை அனுபவித்தறியாத ஒரு வித உற்சாகமான மயக்கம் மிதப்பான த்ரில் வசமிருந்ததால் அவன் கேள்வியை லைட்டாக எடுத்துக் கொண்டார்.

சிரிப்புடன், ''இன்னும் மறக்கலையாடா? இத பாரு, இந்த லாட்டரி உடான்ஸ் எல்லாம் விட்டுட்டு ஜோலியைப் பாரு. அனுபவஸ்தன் சொல்றதைக் கேட்டுக்க. வாழ்க்கையிலே பணம் கிடைக்க நிறைய வியர்வை சிந்தணும். ஓயாமல் உழைக்கணும். நிறையப் பணம் பார்க்க வேற வழி கிடையாது. நீ எப்போ உழைச்சு, எப்போ நிறையப் பணம் பார்த்து.... ஹூம்! இதோட விட்டுடு, என்ன?''

''ஐயா, லாட்டரியிலே ஜாக்பாட் அடிக்கிறேன்னே வச்சுப்போம். என் ஸ்டேட்டஸ் ஜிவ்வுன்னு உயருது. அப்ப நீரஜாவைத் தருவீங்களா?''

''லாட்டரி லட்சம்.... நீரஜா.... என்ன ஒரு அபத்தமான பர்முடேஷன் இது? அசட்டு நம்பிக்கை யுவராஜ்!''

''கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க, சார். தடை ஏதும் இல்லையே?''

ஒரு வினாடி நிதானித்துவிட்டு, ''இல்லை,'' என்றார். ''அது இருக்கட்டும். செப்டம்பர் மாதத்திய C ஃபார்ம்லே ஏதோ தகராறாமே? கவனிச்சியா? இன்வாய்ஸ், சி ஃபாரம் பைல்ஸ், லெட்டர்ஸ் எல்லாம் தரோவா பார்த்துடு, என்ன?''

''நாளைக்குப் பார்க்கிறேன், சார்.''

யுவராஜையும் அவனுடைய உடோப்பியன் கனவையும் அங்கேயே புன்சிரிப்புடன் கழட்டிவிட்டுக் காரைக் கிளப்பினார். சற்று முன்னர் மழை தூறி இருந்ததால் குபீரென்று மண் வாசனையுடன் குளிர்ச்சியாக இருந்தது.

தன்னுடைய மற்றொரு பங்களாவை அடைந்து மூன்றாவது மாறு வேடத்தில் மாறிக்கொண்டார். ஹிட்லர் மீசை. அடர்த்தியான சுருட்டை முடி விக். கன்னத்தில் பட்டாணி சைஸ் மச்சம். அவ்வளவுதான். மூன்றாவது மாறு வேடம் முடிந்தது.

சூட்கேஸைத் திறந்து அந்த நீளமான சாவியை எடுத்தார். டூப்ளிகேட். ஆனால் அப்படிச் சொல்ல முடியாத வண்ணம் அமைந்திருந்தது. மாறு வேடத்தில் சென்று ஒரு நிழலான ஆசாமியைச் சந்தித்து பொய்யான காரணமும், நிறையப் பணமும் கொடுத்து மெழுகு அச்சைப் பிரதி எடுக்கச் சொன்னார். இரண்டு நாட்கள் அவகாசம் எடுத்துக் கொண்டான். அப்படியே அச்சாக வடித்திருந்தான்.

வெளியே வந்து காரைக் கிளப்பினார். இன்று இரவு மூன்றாவது மாறு வேடத்தில் சென்று இந்தச் சாவி ஒழுங்காகத் திறக்கிறதா என்று சோதனை செய்துவிட வேண்டும்.

இரவு அவர் செல்லும் நேரத்தில் வீடு வாசுகப் பூட்டியிருக்கும். ஒவ்வொரு புதன் இரவும் இரவு எழு மணிக்கு

மேல் ராயல் ஸ்டார் கிளப் சென்று 'தண்ணியில்' மூழ்கி, எழுந்து சீட்டாடி (தோற்று)விட்டு வருவது வழக்கமாம்.

எதையும் சான்ஸிற்கு விடவில்லை சிவசங்கர், எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்.

அன்று அவனிடம் எடுத்த (கிளப்பிய) பேட்டியும், இரண்டு நாள் கழித்து இரண்டாம் மாறு வேடம் அணிந்து (குறுந்தாடி, செம்பட்டை விக் சோப்பு விற்பவன் போல்) அவனிடம் நோட்டம் விட்டதும் பெரிதும் உதவியாயிருந்தன.

மனைவி நான்கு வருடங்களுக்கு முன் இறந்ததிலிருந்து வீரராகு தனியானார். பதவியிலிருந்து ராஜினாமா ஆனதும், அவனுடைய அந்தரங்க உதவியாளனான மாரிமுத்துவை நின்று கொள்ளச் சொல்லி விட்டானாம். வாரம் ஒரு முறை தோட்டம் சீர் செய்ய எட்டிப் பார்க்கும் வேலைக்காரன் தவிர்த்து வேறு எவனையும் வைத்துக் கொள்ளாத கஞ்சப் பயல்.

அவனைச் சபல புத்திக்காரன் என்று கணித்து வைத்திருந்தார். அவனைத் தொடர்ந்து தூர நின்று சில நாட்கள் கவனித்ததில் அந்த உண்மை உறுதியாகிவிட்டது.

ஒரோரு சமயம் ஏதாவதொரு குட்டியை வரழைத்துக் கொள்கிறான். சில நாட்கள் பலான இடங்களுக்கு இவன் சென்று 'கைபொழுந்து' போடுகிறான். போன ஞாயிற்றுக் கிழமையன்று கக்கத்தில் பருத்த கைப் பையுடன் வாயில் சிட்டியுடன் புறப்பட்டு, பிரபல நடிகை ரமா ராணியைப் 'பார்த்து' விட்டு வந்தான். ஹும்! பணத்தால் அபிஷேகம் செய்திருப்பான்.

இந்தப் பாவிகள் எப்படியெல்லாம் அலைகிறார்கள்? எவ்வளவு வித 'ரகசிய லீலைகள்' புரிகிறார்கள். பெரிய இடங்களில் நம்ப இயலாத ரகசியங்கள் எவ்வளவு புதைந்திருக்கின்றன..... எவ்வளவு அக்கிரமங்கள் அமுங்கி இருக்கின்றன..... அமுக்கப் படுகின்றன..... இவை எப்போதாவது அபூர்வமாகப் பத்திரிகையில் வெளியாகி விட்டால் மஞ்சள் பத்திரிகை தோற்குமளவு விஷயம் இருக்கிறது.

இந்த முறை காரை லைட் ஹவுஸ் பக்கமாக நிறுத்திவிட்டுப் பஸ் பிடித்து கிரீன்வேஸ் சாலையை அடைந்து, அவன் வீட்டின் வாசற் கதவின் முன் நிற்கையில் இரவு மணி எட்டு.

சுற்றுப்புறம் அமைதியாக இருந்தது. வராந்தா சீலிங் ஜீரோ வாட்டைத் தவிர்த்துச் சுற்றிலும் இருள்.

டூப்ளிகேட் சாவியை எடுத்தார். சுற்றும் முற்றும் நோட்டம் விட்டார். அந்த வீட்டின் உரிமையாளர் போலவே சாவியைப் பிரயோகித்தார்.. படபடப்பாக இருந்தது. கடவுளே, சாவி ஒழுங்காகத் திறக்க வேண்டுமே? திறக்குமா..... இரண்டு

முறை வலப்புறமாகச் சுற்றி....

உள்ளே லீவர்கள் க்ளிக் என்று விடுதலையாகி அசட்டுப் பூட்டு சிறிதும் ஆட்சேபணையில்லாமல் தன் சாவிதான் என்று நினைத்துத் திறந்து கொண்டது.

அவர் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. மீண்டும் பூட்டிப் பார்த்தார். முனகாமல் பூட்டிக் கொண்டது. சுத்தமான வலை. இன்று அனாவசியமாக வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டியது இல்லை. சட்டென்று கிளம்பினார்.

மறுநாள் மாலை நேற்றைய மாறு வேடத்தை, மறுபடியும் போட்டுக் கொண்டு பர்மா பஜார் சென்று கத்தி வாங்கினார். உறுதியான மரக் கைப்பிடி; அரை அடி நீளம் உள்ள பிளேடு.

ஜார்ஜ் டவுனில் ஒரு கடையில் சாணை தீட்டிக் கொண்டார். பளபளவென்று படு கூர்மையான கத்தியைப் பார்க்கையில் சிலிர்த்தது.

கத்தியில் சன்னமாக ஆள் காட்டி விரலை ஓட்டினார். இரத்தம் உடனடியாகத் துளிர்த்தது.

நான்கு சோப்புக் கட்டிகள், நான்கு பழச்சாறு சேகரித்த அட்டைப் பெட்டிகள் வாங்கிக் கொண்டார்.

தன்னுடைய அந்தச் சிறிய பங்களாவை (மேக்கப் போடும் இடம்) வந்து அடைந்தார்.

ஊர் சந்தடி அடங்கின பிறகு, வீரராசு உறங்கும் போதுதான் கத்தியால் குத்திக் கொள்வதாகத் திட்டம் இட்டிருந்தார். அதற்குப் பயிற்சி வேண்டாமா? இதற்கு முன் கொலை செய்தவரா என்ன?

படுக்கை அறைக் கட்டிலை வந்தடைந்தார். வீரராசு அந்தக் கட்டிலில் படுத்துக் கொள்வதாகக் கற்பனை செய்து கொண்டார். கூரையைப் பார்த்த வண்ணம் படுப்பதாக எடுத்துக் கொண்டார்.

அப்படியெனில்.... அவன் உயரத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வந்து.... கட்டிலில் அவன் இதயம் அமையும் இடத்தைக் குறித்தார்.

வாங்கி வந்த ஜூஸ் அட்டைப் பெட்டி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டார். உள்ளே பழரசம் பிளக் என்று அசங்குவதை உணர்ந்தார்.

இதயம் என்று குறித்த இடத்தில் கட்டிலின் மேல் அந்த அட்டைப் பெட்டியை வைத்தார். அதன் மீது சோப்புக் கட்டியை வைத்தார்.

கையில் கத்தியை எடுத்து உறுதியாகப் பிடித்துக் கொண்டார். வீரராசுவை ஒரே குத்தில் தீர்த்து விடவே

விரும்பினார். போராட்டம் இருந்தால் அனாவசிய தடயங்கள் கீழே விழ சான்ஸ் உள்ளது.

எனவே தன் வலது கையை மேலே உயர்த்திக் குறி பார்த்துக் குறித்த இடத்தில் மிக்க வலிமையுடன் கத்தியைப் பாய்ச்சினார்.

உறுதியான சோப்புக் கட்டிதான். இருந்தும் 'தட்' என்ற லேசான எதிர்ப்பொலியுடன் படு கூர்மையான கத்தி அட்டைப் பெட்டிக்குள் பாய்ந்து கட்டியைத் தொட்டது.

பழரசம் பீய்ச்சி அடித்தது. 'வீரராகுவின் ரத்தம்' என்றார் வாய்விட்டு. ஒரு மனிதனுடைய இதயத்தை பாதுகாப்பான அரணுக்குள்தான் இயற்கை அமைத்திருக்கிறது. இதன் காரணமாகவே சோப்புத் தடையை அமைத்தார்.

ஏனைய மூன்று பெட்டிகள், சோப்புகளை உபயோகித்து மேலும் முயன்றார். தான் கத்தி பிடித்திருந்த கோணத்தை லேசாக மாற்றினார். தான் நிற்கும் நிலையை சீர் செய்து கொண்டார். ஒரு கொலைக்கு எவ்வளவு செய்ய வேண்டி இருக்கிறது...

தற்போது சிவசங்கருக்குக் கச்சிதமாகக் கொலை செய்ய முடியும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது.

வரும் திங்கள் கிழமை, அமாவாசையன்று வீரராகுவைத் தீர்த்துவிட முடிவு எடுத்தார்.

சாலையைக் கணித்து கடக்க முற்படும் யுவராஜைப் பார்த்தாள் நீரஜா. இவன் எங்கே இங்கு முளைத்தான் என்று பயந்தாள்.

யுவராஜின் கவனம் முழுவதும் இன்னமும் சாலையில் சீறிடும் வாகனங்கள் மீதுதான் என்பது புரிந்ததும் அவசரமாக சுரேஷின் கையைப் பிடித்துப் பற்றி இழுத்தாள்.

சாலையைக் கடப்பவனைக் காட்டி, "ஆபத்து! அவன் நம்மைப் பார்க்கக் கூடாது. இப்படி வாங்க, சுரேஷ்!''

சே! இன்று பார்த்து இந்த மிட்டாய் ரோஸ் கலர் புடவை. ஆயிரம் பேர் மத்தியிலும் பளிச்சென்று தெரியுமே.

பல்லவனுக்காகக் காத்திருந்த மக்கள் மத்தியில் . . . ந்து, பிளாட்பார 'வயதுக்கு வராத' புத்தகங்களிலிருந்து மீண்டு . . . ந்த ஓட்டலுக்குள் நுழைந்தார்கள்.

நீரஜா நிம்மதியாக மூச்சு விட்டாள். அவளாக அவ . . கள் காதலை அப்பாவிடம் அறிமுகம் செய்யலாம் என்றிரு . . ாள். யுவராஜ் என்ற புத்திசாலியான-ஏமாந்த பூனை அவா . . ளைக் கண்டுபிடித்து விட்டு இல்லாததையும் பொல்லாத . . யும் சொல்லி வத்தி வைத்து விடுவானோ என்று பயந்தாள்.

சமோசா, டீ சாப்பிடுகையில் அவனைப் . . றிச் சொல்லி முடித்தாள்.

''ஸோ, நமக்கு அவன்தான் வில்லனா? அவ . . . துப் பயந்துட்டுத்தான் ஓடி வந்தமா? சே, ஷேம்!''

''உங்களுக்கு அவனைத் தெரியாது, . . . ஷ். கம்ப்யூட்டர் மூளை அவனுக்கு. சொல்ற விதத்திலே . . . ல்லி அப்பா மனசைக் கலைச்சிடுவான்.''

''ப்பூ! நான் ஹீரோம்மா. எனக்கும் கொஞ்சம் மூளை உண்டு. வில்லன் வந்தால் என்ன? இன்ஸ்டண்டா தாடி வளர்த்துக் கொண்டு, 'எங்கிருந்தாலும் வாழ்க' பாடுவே . . னு நினைச்சியா? நான் பிருதிவிராஜ் வம்சமாக்கும். உன் . . னத் தூக்கிக் கொண்டு பறந்துடுவேன். செவ்வாய்க் கிரகத்திலே குடித்தனம் வெச்சிடுவேன்! எவன் உன்னைத் தொடறா . . னு பார்ப்போம்.....'' சிரித்தான்.

இதற்குத்தானே ஆசைப் பட்டாய் சிவசங்கரா... நன்றாக அந்தப் பரவசத் தித்திப்பை அனுபவி.

எவ்வளவு நாட்கள் மண்டையை உடைத்துத் திட்டம் போட்டாய், ராப் பகலாய்ப் பாடுபட்டாய். இன்னும் சிறிது நேரத்தில் அந்த அரிய இனிய கணம் வந்துவிடும்.

அதிலும் அநியாய அக்கிரமக்கார அரசியல்வாதியைக் கொல்வது அல்வா சாப்பிடுவது மாதிரி. இரட்டிப்பு இனிமை. எத்தனை பேருக்கு இப்படி சந்தர்ப்பம் கிட்டும்?

அன்று இரவு நிறைய அலுவல்கள் இருப்பதாகவும், . . . த்துவிட்டுத் தன் தனியறையிலேயே படுத்துக் கொள்வதாக

வும் காத்திருக்க வேண்டாம் என்றும் தன் மனைவி பார்வதியிடம் சொல்லி இருந்தார்.

கொலைமுகூர்த்தம். ஊர் அடங்கின இரவு ஒரு மணி. அதுவரை கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளலாம் என்று படுத்துப் பார்த்தார். எது தூக்கம்? உற்சாகத்தில் உறங்க முடியவில்லை. இதுபோல் சிறுவனாக இருந்தபோது விடிந்தால் வெடிக்கப் போகும் தீபாவளிப் பட்டாசுகளை நினைத்து நினைத்துத் தூக்கம் வராமல் தவித்ததுண்டு. நிறைய வயது குறைந்தது போல் உணர்ந்தார்.

இரவு ஒரு மணி அளவில் இன்னும் ஒரு படி மேலே போய் கற்பனைக்கு சென்று விடுவார். பரிபூரண சுதந்திரமான ஆனந்தமான நிலை. ஏறக்குறைய கடவுள் போல் உணர்வார். பிறகு போலீஸ் மாட்டிக் கொண்டு அவர் விடுத்துள்ள புதிரை அவிழ்க்க விழிப்பதை மனதுக்குள் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் ரசிப்பார். ஆனந்தம் சவால்.... த்ரில்.... 'ஹையா!' என்று டிஸ்கோ ஆடிக் குதிக்காததுதான் பாக்கி.

கைக் கடிகாரம் 11.45 என்று ஒளிர்ந்தது. ஆல்ரைட்! இனி புறப்பட வேண்டியதுதான். நீதி வழங்கும் நெடிய பயணம். ரெயின் தொப்பி, மெர்கின்ஸ் அணிந்து கொண்டார்.

கிரேப் வைத்து ஒட்டிய ஷூவின் உபயத்தால் அதிராமல் நடந்து கர்ட்டனை விலக்கி ஜன்னலைத் திறந்தார்.

சில்லென்று காற்று முகத்தில் அறைந்தது. ஒரு நட்சத்திரமும் தென்படவில்லை. மாறாகக் கறுத்த அமாவாசை வானத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன. பளிர் பளிரென்று இடை வெளி விட்டு மின்னியது. எந்த நேரமும் மழை பொழியலாம். அழுத்துக் கொண்டார்.

மெல்ல ஏறி ஜன்னலிலிருந்து கீழே ஓசையின்றிக் குதித்தார். தூரத்தில் நெருப்புப் பொட்டு ஒளிர்வது தெரிந்தது. கூர்க்கா பீடி பிடித்துக் கொண்டிருக்கிறான்.

அவன் எழுந்து அடுத்த சுற்றுக்கு வருவதற்குள் காம்பவுண்டைத் தாண்டி விட வேண்டும்.

வரிசையான குத்துச் செடிகளின் பாதுகாப்பில் அதற்கு இணையாகத் தவழ்ந்து முன்னேறினார்.

குத்துச் செடியுடன் ஒண்டிக் கொண்டார். கூர்க்கா அவருக்கு நேராக செடியின் மறுபுறம் வந்து நின்று கொண்டான்.

இரண்டு தெரு தள்ளி தன் காரை போலி நம்பர் ப்ளேட் சகிதம் முன்னிரவில் நிறுத்தியிருந்த இடத்தை அடைந்தார். மாலை வரும் வழியில் கார் ரிப்பேர் என்று வீட்டில் சொல்லி வைத்திருந்தார்.

வைப்பர் வீராவேசமாகச் செயல்பட, நிதானமாக ஓட்டினார். வானம் பொத்துக் கொண்டார் போல் கொட்டியது.

பாக்கட்டில் கை விட்டு டூப்ளிகேட் சாவி இருப்பதை உறுதி செய்து கொண்டார். இந்தச் சாவியை உபயோகித்து அவன் வீட்டினுள் பிரவேசித்து உறங்கும் வீரராகவைக் கத்தியால் குத்திவிட்டு... வந்த வழியே வெளியே வந்து வீட்டைப் பூட்டிவிட்டுக் கிளம்பிடலாம்.

ஒவ்வொரு செயலும் ஆழமாக யோசிக்கப் பட்டது. நிதானமாக சரியாகச் செயல்படுவார். ஒரு தடயமும் விட்டுப் போவதில்லை. தன்னை அவனுடன் சம்மந்தப் படுத்த எவித மோடிவும் இல்லை. சுத்தமான கச்சிதமான கொலை. மக்கிச் சட்டை விழிக்கும்.

க்ரீன் வேஸ் சாலை வெறிச்சென்றிருந்தது. அந்த இடத்துக்குப் பொருத்தாத ஒரு எருமை நட்ட நடு ரோடில் மழையில் நனைந்துக் கொண்டு அசை போட்டுக் கொண் டிருந்தது. முந்தின பிறவியில் என்னவாகப் பிறந்தோம் என்று யோசிப்பது மாதிரி பட்டது. பேஷ். எமனின் வாகனம் சந்திக் கொண்டு வந்து விட்டது.

வீரராகு வீட்டின் முன் நிறுத்தினார். காரை விட்டு வெளிப் படும் போது மழை சட்டென்று நின்றது.

ஆனால் இடியும் மின்னலும் நின்றபாடில்லை. மறுபடியும் மழை பிடிக்கலாம். அதற்குள்...

சுற்றும் முற்றும் பார்த்தார். எவருமில்லை. இருக்க முடியாது—அந்த அகாலத்தில். மழை நீர் ட்ரெயின் பைப்புக்குள் புகும் 'சள சள' சத்தம் கேட்டது. குளிரில் உடம்பு சிலிர்த்தது. நைட்டியூட்டி தவளைகளின் உற்சாக 'ஙமே' விட்டு விட்டுக் கேட்டது.

மழையில் சில்லிட்டிருந்த கேட்டைத் திறந்தார். அபஸ்வரமாகக்கிறீச்சிட்டுத் திடுக்கிட வைத்தது. உள்ளடங்கியிருந்த பங்களா முழு இருளில் மூழ்கி இருந்தது. தூரத்து, மாமரம் குபீரென்று எழுந்த கறுத்த டினோசர் மாதிரி பயமுறுத்தியது.

அவருக்குள் முதல் பயம் எட்டிப் பார்த்து, முதுகுத் தண்டில் 'ஈ' என்று ஒரு பூரான் ஊர்வது போலிருந்தது. ஏற மதி மயங்கவும், மனதின் ஒரு மூலை விழித்துக் கொண்டு எச்சரித்தது.

கெளரவமான உன் கையில் கத்தி என்றது. மாட்டிக் கொண்டால் சிறையாம்; தூக்காம். மனசாட்சி சொன்னது. இப்போதும் ஒன்றும் மோசமில்லை. ஒரு மூன்றடி பின்வாங்கிச் சென்று கேட்டைத் திறந்து கொண்டு வெளியே போனால்

சுவாசிக்க சுத்தமான காற்று; இ.பி.கோ. செக்‌ஷன்களிலிருந்து விடுதலை; இந்தக் கொலை எதற்கு? குளிர் எதற்கு? போ. போய் மனைவியின் கதகதப்பில் படுத்துக் கொள்.

அங்கேயே பேசாமல் தான் சிலையாகி, வீரராசு நீளமாக அழகுத் தமிழில் 'ரீல்' விட்டு, அதற்கு மாலை போடுவதான அடுத்த கற்பனையைப் பேதலித்த புத்தி தோற்றுவிக்கவும்...

நூறு கோடி சூரியம் சேர்ந்த மாதிரி ஒரு மின்னல் மின்னி, காதைச் செவிடிக்கும் இடியோசை முழங்கவும் சரியாக இருந்தது.

சிவசங்கர் சடக்கென்று விழித்துக் கொண்டார். அந்த மஹா மின்னலின் ஒளி தன் மூளைக்குள்ளும் புகுந்து இருட்டை ஓட்டியது போல் இருந்தது. அந்தப் பெருத்த இடியோசை காதுக்குள் கேட்டுக் கொண்டிருந்த அத்தனை வார்த்தைகளையும் குழப்பத்தையும் விரட்டிவிட்டது. வந்தனம் வருணதேவா!

தனக்கு நிகழ்ந்தது கண நேர 'மெண்ட்டல் பராலிசிஸ்' என்பதை உணர்ந்தார். ஒரு சாதாரணன் போல் தான் மயங்கியதில் ஆத்திரம் வந்தது. ஆவேசம் வந்தது. மனசாட்சியாவது வெங்காயமாவது. நாட்டில் பயந்து விலகித்தான் ஆயிரம் காரியம் கெடுகிறது. துல்லிய திட்டம். மாட்ட வழியே இல்லை. முன்வைத்த காலைப் பின் வைக்கும் வழக்கம் எந்நாளும் இல்லை. வீராசு ஒரு கொசு. பின் ஏன் தயக்கம்? பற்களைக் கடித்துக் கொண்டார். இதோ வந்து விட்டேன் வீரராசு. உறக்கத்தில் இருக்கிறாயா? மீளா உறக்கத்தில் ஆழ்த்த வருகிறேன்.

தான் எவ்வளவு நேரம் வீணடித்தோம் என்று (ரேடியம்) வாட்சைப் பார்த்தார். ஐந்து நிமிடம் தான். அவ்வளவு கூத்திற்கும் ஐந்து நிமிடம்தான் என்பது ஆச்சரியப்பட வைத்தது.

முக்கிய விஐபிக்கள் வசிக்கும் சாலை அது. அடுத்த தெருவில் கிரைம் பிராஞ்ச் டிசிபி தர்மராஜன். போலீஸின் இரவு நேர ரோந்துப் படை எந்த நேரமும் வரலாம். சீக்கிரம் சட்டுபுட்டென்று முடித்துவிட்டு கழன்று கொள்ள வேண்டும்.

கையுறைகளை மாட்டிக் கொண்டார். பென் டார்ச்சை உயிர்ப்பித்து சாவியைச் சரியாக துவாரத்தில் பொருத்தினார். அதற்கு வலிக்குமோ என்பது போல் சன்னமாகச் சாவியை வலப்புறமாகத் திருப்பிக் கொண்டு போய்...

உள்ளே நுழைந்து கதவைத் சாத்திக் கொண்டார். 1:00 மணி. கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு நடந்து...

ஜன்னல்கள் ஹோவென்று திறந்திருக்க, எருமை மாதிரி

உறங்கும் என்ன மனிதன் இவன்? மின்னல் பளிச் பளிச்சென, தொடர்ந்து இடி முழங்க...

எந்த சத்தத்திற்கும் எழுந்திருக்கும் ஜாதியாகத் தெரியவில்லை. இருந்தும் விளக்குப் போட்டுக் கொல்லத் துணியவில்லை. 'டேய் வீரராசு' என்றாலும் எழுந்திருக்க மாட்டான் போலும். முன்னிரவில் நன்றாக குடித்துத் தொலைத்திருக்க வேண்டும். பென் டார்ச்சை எடுத்து வீரராசு முகத்தில் அடித்தார். ஆழ்ந்த உறக்கம் போல. ஹூம், சுகவாசி. அவன் இதயத்தைக் குறி பார்த்துவிட்டு டார்ச்சை அணைத்தார். திடீரென்று 'தொப்' என்று யாரோ குதிக்கிறாற் போல் சத்தம் கேட்கவே...

சரேலென்று இதயத் துடிப்பு அதிகரித்து, அட்ரினலை பிரவாகமாக்க, சுற்றும் முற்றும் பார்த்தார். எவருமில்லை. ஜன்னல் தாண்டி மரக்கிளை ஒன்று காற்றில் பேய்த்தனமாக ஆடிக் கொண்டிருந்தது -'நீ செய்வதை நான் கவனிக்கிறேன்' என்பது போல. சே, பிரமை. தான் இந்த முறை ஏமாறப் போவதில்லை. மனதின் கற்பனைகளுக்கு இடம் தராமல்...

மனதை ஒருமுகப் படுத்தினார். அவ்வப்போது மின்னல் பளிச்சிட, வீரராசு மறைந்து மறைந்து தெரிய...


ஏதோ ஒரு படத்தின் கண்ணைக் கெடுக்கும் க்ளைமாக்ஸ் காட்சி போல் - ஒரு வெல்டிங் ஷாப் போல் தோன்றியது. கத்தியை உறுதியாகப் பிடித்தார்: நாடு, மக்கள், சுற்றம், நட்பு என்று சகலருக்கும் சதா துரோகம் புரிந்த இதயமே நீ ஒழிந்து போ என்று மனதுக்குள் மந்திரம் போல் சொல்லி...

அசாத்திய வலிவுடன் வெறியுடன் கத்தியை அவன் நெஞ்சில் பாய்ச்சினார். கத்தி ஆழமாக இறங்கிச் செங்குத்தாக நின்று கொண்டது. ஹூம், மரண அலறல்கூட இல்லாமல் உறக்கத்திலேயே போதையிலேயே இறந்து விட்டான் பாவிப் பயல். இனி ஒரு கணமும் தாமதிக்காமல்...

அந்தக் கத்தி, வீரராசுவின் பிணம், இருண்ட சூழ்நிலை எல்லாவற்றையும் அலட்சியப் படுத்திவிட்டுச் சடுதியில் கிளம்பினார்.

வழியெல்லாம் 'சாதித்து விட்டேன்' என்று அவர் ஈகோ துள்ளிக் கொண்டு வந்தது. புளகாங்கிதமான உன்னத நிலையை உணர்ந்தார். கொலை இவ்வளவு சுலபமா என்றும் தோன்றியது.

தன் மண்டையை உடைக்க ஒரு சவால் அவருடைய ஏரியாவிலேயே காத்திருப்பதை அறியாமல் டிசிபி தர்மராஜன் உறக்கத்தின் பிடியில் கனவில் ஜனாதிபதியிடம் மெடல் வாங்கிக் கொண்டிருப்பார். விடிந்தால் வேடிக்கை ஆரம்பம்...



கிளம்பிய இடத்திலேயே காரை நிறுத்திவிட்டு இறங்கினார். மறக்காமல் பானட்டைத் திறந்து இரண்டு முக்கிய வயர்களை அறுத்து விட்டார்—கார் ரிப்பேர் என்று சொல்லி யிருக்கிறாரே! நாளைக் காலை மெக்கானிற்குப் போன் போட வேண்டும். போலி நம்பர் பிளேட்டுகளை அகற்றிவிட்டுப் பழையபடி தன்னுடையதைப் பொருத்திக் கொண்டார்.

நேரம் 2.30. அசதியில் கூர்க்கா உறங்கிக் கொண்டிருந் தான். மறக்காமல் இந்தப் பயலை நாளை முதுகில் தைலம் தேய்த்துவிடச் சொல்ல வேண்டும்! செடி முன்பு பெண்டு எடுத்தானே!

முன்பு போல் ஜன்னல் வழியாகக் குதித்து உள்ளே வந்தார். கண்ணாடி ஜன்னலைத் திரும்பவும் இறுக மூடினார்.

போலி நம்பர் பிளேட்டுகளைப் பரணில் வீசி எறிந்துவிட்டு, சின்தடிக் கையுறைகளை லைட்டரின் நீலச் சுவாலைக்கு ஆகுதியாக்கி வாஷ் பேசினுக்குள் சொட்ட வைத்தார். ஜெர்கினில் இருந்த லேசான ரத்தக் கறையைப் போக்கினார். ஆயிற்று. தடயமில்லாமல் சுத்தமான கொலை முடிந்து விட்டது.

அவர் தனியறையில் உள்ள போன்தான் பிரதானமானது. ஏனைய பிற அறைகளுக்கு அளிக்கவல்ல 'எக்ஸ்டென்ஷன்' பொத்தான்களும் அங்கிருந்தன. இரவானால், அவைகளை ரிலீஸ் செய்து, எங்கிருந்தும் எடுக்கலாம் என்று வசதி செய்வார். இப்போது யாராவது ஒட்டுக் கேட்கும் அபாயத்தால் பொத்தான்களை அமுக்கி (டி—ப்ரெஸ்) விட்டு அந்தப் போனைப் போட்டார்.

''பத்திரிகை ஆபீஸா? கவனமாகக் கேளுங்க. க்ரீன்வேஸ் ரோட்டில் வீரராகு—எக்ஸ் எம்.எல்.ஏ. கொலை. அவருடைய வீட்டிலேயே. போலீசுக்குச் சொல்லிட்டுச் சீக்கிரமா ஓடுங்க.....''

க்ளுக் என்ற சிரிப்புடன் வைத்து விட்டார். அவரால் உற்சாகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சிறிது விஸ்கி பருகிவிட்டு ஹாய்யாக உறங்க—கனவில் வீரராகுவை மறுபடியும்

கத்தியால் குத்தினார்.

திடீரென்று தொலைபேசி அலறி எழுப்பியது. விடிந்து விட்டிருந்தது. எடுத்துக் கேட்டார்.

''யாரது? நீரஜா வேண்டுமா? வெயிட் பண்ணுங்க.'' நீரஜா அறையின் எக்ஸ்டென்ஷனைத் தேடினார். அவளுடைய தூக்கக் கலக்க 'ஹலோ'வைக் கேட்டதும் வைத்து விட்டார். அலறித் திடுக்கிட வைத்தது.

''ஹலோ, சிவசங்கர் ஹியர்!''

''நீரு! நான் சுரேஷ்!''

''சுர்ர்ர்ர்ரேஷ்! என்னய்யாது சேவல் மாதிரி போன் போட்டு எழுப்பறே? காலங் காலையிலே காதலா?''

''சாரி டியர்! எங்கம்மாவுக்கு மைல்டு ஹார்ட் அட்டாக்காம். டில்லியிலிருந்து எஸ்.டி.டி. போன் வந்தது.'' அவன் குரல் நடுங்குவது தெரிந்தது.

கண்கள் கலங்க, ஆறுதல் சொல்லத் துடிக்க, ''சாரி, சுரேஷ்! ஒண்ணும் இருக்காது. கவலைப் படாதீங்க. இப்ப நான் அங்கே வரட்டுமா?''

''வேண்டாம்மா. இன்னிக்கு ஈவினிங் ஜி.டி. எக்ஸ்பிரஸ்லே கிளம்பிடறேன். ஃப்ரெண்டு டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்துடறேன்னான். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. செக்ஷன்லேயும் ஆள் பத்தாமல் க்ரைசிஸ். இன்னிக்கு 'அட்டெண்ட்' பண்ணிவிட்டு, சீஃபைப் பார்த்துப் பதினைந்து நாள் லீவு சொல்லிவிட்டுக் கிளம்பிடறேன்.''

''நீங்க திரும்பப் பதினைந்து நாள் ஆகுமா?'' ஏக்கம் தொனிக்கக் கேட்டாள்.

''ஆமாம், நீரு. கிட்டேயிருந்து கவனித்துக் கொண்டு, அம்மாவைத் தேத்தி விட்டுத்தான் வருவேன். ஜஸ்ட் பதினைந்தே நாள். நிமிஷமா ஓடிடும்.''

பரஸ்பரம் உடல்நலனைக் கவனித்துக் கொள்ளச் சொன்னார்கள். அவன் டில்லியிலிருந்து திரும்புவதற்குள் தன் அப்பாவிடம் சொல்லி சம்மதம் வாங்கி விடுவதாகச் சொன்னாள். இறுதியாக—

''ஐ மிஸ் யூ அண்ட் கிஸ் யூ!'' என்று வைத்து விட்டான். எப்படி வரும் நாட்களை ஓட்டுவது என்று சோகமுடன், தவிப்புடன் நீரஜா யோசிக்க....'

பட்லர் வைத்த காப்பியைக் குடித்துவிட்டு, சோபாவில் சாய்ந்தபடியே கொலை செய்த களைப்பினால் கோழித் தூக்கத்தில் ஆழ்ந்த சிவசங்கரை மறுபடியும் போன் அலறித் திடுக்கிட வைத்தது.

'நாய் மவனுங்க! நிம்மதியா தூங்க விடறானுங்களா?'

கொட்டாவியை மென்று கொண்டே எடுத்துக் கேட்டார்.

''ஹலோ, சிவசங்கர் ஹியர்!''

''சிவசங்கரா? நல்லது. உனக்கு இந்த இ.பி.கோ. செக்ஷன் 302 தெரியுமா?''

''என்னது? என்ன உளர்றே?....'' என்று ஆரம்பித்தவரை இடை வெட்டி...

''என்னப்பாது? கமுக்கமா கொலை எல்லாம் செய்யறே! செக்ஷன் 302ன்னா உளர்றேங்கிறே?''

''வாட்? கொலை..... கொலையா.....?'' அடி வயிற்றிலே ஐஸ் கத்தி செருகினது மாதிரி உணர்ந்தார். அறையின் குளிர்ச்சியை மீறி வியர்த்தார். இதயம் படபடத்தது. சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. அறைக் கதவு திறந்திருக்கிறதா என்று கடைக் கண்ணோரம் திருட்டுத்தனமாகப் பார்த்தார். இனி இப்படித்தான் அடிக்கடி திருட்டுத்தனமாகப் பார்க்கப் போகிறோம் என்று அவருடைய புத்திசாலித்தனமான உள்ளுணர்வு கௌலி அடித்தது.

போலியான தைரிய குரலில், ''நீ ஏதோ ராங் நம்பரைச் சுழற்றிட்டே....''

''ராங் நம்பர்னா உடனே வெச்சிருப்பியேப்பா? எனக்கு எவ்வளவு தெரியும்னு தெரிஞ்சுக்க உன்னை மீறிய ஆசை! ரைட்? எனக்கு எல்லாமே தெரியும். என்ன ஒரு பிளான்! என்ன ஒரு ரகசியம்....? புத்திசாலிதான்! அதே புத்திசாலித்தனத்தை நாம பேசற பிஸினஸ்லையும் காட்டு என்ன?''

''மிரட்டறியா? போலீஸ்லே சொல்வேண்டா படவா....''

''போலீஸ்? ஹஹ்ஹா.... சொல்லேன். போலீசைப் பார்த்தாலே லத்தி போடற நிலையிலே இருக்கே நீ.....''

''நீ யாருடா ராஸ்கல்? காலங் கார்த்தாலே வம்பு பண்றே?'' கோபமுடன் கத்தினார். அவனை ஒன்றும் செய்ய முடியாத ஆத்திரம். அசரீரியுடன் பேசுவது மாதிரி இருந்தது. முகம் தெரியாப் பகைவன்.

''பார்த்தியா? மறுபடியும் உன்னை மீறின ஆர்வம்....''

அந்தக் குரலைக் கவனித்தார். வயது அம்பதிலிருந்து அறுபது சொல்லலாம் போல் இருந்தது. ஒரே சீரான (டெஸிபல்' லெவலில் எதிராளி முயற்சித்தாலும், குரலில் பிசிறு தட்டிக் கரகரவென்று லேசான கம்மலும் சேர்ந்து கொண்டு...) புகையிலை போடுபவனாக இருக்க வேண்டும்.

''என் பெயர் இரவுப் பறவை.....''

இரவுப் பறவை! கவிதை தெரிந்த ராஸ்கலோ? பாவிப்

பயல்! ரசனையுடன் 'பிளாக் மெயில்' செய்கிறான். வகையாக ஏதோ ஆதாரம் வைத்துக் கொண்டுதான் மிரட்டுகிறான். இதயம் அதிகமாக படபடத்ததில் கைகள் நடுங்கியது. கால்கள் பலமிழந்து நிற்க முடியவில்லை.

''எமக்குத் தொழில் பிளாக் மெயில் செய்வது. இமைப் பொழுதும் சோராதிருந்து இரவிலே உன்னை மாதிரி திமிர் பிடித்த பணக்காரன் பாவம் செய்கிறானான்னு பார்த்துக் கொண்டிருப்பேன். பிடிச்சதும் பணம் கறப்பேன். மெட்ராஸ்லே உன்னை மாதிரி ஆயிரம் முதலைகளைப் பிடிச்சிருக்கேன். இதுலே நான் தேர்ந்தவன். சொல்ற மாதிரி கேள். என்னாலே உனக்கு ஒரு தொந்தரவும் வராது. அப்புறமா காண்டாக்ட் செய்யறேன். வச்சிடவா கொலைகாரா?''

தொடர்பு டக்கென்று துண்டிக்கப்பட்டது. கன்னத்தில் கை வைத்துக் கொண்டு திக்பிரமையுடன் நெடுநேரம் உட்கார்ந்திருந்தார், சிவசங்கர்.

ஒரு கொடுமையான பிளாக்மெயில் துவங்கி விட்டது.....

க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனை அறிந்தவர்கள் அடுத்த பாராவிற்குப் போகவும். கார்த்திகேயன் ஒரு துடிப்பான போலீஸ் அதிகாரி. கூர்மையான மூளை, பார்வை உடையவர். அசாத்திய ஞாபகசக்தி கொண்டவர். எதையும் தர்க்க ரீதியாக அலசுபவர். பார்ப்பவர். விடாக் கண்டர். தான் செய்யும் தொழிலை மிகவும் மதிப்பவர்; விரும்புபவர். மனிதாபிமானம் மிக்கவர். அஞ்சா நெஞ்சர். அந்தச் 'சந்திரன்' கேஸிலும், நடிகை 'கலாவதி' கேஸிலும் விசேஷ பாராட்டைப் பெற்றவர். இளைஞர். க்ரைம் பிராஞ்சின் முக்கிய தூண். டிபார்ட்மெண்டின் சீனியர்களும் அவர் மீது நம்பிகையும், உரிய மதிப்பும் வைத்திருந்தனர்.

கார்த்திகேயன் வீரராகுவின் பிணத்தைத் தரிசனம் செய்யும்போது காலை 6.00. முந்தின இரவில் ஏகத்துக்கு மழை பெய்து காற்று மிகவும் குளிர்ந்திருந்தது. கைகளைத் தேய்த்து விட்டுக் கொண்டார்.

முதல் பார்வையிலேயே இது ஒரு பல்லை உடைக்கும் கேஸ் என்பது தெரிந்து விட்டது. சுத்தமான கொலை என்று பட்டது.

மார்பில் நட்டுக் கொண்டிருந்த கத்தி மட்டும் இல்லையென்றால் வீரராசு உறங்கிக் கொண்டிருக்கிறார் என்று சத்தியம் செய்திருப்பார். கொலையாளி எதையும் அவசரமாகக் கலைக்காமல் நிதானமாக வந்து சாவதானமாகக் கோணம் பார்த்துக் குத்திவிட்டுச் சென்றிருப்பான் போல....

கார்த்திகேயன் அந்த அறையைச் சுற்றிச் சுற்றி வந்தார். எப்போதுமே டெக்னீஷியன்களுக்கு முன் வந்து விடுவார். அவர்கள் செய்யும் களேபரத்தில் அவர்கள் அறியாமல் 1 சதவிகித அளவு தடயம் கலையச் சந்தர்ப்பம் உண்டு என்று நம்பினார். மேலும் கவனம் கலையாமல் தனியனாகப் பார்ப்பது சௌகர்யம்.

இண்டு இடுக்கு விடாமல் பொறுமையுடன் பார்த்தார். எங்கும் எதுவும் தென்படவில்லை. ஹூம் என்று பெருமூச்சு விட்டபோது ஏரியா இன்ஸ்பெக்டர் சாமுவேல் வந்தார்.

''என்ன சாம், ஏதாச்சும் தெரிந்ததா?''

''சார். வீட்டைச் சுத்திப் பார்த்துட்டேன். சுத்தமா [illegible] இருக்கு ஜன்னல்கள் திறந்துதான் இருக்கு. பட் கம்பி வழியா புகுந்து வர முடியாது. நல்ல உறுதியான கம்பிகள். [illegible] ஆகலை. பார்த்துட்டேன்.''

''அப்ப வாசல் வழியாகத்தான் வந்திருக்கணும். ஸோ தெரிந்தவனாக இருக்கலாம். அல்லது மாத்து சாவி போட்டுத் திறந்திருக்கலாம்.''

''[illegible] அந்த வாசல் பூட்டை ஆராயட்டுமா?''

''வேண்டாம் சாம். எந்தப் பூட்டையும் திறக்கிற சாமர்த்தியசாலிகள் இப்போ இருக்காங்க. அந்த நிருபரை அனுப்பிவிட்டீர்களா?''

''ஆச்சு. அனுப்பச் சொல்லி நச்சரிச்சுட்டார். அவருக்குப் போன் வந்ததும் என்னைக் காண்டாக்ட் செய்தார். நானும் அவருமாகத்தான் வந்தோம். வீடு பூட்டியிருந்தது. உள்ளே ஒரு பிணம்னு சொல்ல முடியாதபடி சூழ்நிலை சாதாரணமா அமைதியா இருந்தது.''

''பூட்டை உடைக்கறதுக்கு முன்னாலே நல்லா பூட்டியிருந்ததான்னு பார்த்தீங்களா?''

''பின்னே? நல்லா செக் பண்ணினோம். காலிங் பெல்லும் விடாமல் அடிச்சு சோர்ந்து போனோம். பின்னதான் உடைச்சேன். கொஞ்சம் ஓல்டு மாடல் ப்ளைண்ட் லாக் சிஸ்டம். திண்டுக்கல் வகையைச் சார்ந்தது.''

''அந்த நிருபர் சொன்னதை மறுபடி சொல்லுங்க?''

அப்போது டெக்னீஷியன்கள் உள்ளே வந்து அறிமுகம் முடிந்து வேலையை மளமளவென்று துவக்கினார்கள்.

இருவரும் ஹாலுக்கு வந்து சோபாவில் உட்கார்ந்தார்கள்.

''ம்..... அந்த போன்....?''

''ஜஸ்ட் ரெண்டே லைன். இது மாதிரி வீரராசு வீட்டிலே கொலை. போலீசுக்குச் சொல்லிட்டு சீக்கிரமா ஓடுங்க. அது யாராயிருக்கும் கார்த்திகேயன்?''

''சாத்தின கதவு. உள்ளடங்கின வீடு. வழியில் போகிறவன் மெனக்கெட்டு உள்ளே வந்து எட்டிப் பார்த்து விட்டுச் சொல்ல சான்ஸ் கிடையாது. போன் வந்த நேரம் கவனியுங்க. ராத்திரி ரெண்டு மணிக்கு மேலே. அதிலும் ஒரு பத்திரிகை நிருபரை இழுத்திருப்பதாலே ஏன் கொலையாளியாகவே இருக்கக் கூடாது?''

''சரி, வச்சுப்போம். ஏன் அவன் அப்படிச் செய்யணும்?''

யோசிப்புடன் கார்த்திகேயன், ''பாயிண்ட். அதான் புரியலே. செத்திருப்பது அரசியல்வாதி. இம் மாதிரி கேஸிலே முழு விசாரணை முடிகிற வரைக்கும் நாம முழு உண்மைகளை வெளியே விடறதில்லை. அதைத் தவிர்க்க விரும்பி இருப்பானோ? அவன் போன் செய்ததனாலே கேஸுக்கு நல்ல பப்ளிசிட்டி கிடைக்கும்.''

''கரெக்ட்! இப்பவே நாலு பேரு பேடு, பென்சில், காமெரா தூக்கிக் கொண்டு வந்துட்டாங்க. நம்ம ஏட்டு துரத்திட்டிருக்கார்.''

'ஏன் பப்ளிசிடி? எதையாவது வெளிச்சம் போட்டுக் காட்டணுமா? வீரராசு மறைந்த–மறைத்த பாவங்கள் ஏதாவது.....' கார்த்திகேயன் மனசுக்குள் முணுமுணுத்துக் கொண்டார். ''வாட் அபௌட் வீரராசு, சாம்?''

''மூன்றாந்தர அரசியல்வாதி! எல்லா வைஸும் உண்டு. ரெண்டு மூணு லோகல் ரௌடிங்களை லாக்கப்லே தள்ளினபோது விடுவிக்கச் சொல்லி ஸ்டேஷனுக்குத் துண்டு புரள வந்து என்னை மிரட்டியிருக்கான். இவனுங்களாலே நமக்கு எவ்வளவு இடைஞ்சல்கறீங்க? ஒழுங்காகக் கடமையைச் செய்ய முடியாமல், வெளியிலே சமூக விரோதிகளுக்குத் துளிர் விட்டுப்போய்...... இதெல்லாம் பப்ளிக்குக்குத் தெரியணும்.....'' பெருமூச்சு விட்டார் சாமுவேல்.

அப்போது வாசலில் ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்கவே, இருவரும் எழுந்து கொண்டார்கள்.

டாக் டாக்கென்று பூட்ஸ் சத்தம் எதிரொலிக்க, டெபுடி கமிஷனர் ஆஃப் போலீஸ், க்ரைம் பிராஞ்ச் தர்மராஜன் புயல் மாதிரி பிரவேசித்தார். கோபாவேசமாயிருந்தார்.

விறைப்பாக நின்று ஒரு எஃகு சல்யூட் வைத்தார்கள்.

''கொலை பண்ணிட்டானாமா? ரெண்டு தெரு தள்ளி டி.சி.பி. வீடுன்னு தெரிஞ்சும் சொல்ல என்ன துணிச்சல்? ஐ வில் மேக் தி பாஸ்டர்டு பே ஃபார் திஸ். நிருபனுக்குப் போன் போட்றானா? அவனைப் பிடிச்சு முட்டிக்கு முட்டி தட்டி ரத்தம் கக்க வைக்கிறேன், யாரு....''

கார்த்திகேயன் பக்கம் திரும்பி, ''வீரராகு என் நண்பன் தெரியுமாய்யா?'' என்றார் சற்றே சிவந்த கண்களுடன்.

மூவரும் பிரேதம் இருந்த அறைக்குள் பிரவேசித்தார்கள்.

பிரேதத்தைப் பார்த்த தர்மராஜன்; அதிர்ந்து விட்டார். ''கத்தியாலே குத்திக் கொலையா? என்கிட்டே நீங்க சொல்லவே இல்லியே, சாமுவேல்?''

''நான் ஒண்ணுமே சொல்லலியே, சார்! போன்லே வெறும் கொலைன்னுதான் சொன்னேன். சாரி, சார்! பதட்டத்திலே கொலை எப்படின்னு சொல்ல மறந்துட்டேன்.''

''ஓ சாரி, சாமுவேல்! துப்பாக்கியாலே சுட்டதா சொன்னீங்கன்னு நான்தான் நினைச்சிட்டேன் போல! ஒரு குளோஸ் நண்பன் இறந்த குழப்பம்.''

நேற்றைய இரவு மின்னல்களின் மிச்சம் போல் காமெரா பளிச் பளிச்சென்று பிளாஷித்துக் கொண்டிருந்தார்கள். பவுடர் தூவி கை ரேகைகள் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். குறிப்புப் புத்தகத்தில் பென்சில் ஓட்டிக் கொண்டிருந்தார் ஒரு கான்ஸ்டபிள். இஞ்ச் டேப் அளந்து கொண்டிருந்தது.... போலீஸ் ரொட்டீன்!

''போலவ் பென்சிலோட்டி, கொஞ்சம் தள்ளி நில்லு. சை! நல்ல ஆழமான கத்திக் குத்துய்யா! ரத்தம்கூட அதிகம் வெளியே வர சான்ஸ் இல்லாமல் கார்க் மாதிரி பிளேடு மாட்டிருக்குய்யா!'' டி.சி.பி. அதிசயித்தார்.

''தடயம் ஏதாச்சும் மாட்டிச்சாய்யா கார்த்திகேயன்?''

இல்லையென்று உதட்டைப் பிதுக்கினார்.

''நேற்று மழை அவ்வளவு பெய்யவில்லையென்றால் ஒரு சில காலணித் தடயமாவது வாஷாகாமல் கிடைச்சிருக்கும், சார்,'' என்று சாமுவேல் அபிப்பிராயப்பட்டுவிட்டு, ''ஆனால் கேட்டுக்கு வெளியே மழையிலே அழிந்தது போக, இரண்டு சக்கரங்கள் பதிந்த அடையாளம் இருக்கு. ஒரு காரோட முன் இரண்டு சக்கரங்களாக இருக்கணும்.''

''அவனே (வீரராசு) கார் வெச்சிருக்கான்யா. வேறே சொல்லு?'' என்றார் தர்மராஜன் கடுப்புடன். அவரும் சற்று நேரம் மேலும் கீழும் பார்த்துவிட்டு....

''ஸோ, நமக்கு உருப்படியா ஒண்ணும் தெரியலே. இருட்டிலே குருட்டுச் சுவத்திலே முட்டிக்கிற மாதிரி ஒரு தலைவலி கேஸ். பத்திரிகைக்காரங்களுக்கு நான் சொல்ற மாதிரி அதிகம் தகவல் இல்லாத ஒரு ஸ்டேட்மெண்டு கொடுத்திருவோம். கமிஷனரைக் கலந்து கொண்டு கட்சிக்காரங்களை நான் சமாளிச்சிடுவேன். சீக்கிரமா பாடியை போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்புங்கய்யா. சட்டுபுட்டுனு கேஸை முடிச்சுத் தொலைக்கணும். ஆளுங் கட்சிப் பதவிக் காலம் முடிகிற நேரம். எலெக்ஷன் அனௌன்ஸ்மெண்ட் எந்த நேரமும் வந்துடும். க்விக் டிஸ்போஸலாகணும் கேஸ். இல்லைன்னா அனாவசியத்துக்கு 'சென்சேஷனலைஸ்' செய்து, எலெக்ஷன் இஷ்யுவாகி, நம்மை மத்த வேலைகள், கேஸ்கள் கெட்டுடும். முக்கியமா நம்ம தலை உருளாமல் காப்பாத்திக்கணும்,'' என்றார் சற்றே சாந்தமாக.

கார்த்திகேயன் மௌனமாக இருந்தார். விசாரணை தொடர்ந்தது.

சிவசங்கர் நான்காம் முறையாக அந்தக் கவரைப் பிரித்து அந்தப் போட்டோக்களை எடுத்துப் பார்த்தார்.

மொத்தம் நான்கு போட்டோக்கள். ஒன்றில் சிவசங்கர் உறங்கும் வீரராசு முன் நிற்கிறார். இரண்டாவது போட்டோவில் கத்தியை வெறியுடன் ஓங்குகிறார். மூன்றாவதில் வீரராசுவின் மார் மீது கத்தியைப் பாய்ச்சும் துல்லிய கணம் சிறைப் பிடிக்கப்பட்டிருந்தது. நான்காவதில் கத்தி செருகின வீரராசுவை சற்று வியப்புடன் பார்க்கும் சிவசங்கர்.

நான்கும் அருமையான கோணத்தில் அற்புதமாகப் படம் பிடிக்கப்பட்டிருந்தன. உபயோகக் காரியவாக இருக்க வேண்டும். அவன் இதில் தேர்ந்தவனாக இருக்க வேண்டும். இல்லையென்றால் பிளாஷ் உபயோகித்திருக்க வேண்டும். ஒரு பிளாக்

மெயிலருக்குத் துணை போன அந்தச் சதிகார மின்னல்கள்...

பளீர் பளீரென்ற மின்னல்களுக்கு இடையில் விழுந்த சில ஃபிளாஷ்கள் அவருடைய துர்பாக்கியம். ஹூம்... மின்னுவது எல்லாம் மின்னலல்ல! காலம் கடந்த ஞானோதயம்.

ஆனால் அவன் மிக புத்திசாலி—இதில் தேர்ந்தவன் என்பதை இப்போது நம்பினார். அவன் இந்தப் போட்டோக்களை அனுப்பியவிதமே அலாதியானது...

காலை பத்து மணியளவில் மீண்டும் 'இரவுப் பறவை' போன் செய்து 'உங்கள் கேட் தபால் பெட்டியில் ஒரு செய்தி காத்திருக்கிறது' என்று வைத்து விட்டான்.

செய்தியாம் செய்தி. பணம் கேட்டிருப்பான் என்று அலட்சியமாக அந்தக் கவரை எடுத்து வந்தார். ஏதானும் அவருடைய சட்டைப் பித்தானாக இருக்கும். அல்லது அது மாதிரி ஏதாவது வைத்துக் கொண்டு விளையாடுகிறான் என்று நினைத்துச் சாதாரணமாக அந்தக் கவரைப் பிரித்தார்.

பிரித்தவுடன் அவரை மிக உச்சமான அதிர்ச்சிக்கு கொண்டு சென்றன அந்தக் 'கொலைப்' படங்கள். இதயம் ஒரு கணம் நின்று விட்டாற் போலிருந்தது. கவரில் இது மாதிரி சூப்பர் சதியை எதிர்பார்க்கவில்லை.

சுவடே எதும் இல்லாத ஒரு கொலை செய்து போலீஸுக்குப் பெரிய சவால் விட்டோம் என்று இறுமாந்திருந்த வேளையில், இந்தக் கிராதக இரவுப் பறவை திடுமென்று கிளம்பி இந்தப் போட்டோக்களை அவர் முகத்தில் வீசியிருக்கிறான். அதைவிட, கொதிக்கும் வெந்நீரை வீசியிருக்கலாம்; பொறுத்துக் கொண்டிருப்பார். இனி சவாலாவது, ஒண்ணாவது...

ஒரு மூன்றாந்தர கொலையாளிக்கு கிடைக்கும் வசதிகள், பாதுகாப்புகள் கூட தனக்கு கிடைக்க முடியாதபடிக்கு ஒரு கொலை செய்ததை நினைத்து நொந்து கொண்டார். இவர் செய்துள்ள கொலைக் கேஸில் வக்கீல் வேண்டாம். சாட்சி வேண்டாம். வாதப் பிரதிவாதம் வேண்டாம். அப்பீல் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். கனம் நீதிபதி இந்தப் போட்டோக்களை ஒரு கணம் பார்ப்பார். பார்த்தபின் நிமிர்ந்து குற்றவாளிக் கூண்டில் கூனி குறுகியுள்ள சிவங்கரைக் கண் சுருக்கி பூச்சி மாதிரி பார்த்துவிட்டு பால பாடமான இபிகோவை சொல்லி சரியாக ஒரு வினாடியில் ஒரே ஒரு வார்த்தை தீர்ப்பு எழுதுவார்: 'தூக்கு!'

இனி தன்னை யாராலும் காப்பாற்ற முடியாது. அந்தப் போட்டோக்களைப் பார்க்கப் பார்க்க ஆசன வாயிலிருந்து உச்சந்தலை வரை பயத்தில் வேர்த்துவிட்டது. இனி தூக்கத்தில்

திடீர்திடீரென்று பாதியில் விழித்து வியர்ப்பார். அடி வயிற்றில் ஒரு நிரந்தரப் பகீர் இருக்கும்.

மதியம் ஒரு அவசர அழைப்பினால் கம்பனி வரை போக வேண்டியிருந்தது. வழியில் ஒரு டிராஃபிக் போலீஸ் அவர் காரைத் தள்ளிப் பார்க் செய்யச் சொன்னபோது அதிர்ந்தார். தன்னிடம் கொஞ்சம் கூடுதலான கடுமையில் சொன்ன மாதிரி உணர்ந்தார். அவன் எதிரில் மூச்சுவிடக் கூட குற்றத்தைக் கண்டுபிடித்து விடுவானோ என்று வியர்த்தார்.

வீட்டிற்கு திரும்புகையில் ஒரு போலீஸ் ஸ்டேஷனைப் பார்த்ததும், சிக்னலில் மற்றொரு டிராஃபிக் சார்ஜெண்டைப் பார்த்ததும் உடல் சிலிர்த்து நரம்புகளில் 'சொரேர்' என்ற பய உணர்ச்சி ஓடியது. ஹூம்... அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குள் தான் இருப்பதும் இல்லாததும் முகம் தெரியாத ஒருவனின் கையில் உள்ளது.

சிகரெட் வாங்க கடையில் நிறுத்திய போது தேவைக்கு அதிகமாக தன்னை ஒரு கணம் உற்றுப் பார்த்து விட்டு சிகரெட் தந்தது மாதிரி பட்டது. 'நீ தானே' என்று கேலி பார்வையில் இருந்ததோ என்று ஐயப்பட்டார்.

ஒவ்வொருவரையும் உற்றுப் பார்க்கத் தொடங்கினார். இனி தனக்கு யாரைப் பார்த்தாலும் பயம்தான் என்று உணர்ந்து கொண்டார். எல்லோருமே பிளாக் மெயிலர்கள் மாதிரி பட்டது. எல்லா விஷயங்களும் மறந்துப் போய் தன்னுடைய குற்றம் மட்டுமே நிற்பது மாதிரி ஒரு பிரமை மனதில் தோன்றி பயத்தை வற்றாமல் பார்த்துக் கொண்டது.

இதோ இப்போது நான்காவது முறையாக அந்தப் போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தவித்துக் கொண்டிருந்தார். ஏன் இரவுப் பறவை திரும்பவும் தொடர்பு கொள்ளவில்லை என்று குழம்பினார்.

யோசித்ததில் புரிந்தது. நேரம் கொடுத்து தன்னைக் காக்க வைக்கிறான். பயத்தில் தவிக்க வைக்கிறான். விக்டிம் 'தலையாட்டும்' பக்குவத்தில் இருக்கும் போது போன் போடுவான். இதில் மாட்டாமல் தப்பிக்க இரண்டே வழிகள்தான் புலப்பட்டது.

1. அவனைப் பிடித்து அந்த போட்டோ நெகடிவ்களை அழிப்பது. அந்த ஆதாரம் அழிந்து விட்டால் அவரை எவரும் பிடிக்க முடியாது.

2. அவன் கேட்கப் போகும் பணத்தைக் கொடுப்பது.

இதில் இரண்டாவது வழிதான் முடியும் என்று பட்டது. முதலாவது வழி பலிதமாவதற்கு இரவுப் பறவை யார் என்பது அவன் இருப்பிடம், அவன் போட்டோவைப் பாதுகாப்பாக

வைத்திருக்கும் இடம்-முறை, என்று எல்லாம் தெரிய வேண்டும். தெரிந்தும் நிறைவேற்ற சாமர்த்தியம் வேண்டும். பிளாக் மெயிலில் தேர்ந்த இரவுப் பறவை ஏமாறுகிற ஜாதியாகத் தெரியவில்லை. இதுவரை வெறும் தொலைபேசித் தொடர்பு தான். போட்டோ அனுப்பின கவரில் கடிதமோ, கையெழுத்தோ இல்லை. மொட்டையாக நான்கு போட்டோக்கள்.

டக்கென்று கதவு திறந்து யுவராஜ் புன்சிரிப்புடன் உள்ளே வந்து. ''இதெல்லாம் உங்களுடைய அவசர கையெழுத்துக்கு...'' என்று பைல்களை வைத்தான்.

இயந்திரம் மாதிரி சிவசங்கர் கையெழுத்திட, திடீரென்று போன் அடித்தது. திடுக்கிட்டார். முதுகில் கோழி இறகால் தடவினாற் போல் உறைய...

யுவராஜ் முந்திக் கொண்டு ஓடி போனை எடுத்துக் கேட்டான்.

''என்னது! பேசறது இரவுப் பறவையா? நான்சென்ஸ். ராங் நம்பர். வைப்பா போனை.'' ரிசீவரை வைத்துவிட்டு, ''மெண்டல் ஆசாமி எல்லாம் போன் போடுது!'' சிரிப்புடன் திரும்ப...

உக்கிரமாக எழுந்து நின்றார் சிவசங்கர். 'இரவுப் பறவை' என்று சொன்னது அவர் காதில் விழுந்துவிட்டது. எப்போதடா போன் செய்வான் என்று காத்திருக்கையில் இந்தப் பாவி ராங் நம்பர் என்று கெடுத்து விட்டான்.

''பாஸ்டர்ட். உன்னை யாருடா போனைத் தொடச் சொன்னது? நீ எதுக்கு வந்தே? கையெழுத்து வாங்க. வாங்கிட்டுப் போயேன். இனி ஒருமுறை எம் முன்னால போனைத் தொட்டியோ, கையை வெட்டிருவேன். கெட்டவுட் நவ்.''

அவ்வளவிற்கும் அசையாமல் அவன், ''சார், உங்களுக்கு என்னாச்சு? இதுக்கு முன்னே உங்க முன்னால போன் அடிச்சு நான் கேட்டதில்லையா? ஒரு சாதாரண ராங் நம்பருக்குப் போய் இப்படிக் கிட்டீங்களே?'' என்றான் சற்று வருத்தம் தோய்ந்த குரலில்.

'எனக்கு என்னாயிற்று? ஏன் என் நிதானத்தை இழக்கிறேன்? என்னை நானே வெளிப்படுத்திக் கொண்டு விடுவேன் போலிருக்கிறதே?' தலையைப் பிடித்துக் கொண்டார்.

''சாரி யுவராஜ். ஐயாம் இன் ஒன் ஹெல் ஆஃப் எ ஸ்நாப்பிங் மூட்... ஒரு ஓவர்சீஸ் காலுக்காகக் காலைலருந்து காத்துக்கிட்டிருக்கேன். அதான் டென்ஷன்.''

கையெழுத்து முடிந்து பைல்களை அடுக்கிக் கொண்டு கிளம்பினான். போகும் போது அவரை உற்றுப் பார்த்தான். பின்

நிதானமாகச் சொன்னன்.

''சார், உங்க மனசுல ஏதோ அறுக்குது. இல்லைன்னா இப்படி சாதாரணமான விஷயத்துக்கே பதறமாட்டிங்க. நல்லா ரெஸ்டு எடுத்தா சரியாயிரும். டென்ஷன் விலகிடும்.''

கதவைச் சாத்திக் கொண்டுப் போனான். இந்தப் பையன் மிக புத்திசாலி. உறக்குறைய விஷயத்தை தொட்டு விட்டான். இவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தன்னைக் கண்டுபிடித்து விடுவான். முன் போல் சகஜமாகப் பழகி நடிக்க வேண்டும்.

மேஜை மீது எதேச்சையாக பார்வை பாய திக்கென்றது. அந்தப் பாழும் போட்டோக்கள் இன்னமும் மேஜை மேல். அவரின் நல்லவேளை அவை கவிழ்ந்திருந்தன. அவற்றை எடுத்து கவருக்குள் போட்டு மறைத்து வைக்கலாம் என்று டேபிளை நெருங்கிக் கையை நீட்டினார்.

கதவு திறக்கும் சத்தம் கேட்கவே, விலுக்கென்று கையை இழுத்துக் கொண்டு திரும்பினார்.

பார்வதி! சண்டாளி உற்றுப் பார்க்கிறாளே...

''உங்களுக்கென்னாச்சு? மதியம் சாப்பாட்டுக்கு வரலை. பட்லர் கேட்டதுக்கு வயித்துவலின்னு சொன்னீங்களாம். இப்ப காபி, ஸ்னேக்ஸ் சேர்ந்து சாப்பிடுவோம். வரலை. இப்ப என்ன தலைவலியா?''

அவரைப் பேசவே விடவில்லை.

''சமீப காலமாக உங்களுக்கு என்னமோ ஆயிருச்சு. சொந்த வீட்டுக்குள்ளேயே திருடன் மாதிரி நடந்துக்கறீங்க. இல்லைன்னா கதவு திறக்கற சத்தம் கேட்டப்ப, அப்படி கையை விலுக்குனு இழுத்துப்பீங்களா? நீங்களா சொல்ல பிரியப் படாதபோது, உங்க கவலை என்னன்னு கேட்கப் போறதில்லை. ஆனா பொண்டாட்டி முன்னாலேயே இப்படி வேர்த்துப் போய் நிக்க வேண்டாம்.''

அருகே வந்து புடவைத் தலைப்பால் பரிவுடன் துடைத்துவிட்டாள். ஆறுதலான அவளுடைய அருகாமையினால், முட்டிக் கொண்டு வந்த அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார். யாரிடமாவது சொல்லி அழுது தீர்க்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் சொல்லக் கூடியதையா பண்ணிவிட்டு வந்திருக்கிறார்...

''பேசவே மாட்டீங்களா? சரி. வேண்டாம். அதோ அங்கே அவன்கிட்ட சொல்லலாமே?''

காட்டிய இடத்தில் முருகன் படம். மயில் துணை இருக்க 'யாமிருக்க பயமேன்' என்றார். சாரிப்பா. உன்னால கூட என்னை அந்த இபிகோ செக்ஷன்களிலிருந்து காப்பாற்ற

முடியாது. முடிந்தால் ஏதாவது பணம் அச்சடிக்கும் மெஷின் இருந்தால் அருள்வாயாக. ஆயுசு பூரா பிளாக்மெயிலருக்குப் பணம் வழங்கிகிட்டே இருக்கேன்.

''நான் கோயிலுக்கு கிளம்பறேன். நீங்க தனியாவே இருங்க. நான் தொந்தரவு பண்ணலைப்பா. ஏதாவது தியானம் மாதிரி செய்யுங்க. படபடப்பு குறையும்.''

முடியாதுடி முண்டமே. ஷேக்ஸ்பியர் சொன்னது மாதிரி கையில் நெருப்பு பற்றிக் கொண்டபின், காகஸஸ் மலையின் பனி மூடிய சிகரத்தை நினைத்துக் கொள் என்றால் எப்படி? அவள் போய்விட்டாள்.

மறுபடியும் தனிமை. தன்னுடைய நிலைமையை நொந்து கொண்டார். யுவராஜ், பார்வதி என்று வரிசையாக ஆளாளுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். அவ்வளவு பாக்டரி, சொத்துடன் சக்ரவர்த்தி மாதிரி இருந்துவிட்டு, இப்போது இப்படி நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு, ஊர் பேர் தெரியாத ஒருவனின் போன்காலுக்குப் பழியாகக் கிடந்து, அவன் சொல்லப் போகும் வார்த்தையில் தன் உயிர் ஊசலாட...

சட்டென்று உடைந்து சன்னமாக அழுதார். அப்போது 'இரவுப் பறவை'யிடமிருந்து போன் வந்தது!

எல்லாவற்றையும் எடுத்து பரபரவென்று அதனதன் இடத்தில் வைத்தார் டாக்டர். கையுறைகளை அவிழ்த்து வௌவால்கள் போல் நைலான் கொடியில் க்ளிப் மாட்டித் தொங்கவிட்டார்.

குப்பைக் கூடையில் வீசியெறிய வேண்டிய சமாச்சாரங்களை எறிந்தாயிற்று. கழுவப்பட்டது. சாவ்லானால் சுத்தப் படுத்தப்பட்டது. பிணத்தைக் கச்சிதமாகத் தைத்து மூடியாயிற்று. வீரராகவின் போஸ்ட் மார்ட்டம் முடிந்து விட்டது.

ஆடப்ஸி ரிப்போர்ட் தயாரித்து முடித்தாகி விட்டது. ஆனால் அதை வாங்கிப் போகத்தான் ஆளை இன்னமும் காணோம். ஒரு போலீஸ் கான்ஸ்டபிளுக்குக் கூடவா பஞ்சம்?

இன்று எந்த விசேஷ விஷயமும் இல்லைப்போல . .

எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது? இவர்கள் எப்போது வந்து அடாப்ஸி ரிப்போர்ட் பெறுவது? நான் ஊருக்கு எப்போது ரயில் பிடிப்பது? டாக்டருக்குப் படபடப்பாக வந்தது. செய்வதறியாது குழம்பினார்.

ஊருக்குப் போகும் அவசரத்திலும் ஏதோ கேட்டுக் கொண்டார்களே என்று போஸ்ட் மார்ட்டம் செய்ய ஒப்புக் கொண்டது மடத்தனம். இந்த பழுப்புக் காகிதத்தைக் கொடுத்து விட்டால் போதும். சிட்டாய்ப் பறந்து டிரெயினைப் பிடித்து விடலாம். சூட்கேஸ் கூட பாக் செய்து வைத்தாகி விட்டது. ஐயா, நாட்டுல் ஒரு எஸ்.ஐ., ஒரு கான்ஸ்டபிள் பின்னாடி...

அப்போது போலீஸுக்கே உரிய பிரத்யேக பூட்ஸ் ஒலி கேட்க, டாக்டர் திரும்பினார்.

வாசலில் வந்தவரைப் பார்த்து மலர்ந்தார். ''ஹலோ டிசிபி தர்மராஜன்! வாங்க. சமயத்துக்கு வந்தீங்க.''

''சமயமா? ஒரு ஆக்ஸிடெண்ட் கேஸ் சார். ஸ்பென்சர் கிட்ட ஒரு மாருதியும், ஆட்டோவும் மோதி விபத்து. தெரிஞ்சவர்தான். காஷுவாலிட்டியில் பார்த்துட்டுப் போவோம்னு வந்தேன். ஸ்பாட்ல் க்ளியர் பண்ணலாம். இன்னும் ஒரு அஞ்சு மணி நேரம் தாண்டணும். சரி வந்தது வந்தோம். பி.எம். பண்ணிட்டீங்களா பார்ப்போம்னு வந்தேன்.''

''அது முடிஞ்சுருச்சு சார். ரிப்போர்ட் கூட ரெடி.''

''எங்கே கொடுங்க பார்ப்போம்?''

டாக்டர் கொடுத்தார். டிசிபி பார்த்து விட்டு, ''ஐஸீ...''என்று உதட்டைப் பிதுக்கினார்.

''தேங்க்ஸ் டாக்டர். அப்ப நான் கிளம்பறேன். உங்க ரிப்போர்ட் எந்த அளவு உதவுதுன்னு பார்க்கலாம்.''

''இருங்க டிசிபி சார். இந்த ரிப்போர்ட்டை வாங்கிட்டுப் போயிருங்க. நான் நிம்மதியா ஊருக்குப் போவேன்.''

''ஒரு எஸ்.ஐ. அனுப்பறேன். அவர்கிட்ட கொடுத்துடுங்க என்ன?''

டாக்டர் தலையில் அடித்துக் கொண்டு, ''ஐயோ, நிலைமை தெரியாம பேசறீங்களே... எனக்கு ஊருக்குப் போற அவசரம். நீங்க சொல்லி உங்க டிபார்ட்மெண்ட் ஆசாமி ஆடி அசைஞ்சு வர்றதுக்குள்ள அங்க ரயில் சங்கு ஊதிருவான். [illegible] நீங்க இங்கே வந்தீங்க, ஓ சாரி.'' நாக்கைக் கடித்துக் கொண்டு. ''தெரிஞ்சவர் யாருக்கோ விபத்துன்னு சொன்னீங்கள்ல? மன்னிச்சுருங்க.''

''பரவாயில்லை டாக்டர். நீங்க வெளியூருக்குக் கிளம்பற அவசரத்துல இருக்கீங்க.''


''அதான் ப்ளீஸ்...''

''சரி. குடுங்க. வாங்கிக்கறேன். இஃப் யூ டோன்ட் மைண்ட், குடிக்கக் கொஞ்சம் தண்ணி கிடைக்குமா டாக்டர்? ஐஸ் க்யூப்ஸ் போட்டுக் கூலாக் கொடுங்க. காலைலருந்து நாயலைச்சல். நாக்கு வரண்டுடிச்சு.''

''ஓ ஷ்யூர்.'' என்றவர் கான்வாஸ் தடுப்பிற்கு அப்புறம் இருந்த பிரிஜ்ஜைத் திறந்தார். ஒரு பீக்கரில் தண்ணீர் சேகரித்து, ப்ரீஸரிலிருந்து மூன்று ஐஸ் துண்டங்களை கிடுக்கியால் பெயர்த்து எடுத்து நீரில் மிதக்கவிட்டார். டாக்டருக்குத் தற்போதுதான் மூச்சு வந்தது. எங்கே ரயிலைத் தவற விடுவோமோ என்று பயந்திருந்த வேளையில் தர்மராஜன் வந்து சேர்ந்தார். ரிப்போர்ட்டை எடுத்துப் போகச் சம்மதிக்கவும் வைத்து விட்டார்.

ஒரே மூச்சில் தண்ணீரைக் காலி செய்துவிட்டு மீசையை நீவிக் கொண்டார் டிசிபி. பரஸ்பரம் நன்றி உதிர்த்த பின் கிளம்பினார்.

வெளியே வந்த பின் மனத்துக்குள் ஏதோ உந்த மீண்டும் ஆடப்ஸி ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தார். நெற்றி சுருக்கி யோசித்தார். 'ஓஹோ' என்று தலையாட்டிக் கொண்டார்.



''ஹலோ நான் இரவுப் பறவைப்பா! எப்படி இருக்கே சிவசங்கர்? ஆமா கொஞ்ச நேரம் முன்னால எடுத்தது யாரு? நீ இல்லையா? நல்ல வேளை, நீன்னு நினைச்சு அவன் கிட்ட, 'என்னப்பா நீ கொலை செய்த போட்டோ நல்லா வந்திச்சான்னு' கேட்கலாம்னு இருந்தேன்!'' களுக்கென்று சிரித்தான்.

''ஐயோ மெதுவாப் பேசு.'' என்றார் அச்சத்துடன் அவன் பேசுவது போனில் என்பதை மறந்து.

''ஹஹ்ஹா. நல்லாவே பயந்திருக்கே. நீ பெரிய புத்திசாலின்னு நினைச்சு தடயம் இல்லாம சுத்தமாக் கொலை பண்ணி இருக்கேன்னு நினைச்சே இல்லியா? உன்னை விட

கெட்டிக்காரனும் இருக்காங்கறத்த புரிஞ்சிருப்பே. இன்னும் போகப் போக அசந்துருவே பாரு. இந்தத் தொழில்ல என்ன வருமானம்ங்கறே? இங்கே அக்கவுண்டு வெச்சு கட்டுபடியாகலை. பேசாத ஸ்விஸ் பாங்குல பணத்தைக் கொட்டிட்டு அரசியல்ல சேர்ந்துறலாமான்னு பார்க்கறேன்!''

''உனக்கு எவ்வளவு பணம் வேணும் இரவுப் பறவை?'' அவர் குரல் ரகசியம் பேசுவது மாதிரி கிசுகிசு என்று ஆகிவிட்டது.

அவன் தொண்டைக்குள் மணலை வாரிக் கொட்டியது போல் மேலும் கரகரக்க, ''குட். நேரா விஷயத்துக்கு வந்துட்டே. விலைவாசி எல்லாம் ஏறிப் போச்சு துரை. இதே நீ இந்தக் கொலையை போன வருஷம் செஞ்சிருந்தா விஷயம் அஞ்சு லட்சத்துல சீப்பா முடிஞ்சிருக்கும். ஹஹ்ஹா...''

அவனுடைய மேம்போக்கான நகைச்சுவையில் அவர் ஏமாறத் தயாரில்லை. உள்ளுக்குள் மிகக் குரூரமானவன் அவன் என்பதில் சந்தேகமில்லை. அவர் மட்டும் முறைத்திருந்தால் அவன் வசனம் வேறு விதமாகி இருக்கும்.

''...ஸோ ஒரு பத்து லட்சம் வெட்டிடு என்ன?''

''பத்து லட்சமா?''

''என்ன வாய் பிளந்துட்டியா? உன்கிட்ட எவ்வளவு லட்சம் தேறும்ங்கறது எனக்குத் தெரியாதா? இருந்தும் பேராசைப்பட்டேனா? பத்து லட்சத்தை சைலண்டா வெட்டிரு. நானும் சைலண்டா ஆயிருவேன். தொந்தரவு இருக்காது.''

ஹூம். அது எவ்வளவு நாளைக்கு என்று துக்கமுடன் நினைத்துக் கொண்டார். பிளாக் மெயில் என்பது கான்சர் வியாதி மாதிரி. ஆளைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக் கடைசியில் கொன்று விடும். பிளாக் மெயிலர் கொஞ்சம் சாமர்த்தியமாக இருந்து விட்டால், தப்ப வழியே இல்லை. அட்டை மாதிரி உறிஞ்சி விடுவான். இருவருக்கும் இடையில் உள்ள இப்பனிப் போரில் வெற்றி அவன் பக்கம் மட்டுமே. விக்டிம் கொடுத்துக் கொண்டே இருப்பான். விழுங்கவும் முடியாமல் வெளியே யாரிடமும் சொல்லவும் முடியாமல் - தொண்டையில் மாட்டிக் கொண்ட எலும்புத் துண்டு மாதிரி -- அவஸ்தைப் படுவார்கள். நரக வேதனை. அனுபவித்தவர்களுக்குப் புரியும். தனக்கு மட்டும் சக்தி இருந்து, காலச் சக்கரத்தைக் கொஞ்சம் ரிவர்ஸ் செய்து மீண்டும் பழைய மாதிரி ஆகிவிட முடியாதா என ஏங்கினார் சிவசங்கர்.

''சரி. கொடுத்துடறேன். எங்கே எப்படிக் கொடுக்கணும்?''

''சொல்றேன் துரை. உனக்கு இந்தத் தாம்பரம் தெரியுமா?''

''தெரியும்.''

''தாம்பரத்திலிருந்து கொஞ்ச தூரம் ட்ரங்க் ரோடி லேயே நேர்ப் பக்கமா — அதாவது இரும்புலியூர் பக்கமாப் போகணும். போனா ஒரு ஓவர் பிரிட்ஜ் வரும். அதன் கீழே ரயில்வே லைன் வரும். சுற்றிலும் வயல்வெளி...''

''தெரியும்.''

''நல்லதாப் போச்சு. காரை ஜி.எஸ்.டி. ரோடுல ஓரமா நிறுத்திடு. நடந்து அந்த மேம்பாலத்துக்கு அடியில வா. ம்... மூன்றாவது கான்க்ரீட் தூண் கிட்ட வா. அடையாளத்துக்குக் கரியால ஒரு ஆந்தைப் படம் கிறுக்கியிருப்பேன். அந்த தூண்ல நோட்டுகளைச் சாத்தி வெச்சுட்டு கிளம்பிடு. என் வசதி போல போய் எடுத்துப்பேன். நேரம் நாளை மாலை ஏழு. அங்கே இருட்டா இருக்கும். கையில டார்ச் எடுத்துக்கோ. ஏழு மணி. மூன்றாவது தூண். ஆந்தைப் படம். பத்து லட்சம் பணப் பெட்டி. என்ன செய்றியா?''

''செய்யறேன். அந்தப் படங்களை எப்பத் தருவே?'' எச்சில் கூட்டி விழுங்கிக் கொண்டு கேட்டார்.

''டோண்ட் ஒர்ரி. அது தானா உன் கைக்குச் சமயம் பார்த்து வரும். அப்புறம் இன்னொன்னு. மத்தவங்க ரகசியம் அறிஞ்சிக்கிட்டு செய்யற பிளாக் மெயில் என்பது இன்டீசண்டு தான், ஆனா கொலையை விட டீசண்டுங்கறது வேற விஷயம். இந்த இன்டீசண்டு தொழில்லயும் ஒரு டீசன்சி பார்க்கறவன் நான்! இந்த பத்து லட்சத்தையும் ஒழுங்கா செலுத்திடு. அடுத்த முறை பணம் நிச்சயமா கேட்க மாட்டேன். சொன்னா சொன்னதுதான். வார்த்தை தவற மாட்டேன். நீயும் நாளைக்குத் தவறாதே...''

ஹூம். பிளாக் மெயில் என்பது ஒரு கலை என்று நினைத்துக் கொண்டார். வெண்ணெயில் கத்தி செருகுகிற மாதிரி பேச்சில் என்ன ஒரு நைஸ்... வார்த்தை தவறாதவனாம். டேஞ்சர். சாத்தான் வேதம் ஓதுகிறது. சிரித்துக் கொண்டே தொண்டையைக் கத்தியால் அறுக்கிறான்.

''... ஆனா என்னை ஏமாத்தவோ வேறு யாரையாவது துணைக்கு அழைச்சிபோ நான் பொல்லாதவனாயிடுவேன். மறுபடியும் வார்ன் பண்றேன். கண்ட புஸ்தகம் படிச்சுட்டு உசுப்பேறி அசட்டுத் தனமா ஏதாவது கண்ட துப்பறியும் ஓநாயைக் கூப்பிட்டுறாதே. உன்னைக் கூசாம காட்டிக் கொடுத்துடுவேன். எனக்கு ஒண்ணும் நஷ்டமாயிடாது. வேற இணங்கற பணக்காரனைப் பார்க்கப் போயிடுவேன். நாட்டுல பாவம் பண்ணும் பணக்காரனுக்கா பஞ்சம்? நாளைக்கு வந்துடு. வர்லை... போலீஸ் வரும்!''

படக்கென்று வைத்து விட்டான். நடுங்கும் கைகளால் வியர்வையைத் துடைத்துவிட்டுக் கொண்டார் சிவசங்கர்.

க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் திணறிக் கொண்டிருந்தார். இது மாதிரி விழி பிதுங்குகிற கேஸை அவர் வாழ்நாளில் கண்டதில்லை.

கொலைக்கான காரணம் தெரியவில்லை. ஒரு சிறு தடயம் கூட அகப்படவில்லை. அக்கம் பக்கம் விசாரித்ததில் உருப்படியாய் ஒன்றும் பெயரவில்லை. செய்தித் தாள்களும் ஆச்சரியக் குறி செலவழித்து ஓய்ந்து போய் நான்காம் பக்கம் மூன்றாம் பத்தி ஓரத்திற்குக் கேஸைத் தள்ளிவிட்டது.

எம்.எல்.ஏவாக இருந்து, பின் பதவியில் இருந்து தள்ளப்பட்டு, கொலையாவதற்கு முன் தினம் வரை மறுபடி பதவிக்கு அலைந்த – கெட்ட பழக்கங்கள் நிரம்பிய வீரராகவைப் பற்றி ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிந்தது.

அவன ஒரு பக்கா 'ரோக்' என்பதே அது. ஒரு அசந்த கணத்தில் – இந்தச் சோமாறியைக் கொன்றவனை சைலண்டாகக் கண்டு பிடிக்கமால் விட்டுவிட்டால் என்ன? என்று தோன்றிய எண்ணத்தை அவசரமாக ஒதுக்கினார்.

அவருடைய விசாரிப்பில் ஒரு இடம் இன்னமும் திரடியது. வீரராகவின் முன்னால் பி.ஏ. மாரிமுத்து! மாரிமுத்துவை முதலில் டி.சி.பி. தர்மராஜன் விசாரித்துவிட்டு வந்து ஒன்றும் பெயரவில்லை என்று கோபமுடன் உதட்டைப் பிதுக்கினார்.

தன்னால் ஏதாவது பெயர்க்க முடியுமா என்று கார்த்திகேயன் சென்று பார்த்தார் – வீரராகு பதவியில் இருந்த போது உதவியாளனாக இருந்தவனாம் அந்த மாரிமுத்து. பதவி ராஜினாமா ஆனதும், இவனையும் வேலையிலிருந்து நின்று கொள்ளச் சொன்னானாம் வீரராகு.

அவனிடம் பேசியதில் அவன் எதற்கோ, யாருக்கோ பயப்படுகிறான் என்பது புரிந்தது. ஏதோ ஒரு முக்கியமான

விஷயத்தையும் மறைக்கிறான் என்றும் உள்ளுணர்வு சொல்லியது. இதுவரை கார்த்திகேயன் உள்ளுணர்வு பொய்த்ததில்லை. எல்லாவற்றையும் தெரியும் சொன்னவன் தெளிவாக அவன் தாயை அந்த விஷயத்தைக் கிளப்ப முடியாமல் சோர்வுடன் திரும்பினார். அது என்னவாக இருக்கும்?

மணி சத்தம் கேட்டு வாசலுக்குச் சென்றார். வாசலில் நின்று போஸ்ட்மேன் கடிதம். தபால் வர விசாரித்தார்கள். ஏது நலம் என்று விசனப்பட்டார். கார்த்திகேயனுக்கு வரன் பார்ப்பதாக எழுதியிருந்தது. உள்ளே உறங்கவே நேரம் இல்லை. அது ஒன்றுதான் குறைச்சல். மறுபடியும் மணி ஒலிக்கவே--

அலுத்துக் கொண்டே சென்றார். திறந்தார்.

''வணக்கம் சார். என்னைத் தெரியுதுங்களா?'

ஏன் தெரியாமல்? ஆளுங்கட்சியின் முக்கியப் புள்ளி. கட்சித் தலைமையின் வலதுகை. இவர் ஏன் தன்னைத் தேடி வர வேண்டும் என்று விளங்காமல் அவரை உள்ளே அழைத்துச் சென்று அமரச் செய்தார் கார்த்திகேயன்.

அமர்ந்தவரைப் பார்த்தார். நடு வகிடு எடுத்த படிந்த முகம். சந்தனத் திலகம். விரல்களில் தெரிந்த தங்கப் பல். நீளமான கதர் ஜிப்பா. வேட்டி. துண்டு. ஜாப்பா பேனாவில் கிளிப் செய்த பேனா. கையில் செல்போன். ஜிப்பாவின் ஒரு பாக்கெட்டில் சிகரெட். மற்றொரு பாக்கெட்டில் பணத்தையும் வைத்திருப்பவர் போல...

நேராகவே விஷயத்துக்கு வாரேன். நம்பிதான் அந்த வீரப்பன் கொலைக் கேஸை கவனிக்கிறீங்களாம். இதுவரையா உங்களுக்கு ஏதாச்சும் பெயர்ந்துச்சா?''

''இல்லைங்க. ஆனா கேஸை விடறதா இல்லை. எப்படியும் கண்டு பிடிச்சிடுவேன்.''

''ஆ! அதான். நம்பியைப் பத்தித் தெரிஞ்சுதான் கவலைப்பட அவசியமே இருக்காது! நீங்க நேர்மையானவர்னு தெரியும். நீங்க இந்த கேஸை நிப்பாட்டிட்டா நல்லாருக்கும்னு அபிப்பிராயப் படறாரு தலைவரு.''

''இதப் பாருங்கய்யா இப்படிச் சொல்றது நல்லாயிருக்கா? செத்தது உங்காளு. அவனைக் கொன்னது யாருன்னு தெரிஞ்சுக்க ஆவலா இல்லை?''

''ஐயையோ. என்னது இன்னும் புள்ளை மாதிரி எங்களுக்குப் புரியலையா என்ன? செத்தவன் செத்துட்டான். அந்த வீரப்பன் ஒரு மாதிரி. சாக்கடை ஆசாமி. தேர்தல் சமயத்துல எதையும் தோண்டாதீங்க. இப்ப புரியுதுங்களா? தெரிஞ்சிக்கிட்டு பாம்பை மிதிக்க மாட்டீங்கல்லியா? அதான்

கேஸைப் பார்த்தது போதும்னுட்டாரு தலைவரு.''

''நீங்க நினைக்கறது மாதிரி இல்லாம உங்க எதிர் கட்சி வேலையா — ஏதாவது பகையா இருக்கலாமில்லையா?'' கார்த்திகேயன் மற்றொரு அஸ்திரம் போட்டுப் பார்த்தார்.

''தம்பி, அரசியல் தெரியாம — புரியாம பேசறீங்க. அரசியல்ல நிரந்தரப் பகையும் உறவும் கிடையாது. அப்பப்போ அடிச்சுப்போம். அவ்வளவுதான். நீங்க நினைக்கற லெவல் இறங்கறது இல்லை. எங்க ஏல்லாருக்குமே ஒரே கொள்கை, நாங்க எல்லாருமே ஒண்ணுன்னு புரிஞ்சிக்காத அப்பாவி தொண்டர்கள்தான் வெட்டிக்கிறது குத்திக்கிறது எல்லாம். இதெல்லாம் உங்களோட வெச்சிக்குங்க என்ன?''

''சரி. வீரராகு ஏன் செத்தான்னாவது தெரிஞ்சுக்கட்டுமா?''

''அடடா என்னது அடம் பிடிச்சுக்கிட்டு? இந்தக் கேஸை இத்தோட விட்டுடுங்க. வீரராகுவின் பழைய வாழ்க்கை பத்தி தெரியாது. வீணா விவகாரம் ஏதாச்சும் கிளம்பிடுமோன்னு அஞ்சறாரு தலைவரு. ஏன்னா கொலை வரைக்கும் வந்துடுச்சு பாருங்க. கேஸை சுமுகமா முடிச்சுருங்க. வாழ்க்கைல முன்னேறுங்க. பேச்சு வார்த்தை முடிஞ்சதுக்கு அடையாளமா வெத்தலை போட்டுக்கங்க.'' வெற்றிலைச் செல்லத்தை அவர் பால் நகர்த்த—

வேண்டாமென்று உறுதியாகத் தலையாட்டினார். அதனுள் என்ன இருக்குமென்று தெரியும். பணக்கட்டு.

''ஊம். பிழைக்கத் தெரியாத பிள்ளை! வெத்தலை போட்டா உண்மைகளைச் சுலபமா செரிக்கச் செய்யும். மறந்துட்டேனே? உங்க டிசிபிக்கும் ஆளனுப்பியிருக்கு தம்பி. அப்ப கிளம்பறேன். ஞாபகம் வெச்சுக்குங்க...''

வாசலை அடைந்தவுடன் கார்த்திகேயனின் கண்களைச் சந்தித்து, ''மறந்துட்டேனே... தம்பியுடைய உடல், உள்ள நலன்ல எப்பவும் அக்கறை வச்சிருக்கிறதா சொல்லச் சொன்னாரு தலைவரு.''

தலைவராம் தலைவர்—புடலங்காய். ப்ாஸ்டார்ட் மிரட்டுகிறான் என்பது புரிந்தது. உஷார். உன் உடம்பைக் கவனித்துக் கொள் என்கிறான். வீணாக தலையிடாதே. ஒன்று பணத்துக்கு பணிந்து போ. அல்லது அச்சுறுத்தலுக்கு அடி பணி என்கிறான். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் இல்லத்துக்கு வந்து மிரட்டும் என்ன ஒரு அராஜகமான நிலைமை. இவனை... இவனை... இருக்கட்டும். இவன் முட்டியைத் தட்ட சமயம் வராமலா போய்விடும். பற்களைக் கடித்துக் கொண்டார்.

கேஸிலிருந்து விலக வேண்டுமாம். தன் மனம்

இதுபோல் செய்தது என்று அந்த தங்கப் பல்லனுக்குத் தெரிய நியாயமில்லை. தாராளமாய் இன்னும் போதும் எதற்கு என்று நினைத்து கொடுப்பது போல் நடந்தார். பிரசாதமாக இந்தக் கேஸைக் கொடுத்தால் போதுமா. விடப் போவதில்லை.

பட்டென்று முடிவு செய்து மீண்டும் வீரராகு வீட்டிற்கு கிளம்பினார். புல்வெளிக் கொல்லைப்புற வழியில் மறைக்கும் படியாக பள்ளங்களைத் தாண்டி...

இப்போது கூட அந்தக் கட்டிலில் வீரராகு மார்பில் முளைத்த [illegible] படுத்திருப்பது மாதிரியான பிரமை தோன்றியது [illegible] இன்று இங்கு வந்தோம் என்று புரியவில்லை. அன்றே நன்றாகப் பார்த்தாகி விட்டது. ஒன்றும் அகப்படவில்லை.

ஒருவரும் ஒன்றும் சொல்ல இயலாத, மறுத்த நிலையில் ஒரு ஆச்சரியம் விழுமானால். ஒரு நூல் முனை வேண்டாமா? அது இங்குதான் - கொலை நடந்த வீரராகு வசித்த இடத்தில் தான் கிடைக்கும் என்று உள்ளுணர்வு சொன்னது.

பொறுமையாகச் சுற்றிப் பார்த்தார். எதைப் பார்க்க வந்தோம் என்று தவித்துக் கொண்டிருந்தபோது அந்தப் படங்களைப் பார்த்தார். பட்டென்று கையை உதறிக் கொண்டார்.

அடடே, இவைகளைப் பார்க்க மறந்து விட்டோமே. அவைகளில் சில வீரராகுவின் படங்கள் சாய்வாக மாட்டப்பட்டு மேலே கவிழ அடிக்கப்பட்ட ஆணிகளோடு கம்பி வைத்து முடுக்கப் பட்டிருந்தன. அவைகளின் பின்னால் ஏதாவது பொருள் மறைத்து வைக்க, [illegible] இடமிருந்தது.

இன்னும் ஒரு படம் தான் பாக்கி. அதில் மட்டும் என்ன கிடைக்கப் போகிறது? எடுக்க வேண்டாமென்றுதான் நினைத்தார். இதையும் எதையும் அரைகுறையாக விடக்கூடாது என்று அவரின் பழக்கம் இன்று கை கொடுத்தது. வீரராகு கேவலமாக சிரித்துக் கொண்டிருந்த அந்தப் படத்தைத் தூக்க—

பொத்தென்று கீழே விழுந்தது அந்த டைரி. அதிலிருந்து கீழே குதித்து ஆவலுடன் அந்த டைரியைப் பிடித்தார். அவசரமாகப் புரட்டினார்.

முதல் பார்வையிலேயே அது அவனுடைய அந்தரங்க டைரி என்பது புரிந்தது. பொறுமையாக முதலிலிருந்து பார்க்க ஆரம்பித்தார்.

அநேக அசிங்கமான விஷயங்கள். திடீர் திடீரென்று விலைமாதர் முகவரிகள் தென்பட்டன. பக்கத்தில் பிராக்கெட்டுக்குள் இவனுடைய ஆபாச வர்ணனைகள் வேறு. கார்த்திகேயனுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

மார்ச் மாதம் – அதாவது ஆறு மாதங்களுக்கு முந்தைய விவகாரம் ஒன்று ஈர்த்தது.

சுசிலா என்று பெயர் பதிந்து, பக்கத்தில் இவனுடைய காமெண்ட்– '...என்றைக்குமே கற்பழிப்பு என்றாலே தனி சுகம்தான். கற்கால சுதந்திரத்திற்குப் போய்விட்டு வந்த ஆனந்த அனுபவம் அது. சுசிலாவை அனுபவித்தது என் பாக்கியம்...' ,அப்புறம் அந்த சுசிலாவைக் கொச்சைப் படுத்தி பிரவாகமாக வர்ணித்திருந்தான் பாஸ்டர்ட். இவருக்கும் அந்த சுசிலா என்ற பெயர் கேட்ட மாதிரி இருந்தது. எங்கே கேள்விப் பட்டிருக்கிறேன்? இவனிடம் பரிதாபமாகக் கற்பிழந்த பெண்ணே, நீ யார்? எங்கிருக்கிறாய்...?

அத்துடன் அதை விட்டு விட்டு மேலும் புரட்டிக் கொண்டே வந்து அவன் கொலையான மாதத்திற்கு வந்ததுமே அந்த 'என்ட்ரி' கண்ணில் பட்டது.

'பத்திரிகையின் பெயர்—. நிருபரின் பெயர்—. மேற்படி நிருபர் என்னை பேட்டி எடுக்க வந்தார். மீண்டும் போட்டி இடுகிறேன் என்றதுமே பேட்டி என்று ஒரு நிருபர் முளைத்தது நல்ல சகுனம்தான்.' டயரியைப் பத்திரப் படுத்திக் கொண்டார் கார்த்திகேயன்.

அனுமதி வாங்கி உள்ளே புகுந்தபோது அந்த எடிட்டர் போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார்.

''...சிரிக்காதேயும்! என்னய்யா பண்றது! எவ்வளவு நிருபர் இருந்தாலும் போற மாட்டேங்குது. திடீர்திடீர்னு யாராவது குட்டி நடிகை வயசுக்கு வந்துடறா - அதுக்கே ஒரு முழு நிருபர் தேவையா இருக்கு! சிரிக்காதேயும். பறந்தென் கிடந்து அல்லாடறேன். அப்புறம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் ரயில் கவுந்தா, பஸ் கல்லடி பட்டா அதுக்கு நிருபரை விரட்ட வேண்டியிருக்கு...''

சைகை செய்து கார்த்திகேயனை அமரச் செய்தார்.

''அப்புறம் சில ஸ்டண்டு மாஸ்டர்ஸ் - அதாம்பா சில அரசியல் வாதிகள். லேசுல பேட்டி குடுக்கிறாளா? நம்ம ஜனங்க நேரம் காலம் பசி பார்க்காம நாய் அலைச்சல் அலைய வேண்டியிருக்கு. பழி கிடக்க வேண்டியிருக்கு. எல்லார் பாக்கெட்லயும் ரெடிமேடா போதி மரம் இருக்கு ஓய். திடீர்திடீர்னு ஞானோதயம் ஆகி சர்க்கஸ் பார் மாதிரி தாவிண்டே இருக்கா! யாராரு எந்த கட்சின்னு புரியறதுக்குள்ள கீழே கிழிஞ்சுடறது! இவா அடிக்கற கூத்தில வர்ற தேர்தலுக்குள்ள பத்திரிகைக்காராள்ளாம் மண்டை லசொட்டை விழுந்து, சட்டையைக் கிழிச்சுக்கப்போறா. போட்டுப் படுத்தறா ஓய். அதனால ஒரு ரெண்டு நாள் பொறும். நீர் சொன்ன

இடத்துக்கு ஆளை அனுப்பி வைக்கறேன. எப்படியும் அவா 115 வருஷம் ஷேமமா சேமத்தம் பட்டியில வாழ்ந்துட்டா. கூட ஒரு ரெண்டு நாள் வாழச் சொல்லும். கண்டிப்பா ஆளனுப்பி பேட்டிக்கு ஏற்பாடு செய்யறேன். என்ன கட்டுரைல நிறைய 'ஷானா' செலவழியும். என்னது புரியலியா? வயசானவா ஓய். பல்லில்லாம தஷ் புஷ்னு ஷொல்லுவா! சிரிக்காதேயும். எரிச்சல்ல பேசறேன்.''

கார்த்திகேயனுக்கு ரசமாக இருந்தது அவரைப் பார்க்க.

போனை வைத்துவிட்டு நிமிர்ந்து கண்ணாடியைத் தள்ளிவிட்டுக் கொண்டு, ''அவன் என் பால்ய ஸ்னேகிதன். நீர் சொல்லும்.'' என்றார் எடிட்டர் புன்சிரிப்புடன்.

தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, வீரராசுவைப் பேட்டி எடுத்த நிருபரின் பெயர் சொல்லிச் சந்திக்க விருப்பம் என்று சொன்னார்.

''சமீபத்துல கொலையான வீரராசுவையா சொல்றேள்? மனுஷா பேட்டி எடுப்பாளா அவனை? புல் டாக் மாதிரின்னா விழுவான் அபாரிஜின் இன் டெரிலின்! ஹோஹ்ஹோ.'' சிரித்துவிட்டு இன்டர்காமில் அந்த நிருபரைத் தொடர்பு கொண்டு பேசிவிட்டு நிமிர்ந்தார்.

''உமக்கு யாரோ ராங் இன்பர்மேஷன் தந்திருக்கா. எனக்கு என்ன பைத்தியமாங்கறார்; நிருபர் நடுங்கறார். வீரராசுவைப் பேட்டி செய்யலியாம்.''

கார்த்திகேயன் வெளியே வந்த போது உண்மை விளங்கிவிட்டது. நிருபர் வேடத்தில் நோட்டம் விட வந்தவன் கொலையாளி என்பது புரிந்தது!

அன்று அவன் சொன்னவிதமாக, பணத்தை வைத்து விட்டு வந்து இன்றோடு ஆறு நாட்களாகிவிட்டன. மறுபடி

இரவுப் பறவையிடமிருந்து போன் எதுவும் வரவில்லை. அவன் சொன்ன மாதிரி தொந்தரவு தரமாட்டானோ என்று லேசாக நம்பிக்கை பிறந்து, கொஞ்சம் கலகலப்பு பிறந்து,...

இதோ இப்போது அவருடைய மனைவியுடன் கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். இன்று சிவசங்கர் பார்வதி தம்பதியின் திருமண நாள். நீரஜா வந்து வாழ்த்து சொல்லிவிட்டுப் போனாள்.

பக்கத்தில் அருமை மனைவியுடன் ஆண்டவனைக் கும்பிட்டது ஆறுதலாக இருந்தது. இனியாவது கடந்த ஆறு நாள் நிம்மதியை நிலைக்கச் செய் என்று மனதுருக வேண்டிக் கொண்டார்.

வீட்டிற்கு வந்து மனைவி கையால் பாயசம் சாப்பிட்டு விட்டு தன் தனியறைக்குச் சென்று தொப்பென்று சோபாவில் அமர்ந்தார். உஸ்ஸென்று பனியனுக்குள் ஊதிக் கொண்டார். களைப்புடன் கண்களை மூடப் போன போது

போன் அலறி அழைத்தது. ஒரு திடுக்கிடலுடன் சென்று எடுத்தார்.

''சௌக்கியமாப்பா? நான்தான் இரவுப் பறவை. சொன்ன மாதிரி பணம் வைச்சிருந்தே. ரொம்ப தேங்க்ஸ்.''

''இப்ப எதுக்கு போன் செஞ்சு என் நிம்மதியை கெடுக்கறே?''

''பொய் சொல்றே பாத்தியா? நானா உன் நிம்மதியை கெடுத்தேன்? பத்து லட்சம் வாங்கிகிட்டு ஆறு நாள் நிம்மதி தரலை? ஹிஹி... மறுபடி உனக்கு நி[illegible]விக்கலாம்னு இருக்கேன்!''

''அடப் படுபாவி, அன்னிக்கு சத்தியசந்தன் மாதிரி பேசினே... இனிமே பணமே கேட்க மாட்டேன்னு சொன்னியேடா?''

''இப்பவும் அதே தான் சொல்றேன். உன்கிட்ட பணம் கேட்கப் போறதில்லை.''

''பின் எதுக்கு போன்?''

''சொல்றேன்பா. இன்னிக்கு தம்பதி சமேதரா கோயில்ல பார்த்தது மனசுக்கு இதமா இருந்துச்சுப்பா. உன் பின்னாலேயே தான் நான் நின்னுகிட்டிருந்தேன்.''

சிலிர்த்தது. என்னது... அவர் பின்னாலேயே அந்த சண்டாளன் நின்னு கொண்டிருந்தானா? யாரென்று ஞாபகப் படுத்திப் பார்த்தார். இன்று பார்த்து கோயிலில் பயங்கர நெரிசல். ஒருவரும் ஞாபகம் வரவில்லை [illegible].

''தெரியாமப் போச்சேன்னு வருத்தப் படறியாப்பா

என்ன செய்றது...''

இனி இவர் வெளியில் காலடி வைத்து ஒண்ணுக்குப் போனால் கூட அவனுக்குத் தெரிந்து விடும் என்று தோன்றியது. அந்த இரவுப் பறவை எங்கிருந்தோ இருந்து தன்னைச் கவனிக்கிறான்; தொடர்கிறான் என்பது புரிந்ததும் அவர் உடல் நடுங்கியது.

''சரி, விஷயத்துக்கு வர்றேன். இன்னிக்கு கோயில்ல உன் பொண்டாட்டி கழுத்துல இருந்த அந்த நெக்லஸ் என்னமா ஜொலிச்சுது. நீ ஆண்டவனை மெய் மறந்து பார்த்த போது நான் அந்த நெக்லஸையே மெய் மறந்து பார்த்துக்கிட்டிருந் தேன். சிலிர்த்துடுச்சு. நெக்லஸ் என்ன வைரமா? வைரமாத்தான் இருக்கும். ஜாதி வைரத்துக்குக் குறைஞ்சு போடுவியா என்ன? அந்தப் பளபளப்பு பிரமாதம்பா.''

அந்த வைர நெக்லஸ் அவருடைய பரம்பரைச் சொத்து. எளிதில் கிடைக்காத உயர் ரக வைர சமாச்சாரம். அபூர்வமான மியூசியம் அயிட்டம். இன்றைய தேதியில் குறைந்த பட்சம் இருபத்தைந்து லட்சத்துக்கு விலை போகும். அபூர்வமான விசேஷங்களுக்குத்தான் எடுத்து அணிவாள். திருமண நாள் பார்த்து அணிந்து அந்தப் படுபாவியின் கண்ணில் பட்டு, அதைப் போய் ராஸ்கல் கேட்கிறானே...

''என்னப்பா யோசிக்கறியா? யோசி. நல்ல யோசி. கொலைதான் யோசிக்காம செய்துட்டே. இதையாவது யோசிச்சு செய். ஆனா ஒரு உண்மையைச் சொல்லணும். சமீபகாலமாக என் மனசாட்சி ரொம்ப குத்துது துரை. 'எதுக்குடா இரவுப் பறவை கஷ்டப்பட்டு கண்ட கண்ட கொலைகாரங்களை எல்லாம் காப்பாத்தனும்? அது தப்பில்லையா? சட்ட விரோதமில்லையா? நீதியை நிலை நாட்டுன்னு போட்டு அரிக்குதுப்பா! அதனால எனக்கு எதுக்குப்பா மத்தவங்க சொத்து? உன் போட்டோவை அனுப்பிட்டு நல்ல குடிமகனா இருந்துட்டுப் போறேனே என்ன?''

''அந்த வைர நெக்லஸ் எங்கே கொண்டு வந்து தரணும்?'' அமைதியாகக் கேட்டார் சிவசங்கர்.

''அப்படி வா வழிக்கு...'' என்று சிரித்துவிட்டு சொல்லத் தொடங்கினான் இரவுப் பறவை.

அன்று இரவு சிவசங்கர் தன் சொந்த வீட்டிலேயே மனைவியின் பீரோவிலிருந்து அந்த வைர நெக்லஸைத் திருடிக் கொண்டார்!

நீரஜா சென்ட்ரல் ஸ்டேஷனில் உட்கார்ந்து கொண்டு பொறுமையின்றி நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள். டில்லியிலிருந்து வரும் வண்டி பதினைந்து நிமிடம் லேட்டாம்.

இந்தப் பத்து நாட்களில் சுரேஷைப் பார்க்காமல் தவித்துப் போய்விட்டாள். பத்து நரக நாட்களைக் கூட நகர்த்திவிட்டாள். ஆனால் இந்தப் பாழும் பதினைந்து நிமிட தாமதத்தைத்தான் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எப்போதுடா அவனைக் காண்போம் என்றாகிவிட்டது. அதுவும் நேற்று மாலை அவளுடைய தந்தை அவர்களுடைய காதலுக்குச் சம்மதம் தராதது வேறு அவளை பீதியாக்கி சீக்கிரம் சுரேஷைச் சந்தித்து சொல்லத் துடித்தது மனசு. நேற்று மாலையில்...

தன் தந்தை புல்வெளியில் அமர்ந்து டீ சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து அருகே சென்றாள். அவள் வந்தது கூடத் தெரியாமல் ஏதோ பறி கொடுத்தவர் போல் மூலையை வெறித்துக் கொண்டிருந்தார். தொண்டையைக் கனைத்தாள்.

சிவசங்கர் திரும்பினார். பக்கத்தில் உட்காரச் சொல்லி நீரஜாவின் தலையைத் தடவிக் கொடுத்தார். தயங்கித் தயங்கி தங்கள் காதலைச் சொல்லி முடித்தாள். தடவுவதை நிறுத்திவிட்டு அவளை வெறித்தார்.

''பையன் என்ன பண்றான்?''

''டாக்டர். கவர்மெண்ட் ஹாஸ்பிடல்.''

''டாக்டர்! கார்டு ஹோல்டராமா?''

''ஊம். ரேஷன் கார்டு ஹோல்டர்?''

''என்ன கிண்டலா? க்ரீன் கார்டு ஹோல்டரான்னு கேட்டேன்.''

''தெரியாது.''

''சொத்து விவரம் எப்படி? வசதி உள்ளவனா?''

பயந்துக் கொண்டே விவரம் சொன்னாள்.

''ப்பூ. பிளடி மிடில் கிளாஸ். இந்தப் பையனை நீ உடனே மறந்துரு. இன்னும் பத்து நாள்ல என் சொத்து அழியறதுக்குள்ள (அது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை) பெருத்த வசதியுள்ள பையனாப் பார்த்து வைக்கிறேன். வந்து கழுத்தை நீட்டு என்ன? காதலாம் காதல். தூ!'' சொல்லிவிட்டு விடுவிடென்று உள்ளே சென்று விட்டார்.

'பூங்' என்று சத்தம் கேட்டு சுய நினைவுக்கு வந்தாள் நீரஜா. டில்லி எக்ஸ்பிரஸ் வந்து விட்டிருந்தது. பல மொழி பேசும் மக்களிடையே சிரமத்துடன் நீந்தி, மூட்டை முடிச்சுகளைத் தாண்டி...

தூரத்தில் சிரிப்புடன் இறங்கும் சுரேஷைக் பார்த்து விட்டாள்! அவளுடைய கஷ்டம் எல்லாம் ஓடி விட்டது போல் தோன்றியது. இனி சமாளித்து விடலாம். அவளுடைய காதல் நிறைவேறும் என்ற நம்பிக்கை வந்து விட்டது. அதோ என் ப்ரியமுள்ள காதலன்... டார்லிங்... என வருங்காலக் கணவன்... சுரேஷ்... சுர்ரேஷ்...

பொது இடம் என்று பாராமல் ஓடிப்போய் அவனைக் கட்டிக்கொண்டாள் நீரஜா.

சற்று தூரத்தில் ஒரு நண்பரை அழைக்க வந்திருந்த யுவராஜ் இந்தக் கட்டிப் பிடித்த காதல் காட்சியைப் பார்த்து திடுக்கிட்டான்!

யுவராஜ் அவர்கள் இருவருடைய நெருக்கத்தைப் பார்த்து பற்களைக் கடித்துக் கொண்டான். உடம்பு பற்றி எரிவது போலிருந்தது. அடி சண்டாளி. துரோகி. எவ்வளவு நாட்களாக இந்தக் கூத்தை அடிக்கிறாய்? அவ்வளவு கவனமுடன் இருந்தும் எப்படி இது நிகழ்ந்தது?

யோசித்துப் பார்த்ததில் கடந்த சில நாட்களாக தன் கவனம் முழுவதும் சிவசங்கரின் மீது லயித்திருந்ததில், நீரஜாவைத் தவற விட்டிருக்கிறான் என்பது புரிந்தது.

சமீபகாலமாக எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான்? புத்திசாலி சிவசங்கரை ஏமாற்றுவது என்பது சாமானியமா? அன்று அவரிடம் ஏற்பட்ட உற்சாக மனமாற்றத்தை துல்லியமாக எடை போட்டு, கிழவன் ஏதோ தில்லு முல்லுக்குத் தயாராகி விட்டான் என்று கணித்து அவரைத் தூரம் விட்டு தொடர்ந்த தால் தானே...

வீரராகுவை கொல்லத் திட்டமிடுகிறார் என்பது சில நாட்களிலேயே புரிந்து கொண்டு ஒரு அருமையான பிளாக் மெயில் திட்டத்தைத் தயார் செய்தான்! இயற்கை கூட அன்றைக்கு மின்னல்களை அளித்து எனக்குத் துணை நின்று நம் திருமணத்தை அங்கீகரித்ததே... அந்த திமிர் பிடித்த பணக்காரக் கிழவன் என் லட்சணத்தை ஒதுக்கி லட்சங்கள் கேட்டான். என் மூளையை அவமதித்தான். ஹஹ்ஹா. அவனுக்குத் தெரியாமல் அவனிடமே கறந்து விட்டேன். ஒன்றல்ல, இரண்டல்ல... பத்து லட்சம் — அந்த வைர நெக்லஸை ஒரு பார்ட்டிக்கு இருபது லட்சத்துக்கு விற்க ஏற்பாடு செய்து விட்டேன். இனி அவனுக்கு என்னைக் கசக்கவா செய்யும்?

இவ்வளவிற்கும் சிவசங்கருக்குத் தன் மீது சந்தேகம்

வந்ததா? எப்படி வரும்? யுவராஜ்தான் அதிபுத்திசாலியாயிற்றே. ஒவ்வொரு கணத்தையும், செயலையும் சாமர்த்தியமாகத் திட்டமிட்டருந்தானே...

அன்று உண்மையிலேயே வந்த ராங் நம்பர் ·போன் காலை எடுத்து வேண்டுமென்றே 'இரவுப் பறவை' என்று கேட்கவில்லையா? தான் அங்கிருநது கொண்டு போன் வந்தது இரவுப் பறவையிடமிருந்து என்று நிரூபித்து விட்டால், அது இந்த யுவராஜ் இல்லை என்றாகி விடாதா?

அப்புறம் 'இரவுப் பறவையை' ஒரு விபத்தில் மறைந்தது போல் ஏமாற்றிவிட்டு, சில மாதங்கள் கழித்து பணத்துடன் பெண் கேட்டால், ஏது பணம் என்பாரே என்றுதான் அன்று அவுர் முன் லாட்டரிச் சீட்டு நாடகம் நடத்தினேன். பின்னால் பம்பர் விழுந்தது என்று சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தான். உபகாரணமாக, ஊரிலுள்ள திரண்ட சொத்துள்ள பாட்டி தவறிவிட்டதாக தந்தி ஒன்றும் ஏற்பாடு செய்யலாம் என்றிருந்தான்.

இவ்வளவு திட்டங்களும், சாமர்த்தியமும் எதற்காக?

நீரஜா என்ற துள்ளும் கன்றுக் குட்டியை அணைக்க; சிவசங்கருடைய பெருத்த சொத்தை அரசாள; அதை மேலும் ஒரு சமஸ்தானமாக விரிவாக்க.

பாவி எல்லாக் கனவையும் ஒரு நொடியில் காதல் என்ற பெயரில் கெடுத்து விட்டாள். இல்லையில்லை. இன்னும் இல்லை. இதை இப்படியே விட்டுப் போவதில்லை. இவ்வளவு நாளும் முயன்றது வீணாகிவிடும்.

இன்றே இப்பொழுதே 'நேரடியாக' பிளாக் மெயிலின் மூன்றாவது தவணையாக நீரஜாவைக் கேட்கப் போகிறேன். கிழவன் மறுத்தால், கூசாமல் அவனைப் போலீஸில் காட்டிக் கொடுத்து விடுவேன்.

பழி வாங்கின திருப்தி. பிழைத்துக் கொள்ள முப்பது லட்சம் வேறு. போதாதா? வெறித்தனமான சிரிப்புடன் கிளம்பினான் யுவராஜ்.

ஆவலுடன் எதிர்பார்த்த யுவராஜ்—சிவசங்கர் சந்திப்பு இருவருக்குமே தோல்வியில் முடிந்தது.

கூட இருந்தே குழி பறித்த யுவராஜின் ஆசைக்கு அவர் மசிய வில்லை. அவனுடைய துரோகத்தில் ஏகத்துக்கு அதிர்ந்திருந்த சிவசங்கர் ஒரு துரோகிக்குத் தன் பெண்ணைத் தர இயலாது என நிர்தாட்சண்யமாக மறுத்து, தன் வாழ்க்கையை விட, ஆசை மகள் நீரஜாவின் வாழ்க்கை முக்கியமாகப் படவே, 'போடா போலீஸுக்கு' என்று அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள...

ஆத்திரமான யுவராஜ் ஒரு பிளாட்பார சிறுவன் மூலம் (ஐந்து ரூபாய் டிப்ஸ்) அந்தப் போட்டோக்களை, நெகடிவ்களை ஒரு கவரில் போட்டு போலீஸிடம் சேர்ப்பிக்கச் சொல்லிவிட்டு தலைமறைவாக...

அன்று இரவு சிவசங்கர் கைதானார்!

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக நீரஜா அலறி அடித்துக் கொண்டு சுரேஷ் வீட்டுக் கதவைத் தட்டினாள்.

தூக்கக் கலக்கத்துடன் எழுந்து வந்து திறந்த சுரேஷ் அதிர்ந்தான், ''என்னம்மா காலங் கார்த்தாலே? பிளசண்ட் சர்ப்ரைஸ். எதிர்பார்க்கலை.

நீரஜா பாய்ந்து வந்து அவனைக் கட்டிக் கொண்டு கேவத் தொடங்கினாள்.

''அடடா. என்னாச்சு? ஏன் இப்படி அழறே?'' அவளை ஆதரவாக அணைத்தவாறே நடத்தி சோபாவில் உட்கார்த்தி வைத்து, ''இப்ப சொல்லு'' என்றான் பதட்டமாய்.

விசும்பல்களினிடையே சொல்லி முடித்தாள். கேட்டதும் தலையில் அடித்துக் கொண்டான்.

''உங்கப்பாவுக்குப் புத்தி போச்சே! வாழ்க்கைல சுவாரசியத்துக்கா, பஞ்சம்? சரி சரி... நான் ஒண்ணும் சொல்லலை. அவரை எப்படிக் காப்பாத்தறதுன்னே தெரியலை. லட்டு மாதிரி அந்தப் போட்டோக்கள் வேற.'' தாடையைத் தேய்த்துக் கொண்டான். ''என்னிக்கு கொலை நடந்தது?''

சொன்னாள்.

''மைகாட். பன்னண்டு நாள் முன்னால... நான் போஸ்ட் மார்ட்டம் பார்த்த கேஸாச்சே அது!''

''வாட்?'' துள்ளிக் குதித்தாள் நீரஜா.

''சாரி நீரஜா. உன்கிட்ட முன்னாலேயே சொல்லி இருக்கணும். பொது டாக்டர், சர்ஜன், அரசாங்க மருத்துவ மனைன்னுதான் சொன்னேன். இந்த மாதிரி போஸ்ட் மார்ட்டம் பண்ற டாக்டர்னு சொன்னா எங்கே பிணம் வெட்டறவன் - அறுக்கறவன்னு சாதாரணமா நினைச்சு ஒதுங்கிடுவியோன்னு பயந்துதான் சொல்லலை. எப்படியும் ஒரு நாள் சொல்றதாதான் இருந்தேன்.'' என்றான் அசடு வழிய.

''போதும் டியர். உங்களுக்குக் காதலுக்கு அர்த்தம் தெரியலை. மேல சொல்லுங்க.''

''அன்னிக்கு ஊருக்குப் போற அவசரத்துல பி.எம். செஞ்ச கேஸ் இது. இரு. நீ ஒண்ணு செய். இன்னிக்காவது பொம்பளையா லட்சணமா உள்ள போய்க் காப்பி போட்டு

எடுத்து வா. நான் பக்கத்து ஃபிளாட்டுக்குப்போய்ப்பத்து நாள் பேப்பரோட வர்றேன்.''

அவள் வைத்த காப்பி ஆடை தட்டி ஆறிப் போயிருக்க, சுரேஷ் தீவிரமாகப் பேப்பர்களை மேய்ந்தான்.

படித்து முடித்தவனின் முகம் மிகவும் சீரியஸாக, ''ஒரு பெரிய சதி நடந்திருக்கு நீரு!'' என்றான் தாடையை இறுக.

''உங்கப்பா அந்த வீரராசுவை எப்படிக் கொன்னதா சொன்னார்ரு?''

''கத்தியாலே குத்தி.''

''அந்த சார்ஜுலதானே அரெஸ்ட் ஆகியிருக்கார்?''

''ஆமா. ஏன் கேட்கறீங்க சுரேஷ்?''

''சொல்றேன். வீரராசு இறந்ததுக்கான காரணம் விஷம்னு தெளிவா என் ரிப்போர்ட்டுல குறிப்பிட்டிருக்கேன்! அந்தக் கத்திக் குத்து இறந்த சில மணி நேரங்களுக்குப் பிறகுன்னும் எழுதியிருக்கேன்...!''

நீரஜா பேச்சற்று அவனையே பார்த்தாள்.

''ஆனா இவ்வளவு நாள் பேப்பர்லயும் வீரராசு மரணம்-கத்திக் குத்துன்னுதான் வருதே தவிர, விஷம் பத்தி ஒரு வரி இல்லை. எங்கேயோ ஏதோ தவறு நடந்திருக்கு! அல்லது நடத்தப்பட்டிருக்கு! வா நீரஜா, உங்கப்பாவைக் காப்பாத்த நானாச்சு.''

நீரஜா முதன் முறையாக மலர்ச்சியுடன் சிரித்து, ''அப்பாடி. இப்பதான் நிம்மதியாச்சு. தேங்ஸ் மை லவ்! அதுக்கு முன்னால சில கேள்விகள், சந்தேகங்கள் கேட்கலாமா? எப்படியும் கோர்ட்டுல கேட்பாங்கலில்லியா?''

''ம். கேளு நீரு.''

''எங்கப்பா குத்தும் போது அவன் ஏற்கனவே விஷம் காரணமா இறந்துட்டதா சொல்றீங்க. ஒரு பிணத்தைக் குத்தி காயம் உண்டு பண்ண முடியுமா?''

''குட் கொஸ்டியன். சர் ராபர்ட் கிறிஸ்டிசன் என்பவர் சில பரிசோதனைகள் செய்து முடியும்னு நிரூபிச்சிருக்கார். அதன் படி, இறந்த இரண்டு அல்லது மூணு மணி நேரத்துக்குள்ள ஒரு காயத்தைப் பிணத்தின் உடல்ல உண்டு பண்ண முடியும். ஆனா குத்தும் போது வலு கூட்ட வேண்டும்! காயம் கொஞ்சம் சின்னதா இருக்கும். இது மாதிரி காயங்கள் சுலபமா சாதாரண மக்களை ஏமாத்திடும். ஆனால் ஒரு தேர்ந்த பி.எம். டாக்டர் வித்தியாசப் படுத்திக் கண்டுபிடிச்சுடுவார். வீரராசுவின் செரிமானம் முதல் கட்டத்துலேயே நின்னு போச்சு. என்னுடைய ரிப்போர்ட்டு படி, மரணம் இரவு பதினோரு மணி அளவில் கத்திக் குத்து ஏற்பட்டிருக்கணும்; காயத்தின் அளவை

அளந்து வெச்சிருந்தேன். வீரராகுவுக்கு நல்ல பாம்பின் விஷம்–அதாவது உறங்கும் போது ஊசி மூலமாக நரம்பில் செலுத்தப்பட்டிருக்கு. இதனாலயும் போலீஸ் நல்லா ஏமாந்திருக்கு!''

''ஷ். கொஞ்சம் புரியும்படி சொல்லுங்க.''

''பாய்சன்களை இரண்டு விதமா பிரிக்கலாம் நீரஜா. ஒரு வகை விஷங்கள் ரத்தத்துல உள்ள ஹீமோகுளோபினை அழிச்சு ஆக்ஸிஜன் எடுத்துச் செல்லும் தன்மையை அழிச்சு மனுஷனைச் சாக அடிக்கும். இந்த வகைல ரத்தம் நிறம் இழந்து வெளியே வரும்போது காட்டிக் கொடுத்துடும். சயனைடு இந்த ஜாதிதான்.''

'''இன்னொரு வகை?''

''இன்னொரு வகை பாய்சன் சென்ட்ரல் நர்வஸ் சிஸ்டத்தை அடிக்கும். மனிதனுடைய நரம்பு மண்டலத்தைத் தூக்கிச் செயலிழக்கச் செய்துடும். பாம்பு விஷம் இந்த வகையைச் சார்ந்தது. ரத்தம் பர்ப்பிளாகும். இதுல இன்னொரு விசேஷம் – உங்கப்பாவின் துரதிர்ஷ்டம் – என்னன்னா கோப்ரா பாய்ச்னால இறந்து பின்னால ரத்தத்தோட கோயகுலாபிலிட்டி – அதாவது உறையும் தன்மையை குறைத்து ரத்தம் திரவ நிலையிலிருந்து கொண்டு (Fluid Stage) நெடு நேரம் வரை காயத்திலிருந்து சொட்டும். அதனாலதான் போலீஸ் சந்தேகப்படாம இறந்தது கத்திக் குத்தாலத்தான்னு நினைச்சிருக்கணும்.''

''கொலை நடந்தன்னிக்கு ஏமாந்தாங்கன்னா ஓ.கே. உங்க ஆடப்ஸி ரிப்போர்ட் பார்த்த பின்னுமா தெரியலை?''

''ஆங். அதான் பாயிண்ட். அங்கதான் ஒரு சதி நடந்திருக்குன்னு சொல்ல வரேன். இப்ப புரியுதா?''

''புரியுது! இப்ப எங்கே போறோம் சுரேஷ்?''

''கன்தயின் க்ளைமாக்ஸிற்கு! கேஸை யாரு பார்த்தார்னு சொன்னே? இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன்...''

''வீரராகு கேஸ் முடிஞ்சிருச்சே சார்!'' என்றார் கார்த்திகேயன். சுரேஷ் வற்புறுத்தவும், கார்த்திகேயன் பைலைக் கன்சல்ட் செய்து விட்டு வந்து, ''நீங்க சொன்ன மாதிரி இல்லையே டாக்டர். பி.எம். ரிப்போர்ட்டுல கத்திக்குத்தாலதான் இறந்தார்னு போட்டிருக்கு. இருங்க. டி.சி.பியை கன்சல்ட் செய்துட்டு வர்றேன்.''

''யோவ் கார்த்திகேயன். உமக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? முடிஞ்சு போன கேஸை ரீஓபன் பண்றீரே? ஏற்கனவே பொலிடிகல் பிரஷர் தாங்க முடியலை. நல்லபடியா முடிஞ்சுதேன்னு நினைச்சேன். நீர் வேற? அந்தப் போட்டோக்கள் கேஸை சீல் வெச்சு டைட்டாக்கிருச்சு. இன்னும்

என்ன வேணும் உமக்கு?'' வள்ளென்று தர்மராஜன் எரிந்து விழுந்தார். ''உமக்கு ஒரு 'டிப்' தர்றேன். கேட்டுக்குங்க. அனாவசியமா இனிமே இந்தக் கேசுல மூக்கை நுழைக்காதீங்க. பின்னால வருத்தப்படுவீங்க.'' ஏறக்குறைய மிரட்டல் இருந்தது அவர் குரலில்.

வெளியே வந்தார் கார்த்திகேயன். மிகவும் வருத்தத்திலிருந்தார். இந்த தர்மராஜனைப் புரிந்து கொள்ளவே முடியலிலே. எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறார். சிடுசிடுக்கிறார். வள்ளென்று எரிஞ்சு விழுகிறார். அவர் திறமையில் சந்தேகம் இல்லை. இருந்தும்... இருந்தும் பழைய டிசிபி சண்முகநாதன் இல்லையே என்றிருந்தது. ஏன்தான் சிறைத்துறைக்கு மாற்றலானாரோ?

''சார் கார்த்திகேயன், நீங்க டிசிபியைப் பார்க்கணும்னு சொன்னபோது ஒரு விஷயம் ஞாபகம் வந்தது!'' வழியிலேயே எதிர் கொண்ட சுரேஷ் அன்று டிசிபியே நேரில் வந்து பி.எம். ரிப்போர்ட் வாங்கனதை விளக்கிச் சொன்னார்.

''இஸிட்!'' என்று விழி விரித்த கார்த்திகேயன் அடாப்ஸி ரிப்போர்ட்டை எடுத்து வந்து காண்பித்தார். ''இதுதானா பாருங்க டாக்டர்?''

பார்த்தவன் அதிர்ந்தான். ''மை காட். இது நான் கொடுத்த ரிப்போர்ட்டே இல்லை! பக்கா போர்ஜரி...!'' ஒரு வினாடி போல் கண்களை மூடி யோசித்தவன் திரும்பி, ''தப்பா நினைக்காதீங்க இன்ஸ்பெக்டர். எம்மனசுல பட்டதை சொல்றேன். இந்த விஷயம் நமக்குள்ளே...''

''பரவாயில்லை தயங்காம சொல்லுங்க.'' ஓரளவு அவன் சொல்லப் போவதை யூகித்துவிட்டார்.

''என்னுடைய ரிப்போர்ட்டை டிசிபி தர்மதாஜன்தான் வாங்கிட்டுப் போனாரு. அவருக்குத்தான் போர்ஜ் செய்ய சான்ஸ் அதிகம். எஸ்... அவரேதான்! அன்னிக்குக் குடிக்கத் தண்ணீ கேட்டாரு வித் ஐஸ் க்யூப்ஸ். நான் கான்வாஸ் தடுப்புக்கு அந்தப் பக்கம் போன போது அவரு ரெண்டு காலி பாரங்களை ரப்பர்ஸ்டாம்ப் சீல் அடிச்சுக்கிட்டு எடுத்து வைச்சிருக்கணும். பின்னால நிதானமா விருப்பம் போல ரிப்போர்டை எழுதிட்டு என் கையெழுத்தை ஃபோர்ஜ் செய்திருக்கணும். கேசுல பொலிடிகல் பிரஷர் அவருக்குப் பக்க பலம். இந்நேரம் அங்க ஹாஸ்பிடல் பைல்லயும் என் ஒரிஜினல் கரெக்ட் ரிப்போட் காணாமப் போய் வேற சப்ஸ்ட்டியூட்டா இருக்கும். விக்டிமோட பொண்ணு என் லவரா ஆயிட்டது எதிர்பாராத திருப்பம். இல்லைன்னா பி.எம். பார்த்த கேஸை யார் திருப்பிப்

பார்க்கிறாங்க? உண்மை உறங்கியிருக்கும். ஆடப்ஸி முடிஞ்ச கையோட உடனே நான் டில்லிக்குப் பத்து நாள் லீவுல கிளம்பினது அவங்களுக்கு அதிர்ஷ்டம். வசதியாப் போச்சு.''

''போகலைன்னா என்ன? உங்களை விலைக்கு வாங்கியிருப்பாங்க. அல்லது மிரட்டியிருப்பாங்க.'' என்றார் கார்த்திகேயன் கசப்புடன்.

''இதுலேருந்து என்ன முடிவு இன்ஸ்பெக்டர்?''.

கார்த்திகேயன் பதில சொல்லவில்லை. உள்ளுக்குள் ஒளி பரவுவதை உணர்ந்தார். ஜிக்சா பஸில் பூர்த்தியாகி ஞாபக ஸெல்களின் சர்க்யூட்டு சார்ஜ் ஆகி விழித்துக் கொண்டன...

பிரேதத்தைப் பார்த்த தர்மராஜன் சுத்தமாக அதிர்ந்து, ''கத்தியால குத்திக் கொலையா? என்கிட்ட நீங்க சொல்லவே இல்லையே?''

''ஒரு 'க்ளோஸ் ப்ரெண்டு' இறந்த குழப்பம். சாரி சாமுவேல்.''

''கேஸைச் சட்டுபுட்னு முடிங்க.''

வீரராசு வீட்டிலிருந்து இரண்டு தெரு தள்ளி டிசிபி வீடு... பி.எம். ரிப்போர்ட் நைஸாக மாற்றம்... டிசிபி அந்த மாரிமுத்துவை முதலில் விசாரித்தது.- அதாவது மிரட்டி உண்மையை மறைக்கச் சொன்னது... அந்த ஆபாச என்ட்ரி தோன்றி, சுசிலா யாரென்று அவருக்குத் தெரிந்துவிட்டது. இப்போது...

''அந்த பி.ஏ. மாரிமுத்துவைத் தனியாத் தள்ளிட்டுப் போய் முட்டிக்கு முட்டித் தட்டி சில விபரங்களைப் விசாரிக்கணும். நீங்களும் கூட வாங்க டாக்டர்.''

''நான் எதுக்கு?''

''விசாரணையில அவன் மயக்கமானா எழுப்பறதுக்கு!''

கார்த்திகேயன் டிசிபி தர்மராஜனின் வீட்டை அடைந்தபோது இரவு எட்டாகி விட்டது. கதவு டக்கென்று திறந்து கொண்டது தர்மராஜன் காத்திருப்பார் போல...

''வாய்யா கார்த்திகேயன். உன்னைத்தான் எதிர் பார்த்துக்கிட்டிருந்தேன். அன்னிக்கு உன்னை இந்தக் கேசுல போடும் போதே கொஞ்சம் யோசிச்சேன். இருந்தும் என் திட்டத்துல இருந்தது நம்பிக்கை. விடாக் கண்டன்யா நீ. துரத்திட்டு வந்துட்டே! அதோ அப்படி உட்காரு... அவரும் எதிரில் உட்கார...

''விவரம் எல்லாம் சேகரிச்சிருப்பே. இனி உண்மையை

மறைக்க முடியாது. சாரி சுசிலாம்மா.'' பெருமூச்சு விட்டார்.

''எஸ். கார்த்திகேயன். நான்தான் அந்த ராஸ்கல் வீரராகுவைக் கொன்னேன்! எங்க ஊர்க்காரன் - அடுத்த தெருவாசின்னுதான் அறிமுகம் ஆனான். நான் போலீஸ்காரன். அவன் அரசியல்வாதி என்ற நிலையில் நட்பு சுப்புன்னு பிடிச்சிகிச்சு. நான் அவன் வீட்டுக்கும், அவன் என் வீட்டுககும் வர்றதுமா ஒரு வருஷமா எங்க நட்பு தொடர்ந்துச்சு. எவ்வளவு முறை அவன் வாய்க்கு ருசியா பண்ணி போட்டிருக்கா தெரியுமா? அவளை.. அவளை...'' அவர் விழிகள் கோவைப் பழம் மாதிரி சிவந்தன.

''அவளை நீ பார்த்திருக்கியா கார்த்திகேயன்? அதோ அந்தப் போட்டோல சிரிச்சுக்கிட்டிருக்கா பாரு. சுசிலா அப்சரஸ் மாதிரி இருப்பா. முப்பத்தஞ்சு வயசு சொல்ல முடியுமா அவளுக்கு? ரொம்ப ரொம்ப அழகு-மின்னல் மாதிரி. அதான் மறைஞ்சுட்டா... சுசிலா, என் அக்கா மகதான். எங்களுக்குக் குழந்தை கிடையாது. ராசாத்தி மாதிரி கிளி மாதிரி வெச்சிருந்தேன். அவளை இந்தத் தேவடியா மகன்...''

கேட்டுக் கொண்டிருந்த கார்த்திகேயனின் முகம் கல்லால் செய்தது மாதிரி இருந்தது.

''அப்ப நான் சிறைத் துறையில இருந்தேன். ஆறு மாசத்துக்கு முந்தி வேலூர்ல ஒரு கான்பரன்ஸ் - காம்ப் மாதிரி தங்கணும். அப்ப இந்த வீரராசு எங்க வீட்டுக்குக் காஷுவலாக வந்திருக்கான். தனிமைல இருக்கற சுசிலாவைப் பார்த்து வெறியாகி அவளைக் கதறக் கதற கற்பழிச்சு...''

தற்போது கார்த்திகேயனின் தாடையில் ஒரு நரம்பு அசைந்தது.

''வேலூருக்கு மெஸேஜ் சீஃப்கிட்டருந்து வந்தது. சுசிலா அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிகிட்டா. என்ன இருந்தாலும் போலீஸ்காரன் பொண்டாட்டி இல்லையா? புத்திசாலித்தனமா வெளியாருக்கு - தீவிரமான மைக்ரேன் ஒற்றைத் தலைவலின்னு எழுதியிருந்தா. இன்னொன்னு எனக்கு. நடந்த அக்கிரமத்தை விவரிச்சு அந்த நம்பிக்கைத் துரோகியைப் பழி வாங்கணும்னு எழுதியிருந்தா.

''முதல்ல நான் மனுசன். அப்புறம்தான் போலீஸ். எந்த நட்பைப் பயன் படுத்தி உரிமையா உள்ள நுழைஞ்சானோ - அதே நட்பைப் பயன்படுத்தி உரிமையா நுழைஞ்சு அவனைக் கொல்ல முடிவு செஞ்சேன். என்னை ஏமாளி, எனக்குத் தெரியாதுன்னு நினைச்சு இந்தப் பாவி, மனைவி இறந்ததுக்கு என்கிட்டயே துக்கம் கேட்க வந்தான்!''

கார்த்திகேயன், ''தெரிஞ்சாலும் சமாளிச்சுறலாம்னு பாவத்துக்கு துணிஞ்சிருக்கான். எல்லாம் பொலிடிகல் பவர் தந்த திமிர்.'' என்றார் இறுக்கத்துடன்.

''கரெக்ட். இந்த மாதிரி சில மிருகங்களை உள்ளே தள்ளத்தான் கிரைம் பிராஞ்சுக்கு முயற்சி பண்ணி வந்தேன். உடனே கொன்னா சந்தேகம் வரும்னு சமயம் பார்த்திட்டிருந்தேன். எப்பவும் போல எதுவும் தெரியாதது போல நட்பு பாராட்டி வந்தேன்.''

''ஐ பிட்டி யூ சார். அப்புறம் எப்படிக் கொன்னீங்க?'

''சொல்றேன். ஒரு போலீஸ்காரன் கொலை செய்தா பிரில்லியண்டாதான் இருக்கும். எனக்கு சிவசங்கர் கொல்லப் போவது தெரியாது. கொலை நடந்த அன்னிக்கு எனக்கு அலிபி வேணுமில்லையா? அதனால நம்ம எஸ்.ஐ. குணசேகரை முக்கியமான ஃபைல்ஸ் எடுத்துட்டு நைட்டு வாங்க, விடிய விடிய டிஸ்கஸ் பண்ணுவோம்னு சொன்னேன். இரவு எட்டு மணி போல் வந்தார். பத்து மணி வரை சீரியஸா பைல்ஸ் பார்த்துட்டு 'கொஞ்சம் பால் சாப்பிடுங்க குணசேகர்'னு பால் கொடுத்தேன்.

''பால்ல தூக்க மாத்திரையா சார்?''

''கரெக்டு கார்த்திகேயன். நல்ல ஹெவி டோஸ் கலந்துட்டேன்.. குடித்த பத்தாவது நிமிஷம் ஆட ஆரம்பிச்சுட்டார். பத்தரைக்கெல்லாம் ஆள் பிளாட் ஆகித் தூங்கிட்டார்.''

''அடுத்த தெருவுக்குக் கொலை பண்ணக் கிளம்பிட்டீங்க?''

''எஸ். 'என்னப்பாது இந்த நேரத்துலன்னு' கதவை வீரராசு திறந்தான். தூக்கக் கலக்கத்துல இருந்தான். 'ஒண்ணுமில்லைப்பா. தனியா இருந்ததுல மனசு சரியில்லை. உன் கிட்ட கொஞ்ச நேரம் பேசுவோம்னு வந்தேன்'னு சொன்னேன். கொட்டாவி விட்டு சோபால காலை நீட்டிச் சாய்ந்து அசதியினாலே நான் தூங்கற மாதிரி நடிக்க... அஞ்சாவது நிமிஷம் அவன் கிட்ட குறட்டைச் சத்தம் கேட்கவும்...''

''நீங்க எழுந்து பாம்பு விஷத்தை ஊசி மூலமா ஏத்திட்டிங்க...?''

''ரைட். 12mg. ட்ரைடு கோப்ரா வெனம் செலுத்தினாவே பேடல் டோஸ். நான் கொஞ்சம் கூடவே செலுத்தினேன் அறை குறையா முடிக்கப்படாதுன்னு. வெயின்ல ஊசி ஏத்திட்டு வாசக் கதவை அடிச்சு மூடினேன். பிளைண்ட் லாக் மூடிகிச்சு.

''நீங்க திரும்பினப்பவும் எஸ்.ஐ. தூங்கிகிட்டிருந்தார்?''

''ஆமா. ஒரு அஞ்சு மணி போல விழிச்சுக்கிட்ட குணசேகர் அப்பவும். பைல் பார்த்துகிட்டிருந்த என்னைப் பார்த்து அசடு வழியச் சிரித்தார். 'கொஞ்சம் கண் அசந்துட்டிங்க போல' என்றேன். அவர் அன்று தூங்கினதை ஒரு நாளும் வெளிய சொல்ல மாட்டார்.''

''பிரில்லியண்ட் சார். அந்த சிவசங்கர் விவகாரம்...?''

''அது நான் எதிர்பாராதது. கேஸ் இன்னும் வலுவாக நல்ல டெம்ப்டாச்சு. வேறு எவனோ வந்து பிற்பாடு குத்தி இருக்கான். கேஸை சுத்தமா திசைத்திருப்பி நமக்கு ஒரு சதவிகிதம் கூட சம்மந்தமில்லாம ஆக்கலாம்னு நினைச்சேன். மார்ல கத்தி பார்த்த உடனே 'நல்லவேளை பாம்பு பாய்சன் கொடுத்தோம்; அந்த பி.எம். ரிப்போர்ட்டை மாத்திட்ட உங்க எல்லோரையும் ஏமாத்திடலாம்'னு யோசிச்சேன். சுரேஷ் எப்படின்னு சொல்லியிருப்பாரே? எதைச்சையாக அந்தப் பக்கம் வந்து வேண்டா வெறுப்பா வாங்கிட்டுப் போற மாதிரி நடிச்சேன்...''

''சார், அப்புறம் அந்த பொலிடிகல் பிரஷர்...?''

''எனக்கும் சப்போர்ட்டு வேணுமில்லையா... நேரா தலைவரைச் சந்திச்சேன். 'இது மாதிரி அவன் என் மனைவியை அழிச்சான். நான் அவனை அழிச்சுட்டேன். பழிக்குப் பழி விவகாரம் இதோட ஓவர். உங்க கட்சி முக்கிய ஆளு வர்ற தேர்தல்ல நிக்கறேன்னு சொன்னவன் அடுத்தவன் பொண்டாட்டி விவகாரம் வெளியே தெரிஞ்சா பெரிய ஸ்காண்டலாயிடும். அவமானமாயிடும். தேர்தல் வர்ற சமயம். அதனால நீங்க எனக்குச் சப்போர்டு, உதவி செய்யணும்னு' கேட்டுக்கிட்டேன். நிலைமையை உணர்ந்து சரின்னாரு.''

தர்மராஜன் எழுந்து மெல்ல நடை பயின்று அறையின் மற்றொரு கோடிக்குச் சென்றார். உட்கார்ந்திருந்த கார்த்தி கேயன் பக்கம் திரும்பி, ''இவ்வளவு தகிடுதத்தங்களும் செஞ்சது நான் மாட்டிக்காம நீண்ட நாள் உயிர் வாழ இல்லை இன்ஸ்பெக்டர். என்னுடைய திறமை, பயிற்சி, என் பதவி, கொடுக்கப்பட்ட வசதிகள் இவைகளை வைத்து இந்த மாதிரி சமூக விரோதிகளை மேலும் மேலும் உள்ளே தள்ளிக்கிட்டே இருக்கணும்கற வெறி. ஒரு மாதிரி அப்ஸஷன்னு வெச்சுக்கங்களேன். சிவசங்கரும் சுமாரான பழக்கம் உள்ள நண்பர்தான். அந்த திமிர் பிடித்த பணக்காரன் மாட்டினா நஷ்டம் ஒண்ணும் இல்லை. ஹும்... அவருடைய டாட்டர் அந்த டாக்டர் காதல் விவகாரம்தான் இந்தக் கேஸை வெளியக் கொண்டு வந்துருச்சு! எனவே, உண்மைகள் தெரியறதுக்கு முன் இருந்த நிலைமை அது. இப்ப எல்லாம் தெரிஞ்ச பிறகு... ஹஹ்ஹா.'' சிரித்தார்.

அவர் கையில் திடீரென்று துப்பாக்கி முளைத்திருப்பது கண்டு திடுக்கிட்டார் கார்த்திகேயன்.

''பயப்படாதீங்க கார்த்திகேயன். உங்களைச் சுடப் போறதில்லை. உங்க கிட்ட எனக்கு என்ன பகை? ஒரு திறமையான, புத்திசாலியான, நேர்மையான ஆபீசரைச் சுடறதால யாருக்கு என்ன லாபம்? நீங்க இளைஞர். வாழ வேண்டியவர். இன்னும் பல சமூக விரோதிகளை வீழ்த்த வேண்டியவர். அதனால...'' துப்பாக்கி உயர்ந்தது.

''ப்ளீஸ். நோ. சுட்டுக்காதீங்க.'' பதட்டத்துடன் கார்த்திகேயன் எழுந்து விட்டார்.

''சிட்டவுன் ஐ ஸே. ஆசை மனைவியை இழந்துட்டு தனியா இருக்க முடியலை. நெஞ்சு ரணமாயிருக்கு. இதோ வர்றேம்மா சுசிக் கண்ணு. இறுதியா ஒரு அட்வைஸ் கார்த்திகேயன்: எப்பவும் பண்புள்ள மனிதர்களாப் பார்த்து நட்பு வெச்சுக்குங்க. குட் பை. பெஸ்ட் ஆஃப் லக்.''

கார்த்திகேயன் எக்ஸ்பிரஸ் வேகத்தில் பாய்ந்தும் 'டுமீல்' என்ற ஒலியையும், தர்மராஜனின் நெற்றிப் பொட்டில் ரத்தக் குமிழ் உற்பத்தி ஆவதையும் தடுக்க முடியவில்லை.

தொப்பியைக் கழற்றிவிட்டு மிகுந்த சோகத்துடன் தர்மராஜனின் உடலை வெறித்துக் கொண்டிருந்தார். பின்னர் கிளம்பிக் கமிஷனரிடம் விவரித்துவிட்டு, ஏற்பாடுகள் முடிந்தபின் வேகமாகப் புறப்பட்டார்—யுவராஜ் என்ற பிளாக்மெயிலரைப் பிடிக்க.

மறுநாள் மாலை—

''இந்தக் கேசுல ஒரு பெரிய பெக்குலியர் டெக்னிகல் பாயிண்ட் நீரஜா... கவனிச்சியா?''

''சொல்லுங்க சுரேஷ்.''

''உங்கப்பா சிவசங்கர் குத்தினது ஒரு பிணத்தை! உயிருள்ள ஆசாமியைக் குத்தினா அது கொலை. உயிர் அற்ற ஒரு பிணத்தைக் குத்தறதும், இதோ இந்த மேஜையைக் குத்தறதும் சமம். கொலையாகாது. ஆனா கொலை நோக்கத்தோட கொன்றிருகார். வீரராகவுக்கு உயிர் இருந்திருந்தா செத்திருப்பார்னும் ஆர்க்யூ பண்ணலாம். வினோதமான வழக்கு இது. லாயர்கள் போட்டு மண்டையை உடைச்சுக்கப் போறாங்க.''

''எங்கப்பா விடுதலை ஆவாரா? தண்டனை உண்டா? அதைச் சொல்லுங்க சுரேஷ்.''

''தெரியலையே நீரஜா. அப்படி தண்டனையே கிடைச்சாலும் குறைந்த பட்சமா இருக்கும்னு நினைக்கிறேன். சிவசங்கர் என்ன சொல்றார்?''

''டிசிபி, அவர் மனைவி விஷயம் கேள்விப்பட்டதும் கோபமாகி அந்த மிருகத்தை அடுத்த பிறவியிலயும் குத்துவேன்னு குதிக்கிறார்!''

''போச்சுரா! சரி, நம்ம விவகாரம் பத்தி சொன்னியா? இப்பவும் மறுக்கிறாராமா?''

''எப்படி மறுப்பார்? ரெண்டு பேருக்கு வாழ்க்கை கொடுத்திருக்கீங்களாம். ஒண்ணு நீரஜா. இரண்டாவது எங்கப்பா.''

''அடி சக்கை. எப்ப கல்யாணம்?''

''பறக்காதீங்க. எங்கப்பா விடுதலையாகி வந்தப்புறமா வெச்சுக்கலாம் என்ன?''

''அட தேவுடா! ஒண்ணு செய்யலாமே. மேரேஜை உங்கப்பா வந்த பின்னால வெச்சுப்போம். அதுக்கு முன்னால...''


''அதுக்கு முன்னால?''

''தேனிலவை வெச்சுப்போம் டியர்!''

(முற்றும்)

மெல்லக் கொலை இனித் தொடரும்

கல்யாணகுமார்



7

''நோ. என் கண்ணு என்னை எப்பவுமே ஏமாத்தாது. அந்த ஆள் டிசௌசாவின் ஆள்தான் ஐ வாண்ட் டு கில் தட் பாஸ்டர்ட்.''

டாக்ஸி டிரைவர் லேசாய்ப் பின்னால் திரும்ப, ''ஷ்... மெல்லப் பேசுங்க.'' என்றாள்.

''இங்க பார் நான் உன் அண்ணனைத் தப்பிக்க வச்சதுமே நாம திரும்பிடுவோம். ஒரு நிமிஷத்தையும் வேஸ்ட் பண்ணக்கூடாது. அண்டர்ஸ்டாண்ட்? முக்கியமா அவன் என்னைத் தெரிஞ்சுக்கக் கூடாது.''

செல்லும் வழி எங்கே என்றே தெரியாமல் வெளிச்ச வெள்ளத்தைக் கடந்து இருள் போர்வையால் போர்க்கப்பட்ட அந்த இடத்தினுள் போர்ச்சுகீசிய பாணியில் முன் வராண்டா வைத்துக் கட்டப்பட்ட அந்த பங்களாவின் உள்ளே ஒரு ஆள் தோளில் துப்பாக்கியைத் தொங்க விட்டபடி வந்து கேட்டைத் திறக்க, கார் நுழைந்தது. அது நுழைந்ததும் கேட் முன் போல் சாத்தப் பட்டது.

தன் காரை நிறுத்தச் சொன்ன எம்.எஸ். வத்சலாவுடன் கீழே இறங்கி, பணத்தைக் கொடுத்து டாக்ஸியைத் திருப்பி

''இங்க தான் சிவா வந்திருப்பான்னு எப்படி நினைக்கறீங்க?'' – வேகமாகச் செல்லும் வாகனங்களைப் பார்த்தபடியே ஷைனி கேட்டாள்.

தலைமுடி கன்னத்தில் படிந்ததை ஒதுக்கிவிட்டபடி மீண்டும் அவன்புறம் திரும்பியவளைத் தன்னருகே இழுத்துக் கொண்ட தியாகு, ''அவன் சிவாவா இருந்திருந்தா நான் இங்க வந்திருப்பான்னு நெனைக்க மாட்டேன். ஆனா இப்ப அவன் எம்.எஸ். அதனால கண்டிப்பா இங்க வந்திருப்பான்.'' என்றபடியே டிரைவரைப் பார்த்து, ''ஏம்பா ரூட் மாறுது. மறந்துடுச்சா?'' என்றான்.

''இல்ல சார் இப்ப ரொம்ப நேரா மீட்டிங் ஹால் போறோம். இறங்கினதும் கூட்டிகிட்டு வரச் சொல்லி எனக்கு ஆர்டர். உங்களுக்குத் தகவல் ஏதும் வரலியா?''

''இல்லையே. யாரு திரிவேதி தானே?''

''அவரே தான் சார்.'' என அவன் அவசரமாய் அதை ஆமோதித்தான்.

கார் மெல்ல பம்பாய் நகர எல்லையை விட்டு விலகி பொட்டல் வெளி சூழ்ந்த தேவாஸ் பார்த்து செல்லத் தொடங்கியது.

''அவன் பாம்பே ரீஜன் ஆள்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? அதுகான்

ஒரு பொண்ணுக்கு இரு நிழல்கள்

1

▪▪த்மாவை இரவு ஏழு மணிக்கு திருமாடம் ஊரில் இறக்கி விட்டு ரயில் போய்விட்டது.

அனாதை ரயில் நிலையம் அது.

சுற்றி வர அமானுஷ்யம்.

கிழக்கே இரண்டு மூன்று குன்றுகள் தொடர்ந்து படுத் திருந்தன.

நிலையத்தின் ஒற்றை விளக்கை நோக்கி நடந்தாள். நிலையம் வெறிச்சென்று இருந்தது. ஒரு மனிதப்பூண்டு இல்லை. அதிகாரி மட்டும் அடுத்த நிலையத்தோடு பேசும் குரல் கேட்டது.

வெளியே வந்தாள்.

வெட்டவெளி அது.

இரண்டு ஆட்டோக்கள் அம்போ என்று கிடந்தன.

காற்று ஒருவித உய்ய்ய்யாக அடித்தது. சிறிது குளிரும் எடுத்தது ஆட்டோக்களை நெருங்கினாள். அதன் அருகே இருட்டோடு கரைந்து போன பூத் நின்றது.

பளிச்சென்று ஒரு மகிழ்ச்சி.

அதை நோக்கி விரைந்தாள்.

கதவைத் திறந்து உள்ளே பார்க்க, வளைவில் போன் தொங்கியது.

பூத்தில் ஏறி 3431—ஐ ஒட்டி காதில் ரிஸீவரை வைத் தாள்.

ஹலோ! என்றாள்.

நேரமாகியது.

—ஹலோ டார்லிங்? என்று ஒரு சந்தோஷமான குரல்!

அவளுக்கு தொனி சுருங்கியது.

—ஹலோ? அது 3434 ஆ?

—எஸ்! ஹனி.

—மிஸ்டர் பிரேம்நாத் இருக்காரா?

—ஆ. பிரேம்நாத் ஆ...

உள்ளே இனமில்லாத பல சத்தங்கள் கேட்டது! ரிஸீவர் பொடி வெடிகளை வெடித்தது. கடைசியில் ஒரு தடிமக் குரல் மறுமுனையை அடைத்தது.

—பிரேம்நாத் ஹியர்.

—ஸார்! நான் பத்மா வந்திருக்கேன்...

—பத்மாவா?

—ஆமாம்? புது அப்ளிகண்ட்! நீங்கதானே அந்த கமலா நர்சரி ஸ்கூல் நடத்தறீங்க?

—ஓ! ஓ!...யா...

—என்னை நீங்க ஸெலக்ட் பண்ணியிருக்கீங்க?

—ஓ. ஓ... நினைவு இருக்கு? நீங்க வந்தாச்சா?

—ஆமாம்! நாளைக்கு ட்டியுட்டியலே சேரணுமே?

—ரைட்! ரைட்! இப்போ என்ன செய்யணும்?

—ஹோட்டல்லே இடம் இருக்குன்னு சொன்னீங்க.

—ஆ...ஆ... ரைட். இப்போ நினைவு வர்றது. வாங்க நேரே வீட்டுக்கு?

—ஸ்டேஷன்லே இருக்கேன்? வண்டி அனுப்பறீங்களா?

—வண்டி தற்சமயம் இல்லை? ஆட்டோ இருக்கும்! . மாங்க் ரோஸ் வில்லா—ன்னு கேட்டா கொண்டு விடுவாங்க.

2

பூத்லை விட்டு வெளியே வந்து சிறிது தூரம் நடந்தாள். ஆட்டோ பக்கம் ஒருவன் தென்பட்டான்? இளைஞனாக இருந்தான்.

—மேடம் வர்றீங்களா!

அவன் பேச்சே அவனைப் படித்தவன் என்று காட்டியது. பாண்ட்டும் ஷர்ட்டும் தரித்து, அலியாகத் தலையை அழுத்தி வாரிவிட்டிருந்தான்.

—மாங்க்ரோவ் வில்லா.

—பதிமூணு ரூபா கொடுங்க.

—பத்து ரூபாய்?

—சரி ஏறுங்க!

மோட்டரை இழுத்தான். பட பட, என்று கொந்தளித்தது. ஏறி உட்கார்ந்தான்.

சில அடிகள் போனதும் நிறுத்து நிறுத்து? என்றாள்.

நின்றதும் இறங்கி போன் பூத்துக்கு ஓடினாள். கதவைத் திறந்து தரையில் சோதித்தாள். வாட்ச் கிடைத்தது. உயர்ரக வாட்ச்தான். ஆனால் லூஸ். அடிக்கடி கழன்றுவிடும்.

ஏறி உட்கார்ந்ததும் வாட்சுங்களா? என்றான்.

—ஆமாம்! லூஸ் கழன்டிடிச்சு.

—அட கஷ்டமே?

—உயர்ந்த வாட்ச்! ஒரு சிநேகிதி கொடுத்தாங்க.

வண்டி டுடுடுடுடுவில் குதித்து ஓடியது.

சீக்கிரம் அந்த மலைப்பாதைக்கு வந்தார்கள்.

இருபக்கமும் இருட்டு அடைத்தது. ஆட்டோ விளக்கு லொங்லொங்காகக் குதித்தது.

ரோட்டில் போக்குவரத்து இல்லை.

ஒரு ஆள்கூட இல்லை. சின்ன இறைச்சல் தவிர நிசப்தம். டுடு டுடு டுடு என்று வண்டியின் தாலாட்டு.

மேடு ஏறி இறங்கியது. முன்னும் பின்னும் பார்க்க பயம்? இந்த ஆட்டோக்காரனை நம்புகிறோம்.

—என்ன, போய்கிட்டே இருக்கோமே.

—இப்பத்தான் மேடம் ஒரு மைல் வந்திருக்கோம்.

—ஒரு மைல்தானா?

—ஆமாம் இன்னொரு மைல் போகணும்.

—வழியிலே வேறே கிடையாதா?

—கிடையாது... நீங்க பகல் வண்டிக்கு வந்திருக்கணும.

—தெரியாது.

—காலம் இருக்கிற நிலையிலேயே தனியா இந்த நேரத்திலே...

சட்டென்று இஞ்சின் அணைந்தது. அவன் இரண்டு முறை பரிசோதித்தான். இறங்கினான். பின்னால்போய் சில ஓசைகள் செய்தான்.

—என்ன? என்றாள்?

—ஸாரி மேடம்? பெட்ரோல் தீர்ந்து போயிருக்கு.

கீறிச் என்று ஒரு கத்தி சொருகியது.

—அப்போ?

—பக்கத்திலே என் நண்பன் வீடு இருக்கு! அவன் வீட்டிலே பெட்ரோல் எப்படியும் இருக்கும். [illegible]. இதோ அஞ்சு நிமிஷத்திலே...

கீழே இறங்கினான். இருட்டில் மறைந்து போனான்.

பத்து நிமிடம் பொறுத்தாள். இதயம் இடிபட்டுக் கொண்டிருந்தது. இங்கிருந்தால் ஆபத்து என்று தோன்றியது. பெட்ரோல் வாங்கப் போகிறானா? சகாவை அழைத்து வரப் போகிறானா? இரண்டுபேரும் சேர்ந்து...

கீழே இறங்கினாள். இரண்டு பக்கமும் பார்த்தாள். அது போன்ற அமானுஷ்ய நிலையை அனுபவித்ததில்லை. பூமியில் ஆதிமனிதன் அப்படித்தான் பயப்பட்டிருப்பான். விரைவாக நடக்க ஆரம்பித்தாள்.

3

'மாங்க்ரோவ் வில்லா' பெரிய காம்பவுண்டுடன் இருந்தது.

உள்ளே மரங்கள் மேலும் இருட்டை கரிதாக்கி இருந்தன.

சதம் சதம் என்று நடந்தாள்.

அங்கே வீடுகள் எல்லாப் பெரிய பண்ணை வீடுகள். பெரிய பெரிய தோட்டங்களுடன் இருந்தன.

போன் பண்ணினோமே! வீட்டைத் திறந்து போட்டு வைத்திருந்தார்கள்.

ஊர் சின்ன ஊர்தான். ஆனால் இருட்டில் விசாரித்து வர எப்படி நேரம் ஆகியது.

இருட்டில் ஏதாவது தெரிகிறதா?

முகப்புக் கதவை அணுகினாள். உள்ளே அரவங்கள்! பல குரல்கள்! ஓசையாக மைக்கேல் ஜேன் பாட்டு!

மணியை அழுத்தினாள். உள்ளே அது இறைந்தது. யார் யாரோ வரும் சத்தம். கதவு திறக்கப்பட்டது.

—கம் ஆன். நான்தான் பிரேம்நாத்.

நாற்பது வயது இருக்கும். பருத்த உடலோடு கையைநீட்டி அவர் வந்து அவள் கையை வாங்கிக் குலுக்கினார்.

பிடிக்கவில்லை. அவர் உள்ளே அழைத்துப் போனார்.

—இப்போ பார்ட்டி நடக்குது. இந்தப் பக்கம் வரவேண்டாம் என்று ஒரு அறையில் கொண்டு விட்டார்.

உட்காருங்க... உட்காருங்க! என்று சொல்லி பார்வை பார்த்தாள்.

மனசில் எங்கேயோ சுட்டது! அறையை ஒரு பார்வை பார்த்தாள்.

—ஹாஸ்டல்ன்னு சொன்னீங்களே!

—ஆமாம் ஆமாம்! காலையிலே போகலாம்.

—இப்பவே போகலாம் மிஸ்டர் பிரேம்நாத்.

—நோ, நோ.

கையைப் பிடித்து அழுத்தாதகுறை. இங்கேயே இன்னிக்கு நைட் இருங்க இப்போ நல்ல சாப்பாடு கொண்டு வரேன். சாப்பிட்டு சந்தோஷமாய் இருக்கணும்.

4

ஒரு கோப்பை மதுவும் பலவகை உணவுகளையும் தட்டில் வைத்துக் கொண்டிருந்தார்.

—ஐயோ! பிராந்தி வேண்டாம்.

—மை சைல்ட்! யு வில் லி ஹெவன்! என்றார்.

அவள் தாடையைத் தடவிவிட்டுப் போனார்.

கதவு அடைப்பட்ட போது க்ளுக் என்று அழுகை வந்தது.

நான் எங்கே இருக்கிறேன் என்று நினைத்தாள்.

வந்த இடம் சரிதானா?

அவள்தான் அனாவசிய காபரா படுகிறாளா?

தனிப்பெண்ணாக இருந்தால் சாதனைதானோ. எத்தனை பெண்கள் தனியாக இருக்கிறார்கள்?

சுற்றிவர நடந்து அறையைப் பார்த்தாள். பழங்கால கட்டிடம். மேலே உயரத்தில் வெண்டிலேட்டர

கதவுப் பக்கம் போனாள் இடுக்கு வழியே ஹாலின் சத்தம் கொஞ்சம் கசிந்து வந்தது. பாப் மியூசிக், சிரிப்பு பேச்சு.

ஏதோ பார்ட்டி நடக்கிறது. அதனால்தான் அவளைச் சரியாக கவனிக்கவில்லை.

5

அரைமணி ஓடியது. வாசலில் சத்தங்கள் நகர்ந்து சென்றன. அந்த தூரத்து ஒலி அவளுக்குப் புரிகிறது

பிறகு பெரிதாகக் கதவை அடைக்கும் சத்தம் உள்ளே ஒரு கால் தடம் மட்டும் நடந்து வரும் சத்தம்.

தடார் என்று அறைக்கதவு திறந்தது.

அதிர்ச்சி!

பிரேம்நாத் இப்போது நிஜார் பனியனில் இருந்தார். கீழே கால் பகுதியில் கொத்து கொத்தாக மயிர்கள். பொங்கும் நுரையுடன் ஒரு புன்னகையை அவலட்சணமாய் இழுத்துக் கொண்டு வந்து நின்றார்.

—ஆ.. ஹனி, டம்ளர் அப்படியே இருக்கே! [illegible] பாதி தானே காலியா இருக்கு.

—பரவாயில்லை, போதும்.

—பிராந்தி சாப்பிடு!

—பழக்கம் இல்லை.

டம்ளரை எடுத்து அவள் தலை பின்புறம் பிடித்து வாயில் ஊற்றப் போக—

வீ வீ வீ......

என்று அவள் வாயிலிருந்து கத்தி கிளம்பி சிதறியது போல சத்தம்.

—ஓ! நோ... நோ நோ... வேண்டாம், வேண்டாம்.

சமாதானம் செய்தார் அவர்.

பிறகு சிறிது கோபமாக எழுந்து, —வேலைக்குத்தானே வந்திருக்கே? என்றார்.

—ஆமாம்.

—அதிலென்ன கோபம் வேண்டிக் கிடக்கு...

கோபமாக வாயிலை நோக்கி நடந்தார்.

மனசைப் பக்குவப்படுத்திக்க, அப்புறம் வரேன்.

தடால் என்று கதவு மூடிக் கொண்டது.

6

எழுந்தாள். முதலில் கதவைத் திறக்க முயன்றாள். வெளியே பூட்டியிருந்தது.

தடதட என்று தட்டினாள்.

பதில் இல்லை.

—மிஸ்டர் மிஸ்டர்! என்று கூப்பாடு.

அதற்கும் பதில் இல்லை.

கண் மூடியது மெள்ளத் திரும்பினாள். அடிவயிற்றில் ஒரு கலக்கம் கிளம்பியது.

அகப்பட்டோம் என்று மனசில் ஒரு நினைப்பு கனமாக இறங்கியது.

பத்திரிகையில் விளம்பரத்தை பார்த்துவிட்டு விண்ணப்பம் போட்டது தவறு. எடுத்தவுடன் 2000 சம்பளம் என்று கேட்டவுடன் கண் மூக்குப் பாராமல் உடனே ஒத்துக் கொண்டது எவ்வளவு தவறாகப் போயிற்று.

சிநேகிதிகள் பலரும் எச்சரித்தார்களே! பொறாமையால் சொல்கிறார்கள் என்று நினைத்தாள்.

யாரிடமும் உபதேசம் பெறவில்லை, தன் விருப்பப்படி செய்வதை தனக்குப் பெருமையாக நினைத்தாள்.

அது எவ்வளவு பெரிய விபரீதத்தில் கொண்டு விட்டது.

வீட்டின் வெளிக்கதவை மீண்டும் திறக்கும் சப்தம்! பிறகு மூடும் சப்தம்.

வீட்டிற்கு வெளியே காலடி ஓசை!

இப்போது வீடு நிசப்தமாகிவிட்ட உணர்வு.

டொக் டொக்...

முதலில் அது லேசாகக் கேட்டது

விழித்தாள்.

அடுத்து அது சற்று உரக்க கேட்டது. திடுக்கிட்டுத் திரும்ப, உள்ளே அந்த மற்றொரு கதவில் அந்த சத்தம் எழுவது தெரிந்தது.

எழுந்து அருகில் போனாள். கதவில் காதைப் பொருத்தி நின்றாள்.

டொக் டொக் நன்றாகக் கேட்க, —யாரது? என்றாள்.

அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

—திற ஸிஸ்டர்.

—நீங்க யாரு? சொல்லுங்க?

—நானும் உன்னை மாதிரி இங்கே வேலைக்கு மனுப் போட்டவள். இங்கே மாட்டிக்கிட்டேன். கதவைத் திற.

—திறக்க முடியுமா?

—தாழ்ப்பாள் போட்டிருக்கா, பூட்டியிருக்கா?

—ஒரு சின்னப்பூட்டு இருக்கு.

—அதை ரெண்டு போடு போட்டே திற.

—பயமாயிருக்கே!

—பயப்படாதே! ஆபத்திலே மாட்டிக்கிட்டு இருக்கோம். சீக்கிரம் ஏதாவது செய்யணும்.

—இரு... இரு...

சுற்றிப் பார்த்தாள். மேஜைமீது ஒரு கோட் ஸ்டாண்ட் வெளியில் இருந்தது. நினைவுக்கு வந்தது. எட்டினாள் பிடித்து இழுத்தாள். ஆணியோடு வந்தது.

கதவைத் திறக்க, அவளைப் போல ஒரு இளம் பெண் ஓடி வந்தாள். அவள் அலங்கோலத்தில் இருந்தாள். உடம்பில் பல இடங்கள் கன்னிப் போயிருந்தன.

பத்மாவைக் கட்டிக் கொண்டாள். கண்கள் கல கல என்று பொழிந்தன. பேசுவதற்கு நேரம் ஆகியது.

அவள் பெயர் கன்னிகா! மதுரையைச் சேர்ந்தவள். பேப்பரில் விளம்பரத்தைப் படித்து விட்டு அவளும் விண்ணப்பம் போட்டிருந்தாள். அவளுக்கும் வேலைக்கு உத்தரவு வந்தது. மாலை ரயிலுக்கே அங்கே வந்து விட்டாள்! ஒரு ஆட்டோவில் வந்தாள். வீடு மூடியிருந்தது மணி அடித்தாள.

உள்ளே அவளை அந்த பிரேம் நாத் அழைத்துப் போனார். தன் அறையில் பூட்டினார். அவளுக்குத் திக் என்றது.

ராத்திரி ஏழு மணிக்கு வந்தார்.

மது நெடி வீசியது அவளைக் கட்டிப் பிடிக்க போனார். அவள் ஓங்கி அவர் கன்னத்தில் கொடுத்தாள்.

அவருக்குக் கோபம் வர, அவளை விரட்டிப் பிடித்து பல இடங்களைக் கடித்து விட்டார்.

ராத்திரிக்குள் சரியாகி விட வேண்டும் என்று கறுவிக் கொண்டு போயிருக்கிறார்.

பத்மா தன் கதையைச் சொன்னாள்.

இருவரும் ஒருவருக்கொருவர் சமாதானம் கூறினார்கள்.

—இப்போ இதை விட்டு எப்படிப் போகலாம்! என்றாள் பத்மா!

—அது தான் என் கவலையும் இப்போ அந்த ஆசாமி வெளியிலே போயிருக்கான், திரும்பி வந்தா இன்று ராத்திர நாம்ப துவம்சம்தான்!

—அதுக்குள்ளே நாம்ப வெளியிலே போயிட முடியுமா!

—ஒருத்தரா நினைக்கிறதுக்குப் பதில் ரெண்டு பேராச்சு! அதுலே ஒரு பலம். இப்போ யோசிப்போம்! முதல்லே இந்த அறையை விட்டு வெளியே போகணும்.

கன்னிகா இருந்த அறையை பத்மா போய்ப் பார்த்தாள். அவள் இருந்த அறையைப் போலவே இருந்தது.

ஏதாவது ஒரு கதவைத் திறக்கணும்! என்ன வழி?

இரண்டு அறைக் கதவுகளையும் ஓங்கித் தட்டிப் பார்த்தார்கள்.

இரண்டாவது கதவை விடாமல் இடிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

வாழ்க்கையில் அவ்வளவு வெறி எப்படி வந்தது என்று தெரியாது.

தொம் தொம் என்று சத்தங்கள் வீடு பூராவும் எதிரொலித்தது.

கடைசியில் நாதங்கி உடைய கதவு திறந்தது.

ஹாலுக்குள் போனார்கள்.

கன்னிகா லைட்டைப் போடப் போனாள்.

—பெரிய லைட்டைப் போடாதே! என்றாள் பத்மா. கன்னிகா சின்னதைத் தேடி அழுத்த, ஹால் அந்தி நேரம் போல் விழித்தது.

பெரிய ஹால் அது! இரு பக்கமும் நெடுக்கு பீரோக்கள் கண்ணாடி முகப்புகளுடன் இருந்தன. உள்ளே அடுக்காகச் சாய்ந்திருந்த புத்தகங்கள்.

நடு உயரே ஆபரண விளக்கு! ஆறு கைகளை வீசி கீழே நோக்கி மலர்ந்திருந்தன.

சுவரில் மூன்று ஓவியங்கள்.

—அது அவ்வையார், அது கம்பர், அது இளங்கோ அடிகள் என்றாள் பத்மா.

—இதையெல்லாம் வச்சிருக்கிற ஆசாமியா இப்படி நம்மை இம்சிக்கிறாரு? என்றாள் கன்னிகா!

—இந்தக் காலத்திலே பெரிய மனுஷங்க கூட மாறிடறாங்க! என்றாள் பத்மா.

ஓரமாக வட்ட மேஜை! அங்கே இரண்டு கறை படிந்த கோப்பைகள். காலியான விஸ்கிபுட்டி. சிதறிக் கிடந்த வேர்க் கடலைப் பருப்புகள்.

—இங்கேதான் குடிச்சிருக்காங்க ரெண்டுபேர்!

—பிரேம்நாத் ஒருத்தன் அதிலே! இன்னொருத்தன் யாரு?

—சேக்காணியா இருக்கணும்.

—எங்கே போயிருக்காங்க!

—குடிச்சாச்சு! தின்னப் போயிருப்பாங்க! அப்புறம் திரும்பி வந்து நம்மை...

—அதுக்குள்ளே கதவைத் திறந்து ஓடட முடியுமா?

—இருவரும், ஹாலைத் தாண்டி, வாசல் கதவுக்கு வந்தார்கள்.

—உம்! இடி என்றாள்.

இருவரும் தங்கள் சிறு கைகளை எடுத்து ஓங்கி குத்து விட்டார்கள். அவர்கள் முகம சுருங்கி 'ஆ' என்ற வலி ஓடியது.

கதவு பிரம்மாண்டமாக இருந்தது. பழைய காலத்து மரக் கதவு! அசாத்தியப்பருமனில் இருந்தன.

அடுத்து சன்னலுக்கு ஓடினார்கள். மேல்பாதி திறந்திருக்க, வெளி உலகம் இருண்ட கறுப்பாக தெரிந்தது. எதுவுமே புலப்படவில்லை.

—ஐயோ! ஐயோ யாரங்க! வாங்க! கொலை பண்றான் என்று கத்தினாள்.

அவளைத் தொடர்ந்து பத்மாவும் - கொலை, கொலை, எல்லாரும் வாங்க? என்று கத்தினாள்.

வெளியே காற்று அதை அப்படியே உறிஞ்சிக் கொண்டது.

—திரும்பத் திரும்பக் கத்தினார்கள். பலன் பூஜ்யத்தான்.

—வா, கன்னிகா! வேற வழி பார்ப்போம்! திரும்பிடப் போறாங்க

நேராக பின்புறம் ஓடினார்கள். நீண்ட வீடு அது! அழுக்கு களான பகுதிகள்.

பின் கதவும், பெரிய கோட்டைக் கதவு! அதற்கு மூன்று பருமனான பூட்டுக்கள் தொங்கின. அவை பெரிய அழி தண்டவில் மாட்டப்பட்டிருந்தன. இரண்டு பேர் திறனை நாள் முழுதும் உபயோகபபடுத்தினாலும், ஒரு தண்டாவைப் பெயர்ப்பதே முடியாது.

—ச்விக்! வேறே வழி பார்ப்போம்.

வியர்வை வழியே வீட்டின் மற்ற அறைகள் ஒவ்வொன்றாக நுழைந்து பார்த்தார்கள்.

முதலில் சமையல் அறை!

விளக்கை போட்டபோது பளீர் என்று தெரிந்தது. ஒருக்காக உள்ளே நடந்தார்கள்.

—இதப்பாரு! ரெண்டுநாளா இங்கே சமையலே நடக்கலை?

—வீட்டிலே வேறு யாரும் இல்லையா?

—சீக்கிரம் சீக்கிரம் அடுத்த அறைகளைப் பார்ப்போம்.

—மூன்று அறைகளைப் பார்த்தார்கள். ஒரு சின்ன அறை ஒதுக்குப்புறத்தில் முடங்கி இருந்தது.

—ஏய்! இங்கே... என்று மூக்கைப் பிடித்துக் கூறினாள்.

அதன் பின்னர் கதவைத் தள்ளுவது சிரமமாக இருந்தது—யாரோ படுத்திருக்காங்க!

பத்மா போர்வையை எடுக்க, வீல் என்று கன்னிகா வாயிலிருந்து அந்த கூச்சல் பறந்தது.

7

இறந்து இரண்டு நாள் ஆகி இருக்கும். சடலம் அழுகி இருந்தது.

போர்வையை இழுத்தபோது ஒரு டயரி சடலத்தின் சட்டைப் பையிலிருந்து நழுவி உருண்டது.

—எடுக்காதே பத்மா.

அதற்குள் பத்மா எடுத்தாள். பண்டிகை, ராகுகாலம் ரஜா நாட்கள் போட்டிருந்த சின்ன குறிப்பேடு அதன் முதல் பக்க ஏட்டில் டி.வி. பிரேம்நாத் என்று பத்துமுறை பேனாவில் எழுதியிருந்தது!

—ஆ! வயிறுக்கு கீழே ரத்தம் உறைந்திருந்தது!

பத்மா உற்று கவனிக்க, வயிற்றில் கத்திக் குத்தியிருந்த பெரிய கீறல் தெரிந்தது.

—இரு இரு அவசரப்படாதே!

—கன்னிகா! என்ன நடந்திருக்கு தெரியுமா? இந்த வீட்டிலே பிரேம்நாத் தனியா இருந்திருக்கணும் அவரைக் கொன்னுட்டு இவங்க ரெண்டு நாளா இங்கே அமர்க்களமா வாழறாங்க!

—இப்பத்தான் புரியுது பத்மா! இப்படி அகப்பட்டுக் கிட்டோமே!

—இவங்களைத் தாக்கிக் கொன்னுடலாமா?

—கொலை செய்யலாமா?

—ஆபத்துன்னு வந்தா என்ன செய்ய?

—ரெண்டாவது நம்மாலே முடியுமோ?

—எதிர்பாராமத் தாக்கணும்?

—என் கையிலே ஒரு கோஸ்ட் ஸ்டாண்ட், உன் அறையிலே இன்னொரு ஸ்டாண்ட் இருக்கு பாரு! அதை நீ எடுத்துக்க.

காத்திருந்தார்கள்.

8

ஹாலில் குரல்கள் தொடர்ந்தன.

—டேய், உனக்கு எந்தப் பெண்! முதல் பெண்ணா? இரண்டாம் பெண்ணா? குரல் அந்தப் போலி பிரேம்நாத்துடையது.

—இரண்டாவது என்றான் மற்றவன் கட்டைக் குரலில்! அவன் தொனி எப்போதும் கட்டைதான்.

—டே டேய்! அந்தச் சரக்கு கொஞ்சம் ஒசத்திடா! நம்பளுக்கு அது.

—இனிமேல் அப்படி விடக் கூடாது! முகத்திலே ரெண்டு போடு போடு! பேசாம இருந்துடட்டும்.

அறையை நோக்கி வந்தார்கள்.

—ரெடி கன்னிகா!

—ரெடி

—கதவு திறக்கப்பட்டது! உள்ளே இருட்டாக இருந்ததால் எட்டிப் பார்த்தார்கள். —ஹனி! லைட்டைப் போடு ஹனி.

பத்மா கையில் ஓங்கிய ஸ்டாண்டை வீறிட்டுக் கீழே இறக்கினாள்.

போலியின் தலையில் மையமாக விழுந்தது அது. —டே... என்று ஒரு சத்தம். தள்ளாடி கீழே சாய, கன்னிகா வாசலுக்கு ஓடி கட்டைக் குரல்மீது ஒரு போடு போட்டாள்! அது ஓரத்தில் பட்டு காது வழியாக இறங்கி தோளில் சதக்கிட்டது

வலியில் முகம் இருண்ட பத்மா வாசல் அறையை நோக்கி பாய கன்னிகாவும் டிட்டோ!

—ஸ்டூல் வேணும், கத்தினாள்.

—நாற்காலியோடு விரைந்தாள் கன்னிகா.

முன் அறையில் மின்சப்ளை போர் கூட ஸ்டூலில் ஏறி பத்மா திறந்தாள்.

மெயின் ஸ்விட்ச்சை அணைத்தாள். அடுத்து பெட்டியைத் திறந்து அங்கு இடுக்கியை வைத்து பல ஃப்யூஸ்களைப் பிடுங்கினாள்.

—இந்தா கன்னி! என்று ஒப்படைக்க, அவள் உள்ளே சன்னல் வழியே பல திசைகளில் ஓங்கி எறிந்தாள்.

பீங்கான்கள் கிணிங் ஒலியில் சிதறுவது கேட்டது.

இதற்குக் கட்டை சுவாதீனமாகி, நிலைமையைப் புரிந்து —ஏ, பிடாரிங்களா! என்று சொல்லி உள்ளே பாய்வது கேட்டது.

அடுத்த வினாடி!

கோட் ஸ்டாண்டைத் தூக்கி பத்மா இருட்டுக்குள் உள்ளே நுழைந்தாள்.

கட்டை இழைப்பது கேட்டது. மெள்ள மெள்ள நெருங்கிய பின்னால் சென்றாள்.

பிறகு உத்தேசமாக ஒரு போடு போட, கட்டையை அது தவறி, கீழே வெறுமையாய்ப் பாயும் அவசரத்தில் அவன் கையை நழுவியது.

அடுத்தகணம் கன்னிகாவின் ‘ஆ’ குரல்கேட்டது. கட்டை அவளைப் பற்றியிருந்தான்.

—கன்னி! என்று அவள் பயந்து போனாள் கன்னியை விடுவிக்க முயல, கட்டைக் குரலின் வலு அப்போதுதான் தெரிந்தது

அவளிடமிருந்து இரண்டு குத்து வாங்கிவிட்டு, பதிலுக்கு அவன் ஒரு குத்துவிட பத்மா சர்வ உடம்போடு சுருண்டு விட்டாள்.

—பத்மா விடாதே! அவனை மடக்கு!

கன்னிகா தனது சரிவிலிருந்து எழுந்து கொண்டிருந்தாள். தனது வலியைப் பொருட்படுத்தாமல் லபக்கென்று கட்டைக் குரலின் கால்களைப் பற்றிக் கொண்டாள்.

கட்டைத் தத்தளிக்கும்போது, —கமான். பத்மா, இந்த ஆளைப் பிடிச்சுக் கட்டு என்று கூக்குரலிட்டாள்.

பத்மா உக்கிரமாக எழுந்து, கட்டையின் கைகளைப் பற்றினாள். முறுக்கினாள். கட்டை நிலைகுலைய அவனது வேட்டியையே உருவி அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டினாள்.

பிறகு கட்டையின் கால்களின் ஆடுசதையில் படீரென்று தன் கால்களால் வெட்டி அவனைக் கீழே விழச் செய்தாள்.

9

பத்மாவுக்கு ஒன்று புரிந்தது. கட்டைக் குரலனை உண்மையிலே அவ்வளவு சீக்கிரம் மடக்கி இருக்க முடியாது.

அவன துவயிற்றுக்குள போயிருந்த மதுவும் தீனியும்தான் அவனை நிலைகுலையச் செய்தன.

இந்த உணவுகளின் ஆரம்பமந்தங்கள் மறைந்தால்—அரை மணியில் பெரிய சூரனாக எழுந்துவிடுவான்.

—க்விக்! வாசல் சாவி எங்கே இருக்கு தேடு...

என்று பத்மா சொல்வதற்குள்—கடகட என்று ஒரு சத்தச் சிரிப்பு அவளைக் குலுக்கியது.

ஒரு பெரிய மெழுகுவர்த்தியை போலி பிரேம்நாத் ஏற்றியிருந்தான். அதற்குள் அவன் தெளிவு அடைந்திருக்க வேண்டும்.

இடது கையில் வெளிச்சமும் வலதில் கத்தியும் காண்பித்தான் அவன்.

—பன்னாடைகளா! உங்களை விட்டுறுவேன்னு நினைச்சீங்களா! இன்னி ராத்திரி இங்கே பொலி! ஆமாம்...

முகமும் விழியும் உருள... அவளை நோக்கி அடி அடி அடியாக வந்தான்.

—க்விக், கன்னி! தூக்கு எதையாவது!

இருவருக்கும் நாற்காலிகள் அகப்பட்டன!

பத்மாதான் நாற்காலியை ஓங்கி வீசினாள். அதற்குள் அவன் விலகிக்கொண்டு வெளிச்சத்தை டீபாய் மீது வைத்தான்.

பிறகு அவளை நோக்கி அட்டகாசத்தில் வந்தான்.

ஹாலில் அவள் ஓடினாள்! உள்ளே அறைக்கு ஓடினால் பிடித்துவிடுவான் என்று பயம்! சுற்றிச் சுற்றிவர, கன்னிகாவும் அவளோடு சேர்ந்து கொண்டாள்.

அவர்கள் இருவரும் போலியை அசத்தியிருப்பார்கள். ஆனால் போலி நேராகச் சென்று கட்டையின் பின்கட்டுகளை அறுத்துவிட்டான்.

இப்போது இருவருமாகச் சேர்ந்து முதலில் கன்னிகாவைப் பிடித்தார்கள். பிறகு பத்மாவைப் பொத்தினார்கள்.



இரு பெண்களின் கூச்சல்களையும் யாராவது கேட்டால் தானே!

—ஏய்! முதலிலே இதுங்களை நல்லா அனுபவிக்கணும். அப்புறம் சித்திரவதை செய்து கொல்லணும். எல்லாத்துக்கும் முன்னால் வாயைத் துணியால் அடை!

இருவரும் அட்டகாசமாகச் சிரித்தார்கள்

—சரி. வேலை ஆரம்பிப்போமா என்றார்கள். இருவரும் இருவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

10

பத்மாவின் நெஞ்சு பக் பக் என்றது.

எப்படி ஒரு அசட்டு தைரியத்தில் இந்த ஊரைத் தேடி வந்தோம்! இப்படி அகப்பட்டுக் கொண்டோம்.

இனிமேல் என்னதான் செய்யமுடியும்? கையை இறுகக் கட்டியிருக்கிறார்கள். காலையும் கட்டியிருக்கிறார்கள் லேசாக அசைக்கக்கூட முடியாது!

வாயில் துணி அடைத்திருக்கிறார்கள். அது மட்டும் கொஞ்சம் நெகிழ்ந்து வருகிறது. வாயை அசைத்து அசைத்து வெளியில் தள்ளிவிடலாம்.

சரி கத்தினால்கூட என்ன பயன்?

அவன் கை அவள்மீது விழுந்தது சிலிர்த்தாள் கடவுளே என்று கண்ணை மூடினாள். அழுகை வந்தது. இனிமேல் முடிவை நோக்கி போக வேண்டியதுதான்.

சில விநாடிகள் நிசப்தம்.

பிறகு அந்த நுண்ணிய சத்தம் அவள் காதில் விழுந்தது. தட தட தட...

காதை வரித்துக் கேட்டாள்.

தடதடதான என்ன இது ஆட்டோவா!

மனசு பிரார்த்தித்தது.

கடவுளே இது ஆட்டோவாக இருக்கக்கூடாதா?

தடதடப்பு அந்த வீட்டு வாசல் வரை வந்து நின்றது.

அடுத்து பாயன் பாயன் என்று ஹாரன் முழங்கியது.

இரு ஆசாமிகளின் இயக்கங்கள் நின்றன.

பாய்ன்... பாய்ன்...

—"யோர்ரா இவன்! என்று எழுந்தான். வாயிற்கதவை நோக்கி நடந்தான். நின்றான்.

தும்... தும்... தும்.

வாசல் கதவு இப்போது அடிப்பட்டது.

—யாரது?

—நான்தான் ஆட்டோ! கதவைத் திறங்க!

—திறந்தான்.

கால்வாசி திறந்திருக்கும்.

—அந்த அம்மா இருக்காங்களா!

அவன் குரல்தான். பத்மாவுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது.

இருக்காங்க! என்ன விஷயம்?

—மேடத்தோட வாட்ச் கழண்டு விழுந்திடிச்சு.

—அவ்வளவுதானே.

அதை இப்படி கொடு. நான் கொடுத்துடறேன்.

அவசரமா வாயிலிருந்த துணியை கக்கிவிட முனைந்தாள்.

ஆனால் அதற்குள் கதவு சாத்தப்படும் சத்தம்.

அடடே! வாட்ச் கழன்று விழுந்துவிட்டதா? கவனிக்க வில்லையே?

ஆட்டோ! புறப்படும் சத்தம்! அது போடும் சத்தம்.

கடவுளே... அவள் முனைய வாயிலிருந்து துணி விழுந்து விட்டது.

சில விநாடிகள்

மீண்டும் தடதட...

வாசல் வரை வந்து ஆட்டோ நின்றது.

மீண்டும் கதவு இடிபடும் சத்தம்.

ஆசாமி எழுந்து போய்த் திறந்தான்.

—வாட்ச் இருக்குங்களா!

—இருக்கு.

—நானே மேடம்கிட்டே கொடுக்க விரும்பறேன்.

—ஏன்! நான் கொடுத்துக்கறேன்.

—இல்லை அதிலே எனக்கு

—ஏம்பா அதிலே என்ன இருக்கு? நானே கொடுத்துக்கறேன். போப்பா!

—அப்படிங்களா, சரிங்க!

அவன் திரும்ப ஆசாமி கதவைச் சாத்த...

அதற்குள்—ஆட்டோ! என்று ஒரு கூச்சல்!

அவள் வாயிலிருந்து கிளம்பிய கூச்சல்தான்!

ஆட்டோக்காரன் சட்டென்று கதவைத் தள்ளினான்.

ஆசாமி கதவை அமுக்க, ஆட்டோக்காரன் அதை உள்ளே தள்ள ஏகரகளை.

—ஆட்டோ...ஆட்டோ உதவி, உதவி...என்று அவள் கத்தினாள்.

—வரேன் மேடம், இதோ வரேன்.

கதவை துவம்சம் செய்தான்.

அது பிளந்து கொண்டு திறக்க—டேய்! யாரடா திருட்டுப் பசங்களா என்று கழியைச் சுழற்றிக் கொண்டு உள்ளே வர—

ஆசாமிகள் எழுந்தார்கள்.

விருட்டென்று வாயிலை நோக்கி நழுவி ஓடி மறைந்தார்கள்.

பத்மாவும் கன்னிகாவும் விடுதலை ஆனார்கள்.

ஆட்டோக்காரன் கையை பற்றினாள். பத்மா பரபரத்தாள்.

—மிஸ்டர் உங்களை அனாவசியமா சந்தேகிச்சேன் ஆனா நீங்கதான் நல்லவங்க. எங்களைக் காப்பாற்றினீங்க என்றாள், தழுதழுப்புடன்.

அந்த இரவு வேளையில் ஆட்டோ அவர்களோடு குஷியாகப் புறப்பட்டது, ரயில் நிலையத்தை நோக்கி!


ஆசிரியர்—வெளியிடுபவர்—உரிமையாளர்: எம்.கே. சாமி, 107-A, பெரியார் பாதை (மேற்கு), குலைமேடு, சென்னை-600 094.

அச்சிட்டோர்: பிரேம் பிரஸ், சென்னை-94.

நிறை கட்டளை



மகாமகன்



1

ஆதவன் பூமியின்மேல் படரவிட்டதன் உஷ்ண கிரணங்களை மெதுவாக இழுத்துக்கொள்ள ஆரம்பித்தான். பறவைகள் அன்று அவைகளின் பணிகள் முடிந்தன என்று தத்தம் கூடுகளை நோக்கி திரும்பின. பகல் பொழுதில் பணி முடித்த உழவர்கள் ஏரையும் மாட்டையும் இல்லம் நோக்கி திரும்பினர். ஆதவனின் ஆட்சி இன்று முடிந்து விட்டது இனி நிலவு மங்கை உதயமாகப் போகிறாள் என்று தவழ்ந்து வந்த மெல்லிய தென்றல் சேதி கூறியது.

இந்த கதை நிகழும் கி.பி. 3—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கூறிய மாலை பொழுதின் துவக்கத்தில், பாண்டிய நாட்டு மதுரையில் இருந்து புறப்பட்ட அந்த அரேபிய புரவி காற்றைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து வரும் அம்பினைப்போல் *கானப்பேரை நோக்கி பறந்து வந்தது. புரவிமேல் அமர்ந்திருந்தவன் அதை செலுத்திய விதத்திலிருந்து அவன் புரவியிலேயே பிறந்தவனோ என்று எண்ணத் தோன்றியது.

---

* கானப்பேர்— என்பது இன்றைய காளையார் கோவில். பாண்டியர் வரலாறு — சதாசிவ பண்டாரத்தார். பக்கம்-21.

அவனின் வயது இருபத்திரெண்டை தாண்டியிருக்க நியாயமில்லை. களையான முகத்தில் உதட்டிற்குமேல் அமர்ந்திருந்த மீசை கருகருவென்று வளர்ந்து கருமை நிறம் காட்டியது. இடது கன்னத்தில் தெரிந்த ஒரு வடுவும், கைகளில் ஆங்காங்கே பரவியிருந்த வடுக்களும் சதா போர்த் தொழிலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவன் என்று எடுத்துக் காட்டியது.

மதுரையிலிருந்து உச்சி வேளைக்குப் பின் புறப்பட்டவன், குதிரைக்கு சிறிதும் ஓய்வு கொடுக்காமல் பயணித்து, ஐந்து காத தூரத்தைபத்து நாழிகையில் கடந்து இதோ கானப்பேரை நெருங்கி கொண்டிருக்கிறான். கோட்டையை அடையும்முன் ஒரு கல் தொலைவுக்கு வியாபித்திருந்த காவல் காட்டின் நடுவில் ஓடிய பாதையில் புரவியை விரட்டினான். காட்டு மரங்கள் மண்டி கிடந்து இரவு வருவதற்கு முன்பே இருட்டை அங்கே படைத்திருந்தது. பிசாசுபோல் உயர்ந்திருந்த விருட்சங்களின் மேல் மாநாடு போட்டிருந்த பறவைகளின் கிரீச்... கிரீச் ஒலி ஏகமாக வியாபித்திருந்தது

தூரத்திலிருந்த கானப்பேர் கோட்டையின்மேல் அப்பொழுதுதான ஏற்றப்பட்ட தீப்பந்தங்கள் கொள்ளிவாய் பிசாசுபோல் தெரிந்தன. இவற்றை எல்லாம் பொருட்படுத்தாது கோட்டைக் கதவு மூடப்படுவதற்குள் போய்ச் சேர வேண்டும் என்ற துடிப்புடன் குதிரையை விரட்டினான் அவன்.

அரை நாழிகை நேரத்தில் காவல் காட்டினை கடந்தவனை ஐந்நூறு அடி நீள சமதளப்பரப்பு எதிர்கொண்டது. ஒரு வினாடி தாமதித்த பின் குதிரையை மேற்கு கோட்டை வாயிலை நோக்கி செலுத்தினான். கோட்டையை நெருங்கும் போது சேணத்துடன் தொங்கிய பையிலிருந்து பாண்டிய நாட்டு கயல் கொடியை எடுத்து, குதிரையின் பக்கவாட்டில் கட்டி வைத்திருந்த ஈட்டியை உருவி, அதன் நுனிப்பகுதியில் அதை கட்டினான். பின அதை வலக் கையால் உயரே பிடித்தபடி இடக்கையால் குதிரையை செலுத்தி கோட்டை வாயிலை நெருங்கினான்.

கோட்டையைச் சுற்றியிருந்த பெரும் அகழி அவனை வரவேற்றது. நூறடி அகலத்திற்கு பாதாளம் நோக்கி இறங்கியிருந்த அகழியில் முதலைகள் போடும் கும்மாளத்தின் ஒலி படுபயங்கரமாக எழும்பியது அப்பொழுதுதான் அகழியின் தொங்கு பாலத்தை தூக்குவதற்கு ஆரம்பித்த கானப்பேர் நாட்டு காவலர்கள் குதிரையில் வருபவனைக் கண்டதும் தாமதித்தார்கள்.

"பாண்டிய மாமன்னர் உக்கிரப் பெருவழுதியுடன் தூதுவனாக கானப்பேர் சிற்றரசர் வேங்கை மார்பனை காண வந்திருக்கிறேன்."

குதிரை வாலிபன் உரக்கக் கூவி, கயல் கொடியை அசைத்து காட்டினான். காவலர்கள் சைகை செய்ய, தொங்கு பாலத்தில் குதிரையை செலுத்தி கோட்டை வாயிலை அடைந்தான். குதிரை வாலிபனை பார்த்தவர்கள் அவன் பாண்டிய நாட்டில், ஒரு பொறுப்புமிக்க பதவியில் இருப்பவன் என்று அவனது தோரணையை வைத்தே முடிவுக்கு வர—

"மன்னர் தரிசனம் கிடைக்குமா?"

"மன்னர் சபை முடிந்து அந்தப்புரம் சென்று விட்டார். மிக முக்கியமான காரணமில்லாமல் அந்தப்புரம் செல்லக் கூடாது தாங்கள் விருந்தினர் மாளிகையில் தங்குங்கள். காலையில் அரசவையில் மன்னரைக் காணலாம்."

கோட்டைக் காவலனின் பதில் ஏமாற்ற ரேகைகளை குதிரை வாலிபனின் முகத்தில் வரவழைத்தது.

"சரி... நான் விருந்தினர் மாளிகையில் தங்குகிறேன். பாண்டிய நாட்டிலிருந்து தூதுவன் வந்திருப்பதாக மட்டும் மன்னருக்கு செய்தி அனுப்பி விடுங்கள்."

"அப்படியே செய்கிறோம், இந்த காவலன் உங்களுக்கு விருந்தினர் மாளிகையில் சகல வசதிகளையும் செய்து தருவான்."

கோட்டைக் காவலன் சைகை செய்ய, அருகிலிருந்த ஒரு காவலன் தன் குதிரையில் தாவி ஏறி முன்னே வழிகாட்ட, அவனை, வாலிபன் பின் தொடர்ந்தான். கானப்பேர் கோட்டைக்கு அவன் வருவது இது இரண்டாவது முறையாகும். இரண்டு மாளிகைகள் புதிதாக எழும்பியிருந்தன. சென்ற ஆண்டு வந்தபோது இவை இல்லை.

கோட்டைப் பரப்பளவு ஒன்றும் அவ்வளவு பெரிதல்ல. சுமார் இரண்டரை சதுர மைல் பரப்பளவுதான். முதலில் காவலர் வீதி, இரண்டு பொது மக்கள் வீதி, பிரமுகர்கள் வீதியின் அரண்மனை, அதையொட்டி அந்தப்புரம் பிரமுகர் வீதியின் முனையில் அமைந்திருந்தது விருந்தினர் மாளிகை. வரும் வழியிலேயே, வேங்கை மார்பன் கானப்பேர் கோட்டையை ஒரு பாதுகாப்பான கோட்டையாக சென்ற ஓராண்டில் மாற்றியிருப்பதை உணர்ந்த குதிரை வாலிபன விருந்தினர் மாளிகையில், குதிரையை விட்டு இறங்க அதை பின்புறம்

இருக்கும் கொட்டிலுக்கு அழைத்துச் சென்றான் ஒரு காவலாளி.

மாளிகை ஒன்றும் அவ்வளவு பெரியதல்ல. ஒரேசமயத்தில் எண்பது பேர் தங்கலாம். மொத்தம் ஐந்து தனி அறைகள். மற்றவை பொதுவானவை. மாடியில்உள்ள அறைக்கு வாலிபன் அழைத்துச் செல்லப்பட்டான்.

“வீரரே, ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நீராடுவதற்கும் உணவுஉட்கொள்வதற்கும் இந்த மாளிகையின் பொறுப்பாளர் ஏற்பாடு செய்வார். நான் வருகிறேன்.”

காவலாளி அகன்றதும், உடைவாளையும் குறுவாள்களையும் கழற்றி வைத்துவிட்டு, அறைக் கதவை தாழிட்டுவிட்டு, மஞ்சத்தில் சாய்ந்தான். அறையின் மூலையில் இருந்த விளக்கு மெல்லிய ஒளியை உமிழ்ந்துகொண்டிருக்க, அவன் மனம் எங்கோ ஓடியது “பாண்டியனின் தூது பயனளித்தால் எல்லோருக்கும் நன்மை. வேங்கை மார்பனின் விதி எப்படி இருக்கிறதோ? தூது பயனளிக்காது போனால், ஏற்படப் போகும் விளைவுகள், அப்பப்பா! என்ன பயங்கரம்” கண்களை மூடி இருந்தாலும், அவன் எண்ணம் முழுமையாக விழித்திருந்தன. அரை நாழிகை நேரம் ஓடி மறைந்தது. கதவு லேசாக தட்டப்பட, வேண்டாவெறுப்புடன் எழுந்து கதவைத் திறந்தவன் முன் விரிந்தது ஒரு இன்பக் காட்சி. அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

2

பயணக் களைப்பில், கண்களைமட்டும் மூடி, எண்ணத்தில் அவன் வந்த தூது பற்றி எண்ணிக் கொண்டிருந்தவனின் சிந்தனையை அறுத்துவிட்டது கதவு தட்டிய ஒலி, அவனை ஓரளவு வெறுப்படைய வைத்தது. சற்று முரட்டுத்தனமாக கதவைத் திறந்தவன் ஸ்தம்பித்து நின்றான் என்றால் அந்தக் காரணம் இருக்கவே செய்தது. அவன் முன்னால், அவனது உயிர் மூச்சையே சுண்டியிழுக்கும் அழகுடன் நின்று கொண்டிருந்தது ஒரு பேரழகு பெட்டகம்.

இடது கையை இடைக்கு தாங்கல் கொடுத்து வலது கை கதவை தட்டியதால் பாதி தூக்கிய பாவனையில் அப்படியே

நின்றிருக்க, அவள் கை தேர்ந்த சிற்பியால் படைக்கப்பட்ட சிற்பம்போல் நின்றாள்.

சராசரி உயரத்தில் இருந்தவள் முகம் வட்ட வடிவத்தில் அழகு காட்டியது. கருவண்டு கண்களும் சற்றே பிரிந்து தடித்திருந்த கீழ் உதடும், அதைத் தடுக்க முயல்வதுபோல் விரிந்த மேல் உதடும், லேசாக உப்பியிருந்த கன்னப் பகுதிகளுடன், உரமுடன் கூடிய தோள்களும், கழுத்தும், கூந்தலை முன்னுக்கு இழுத்து விட்டிருந்தமையால் அது அவளின் இடது மார்பகத்தின் மேல் ஏறி இறங்கி, இடைப்பகுதியைத் தாண்டி தொடைவரை நீண்டிருந்த அழகும், கூந்தல் மறைக்க முயன்றும், அதை தோற்கடிக்க முயன்ற பருத்த மார்பகங்களும், கதவைத் திறந்த நம் வாலிபனை சொர்க்க லோகத்திற்கு இழுத்துச் சென்றன.

கதவைத் திறந்ததும்— கதவைத் திறந்ததற்குக் காரணம் உண்டு. ஆனால் கதவை தட்டியவளும் ஏன் மலைத்து நின்றாள்? கதவு திறந்த பின்னும் வலது கையை ஏன் மடக்கவில்லை? அந்த பெண்ணின் மான் விழிகள் முதலில் ஆச்சரியத்தில் விழுந்தபின் நாண உணர்ச்சி காட்டி நிலத்தை நோக்கி தாழ்ந்தது. அவள் வயிற்றிலிருந்து ஏதோ ஒன்று புறப்பட்டு நெஞ்சை வந்து அடைந்தது.

ஓரக்கண்களால் அவள் அவனைப் பார்ப்பதும், அவன் அவளைப் பார்ப்பதுமாக சில விநாடிகள் நகர்ந்தன. எதிர்பாராத நபரை சந்திக்கும்போது ஏற்படும் உணர்ச்சிகளில் இருவரும் மூழ்கினர். முதலில் உணர்ச்சிகளை அறுத்துக்கொண்ட வாலிபன் லேசாக கனைக்க, அவள் மான விழிகளை உயர்த்தி பின் தாழ்த்திக் கொண்டாள்.

“என்னை இங்கு எதிர்பார்க்கவில்லையா குமரி?” குமரி என்று அழைக்கப்பட்டவள் விழிகளை உயர்த்தினாள்.

“எ... என் பெயர்... உங்களுக்கு?” சொல்லும்போதே நாக்கு ஒட்டிக் கொண்டது.

“என் பெயர் தெரிந்தது இருக்கட்டும், இந்த வீடு நியாபகம் இருக்கிறதா?”

அவன் தன் இடது கன்னத்து வடுவை விரல்களால் தொட்டுக் காட்ட, அவள் முகம் சுருங்கி, பின் உதடுகள் ஏதோ வார்த்தைகளை உதிர்த்தது.

“உனக்குள்ளேயே பேசிக் கொள்கிறாய். என்னை யார் என்று தெரியவில்லையா?”

“மறக்கக்கூடியவரா தாங்கள். அந்த காயம் இவ்வளவு ஆழமான வடுவையா ஏற்படுத்தி விட்டது?”

"வடு கன்னத்தில் மட்டும் அல்ல குமரி. இதோ என் இத யத்திலும் ஏற்படுத்திவிட்டது"

அவள் வலக்கையை தைரியத்துடன் பிடித்து, தன் இடது மார்பகத்தின் மேல் வைத்துக்கொண்டான் அவள் முகத்தில் செம்மை படர்ந்தது. கண்கள் லேசாக மூட, எண்ணங்கள் பின்னோக்கி இழுத்து சென்றன. மதுரை திருவிழாக் காண உறவினர் வீட்டுக்குச் சென்றவள், மாடியில் நின்றுக் கொண்டு திருவிழாக் கூட்டத்தை வேடிக்கை பார்த்தபோது கூட்டத்தை ஒழுங்குபடுத்த முயன்று கொண்டிருந்தான் அவன். உறவின ரின் சிறு பையன் கையில், குறுவாளுடன் விளையாடிக் கொண் டிருக்க அதை அவனிடமிருந்து பறித்தாள். சிறுவன் அவள் கால்களைக் கட்டிக் கொண்டு அடம்பிடிக்க, அவன் பிடியிலி ருந்து தப்ப இப்படியும் அப்படியும் பலமாக அசைய, குறுவாள் இருந்த வலது கை பக்கத்து தூண் ஒன்றில் மோதி, குறுவாள் நழுவ, அடுத்த வினாடி, ஆவ்... என்ற குரலை கீழே எழுப் பியது.

வரிசையை ஒழுங்குபடுத்திக் கொண்டே மாடியில் உள்ள பளிங்குச் சிலையை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தவனின் இடது கன்னத்தில் இறங்கிவிட்டது.

அவள் பயந்தே விட்டாள். ஆனால், அவன் மற்றவர்கள் பார்க்கும்முன், அவள் இருந்த வீட்டினுள் நுழைந்துவிட்டான். பதறிய அவள் உறவினர்கள், அவன் காயத்திற்கு வைத்தியம் செய்ய முனைய, அதற்குள் அவன் மயக்கம் அடைந்தான். நினைவு திரும்பியபோது, அவன்மாளிகை பஞ்சணையில் இருப் பதை உணர்ந்தான். பலர் அவன் காயத்திற்கு காரணம் கேட் டும், அவன் அவளை காட்டிக் கொடுக்கவில்லை. அவள் ஞாபகமாகவே, அந்த குறுவாளை தன்னுடன் வைத்துக் கொண்டான்.

"என்ன குமரி. ஏதோ சிந்தனையில் இறங்கிவிட்டாய்."

அவன் குரலும் அவன் அவள் கைகளைப் பிடித்து உலுக் கிய அதிர்வும், அவளை இவ்வுலகத்திற்குக் கொண்டு வர, கண்களைத் திறந்தாள். அவளை அவன் அறையின் உள்ளே அழைத்து வந்திருந்தான்.

"நீங்கள் எதையும் மறக்கவில்லை"

"ஆம் குமரி நீ என்னுடனேயே இருக்கிறாய்! இதோ பார் என் கன்னத்து வடு உன்னை நினைவுபடுத்தும். இதுதான் நீ தவறவிட்ட குறுவாள்."

கழற்றி வைக்கப்பட்ட குறுவாளை எடுத்துக்காட்ட, அவள் கண்களில் நீர் சுரந்தது.

"இந்த குறுவாள்தானே உங்கள் அழகான முகத்தை சேதப்படுத்தியது."

"இல்லை. இந்த சித்தினிப் பெண்ணை என்னிடம் சேர்த்தது."

"நான் இங்குதான் இருக்கிறேன் என்று உங்களுக்கு தெரியுமா?"

"தெரியாது. அந்த சம்பவத்திற்கு பிறகு என் உடல்நிலை சரியானதும் நீ இருந்த வீட்டிற்குச் சென்றேன். உன் உறவினர்கள், பழிக்கு அஞ்சி அந்த இடத்தைவிட்டு வேறு ஊருக்குச் சென்று விட்டார்களாம். உன்னைப் பற்றிய தகவலும் தெரியவில்லை..."

"நீ எப்படி இங்கே?"

"எங்கப்பா இந்த விருந்தினர் விடுதியின் பொறுப்பாளராக இருந்தார். மூணு மாதத்து முன்னே காலமாகி விட்டார். வேறு தகுதியான நபர் கிடைக்கிற வரைக்கும் மன்னர் என்னை பொறுப்பாளராக நியமித்திருக்கிறார்."

"உன் தாய், தமயன் தமக்கை..."

"இல்லை. தற்சமயம் யாரும் இல்லாத அனாதை நான்!"

குமரியின் கண்கள் பனிக்க,

"நான் இருக்கும் வரை நீ அனாதை இல்லை குமரி. மதுரையில் உன்னைப பார்த்த அன்றே மனதை பறிகொடுத்து விட்டேன். இந்த குறுவாள் சம்பவம் மட்டும் நடக்காவிட்டால், உன்னைப் பெண் கேட்டு அப்பொழுதே வந்திருப்பேன். இங்கு நான் வந்த காரியம் முடிந்தவுடன், உன்னையும் அழைத்துக் கொண்டு செல்வேன்."

அவன் வார்த்தைகள் உணர்ச்சியில் மூழ்கி உறுதியுடன் ஒலித்தது.

"தாங்கள் வந்த காரியம்?"

"பாண்டியனின் தூதுவனாக வந்திருக்கிறேன். நாளை இவ்வூர் சிற்றரசன் வேங்கை மார்பனை சந்திக்கிறேன்."

பின் இருவரும் காதலில் திளைத்திருந்தனர்.

விதி அவனை மறுநாள் வேங்கை மார்பனின் உருவில் எதிர்கொண்டது.

3

அரண்மனையில் நுழையும்போதே அவன் அதன் அமைப்பையும் காவலையும் கவனிக்கத் தவறவில்லை. அரசவை சற்று சிறியதாக இருந்தாலும், அதன் வனப்பும், சிற்பங்கள் தாங்கி நின்ற தூண்களும் வேங்கை மார்பனின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தின.

வேங்கைமார்பன் அரியாசனத்தில் வீற்றிருந்தான். அமைச்சர் சேனாதிபதி, மற்ற பிரமுகர்கள் அவனுக்கு இருபுறமும் கீழே ஆசனத்தில் வீற்றிருந்தனர். நன்றாக நிமிர்ந்து அமர்ந்திருந்த நிலையில், வேங்கை மார்பனின் உயரம் அரியாசனத்தின் முகப்பைத் தொட்டது. பரந்து பருத்திருந்த மார்பகங்கள் பல வாள் காயங்களுடன் முத்து மாலைகளை போர்த்தி இருந்தது. உருண்டு திரண்ட கைகளும், உறுதியாக கால் பஞ்சணையின் பதிந்திருந்த காலும் அவன் வீரத்தை கூறியது. சுருண்டு தொங்கியகுழல் அவன் தோள்களில் புரண்டது. கண்கள் ஈட்டி போல் ஜொலித்தாலும்; அவைகளில் நயவஞ்சகமும், அவசரத்தன்மையும் இருப்பதை அறிந்தான் தூது வந்தவன்.

வேங்கைமார்பனும் வந்தவனை எடை போட்டான். தூது வந்தவன் தலை தாழ்த்தி வணங்கினான்.

"உன் பெயர் என்ன?"

கரகரப்பான குரல் கேட்டு நிமிர்ந்தவன் ஒரு வினாடி நிதானித்து—

"உதயகுமாரன்"

"பாண்டியன் படையில் எந்தப் பதவி வகிக்கிறாய்?"

"தற்சமயம் தூதுவர்"

"நீ தூதுவனாக இருக்க முடியாதே! உன் உடம்பில் உள்ள காயங்கள் நீ ஒரு வீரன் என்று கூறுகிறது.

"மன்னரின் பாராட்டுக்கு என் நன்றி. தற்சமயம் நான் ஏற்றிருப்பது தூதுவன் பணி"

"உன் தூது சமரசத் தூதா இல்லை..."

வேங்கைமார்பன் முடிக்கும் முன் வெட்டினான் உதயகுமாரன்.

"அதை முடிவு செய்ய வேண்டியது தாங்கள்."

வேங்கைமார்பன் ஒரு விநாடி நிதானித்தான். அதைப் பயன்படுத்திக் கொண்ட அவன் அமைச்சர் —

"தூதுவரே! தூது விகிதத்தைத் தரலாம்."

அமைச்சர் கை நீட்ட—

"விகிதம் இல்லை அமைச்சரே! இது வாய் மொழி தூது."

"நம்ப ஆதாரம்?"

"இதோ" உதயகுமாரன் இடுப்பு கச்சையிலிருந்து ஒரு பொருளை கவனமாக எடுத்து, கண்களில் ஒற்றிக் கொண்டு, அவை முன் நீட்டினான்.

அது — பாண்டி மாமன்னரின் முத்திரை மோதிரம்.

"சரி. இனி உன் தூது பற்றி கூறலாம்"

அமைச்சர் அமர்ந்து கொள்ள, உதயகுமாரன் மீண்டும் முத்திரை மோதிரத்தை கண்களில் ஒற்றிக் கொண்டு, இடுப்புக் கச்சையில் பத்திரப்படுத்தி விட்டு, வேங்கைமார்பன் முன் நிமிர்ந்து —

'கயற் கொடியோன்! மதுரையம்பதி ஆளும் வேந்தன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியரின் புதல்வர், சேரமான் மாரிவெண்கோ, சோழன் ராஜசூயம் வேட்ட, பெருநற் கிள்ளியின் உயிர்த்தோழன் உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர - சன்மாரைக் கொண்டு, அகநானூறு தொகுப்பித்தவர், வீரத்தில் காண்டீபனையும், கொடையில் கர்ணனையும், ஒருங்கே கொண்ட கோமகன், பாண்டிய நாட்டை ஒரு குடையின் கீழ் ஆளும் மாமன்னார் உக்கிரப் பெருவழுதி..."

இந்த இடத்தில் சிறிது நிறுத்தி, சட்டென்று திரும்பி வேங்கை மார்பனுக்கு முதுகுப்புறம் காட்டி நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாக வணங்கினான். பின் எழுந்து வேங்கை மார்பனைப் பார்த்து —

"...காணப்பேர் சிற்றரசர் வேங்கை மார்பனுக்கு விடுக்கும் செய்தி..."

"நிறுத்து! உதயகுமாரா!"

மண்டபம் அதிர கூவி எழுந்தான் வேங்கைமார்பன்.

"தூதின் இலக்கணம் தெரியுமா உனக்கு?"

வேங்கைமார்பனின் முகத்தில் துளிர்த்த கோபத்தை அலட்சியம் செய்த உதயகுமாரன்.

"என் தூதில் என்ன தவறு வந்துவிட்டது மன்னா?"

“அரசவையை அவமதிப்பது தான் உன் தூதின் இலக்கணமா?”

“எப்பொழுது நான் அரசவையை அவமதித்தேன்.”

“சற்று முன் அரச பீடத்திற்கு முதுகு காட்டி கால்கள் அரச பீடத்தைநோக்கி இருக்கும்படி நிலத்தில் வீழ்ந்து வணங்கினாயே. இது அரச பீடத்திற்கு அவமானம் இல்லையா?”

வேங்கைமார்பனின் குரல் உக்கிரத்துடன் எழ—

“அது அவமரியாதை ஆகாது அரசே!”

“என்ன!”

“ஆம் பாண்டிய பேரரசுக்கு அடங்கிய சிற்றரசுதான் இந்த கானப்பேர். மாமன்னரின் மெய் கீர்த்தியை கூறும் போது, அவருக்கு அடங்கியவர்கள் எழுந்துநின்று தலைதாழ்த்த வேண்டும். முடியும் தருவாயில் அம்மா மன்னர் இருக்கும் திசை நோக்கி தொழவேண்டும். இதுதான் நியதி. அதைத் தான் செய்தேன். மதுரையம்பதி எனக்கு பின் திசையில் உள்ளது. எனவே தான் பாண்டியரின் மெய்கீர்த்தி முடிந்தவுடன், அவர் இருக்கும் திசை நோக்கி திரும்பி வணங்கினேன். உம்மையோ, உமது அரசபீடத்தையோ அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. ஆனால் நீரும், உமது மந்திரிப் பிரதானிகளும்தான் ராஜ துவேஷக் குற்றங்கள் செய்கிறீர்கள்.”

மற்றவர்கள் திகைக்க கணீரென்று ஒலித்தது உதய குமாரனின் குரல்.

“நான் பாண்டி மன்னரின் மெய்கீர்த்தியைக் கூறும் போது அவருக்கு அடங்கிய சிற்றரசான நீரும் உமது மந்திரிபிரதானிகளும் எழுந்து நிற்கவில்லை. மெய்கீர்த்தி முடியும்போது வணங்கவில்லை. அவமானம் புரிவது தாங்களா? இல்லை நானா?”

உதயகுமாரனின் விளக்கம் அறிவுடைய அமைச்சருக்கு புரிந்திருந்தாலும், வேங்கை மார்பனின் முகப்பரப்பில் ஏகமாக முகாமிட்டிருந்த கோபத்தைக் கண்டு பதில் கூற முடியாமல் இருந்தார். வேங்கை மார்பனும் கோபத்தில் பதில் பேச முடியாமல் அரியாசனத்தில் சரிந்திருந்தான். மற்ற பிரமுகர்களும் செய்வதறியாது திகைத்தனர்.

ஒரு இறுக்கமான சூழ்நிலையை உதயகுமாரனின் வார்த்தைகள் சிருஷ்டித்திருந்தன. இறுதியில், அதைக் கலைக்க முயன்ற அமைச்சர், லேசாக கனைத்துவிட்டு—

“உதயகுமாரரே! உமது தூதின் முடிவில் மான அவமானங்களைப் பற்றி விவாதிக்கலாம். உமது மன்னர் கூறிய சேதியை கூறும்.”

உதயகுமாரன் நன்றாக தலையை நிமிர்த்திக் கொண்டு—

"இனிமேல் நான் கூறப் போவது, நேற்று பாண்டிய மாமன்னர் உக்கிரப் பெருவழுதி கூறிய மொழிகள். அதை அப்படியே கலப்பில்லாமல் கூறுகிறேன். "கானப்பேர் சிற்றரசன் வேங்கை மார்பனே! பாண்டிய நாட்டுக்கு உட்பட்ட உன் சிற்றரசின் வருமானத்தில் நியாயப்படி எமக்குச் சேர வேண்டிய கப்பத் தீர்வுத் தொகையை கடந்த இரண்டு வருடங்களாக செலுத்தவில்லை இந்த செய்தி கேட்ட ஒரு பட்சத்திற்குள், மதுரையம்பதிக்கு நேரில் வந்து கப்பத் தொகை முழுவதையும் செலுத்த வேண்டும் இல்லையேல், விளைவுகள் பயங்கரமாக இருக்கும். இது ராஜ கட்டளை."

கணீரென ஒலித்த உதயகுமாரனின் குரல் அந்த அரசவையின் பக்கச் சுவர்களில் பட்டு எதிரொலித்தது. வேங்கை மார்பன் விவரிக்க இயலாத உக்கிரத்தில் இருந்தான். வலது காலை ஆத்திரத்தில் ஊன்றியபோது, கால் பஞ்சணை உடைந்தது. ஆக்ரோஷத்துடன் சிலிர்த்துக் கொண்டு அரியாசனத்தை விட்டு எழுந்தவன்—

"கேட்டீர்களா மந்திரி பிரதானிகளே! பாண்டியனின் ராஜகட்டளை! இந்த வேங்கை மார்பன் திறை செலுத்த வேண்டுமாம். இந்தக் கானப்பேர், பாண்டியனுக்கு அடங்கிய சிற்றரசாம்."

வாய்விட்டுச் சிரித்த அவனின் பேய் சிரிப்பு அனைவர் மனதிலும் திகிலை ஏற்படுத்தியது.

"மன்னா! நான் வந்த விபரத்தையும், ராஜ கட்டளையையும் சொல்லிவிட்டேன். தங்களது பதில் தேவை!"

உதயகுமாரன் மீண்டும் தலைதாழ்த்த, அவனை கூர்ந்து பார்த்த வேங்கை மார்பன்.

"பதிலா! உதயகுமாரா! இதோ கூறுகிறேன்!"

தன் பெரிய உடைவாளை உருவி, அதை வலது கையால் உயரப் பிடித்து—

"இந்நேரத்திலிருந்து இந்த கானப்பேர் சுதந்தர நாடு. பாண்டியன் அல்ல அவனோடு சேர்ந்திருக்கும் சேரன் சோழன் எவன் வந்தாலும் புறமுதுகிட்டு ஓடச் செய்யும் துணிவும் சக்தியும் இந்த வாளுக்கும், இந்நாட்டு மக்களுக்கும் உண்டு."

"இதுதான் தங்களின் இறுதியான பதிலா?"

"இறுதியானது மட்டும் அல்ல. உறுதியான பதிலும்தான்."

"அப்பொழுது விடை கொடுங்கள்."

உதயகுமாரன் தலை தாழ்த்த—

"அதுதான் முடியாது உதயகுமாரா! இந்த அரசவையை அவமதித்த உன்னை களபலியிட்டு, நான் பாண்டியனுடன் போருக்கு போவேன்."

"யன்னா! வலுவான கோட்டையினுள் இருக்கிறோம்என்ற செருக்கில், அதர்மமான காரியங்களைச் செய்ய வேண்டாம். தூதுவனை சிறைசெய்வது; பலியிடுவது அரச தர்மம் அன்று!"

உதயகுமாரன் குரல் வெடிக்க—

"என் சாவைக் கண்டு பயப்படுகிறாயா? உதயகுமாரா! இவ்வளவு படபடக்கிறாய்?"

உள்ளத்தில் ஈட்டி போல் பாய்ந்த அந்த சொற்களைக் கேட்ட உதயகுமாரன், அதுவரை கடைபிடித்து வந்த பொறுமையை கைவிட்டு, வேங்கை மார்பனை பெயர் சொல்லியே அழைத்தான்:

"வேங்கை மார்பனே! பயம் என்பது தமிழர் அகராதி அறியாத ஒரு சொல். நான் படபடத்தது எனக்காக அல்ல. உனக்காக!"

வேங்கை மார்பன் உதயகுமாரனை உற்றுநோக்க—

"ஆம் வேங்கை மார்பா! உன் செருக்கு ஏற்கனவே மதுரை மாமன்னர் காதுவரைக்கும் எட்டிவிட்டது. படையுடன் வருவதாகத்தான் இருந்தார். அறம்கூறும் அமைச்சரின் சொல்ஏற்று என்னை தூதுபோகச் சொன்னார். நீ பணியமாட்டாய் என்பதும் அவருக்கு தெரியும். செருக்குள்ள உன்னை வெல்வதோடு நீ விரும்பி பணிந்தால் உனக்கு திரும்பவும் அரச பதவி கிட்டலாம் ஆனால், தூதுவனாக வந்த என்னை சிறை செய்வதாகவோ, பலியிடுவதாகவோ அவர் அறிந்தால், இந்த கானப்பேர் கோட்டை அவரின் உக்கிரத்தில் காணாமல் போய் விடும்"

உதயகுமாரின் மொழிகள் மற்றவர்கள் முகத்தில் கவலையை கொண்டு வந்தாலும், வேங்கை மார்பனின் மதியை விதி மறைக்க—

"நீ அதிகம் பேசிவிட்டாய் உதயகுமாரா! அரசவையை அவமதித்த உன்னை இந்த இடத்தில் வெட்டிப் போடுவேன். ஆனால், வெறிபிடித்த உன் மன்னன் உணர என் பலம் தெரிய, அவன் படை எடுத்து வந்த பின் அவனுக்கு என் எச்சரிக்கையாக உயிரற்ற உன் உடலை அனுப்புகிறேன். அதுவரை என் கிழக்குக் கோட்டை சிறையில் இரு."

காவலர்கள் உருவிய வாளுடன் வர, முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல், உதயகுமாரன் அவர்கள் மத்தியில் சென்றான்.

விதி உதயகுமாரன் வடிவில் கானப்பேரில் காலூன்றியது.

4

அன்று பகல் பொழுது, பாண்டியன் உக்கிரபெருவழுதியின் மனம் போல் கொதிக்க, பகலவன் வெப்பத்தை வாரியிரைத் தான். அரசு மாளிகையே இறுக்கமான சூழ்நிலையில் தள்ளப் பட்டது. அமைச்சர் முதல் வாயில்காப்போன் வரை அக்னியை பெருமூச்சாக வெளியேற்றினர்.

"தூது சென்ற உதயகுமாரனை கானப்பேர் வேங்கைமார் பன் சிறை செய்தான். பாண்டிய மன்னனையும், அவன் வீரத் தையும் இழித்துப் பேசினான். சிற்றரசான கானப்பேரே சுதந் தர நாடென பிரகடனம் செய்தான்".

பாண்டியன் அரண்மனை எங்கும் இதே பேச்சு

"சிறையில் அடைக்கப்பட்ட உதயகுமாரன் இரண்டே நாளில், தப்பித்து விட்டான். மன்னர் போருக்கு சித்தம் செய் கிறார்?"

"இன்று இரவு மந்திராலோசனை கூடுகிறது. அநேகமாக இன்னும் ஒரு பட்சத்தில் கானப்பேர் நம் வசமாகி விடும்."

அரண்மனைவாசிகளின் — எண்ணங்கள் — பேச்சுக்களுக் கேற்ப — அன்றிரவு பாண்டிய மாமன்னரின் மந்திராலோசனை கூட்டப்பட்டது. உக்கிர பெருவழுதி ஆசனத்தை அலங்கரித் தான். சேனாதிபதி மாரப்பவேள், மகாமந்திரி, மற்றும் குதிரை யானை காலாட்படை படைதளபதிகள் அனைவரும் பாண்டி யன் முகம் பார்த்திருந்தனர்.

பாண்டியன் உதயகுமாரனின் தூது பற்றியும், வேங்கை மார்பனின் ஆணவம் பற்றியும் விவரித்துவிட்டு, கானப்பேர் போர் தொடுக்கும் முறை பற்றி தன் திட்டத்தைக் கூற—

"இந்த திட்டத்தில் ஒரு ஊனம் உள்ளது"

திடத்துடன் ஒலித்த குரல் மந்திராலோசனையின் நட வடிக்கையை தேக்கியது. பாண்டிய மாமன்னர் உக்கிர பெரு வழுதியின் போர்த் திட்டத்தில் குறை சொல்ல முயன்ற அந்த அறிவீனன் யார்? என்று அனைவரின் கண்களும் சபையின் மூலையை நோக்கின. குரல் கொடுத்தவன் உயர்ந்தான். கோபப் பார்வைகள் அவனை மூகாமிட்டன.

"இது மந்திராலோசனை. சிறுவர்களின் விளையாட்டு அரசங்கமன்று."

உக்கிரத்துடன் எழுந்த சேனாதிபதியின் குரலை வெட்டினான் அவன்.

"இந்த சபையில் வயது வித்தியாசம் கிடையாது சொல்லும் கருத்திற்குத்தான் மதிப்பு."

"மன்னரின் போர்த் திட்டப்படி நடந்தால்?"

"கானப்பேரையில் கோட்டையில் நாம் காணாமல் போய் விடுவோம்."

"மன்னரின் வெற்றியில் உனக்கு சந்தேகமா?"

"சந்தேகமேயில்லை. தோல்வியுடன் ஈனச்சாவும் உறுதி."

"உதயகுமாரா!"

சேனாதிபதி தன் உடைவாளை உருவி அவன் தலையை நோக்கி இறக்கினார். தலைக்கு மேல் வாள் இறங்குவதைக் கண்டும், உதயகுமாரன் அசையவோ இல்லை அதை தடுக்கும் எண்ணமோ இல்லாமல் அலட்சியத்துடன் புன்முறுவல் பூத்தான்.

"சேனாதிபதி!"

அதிகாரத்துடன் எழுந்த குரல். சேனாதிபதி மாரப்பவேளின் கரத்தை அப்படியே நிற்க வைத்தது. பெருவழுதியின் கண்கள் ஈட்டிபோல் ஜொலிக்க, மாரப்பவேளின் கரம் படிப்படியாக இறங்கியது.

"சேனாதிபதிக்கு நிதானம் மிகவும் அவசியம்."

நிதானமாக வந்தது பெருவழுதியின் குரல், சங்கடத்துடன் மாரப்பவேள்—

"ராஜ பக்தி குறையும்போதும் ராஜ நிந்தனை செய்யும் போதும் பொறுமையைக் கைபிடிப்பது கஷ்டம் அரசே!"

பெருவழுதி வாய் திறக்க எண்ணியபோது, உதயகுமாரன் பதில் தந்தான்.

"சேனாதிபதி அவர்களே! என்னிடம் ராஜபக்தி குறைவதாகவோ, நான் ராஜ நிந்தனை செய்வதாகவோ எப்படி முடிவுக்கு வந்தீர்?"

இதற்குள் ஓரளவு திடத்திற்கு வந்த மாரப்பவேள்.

"நீ சற்றுமுன் செய்த காரியம் என்ன? மன்னர் திட்டப்படி நடந்தால்...சொல்லவே என் நாவு கூசுகிறது. ஒரு வீரன் அதுவும் என் உபதளபதியின் வாயிலிருந்து அப்படிப்பட்ட சொற்கள் வரலாமா?"

உதயகுமாரன் தான் உபதளபதி தன் கீழ் பணிபுரிபவர் தவறு செய்தால் அவர்களை தண்டிக்கும் உரிமை தனக்குண்டு என்று நியாயப்படுத்தினார் அவர்.

“சேனாதிபதியாரே! நமக்கு மேல் பதவி வகிப்பவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டு நடப்பது என்பது நடவாத காரியம். அரசர் கூறுவதற்கெல்லாம் தலையாட்டி விடுவது என்ற நிலைமை இருந்தால் அதற்கு இந்த ஆலோசனை எதற்கு? அரசர் கட்டளை பிறப்பித்தால், படை நடத்த வேண்டியதுதானே. உம்மை பொறுத்த மட்டில் அதுதான் ராஜபக்தி என்றால் மன்னிக்கவும். அதை என்றால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆலோசனை என்று வரும்போது அதில் நம் கருத்துக்களை தடையில்லாமல் கூறவேண்டும். அரசராக இருந்தாலும், அவர் கூறும் திட்டத்தில் பழுது இருப்பின் தைரியமாக கூறவேண்டும். ஒத்துக் கொள்வதும், மறுப்பதும் அவர் உரிமை. அதற்கு பின்னும் அரசர் கட்டளையிட்டால், அதை நிறைவேற்றுவது நமது கடமை. என்னை பொறுத்துவரையில், அரசராக இருந்தாலும், அவர் கூறும் திட்டத்தில் பழுது இருப்பின் தைரியமாக எடுத்துச்சொல்லி தவறை களைவதுதான் ராஜபக்தி. நாம் மதிக்க வேண்டியது அரச பீடமேயன்றி தனிப்பட்ட ஒரு மனிதரையல்ல..”

உதயகுமாரனின் விளக்கம் சேனாதிபதியை, உக்கிர பெருவழுதியின் முகத்தில் புன்முறுவலை வரவழைத்தது.

“உதயகுமாரா! உன் தைரியத்தையும், எதையும் பகிர்த்து பார்க்கும் திறனையும் நான் பாராட்டுகிறேன். தைரியமாக கூறு. திட்டத்தில் எங்கு பழுதுள்ளது?”

உதயகுமாரன் மன்னரை வணங்கி, “அரசே! உங்கள் திட்டத்தில் பழுது சொல்லவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. ஆனால், இதில் சம்பந்தப்படுவது இந்த பாண்டிய நாட்டின் பெருமை. மாண்பு...”

“பீடிகை வேண்டாம வீரனே. மேலே கூறு!”

“அரசே தங்களின் திட்டப்படி, காளப்பேர் கோட்டைக்கும் சாகூர் கோட்டைக்குமிடையில் நமது படையை நிறுத்த வேண்டும்.”

உதயகுமாரன் முடிக்கும் முன் இடையில் புகுந்தது மாரப்ப வேளின் குரல்.

“இதில் என்ன பழுது இருக்கிறது? கோட்டை முற்றுகை என்றால் கோட்டையை சுற்றி வளைக்க வேண்டியது தானே! ஒரு கல் தொலைவில் நின்று கொண்டா முற்றுகையிடுவது?”

மாரப்பவேளை எரித்து விடுவது போல் பார்த்தான் உதயகுமாரன்.

"வீரமும் விவேகமும் ஒன்று சேர்ந்திருப்பது அரிது என்று ஆன்றோர்கள் கூறுவது சரிதான்."

"உதயகுமாரா! வீணாக என் விவேகத்தை குறை கூறாதே. என் விவேகத்தாலும், வீரத்தாலும் இந்த பாண்டிய நாட்டிற்கு பல வெற்றிகளை பெற்றுத் தந்திருக்கிறேன்."

"உங்கள் விவேகப்படி, கோட்டைச் சுவற்றிற்கும், காவல் காட்டிற்கும் இடையே படைகளை நிறுத்துவது தானே?

"சந்தேகமென்ன கோட்டையிலுள்ள கொத்தளங்களை அழிக்க அருகில் செல்வது தானே விவேகம்."

"சரி. படைகளுக்கு பின்னால் காவற்காடு. முன்னால் அகழி. அதன்பின் கோட்டைச் சுவர். படைகளை இந்த இடைப்பட்ட அதாவது அகழிக்கும், காவற்காட்டிற்கும் இடையில் நிறுத்தி, முற்றுகை ஆரம்பமானவுடன, வேங்கையார்பன் காவற்காட்டிற்கு தீயிட்டால் நமது நிலைமை."

இதுவரை உதயகுமாரனின் பேச்சை ஏதோ அதிகப் பிர சங்கித்தனம் என்று நினைத்த அரசரும், அமைச்சரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்கு நிலைமை தெளிவாக புரிந்தது. அதற்கு அறிகுறியாக அரசர் தலையாட்ட தொடர்ந்தான் உதயகுமாரன்—

"சேனாதிபதியாரே! பின்னால் காவல் காடு எரிகிறது பின்னால் போக முடியாது. முன்னால் அகழி. நடுவில் நாம். எதிரியின் கொத்தளங்களிலிருந்து வீசப்படும் ஆயுதங்கள் நம்மை எமன் உலகிற்கு அனுப்பும். நாளை சரித்திரம் நம் சாவைப் பற்றி பெருமையாகவா பேசும்? ஈனச்சாவு. வீரம் இருந்த பாண்டிய மன்னனிடம் விவேகம் இல்லையென்று இறந்தபின்னும் நமது மன்னரை இகழும் இந்நிலை வரவிடாமல் தடுப்பதே என் ராஜ பக்தி"

மாறப்பவேள் தலை தொங்கியது. அவசரப்பட்டு வாளை உருவியது எவ்வளவு என்று தவறு அறிய—

"என்னை விடு உதயகுமாரா! நான் அவசரப் பட்டு விட்டேன்."

அவன் கைகளைப் பிடிக்க நெகிழ்ந்தான் உதயகுமாரன்.

"சேனாதிபதியாரே! உங்கள் வீரத்திற்கும் விவேகத்திற்கும் முன் நான் சிறியவன். ஆனால், சமீபத்தில் அந்த கோட்டைக்கு சென்று வந்தவன் என்ற காரணத்தாலும், பாண்டிய மாமன்னரின் வெற்றியில் நம் அனைவருக்கும் பங்கு உண்டு என்ற காரணத்தாலும்தான் நான் ஒரு சில கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தி விட்டேன். நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும்."

உதயகுமாரனை தழுவிக் கொண்டார் மாரப்பவேள்.

''ஏன் உபதளபதியாரே! நாமே காவற்காட்டை அழித்து விட்டு முன்னேறினால் வெற்றி உறுதிதானே?''

யானைப் படைத் தலைவன் தன் கருத்தைக் கூற—

''நம் வெற்றியில் நமக்கு சந்தேகமே இல்லை. அதிக சேதம் இல்லாமல் அந்த கோட்டையை பிடிப்பதே நமது எண்ணமாக இருக்கவேண்டும். பல வருஷங்களாக அந்தக் காவற்காட்டை அமைத்துள்ளான் வேங்கை மார்பன். அது ஒரு இயற்கை அரண். அதை அழிக்காமல் கோட்டையைப் பிடிக்க வேண்டும். ஒருவேளை நமக்கே அந்த கோட்டை பிற்காலத்தில் உதவலாம்.''

''பலே! உதயகுமாரா! உன் எண்ணத்தை நான் வரவேற்கிறேன். நீயே அதற்குண்டான திட்டத்தைக் கூறு.''

உக்கிரப் பெருவழுதி தன் மீசையைத் தடவிக் கொண்டு, தன் உபதளபதியின் மதிநுட்பம் குறித்து மகிழ்ச்சி கொண்டான். ஆலோசனை சபையில் அனைவரின் கண்கள் உதயகுமாரின் மேல் பதிய, இரண்டு நாழிகை நேரம் தன் திட்டத்தை விவரித்தான். ஏதோ மாணாக்கர்களுக்கு பாடம் எடுப்பதுபோல், அவன் திட்டத்தை சொல்லிய வாதமும், அவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு அவன் பதில்கூறிய பாங்கும், அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின.

5

பாண்டிய மன்னர் உக்கிர பெருவழுதி வாள் உயர்த்தி, ஆயிரம் குதிரைப்படை வீரர்கள், ஆறாயிரம் காலாட் படை வீரர்கள், ஐம்பது யானைப்படை வீரர்கள், ஐம்பது தேர்ப்படை வீரர்கள் தங்கள் தங்கள் வாளை உயர்த்தி பாண்டியனின் புகழ் பாடி கானப்பேர் நோக்கி நகர்ந்தனர். முன்னால் தன் அரபுக் குதிரையில் அமர்ந்திருந்த சேனாதிபதி பொருள் பதிந்த பார்வையை அரசனுக்குப் பின்னால் இருந்த உதய குமாரன் மேல் வீசிவிட்டு, தன் வாளை உயர்த்தியபடியே நகர்ந்தார்.

"உதயகுமாரா! இந்த போரை உன் திட்டத்தின்படியே நடத்துகிறேன். அந்த வேங்கை மார்பனின் திமிரை அடக்க வேண்டியது உன் பொறுப்பு"

"ராஜ கட்டளையை ஏற்று தூதுவனாக மட்டும் நான் செல்லாமல் இருந்தால் அந்த வேங்கை மார்பன் அங்கேயே கொன்று போட்டிருப்பான். அவன் அழியும் காலம் வெகு தூரத்தில் இல்லை இன்றையிலிருந்து பத்தாவது நாள் கானப் பேர் கோட்டையில் தாங்கள் வெற்றித திருமுகததுடன் நுழைவது உறுதி."

உதயகுமாரனின் சொற்கள் உணர்ச்சியில் தோய்ந்து வெளிவர—

"நீ என்று புறப்படுகிறாய்?"

"என் யூகப்படி சேனாதிபதி காவற்காட்டின் முகப்பில் நாளை இரவு முகாமிடுவார். அங்கிருந்தே அவ்வப்பொழுது சிறு படைகளை அனுப்பி கானப்பேர் காவலர்களை சீண்டுவார் நான் நம் திட்டப்படி, என் படையை இரண்டாகப் பிரித்து, அவர்களை குடிமக்கள் வேடத்தில் நாளை மறுநாள் புறப்பட்டு, வடக்கேயும், தெற்கேயும் பல கல் சுற்றி இன்றிலிருந்து ஆறு நாட்களுக்குள் கானப்பேர் கோட்டையின் கிழக்கு வாசலுக்குப் போவேன்."

"கிழக்குக் கோட்டை வாயிலில் அவ்வளவு கண்காணிப்பு இல்லை என்கிறாயா?"

"கண்காணிப்பு உண்டு. ஆனால் அதிகமில்லை. கானப்பேரில் மொத்தம் நாலாயிரம் வீரர்கள்தான். ஆதலால் நமது சேனாதிபதி மேற்குக் கோட்டை வாயில் புறத்தே காவற்காட்டிற்கு வெளியே, முகாமிட்டு அவ்வப்பொழுது படை நகர்வது போல் போக்கு காட்ட, வேங்கை மார்பனின் கவனம் முழுவதும் அங்குதான் இருக்கும். மேலும் கிழக்கு வாயில் கோட்டை அருகில், அகழியின் அகலம் இருபது முழம்தான். வலுவான போர் கருவிகளும் யானைகளும் வர வேங்கை மார்பன் ஒரு நிரந்தர பாலம் கட்டியுள்ளான். முற்றுகை ஆரம்பித்தவுடன், அதை அவன் உடைத்து விடுவான். கிழக்கு கோட்டை வாயிலுக்கு எதிரே காவற்காட்டின் அடர்த்தி குறைவு. மற்றதை நான் சொல்லத் தெரிய வேண்டுமென்பதில்லை..."

உதயகுமாரன் அடக்கம் காட்ட, அவன் தோளில் கையை வைத்து, லேசாக தட்டி, அவனைப் பாராட்டிவிட்டு அரண்மனை படியேறினார் மாமன்னர் உக்கிரப் பெருவழுதி.

பாண்டியன் படை புறப்பட்ட பத்தாவது நாழிகையில் கானப்பேர் அரசவையில் அவசரமாக நுழைந்தான் அந்த ஒற்றன்.

"மன்னர் வாழ்க! பாண்டியன் படை புறப்பட்டு விட்டது."

தலைதாழ்த்தி பணிவுடன் கூற--

"பெரும் படையோ!"

"அவ்வளவு பெரிய படை இல்லை மன்னா? ஆனாலும் இந்த படையெடுப்பிற்கு மதுரையம்பதியே கலகலத்து விட்டது."

"வரட்டும் பாண்டியன் படை. இந்த கோட்டையின் பலம் தெரியாமல் வருகிறான் பாண்டியன்.. அவனுக்கு சரியான பாடம் புகட்டுகிறேன். இன்னும் ஒரு பட்சத்தில் பாண்டியன் அரியணை இந்த வேங்கை மார்பனுக்குச் சொந்தம்"

உரக்க குரல் கொடுத்து அரசவையே அதிரும்படி சிரிக்க—.

"மன்னா! வருமுன் உரைப்பது அமைச்சரின் கடமை"

"என்ன பெரிய கடமை அமைச்சரே."

"விவேகமற்ற வீரமும், வீரமற்ற விவேகமும் பயன் தராது" வேங்கை மார்பன் ஏறி——

"மன்னா, மன்னிக்க வேண்டும். இந்த கோட்டையின் பலம் ஒன்றை மட்டும் நம்பி நாம் போரில் இறங்குவது தவறு"

"என் வீரத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

"தங்கள்மீது எனக்கு என்றுமே நம்பிக்கை உண்டு. மாபெரும் வீரர்களில் தாங்களும் ஒருவர்."

"பின் என்ன சந்தேகம்?"

"இப்பொழுது பாண்டியன், சேரன், சோழன் மூவரும் நண்பர்கள் உங்கள் கருத்துப்படியே, பாண்டியன் தோற்றாலும், சேரனும் சோழனுமே அவனுக்கு உதவி செய்து போருக்கு

வருவார்கள். எனவே, போருக்கு இது தருணமன்று முதலில் அவர்களுக்குள் பகைமூளச் செய்ய வேண்டும். பின் உங்கள் வீரத்தைக் காட்டுங்கள்.’’

‘‘மந்திரியாரே! பாண்டியன் படை நகர்த்தி விட்டான். இனியும் நாம் நாள் நேரம் பார்ப்பது என் வீரத்திற்கு இழுக்கு. எவர் வரினும், இந்த வேங்கையை வெல்ல இயலாது. பொறுத்திருந்து பாரும்.’’

இனி விதிவிட்ட வழி என்று வாய் மூட—

‘‘சேனாதிபதியாரே! கோட்டையை விட்டு, அவசியமற்றவர்களை கிழக்குக் கோட்டை வாயில் வழியாக வெளியேற்றுங்கள். *கோட்டைச் சுவற்றில் உள்ள கூடுகளில் உள்ளை வளைவிற் பொறி, ஈயத்தைக் காய்ச்சி வீசும் பொறி, குரங்குப் பொறி, கற்களை வீசும் கவண், காய்ச்சிய எண்ணெயை வீசும் பொறி, தூண்டில் பொறி, ஆண்டலைப் புட் பொறி, பன்றிப் பொறிகளை படுத்துங்கள். அகழியில் உள்ள முதலை, சுறா, எட்டுக்கால் மீன்களுக்கு, இன்று முதல் உணவைப் பாதியாகக் குறையுங்கள். காவற்காட்டில் உள்ள இடுக்கிப் பொறிகளை தயார் நிலை வையுங்கள்.’’

உத்தரவுகள் மடமடவென்று விழ, அதை நிறைவேற்றப் புறப்பட்டார் சேனாதிபதி வேங்கை மார்பன் உத்தரவுப்படி. பொதுமக்கள், பெண்டிர், குழந்தைகள், அந்தணர்கள், வியாதியஸ்தர்கள், அனைவரும் வெளியேறிய பின், கிழக்குக் கோட்டை அகழியின் நிரந்தர பாலம் உடைக்கப்பட்டு, கோட்டைக் கதவு மூடப்பட்டது. வேங்கைமார்பன் வேங்கை போல் கோட்டைச் சுவற்றின் மேல் வலம் வந்து பாதுகாப்பை நேரிடையாகப் பார்வையிட்டான்.

7

பாண்டியன் படை புறப்பட்ட ஆறாவது நாள். மாலை முடிந்து இரவு தொடங்கிய நேரத்தில் உதயகுமாரன் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தான். பல மரப்பலகைகளை ஒன்று சேர்த்து பெரிய மரக்கட்டு ஒன்றை தயாரித்துக் கொண்டிருந்தான். இருபத்தைந்து முழ நீளம், பத்து முழ

* சங்க காலப் பாண்டியர்— பக்கம் 79.

அவளம், ஒரு சாண் அகலத்திற்கு அது அபாரமானது. [illegible] அதைச் செய்வதற்கு முயன்றிருக்கிறான். இரண்டு பிரிவாக வந்த அவன் படை [illegible] கோட்டைக்கு கிழக்கே உள்ள காட்டிற்குள் [illegible] ஒன்று கூட [illegible] தாமதம் செய்யாமல் ஒரே பகற்பொழுதில் அதை [illegible] உருவாக்கினான் அவன்.

இரவு வரத் தொடங்கியவுடன், தன் உதவியாளனிடம் மீதி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, காட்டுக்குள் உள்ள ஏதோ உதவியை எதிர்பார்த்து விரைந்தான் அவன். [illegible] பயணத்தில் அந்த மண்டபத்தை அடைய அவன் கண்கள் மலைத்தன.

குமரி தேவலோக மங்கை போல் அவன் வருகைக்காகக் காத்திருந்தாள். அவனைப் பார்த்ததும், நாணம் மேலிட மண்டபத்தின் தூணைப் பற்றி திரும்பி நின்றாள். அவன் அவள் அழகின் வனப்பு கண்டு மலைத்தான். மண்டபத்துத் தூண் தாங்கி நின்ற தீப்பந்தத்தின் ஒளி அவள் மேனியின் பின் பகுதியில் ஏகமாக படர்ந்தது.

மெல்லிய மஞ்சள் நிறம் கொட்டிய [illegible] ஒளி அவள் மேனியில் எழில் பிரதேசங்களை விளக்கப்படுத்திக் காட்ட அவன் உணர்ச்சிகள் உந்தப்பட்டன. [illegible] காரணத்தால், அவளின் [illegible] கண்டு [illegible] இரண்டே எட்டில் அவளை நெருங்கிய அவன் அவளைத் தொடாமல் பின்புறம் நின்று, [illegible] அவள் ஆடை [illegible], அவன் உணர்ச்சிகள் பிரவாகம் எடுத்தன.

உணர்ச்சிகள் உந்தப்படும்போது, [illegible] அவன் [illegible] வெளிப்படுத்தினான். [illegible] [illegible] அந்த [illegible] [illegible] பகுதியில் தன் [illegible] புதைத்தான்.

உணர்ச்சிகள் சங்கமம் செய்ய தொடங்கிய நேரத்தில்தான் [illegible] [illegible] காதலன் தருவதை [illegible]

டைன பாதியில் விட்டு விட்டதை உணர்ந்த குமரி, அவனை திரும்பி பார்க்க, அவன் முகத்திலிருந்து அவன் காதல் மயக்கத்தில் இல்லை அதைவிட வேறு முக்கியமான ஒன்று அவன் மனதை ஆக்கிரமித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு அவள் கை ஒன்றை தன் கைகளில் சிறை செய்தான.

"குமரி இன்னும் ஒரு ஜாமத்தில் என் பணி ஆரம்பித்து விடும் வெற்றி பெற்றால் திரும்ப வருகிறேன். இல்லையேல்..."

அவன் உதடுகளை தன் தளிர் விரல்களால் மூடியவள்—

"இல்லையேல் என்ற வார்த்தையே வேண்டாம். உங்கள் ஏற்பாடு எல்லாவற்றையும் நான் கவனித்தேன். வெற்றி உறுதி ஆனால் இன்னும் படை வீரர்கள் உங்கள் பக்கம் நின்றால் வெற்றிக் கனி எளிதில் கிடைக்கும்."

"இப்பொழுது இருக்கும் வீரர்களே போதும். அதிக ஆரவாரம் இருந்தால் வேங்கை மார்பன் விழித்துக் கொள்வான்."

"இந்த திட்டத்தை எப்படி உருவாக்கினீர்கள்? பாண்டிய மன்னர் எப்படி சம்மதித்தார்?"

"குமரி! வேங்கை மார்பனின் சிறையிலிருந்து என்னை நீ விடுவித்தாய், உன் தயவால் வண்டி ஓட்டி வேடத்தில் இந்த கிழக்கு கோட்டை வழியாக தப்பித்தேன். இந்த கிழக்குக் கோட்டை வாயிலும் அதன் பொறி அமைப்புகளும் எனக்கு இப்பொழுது அத்துப்படி. இந்த இடத்தில்தான் அகழியின் அகலம் குறைவு. மேலும், ஈழ நாட்டுடன் வர்த்தக அமைப்புக்காக வேங்கை மார்பன் இந்த இடத்தில் அதிக அடர்த்தியில்லாமல் அமைத்திருக்கிறான்.

முற்றுகை ஏற்படும் முன், வேங்கைமார்பன் பொதுமக்களை இந்த வழியாகத்தான் வெளியேற்றுவான். அதனால் உன்னையும் அவர்களுடன் சேர்ந்து வெளியே வரச் சொன்னேன். எங்கள் வீரர்களையும் சாதாரண மக்கள் உடையிலேயே கூட்டி வந்தமையால், இந்த இடத்தில் கூட்டம் இருந்தாலும் அவன் கவனம் இதில் திரும்பாது. போதாக்குறைக்கு [illegible] மேற்குக் கோட்டைக்கு வெளியே [illegible] பெரிய படையுடன் இருக்கிறார். அடிக்கடி தாக்குவது போல பாவனை காட்டுகிறார். வேங்கைமார்பனின் முழுக் கவனமும் மேற்குக் கோட்டையில்தான் இருக்கும். எங்கள் திட்டப்படி இன்று இரண்டாம் ஜாம தொடக்கத்தில் போருக்கு ஆயத்தம் செய்வது போல் நடிப்பார். தளபதி வேங்கைமார்பன் தன் முழு பலத்தையும், மேற்குக் கோட்டையில் பிரயோகிப்பான். அந்த சமயம் நான் கிழக்கு கோட்டையை தாக்குவேன்."

"அதெப்படி இடையில் தான் அகழி உள்ளதே"

குமரி சந்தேகம் எழுப்ப—

“அதற்குத்தான் பெரிய மரத்தட்டு செய்திருக்கிறேன். கிழக்குக் கோட்டை வாயில் அகழியின் அகலம் இருபது முழம் இருக்கும். என் மரத்தட்டு இருபத்தைந்து முழம். அதை உருளை வண்டியில் சாய்வாக நிற்க வைத்து தள்ளிச் சென்றால் கோட்டையின் உள்ள பந்த வெளிச்சத்தில் மரத்தட்டு கிட்டே வரும்வரை தெரியாது. அப்படியே அவர்கள் தெரிந்து பொறிகளை இயக்கினாலும் மரத்தட்டு தடுத்துக் கொள்ளும். அகழியை நெருங்கியவுடன் மரத்தட்டைப் படுக்கப் போட்டால் அது அகழிமேல் பாலமாய் அமையும். பின் என்னுடைய ஆறு யானைகள் கோட்டைக் கதவை பிளந்து விடும்.”

“அருமையான யோசனை.”

“உன் பாராட்டை வெற்றி வந்தவுடன் பெற்றுக் கொள்கிறேன். முதல் ஜாமம் முடிய இன்னும் இரண்டு நாழிகைகள் தான் உள்ளது வா! மரத்தட்டை தயார் செய்வோம்.”

இருவரும் நடக்க, வானத்தில் நிலவு அன்றைய போரைப் பார்க்க தன் கிரணங்களை முழுமையாக்க—

உதயகுமாரன் திட்டங்கள் அனைத்தும் நடந்தது. மார்ப்பவேள் இரண்டாம் ஜாமத் தொடக்கத்தில் போர் முரசு கொட்ட அதே நேரத்தில் மரத்தட்டை உருளை வண்டியில் சாய்வாக பிடித்து ஐந்நூறு வீரர்கள் கிழக்குக் கோட்டை வாயிலை நெருங்கினர்.

உதயகுமாரன் எதிர்பார்த்தபடியே எதிர்ப்பு அதிகமில்லை. கோட்டைச் சுவர் கட்டுக்களில் (கொத்தளங்கள்) இருந்து எரியம்புகள் பறந்து வந்தாலும் அவை மரத்தட்டுக்கு அதிகம் சேதம் விளைவிக்கவில்லை. அகழியின் கரையை அடைந்து மரத்தட்டை செங்குத்தாக நிறுத்தி, மடேர் என்று போட அது கோட்டை வாயிலுக்கு பாலமாக அமைந்தது. உதயகுமாரன் கட்டளைப்படி ஐந்து யானைகள் அந்த மரத்தட்டுப் பாலத்தின் மேல் நடந்து கோட்டை வாயிலை அடையும்வரை எதிர்ப்பும் குறைவாகவே இருந்தது. அதற்குப்பின் நடந்ததை உதயகுமாரன் எதிர்பார்க்கவேயில்லை. அது மாதிரியான ஒரு அதிர்ச்சியை அவன் வாழ்நாளில் சந்தித்ததே இல்லை.

யானைகள் கோட்டை வாயிலை அடைந்தவுடன், அதன் கதவு சரேலென்று திறக்க உதயகுமாரன் அதிர்ச்சி அடைந்தான். எந்தக் கோட்டைக் கதவை யானைகளைக் கொண்டு பிளக்க வைக்க நினைத்தானோ, அவை எதிர்ப்பில்லாமல் தானாகவே திறந்தது. அடுத்த வினாடி அவன் வியப்பின் விளிம்பிற்குச் சென்றான். திறந்த கோட்டை வாயிலை அடைத்

துக் கொண்டு வேங்கை மார்பன் சங்கிலியிட்ட பத்து வேங்கைகளை பிடித்தபடி நின்றான்.

“உதயகுமாரா! பகலில் பக்கம் பார்த்து பேசு, இரவில் அதுவும் பேசாதே என்ற பழமொழி தெரியுமா?”

வேங்கை மார்பனின் பேச்சுக்குரல் அவனுக்கு பய உணர்ச்சியை உணர்த்தியது. அவன் குமரியுடன் விவரித்துக் கொண்டிருந்த போர்த்திட்டம் அதற்குள் வேங்கை மார்பனுக்கு தெரிந்திருக்கிறது. யாரோ ஒற்றன் தூதுப்புறா மூலம் செய்தி அனுப்பியிருக்கிறான்.

“என்ன உதயகுமாரா? திட்டம் பலிக்கவில்லை என்ற கலக்கமா? மயங்கி நிற்கிறாயா?”

வேங்கை மார்பனின் குத்தலான குரல்—

“திட்டம் உடைந்தால் என்ன வேங்கை மார்பா! இப்படி இடைஞ்சல் வந்தால் அதையும் சமாளிப்பான் இந்த உதயகுமாரன்.”

“சமாளிப்பாயா? இதைச் சமாளி.”

கையில் பிடித்திருந்த சங்கிலியை விட, பத்து வேங்கைகளும் யானைகளை நோக்கி பாய்ந்தன. இந்த சூழ்நிலையில் வேறு யாராக இருந்தாலும் தோல்வியைத்தான் சந்தித்திருப்பார்கள் எந்த சூழ்நிலையிலும், தன்னையும் தன் படைகளையும் காத்துக் கொள்ள திறமையுள்ள உதயகுமாரன் தன்னுடன் இருபது வீரர்களை உடன் அழைத்துக் கொண்டு தீ பந்தங்களுடன் முன்னேற, தீ பந்தங்களை கண்ட வேங்கைகளும் யானைகளும் மிரண்டன. அந்த தீ பந்த வெளிச்சத்தில் வில்லவர்களின் திறமைக்கு, நான்கு வேங்கைகள் பலியாக, மூன்று வேங்கைகள் அகழியில் பாய்ந்தன. மற்றவை திரும்பி ஓடின. ஆனால் யானைகளில் இரண்டு இறந்து கோட்டை வாயிலின் குறுக்கே விழ, கதவை மூட முடியாமல் கானப்பேர் காவலர்கள் திணற, உதயக்குமாரனின் வாள் அன்று இந்திர ஜாலம் செய்தது.

மேற்குக் கோட்டை வாயிலில் சிறிது சிரமத்திற்குப் பின் வழிவிட யாரப்பவேளும் கோட்டையினுள்ளே விரைந்தார். பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்குபோல் வேங்கை மார்பனின் படை நசுக்கப்பட வேங்கை மார்பன் தப்பி ஓடினான். அவனை வேண்டுமென்றே தப்பி விட்டான் உதயகுமாரன்.

“வேங்கை மார்பா! நான் உன் கோட்டையிலிருந்து ஒரு பெண்ணின் உதவியால் தப்பினேன். அதற்கு பிராயசித்தமாக உன்னைத் தப்ப விடுகிறேன் ஓடிப்போ.”

வேங்கை மார்பன் கிழக்குக் கோட்டை வாயில் வழியாக தப்பி ஓடினான். மாரப்பவேள் அவனை தடுக்க முயன்ற போது—

"சேனாதிபதியாரே! அவனை தடுக்க வேண்டாம்."

"அவன் நம் எதிரி."

"தெரியும்" இது ராஜகட்டளை. வேங்கை மார்பன் தப்ப நினைத்தால் அவனை தப்பவிடச் சொல்லியிருக்கிறார் மாமன்னர்"

"ஏன்?"

"ஒரு வலுவான கோட்டையைக் கட்டிய வேங்கை மார்ப னுக்கு நம்ம மாமன்னர் காட்டும் நன்றி."

மறுநாள்—

பகலில் உக்கிரப் பெருவழுதி. கானப்பேர் அரியாசனத்தில், போரில் வீரம் காட்டிய மற்றவர்களுக்கு பரிசு வழங்கினார். உதயகுமாரனிடம் அக்கோட்டையை நிர்வக்கும் பொறுப்பை கொடுத்துவிட்டு, அவனை தனியே அழைத்து—

"உதயகுமாரா! இந்தக் கானப்பேர் கோட்டையைப் பிடித்து விட்டாய். ஆனால், குமரிக் கோட்டையைப் பிடிக்க முடியுமா பார்."

உக்கிரப் பெருவழுதியுடன் நகைச்சுவை குமரியின் முகத்தில், செம்மையை வரவழைத்தது.

இரவு நேரம்.

விருந்தினர் மாளிகையின் அதே அறை

கந்தர்வலோக கன்னிபோல் எழிலுடன் நின்றாள் குமரி.

உதயகுமாரன் அவளை நெருங்கி தோள்களில் கையை வைத்தான் கானப்பேர் கோட்டையைப்பிடித்த அந்த வீரனை தன் இஷ்டம்போல் ஆட்டுவித்தாள் அவள் உள்ளபடியே உதய குமாரன் திகைத்துவிட்டான் குமரிக் கோட்டையை தன் ஆளுகைக் கொண்டுவர முயற்சித்தான்.

அவர்கள் விளையாட்டைக் கண்ட வெண்ணிலா வெட்கப் பட்டு முகிலின் மறைந்தது

(முற்றும்)

பக்கத்தில் ஒரு பயங்கரம்...!

- விஜயநிலா

ரிஸிவரை தன்கையால் கவ்விக் கொண்டு காதிற்கு கொடுத்தாள் மிருனாளினி. மறுமுனையில் கிடைத்த கரகரப்பான குரலைக் கேட்டதும் உற்சாகமானாள்.

"ஹை... எப்ப ஸார்... எப்படி ஸார்... நிஜமா நீங்க சொல்வது நம்ப முடியலையே" என்று குதூகளித்த மிருனாளினிக்கு வயது இருபதுக்குள். மா நிறத்துக்கு மேம்பட்ட நிறத்தில் கொஞ்சம் ஸ்ரீதேவி, கொஞ்சம் மீனாட்சி ஷேசாத்ரி என்று கதம்பமாக இருப்பாள். கம்ப்யூட்டர் சயன்ஸ் முடித்தகையோடு வீட்டில் வார மாத இதழ்களில சமையல் குறிபபு படித்துக் கொண்டு கார்டன் பேரல்லி ராஜ்கமல் வகையறாங்களில் மனதை பறிகொடுத்துக் கொண்டிருக்கிற சக பெண்கள் மாதிரி இருக்கப் பிரியப்படாதவள். ஆறு மாத காலமாக சுரேஷை லவ்விக் கொண்டிருப்பவள்.

"வாவ்... இப்பவே புறப்பட்டாச்சு ஸார்...கிளம்பிட்டேன். உடனே லாபுக்கு வரேன்" என்ற மேற்படி மிருனாளினி இரண்டு மாதமாக புரொபஸர் தீனதயாளிடம் ரிஸர்ச் அஸோஸியேட்டாக இருக்கிறாள். தீனதயாள் கம்ப்யூட்டர் டெக்னாலஜியில் பிரபலமானவர். குறிப்பாக ரோபோட்டிக்ஸில் மன்னன்

என்று சக புரொபஸர்களால் (பொறாமையோடு) பாராட்டப் படுபவர்.

கிளம்பினாள். அவசரமாய் பாத்ரூம் போய் ஷவரில் கீழ் ஒன்று ஊசியாய் குத்துகிற தண்ணீரின் ஜில்லிப்பை ரசித்து (அட... கண்ணனை முடிக்குங்க ஸார் தப்பு!) அவசரமாய டைனிங் ஹாலுக்கு வந்து ப்ரட் ஜாமை திணித்துக் கொண்டு ஜீன்ஸ் டீ ஷர்ட்டில் கிளம்பி ஹோண்டாவை எடுத்துக் கொண்டு தில்லை நகருக்கு விரைந்தாள்.

தில்லை நகரில் நாலாவது கிராஸில் இருந்தது அந்த பச்சை நிற டிஸ்டெம்பர் உடுத்தியிருந்த பங்களா. பக்கத்து வீடுகளில் ஆள் இருப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. சாலை முழுக்க வெறிச்! வெய்யிலில் எட்டரை மணிக்கே உக்கிரமாய் பார்க்கத் துவங்கியது. வேப்பமரக் கிளைகளில் ஃப்ளாட் கட்டியிருந்த காக்காய்கள் கத்தக்கூட திராணியின்றி தூங்கிக் கொண்டிருந்தன. ஒன்றிரண்டு பண்டிட்டுகள் (பண்டிட்டுக்களுடன்!) கயல், பார்த்திபன் பற்றி பேசிக் கொண்டு ஆசிர்யமில் போனார்கள். சாக்கடையில் பன்றிக் குட்டிகள் இலவச பாத் எடுத்துக் கொண்டிருந்தன.

உள்ளே போனார்கள்.

அந்த இடம் பகலிலேயே கொஞ்சம் மர்ச்சுவரித்தனமாய் இருக்கும். கொலை விழுந்தால்கூட ?—என்று கேட்க ஆள் இருக்க மாட்டார்கள். அது புரொபஸர் தீனதயாளனின் ஒஸ்டன்ஸ் எம்லைப்ரட்டா.

உற்சாகமாய் வெளிப்பட்டார் தீனதயாளன். தீனதயாளனை வர்ணிப்பது கொஞ்சம் சிரமம். தலையில் ஒரு அலார வட்ட வடித்த மாதிரி வழுக்கை வாங்கியிருந்தார். செம்பட்டைச் சுற்றியிருந்த முடிகளுக்கு டைபடித்து வைத்திருந்தார். இடுங்கிய கண்களுக்கு மேல கோதபோட்ட புருவம். நீண்ட கூரான நாசி. அதற்கு கீழ் சதுகாய மீசட்டை போட்டு [illegible] இளமையை வரவழைக்கப் பார்த்திருந்தார்.

வெள்ளை நிற குர்தாவில் தன் தொப்பையை ஒளித்து உடலைத் திணித்திருந்தார். மருவாணிகளை பார்த்ததும் ஒரு தாராளப் புன்னகையை வீசியபடி—

“வாம்மா மிருணா!” என்றார்.

சோபாவில் தன் பின்புறத்தை திணித்துக் (அட... [illegible] பெண்பலசிப்பது!) கொண்டாள் அவரை ஆர்வமாய் பார்த்தாள்.

"என்ன புரொபஸர் ஜோ எப்படி இருக்கான்."

ஜோ என அவள் குறிப்பிட்டது மனித ஜீவன் எதையும் இல்லை. முன்பே நமக்கு தெரியும். புரொபஸர் ரோபோட்டிக்ஸிலும், கம்ப்யூட்டர் டெக்னாலஜியிலும் கிங் என்று. அது அவரே உருவாக்கிய ரோபோ. ஒரு வகையில் பார்த்தால் உலோகத்தாலான இயந்திரம். ஆனால் அவரது ஆணைகளுக்கு கட்டுப்பட கூடிய வகையில் அதன் ப்ரொக்ராமிங் யூனிட்டை அமைத்திருக்கிறார். வந்திருக்கிற கெஸ்ட்டை குட்மார்னிங் சொல்லி வரவேற்று ஜூஸ் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமா... டெலிபோன் பில் கட்டியாயிற்றா என்று கணக்கு பார்த்து சொல்ல வேண்டுமா. முட்டையை உடைத்து ப்ரஷர் பானில் ஆம்லெட் போட்டு டைனிங் டேபிளில் பரிமாற வேண்டுமா. ஜோவை தக்கபடி தயார்படுத்தியிருந்தார். இப்பொழுது மனிதன் செய்கிற எல்லா காரியங்களையும் செய்ய ஜோ தயார். ஒரே ஒரு விஷயத்தை தவிர அதை மட்டும் வெற்றிகரமாக செய்து முடித்து விட்டால் கிட்டத்தட்ட ஒரு உலோக மனிதனை நிர்ணயம் செய்துவிட்ட மாதிரி தான்.

"இப்ப ப்ரோக்ராமிங்ல பண்ணின சின்ன இம்ப்ரூவ்மெண்ட்டால ஜோ இப்ப ரொம்ப தேறிட்டான் மிருண்... என்னோட இப்போதைய கேள்வி என்ன தெரியுமா?"

"மனிதர்களுக்குண்டான உணர்வுகளை ரோபோவுக்குள்ள புகுத்த முடியுமாங்கறதுதான்! அதில ஏறக்குறைய வெற்றி கிடைச்சாச்சு."

"எ...எப்படி ஸார்."

"காலைல எழுந்ததுமே ந்யூஸ் பேப்பரை சப்ளிமெண்ட்ரி இஷ்யூஸ்களோட ஏன் கரெக்டா மடிச்சு கொண்டு வரலைன்னு ஜோவை திட்டினேன். உடனே என்ன ஆச்சு தெரியுமா..."

ஆர்வமாய் பார்த்தாள் மிருணாளினி.

"ஜோவுக்கு கோவம் வந்திடுச்சு மிருண். என்கூட பேசாம ஒரு மூலைல போய் உட்கார்ந்திருச்சு. கேட்கிற கேள்விகளுக்கு இரண்டொரு வார்த்தையில் பதில்... மத்தபடி மௌனம்..."

சிரிப்புடன் எழுந்து சென்ற தீனதயாள் ஃப்ரிட்ஜிலிருந்து கொண்டு வந்து நீட்டினார். எடுத்துக் கொண்டாள். மெல்லமாய் உறிஞ்சிக் கொண்டே அவரைப் பார்த்தாள். கேட்டாள்.

"இப்போ ஜோ எங்க ஸார்."

"லாப்ல இருக்கான். சில அஸைன்மெண்ட்ஸ் குடுத்திருக்கேன். இப்ப நீ ஒரு காரியம் பண்ணனும் மிருண்."

"என்ன ஸார்!"

"நேரே லாபுக்கு போயி ஜோகிட்ட புரொபஸர் கோவத்திலதான் அப்படி பேசிட்டாருன்னு அவனை தட்டிக் குடுத்து சாமதானம் பண்ணனும். அதைநான் மறைஞ்சிருந்து அவனை அப்ஸர்வ் பண்ணப் போறேன்."

"ஓகே ஸார்" என்றாள் மிருணாளினி தன்னை தொடரப் போகிற ஆபத்தை அறியாமல் புரொபஸர் பின்னால் லாபரேட்டரியை நோக்கி நடந்தாள்.

பங்களாவின் பின்புறத்தை தனது லாபரேட்டரியாக மாற்றி இருந்தார் தீனதயாள். அரை முழுக்க டெர்மினல்கள் மாணிட்டருடன்கூடிய பி.ஸிக்கள். ஜோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். உலோக உடல். உருண்டையான உலோகத் தலை. கண்களுக்கு பதிலாக இரு சிவப்பு குமிழ்கள். ஒடிசலான தேகம். குச்சிபோல் கை, கால்கள்.

அருகே போனாள் மிருணாளினி. அது அவன் உட்கார்ந்திருக்கிற நிலையை பார்க்க அவளுக்கு சிரிப்புவந்தது. கோபித்துக் கொண்டிருக்கிற ஒரு குழந்தைபோல ஜோ தரையில் அமர்ந்திருந்தது.

"ஜோ... இங்கே பார்."

கூப்பிட்டாள்.

பதிலில்லை.

"ஜோ... இங்கே என்னைப் பாரு, மிருண் வந்திருக்கேன். என்ன புரொபஸர் திட்டினாரா உன்னை கோவத்துல உன்னை அப்படி பேசி இருப்பாரு. அதையெல்லாம் ஒண்ணும் நீ மனசுல (?) வச்சுக்காதே."

மீண்டும் பதிலில்லை.

"ஜோ... என்னாச்சு உனக்கு? இங்கே பாரு."

இப்போதும் பதிலில்லை. அதே போஸில் அமர்ந்திருந்தது. குழப்பமாய் திரும்பி புரொபஸரை பார்த்த மிருணாளினி திகைத்தாள்.

புரொபஸர் உதடுபிரியாமல் வாய் கோணலாய் சிரித்தபடி நின்றிருந்தார்.

"ஸார்... இது... ஜோ... வந்து"

"என்னம்மா புரியலியா... ஜோ சும்மா கிடக்கறானேன்னு பயமா இருக்கா. இங்க பாரு என் கையில ரிமோட் கண்ட்ரோல் இதை இயக்கினாதான் ஜோ செயல்படுவான்."

"ஸார் வந்து... எ... என்ன அப்படி பார்க்கிறது."

"பயப்படாத மிருண். உன்னை வரச்சொன்னது ஜோவை சமாதானப்படுத்த இல்லை. அவனுக்கு இரையாகப் போறதுக்கு."

"எ... என்ன சொ... சொல்றீங்க புரொபஸர்"

மிரண்டாள்.

மறுபடி உதடு பிரியாமல் சிரித்தார். தன் வழுக்கைத் தலையை ஹாங்கியால் ஒற்றியபடி சொல்லத் துவங்கினார் தீனதயாள்.

"ஸாரி மிருண். என்னோட ஆராய்ச்சியோட நோக்கம் உனக்கு தெரிய வாய்ப்பில்லே. இது வரைக்கும் சாதாரண இயந்திரமா கட்டளைக்கு அடிபணியற மிஷினாதான் ரோபோவை எல்லாரும் உபயோகப்படுத்தி இருக்காங்க. நான் கொஞ்சம் வித்யாசமா செயல்பட ஆரம்பிச்சேன்... ஆர்ட்டிஃபிஷியல் இன்டலிஜின்ஸை பயன்படுத்தி ஒரு ரோபோவை சிந்திக்க வைக்க முடியும். பட் பிராக்டிகலா இது சக்ஸஸாகலே, போனவாரம வரைக்கும். ஸோ... நான ராத்திரி பகலா உழைச்சு ஜோவை ஒரு சிந்திக்க கூடிய ரோபோ மாத்திட்டேன். ஸோ திட்டினா கோவப்படுற ரோபோவை முழுமையான மனுஷனா பார்க்கணும்னா மனிதன்கிட்ட இருக்கற செக்ஸ் உணர்வு ரோபோகிட்ட என் செல்ல ஜோகிட்ட இருக்கான்னு பார்க்க வேணும்... அதுக்காகத்தான் உன்னை தயார் பண்ணினேன். இப்ப உன்னை என்னோட செல்ல சமர்த்து கண்ணு ஜோ ரேப் பண்ணப்போறான்."

"ஓ நோ" என சீறிட்டாள்.

"ஸாரி பேபி... இப்ப கோராஹா ஸீன் ஆரம்பமாகப் போவுது நீ சுலபத்துல தப்புச்சு ஓட முடியாது. இத பார்த்தியா என் கையில அமெரிக்கன் மேட் பிஸ்டல் இருக்கும்

காட்டாமே சுடும். தவிர நீ சாப்பிட்ட ஜூஸில லேசா ரொம்ப லேசா போதை மருந்து கலந்திருக்கேன்.''

விறிட்டாள் மிருணாளினி. அலட்சியப்படுத்திய தீனதயாள் அவளருகே வந்து டிஷர்ட்டில் மார்புப் பகுதியில் கொத்தாகக் கை வைத்து கிழித்..தார். ரிமோட் கண்ட்ரோலை இயக்கியதும்— ஜோ தலையை சிலிப்பிக் கொண்டு எழுந்தது. கிழிந்த பணியனில் வாளிப்பான மென்மைப் பகுதிகள் வெளிப்பட நின்ற மிருணாளினியையும் அருகே நின்றிருந்த புரொபஸரையும் பார்த்த ஜோவுக்குள் பளிச்! எதுவோ புரிந்தது.

கண்களில் வெறுப்புடன் நடந்து வந்த ஜோ அவர்கள் அருகில் வந்ததும் சொத்தென்று கைகளால் ஒரு இறக்கு இறக்க திகைத்துப் போன புரொபஸர் ச...ரி...ந்...தா...ர். அவரது பிஸ்டல் ஜோவின் மார்புப் பகுதியிலிருந்த கண்ட்ரோலிங் யூனிட்டை பதம் பார்க்க ஜோ சரிந்தது.

''ஸாரி புரொபஸர். உங்க திட்டம் நேத்தே தெரிஞ்சுதான் ஜோ கிட்ட நான் அவனை லவ் பண்றதா டேப்விட்டு நம்ம காதலுக்கு முதல் எதிரி நீங்கதான்னு சொல்லி வைச்சிருந்தேன். ஸோ காதல் வசப்பட்ட ஜோ உங்களை தீர்த்துட்டான்'' என சொல்லிக் கொண்ட மிருணாளினி வெளியேறினாள்.

வாழப்போவது வரதட்சணை அல்ல...!

மனப் பெண் தேடும்
மாணவர்களே!
நீங்கள்—
பெண் வீட்டாரிடத்தில்
வைரங்களை கேட்பதை
கை விடுங்கள்!
□
குடும்ப வாழ்வு
குதூகலமாய் அமைய—
குலங்களின்
குண நலனையே
வரதட்சணையாய்
கோறுங்கள்!
□
உங்களோடு
வாழப்போவது
வரதட்சணை அல்ல!
வரும் லட்சுமியே!

※

சிந்திக்க மறந்ததும் ஏனோ...?

பெண்ணில்
தொன்றியும்—
பெண்ணை மணக்க—
பொன்னை கேட்கும்
மன்னவர்களே!
நீங்கள்—
சிந்திக்க—
மறந்ததும் ஏனோ!
பெண்கள் மட்டும்
இல்லை என்றால்!
உங்களை
பெற்றவள் யார் என்று
சொல்லுங்களேன்?

—கவிஞர். இராஜ்கங்கநந்தன்

காகித கணைகள்

● ராஜேஷ்குமாரின் இருட்டில் வைத்த குறி எங்களை மெய்சிலிர்க்க வைத்து விட்டது. படுசுப்பராக இருந்தது. கைகளை அழகுபடுத்துங்கள் மற்றும் மனிதனின் உள்பகுதி பயனுள்ள செய்திகள். புஷ்பா தங்கதுரையின் அடுத்த நாவலுக்கு இன்றிலிருந்தே ஏங்குகிறேன் சார்.

—G. அமுதா சங்கரன், வேடந்தவாடி.

● ராஜேஷின் "இருட்டில் வைத்த குறி" படித்தேன் கதையை "மாறிமாறி". காரணம் படிக்க வைத்தது தலைப்பு "கோரி கோரி." அந்த அளவு கதையோடு போய்விட்டேன் "ஒன்றி" அளித்த கார்த்திகாவுக்கு மனது கூறுகிறது இருகரம் கூப்பி "நன்றி!"

—ஜே. ஜனார்த்தனன், சேலம்.

● இருட்டில் வைத்த குறி நாவல் அற்புதம் எங்கே புவனேசும் யோகேசும், தப்பித்து விடுவார்களோ என்று நினைத்தேன் நல்ல வேலையாக கடைசியில் மாட்டிக் கொண்டார்கள். அண்ணன் ராஜேஷ் அவர்களுக்கும் கார்த்திகா ஆசிரியர் எம்.கே. சாமி அவர்களுக்கும் எனது நன்றி.

—ஆர். துரை, ஆர்ப்பாக்கம்.

● ராஜேஷ்குமாரின் 'இருட்டில் வைத்த குறி' தலைப்பு மட்டுமில்லாமல், நாவலும் வித்தியாசமான முறையில் "காகித கணைகள்" பகுதியில் வாசகர்களுக்கு தாங்கள் முக்கியத்துவம் தருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

—வெ. சங்கரநாராயணன், திருவண்ணாமலை.

● வைரங்களை இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல புவனேசும் யோகேசும் வைத்த 'குறி' தப்பி அவர்களுக்கு 'யோகம்' இல்லாமல் போனாலும் விறுவிறுப்பையும் மர்மத்தையும் கலந்து "இருட்டில் வைத்த குறி" மூலம் ராஜேஷ்குமார் வாசகர்களை கவரவைத்த குறி தவறவில்லை.

—இரணியல் 'கலை', குமரிமாவட்டம்.

● ராஜ கட்டளை குறுநாவல் எழுத போகிறவர் யார் என்று கேட்கிறீர்கள்? நாவலிலே ஊறிபோன தாங்கள் இதைகூட

தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் என்ன ஸார். சாட் சாத்-டிடக்டிவ் ஃப்ளாஷ் பெருமை குறிய தேவிபாலாவேதான் என்கிறேன் நான். (அயம் கரைட்)

—கே. விஸ்வநாதன், பெங்களூர் 38.

● அதிகப் பக்கங்களுடன், அழகான வண்ண அட்டை ஓவியத்துடன் வந்த 'கார்த்திகா' ஏ-ஒன்!

—உமார்த்தி, கோவை.

● இம்மாத "கார்த்திகா"வில் இடம் பெற்றிருந்த, ராஜேஷ் குமாரின் இருட்டில் வைத்த குறி, சற்றே மாறுபட்ட அப்ரோச்சில் படைக்கப்பட்டிருந்தாலும் படு த்ரில்லிங்காக இருந்தது.

—இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

● பேராசை பெரு நஷ்டம் வைரக் கற்களை சொந்தமானவன் அனுபவிக்க விடாமல் மற்றொருவன் கைப்பற்றி கடும் தண்டனைக்கு உட்படுத்தப் படுகிறான். "இருட்டில் வைத்த குறி" இரட்டிப்பு வெளிச்சத்தை கக்கிவிட்டது. "ராஜ கட்டளை" ரகம் மிகுதியானது.

—ரஜினிமுருகன், கங்கைகொண்டான்.

● 'உடற்பயிற்சிப் பற்றி அறியாதது ஏன்?' கட்டுரையைப் படித்த பெண்கள் இனி தவறாது உடற்பயிற்சி மேற்கொள்வார்கள். நாம் அன்றாடம் பயன்படுத்தும நம் கைகளைப்பற்றி இவ்வளவு விஷயங்களா? ஆச்சர்யப்பட்டுப் போனோம்.

ராஜேஷ்குமாரின் 'இருட்டில் வைத்த குறி' முடிவு வரை விறுவிறுப்பாக இருந்தது.

—ரவிமயில், சேலம்.

● ராஜேஷ்குமாரின் 'இருட்டில் வைத்த குறி' புதுமையான சப்ஜெக்ட ஸார்! அத்தியாயத்திற்கு அத்தியாயம்புகுந்து விளையாடி விட்டார் ராஜேஷ். ஏழாவது பக்கம் வரை எங்களை சீட்டைவிட்டு எழ வைக்கவே யில்லை நாவலில் இருந்த பரபரப்பு, சுறுசுறுப்பு அத்தனையும் எங்களுக்கு மிகவும பிடித்து போயின. 20-ம் நூற்றாண்டில சிறந்த படைப்புதான் 'இருட்டில் வைத்த குறி' பாராட்டுக்கள்.

—மு.க. இந்துக்குமரப்பன், விழுப்புரம்.

● இந்த மாத கார்த்திகாவில் க்ரைம் மன்னன் ராஜேஷ்குமார் அவர்களின் 'இருட்டில் வைத்த குறி' படிக்க படிக்க ஒரு திகில் சார். வெளியிட்ட திரு. M K.S.க்கு நன்றி. அட்டைப்படம் சூப்பர். மனிதனின் உள் பகுதியை பற்றியும, பெணகள் உடற் பயிற்சியைப் பற்றியும் அருமையான விளககம் பாராட்டுககள் பல.

—ஆர். புவனா ராமன், வேடந்தவாடி.

✽

இதனையும் தெரிந்து கொள்வோம்!

கே.ஜி.எஃப். பழனிச்சாமி

□ ஒரு மாதமே கடந்த குழந்தைக்குக் கூட **புற்றுநோய்** வரும் வாய்ப்பு உண்டு!

□ ஜனத்தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருப்பதால் கி.பி. 2000 இல் இந்த உலகம் முழுவதும் படிப்பறிவற்றவர்கள் ஒரு பில்லியன் பேர் இருப்பார்களாம்!

□ மூன்றாவது உலக நாடுகளில் மொத்தமாக 36 நாடுகளின் முன்னேற்றம் என்பது மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த நாடுகளின் மொத்த ஜனத்தொகை இருநூறு மில்லியன்.

□ சர் நோயல் கோவார்ட் (1899—1973) என்னும் ஆங்கில நாவலாசிரியர் 'ஹே பீவர்' என்னும் புகழ்பெற்ற சிரிப்பு நாவலை மூன்றே நாட்களில் எழுதி உலகப் புகழ்பெற்றார். சாதனையும் புரிந்தார்.

□ GOD FATHER என்ற திரைப்படம் அது திரையிடப்பட்டு ஒரு வருடம் கழிந்த பின்னே அது நூறு மில்லியன் டாலர் பணத்தை வென்று தந்தது. இது ஒரு சாதனையாகும்.

□ நோயாளிகளுக்குப் பயன்படும் வெந்நீர்ப் பையில் சிறிது உப்பைச் சேர்த்தால் ரொம்ப நேரத்திற்குச் சூடு குறையாமல் இருக்கும்.

□ இந்தியாவில் தயாராகும் பிஸ்கெட்டுகளில் 55 சதவிகித பிஸ்கெட் தயாரிப்பு கிராமப் புறங்களில்தான் பயன்படுத்தப்படுகின்றன. நகர்ப்புறங்களில் வாழ்பவர்கள் உட்கொள்வது உயர் ரக பிஸ்கெட்டுகளை!

□ ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஆங்கஸ் பார்பேரி என்பவர் 1965ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1966ம் ஆண்டு ஜூலை மாதம் வரையில் (மொத்தம்) 335 நாட்கள் கெட்டி ஆகாரம் எதுவும் இல்லாமல் டீ, காப்பி, தண்ணீர் போன்றவற்றை மட்டுமே உட்கொண்டு உயிர் வாழ்ந்தான். அதன் பயனாக அவரின் எடை மூன்றில் இரண்டு பாகம் குறைந்து போயிற்று.

□ ஆசியாவிலும் ஆப்பிரிக்காவில் பாம்புக் கடியால் ஆண்டுதோறும் இறப்பவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கும் மேலே.

□ புல்லாங்குழல் மேதையாக விளங்கிய சரப சாஸ்திரியும் வயலின் மேதை துவாரம் வெங்கடசாமி நாயுடுவும் சிறு வயதில் அம்மை நோய் வந்து பார்வையிழந்தவர்கள். அக்குறை அவர்கள் திறமை வெளிப்பட தடையாக இருக்கவில்லை.

□ டைகோ பிராஹே என்பவர் புகழ்பெற்ற டென்மார்க் நாட்டு வானவியல் அறிஞர். முன்கோபமும், எதற்கெடுத்தாலும் சண்டைக்குப் போகும் குணமும் கொண்டவர். கணக்கில் ஒரு விஷயம் குறித்து தன் நண்பருடன் சண்டை ஏற்பட்டது. இருவரும் வாளை உருவிக்கொண்டு யுத்தம் செய்தனர். இதில் பிராஹேயின் மூக்கு துண்டிக்கப்பட்டு விட்டது. அதன் பிறகு அவர் வாழ்க்கை காலம் வரை உலோகத்தினால் ஆன மூக்கை அணிய வேண்டியதாயிற்று.

❦

இரண்டு பேரும் ஒரே படகில்...

— சத்யராஜ்குமார்

ஆருத்ரா

அந்தத் திருவள்ளுவர் ஸ்டேட் பஸ்ஸில் என் கணவரோடு பயணத்தைத் துவக்கிய பொழுது — பயணத்தின் இடையே ஒரு எக்கச்சக்கமான நெருக்கடி நிலைமை என்னை வந்து தாக்கும் என்று 0.001 பர்செண்ட் கூட நான் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்டுக்குள் பிரவேசித்து நின்றதும், "டீஸல் என்ஜின் பத்து நிமிஷம் ஓய்வெடுக்கும்" என்று சொல்லிவிட்டு ட்ரைவர் கீழே குதித்துப் போய்விட்டார்.

"ஆருத்ரா... நான் போய் புக்ஸ் ஏதாவது வாங்கிட்டு வர்றேன். பஸ் ஓட்டத்துல தூக்கமே வர மாட்டேங்குது. மெட்ராஸ் போய்ச் சேர்ற வரைக்கும் சமாளிக்கணும்!"

நான் தலையசைத்தேன்.

டியூப்லைட் வெளிச்சத்தோடு இருந்த தூரத்து புக்ஸ்டாலை நோக்கி அவர் போக ஆரம்பித்த நிமிஷம்தான் பின் சீட்டிலிருந்து அந்தக் குரல் கேட்டது.

"ஆருத்ரா..."

கரடுமுரடான குரல்.

திரும்பிப் பார்த்ததுமே — அதிர்ச்சி எனக்குள் தடதடத்தது.

வில்பர்ட்! சுபாரி மெல்கிற வாயில் புன்னகையைக் கொண்டுவந்து நிறுத்தியிருந்தான். ஸ்டோன் வாஷ் சர்ட் பேன்ட் மொட மொடப்பாய் அவனை வாரியணைத்திருந்தது. ரெண்டு வருஷத்துக்கு முன்னால் அவன் கண்களில நாற்காலி போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த அதே அலட்சிய பாவம் இன்னும் பதவி இழக்காமல் அப்படியே இருந்தது.

"வில்பர்ட் நீயா?"

"கல்யாணம் ஆகி மெட்ராஸில் செட்டில் ஆகிட்டதா கேள்விப்பட்டேன்?"

"ம்..."

"எந்திரிச்சுப் போனவர்தான் உன் ஹஸ்பெண்டா?"

"ஆமா..."

"பழசெல்லாம் அவருக்குத் தெரியுமா?"

"தெ...தெரியாது வில்பர்ட்... எதுக்கு கேக்கறே?"

"எனக்கு இப்ப உன்னுடைய உதவி வேணும்"

"என்னோட உதவியா?"

"ஆமா ஆருத்ரா... இந்தப் பெட்டியை நீ உன்னோட பேக்கில் துணி மணிக்கிடையில வெச்சிருக்கணும்."

ராத்திரி வானம் மாதிரி என் முகம் நிறம் மாறிப் போனது.

"உள்ளே... என்ன வில்பர்ட்?"

"தெரியாத மாதிரி கேக்கறியே...நம்ம சாக்குதான்! ஆபின், போலீஸுக்கு எப்படியோ தகவல் கிடைச்சிருச்சு. வழியில போற வாகனங்களையெல்லாம் செக் பண்றாங்களாம்... அதான் காரை திருப்பி அனுப்பிட்டு -பஸ்ல ஏறினேன்! பெரும்பாலும் பஸ்களை விட்டுடறாங்க! சப்போஸ் மறிச்சு செக் பண்ணினா என்ன பண்றதுன்னு யோசிச்சிட்டிருந்தேன்! நல்ல வேளையா உன்னைப் பார்த்தேன்."

"எங்க பேக்கில் இருந்தா மட்டும் பார்க்க மாட்டாங்களா?"

"பஸ்ஸுல போலீஸ் ஏறினா சந்தேகமா தோணற நபர்களை மட்டும்தான் செக் பண்ணுவாங்க. உன்னை மாதிரி தாலி

யும் புருஷனுமா உட்கார்ந்திருக்கற பொண்ணுங்கமேல அவ்வளவு சீக்கிரமா சந்தேகம் வராது.”

“வில்பர்ட்... படிச்ச படிப்புக்கு நல்ல வேலை கிடைக்காத கொடுமைக்கு — நான சம்பாதிச்சாத்தான் எங்க குடும்ப ட்ரக் ஓடும்கிற சூழ்நிலைமைக்காக நான் அப்ப இந்த மாதிரி காரியங்களையெல்லாம் செய்திட்டிருந்தேன். உனக்கே தெரியும். இப்ப நான் நல்ல வேலையில இருக்கேன். ஒரு நல்ல குடும்பத்தில வாழ்க்கைப்பட்டு நிம்மதியா வாழ்ந்திட்டிருக்கேன்.”

“உன்னை நான் மறுபடியும் பிஸினெஸ்ஸுக்கு அழைக்கிறேனா என்ன? ஜஸ்ட இந்த மெட்ராஸ் போற வரைக்கும் உன் பேரை வெச்சிருக்கச் சொல்றேன்... அவ்வளவுதான்! இதை நான் ரிக்வெஸ்ட்டா கேக்கறேன். நீ ஏத்துக்கிட்டு உதவி செய்யறது உனக்கு நல்லது! இல்லைன்னா மெட்ராஸ் போய் சேர்றதுக்குள்ளே உன் ஹஸ்பெண்ட்கிட்ட நான் உன்னோட ஃப்ளாஷ்பேக் புராணத்தையும் போட்டுக் காண்பிக்க வேண்டி வரும்.”

அவஸ்தையில் புதைந்து போய் அவனைப் பார்த்தேன். மறுபடியும் புன்னகைதான்.

“அதோ உன் ஹஸ்பெண்ட் புக் ஸ்டாலிலிருந்து திரும்பி வர்றார். சீக்கிரமா முடிவு பண்ணு ஆருத்ரா.”

யோசனைப் பள்ளத்தாக்கில் சில நாடி நேரம் உருண்டேன். சட்டென்று அவன் கையிலிருந்த அந்தப் பெட்டியை வாங்கி— என் பெட்டியில் திணித்து வைத்தேன். கையில் இரண்டு மூன்று புத்தகங்களோடு திரும்பி வந்தார் அவர். என்னைக் கடந்து போய் ஜன்னலோரம் உட்கார்ந்தார்.

நானும் வில்பர்ட்டும் ஒருத்தருக்கொருத்தர் சம்பந்தம் இல்லாதவர்களாய் உட்கார்ந்திருந்தோம். நான் இயல்பிழந்திருந்தேன். அவர் சாதாரணமாய்க் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் மாறுபடியாய் பதில் சொன்னேன்.

ஆச்சரிய முகத்தோடு, “என்னாச்சு உனக்கு?” என்று அவர் கேட்ட போது — “தூக்கம் வருது” என்று சமாளித்துச் சொல்லிவிட்டு இருக்கையில் நன்றாகத் தலையைச் சாய்த்து கண்களை மூடிக் கொண்டேன்.

□ □ □

பிரேக் அடிப்பால் பஸ் குலுங்க— என் கண்ணிமை பட்—டெனத் திறந்தது. விழித்திரையில் இரண்டு கான்ஸ்டபிள்கள்

வந்து விழுந்திருக்கிறது. என் முதுகுப்பரப்பின் விலாசம் கேட்டுக் கொண்டு வியர்வைத் துளிகள் வந்து உட்கார்ந்தன.

இரண்டு கான்ஸ்டபிள்களும் லேசர் பார்வையை ஒவ்வொரு பிரயாணியின் மேலும் பதித்துப் பார்த்து எடுத்தபடி — பஸ்ஸின் முன்புறமிருந்து பின்புறம் வரை ஒரு நடை நடந்தார்கள். சில பேரைக் கேள்வி கேட்டுப் பரிசோதித்தார்கள்.

ஒரு கான்ஸ்டபிள் விஸ்பர்ட்டிடமும் என்னவோ கேட்டார்.

இரண்டு பேரும் திரும்பிப் போக ஆரம்பித்தார்கள்.

எனக்குள் நிம்மதிக் காற்று வீசியது.

முன்புறம் நின்றிருந்த பெரிய மீசை இன்ஸ்பெக்டர்— "என்னய்யா ஆச்சு?" என்றார் கான்ஸ்டபிள்களைப் பார்த்து.

"இந்த வண்டியில எதுவும் இல்லே ஸார்..."

"ரெண்டுமா செக் பண்ணினீங்களா?"

"ஆமா ஸார்..."

"பேஸஞ்சர்ஸ் கம்மியாதான் இருக்காங்க...எல்லாரையுமே ஒரு பார்வை பார்த்துட்டு வாங்கய்யா."

"சரி ஸார்..."

அவர்கள் மறுபடியும் பஸ்ஸுக்குள் திரும்பி முன்புறம் ஆரம்பித்து ஒவ்வொரு இருக்கை பயணியின் உடைமைகளையும் சோதனை போட ஆரம்பித்தார்கள். என் ரோமம் பனிக்குள் சிக்கிக் கொண்ட மாதிரி விரைத்துப் போனேன். எனக்குள் உதறலெடுக்க ஆரம்பித்தது.

ஓரப் பார்வையால் விஸ்பர்ட்டைப் பார்த்தேன். அவனும் அச்சமையால் போர்த்தப்பட்டுக் கிடந்தான். என் சங்கடம் தெரியாமல் அவர் கவலையே இல்லாமல் வார இதழுக்குள் அமிழ்ந்து போயிருந்தார்.

கான்ஸ்டபிள் எங்கள் இருக்கைக்கு வந்தார்.

"ஸார் அந்த பேக்கை இப்படி தாங்க."

நான் சுத்தமாய்த் தகர்ந்து போனேன்.

அவர் காலடியிலிருந்த பேக்கை நகர்த்து விட்டார்.

கான்ஸ்டபிள் பேக்கை தன்னோரமாய் இழுத்து— ஜிப்பை விடுவிக்க ஆரமபிக்க— என் உடம்பு பூராவும் மின்சாரம் பாய ஆரம்பித்தது.

பிரபு

என் மனைவியும்— பின் சீட்காரனும் படுகிற அவஸ்தை யைப் பார்க்கப் பார்க்க— என் மனசுக்குள் சிரிப்பு புகை மாதிரி பரவியது.

பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்டில் புக்ஸ் ஏதாவது வாங்கலாம் என்ற எண்ணத்தோடு பஸ்ஸைவிட்டு இறங்கிய நான்—ஆருத்ராவுக்கு டீ, காஃபி ஏதாவது வேண்டுமா என்று கேட்க நினைத்து எங்கள் இருக்கை ஜன்னலோரம் போனேன்.

ஆருத்ராவை அழைக்க நினைத்து எட்டிப் பார்த்த போது தான் அந்தக் காட்சி கண்ணிலடித்தது அவள் பின் சீட்காரனோடு அவஸ்தை ரொம்பியகுரலில் பேசிக்கொண்டு இருந்தாள்.

அங்கேயே நின்று ஏகதேசம் சம்பாஷணையை ஒட்டுக் கேட்டேன். விஷயம் புரிந்தது. திகைப்பில நீச்சலடித்தபடி புக்ஸ்டால் போய் விட்டுத் திரும்பினேன்!

பத்து நிமிஷம் முன்னால் செக்கிங்கிற்காக போலீஸால் வண்டி நிறுத்தப்பட்ட போது – நானும் கூட அதிர்ந்து போனேன். ஆருத்ராவின் முகத்தைப் பார்த்தேன் வியர்வையில் குளித்த மாதிரி தெரிந்தாள். கண்களில் ஸ்டில் மாதிரி கலக்கம் அப்பியிருந்தது.

அவள் முக பாவமே போலீஸின் மனசுக்குள் சந்தேகச் செடியை உரம்போட்டு வளர்க்கும என்பது புரிநதது.

‘இந்த மாதிரி இக்கட்டான நிலைமையில் சாக்கைப் பற்றிக கவலைப்படாதே!’— இது என் பழைய பாஸின் அட்வைஸ்!

யாருக்குமே தெரியாமல் அந்தப் பெட்டியை நான் ஜன்னலுக்கு வெளியே வீசியெறிநது ஒரு நிமிஷத்துக்கு மேல் ஆயிற்று!

நானும் கொஞ்ச நாள் வேலை கிடைக்காமல் அலைந்திருக்கிறேன்.

என் சம்பாத்தியத்தால்தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய துர்நிலைமைக்கு ஆளாக்கி இருக்கிறேன்!

❀

ஸ்வீட்டி, உன் மார்பில் ஒரு சிறு கத்தி..!

1

மணி ஏழு.

இலேசாக இருட்டிவிட்டது.

நகரம் பார்ப்பதற்கு ஒரு புதுப் பிரிண்ட் போல் தெரிந்தது.

நேரு பார்க்கிலிருந்து வாமன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பார்க்கைச் சுற்றி போக்குவரத்துச் சாலைகள்.

மங்கிய தலை விளக்குகளோடு போக்குவரத்து சலனமிட்டுக் கொண்டிருந்தது.

ஹாய்ய் என்று ஒரு குரல்.

பார்த்தான்.

ஆஷா வந்தாள்.

அருகில் உட்கார்ந்தாள்.

முகம் முழுவதும் மகிழ்ச்சி.

—என்ன நேரமாயிடுதே? என்று கேட்டான்.

—ஒண்ணுமில்லை. வீட்டை விட்டுப் புறப்பட்டு வர வேண்டாமா?

—மியூசிக் கிளாஸ்னு சொல்லிட்டியா இல்லையா?

—சொல்லியாச்சு.

—அப்புறம் ஏன் சந்தேகப்படறாங்க?

—யாராவது பின்பற்றி வராங்களான்னு நான்தான் கவனிச்சேன் லேட்டாயிடுத்து.

—ஓ! உங்க வீட்டிலே அப்படித் துப்பறிவாங்களா?

—எனக்கு ஒரு அண்ணன் இருக்கான். சந்தேகப் பேர்வழி.

—நீ சும்மா பயப்படாதே. அவன் என்ன செஞ்சுட முடியும்?

—அப்படிச் சொல்லிடாதீங்க. பெரிய கிராதகன்.

அவன் முகம் கறுத்தது.

—வருத்தப்படாதீங்க வாமன்! எல்லாம் சீக்கிரம் சரியாப் போயிடும்.

—அவ்வளவு கட்டுப்பாடுகளோடு இருக்கியா?

—ஆமாம்.

ஒரு பெருமூச்சு விட்டான் அவன். முகத்தில் கையை வைத்து பார்வையை வேறு பக்கம் திருப்பியிருந்தான்.

—ஏன் வாமன் வருத்தமா?

அவன் பேசவில்லை.

—ஒண்ணுக்கும் கவலைப்படாதீங்க. நான் உங்களுக்குத்தான்!

அவள் மெதுவாக அவன் கைகளைப் பற்றினாள்.

இடது கையை அவனது வலது தொடையில் எடுத்து வைத்தாள்.

செல்லமாகத் தட்டிக் கொடுத்தாள்.

அது அவனுக்கு உணர்வுகளைக் கிளப்பிவிடும் என்பது தெரியும்.

அவன் திரும்பிப் பார்த்தான்.

அவள் கண்களில் அந்த வெகுளித்தனம் ஆச்சரியமாக இருந்தது.

—என்ன யோசிக்கிறீங்க! என்றாள்?

—ஒண்ணுமில்லே. ஹோட்டலுக்குப் போகலாமா?

—வாங்க. ஏ.சி ரூம்லே உட்கார்ந்தால்தான் எனக்கு நிம்மதி.

இருவரும் எழுந்தார்கள்.

பார்க்குக்கு வெளியே நடந்தார்கள்.

ஸ்வீட் ஹோம் ரெஸ்ட்டாரண்டுக்குள் நுழைந்தார்கள்.

ஏ.சி. அறையில் அமர்ந்தார்கள்.

சின்னச் சின்ன விளக்குகள்!

மேஜைகளை மட்டும் அவை வெளிச்சமாகி இருந்தன.

சாப்பிட வருபவர்களை கூர்ந்து பார்த்தால்தான் கவனிக்க முடியும்.

அருகருகே அமர்ந்தார்கள்.

அவள் மீண்டும் அவன் தொடைமீது கை வைத்தாள்.

அவனுக்கு உள்ளே ஒரு தீ எழுந்தது.

—என்ன சாப்பிடறே?

—ஸ்வீட்லேந்து ஆர்டர் பண்ணுங்க.

—ஆமாம்! அவ்வளவுக்கு பணம் இருக்குமான்னு தெரியல்லையே!

—நான் தரேன். நீங்க ஏன் கவலைப்படறீங்க?

ஆர்டர் செய்தார்கள்.

சட்டென்று சிறிது நகர்ந்தாள்.

இடை வெளி மறைந்தது.

அவளது இடுப்பிலிருந்து கீழே பெரும்பகுதி வரை அவனோடு ஒட்டிக் கொண்டன.

அதிலிருந்து ஒரு சூடு பறக்க ஆரம்பித்தது.

—என்ன ஆஷா! என்று கூறி மெள்ளச் சாய்ந்தான்.

எப்படியாவது இன்று அவளது முக்கிய ஸ்தானங்களை வென்று விடவேண்டும் என்று நினைத்தான்.

எத்தனை நாள் அந்த விஷயத்தைத் தள்ளுவது? அவனால் சும்மா இருக்க முடியவில்லையே!

இப்போது கையை அவளது தோளில் வைத்தான்.

இலேசாகச் சிணுங்கினாள்.

—தொடக் கூடாதா? என்றான்.

அவளுக்கு புன்னகை பூத்தது.

—அதனால்என்ன லாபம்?

—தொட்டாத்தான் எனக்குப் பிடிக்கும்?

சிரித்தாள். —தொடலாம். ஆனால் அப்புறம் அது மெள்ள மெள்ள க்ளைமாக்ஸ் வரை போயிடும்!

—போனால் என்ன?

—ஒண்ணுமில்லை. எனக்கும் சந்தோஷம்தான். ஆனால் ஹோட்டல் ரூமிலேயே தங்கிடுவோம்? அப்புறம் வீட்டுக்குப்

போறதுக்கு லேட்டாயிடும். அப்புறம் அந்தக் கிராதகன்... என் அண்ணன்...

—அண்ணன் பேர் என்ன?

—குமார்.

—என்ன செய்யறான்?

—ஒரு கமபெனியிலே அக்கவுண்ட்ஸ் மானேஜராக இருக்கான்.

—உன் பேரிலே சந்தேகப்படறானா?

—அதை அவன் வாய் திறந்து சொன்னால் அடங்கிப்பிடுவேனே! அங்கே போகாதே, இங்கே போகாதேன்னு, மிரட்டறான்.

—உன்னை மட்டும்தானா?

—வீடு முழுவதுமே அவன் வந்துட்டால் கப்சிப்.

—உங்க அம்மாகூட பயப்படுவாங்களா?

—அம்மா தான் ரொம்ப பயப்படுவாங்க. அவளிடம் எறிஞ்சு விழுவான். பொண்ணுங்களை சரியா வளர்க்கலைன்னு சொல்லுவான்.

—அந்த அளவுக்கு நீங்க துஷ்டத்தனம் பண்ணுவீங்களோ என்னவோ!

—சத்தியமா மாட்டோம். வீட்டிலே ஒழுங்காத்தான் இருப்போம்.

—குமார் ஒழுங்கா இருப்பானா?

—அதான் நானும் கேட்கறேன். வெளியிலே போய் விளையாடிட்டு வருவானனு நினைக்கிறேன். இவன் எங்களைப் போட்டுக் கட்டுப்படுத்தறான்.

—விளையாடுவது தெரியுமா?

—இல்லாட்டி இவ்வளவு சின்ன வயசிலே B.P எல்லாம் வந்திருக்காது.

—என்ன வயசாச்சு?

—முப்பத்திரண்டு?

—கல்யாணம் ஆயிடுச்சா?

—இல்லை. எல்லாப் பெண்களுக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டுததான் நான் பண்ணிப்பேனனு சொல்றான்.

இருவரும் சாப்பிட்டார்கள்.

சிறிது நேரம் உல்லாசமாகப் பேசினார்கள்.

ஹோட்டலைவிட்டு வெளியே வந்தார்கள்.

—நான் வரேன் என்று சொல்லிவிட்டு அவனிடம் அவசரமாக விடைபெற்று பஸ் ஸ்டாண்டுக்கு ஓடினாள் அவள்.

2

அடுத்தவாரமும் அதே ஹோட்டல். அதே இடத்தில் சந்திப்பு.

திரும்பவும் சிப்பந்திக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுகாத்திருந்தார்கள்.

இன்று அவளது இடுப்பில் கை வைத்தான் அவன்.

சிணுங்கிக் கொண்டு சற்றுத் தள்ளிப் போனாள்!

—இதுதான் எனக்குப் பிடிக்காது என்றான்!

—இன்னிக்கு விருப்பம் இல்லாமல் தள்ளிப்போகல்லை.

—பின்னே ஏன் போனே?

—அங்கே ஊமை அடி.

—இடுப்பிலேயா?

—ஆமாம். குமார் என்னை அடிச்சான்.

—எதுக்கு?

—இன்னிக்கு மியூஸிக் கிளாஸ் போகக்கூடாதுன்னு சொன்னான். நான் போவேன்னு சொன்னேன். சண்டை வந்துடுத்து என்னை அடிஅடின்னு அடிச்சுட்டான்.

—அப்ப எப்படி வந்தே?

—அந்த தியாகராஜன் வந்துட்டார்.

—யாரு தியாகராஜன்?

—எங்களுக்குத் தெரிஞ்சவர். நாற்பத்தைந்து வயசிருக்கும். அடிக்கடி வீட்டிலே வந்து பழகுவார் அவர்தான்.

—அவர் வந்ததாலே என்ன ஆச்சு?

—குமாரை அழைச்சுக்கிட்டு கிளப்புக்கு போயிட்டார்.

—என்ன கிளப்?

—சோஷியல் கிளப் ஒண்ணு இருக்கு. அங்கே போய்ச் சீட்டாடுவாங்க

—குமார் சீட்டாடுவானா?

—அதெல்லாம் செய்வான். அவன் என்ன வேணுமின்னாலும் செய்யலாம்.

—பணம் வச்சு ஆடுவாங்களா?

—என்னவோ தெரியாது இருக்கலாம்.

—சரி, அவன் போயிட்டதினாலே வந்துட்டியா?

—ஆமாம். இல்லாட்டி வந்திருக்க முடியாது. வீட்டிலேயே இருந்திருக்க வேண்டியதுதான்.

—நீ வெளியிலே போறியா என்கிறதை கவனிக்கமாட்டானா?

—அந்தத் திபாகராஜன் வந்துட்டா அவனுக்குத் தலைகால் புரியாது அது என்னவோ அவா இரண்டு பேருக்கும் நல்ல சிநேகம் வந்தடுத்து. அதனாலே அவர் வீ டிலே திரும்பக் கொண்டுவிடற வரைக்கும் அவர் பக்கத்திலேயே மகுடிப் பாம்பா இருப்பான்.

—அந்த தைரியத்திலே வந்துட்டியா?

—ஆமாம் இன்னிக்கு எட்டுக்கே புறப்பட்டுடணும்.

—ஏன்? குமார் சீக்கிரமே வந்துடுவானா?

—ஒரு லெட்ஜர் எழுதக் கொடுத்திருக்கான்.

—லெட்ஜரா?

—ஆமாம். கம்பெனி லெட்ஜர். இவன் அக்கவுண்ட்ஸ் மானேஜரா இருக்கான் என்ட்ரி போட நிறைய விஷயங்கள் இருக்கும். அதை வீட்டுக்கு எடுத்துட்டு வந்திடுவான். அதை நான்தான் செய்யணும்.

ஐயோ பாவம்! என்று சொல்லி கைகளைப் பற்றினான். அவனது கண்கள் கலங்கியிருந்தன.

3

அதற்கு அடுத்த வாரம் அதே ஹோட்டல், அதே இடம், அதே நேரம் சந்திப்பு.

அவளது இடதுகைபுஜத்தில் அந்தக் கட்டைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

—என்ன அது?

அவள் தலைகுனிந்காள். அவள் முகத்தில் பெரிய சோகம்.

—என்ன சொல்லு ஆஷா?

அவள் சொல்லவில்லை.

குனிந்தாள்.

கைகளைப் பற்றி மென்மையாக வருடினான். —சொல்லு ஆஷா?

என் அண்ணன் கம்பாலே அடிச்சிட்டான். என்றுசொல்லி, அடுத்த கணம் விசிக்க ஆரம்பித்தாள்.

சட்டென்று அவன் கைக்குட்டையை எடுத்தான்.

அவள் கண்களைத் துடைத்தான்.

அவள் சிறிது நேரம் விசித்துக் கொண்டிருந்தாள்.

பிறகு மெதுவாகத் தலையைத் தூக்கி எனக்கு இதுபோலே ஒரு கொடுமைக்காரன் அண்ணா கிடைக்கணுமா? என்றாள்.

அவனுக்கு துக்கம் பீறி வந்தது. அவள் கைகளை மெதுவாகப் பிடித்து விட்டான். இடது பக்கம் சற்று இலேசாக அழுத்தினான்.

அதன்மேல் லேசாக கையை வைத்ததும் ஆ! என்று துள்ளினாள் அவள்.

—வலிக்கிறதா?

—ஆமாம். தொடாதீங்க.

—ஏன்? என்ன சண்டை?

—லெட்ஜர் எழுதறதினாலே தப்பிதம் பண்ணிட்டேன்.

—அதுக்கா அடிச்சானா?

—ஆமாம்.

—ஏன் என்கிட்டே கொடுக்கிறேன்னு கேட்கிறது தானே?

—அதான் நானும் கேட்டேன். நான் சம்பாதிச்சுப் போடறேன் நீ மட்டும் சாப்பிட்டுட்டு உட்கார்ந்திருப்பியான்னு என்று சொல்லி, திட்டினான்.

—நீ என்ன சொன்னே?

—உன் சாப்பாடு வேண்டியதில்லை. நான் வேணுமின்னா வெளியில போறேன்னு சொன்னேன்.

போன்னு அவன் சொன்னான்.

வெளியிலே போனேன். வாசல் பக்கம் வந்து நின்னேன்.

அவன் கொஞ்ச நாழி காத்துட்டு இருந்தான். அப்புறம் கோபமா வேகமாக வந்தான். என்னைக் கழுத்தைப் பிடிச்சு உள்ளே தள்ளினான். அடிஅடியென்று அடிச்சுட்டான். நேத்திக்கு முழுவதும் வலியே தாங்கலை. இன்னிக்கும் வலி தான் படுத்திருப்பேன். ஆனால் உங்களை நினைச்சவுடனே மனசு கேட்கலை. ஓடிவந்துட்டேன். நீங்களாவது எனக்கு ஆறுதலா இருப்பீங்க இல்லையா?

அவன் கண்களில் நீர் எழுந்தது.

—அழாதீங்க வாமன் என்ற சொல்லி, துடைத்துவிட்டாள் அவள்.

4

அடுத்த வாரம் அதே ஹோட்டல், அதே இடம், அதே நேரத்திற்கு பத்து நிமிடத்திற்கு முந்தி, வாசலில் அவன் ஸ்கூட்டரில் வந்து இறங்கினான்.

படிகளில் ஏறப்போகும்போது, —ஸார்! என்று ஒருகுரல்.

திரும்பிப் பார்த்தான்.

ஏறத்தாழ வேலைக்காரி போன்று ஒருபெண்மணி. அவரை நோக்கி வந்தாள்.

—நீங்க தானே மிஸ்டர் ராமன்?

—ஆமாம்.

—இந்த லெட்டரை உங்ககிட்டே கொடுக்கச் சொன்னாங்க.

—யாரு?

அவள் இந்தப் பக்கமும், மறுபக்கமும் பார்த்தாள்.

பிறகு மெதுவாக ஆஷாம்மா என்று கூறினாள்.

அவன் கடிதத்தை பெற்றான்.

—நான் வரேங்க என்று கூறினாள் அவள்.

சரி! என்று தலையாட்டினான்.

கடிதத்தைப் படிப்பதற்காக உள்ளே சென்றான். இருட்டறையில் உட்கார்ந்து கொண்டு ஒரு காபி மட்டும் ஆர்டர் செய்தான்.

சிப்பந்தி வருவதற்குள் கடிதத்தை திறந்து அதைப் படித்தான்.

அன்புள்ள ராமனுக்கு,

வணக்கம்.

இந்தக் கடிதம் என்னிடம் இருந்து வருவது ஆச்சரியமாக இருக்கும். நானும் இப்படி எழுதுவேன் என்று தெரியாது இதை ஒரு நர்சிங் ஹோமிலிருந்து எழுதுகிறேன். எனக்கு என்ன நேர்ந்தது என்று தாங்கள் யூகித்திருக்கலாம். இருந்தாலும் வெளிப்படையாகத் தங்களுக்குச் சொல்கிறேன்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சண்டையில் என் அண்ணன் என்னை நெருக்கித் தள்ளிவிட்டான். அநேக இடங்களில் காயங்கள் ஏற்பட்டு, ஒரு பெரிய அதிர்ச்சியுடனும்



நான் இந்த நர்சிங்ஹோமில் சிகிச்சை பெற்று வருகிறேன். வலி களைச் சொல்லிமாளாது.

'நான் ஏன் பிறந்தேன்?' இறந்து போயிருக்கலாம். இந்த உடலில் உயிரை வைத்திருப்பதற்கு ஒரே ஒரு காரணம் உங்கள் மீதுள்ள நேசம்தான். தாங்கள் எப்போதும் எனக்கு உற்ற துணையாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

இந்த அன்பிற்கு அடிபணிந்துதான் நான் என் உயிரை மாய்த்துக் கொள்ளாமல் இருக்கிறேன். உங்களுக்கு நான் சந்தோஷம் தருகிறேன் என்பதே அது போதும். அதேபோல் என் பேரில் நீங்கள் ஒருவராவது நேசம் கொண்டிருக்கிறீர்களே அது போதும்.

தாங்கள் உடனே என்னைப் பார்க்க விரும்பலாம். ஆனால் தயவு செய்து இரண்டு நாட்கள் ஆவலைத் தள்ளிப் போடுங் கள். மூன்றாம் நாள் வரலாம் இது சரோஜினி நர்சிங் ஹோம். வெங்கடாச்சலம் ரோடில் இருப்பது தவகளுக்குத் தெரியும். தயவு செய்து உடனே புறப்பட்டு வர முயலாதீர்கள். இங்கே என் அண்ணன் இருந்து கொண்டே இருககிறான்.

மூன்றாம் நாள் இரவு பத்தரை மணிக்கு வரவும். நான் இங்கேட்யூட்டி நர்சிடம் சொல்லி வைத்திருக்கிறேன். உங்களை அனுமதிப்பார்கள். அவசியம் வரவும் உங்கள் மடியில் படுத்து அழ வேண்டும்.

நன்றி.

தங்கள் அன்புள்ள
ஆஷா,

அடுத்த இரண்டு தினங்களைக் கடப்பதற்கு கஷ்டமாக இருந்தது. பிறகு மூன்றாம் நாள் மாலையிலிருந்து ஆத்திரம் கிளம்பியது. உட்கார முடியவில்லை.

கடைசியில் மணி பத்துக்கு புறப்பட்டான்.

சரோஜினி நர்ஸிங் ஹோம் கிளினிக்கில் வாசலில் ஸ்கூட்டரை நிறுத்தினான்.

உள்ளே சென்றான். முகப்பு அறையில் ட்யூட்டி நர்ஸ் எழுதிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய தங்கப் பேனா பளபளத்தது.

—எஸ்! என்று முகத்தை நிமிர்த்தினாள்.

அப்போதுதான் சோப்புக் கழுவிய முகம்.

கூறினான்.

—உள்ளே போங்க. இரண்டாம் வார்ட் நம்சரில் 18—ம் நம்பரில் இருக்காங்க.

உள்ளே சென்றான்!

-ஆஷா என்று கைகளைப் பற்றினான்.

சோர்ந்து இருந்தாள்.

உடம்பில் கட்டுக்கள். வாமன் என்று சொல்லி கைகளைப் பற்றினாள்.

கைகளில் கன்னிப் போயிருந்தன. தொடப்பார்த்தால் விட வில்லை! தலையில் ஒரு கட்டு.

—அந்தக் கிராதகன் தானா? என்று கேட்டான்.

—பாருங்க! என்று சொல்லி தன் தலைப்பக்கம் காண்பித் தாள்.

—அவன் அடிச்ச அடி ஒரு ஓரமா உராய்ஞ்சுண்டு போயிருக்கு. தலையிலே பட்டிருந்தா க்ளோஸ் ஆகியிருப் பேன்.

சிறிது நேரம் விசித்தாள். எப்போதும் உண்டான சண்டை தான். அன்னிக்கு ரொம்பவும் உக்கிரகமாப் போச்சு. நான் பிழைச்சது அபூர்வம். உங்கள் நல்லெண்ணத்தின்தான் நான் பிழைச்சேன்.

அவனுக்கு யோசனைகள் பறந்தன. அவளைத் தாபத் துடன் பார்த்தான்.

—ஏன் ஆஷா நீ உன் குடும்பத்திலிருந்து வெளியே வந்து டேன்! என்றான்.

அவளுக்கு இலேசாக புன்னகை! —தெரியும், இப்படி அழைப்பீர்கள்னு நான் இதை ஏற்கெனவே நினைத்துப் பார்த்ததுதான். நன்றி என்று சொன்னாள். பிறகு நான் நிச்சயம் வந்திருப்பேன். ஆனால் வெறுங்கையாக வர விரும்பலை. எங்க அப்பாவோட சொத்திலே பங்கோட வரதுக்கு விரும்ப றேன் என்றாள்!

—ஏன்? உனக்கு பணம் கிடைக்குமா?

—ஆமாம். நான் கல்யாணம் பண்ணிக்கிட்டு வரும்போது தான் அந்தச் சொத்து கிடைக்கும்.

—அது வரைக்கும் நீ உள்ளே இருக்கணும் இல்லையா?

—ஆமாம்! என் நிலைமையிலே எனக்கு என்ன நடக்கும்னு தெரியவில்லை. திடீரென்று ஒரு நாள் அண்ணன் அடிச்சு என்னைக் க்ளோஸ் பண்ணிடப் போறான். ஒரு ஷேர் லாபம் அவனுக்கு!

—நான் விடமாட்டேன்!

—அது மட்டுமில்லை. வீட்டுக்கே போகப் பிடிக்கலை. அவ னைப் பார்த்தாலே எனக்கு ஆத்திரம் வருது.

தலையை ஆட்டினான் அவன்.

மெதுவாக அவள் காதோடு குழைந்தான். —இப்போது உன் அண்ணன் ஒரு விபத்திலே செத்துப் போயிட்டால் என்ன நடக்கும் என்றான்?

—போவானா? காத்துட்டு இருக்கேன். என்றாள் துள்ளிக் கொண்டு...

—ஒரு விபத்தை ஏற்பாடு பண்ணினால் என்ன?

—என்ன சொல்றீங்க?

—ஆமாம்! ஒரு விபத்தை ஏற்பாடு பண்ணிட்டால் போச்சு

அவள் திகைத்துக் கொண்டிருந்தாள்

—எனக்கும் அப்படி ஆசைதான். ஆனால் விஷயம் வெளியில தெரியாமல் நடக்கணுமே!

அவள் கைகளைப் பற்றினான்.

—அப்போ எனக்கும் அந்த எண்ணம் வந்தாச்சு அவனை ஒழிச்சிக் கட்டிடுவோம். என்ன செய்யலாம்?

—அதைத்தான் யோசிக்கிறேன். நான் பார்த்துக்கறேன்! நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம் ஓ.கே?

—இல்லை வர்மன் என்று கூறினாள் அவள்.

5

ஈஸ்வர் அந்தக் காலை வாக்கிங் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்.

டாக்டர் உபதேசப்படி அந்தப் பழக்கம்.

வருகிற வழியில் சக்தி விநாயகர் கோவில் பக்கம் சற்றே எட்டிப் பார்த்தார்.

ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் திரும்புவார்.

பிறகு சாலையைக் கிராஸ் செய்துவிட்டு பிளாட்பாரம் வழியாக வீட்டுக்கு வருவார்.

அன்று காலை க்ராஸ் செய்யும்போது டீம் என்று ஒரு சத்தம் கேட்டது! பார்த்தார் கார் ஒன்று சாலையில் மூரட்டுத் தனமாக வந்து கொண்டிருந்தது! போக்குவரத்து இல்லாத நேரம்!

அதற்கு ராஜபாட்டை! எனவே கார்க்காரர் குஷியோடு இருப்பது தெரிந்தது.

அடுத்த கணம் அவர் வாயிலிருந்து ஆ! என்ற சத்தம் ...றியது.

கார் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தது.

கையைத் தூக்கினார். அதே நேரம் குதித்து தாவி நடைபாதைக்கு செல்ல முயன்றார்.

கார் குருட்டு வேகத்தில் வந்தது. அவர் அருகில் வந்து நெருங்க இன்னும் அரை நிமிடம் பாக்கி!

ஈஸ்வர் தன்னை வேகப்படுத்தினார்.

உம்ம் என்ற சத்தம்! அவர் பிளாட்பாரத்தில் குபீர் என்று விழுந்தார்.

கார் அவரை மயிரிழையில் தவறி விட்டது!

ஸாம்ம் என்ற இரைச்சலுடன் ஓடிவிட்டது.

மற்றொரு வாக்கிங்காரர் ஓடிவந்தார் அவரை எடுத்தார்.

—ஸார்! நல்லவேளை நடைபாதையிலே சாய்ந்துட்டீங்க. இல்லாட்டி அடிபட்டிருப்பீங்க.

- என்னவோ! ஆண்டவன் தான் எனக்கு அந்தப் புத்தி கொடுத்தான் என்றார் ஈஸ்வர்.

அரை மணியில் வீட்டில் இருந்தார்.

- ஆஷா! ஆஷா! என்று அழைத்தார்!

வரவில்லை.

ஹால் சோபாவில் அமர்ந்து கொள்ள சிறிது நேரம் மூச்சு வாங்கியது.

- ஆஷா! ஆஷா மை ஸ்வீட்டி என்று கூப்பிட்டார்.

உள்ளிருந்து ஒரு நிழல் தென்பட்டது.

ஆஷா பிரசன்னமானாள். அவள் முகம் முழுவதும் முதலில் திடுக்கிட்டு விட்டு பிறகு புன்னகை காட்டியது.

—என்ன? இன்னிக்கு காலையிலேயே சல்லாபம்? என்று இழுத்தாள். முகத்தில தோன்றிய வியர்வையை வழித்தாள்.

- பெரிய விபத்திலிருந்து தப்பிச்சு வந்திருக்கேன். உட்கார் என்று சொல்லி விபரம் முழுவதையும் சொன்னார்.

ஐயோ! என்று பதறிப்போய் அவரது கையை அவள் பற்றினாள்.

- இன்னிக்கு ஆபீஸ் போக வேண்டாம் என்றாள் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு...

- சரிதான், அதுக்கும் இதுக்கும் என்ன சமமந்தம்? இன்னிக்கு ராத்திரி கோவில்லே ஒரு அர்ச்சனை செய்துடணும்.

- இன்னிக்கா! நாளைக்கு வச்சுக்கலாமே!

- ஏன்?

- இன்னிக்கு ஏழு மணிக்கு மியூசிக் கிளாஸ் இருக்கு!

- அதனாலே என்ன? கொஞ்சம் முன்னாடி போனால் போச்சு.

- ஐயோ! தோதுப்படாதே!

- சரி! நீ வந்தப்புறம் போன்ல போச்சு!

- இன்னிக்குதான் ஒரு சாகித்தியம் ஆரம்பிக்கிறேன்னு சொல்லியிருக்காரு!

-சரி. போ, நாளைக்கே போகலாம்!

- ஓகே! நீங்க தங்கக்கட்டி இல்லையோ என்று சொல்லி, அவள் அவர் முகவாயை விரல்களினால் அழுத்தினாள் அவள்!

6

இரவு அதே ஹோட்டல், அதே சந்திப்பு.

—தடால்னு பிளாட்பாரத்திலே விழுந்துட்டானாம் என்றான் வாமன்.

—அப்படியா? என்று கோபத்துடன் கேட்டாள் ஆஷா.

—ஆமாம். அந்த மாதிரி விழுந்திருக்காவிட்டால் காரிலே கட்டாயம் அடிபட்டிருப்பான்.

—என்னங்க! ஒரு காரியத்தை கெடுத்துட்டானே உங்க ஆளு.

—நானும் திட்டினேன் ஆஷ. இவ்வளவு செஞ்சுட்டு ஒரு மயிரிழையிலே விட்டுட்டானே!

—அப்போ இன்னொரு வாட்டி செய்யச் சொல்லுங்க.

வாமன் பதில் பேசவில்லை.

என்ன? நானும் திரும்பச் செய்யச் சொன்னேன் பதில் இல்லையே.

—அதுவா! அவனுக்கு இப்போ நர்வஸ் ஆயிடுத்து.

—ஏன்? என்ன?

—ஒருவாட்டி ஆகல்லைன்னா அதைத் திரும்பச் செய்யக் கூடாதுங்கிறன்.

—அப்போ! என்று புருவத்தைத் தூக்கினாள் அவள்.

—வேறு யாரையாவது செய்யச் சொல்லுங்க.

—வேண்டாம்! இவனையே வேறேமாதிரி செய்யச் சொல்லலாம்.

—வேறு என்ன வழியிருக்கு?

—ப்ளான் பண்ணிட்டுதான் வந்திருக்கேன். இப்படி வா! என்று அவள் காதோடு சொல்ல ஆரம்பித்தான்.

7

இருவரும் பார்க் அருகில் நடந்துவந்து கொண்டிருந்தனர். இரவு ஏழு மணி.

—ஏன்? என்ன காரணம் என்று கேட்டாள் அவள்.

—இல்லை, ஆஷா உன்னைப் பத்திச் சமயத்திலே நான் யோசிக்கிறது உண்டு

—என்னை யோசிப்பீங்க?

—ஒருவேளை என் மேலே அவ்வளவு விருப்பம் இல்லையோன்னு நினைப்பேன்.

—ஐயோ! அப்படியா நினைச்சீங்க? என்று கைகளைப் பிடித்தாள்.

—மன்னிச்சுடு. தப்பா நினைச்சுக்காதே. எப்பவாவதுதான் அப்படித் தோணும். காரணம் இருக்கு.

—என்ன சொல்லுங்க?

—நீ இன்னிக்கு இப்படி என்னோடு வந்திருக்கே. எத்தனையோ தரம் உன்னைக் கூப்பிட்டு இருக்கேன். இப்படி உல்லாசமா ஹோட்டல்லே சாப்பிட்டு நடந்து வரணும்னு நினைச்சிருக்கேன். நீ வந்ததில்லை.

—அதுக்கு காரணம் தெரியாதா உங்களுக்கு?

—ரைட், ரைட், மியூசிக் கிளாஸ் போறே. அப்புறம் இந்தக் கிளாஸ் போறே. பெயிண்டிங் கிளாஸ் போறே. எல்லாம் செய்யறே. படிப்பு முக்கியம்தான். ஆனால் என்னையும் திருப்தி பண்ணுவேன்னு நினைச்சிருக்கேன்.

—ஐயோ! இதுக்காகவா வருத்தப் படறீங்களே! என்கிட்டே சொல்லிட்டால் போச்சு. நான் எத்தனை வாட்டி வரணுமோ வரேன் கவலைப்படாதீங்க.

நடந்து வந்தார்கள். அந்தப் பகுதி நிர்மானுஷ்யமாக இருந்தது.

ஒரு பக்கம் முழுவதும் பார்க்கின் எல்லை. மற்றொரு பக்கத்தில் தோட்டத்தோடு பங்களாக்கள்!

திடீரென்று ஒரு சத்தம் பார்க்கின் முள்வேலியை இரண்டாகப் பிளந்து கொண்டு ஒரு உருவம் வெளிவந்தது. கண்ணை இமைக்கும் முன் அவர்கள் முன் நின்றது.

அடுத்த கணம் அந்த உருவம் தனது பையில் கை விட்டு கத்தியை எடுக்க முயன்றது.

ஐயோ! என்று கத்தினார் அவர்.

மறுகணம் அவள் அவரைப் பார்த்தாள்.

—ஆஷா! கத்து, கத்து என்றான் விறைந்து.

—ஐயோ ஐயோ! கொள்ளை! என்று அவளும் கத்தினாள்.

சத்தத்தைக் கேட்டு இரண்டு கூர்க்காக்கள் ஓடி வருவதும் சரியாக இருந்தது.

—டேய்! என்று ஒரு உருவம் சத்தம்போட, மற்றொருவன்—சோர்! சோர்! என்று சத்தம்போட, இருவரும் அவனை நோக்கிப் பாய அவ்வளவுதான் அந்தக் கத்தி ஆசாமி விருட்டென்று வேறு பக்கம் ஓட ஆரம்பித்தான்.

கூர்க்காக்கள் சிறிது தூரம் துரத்தி விட்டுத் திரும்பினார்கள்.

வேர்வையுடன் நின்று பிளாட்பாரத்தில் ஆசுவாச மூச்சுகளாக இழுத்தார் ஈஸ்வர்.

அவர் கையைப் பற்றிக்கொண்டு - நல்லவேளை தப்பினோம், தப்பினோம் என்று கூறினாள் அவள்.

8

அதே இரவு, அதே ஹோட்டல், அதே சந்திப்பு.

—ஏங்க! அந்த ஆளுக்கு கொஞ்சமாவது புத்தியிருந்திச்சா? என்றாள் அவள். கோபம் பொத்துக்கொண்டு வந்தது அவளுக்கு.

வாமன் பெருமூச்சு விட்டான்.

—அந்தக் கத்தி அவன் பாக்கெட்டிலே ஓரத்திலே நின்னிருக்கணும். அதுக்குப் பதிலா தடைமட்டமா படுத்துட்டுது அதனாலே சுலபமா இழுக்க முடியல்லே! நேரம் ஆயிட்டது! என்றான்.

—இப்படித்தான் பைத்தியக்காரத்தனமாகக் கத்தியை வைப்பாங்களா?

—இன்னொன்னு ஆஷா! கத்தியை உறையோடு வைக்கலை. வெறுமனே பேப்பரிலே மட்டும் சுத்தியிருந்தான். உள்ளே போய் இழக்கிறான் பாரு, அப்போ பேப்பர் எல்லாம் கழண்டு போய் அவன் கையிலே கத்திபட்டு காயமாப் போச்சு. என்கிட்டே வந்து சொன்னான்.

—இப்படியா! ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வீணடிக்கிறது என்று கோபத்துடன் கூறினாள் அவள்.

வாமன் அவள் கைகளைப் பற்றினான்.

—கவலைப்படாதே நான் இன்னொரு வழி கண்டுபிடிக்கலாம்.

—என்ன சொல்லுங்க?

- சொல்றேன். அதுக்கு முன்னாலே உன்கிட்டே ஒரு கேள்வி?

- கேளுங்க?

- இப்ப டாய்லெட் போயிட்டு வந்தியே, அந்த நேரத்திலே உன்னுடைய கைப்பையை திறந்து பார்த்தேன். அது ஒரு தவறான செய்கைதான் இருந்தாலும்...

- ஓ! அதனாலே என்ன?

- ஒண்ணுமில்லை. அடியிலே பார்த்தபோது மஞ்சள் சரடும், தாலிக்கொத்தும் இருந்தன.

சட்டென்று அவள் பையைத் திறந்தாள்.

வெளிச்சத்தில் பார்த்தபோது அவை தெரிந்தன.

உதட்டைக் கடித்தாள். அசைவற்று இருந்தாள்.

- ஏன் ஆஷா ஏன் பேசாமல் இருக்கே?

- நான் உங்ககிட்டே என்னிக்காவது சொல்லணும்னு நினைச்சேன்.

- என்ன விஷயம் சொல்லு?

- என் அண்ணன் ஒருத்தன் இருக்கான், குமாருன்னு பேரு கிராதகன் எல்லாம் சொல்லியிருக்கேன் இல்லையா?

ஆமாம்.

- அது எல்லாம் பொய்! உண்மையிலே எனக்கு கல்யாணம் ஆயிடுத்து

திடுக்கிட்டான்.

- வாமன் மன்னிச்சுடுங்க! எனக்கு திருமணம் ஆச்சுன்னு தெரிஞ்சா நீங்க என்னை லவ் பண்ண மாட்டீங்களோன்னு நினைச்சுட்டேன். அதனாலேதான் உங்களைச் சந்திக்க வரும்போது தாலியை அவிழ்த்து பைக்குள்ளே போட்டுக் கொள்வேன். உங்களுக்கு இப்போ தெரிஞ்சுபோச்சு.

கண்களில் நீர் வந்தது.

— சரி ஆஷா இப்படிச் செய்யலாமா?

- என் கணவரை எனக்குப் பிடிக்கலை. நான் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். என் விருப்பத்துக்கு விரோதமா திருமணம் நடந்திடுச்சு.

எனக்கும் அவருக்கும் பதினோரு வயசு வித்தியாசம். நான் முதல்லே பார்க்கும்போதே அவரைப் பிடிக்கலை. வீட்டிலே சொல்லிப் பார்த்தேன் கேட்கலை வற்புறுத்தி பண்ணி வச்சுட்டாங்க. இன்னியிலேர்ந்து எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தாச்சு. என் மனசு அவர்மேலே போகல்லே! தற்கொலை செய்துக்கலாம்னு பலதடவை நினைச்சேன். அதிலே புத்தி போகல்லை. என் வீட்டிலே அநியாயம் பண்ணிட்டாங்க. நான் என் அநியாயமா என் வாழ்க்கையை பாழாக்கணும்? அதனாலே வெளியில அடிக்கடி போயி பார்க்க ஆரம்பிச்சேன். அப்பதான் உங்க சந்திப்பு நிகழ்ந்தது உங்களைப் பார்த்தபிறகு எனக்கு உங்களை அடையணும்னு தோணிப் போச்சு! ஆனால் ஒரு மணமான பெண்ணை நீங்க மணப்பீங்களான்னு சந்தேகம். அதுக்குத்தான் இந்த மாதிரி யுக்தி செய்தேன்! இப்போ உங்ககிட்டே உதவி கேட்கிற எல்லாம் என் கணவனைக் கொல்லத்தான். தயவுசெய்து உங்களை மன்றாடிக் கேட்டுக்கறேன்.

இனிமேல் நான் உங்க சொத்து நீங்க என்னை விட்டா நான் கட்டாயம் தற்கொலை பண்ணிப்பேன். எனக்கு உறுதி மொழி சொல்லுங்க. என்னை நீங்க திருமணம் செய்துப்பீங்களா?

அவன் மெதுவாக அவள் கைகளைப் பற்றினான்.

"ஒரு கணவனைக் கொல்லலாமா?" என்றான் வாமன்.

- உண்மை மிஸ்டர் வாமன்! ஆனால் எனக்கு வாழ்க்கைத் திருப்தி படவேண்டாமா?

- பட வேணும்!

— அதுதான் அவரிடமிருந்து கிடைக்கவில்லை. நீங்கள் அவரைப் பார்த்து இருப்பீங்க. ரொம்ப மூத்தவராகத் தெரிவார் அவரோடு சேர்ந்து போவதற்குக்கூட கஷ்டப்படுகிறேன! என்னுடைய அழகும், யௌவனமும் அவர்முன்னாலே பாழாகுது. இப்பொழுது நீங்க ஒத்துக் கொள்ளவில்லைன்னா நிச்சயம் இப்பவே தற்கொலை பண்ணிக்கப் போறேன்.

அவன் அவள் கைகளைப்பற்றினான். -ஒண்ணும் பயப் படாதே, நான் உன் பக்கத்திலே இருக்கேன்.

அவள் இப்பொழுது கனிவுடன் பார்த்தாள். -இப்ப இரண்டு வழியும் தோல்வியாயிடுத்து. அதனாலே எனக்கு பயம் அதே நேரத்திலே வெற்றி அடைஞ்சிருந்தால்கூட பழி என் மேலே வந்திருக்கும்.

- வராது?

- நீங்க சொல்லிட்டீங்க இருந்தாலும் சந்தேகப்படுவாங்க. அதனாலே ஒரு யோசனை பண்ணியிருக்கேன்!

என்ன?

- பெண்கள் சாதாரணமா புருஷனை எப்படி கொல்ல முடியும் தெரியுமா?

- விஷம் வச்சுக் கொல்லுவாங்க.

- அதே மாதிரிதான் நானும் செய்யணும்!

- என்ன விஷம்?

அவள் சற்றே திகைத்தாள்.

-நீங்க சொல்றது எனக்கும் புரியுது. நான்நிறைய துப்பறிய நாவல் படிக்கிறேன். அகாதா கிறிஸ்டி படிக்கிறேன். ஷெல்லக் ஹோம்ஸ் படிக்கிறேன். இதிலே யார் யாரு எப்படி புருஷன் களைக் கொன்னாங்க என்கிறதெல்லாம் கவனிச்சுட்டு வரேன் கதை மூலமா எனக்கு ஒரு நல்ல விஷயம் தெரிஞ் சாச்சு.

- என்ன?

- ஒரு குறிப்பிட்ட விஷம் தெரிஞ்சு போச்சு.

- யார் கொடுத்தாங்கன்னு கண்டுபிடிக்க முடியாதா?

- நிச்சயம் முடியாது. அந்த விஷம் வயித்துக்குள்ளே போனா அரைமணி நேரத்துக்குள்ளே கரைஞ்சுஅடையாளமே இல்லாமல் போயிடும்!

- அதை எப்படிக் கொடுக்க முடியும்?

-ஓ! பாலிலோ, அல்லது காபியிலோ கலந்துட்டால் போதும், சுவையும் மாறாது. ருசியும் மாறாது சாப்பிட்டபிறகு தான் கண்ணை அசத்தும். கீழே படுத்த நேரத்திலே ஆள் க்ளோஸ்.

- கேட்க ரொம்ப ஆச்சரியமாக இருக்கே!

-கிட்டத்தட்ட ஆறுமாசமா புஸ்தகங்களைப் படிச் சுட்டே வரேன. அதனாலே கண்டுபிடிக்க முடிஞ்சது.

- ரொம்பச் சுலபமாப் போச்சு. கவலையில்லை என்றான் அவன்.

-மிஸ்டர் வாமன்! என்று கைகளைப் பற்றினாள் அவள். இவர் மட்டும் போயாச்சுன்னா அவர் சொத்து நமக்கு. வீட்டி லேயே உட்கார்ந்து சாப்பிடலாம் கவலையே வேண்டாம்!

அவன் முகம் பிரகாசம் அடைந்தது.

- எதுவும் சொல்லாதீங்க. இப்ப எனக்கு நீங்க செய்ய வேண்டியது, அந்தப் பாய்ச்சனை எழுதித் தரேன். ஷாப்பி லேந்து வாங்கித் தந்திடுங்க.

ஓகே! என்றான் அவன்.

9

காலை ஒன்பது முப்பது.

ஈஸ்வரனை விழுந்து விழுந்து உபசரித்தாள்.

அன்று அமாவாசை என்று சொல்லி பாயசத்தோடுசாப்பாடு செய்து போட்டாள்.

-நன்றாக சாப்பிடுங்க என்றுசொல்லி, அடிக்கடி உற்சாகப் படுத்தினாள்.

சாப்பிட்டு கை கழுவ எழுந்து வந்தபோது அவள் மத்தி யான டிபனையும் அந்த ப்ளாஸ்க்கையும் எடுத்து வந்தாள்.

ப்ளாஸ்க்கில் தினமும் காபி ஊற்றிக் கொடுப்பது வழக்கம். இன்றும் அப்படித்தான் ஊற்றியிருந்தாள்.

ஆனால் அவள் மனசுக்குத் தெரியும். அந்தக் காப்பியோடு அந்த எல்.ஹெச்.டி மருந்தையும் ஊற்றியிருந்தாள்.

அதை கலக்கிவிட்டு முகர்ந்து பார்த்தாள்.

எந்த வாசனையும் வரவில்லை. காபி வாசனைதான் மேலே வந்தது.

அவர் அதற்குள் ஹால் புறம் வந்து நின்றார்.

-நீங்க போங்க! நான் கொண்டு வந்து வைக்கிறேன் என் றாள் அவள்.

போர்டிகோவில் கார் நின்றது.

அவர் தமது கைப்பெட்டியுடன் போய் உட்கார்ந்தார்.

அவள் பின்னாலேயே சென்றாள்.

கார் முன்புறத்தில் கூடை ஏற்கனவே இருந்தது.

அதில் ப்ளாஸ்க்கையும், பாக்சையும் பதிவாக வைத்தாள். மறந்துடாமல் சாப்பிடுங்க! காபி பதினோரு மணிக்கு சாப்பிடணும் தெரிஞ்சு தா? என்று சொன்னாள்!

ஈஸ்வருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. -ஓகே! ராத்திரி வந்து ரிப்போர்ட் கொடுக்கிறேன்!

காரைக் கிளப்பிக் கொண்டு அவர் சென்றார்.

கேட்டைத் தாண்டியதும் சாலையில் கார் இறங்க, அவர் முகத்தில் ஒரு சிரிப்பு குபீரென்று கிளம்பியது.

வராந்தாவை விட்டு சட்டென்று உள்ளே ஓடி கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்!

குதித்தவாறு சோபாவுக்குச் சென்றாள். கடவுளே இன்னிக்கு எல்லாம் சரியா நடத்து! வாமனோடு வாழணும்! என்று கூறிக் கொண்டாள். கண்ணாடியில் தன்னைச் சரி செய்து கொண்டாள்.

இன்றையிலிருந்து அவளது சனி விலகிப் போகிறது. இனி எந்தவிதக் கவலையும் கிடையாது.

பத்து மணிக்கு போன் வந்தது!

நான்தான் பேசுகிறேன் என்று குரல் கேட்டது! அதைப் பார்த்ததும் புரிந்து விட்டது வாமன் பேசுகிறான்.

–எல்லாம் சரியாக நடந்துட்டு வருது என்று கூறினாள் அவள்.

–ஓகே! ரொம்ப சந்தோஷம்!

–நீங்க சாயங்காலம் நாலு மணிக்கு போன் பண்ணுங்க. நான் உங்களுக்கு வெற்றித் தகவல் கொடுக்கிறேன்! என்று கூறினாள் அவள்!

ஓகே...

மணி மேலே ஏறியது.

பத்தரை!

பதினோரு மணிக்கு அவர் காபி சாப்பிடுவார்! என்று தெரியும்.

ஒரே ஒரு தரம் காபிதான். அதற்குப்பிறகு சாப்பிட மாட்டார்.

அவளும் சிக்கனமாகத்தான் வைத்திருப்பாள்

முழுக் காப்பியையும் குடித்த பிறகு பிளாஸ்க்கையும் கழுவி வைத்து விடுவார். அதுதான் அவரது வழக்கம். அன்றும் அது போல்தான் நடக்கவேண்டும்.

இத்தனை நாழிக்கு ஆபீசுக்குப் போயிருப்பார். உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருப்பார். இன்னும் கொஞ்சம் நேரமாகட்டும பதினோரு மணி ஆனபிறகு நிச்சயம் அவர் காபியை நோக்கிச் செல்வார்.

மணி பதினொன்று!

அவளுக்குப் புல்லரித்தது எழுந்தாள்.

மனசில் கற்பனைக்கள் மிதநதன.

அவர் சீட்டிலிருநது எழுந்திருப்பது போலவும், ப்ளாஸ்க்கைத் திறப்பது போலவும் தெரிந்தது.

காப்பியை ஊற்றி டம்ளரை மேலே தூக்குகிறார்.

மெள்ள மெள்ள நுப்பிக் குடிக்கிறார்.

சந்தோஷமாக இருக்கிறது.

ஆனால் பாவம்!

சீக்கிரம் அவர் உயிர் போய்விடும். நிச்சயம் அவளுக்குத் தெரியும் அந்தக் கனங்களுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.

கடிகார முள் நகரும் போது அவளுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது.

11-15, இதற்குள்ளே காபியை எடுத்துக் குடித்திருப்பார். என்று நினைத்தாள்.

11-20க்குள் அவரது வாழ்க்கை முடிந்துவிடும்.

பார்ப்போம் காத்திருந்தாள்.

11-20

11.25

வாசலில் மணி.

திடுக்கிட்டாள்.

யாராவது செய்தி கொண்டு வருகிறார்களா?

ஒருவேளை சீக்கிரம் குடித்துவிட்டாரா? அதனால் சீக்கிரம் முடிந்து போய்விட்டாரா?

ஹாலைத்தாண்டிச் சென்றாள்.

வாசல்புறம் வந்தாள்.

யாரு? என்று சொல்லிக் கதவை இடுக்காகத் திறந்தாள்.

இரண்டு பேர் பரபரப்பில் இருந்தார்கள். அவரது ஆபீஸ்காரர்கள் நடராஜும் காசியும்!

அவர்களை அவள் ஏற்கனவே அறிந்திருந்தாள். ஈஸ்வரின் கம்பெனியில் வேலை செய்பவர்கள் அவர்கள்.

—என்ன? என்று கேட்டாள்?

- நீங்க தயவுசெய்து அவசரமா வரணும்.

- என்ன விஷயம்?

- ஒண்ணுமில்லை. ஒரு சின்ன விபத்து.

—என்ன காபி சாப்பிட்டாரா?

- இல்லை இன்னும் சாப்பிடல்லை. அதுக்கு முன்னாலே ஆபீஸ் வரும் போதே ஒரு விபத்து நடந்துடுத்து.

- என்ன? என்று திடுக்கிட்டாள் அவள்.

ஒரு லாரி அவர் வர்ற வழியிலே மோதிடுச்சு. அதனாலே அதிக ஆபத்து இல்லே. நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. வாங்க, அவரைப் பார்த்துடலாம்.

அவள் பரபரத்தாள்.

உள்ளே நடந்தாள். சாவிகளை எடுத்து வந்தாள்.

வாசற்கதவைப் பூட்டினாள். அவர்கள் கொண்டு வந்திருந்த ஜீப்பில் ஏறிக்கொண்டாள்.

பறந்தது.

மனசுக்குள் ஒரு சின்னப் பிரார்த்தனை எழுந்தது.

கடவுளே ஒருவேளை தனக்கு சந்தேகப் பழிகொடுக்காமல் ஈஸ்வரன் உயிரை எடுத்துக்கொள்கிறாரோ?

அதுகூட நல்லதுதான். தொந்தரவே இல்லாமல் போயிற்று. இந்த விபத்திலே போயிட்டா எத்தனையோ லாபம் அவளுக்கு.

ஜீப் சற்று பொந்துகளில் ஏறியது.

பிறகு சாலையை நோக்கிப் பாய்ந்தது.

வந்தவர்கள் மௌனமாக வந்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட சாலை திரும்பியபோது அவள் கண்ட காட்சி அவளை திகைக்க வைத்துவிட்டது.

ஏற்கனவே போலீஸ் வேன்கள் வந்திருந்தன.

கூட்டம் கூடியிருந்தது.

தூரத்திலேயே காரை விட்டு இறங்கினார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் தாவி சட்டென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டார்.

- வாங்கம்மா! என்று சொல்லி கூட்டத்தை விலக்கிக் கொண்டு அழைத்துப் போனார்.

பதட்டம் வந்துவிட்டது.

மூச்சு இரைப்பு வந்தது. கூட்டத்தை விலக்கியதும் அவரது கார் சற்று முன்புறம் நொறுங்கி உடைந்து போய்க் கிடப்பது தெரிந்தது.

லாரி ஒரு மர ஓரம் நின்றிருந்தது

வாங்க, இப்படி என்று ஒவ்வொரு இடமாக நகர்த்தி நகர்த்தி அவளைக் கொண்டு போனார் இன்ஸ்பெக்டர்.

சட்டென்று அவள் பார்வை கீழே விழுந்தது.

ஒரு சடலம் கீழே கிடந்தது.

என்ன? என்று திடுக்கிட்டுப் பார்த்தாள்.

இது லாரி டிரைவர். உங்க ஹஸ்பெண்ட் உயிரோடு இருக்கார் என்று கூறினார் இன்ஸ்பெக்டர்.

அந்தப் பிரேதத்தின் கைப்பகுதி பாதியாக விண்டிருந்தது. ஒரு கையைக் காணவில்லை. அது முண்டமாக இருந்தது.

ரத்தம் ஏராளமாகச் சிதறிக்கிடந்தது

அவளால் சுவாசம் விடமுடியவில்லை.

நெஞ்சில் ஒரே அழுத்தமாக இருந்தது.

இங்கே வாங்க, இங்கே வாங்க! என்று அழைத்துப் போனார்கள்.

பிளாட்பாரம் பக்கத்தில் ஒரு சின்ன நிழல்.

அதைச் சுற்றி பத்து பேர் நின்றார்கள்.

வாங்க இப்படி, என்று அந்தக் கும்பலுக்குக் கொண்டு போனார், இன்ஸ்பெக்டர்.

- பாருங்க!

பார்த்தாள்.

யார் அது? ஈஸ்வரா?

ஆமாம் அவர் கண்கள் திறந்திருந்தன. அப்போதுதான் அவரை ஸ்ட்ரெச்சரில் தூக்கினார்கள்.

கை விரிந்திருந்தன. அங்கங்கே ரத்தங்கள் தெரிந்தன.

நெற்றியில் காயம்

கண்களை அவர் பாதி உறக்கமாக வைத்திருந்தார்.

அவளை அருகில் கொண்டு நிறுத்தியதும்தான் தாமதம்? அவள் ஈஸ்வரை ஒரே ஒருமுறை தீர்க்கமாகப் பார்த்தாள். அவர் பார்த்து கண்ணை உயர்த்தினார் கவலைப்படாதே! என்பது போல் கை தூக்கினார்.

ஆ! என்று வீறல் அவள் வயிற்றிலிருந்துதான் கிளம்பியது.

அவளை மீறியசெய்கை அது! இவ்வளவு ரத்தத்தை நேரில் பார்த்ததில்லை.

அவள் பின்புறமாகச்சாய அவளைப் பிடித்துக் கொண்டார்கள்.

மயக்கம், மயக்கம் என்று ஒருத்தர் கத்தினார்.

தண்ணீர் கொண்டாங்க! என்று ஒரு குரல்.

சோடா கொண்டாங்க என்ற மற்றொரு குரல்.

காபி, கீபி இருக்கா? என்று மற்றொரு குரல்.

அவளுக்கு நினைவு இலேசாகத் தட்டுப்பட்டது.

அவளை கீழே படுக்க வைத்தார்கள்.

ப்ளாஸ்க்கிலே காபி இருக்கு என்ற நடராசனின் குரல்.

அதைக் கொண்டாங்க. என்று கத்தினார் இன்னொருவர்

அவளுக்கு அந்தக் குரல்கள் கேட்டன.

யாரோ அவள் அருகில் வந்து உட்கார்ந்தார்கள்.

அவள் கண்களைத் திறந்தாள்.

அந்த ஆசாமியின் கையைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். அந்த பிளாஸ்க், அவர் (ஈஸ்வரன்) கொண்டு போன அதே பிளாஸ்க்.

ஐயோ! அந்தக் காபியையா அவளுக்குக் கொடுக்கிறார்கள்?

வேண்டாங்க! என்று சொல்ல நினைத்தாள். ஆனால் வார்த்தை வெளிவரவில்லை.

கையைத் தூக்கி கோப்பையைத் தள்ள கையை எடுத்தாள்.

அதுவும் முடியவில்லை.

உடம்பை நெளித்துப் பார்த்தாள்.

அதுவும் முடியவில்லை.

இதற்குள் அவர்கள் பிளாஸ்க்கிலிருந்து காபியை கோப்பையில் ஊற்றி அவள் வாய்க்கு அருகில் கொண்டு வந்தார்கள்.

- ஐயய்யோ! வேண்டாமே விஷம் இருக்கு! என்று கத்த நினைத்தாள் அவள்.

வார்த்தை வெளியே வரவில்லை.

அதற்குள் நடராஜன் அவளது வாயில் ஊற்றி மடக் மடக் என்று உள்ளே விட ஆரம்பித்தான்

அவள் திமிரப் பார்த்தாள். ஆட்கள் பிடித்துக் கொண்டார்கள்

காபி முழுவதும் உள்ளே போய்விட்டது.

மேலும் அரை டம்ளர் எடுத்து ஊற்றினார்கள்.

பிறகு அவளை அப்படியே தூக்கி ஆம்புலன்ஸில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

'ஸ்வீட்டி' உன் சுருக்கத்தி உன் முதுகிலேதான்! என்று ஒரு அசரீரிக குரல் கேட்டது.

அவள் கண்கள் மிரண்டு பார்த்தன.

அவளை மேலும் ஒரு இருட்டு சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது.

அடப்பாவி! அந்த விஷயம் என்னையே அல்லவா கொல்லப் போகுது? என்று முனகினாள்.

அதையும் சிந்திக்க இப்பொழுது நேரமில்லை.

இருட்டு இருட்டாக அவளை நோக்கி வந்தது.

—அவை அவளைச் சீக்கிரம் மூடிவிட்டன.

அவள் குரலே வெளி வரவில்லை

அவர்கள் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

—அம்மா எப்படியும் நல்லா ஆயிடுவாங்க. அவர் ஆகணுமே!

—ஆவார். கவலைப்படாதீங்க டாக்டர் சொல்லிட்டாரு!

அந்தக் கடைசி வார்த்தைகள் தான் கேட்டன.

அவளுக்கு இப்பொழுது நினைவு போய்விட்டது

மெள்ள மெள்ள ஆழ்ந்த நிரந்தரமான அந்தகாரத்துள் அவள் இறங்கிக் கொண்டிருந்தாள்.

உத்தரவின்றி கொல்ல வராதே!

விஜயாலயன்

1

“ர்ர்ர்ர்ரப்ப்ப்!”

இடியாய் முகத்தில் விழுந்த அறையில் சுவற்றில்போய் மொத்திக் கொண்டு கீழே உதிர்ந்தான் அவன்.

உதடுகள் காரமாய் எரிய தொட்டான்.

விரல்களில் பிசுபிசுத்தது.

கண்களுக்கு கொண்டு வந்து பார்த்தான்.

விழி பிதுங்கினான்.

இளஞ்சூடான இரத்தம்.

ஷூக் கால்களை தரையில் ஆழமாய்ப் பதித்து...

அவனை நெருங்கினார் இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி.

அவன் தலையை உயர்த்திப் பார்த்தான்.

கம்பீரமாய் ஆறடியில் நின்றிருந்தார் இன்ஸ்பெக்டர்.

முகத்தில் முரட்டுத்தனம் தெரிந்தது.

கண்களில் கோபம் துள்ளியது.

அவன் பயத்தில் அலறினான்.

“சார்! அந்த நகையை நான் திருடலே சார்!”

"இத பார்! மரியாதையா உண்மையை கக்கிட்டா உனக்கு நல்லது. இல்லேன்னா இங்க மாதிரி இன்னும் நிறைய இரத்தம் கக்கி உடம்பை வீங்க வெச்சுக்குவே..."

அவன் கையெடுத்துக் கும்பிட்டான்.

"சார்... சார்! முருகர் மேல சத்தியமா... நான் திருடலே சார்..."

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி அவன் தலைமயிரை கொத்தோடு பற்றி ..

வலது கையில் ஒரு அசுர பலத்தைக் கொண்டு வந்து—

அவனை மேலே உயர்த்த...

வலியால் அவன் துடிக்க...

வலது காலை மடித்து அவன் அடிவயிற்றில் நெக்-கென்று இன்ஸ்பெக்டர் எத்த-

"ஹம்ம்ம்... ஆ ஆ ஆ?"

தொண்டை சிதற அவன் அலறிய அந்த நேரம்-

"ட்ட்ர்ர்ர்...ரிங்...ட்ட்ர்ர்ர்...ரிங்!"

டெலிபோன் கூப்பிட-

தலைமயிரோடு அவனை விசிறடித்தார் செந்தில்ரமணி.

அவன் தூரப்போய் விழுந்து மல்லாந்தான்.

அவர் டெலிபோனை சமீபித்து-

அதையெடுத்து காதில் சிநேகித்தார்.

"ஹலோ இன்ஸ்பெக்டர் ஹியர்!"

மறுமுனையில் ஒரு குரல் குறைப்பிரசவமாய் வந்தது.

"இன்ஸ்பெக்டர் சார்... நூறடி ரோட்டிலே ஒரு பொணம் கிடக்குது சார்..."

"பொணமா?"

"ஆமா சார்?"

"நீங்க யாரு? எங்கிருந்து பேசறீங்க?" இன்ஸ்பெக்டரிடம் ஒரு பரபரப்பு தொற்றிக் கொள்ள...

மறுமுனையில் -

டொக்' என்று போன் உயிரை விட்டது!

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி முகம் சிவந்தார்

"ப்ளடி! ராஸ்கல்! ஆம்பளையா இருந்துட்டு பொம்பளை யாட்டம் ஒதுங்கறான்!"

திரும்பினார்.

"ஒன் நாட் செவன்!"

"எஸ்... சார்." ஒரு கான்ஸ்டபிள் விரைப்பில் பணிந்து நின்றார்.

“இந்தப் பொறுக்கியைத் தூக்கி லாக்கப்பில போட்டு பூட்டு வந்து விசாரிக்கறேன்.”

“எஸ் ஸார்!”

“டு நாட் எய்ட்... ஒன் ஒன் செவன்! நூறடி ரோட்டுல ஒரு பொணம் கிடக்குதாம். இப்ப நாம அந்த ஸ்பாட்டுக்குப் போறோம். உடனே ஜீப்பை ரெடி பண்ணுங்க.”

அடுத்த இரண்டாவது நிமிஷத்தில்-

ஜீப்பை நூறடி ரோட்டை நோக்கி- சீறிக் கொண்டு போனது.

2

சிரத்தையோடு இருபது நிமிஷமாய் செய்த அலங்காரத்தில்-

ஆளை அசத்தினாள் தீர்த்திகா

மறுபடியும் ஒருமுறை கண்ணாடியில்-

தன்னை முன்னும் பின்னும் திருப்பினாள்.

முகத்தில் ஒரு திருப்தி ரேகை-

ட்ரெஸ்ஸிங் டேபிள்மேல் குண்டு குண்டாய் இருந்த மூன்று முழம் மல்லிகைப் பூவை எடுத்து-

மயிரிழைகளைப் பிரித்து

அதில் பதித்து சரிப்படுத்தினாள்.

வைலட்கலர் ஸ்டிக்கர் பொட்டை நெற்றியின் நடுமையத்துக்குக் கொண்டு வந்து ஒட்டினாள்.

“அம்...மா ஆ ஆ!” உதடுகளின் நுனியில் கத்த-

சமையல் அறையிலிருந்து டிபன் பாக்ஸோடு வெளியே வந்தாள் லட்சுமி.

அம்மா நீட்டிய டிபன் பாக்ஸை வாங்கிய தீர்த்திகா-

அதை ஹாண்ட் பேக்கில் நுழைத்து-

ஜிப்பை மூடினாள்.

எடுத்து தோளில் தொற்ற வைத்துக் கொண்டு கால்களை பெயர்த்தபோது-

லட்சுமி தயக்கத்தில் கூப்பிட்டாள்.

“தீர்த்திகா ஒரு நிமிஷம்...”

“என்னம்மா?”

மகளை நிமிர்ந்து பாத்தபோது-

அந்த பார்வையில் பயம் கொஞ்சம் ஒட்டியிருந்தது.

"இந்த வேலைக்கு நீ அவசியம்... தொடர்ந்து போகணுமா?"

அம்மாவின் முகத்தை ஆழமாய்ப் பார்த்தாள் தீர்த்திகா.

"அம்மா! அப்பாவுக்கு காசநோய் வந்து படுக்கையில் விழாம இருந்திருந்தா... இல்லே...நீ இந்த வீட்டுக்கு ஒரு மூத்த மகனை பெத்திருந்தா, நான் இந்தக் கேள்வியை நீ கேட்கும்படி வெச்சிருக்க மாட்டேன்."

"இல்லே... தீர்த்திகா இந்த வேலை நாலு பக்கம் போயி அலையற வேலை. நீ வேற அழகா இருக்கே. அதான் எனக்கு பயமா இருக்கு."

தீர்த்திகா இதழோடு சிரித்தாள்.

"இத பாரும்மா... நான் நெருப்பு. என்னை யாராவது நெருங்கினா... நானும் எரிஞ்சு... அவங்களயும் எரிச்சுடுவேன். நீ பயப்படாம உன் வேலையைப் பாரு... நான் வர்றேம்மா."

சொல்லிவிட்டு தீர்த்திகா வாசலை நோக்கி நடந்த அதே நேரம்-

ஒரு பெரிய ஆபத்து அவளை கை குலுக்கி வரவேற்க காத்துக் கொண்டிருந்தது.

3

ஜீப் ஒரு உறுமல் போட்டு நிற்க—

ஜீப்பிலிருந்து கான்ஸ்டபிள்தள் உதிர்ந்தார்கள்.

ரோட்டின் ஓரம் ஒரு சின்னக் கும்பல் போட்டிருந்தது.

அந்தக் கும்பலை லத்தியின் நுனியால் விரட்ட ஆரம்பித்தார்கள்.

ஒரு அசாத்திய சுறுசுறுப்புடன் கீழே குதித்த இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி—

அந்தக் குரல் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து—

சாக்பீஸ் கோடுகளுக்கு இடையே விழிகளை ஆழமாய்ப் பதித்தார்.

அவர் உதடுகளில் நோகாமல் ஒரு "இச்" பிறந்தது.

அடப்பாவமே!

எவ்வளவு அழகான பெண்.

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி விசனத்தோடு வர்ணிக்கப் பட்ட அந்த அழகான பெண்—

தலையிலிருந்து அதிகப்படியான இரத்தம் என்ற அந்த உடலின் முக்கியமான திரவத்தை சிந்திக் கொண்டு...

கை கால்களை "X" வடிவத்தில் பரத்திக் கொண்டு இறந்து கிடந்தாள்.

இறந்து கிடந்த அந்தப் பெண் விழிகளைத் திறந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள். லேசாக பிளந் திருந்த வாய் கோரமாகி அவளது அழகில் பத்து சதவிகிதத் தைக் குறைத்துக் கொண்டிருந்தது பிளந்தவாயிலிருந்து வழிந் திருந்த இரத்தம் கன்னத்தில் தாரை அமைத்து கூந்தலில் சங்கமித்து முடிந்து போயிருந்தது. பதமாக செய்யப்பட்ட ஜிலேபி நிறத்தில் இருந்தாள். சுமார் ஐந்தரை உயரத்தை தொட்டிருந்தாள் உடலைதின் - னென்றுகட்டில் காப்பாற்றி இருந்தாள். பூப்போட்ட நீலநிற சைனா சில்க்குக் சேலையும் அதே நிறத்தில ஒத்துப் போன ஜாக்கெட்டும் உடலுக்குக் கொடுத்திருந்தாள். சேலை முழங்கால் வரை உயரத் தொட்டு பளிரென்று கண்களை இம்சித்தது. நகங்களில் சிவப்பு நிற நையில் பாலீஸைத் தடவி இருந்தாள். பின் பாதத்தைச் சுற்றி வார் ஓடி பக்ளஸ் போட்டிருந்த செருப்பை அணிந்திருந்தாள். ஒரு காலில் மட்டும்.

வலது கால் வெறுமையாய் இருந்தது.

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி பார்வையைசுற்றிலும் விரட் டினார்

இன்னொரு கால்செருப்பு கூட்டத்தில் எங்காவது மிஸ்ஸாகி இருக்கும்.

இந்தப் பெண்ணுக்கு சின்ன வயசுதான்.

பத்தொன்பதிலிருந்து இருபத்து ஒன்றுக்குள் இருப்பாள்.

இன்ஸ்பெக்டர் யோசனையை மெதுவாய் தடவிக் கொடுத் தார்.

இந்தப் பெண் கார், பைக் ஏதாவது வாகனங்களினால் அடிபட்டிருக்கலாம். அல்லது அடிக்கப்பட்டிருக்கலாம். இல்லை ரேப் செய்து ஆக்ஸிடெண்ட் என்று பேர் படுத்தி இருக்கலாம்.

வெதர் ஆக்ஸிடெண்ட் ஆர்மர்டர்?

ஆரம்ப நுனியைத் தேட வேண்டும்.

அந்த இடத்தின் சூழ்நிலையை பார்வையில் மேய்ந்தார்.

அந்தப் பெண் பிணமான இடத்தின் அருகில், ஒரு ஆறு மாடிக் கட்டிடம் ஒரு டீக்கடை, மளிகைக் கடை, ஒரு ரிக்கார்டிங் ஷாப், பழவகைக் கடை என்று நீண்டுக்கொண்டே போனது.

பார்வையை எதிர்புறத்திற்கு அனுப்பினார்.

அங்கே—

ஒரு மெடிக்கல் ஷாப், பேக்கரி, ரேடியோக் கடை, கார் மெக்கானிக் ஷாப் என்று வாலாய் நீண்டு போனது.

மீண்டும் பார்வையைத் திருப்பி-

ஒதுங்கி நின்றிருந்த கூட்டத்தின் மேல் பதித்தார் இன்ஸ் பெக்டர்.

"உங்களுக்கு யாராவது இந்தப் பெண்ணைத் தெரியுமா?"

எல்லோரும் வரிசையாய் ஸ்லோமோஷனில் தலையாட்டினார்கள்.

"தெரியாது சார்!"

கான்ஸ்டபிள்களை விரட்டி-

அங்கிருந்த கடைக்கார உரிமையாளர்கள், சிப்பந்திகளை வரவழைத்து -

விசாரணையைத் துவங்கினார்.

"அம்ம்... ஆஆஆ!"ன்னு அலறல் கேட்டுது சார்... வெளியே ஓடி வந்து பார்த்தப்போ இந்தப் பொண்ணு ஏராளமான இரத்தத்தை சிந்திகிட்டு செத்துக் கிடந்தா இதுதான் சார் எங்களுக்குத் தெரியும்..."

எல்லோரும் இதே வரிசைகளை மெட்டாய்ப் பாட—

ஒரு பெரிய ஏமாற்றம் செந்தில் ரமணியின் கைகளைப் பற்றி வேகமாய்க் குலுக்க-

முழுவதுமாய் துவண்டுபோக ஆரம்பித்த நேரம்.

ரோட்டை ஆக்ரோஷமாய் தேய்த்துக் கொண்டு ஒரு கார் நிற்க...

அதிலிருந்து போட்டோ கிராபரும் கைரேகை நிபுணரும் -

இருபக்கமும் காரின் கதவுகளை பட்...பட்.. என்று விரித்துக் கொண்டு -

வெளிப்பட்டார்கள்.

4

தீர்த்திகா ஆபீஸைத் தொட்டபோது-

மணி 0-30இல் இருந்தது.

தன்னுடைய சீட்டுக்கு வந்து-

அதில் அமிழ்ந்தபோது-

ஆபீஸ் பியூன் அவளை சமீபித்தான்.

“மேடம்! உங்களை மேனேஜர் கூப்பிடறாரு...”

முகத்தில் பொட்டுப் பொட்டாய் மினுமினுத்த வியர்வைத் துகள்களை சேலைத் தலைப்பால் விரட்டியபடி மேனேஜர் அறையை சிநேகித்து-

கதவில் விரல்களைப் பதித்து அழுத்தம் கொடுத்தபோது...

விலகிய கதவுக்குள் நுழைந்து...

அந்த அறையில் பிரவேசித்தாள் தீர்த்திகா.

பைலில் கையெழுத்தாய் பதித்துக் கொண்டிருந்த விமல் ராஜ் நிமிர்ந்தான்.

உதடுகளுக்கு ஒரு புன்னகையைத் தந்தான்.

“வாங்க மிஸ் தீர்த்திகா.”

தீர்த்திகா வார்த்தைகளில் வழுக்கினாள்.

“ஸா.. ஸாரி சாரி கொஞ்சம் லேட்டாயிடுச்சு.”

“கொஞ்சம் லேட்டாகலே மிஸ் தீர்த்திகா கிட்டத்தட்ட அரைமணி நேரம்!”

“ஐயாம் வெரி சாரி சார்!”

“தட்ஸ் ஆல் ரைட்! இன்னைக்கு உங்களுக்கு எந்தெந்த ஏரியா?”

அப்படிக் கேட்ட விமல்ராஜின் பார்வை தீர்த்திகாவின் முகத்திலிருந்து தத்தித் தத்தி இடுப்பு வரை இறங்கி நின்றது.

விமல்ராஜ் 35 வயதில் இருந்தான். லேசான சிவப்பு. பெண்களை யோசிக்க வைக்கும் அழகு. தாய், தந்தை வற்புறுத்தியும் இந்த நிமிஷம்வரை திருமணம் செய்து கொள்ளவில்லை. பெண் வீட்டுக்காரர்கள் வலிய வந்தும் சிவப்பு சிக்னலையே விமல்ராஜ் காட்டிக் கொண்டிருக்கக் காரணம்-தொட்டு விலக்கும் பட்டியலில் இன்னும் கொஞ்சம் பெண்கள் சேரட்டுமே என்ற வைராக்யமான ஆசை.



தீர்த்திகா போக வேண்டிய ஏரியாக்களை ஒப்புவித்தாள்.

விமல்ராஜ் பைலின்மேல் பேனாவை அமர்த்திவிட்டு—

ரோலிங் சேரில் சாய்ந்து கொண்டு அப்படியும் இப்படியுமாக அசைந்து கொண்டே சொன்னான்.

“மிஸ் தீர்த்திகா! சேல்ஸ் உமன் உத்தியோகம் கொஞ்சம் கஷ்டமான உத்தியோகம்தான். இந்தக் கம்பெனி தயாரிக்கிற

சோப்பையும், செண்ட்டையும் கடையில் எடுத்துகிட்டு... வீடு வீடாய் சுமந்துகிட்டு. அவங்க விருப்பத்தோடு பேசினாலும் சரி... வெறுப்பாக பார்த்தாலும் சரி... நீங்க சிரிச்சு சிரிச்சுப் பேசி... உங்க திறமை அவங்களை தலையசைச்சு வாங்க சம்மதிக்க வைக்கறது பெரிய கஷ்டம்தான்... நீங்க இந்தக் கம்பெனியில ஜாயின் பண்ணி கிட்டத்தட்ட ரெண்டு மாசம் தாண்டப் போகுது. இந்த ரெண்டு மாசத்துல உங்களோட ப்ராக்ரஸ் ரொம்பவும் திருப்தியா இருக்கு. இது பத்தி கம்பெனி எம்.டி. கிட்டே சொல்லி... உங்க சம்பளத்தை இன்ஸ்கிரீஸ் பண்ணச் சொல்லி ரெகமெண்ட் பண்ணி இருக்கேன்.''

''தாங்க்யூ... வெரிமச் சார்'' —தீர்த்திகா சந்தோஷத்தை விழிகளில் அள்ளிக் கொண்டு சொல்ல—

விமல்ராஜ் உதடுகளில் ஒரு சின்ன சிரிப்பை உதிர்த்தான்.

''நன்றியை வார்த்தையால் சொன்னால்... எனக்குப் பிடிக்காது... மிஸ் தீர்த்திகா!''

தீர்த்திகா ஒரு குழப்பத்தோடு அவனைப் பார்த்தாள்.

''நைட் படுக்கறப்போ... இந்த வார்த்தையை கொஞ்சம் யோசனை பண்ணிப்பாரு தீர்த்திகா- தெளிவாப் புரியும். இப்ப நீங்க ட்யூட்டிக்குப் புறப்படலாம்.''

சொன்ன விமல்ராஜை ஆழமாய்ப் பார்த்துவிட்டு—

முகத்தில் லேசான கலவரத்தை வாங்கிக் கொண்டு

கதவை நோக்கிப் போனாள் தீர்த்திகா.

கிளுக்கு அலையும் ஒரு புலியின் பார்வையாய்—

போகும் தீர்த்திகாவையே பார்த்துக் கொண்டிருந்தான் விமல்ராஜ்.

5

காக்கி உடுப்புக்களை உடம்புக்குப் பொருத்தி தொப்பியை தலையில் அமர்த்தி—

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி புறப்பட்டபோது—

அவர் மனைவி கீதாம்பரி கூப்பிட்டாள்.

''என்னங்க?''

''என்ன... கீதாம்பா?''

''நாளைக்கு என்ன நாள்?''

''வெள்ளிக்கிழமை...''

"அது தெரியும்... நாளைக்கு ஒருவிசேஷமான நாள், அது தெரியுமா?"

"என்ன... அது?"

"நம்ம பொண்ணு விஜயதாராவோட மூணாவது பிறந்த நாள்..."

"ஐயாம் ஸாரி மறந்தே போயிட்டேன்."

கீதாம்பரி விழிகளின் நுனிகளில் கோபம் காட்டினாள்.

"நான் உங்க மனைவி அதாவது ஞாபகம் இருக்கா!"

செந்தில்ரமணி தன் உதடுகளில் ஒரு சின்ன சிரிப்பைத் தவழவிட்டான்—

"நைட்டானா அந்த ஞாபகம் மறக்காம வந்துடும்."

கீதாம்பரியின் முகத்தில் கோபம் கொடிபிடித்துக் கொண்டு போனது.

"இன்னைக்கு சாயங்காலம் சீக்கிரமே வந்துடுங்க... அசோகா காம்பௌசுக்குப் போயி... விஜயதாராவோட பிறந்த நாளைக்கு ரெண்டு டிரெஸ் எடுக்கலாம்."

"சரி..."

"நாளைக்கு லீவு போட்டுருங்க."

"போட்டர்றேன்."

"இப்ப சொன்னதுக்கெல்லாம் தலையாட்டுவீங்க. நாளைக்கு நைட் பண்ணெண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டி... ஸாரி... கீதாம்பரி... ஒரு மர்டர் கேஸ் விஷயமா போயிட்டேன். எமர்ஜென்ஸிக்கு ரோந்து போயிட்டான். மினிஸ்டர் வந்துட்டாரு. அதனால பாதுகாப்புக்குப் போயிட்டேன். இப்படி ஏதாவது சொல்லுவீங்க."

"இந்த முறை நிச்சயம் சொல்ல மாட்டேன்."

"நம்பலாமா?"

"நம்பலாம்... நான் வர்றேன்."

கீதாம்பரி தலையாட்டி சம்மதம் தர—

இன்ஸ்பெக்டர் செந்திலரமணி முதலில் ஜீப்பைத் தொட்டு—

இரண்டாவதாக ஸ்டேஷனைத் தொட்டு—

தன்னுடைய நாற்காலிக்குப் போனபோது—

போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் மேஜையில் தயாராய் காத்திருந்தது.

அவசரமாய்ப் பிரித்து— ஆர்வமாய் அதில் ஓடியிருந்த எழுத்துக்களின் மீது—

பார்வையை விரட்டினார்.

இந்த பெண் எதன் மீதோ பலமாய் மோதி—

மண்டை பிளந்து இறந்திருக்கிறாள்.

கடைசியாய் இருந்த வாசகங்களை முடித்தபோது—

அந்த வாசகம் கண்களில் அறைந்தது.

அது...!

(“வாசகர்களே! சஸ்பென்ஸ்! முடிந்தால் அதை நீங்கள் கண்டுபிடியுங்கள் கண்டுபிடித்து விட்டால்? எங்கே உங்கள் முதுகைக் காட்டுங்கள். ஒரு தட்டுத்தட்ட தப்பா நினைக்காதீர்கள். உங்கள் திறமைக்கான தட்டு அது)

யோசனை இன்ஸ்பெக்டரை பெண்டுலமாய் ஆட்டியது.

அப்படியானால்?

இந்தப் பெண்ணின் சாவு சாதாரண ஆக்ஸிடெண்ட்டா?

இந்தப் பெண் உயிர் போக எது காரணமாய் இருந்தது?

மண்டை பிளந்து... இறந்திருக்கிறாள்.

ஏதாவது கனமான பொருளினால் தாக்கல் பட்டிருக்கலாமே?

அப்படியானால்?

இது மர்டரா?

குழப்பம் இன்ஸ்பெக்டர் செந்தில் ரமணியை ஏகமாய்த் தடவ—

சோர்ந்துபோய் நாற்காலியின் முதுகில் சாய்ந்தாள்.

“சார்!”

நிமிர்ந்தார்.

எதிரே ஒரு கான்ஸ்டபிள் விரைப்பில் நின்றிருந்தான்.

“என்ன மேன்?”

“ஒரு அம்மி... உங்களைப் பார்க்க வந்திருக்காங்க”

“என்ன விஷயமாம்?”

“உங்களை நேரில பார்க்கணுமாம்...”

“வரச் சொல்...”

இரண்டாவது நிமிடம்—

உள்ளே நுழைந்த அந்தப் பெண் [illegible] ...ற்பது வயதில் இருந்தாள்.

முகத்தில் சோகம் டேரா போட்டிருந்தது.

“வணக்கம்... இன்ஸ்பெக்டர்”—கைகூப்பினாள்.

“வணக்கம்! என்னம்மா?”

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி கேட்ட அடுத்த வினாடியே அவள் கண்களில் குபுக்கென நீர் பிறந்தது.

உதடுகளில் பிளந்து குபீரென அந்தக் கேவல் பீறிட்டது.

"சார்... சார்... என் என்னோட மகளை ரெண்டு நாளா காணோம் சார்"—இப்படிச் சொன்ன அந்தப் பெண் தீர்த்திகாவின் அம்மா லட்சுமி.

6

இரவுப் பூக்கள் ஒவ்வொரு வீடுகளிலும், தெருக்களிலும் பூக்க ஆரம்பித்ததோடு—

தீர்த்திகா வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இன்றைக்கு தான் போட்ட டார்ஜெட்டைவிட அதிகமாய் வியாபாரம் ஆனதில்—

முகத்தில் அதிகமான சந்தோஷம் ஊர்வலம் போனது.

சட்டென்று அந்தப் பகுதி கண்களில் பட—

ஒரு சின்ன ஆசை மனதிற்குள் ஓடியது.

இங்கு நிறைய குடித்தனங்கள் இருக்கிறார்கள்.

முயற்சித்தால் ஒரு நல்ல பலன் கிடைக்கும்.

முயற்சிக்கலாமா?

சரி—என்று மனசு சொல்ல—

படிகளில் கால்களைப் பதித்துஒவ்வொரு குடித்தனங்களின் கதவை இம்சித்து—

சோப்பின் மணத்தைக் கூறி... செண்ட்டின் தரத்தை விளக்கி...

கடைசியாய் அந்த அறையினை சமீபித்து—

விரல் நுனிகளால் கதவின் பரப்பில் தட்டினாள்.

ப்ளக்—கென்று கதவு திறந்தபோது—

ஆறடி உயரத்தில்... சிவந்த நிறத்தில். ஒரு இளைஞன் நின்றிருந்தான்.

"உங்களுக்கு... என்ன வேணும்?"

"நான் தனசேகரன் அண்ட் கம்பெனியில சேல்ஸ் கேர்ளா இருக்கேன். எங்க கம்பெனி தயாரிச்ச சோப்பும்... செண்ட்டும் கொண்டு வந்திருக்கேன் சாம்பிள் பார்க்கறீங்களா?"

இளைஞன் சிரித்தான்.

"உள்ள வாங்க... பார்க்கலாம்."

தீர்த்திகாவின் கால்களை ஒருவித தயக்கம் காட்டிக் கொள்ள—

மெதுவாய் உள்ளே போனாள்.

"க்ளக்க்!"

வெக்-கென்று அதிர்ந்தாள் தீர்த்திகா.

கதவைத் தாளிட்ட இளைஞன் திரும்பினான்.

உதட்டோரம் ஆசையாய்ச் சிரித்தான்

"எ... எ... எது.. க்கு கத...கதவை... சாத்தறீங்க?"

"சாம்பிள் காட்டறதா சொன்னியே? பார்க்க வேண்டாமா?"

தீர்த்திகாவின் விழிகளில் பயம் வந்து ஒட்டிக்கொள்ள—

வார்த்தைகளில் திணறினாள்.

"வேண்... வேண்டாம்.. க...க...கதவைத்...திறங்க."

அவன் சத்யராஜ் பாணியில் சிரித்தான்.

"இவ்வளவு அழகா இருக்கே. வியாபாரம் வேற பண்ண வந்துட்டே. வியாபாரத்தை முடிச்சுட்டே போயிடு."

இதயம் தாறுமாறாய அடிக்க—

உடம்பெல்லாம் வியர்வை கொட்ட—

கத்தினாள்.

"வே.. வேண்டா என்னை விட்டுடு"

அந்த இளைஞனின் கண்களில் காமம் துள்ளியது.

அவள் கத்தலை வாங்கிக் கொள்ளாமல்—

தீர்த்திகா கதறக் கதற—

அவளை நோக்கி மெதுவாய் நடக்க ஆரம்பித்தான்.

7

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணியும் அந்தப் பெண் லட்சுமியும் டாக்டர் சுரேந்திரனைப் பார்க்கப் போனபோது, ஒரு நோயாளியை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்... உட்காருங்க!"

"லேசா ஸ்மெல் கிளம்பி இருக்கும் இன்ஸ்பெக்டர்."

"பரவாயில்லே டாக்டர் இன்னைக்குக் காலைல போஸ்ட் மார்ட்டம் ஆன அந்தப் பொண்ணோட பாடியை டிஸ்போஸ் பண்ணிட்டீங்களா?"

"இன்னும்... இல்ல இன்ஸ்பெக்டர்..."
"அந்த பாடியை நாங்க பார்க்கலாமா... டாக்டர்"
"பரவாயில்லே... டாக்டர்."
"அப்படின்னா... தாராளமா பார்க்கலாம். கந்தா!"
டாக்டர் சுரேந்திரனின் கத்தலுக்கு ஒரு கம்பவுண்டர் வந்து நின்றான்.
"கந்தா...! இவங்களை பிணக்கிடங்குக்கு கூட்டிட்டுப் போயி... டோக்கன் நெம்பர் ஆளைக்காட்டு."
அந்தக் காம்பவுண்டர் இவர்களை கண்களால் அளந்து—
"வாங்க!" என்று முன்னால் வேகமாக—
இருவரும் அவன் பின்னால் மோப்பமடானார்கள்.
நோயாளிகளைக் கடந்து—
மருந்து வாசனைகளை சுவாசித்து—
வெள்ளைப் புறாக்களாய் அங்கும் இங்கும் திரியும் நர்ஸு-களை விலக்கி—
பிணக்கிடங்கை நெருங்கியதும்—
காம்பவுண்டர் பூட்டை விடுவிடுத்து—
உள்ளே போனார்கள்.
வெள்ளைத் துணியில் மூட்டையாகிக் கிடந்தது வரிசையாக நான்கு பிணங்கள்.
காம்பவுண்டர் மூன்றாவதாக வரிசை போட்டிருந்த பிணத்தை சமீபித்து—
கட்டப்பட்டிருந்த முடிச்சுகளை அவிழ்க்க ஆரம்பித்தான்.
இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி பார்வைக்கு ஒரு கூர்மையைத் தர—
லட்சுமியின் இதயம் உச்ச வேகத்தில் படபடக்க—
முடிச்சுகளை விடுவித்து—
சரேலென வெள்ளைத் துணியை விலக்கினான் கம்பவுண்டர்.
லட்சுமி ஒரு பெரிதான அலறலுக்கு வாயைத் திறந்தாள்.

8

அசோகா காம்ளக்சுக்கு முன்னால்—
பைக் மூச்சை உள் வாங்கிக் கொள்ள—
இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி கீழே இறங்கி அதன் தலையிலிருந்த சாவியை உருவினார்
நீதாம்பரி விஜயகாராமைச் சுமந்து கொண்டு நிலத்தில் கால்களைப் பதித்து இறங்கினாள்.

மூவரும் அசோகா காம்ப்ளக்சுக்குள் நுழையும்போது—

வக்கீல் வெற்றிவேல் எதிர்பட்டார்.

"ஹலோ! வெற்றி! எங்கடா இந்தப் பக்கம்" செந்தில் ரமணி கேட்க—

மூக்கு கண்ணாடியை சரிபடுத்திச் சொன்னான் வெற்றி வேல்.

"என்னோட க்ளையண்ட் ஒருத்தர் இங்கிருக்கார். பார்க்க வந்தேன். ஆமா நீ?"

"நாளைக்கு எம்பொண்ணு விஜயதாராவோட பர்த் டே... அவளுக்கு டிரஸ் எடுகக வந்தாம்."

"ஏண்டா எங்களையெல்லாம் பார்த்தா பெரியமனுஷனாத் தெரியலையா?"

"ஸாரிடா வெற்றி! யாரையும் இன்வைட் பண்ணலே... ரொம்ப சிம்பிளா கொண்டாடறோம்."

"த்தெட்!"

ஒரு ஹவாய் செருப்பு இரண்டுபேருக்கும் நடுவில் விழுந் தது.

செந்தில்ரமணி கோபத்தை கண்களில் தொட்டுக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார்.

மாடி மரக் கைப்பிடியின்மேல் விஜயதாராவை கீதாம்பரி உட்கார்த்தி வைத்திருந்தாள்.

கீதாம்பரி பார்வையால் கெஞ்சினாள்.

"ஸாரிங்க! இதன்மேல உட்காரணும்னு விஜயதாரா ரொம்ப அடம்பிடிச்சா அதான் உட்கார்த்தி வெச்சேன்."

இன்ஸ்பெக்டர் கீழே விழுந்து கிடந்த செருப்பையும் மேலே உட்கார்ந்திருந்த விஜயதாராவையும் மாறி மாறி பார் வையை வீசினார்.

மேலே உட்கார்ந்திருந்த விஜயதாராவின் ஒரு கால் செருப்பு கீழே விழுந்து கிடக்க—

மற்றொரு செருப்பு அவள் காலில் இருந்தது.

பட்டென்று மூளையில் ஒரு மின்னல்.

புயல் தேகத்தில் ஜேபியிலிருந்து பர்ஸை உருவி—

அதிலிருந்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை விடு வித்து—

அவைகளை வெற்றிவேலிடம் நீட்டிக் கொண்டே கேட் டார் இன்ஸ்பெக்டர்.

"நீ கார்லதானே வந்திருக்கே?"

"ஆமா?"

"இந்தா கிராம்பரியம் விஜயதாராவும் விருப்பப்படற ட்ரெஸ்ஸை செலக்ட் பண்ணி பணத்தை பே பண்ணிட்டு, கார்ல அவங்களை என்னோட வீட்டுல ட்ராப் பண்ணிடு நான் வர்றேன்."

வெற்றிவேல் கூப்பிடக் கூப்பிட—

"கீதாம்பரி என்னங்க?" என்று வாயைத் திறக்கத் திறக்க—

பைக்கை குறி வைத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி.

9

கீதாம்பரியின் விழிகளில் ஆச்சரியம் தேங்கி நிற்க—

கேட்டாள்.

"அந்தக் கொலைகாரனை எப்படிங்க... கண்டுபிடிச்சீங்க?"

இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி காக்கி உடுப்புகளை உடம்பிலிருந்து பிரித்து—

பாத்ரூம் போய் கைகால் முகமெல்லாம் கழுவிக் கொண்டு வந்தார்.

"கொலைகாரனை நான் எங்கே கண்டுபிடிச்சேன்? நம்ம பொண்ணு விஜயதாராதான் கண்டுபிடிச்சா..."

கீதாம்பரி புரியாமல் விழித்தாள்.

"என்ன சொல்றீங்க? கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுங்க?"

அருகிலிருந்த உடைந்த நாற்காலியை இழுத்து—

அதில் அமிழ்ந்து சாய்ந்து கொண்டார் இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி.

"சொல்றேன்... அசோகா காம்ப்ளக்ஸ்ல நீ விஜயதாராவை மாடி கைப்பிடியிலே உட்கார்த்தி வெச்சிருந்தப்போ, அவ காலிலிருந்த ஒரு செருப்பு எங்க ரெண்டுபேருக்கும் நடுவுல விழுந்துச்சு. இன்னொரு செருப்பு அவள் காலிலேயே இருந்துச்சு இதுதான் விஜயதாரா கொலைகாரனைக் கண்டுபிடிக்க

எனக்குக் கொடுத்த பெரிய க்ளூ. அந்தப் பொண்ணு இறந்து
கிடந்த ஸ்பாட்ல ஒரு ஆறுமாடிக் கட்டிடம் இருக்குது!''
''இறந்து போன அந்தப் பெண் தீர்த்திகாதானே?''
இன்ஸ்பெக்டர் செந்தில்ரமணி உதடுகளில் ஒரு புன்ன
கையை ஓடவிட்டார்.
''எல்லோரும் அப்படித்தான் நினைச்சுட்டாங்க...தீர்த்திகா
வோட அம்மா லட்சுமியும்கூட அப்படித்தான் முடிவு பண்ணிட்
டாங்க ஆனா இறந்துபோன அந்தப் பெண் தீர்த்திகாயில்லே,
மாதங்கி...''
''மாதங்கியா?''
''ஆமா கீதாம்பரி மாதங்கிதான். வரிசையா சொன்னாத்
தான் உனக்குத் தெளிவாப் புரியும் மாதங்கி கொலையாகிக்
கிடந்த ஸ்பாட்ல ஒரு செருப்பு கிடந்துச்சு... இனனொரு
செருப்பு காணலே பக்கத்துல ஒரு ஆறு மாடிக் கட்டிடம்.
அதோட சொந்தக்காரர் வேலுச்சாமிக் கவுண்டர், அந்த
வேலுச்சாமிக் கவுண்டர் அந்த ஆறு மாடிக் கட்டிடத்தை ஒரு
ஹோட்டலா நடத்தாமெ பல குடித்தனங்களை வெச்சு மாத
வாடகை வாங்கிட்டு இருக்காரு. அந்த ஆறாவது மாடியில்
உதயசங்கர்ன்னு ஒரு இளைஞன் குடியிருக்கான். அவன் ஒரு
பிரைவேட் கம்பெனியில சேல்ஸ் எக்ஸிகியூடிவா இருக்கான்.
அவன் பல பெண்களுக்கு வலைவீசி வீழ்ந்ததும் தொட்டுட்டு
விலகிடுவான் அந்த வரிசையில மாதங்கியையும் நிற்க வெச்
சான். ஆனா, அந்தப் பெண் மாதங்கி அந்த வரிசையிலிருந்து
விலகி, வயித்துல வளர்ற உன்னோட குழந்தைக்கு என்ன பதில்
சொல்லப் போறேன்னு கேட்டிருக்கா. ஆனா, உதயசங்கர்
அதை கலைக்கச் சொல்லி இருக்கான். மாதங்கி பிடிவாதமா
மறுத்திருக்கா. சம்பவத்தன்னைக்கு ஒரு முடிவோடு உதய
சங்கரைத் தேடிப் போயிருக்கா. அந்த சமயத்துலதான்—
தீர்த்திகா தன் கம்பெனி ப்ராடெக்ஸ்ஸை ரெப்ரசண்ட்
பண்ணப் போயி அங்க மாட்டி இருக்கா. அவன் அவளை கற்
பழிக்க முயற்சி பண்றப்போ கதவு தட்டப்பட்டிருக்கு.
திறந்தப்போது மாதங்கி ஒரு புயலா உள்ள நுழைஞ்சிருக்கா.
அங்கிருந்த சூழ்நிலையைப் பார்த்து கொதிச்சுப் போயிருக்கா.
என்னைக் கெடுத்ததும் இல்லாம இன்னொரு பெண்ணையும்
கெடுக்கப் பார்க்கிறியான்னு அவன் மேல பாய... நல்ல ஒரு
சந்தர்ப்பத்தை கெடுத்துட்டாளேன்னு உதயசங்கர் மாதங்கி

மேல ஆத்திரப்பட ரெண்டு பேருக்கும் நடந்த போராட்டத்துல மாதங்கி காலிலிருந்த ஒரு செருப்பு அறுந்து பீரோ அடியிலே போயிடிச்சு. உதயசங்கர் மாதங்கியின் காலை வாரி மாடியிலிருந்து வீசிட்டான் கீழ விழுந்த மாதங்கி மண்டை பிளந்து இரத்தத்தை ரோட்டில தெளித்து, சிதறி செத்துப்போயிட்டா. இதைப் பார்த்த தீர்த்திகா அதிர்ந்து போயி, கதவைத் திறந்து தலைதெறிக்க ரோட்டிலே ஓடறப்போ, எதிர்ல வந்த கார்ல மோதி மயக்கமாயிட்டா. கார்ல வந்த ராம்ஜி எக்விப்மெண்ட் ஜி எம் பிரபுதாஸ் தீர்த்திகாவை ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோமில் சேர்த்திருக்கார் ரெண்டு நாள் கழிச்சு சுத்தமா மயக்கம் தெளிஞ்சு தீர்த்திகா விஷயத்தைச் சொல்ல... பிரபுதாஸ் எனக்கு போன் செய்த சமயம்தான் நான் அந்த ஆறு மாடி கட்டிடத்தை சல்லடை போட்டு சலிச்சுகிட்டு இருந்தேன். அந்த ஆறாவது மாடி இளைஞன் உதயசங்கர் அறையை அலசினப்போ பீரோ அடியில வார் அறுந்த அந்த செருப்பு கிடந்துச்சு. அவனை நாலு தட்டு தட்டினதும்... எல்லா உண்மைகளையும் பிசகாம கக்கிட்டான். அவனை ஒரு பொண்ணை கற்பழிக்க முயற்சி பண்ணின குற்றத்திற்காகவும் இன்னொரு பொண்ணை கொலை பண்ணின குற்றத்திற்காகவும் எப் ஐ ஆர் புக் பண்ணி உள்ளே வெச்சிருக்கேன்... ஆமா, என் ஸ்வீட் விஜயதாரா எங்கே?''

''பக்கத்து வீட்டுக்கு விளையாடப் போயிருக்கா. அதோ அவளே வந்துட்டா.''

''டாடி!''

இன்ஸ்பெக்டர் செந்தில் ரமணி திரும்ப-

வாசல்படியில் ஒரு மூன்றாம் பிறையில் நின்றிருந்தாள் விஜயதாரா.

ஓடிப்போய் அவளைத் தூக்கி—

அந்த பிஞ்சுக் கன்னங்களில் முத்தம் கொடுத்தார்.

கீதாம்பரி கத்தினாள்.

''என்னங்க! அவ சின்னப் பொண்ணு. உங்க வேகத்துக்குத் தாங்க மாட்டா''- சொல்லச் சொல்ல—

அதை காதில் வாங்கிக் கொள்ளாமல்—

விஜயதாராவின் கன்னங்களில் முத்தங்களை மூச்சுமுட்ட பதித்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் செந்தில் ரமணி.

பற்களின் பாதுகாப்பு!

—கே. இராஜேந்திரன்

நம் உடலின் ஒவ்வொரு உறுப்பும் நல்லமுறையில் இயங்க, சத்துள்ள உணவு தேவை. அந்த உணவு, நாம் நன்கு மென்று விழுங்கிய பின் குடலை அடையவேண்டும். நாக்குதான் சுவை அறிகிறது

பற்களுக்கு, மெல்லுவதைத் தவிர வேறு சில வேலைகளும் உண்டு. நாம் கோபமுற்றால் பற்களை 'நறநற'வென்று கடிக்கிறோம். குளிரில் வெடவெடக்கும் போது, பற்களும் தந்தி அடிக்கின்றன.

சிலர் பற்களைக் கடித்துக்கொண்டு [illegible]. பழம்போன்றவற்றின் தோலை உரிப்பர்; அல்லது ஒரு சீசாவின் மூடியைத் திறந்து எடுப்பர். [illegible], [illegible] பற்களையே ஆயுதமாக்கி 'வெடுக்'கென்று கடிப்பர்.

ஆக, உடம்பின் அவயங்களில் பல் ஒரு சிறப்பான உறுப்பாகும்.

பற்கள் இரண்டு வரிசையில் அமைந்துள்ளன. முன் பற்கள் எதையாவது [illegible] உதவுகின்றன. எனவே, [illegible] அகலமாகவும், கூர்மையாகவும் உள்ளன. அடுத்துள்ளவை [illegible] பயன்படுகின்றன. [illegible] [illegible]. [illegible] 'கடைவாய்ப் [illegible]' ([illegible]) [illegible]. [illegible] இல்லை. அவை சப்பையாக அமைந்துள்ளன.

[illegible] 'டென்டைன்' [illegible] 'எனாமல்' [illegible].

ஒவ்வொரு பல்லும், தாடை எலும்புடன் தக்கவாறு பொருத்தப்பட்டுள்ளது.

பற்சொத்தை தானாகவேதான் உண்டாகிறது. பல்லில் ஏற்படும் எந்த நோயும், உடம்பின் மற்ற உறுப்புகளைப் பாதிக்கிறது; அவற்றின் இயக்கமும் சீர்கெடுகிறது

முதலில், முளைப்பவை ''பால் பற்கள்'' எனப்படும். அவை விழுந்து; பிறகு முளைக்கும் பற்கள். நிரந்தரமானவை. மனிதனின் கடைசிக்காலம் வரை நிலைத்திருப்பவை.

சாதாரணமாக, பற்சிதைவினால்தான் பற்கள் விழுகின்றன. அதைத்தவிர வேறு காரணங்கள் உண்டா?

உண்டு முதல்காரணம் நம்முடைய அலட்சியம்தான்.

நாகரீகம் நமது உணவுப்பழக்கத்தை மாற்றிவிட்டது. நமது பற்களுக்கு ஒவ்வாத உணவ வகைகளையும் உண்டு மகிழ்கிறோம். அதனால், பற்கள் சீக்கிரமே விழ நேரிடும்.

நமது 'உணவுத் திட்டத்தில், இயற்கையான உணவுகள் குறைந்துவிட்டன. சாக்லேட். ஐஸ்க்ரீம் போன்றவை சிலரின் அத்தியாவசிய ஐட்டங்களாகிவிட்டன.

பழங்காலத்தில், நமது முன்னோர்கள் பச்சையாகவே சாப்பிட்டனர். சமைத்த உணவு அதிகமில்லை. மென்று, கடித்து உணவை உட்கொண்டனர். எனவே, அவர்களுடைய பற்கள் உறுதியாயிருந்தன.

நமது உணவு வகைகள் பற்களின் இடுக்கில் தங்கி, அழுகி, நோய்த்தொற்றுக்கு காரணமாகிவிடுகிறது. வெற்றிலைபாக்கு, புகையிலைப்பழக்கம் தொந்தரவை உண்டாக்கும்.

சாப்பிட்ட பிறகு நன்கு கொப்பளித்து, வாயைக் கழுவ வேண்டும.

நமது மூதாதையர்கள் சாப்பாட்டுக்குப் பிறகு, ஏதாவது பழம் தின்பது வழக்கம். பழம்பற்களை சுத்தப்படுத்தும் தன்மையுடையது. அந்த நல்ல பழக்கத்தை, நாம மறந்துவிட்டோம்.

உடம்பின் மற்ற திசுக்களுக்குபோலவே, பற்களுக்கும் சத்துள்ள உணவுஅவசியம் பற்களின் வளர்ச்சி அதை ஒட்டிதான் அமைகிறது. பால் பற்கள், குழந்தை தாயின் கருவில் இருக்கும் போதே முளைத்து விடுகின்றன.

சத்துக்குறைவான உணவு, சோகை போன்ற காரணங்களாலும், பற்களில் நோயுண்டாகும்.

வாயிலுள்ள நுண்ணுயிர்கள (பாக்டீரியா) உணவுத் துணுக்குகளையும், ஒட்டிக்கொள்ளும பசை போன்றவற்றையும் அமிலங்களாக மாற்றி விடுகின்றன. அவை மெல்ல, மெல்ல எனாமல் படிமத்தை அரித்துவிடும். அடுத்து, 'டென்டைன்' பகுதி வெளியில் தெரிய ஆரம்பிக்கிறது அதனால் ஜில்லென்று கூசும் உணவும், சூடானவற்றை உண்ணும்போது வலியும் உண்டாகிறது. உடனே, பல்வைத்தியரிடம் சென்று, அடைத்தற்குரிய பொருள்கொண்டு, பள்ளத்தை நிரப்பவும். அப்போதுதான், அதிகமாக பற்கள் சிதைவுறாது காப்பாற்றப்படும.

ஒருமுறை பல்லின் நரம்பும், வேர்களும் பாதிக்கப்பட்டால், அந்தப் பல்லை காப்பது கடினம். ஈறுபகுதியில் வீக்கம்

ஏற்பட்டு வலியெடுக்கும், ஜுரம் வரும். பல்லில் பள்ளம் விழும் வரை வலித் தொந்தரவு இருக்காது. அதனால் அலட்சியமாய் இருந்து விடுகிறோம்.

தொடக்கத்திலிருந்தே, பற்களை பரிசோதித்துக்கொள்வது அவசியம். மூன்று வயதிலிருந்தே, நாம் போதுமான பற்களை பெற்றவர்களாயிருக்கிறோம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பற்களை 'செக்—அப்' செய்து கொள்ள வேண்டும்.

பயோரியா:

நமது மக்களின் 90 சதவீதம் பேர் இந்த நோயினால் துன்புறுகிறார்கள். இதனால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதை விட, பழுதடைந்த பல்லை எடுத்து விடுவதே நல்லது.

இந்த உபாதை வயதானவர்களுக்கு மட்டுமின்றி, குழந்தை களுக்கும் வந்து விடுகிறது.

பற்களை சரிவர துலக்காவிடில், உணவுத்துணுக்குள் பசை போல் படிந்துவிடும். அதில் விஷக்கிரு... மருத்துவர்கள் அதை 'பாக்டீரியல் பிளேக்' ...கள். அது தான் பிறகு 'பயோரியா'வாகி விடுகிறது.

ஆரம்பத்தில், நோயாளி பல் துலக்கும்போது ஈறிலிருந்து இரத்தம் வடியும். ஈறு வீங்கிக் கொள்ளும். முடிவில், பல் எலும்பு பாதிக்கப்பட்டு, முற்றிய நிலையில் பல் உதிரும்.

பயோரியா குணப்படுத்த முடியாத நோயல்ல.

பாதிக்கப்பட்ட பல்லை எடுத்து விடுவதும், வேறு பல் கட்டிக் கொள்வதும் பார்வைக்கு மட்டுமின்றி, மற்ற பற்கள் முறையாக இயங்கவும் அவசியமாகும்

சண்டையிலோ, விபத்திலோ ஒருவரின் பல் உடைந்து போகக்கூடும். இயல்பாக, முன்பற்கள் தான் சிதறும். உடைந்ததை மீண்டும் ஒட்ட வைக்க முடியாது. ஆனால் வேறு துண்டை வைத்து மறைக்கலாம். பல்லோடு, தாடையும் உடையுமாயின், ஒயரிங் அல்லது சத்திர சிகிச்சை தேவைப்படும்.

உடைந்த அல்லது நோய்த் தொற்றுக்கு இலக்கான பல் நாக்கில் எரிச்சலை கொடுக்கும். அதை நாம் ஆண்டுக் கணக்கில் அலட்சியப்படுத்தும்போது கான்ஸரின முடியும்.

மொத்த கான்ஸர் நோயாளிகளில் 40 சதவீதம் பேர் 'ஓரல் கான்ஸரி'ல் அவதிப்படுகிறவர்கள்தான்.

வாய்ப்புற்று வர வெற்றிலை பாக்கு, புகையிலை, பீடி, சிகரெட் போன்றவை காரணமாகும். எனவே அந்த தீய பழக்கங்களை தவிர்க்க வேண்டும்.

டாக்டரிடம் சென்று 'ஸ்கேலிங்' செய்து, பற்களை சுத்தமாக்கிக் கொள்ளலாம். 'ஃபில் அப்' செய்யப்பட்ட பல்லை அவ்வப்போது 'செக் அப்' செய்வதும் அவசியம்.

❋

72223 - 10 lts
72293 10 lts
72463 15 15